ஸ்ரீ
ராமஜெயம்

அரிச்சந்திரோபாக்யான

நாடகாலங்காரம்

என்னும் கீர்த்தனை.

இவை
கும்பகோணத்தி லிருக்கும்
மணஞ்சேரி
நரசிம்மையரவர்கள் பௌத்திரரும்
மூர்த்திராமையரவர்கள் புத்திரருமாகிய

நரசிம்மையரால்

இயற்றி
சங்கீதசாஸ்திர முறைப்படி
ஸ்ரீங்கார-வீர-கருணா-அற்புத-பய- ஆஸ்யமென்கிற
ஷட்ரசோபேதமாய்
இராகதாள ஸ்வர வர்ணங்களமைத்து

சிதம்பரம்.
பொன்னுசாமிமுதலியாரால்
பரிசோதிப்பித்து

சித்தூர்
வீராசாமிநாயுடு
அவர்களது
வித்தியாவிநோத அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது,
1886.

86
1-87

0-1892 MNM, A
MPb
119508

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

அரிச்சந்த்ரோபாக்கியான

நாடகாலங்காரம்.

விநாயகர் துதி,

திருமருவும்பரிதிகுலத்திறைவனான
தீரன்அரிச்சந்திரன்றன்சரிதைதன்னை
அருமைமிகுகீர்த்தனமாயருளிச்செய்ய
அத்திமுகத்துத்தமனையவதரித்து
பெருமைமிகுமேருடையோரேடதாகப்
பிடித்தொருகொம்பெடுத்தெழுதிப்பாரதத்தை
ஒருமைமனத்துடன்முடித்தகடவுள்பொற்றாள்
உளங்கொள்வேன்நித்தியமங்களங்கொள்வேன்

க-தரு-இராகம்-நாட்டை- ஆதிதாளம்,

பல்லவி.

திருவருள்புரிவாயே-ஞானத்-தேனினைச்சொரிவாயே

அநுபல்லவி,

இருளொழித்திடுவாயே உங்க
ளிணையடி-துணையெனக்கீந்திடுவாயே (திருவருள்)

சரணங்கள்,

க, அண்டர்கள் தொழுவோனே மிக
அருந்தவர்மகிழ வாகுவென்முழவோனே
தொண்டர்கள் புகழ்வோனே-உன்னை
துதிப்போர்மனத்தி லிருந்துமகிழ்வோனே (திருவ)

உ, மதியில்லா நிர்மூடன்-உந்தன்
மலர்ப்பதந்தொழுவறி யாமனக்கேடன்
கதிவிரும்பாத பாடன்-நின்னைக்
கருத்திறசேர்க்கவென்னுங் கருதாவிசேடன் (திருவ)

ங, சதயதசன பாலன்-அரிச்
சந்திரன்வண்மைகள்சொல் வோர்க்கனுகூலன்
முத்தியளிக்குஞ் சீலன்-நீயே
மூலகாரணனாய் ---- வந்தாதிமூலன் (திருவ)

திருமால் துதி

விருத்தம்.

அனைத்துலகெங்குந்தானாய் ஐவகைபபூதமாகி
நினைத்தவருளத்துதிக்கு நெடியமால்பாதம்போற்றி
தனத்தினில்நிறைந்தயோத்தித் தாரணிசெங்கோலாண்ட
கனத்தினன் அரிச்சந்திரன்றன் கதையின்கீர்த்தனஞ்சொல்வேனே

ச-தரு-இ-ம்-பியாக்-அடதாளம்,

பல்லவி.

ஆராவமுதனே-அயன்-அமர்ந்தகுமுதனே

அநுபல்லவி.

ஆராதாரப்பொருளேஉந்தன் அடியார்திருவருளே
தீராவினைதீர்ப்பாய் பொல்லாத் தீம்பனைக்கதிசேர்ப்பாய் (ஆரா)

சரணங்கள்.

க, வல்லரக்கரைச்செகுத்தாய் வாழ்வைவானவர்க்குப்பகுத்தாய்
நல்லவரந்தருவாய்மிக நன்மைசெய்யவருவாய்
புல்லறிவாளனெனைக்-காக்கப்போற்றினேனுனைமுனை (ஆரா)

உ, ஆதிமூலமானவா-தந்திக் கருள்தந்தகோனவா
கோதிலாச்சடரொளியேமுத்திக் குதவும்பரவெளியே
தீதிலாதபாதனே-மிகத் தெளிந்தஞானபோதனே (ஆரா)

ங. சத்திதர்மபாலனே-பூர்ண சந்திரவதிலோலனே
நித்யமாம்புகழ்ச்சரிதை-சொல்லும் நெறியறிவேனுனதுவிதை
சத்யமாஎன்னுவில்நின்று சாற்றுவாயிப்புவியினில் (ஆரா)

முருகர்துதி.

விருத்தம்.

எள்ளளவுமாறுதகீர்த்திபெற்ற
இன்குலததித்புகழ்படைத்து இணைவேறில்லா
வள்ளலெனவந்துதித்த அரிச்சந்திரன்றன்
வண்மைதனைநாடகமாய்வகுத்துரைக்க
உள்ளமகிழ்ந்திடுதிருமால்மருகனாக
வுமையவளீன்றருளியும்பர்தம்மைக்காத்த
கள்ளவிழுமலர்ப்பதத்தோன்முருகவேளைக்
கருதினேன்போற்றிசெய்யப்பொருதிவேனே

உ-தரு-இ-ம்-தனசரி-ஆதிதாளம்,

பல்லவி,

குமரகுருபரா-அடியர்க்கன்பு. கூறுந்தயாபரா

அநுபல்லவி,

அமரர்கட்கதிபா அரிஞகாத்துல்திபா
சமரபுரிநிவாசா சத்ருஜயவுல்லாசா (குமா)

சரணங்கள்

க. ஞானம்ருதந்தந்தாய் குருவடிவாய்ஞாலந்தனில்வந்தாய்
மானுபிமானு மாதவத்தோர்மோகனு
கோனுனவன்மருகா குதலைமொழிமுருகா (குமா)

உ. புள்ளுமயில்வேலா கதிவிரும்பும் புனிதர்க்கனுகூலா
வள்ளிமனோகர வாதகருணுகர
தெள்ளியகல்விகற்றோய் தீரனெனப்பெயர்பெற்றோய் (குமா)

ந. வெற்றிமிகப்படைத்தாய் வெதும்பி நின்றவேளையிற்கண் துடைத்
முத்திக்கோர்வித்தாய் மூளைத்து இக்குகித்தாய் (தாய்)
நித்தியமுனைப்போற் ...ம் நிமலர்கவலையாற்றும் (குமா)

ச, வண்மைதனின்மிகுத்த அரிச்சந்திரன்வளங்கள்சொல்லதமொகுத்
உண்மையெனக்கருள்வாய் உனைத்தொழு ...வைவெள்வா (க)
கண்மணியாகவந்தாய் கபாலனுக்கருள்தந்தாய் (குமா)

...மாதி துதி.

விருத்தம்,

நன்னெறியுடனயோத்தி நாட்டினையாண்டவேந்தன்
சொன்னெறிதவறுச்செல்வன் சுகுணனுமரிச்சந்திரன்றன்
தன்னிகரில்லாத்திவ்ய சரித்திரகீர்த்தனங்கள்பாடக்
கன்னியோர்பாகம்செம்பொற் கழலினை ...

க-தரு-இ-ம-ஆநந்தபைரவி-அடதாளம்,

பல்லவி.

அரனேகங்காதரனே உனைப்போற்றும்
அடியார்க்குபகாரனே

அநுபல்லவி.

பரனேசிற்பதமே பணிந்தேன்குறைதணிந்தேன்
பார்தருவாய்செழிப்பாய் பவக்கடலையொழிப்பாய்

சரணங்கள்,

க, உனதுபாதமேகெதி விண்ணேனென்றும்
உளமகிழ்ந்ததபோநிதி
மனதுமிகமகிழ்வாய் மருக்துவமேநிகழ்வாய்
எனதுகன்மமுடிப்பாய் எழிலுறவேநடிப்பாய் (அர

௨. சத்தியஅரிச்சந்திரன் சரிதைகீர்த்
  தனஞ்சொல்லவோர் தந்திரம்
வெத்தியைமிகக்கொண்டேன் விரும்பியுன்பதங்கண்டேன்
சித்தியமும்அபயம் நிறைந்ததன்மமேஜெபம் (அர)

௩. பட்டகடன்றீரவே தமியேற்குப்
  பாரில்புகழ்சேரவே
திட்டமாயிதுசொல்லத் திடங்கொண்டேன்வேறல்ல
இட்டவனுக்குப்பொருள் எவ்விதத்துநீயருள் (அர)

சரஸ்வதி துதி.

விருத்தம்.

அரசரிற்சத்தியந்தானே அரும்பிதாகுருவென்றெண்ணலாம்
குரிசிலரிச்சந்திரன்றன் குலவுசற்சரிதைதன்னை
தரணியிற்புகழ்ந்திடுங்கீர்த் தனமெனப்பாடுதற்குச்
சரஸ்வதிதுதியென்னாவிற் சாற்றுவேன்போற்றுவேனே

௫-தரு-இ-ம-ஸ்ரீராகம்-ஆதிதாளம்

பல்லவி.

வாணியென்னாவிலிருந்தருள்வாயே [illegible]னஜாஸ்சித்தாயே (வாணி)

அநுபல்லவி.

எணிலோசனியே எக்கலைக்கும்-இறைவிநீயே
  எளியேன்தெளியேன் ஏற்பாய்கார்ப்பாய் (வாணி)

சரணங்கள்.

௧. உ[illegible]மாதாவெனவந்துதித்தாயே உளங்களித்தாயே உலக
  நிலைகண்டிடச்செய[illegible]வாய் நிறைமதிதந்துய்குவாய்
  நீவா மூவா நிமைவி [illegible] (வாணி)
௨. வேதபுரிநாதன்தனயாளே வெண்டாமரையாளே
  ஆதாவெனக்குநீ அன்பாயனுக்கிரகிப்பாயே
  அறியேன் சிறியேன் அம[illegible] கமலை (வாணி)
௩. எல்லைக்குமிறைவியாய்வீற்றுயே எளியோனைக்காற்றுயே
  வக்கணைச்சொற்கள்யாவும் வழுவா[illegible]ன்னைவில்மேவும்
  வகைகளைதுகையை வைப்பாய் ஒப்பாய் (வாணி)

குருஸ்வாமிதுதி.

விருத்தம்.

தருமநெறியனுவளவுந்தவறிலாத
தருமன்அரிச்சந்திரன்பெருமைசொல்ல
பரமரகசியப்பொருளைப்பகு[illegible]துணைக்கும்
பரமகுருபதமலரை[illegible]பணிகுவேனே

௬-தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்,

பல்லவி,

போதகுருநாதா புனிதர்துதிக்கும்பாதா
போற்றிசெய்தேன் ஸர்வஹிதா

அநுபல்லவி.

ஆதரவாய்வந்தெனை தகத்துயர்தணித்தாயே
ஆக்கிரமிக்குமென்மனை அடக்கியபயந்தந்தாயே (போ)

சரணங்கள்.

௧. அண்டரும்முனிவரும் எண்டிசைக்கதிபரும்
அருந்தவமிகுத்தோர்களும்
கொண்டகோலமழியாக் குறியுடனேதற்காத்தாய்
குவலயத்திலெனது குறைகளெவையுமாத்தாய் (போ)

௨. உனதுவீட்சணத்தாலே உயர்ந்தோரிந்தமண்மேலே
ஓதவெள்ளிதோயென்றுரேல
மனதுமகிழச்செய்தாய் மாபாவிகளைவைதாய்
மாய்க்கவந்தோரைபெய்தாய் மகானுபாவாஉய்தாய் (போ)

௩. ஓயாக்கவலையான உத்திகளிலென்றென்னும்
உழலுந்தமியேனையின்னும
தியாகமெனத்தேற்றி தீயோர்வலுமையாற்றி
தாயைமகவைக்காற்றுயே தந்தையேபோற்றி (போ)

நூற்பெருமை,

விருத்தம்

மிகுத்தநற்புத்தியுற்றமேன்மக்களெவரும்கேளீர்
வகுத்தநல்அரிச்சந்திரன்றன்வண்மைகீர்த்தனமதாகத்
தொகுத்தபல்லிசைகளாலேதொல்புவிக்கன்னிவிந்த
மகத்துவங்கேட்போர்மெத்தமனக்களிப்படைகுவாரே. (௭)

௭-தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்,

பல்லவி

மகிமைமிகுத்த அரிச்சந்திரன்சரிதைகேட்க
மனஞ்சலித்தவர்களுண்டோ

அநுபல்லவி.

தகைமையில்லாதுரைத்தும் தமதுளம்வெறுப்பாரோ
தம்பியின்னொருதாம் தயவாய்ச்சொல்வாயென்றாரோ

சரணங்கள்.

௧. உண்ணவுண்ணத்தெவிட்டா தவமுதாமிது உண்டாரேபுவிமீது
உம்பர்கோனுமெவரும்

உமைபாகன்ஜெகன்மோகன்ஒருவரும்இணையில்லா
ஒருமுனிவனைக்கொண் டுகந்தானேநெடும்போது
பண்ணவறியார்பூஜாபலமடைந்ததுபோல்
பார்த்திபன்முனிதவத்திற் பாதிகொண்டானப்போது
பார்த்தோர்திகைத்திடும்வாறேஞர்காவலகற்றி
பத்தியாய்த்தொழுதேத்திப் பணிந்தானேமிகசாது (மகி)

உ, ஆண்பிள்ளையுதாத்திக்லுகிதவத்தினத்தில்
ஆத்மஞானியாயவதரித்தா னெங்குஞ்செழிக்க
அண்டரும்முனிவரும்எண்டிசைக்கதிபரும்
அதிசயத்தானந்தங் கொண்டாசிகள்கொழிக்க
விண்பழிபிதுவிஸ்வாமித்திரமுனிக்கேதோதி
வினைவிளையுமென்றருந் தவத்தோரெலாம்பழிக்க
வேந்தனிவனொருவனே சத்யதர்மங்கள்
விளங்குமினியென்றீ ரேழுலகுந்துபரொழிக்க (மகி)

ங, பசித்தழுஞ்சிசுவைத்தாய் முலைதந்தாதரித்தாப்போற்
பஞ்சவர்க்குமார்க்கண்டரிது சொல்லத்தொடுத்தாரே
பத்திவிஸ்வாசமாய்விஞவியுளங்களித்து
பரிதாபமகன்றவர் பதத்தினையடுத்தாரே
புசித்கவறுசுவையின் அமுதம்மிகத்தெவிட்டும்
புண்யனையிவ்வமுதைப் புகட்டுமென்றெடுத்தாரே
பிறப்புமிறப்புமில்லைபுகழ்ச்சியென்றென்றுமுண்டு
புனிதாநீங்களேயென்று புகழ்ந்திதைக்கொடுத்தாரோ (மகி)

அவையடக்கம்.

விருத்தம்,

கருடனிருசிறகினையும்விரித்துலாவில்
கண்டோற்றமாறுவட்டும்வட்டமிட்ட
தருணமதிலந்தப்பூச்சியுந்தன்சிறக்கை
தனைவிரித்துப்பறந்திடவெத்தனித்தாப்போல
வருளுடையோர்பாதாகமங்களாய்ந்தோ
ரருந்தவத்தோர்முன்னென்மனவாசையாலே
பொருளறியேனிதுபகழுப்பிழைபொருத்து
போற்றவீரெந்தனையீடேற்றுவீரே, (அ)

அ-கரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி,

மகிழ்ந்தென்வாய்மொழிகேட்பீர் பிழைசொல்லினும்
மதலைச்சொல்லென [illegible]ட்பீர்

அநுபல்லவி,

இகழ்ந்துரைப்பாரோ யிங்கினி செனுந்திசைச்சொல்லை
புகழ்ந்தூராருங்கொண்டாடும் புண்ணியமாதாவிதாப்போல் (மவி)

சரணங்கள்

[க]ளிநிம்காமுகர்தம்மூ டிச்சகமாடிக்கொஞ்சும்
வத்தினையர்மொழிவை இனிப்பாய்க்கொள்வதுபோல
இதமாய்த்தழுவுங்கள்ளப் புருஷர்கூடும்புணைவசை
எனும்போதவர்கூறும் இனியவசனம்போல
கிளிகளைவளர்த்தக் காகெல்காகெங்காரியென்னே
கேட்டுள்ளங்களித்திடும் செம்பீரர்தமைப்போல
[ச]லேசமகற்றுமரிச் சந்திரமன்னன்சரித்திரக்
கீர்த்தனைச்சொல்லக்கேட்பீ ரென்னன்பர்போல (மவி)
பலதுளியேந்தொரு பெரியகுழியாகியே
பாரிற்றீர்க்கப்பினைப் பண்பாய்க்காப்பதுபோல
[வ]ரிவுள்ளோரெக்கஞ்சுங் குளகுழிற்பாசுசைக்குடிக்கு
[ம]லைமாச்சுதாமென்னும் பழமொழிபதுபோல
ஜலதாரையிலுயிர் ஸாகரத்தைச்சேரில்
ஜாதியென்றேற்றிடும் ஜலத்தினிணக்கம்போல
ஜெகத்திலுள்ளவதிரு செவனாயுஞ்சரணென்றென்
சத்துதனைக்கரிக்குஞ் சாதுக்கள்மனம்போல (மவி)
அரியவரங்கள்பெற்று ஆபுனபிலைசடந்த
அருந்தவமூர்க்கண்டர்பால் அன்றுபஞ்சபாண்டவர்
அருகில்வந்தடைந்துசோ வடைந்துயிகமெலிந்து
ஐயுறவடைந்தங்கே மையார்வெளவரண்டவா
தெரியவேயவர்க்குநல் செய்ககைதயிதனுல்
தெளிந்தகத்துயர்நீத்து திருக்காம்பணிபூண்டவர்
தேறுதலையால்மன மாறுதலைப்படைந்து
தெளிட்டல்முதிகனைத் தேடிபுண்ணியமடைந்தவர் (மவி)

ஆக்கியோன்பெயர்,

ஆசிரியவிருத்தம்.

சீர்மருவுகலியுகாலாயிரத்துத்
தொளாயிரத்தன்பதொன்பான்
திகழாயிரத்தெழுநூற்றெழுபத்தொன்பதிற்
சிறந்தசாலிவாகனம்
ஏர்மருவுகாளாயுக்திவினிகழுமார்க்கழியி
லியல்பானபூர்வபட்சம்
ஏழினுற்றபஞ்சமியில்குருவாரமதனாளி
லியம்பும்திருக்குடந்தை

பேர்மருவுநகரிலுருக்கோதியமனைவிபுகழ்
பெற்றதாரசிம்மாசியன்
பெருமைமிகுதேவர்களொமுனிவரர்ந்தனர்தமைப்
பிரியாதகவிஞர்களையும்
கார்மருவுவையகத்தாள்விலனடியனைக்
கண்ணனடிதொழுந்தாலனைக்
கழல்தொழுதிறைஞ்சியரிச்சந்திரன்கீர்த்தியைக்
காசினியிலோதினனே,

மார்க்கண்டேயர்புகூறல்-விருத்தம்.

உமையவளோர்பாகனருட்படைத்தோழு
உலகோரும்புகழ்ந்தென்றும்பதினருவாழ்
வமையவரந்தருகவெனத்துதித்திறைஞ்சி
யடியவருக்கடியவராய்மார்க்கண்டேயர்
சமயங்களெவற்றையுமாராய்ந்துணர்ந்து
ஐகமுழுதுஞ்சிவமயமேயெனத்தெளிந்து
இமையகிரிக்கடுத்தவில்வவனத்திற்சென்று
இருந்திட்டாரவர்களுக்குமிருந்திட்டாரே. (ய)

கூ-தரு-இ-ப-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

வனத்தில்வந்திருந்தாரே-மார்க்கண்டர்வில்வ-வனத்தில்வந்திருந்தாரே

அநுபல்லவி.

அனைத்துயிர்க்குயீசனும் அரன்றிருவடிதனை
நினைத்தம்பூசித்துப்போற்றி
நிலத்தில்வீழ்த்தியேமகிழ (வன)

சரணங்கள்,

க, அவனிமீதினிலானடியார்க்கடியனுமி
ஆயிரத்தெட்டுசிவஸ்தலமுமன்பட்டேனெ
தவகிலேயிற்குறையாதன்மைதனக்கிறையாய்
பவனிவரவுகந்துபத்தர்களிற்சிறந்து (வனத்தில்)

உ. இந்திரன்முதற்றேவர்களுமிகழ்ந்திட
நான்மாலயனோர்களென்றென்றும்புகழ்ந்திட
மந்திரமுறைநீதிமார்க்கமெவர்க்குமோதி
தந்திரமதிபூசிதவத்தோரெவர்க்குந்தியானி (வனத்தில்)

ங, மாதவத்தோரருமலரடிதொழுதேற்ற
மணிமுடியரசர்கள்மனமலர்தூவிப்போற்ற
வேதவிடதீக்ஷைப்பிறப்பிறப்பைநீக்கி
ஆகமத்திருமும் அருந்தவத்தோர்கள்வாழும் (வனத்தில்)

பாண்டவர்-மார்க்கண்டர் ஆச்ரமஞ்சேர்ந்ததைக்கூறல்.

விருத்தம்,

மதிமிகுத்ததர்மபுத்திராதியர்களாண்ட
மாநகர்விட்டெழுந்தமதிமயக்கமுற்று
[illegible]மிகுத்தவனமாசிபாகிசெஞ்சில்
திமலனடிபேற்றி[illegible]மனிலையைச்சாற்றி
கதிமிகுத்தவாச்ரமங்களினையுந்தேடி
நற்றுறவோர்தமைநாடிநலங்கொண்டாடி
விதிமிகுத்தமார்க்கண்டராசரமத்தை
விரும்பினார்மனமகிழ்ந்துவிழும்பினரே. (௰௧)

௰-தரு-இ-ம்-ஆரபி

பல்லவி.

[illegible]வவடிவாகப்பஞ்சபாண்டவர்கள்மார்க்கண்டர்
[illegible]மைக்காணவந்தாரே

அநுபல்லவி.

சிவவடிவாமிதென்று சீருடன்தேடிச்சென்று
சிந்தைதனின்மகிழ்ந்துச் சேவடியைத்துதித்து (தவ)

சரணங்கள்

மன்னனிரௌபதன்செய்தயக்கிராத்தான்றுதிகள்
மனைதொத்தியிசுவாடா-பெவருந்சாட
அன்னநடைத்ரௌபதைதன்னைக்கொண்டோடிவந்து
ஆசையுடன்புணரவேக்கருமுகந்து (தவவடி)
இன்பமாதராஜகுமாரமிபற்றவென்று
எழுதியபேரவையிலேஅப்பேலார்போலே
அன்பாய்வலத்துர்யோதனுரியனைக்கைத்து
ஆதரியஞ்செய்தநிலசேலமிகத்திகைத்து (தவவடி)
சகுனிமாமன்சொற்கேட்டுச்சபையுண்டாக்கிக்கௌரவர்
சதிருக்கழைத்தாலே-அவருடன்
வெகுநீதியாய்ச்சூதாடிவிளங்குமரசைத்தோற்று
வேற்றன்றந்தபட்சமாயாத்திரைத்தனைபெற்று (தவவடி)

பாண்டவர்க்கு-மார்க்கண்டர்-அரிச்சந்திரன்
சரிதைக்கூறல்-விருத்தம்.

வைத்தபஞ்சபாண்டவர்களைமார்க்கண்டேயர்
வருந்தியழைத்தவற்குரியவண்ணமையெல்லாம்
[illegible]தவர்கள்[illegible]பல்லைபதந்தானந்து
தயங்கு[illegible]தன்னுமையென்று

யீந்தவகைபெரிதல்லவிதற்குமேலா
யியம்பக்கேளிதிலுமிகவிசித்திரமென்று
நொந்தகன்னைப்பசுமுலைதந்தாற்றுமாறு
நொடிக்கின்றார் அவனுறப்படிக்கின்றாரே. (கஉ)

கக-தரு-இ-ம்-மோகனம்-அட-தாளம்.

பல்லவி.

உங்கள்மனக்குறை மீட்பீர் புக வுசிதமிதிகாஸ
மொன்றுண்டதைக் கேட்பீர் (உங்கள்)

அநுபல்லவி,

திங்கள்குலத்தோர்க்கித் தினிணையில்லை
தெளிந்திதைக்கேட்போர்க்குத்திருமேவெகுதொல்லை (உங்கள்)

சரணங்கள்,

க, சீர்மருவுமயோத்தி சீமையாளச்சிறந்த
செங்கதிர்குலத்துற்ற செல்வன் அரிச்சந்திரன்
செங்கோலேந்திராஜ நீதிசெலுத்துநாளில்
சிறந்தவருந்தவத்தோர் சேர்ந்துவந்துவிந்திரன்
பேர்மருவுவாயென்று பெறுகவாசீர்வதித்து
பெருமைசோமதிதயன் பெற்றபேற்றைத்துதித்து
பெண்கட்கரசிசந்திர மதியைமணம்புரிந்து
பிரியமாய்வாழ்வாயென்றப் பெண்குணமறிவித்து
நேர்மருவுமதிதய மன்னர்க்கின்னீர்மை
நெறிதவறுதுணர்த்தி திருபன்றன்மனங்கண்டு
நிறைசெல்வனரிச்சந்திர மன்னர்க்கிநெறிசொல்லி
நிலையானசதுரங்க தளத்தைநயமுழத்துக்கொண்டு
ஏர்மருவுபோர் வனத்திடையனுஜைகயில்
எழிலுயர்துர்க்கையின் கோயிலொன்றைக்கண்டு
யெல்லவருமென்றும் சொல்லவருந்தவம்
இயற்றினேனென்றனந் தேற்றிக்களிப்புண்டு (உங்)

உ, அங்காராசத்தி தங்கபொற்றேரேறி
அடங்கமகிழ்ச்சிகொண் டடைந்தானேகண்ணேறி
அன்பத்தாறுதேசத்தரசருங் கொண்டாட
அழைத்தானேமதிதயன் தெளிந்துநல்விருவாசி
இந்தராஜனுக்கிணை யிந்திரனுமானேனென்ன
எழிலுயர்கனகத்தேரேறி பூர்வலம்வந்து
இலக்கினிலுவமையில்லாச் சந்திரமதியை
யேற்றுமணந்துபள்ளி யெழுச்சிக்கொளுவண்டைந்து
கர்தமுங்கலரும்போசி காமன்களறிகூடி
களித்துநித்யானந்தக் கடலிலாடிக்களித்து

கண்ணேறிரோடாளன் தந்தசீதனங்கொண்டு
களித்துச்சேனைகளுடன் காதலங்கள்குவித்து
அந்தநன்னகர்கடந் தடர்வனம்பூஞ்சோலை
அனைத்துங்கடத்தகாளி யம்மன்பொற்பதம்போற்றி
ஆனைசேனையுடன் ஆளும்அயோத்தியை
அடைந்திடக்கண்டோர் மலர்மாரிதூற்றி (௨௬)
சிங்காதனமேறிச் செங்கோலாளுநாளில்வச்
சிரபாணிசபையிற்சேர் சிவவசிஷ்டர்சபதஞ்
செய்ததினால்வன்மங்கொண்டரிச்சந்திரன்
சீமையாவுங்கொள்ளக்கோ சிகன்செய்தான்விபரீதம்
தங்காமல்மறுநகரேகச்செய்துவழியில்
தான்கொண்டுதன்பத்தாற் றதும்பிவெதும்பியழ
தாயுஞ்சேயையுமறையவருக்கடிமையாகித்
தந்தானேபுலையனைத் தார்வேந்தன்கைத்தொழு
அங்காதரவானசந்த்ரமதிசுதனை
அடர்வனத்தேதகச்செய அரவாலுயிர்செகுத்து
அண்டர்கள்திகைத்திடவாதித்தன்குலமாதை
அவள்கணவன்கையா லகந்தணிக்கவருத்து
கங்காதரன்முதற்கடவுளரெவர்களும்
கண்டதைத்தடுத்துக் களித்துமலர்கள்தூவ
கனககாளன்கையால்முடிசூட்டி
கனங்கொண்டவரிச்சந்திரன் கதைகேட்டுக்களிகூற (௨௭)

விருத்தம்

வேதமுணர்மார்க்கண்டமுனிவரிந்த
விதமியம்பக்கேட்டதர்மபுத்திராவர்
பேதமறவிளக்கவெமக்கின்றுரைக்கால்
பிரித்துரைக்கவேண்டுமெனப்பேசுவோரை
போதமுறத்தழுவியருகிருத்திமெத்தப்
புண்ணியருங்களையலதிப்புவியிலுண்டோ
நாதனெனத்துதித்தவர்க்குநன்மையாக
நவிலுவார்முகமலர்ந்துநவிலுவாரே (௧௨)

சுத்தமங்களம்.

ஐங்கரன்முருகனுக்கு மாரனையன்திருமாலுக்குஞ்
செங்கரனிந்த்ரனுக்குஞ் செய்யநாரதமுனிக்கும்
பொங்கியவிஸ்வாமித்திரர் புகழ்பெறுவசிஷ்டர்சுக்ரர்
எங்களுநிறைந்தவானோ ரெவர்க்குமங்களஞ்சொல்வேனே (௧௩)

இதுவுமது

அத்தியும்பரிதேர்சேனை யனைத்துடனவனிபாண்ட
சத்தியரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிமங்கைக்கும்

சத்தியகீர்த்தியென்னுஞ் சதுராணுமந்திரிக்கும்
நித்தியலோகிதாசனுக்குனிறைந்தமங்களஞ்சொல்வேனே, (கரு)

சுத்தமங்களம்,

கஉ-தரு-பந்துவராளி-ஆதிதாளம்,

பல்லவி,

தேவாதிதேவருக்கு ஜெயமங்களம்-நாளும்
திங்களணிவேணியர்க்கு சுபமங்களம்

அநுபல்லவி

மூவாமுதலானவர்க்கு முத்திதரும்வேலவர்க்கு
மேவுதவத்தோர்களுக்கு மேலவரொவர்களுக்கும் (தேவா)
கண்ணாயிரவனுக்குக் கற்றுணர்ந்கோர்தற்கும்
விண்ணோர்புகல்கௌசிக விசுவாமித்திரமுனிக்கும் (தேவா)
வேதங்கலகாறுநாலும் விளங்கியவசிஷ்டருக்கும்
ஓதுநட்சத்தரையருக்கும் உத்தமர்பாண்டவர்கட்கும் (தேவா)
சத்தியவரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிமங்கையர்க்கும்
புத்திரலோகிதாசனுக்கும் புகழ்ந்திடுஞ்சத்யகீர்த்திக்கும் (தேவா)

பாயிரம்-முற்றியது,

ஆச-விருத்தம்-௰ரு-தரு-௰உ.

உ

முதலாவது

அரசாட்சிகாண்டம்

கடவுளர்வணக்கம்,

விருத்தம்,

நாடியபுகழ்பெற்றோங்கு நரேந்திரனரிச்சந்திரன்றன்
சீடியசரித்திரத்தை திறைந்தநாடகமாய்ப்பாட
கூடியபியவிசைச்சொற் குலவுமுத்தமிழினாலே
சூடியகவிமாலைக்குத் தோடயஞ்சொல்லுவோமே, (க)

தோடயமங்களம்,

க-இ-ம்-நாட்டை-தாளம்-ஜம்பை

ஜெயஜெயகஜமுகேச ஜெயஜெயகுமாரேச
ஜெயதேவதேவேச ஜெயஜெகதீச, ஜ-ஜ

ஜெயஜெயவரவாணீச ஜெயலட்சுமிபிராணேசகிரே-ஆ-ஆ
ஜெயசர்வலோகேச ஜெயஜெயகௌரீசஜெயஜெயா
வர்ணவிரிஞ்சிரர்முனிவர் வாழ்த்துமரிச்சந்திரனையும்
கோமளவன்றன்சரித்திரத்தை குருவருளாற்பாட-ஆ-ஆ
ஆனவாமிகநல்கு மரியயனைவ்பூவலன்-ஆ-ஆ
ஆனைவொருவனைத்தினமு மடிபணிகுவேனே-ஜெய
இமையவரொருங்குபுகழும் இறைவனரிச்சந்திரன்றன்
கமைபெருந்துங்கதையதனை காதலுற்றப்பாட-ஆ-ஆ
உமையவளொட்சமிவாணி உத்தமியாளிம்மூவர்கள்-ஆ-ஆ
தமையனுதினமும்போற்றித் தாமரைத்தாள்தொழுவாம்-ஆ-ஆ
தருமநெறிதவறாத சத்தியஅரிச்சந்திரன்றன்
அருமைசரித்திரமதனை யகமகிழ்ந்துபாட-ஆ-ஆ
குருமுனிவர்பெரியோர்கள் திருவடியார்மறையோதும
அருமையுறுநூலறியு அம்மையர்யாருந்துணையே-ஜெயஜெயா

வசனம்.- அகோகேளுஞ்சபையோர்களே ராஜாதிராஜனான அரிச்சந்திரமகாராஜனது புகழ்பெற்றசரித்திரத்தைக்ஆடிப்பாடி முடியுமளவும் யாதொருவிக்னமும்வாராமற்பாதுகாக்கும் பொருட்டு சர்வேசுவரியாயி யாகிய விக்னராஜர்வருகிறவிதங்காண்க.

விருத்தம்.

வெற்றியைமிகப்படைத்த விருதுபத்தின்கொடிபடைத்தோன்
சித்தவாகுவாகனத்தோன் சிறக்கவோர்செங்கோலாண்டோன்
பத்திசெய்பவர்கட்கெல்லாம் பாக்கியமளித்தாக்காப்போன்
வித்தகன்மைந்தனான விக்னராஜனும்வந்தானே. (உ)

உ-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராஜராஜமகாராஜனான விக்ன-ராஜன்சபையில்வந்தானே

அநுபல்லவி.

போஜன்முதலாகிய ராஜராஜர்துதிக்குந்
தேஜோமயனுகட ராஜன்றவத்துதித்த ராஜராஜ

சரணங்கள்.

க, இஷ்டமாமுனிவசிஷ்டர் விசுவாமித்திர
திருவருமிணையவர்க் கெதிரேசெய்தவிசித்ர
அஷ்டகாசந்தன்னையறிந்த அரசனோர்புத்திரர் (ராஜ)
அரிச்சந்திரராஜனுக்கனுகூலமானமித்திரர்

உ, கிம்புருகின்னரர் கீதங்கள்பாட
தும்புருநாரதர் துதித்துக்கொண்டாட
தம்புருவீணையிசை தடக்கையிலாட
அரம்பையூர்வசி சங்கராபரணம்பாட (ராஜ)

க, நெற்றியிற்றூயவெண்ணீற்றி னொளிவிளங்க
கொத்துமுடியிற் சந்திரகாந்தியகத்திலங்க
உத்தமபுயத்தினுக் * யஞ்ஞோபவீதமிலங்க
சித்திரரும்பதத்தில் பத்தர்பூரித்திலங்க (ராஜ)

(வசனம்) இவ்விதமாயெழுந்தருளிய விநாயகமூர்த்தியைக் குருக்களையர் பூசைசெய்கிறவிதங்காண்க,

விருத்தம்.

சம்புவின்பதந்துதித்துச் சரயுவில்ஸ்நானஞ்செய்து
அம்புவியோர்கள் போற்று மடைவளகுருக்களையர்
தங்கைபசம்பாரத்தைக்கொண்டு துளவமாவிலையுங்கொண்டு
தும்பிமாமுகவன்பாதத் துதித்துநற்பூசைசெய்தார்; (க)

க-ஜிபனை,க-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

ஆதிதேவனானவிநாயகனே-சிவசாம்பவசிவ
ஐயனேயுமைப்பூசைசெய்கிறேன்
பாதிமதியைப்பகைத்தயீசனே — சிவசாம்பவசிவ
பண்புடனெனைக்காரும்பரமனே
உமையவள்தனக்குகந்தமைந்தனே — சிவசாம்பவசிவ
உளமகிழ்ந்துமைப்பூசைசெய்கிறேன்
இமைப்பொழுதமைஇடைவிடாமலே — சிவசாம்பவசிவ
இகல்தவிர்த்தெமையாளுமீசனே
நெல்லியல்விமுல்லைமல்லிகைமலரால் — ஓம்கணபதி
நேசமாயுமைப்பூசைசெய்கிறேன்
வல்லபைதனையிடத்தில்வைத்தவா — வரதவிக்நேசா
வாகுடனெனைக்காரும்வரதனே
எப்பிழையும்பொறுத்தாளுமீசனே — சிவசாம்பவசிவ
என்றைக்கிரங்குமீசன்மைந்தனே
முப்பழமோதகமப்பமவல்பொரியும் — ஓம்கணபதி
ஒப்புடனுமக்குத்தப்பாமல்நான்தருவேன்

(வசனம்)இவ்விதமாகப் பூசைசெய்கிறசமயத்தில் குருக்களும் அர்ச்சகரும் சடுத்தஞ்செய்வதுகாண்க,

குருக்கள்சொல்லுகிற-பூசை-சுலோகம்,

ஏகவிக்கானனமோதகஹ அஸ்தேதசாமகர்ணவிளம்பிதசூத்ரவாமன ரூபமகேஸ்வரபுத்ர விக்னவிநாயகபாதநமஸ்தே,

* யஞ்ஞோபவீதம்-பூணூல்,

அர்ச்சகர்சொல்லுகிறபூசைசுலோகம்

தசாரம்திவ்யசூரீணம் சடகோபாதியோகிநாம்
தேசிகேந்திரத்தயாசிந்தம்வந்தேகம்சைசியகாகம்

(குருக்கள்) எதுகாணும் இல்லாதவாடிக்கையெல்லாம் பண்ணுறீர்
(அவர்) என்னெனைக்குமில்லாதவாடிக்கை" இப்போஎன்னகாணுமுண்டாச்சு

(குரு) விக்னேசுவாருக்கு வைஷ்ணவாள்பூசைபண்ணுகிறது அக்ம்பிரமித்தியங்காளே.

(அர்ச்சகர்) விஷ்வக்ஸேநருக்குசைவாகம் பூசைபண்ணுறது ஆகாத்தியந்தானே.

(குருக்கள்) வயிற்றுவலிக்கிடங்கொடுத்தாலும் வைஷ்ணவனுக்கிடங்கொடுக்கப்படாது;

(அர்ச்சகன்) சைத்யோபத்திரவத்துக் கிடங்கொடுத்தாலும் ஸ்மார்த்தனுக்கிடங்கொடுக்கப்படாது,

(குருக்கள்) தத்துபுத்திரனாய்வந்தவனே இல்லையோ அதான்தத்திதென்னு உளறிவழிகிறான்,

(அர்ச்சகன்) கடந்தண்டவந்த கண்டகாசுரனேயில்லையோ அதான் கடுகடுகிடுகிடென்று கண்டகண்டவாக்கோதாரான்,

(குருக்கள்) ஏண்டாவுங்கள்பிதாமகள் காணியாட்சியோ

(அர்ச்சகன்) அடே இல்லாதபோனு உங்கள்மாதா மகாள்பிதாமார்ச்சிதமோ.

(குருக்கள்) போடாபோடாஜாதிப்ரஷ்டஜாமுனியே

(அர்ச்சகன்) இடவுடாஇடம்திப்ரதிஷ்டமதிடாசுரா

(குரு) பொங்கலும்புளியோரையும் திங்கத்தான்தெரியும் பூஜைபண்ணிப்பிட்டாய் பூசையதாவிதி யீசுவரனுக்குத்தான்தெரியும்,

(அர்ச்சன்)சவுசபுஷ்கரணியிலேஸ்நானம்பண்ணிசவுண்டிசோட்சந்சாப்பிடத்தான்வாய் அர்ச்சனைபண்ணிறாய் அர்ச்சனைபூஜாவிதானம்புருஷோத்தமனுக்குத்தான்தெரியும்.

(குருக்கள்) இனிமேல்கோவிலுக்குள் ளேவந்தால் குடுமியைய றுதுகோமயத்தைதக்கரைச்சுத்தி முன்வாய்ப்பல்லைப் பிடுங்கிமோனையைமுனியாக்கிப்பிடுவேன்,

அர்ச்-சன்னிதிக்குள்ளேவந்தால்சாணியைக்கரைச்சுத்திசண்டாள அபிஷேகம்பண்ணி முழங்கால்சில்லைப்பேர்த்து முழியைவாட்டி மூணு வருஷம் மூப்பத்தாறும்மாசம் மூலையிலேபோட்டுவிடுவேன்.

(குருக்கள்) என்டா திருப்பட்சிபொங்கல் தெகட்டாமல்தின்னுகிறீரோ,

(அர்ச்சகன்) என்டா திருவாக்களிவில்லுடைபோலே திறம்மா விழுந்தகெப்போ.

(குருக்கள்) போடாபோடா சாப்பாட்டுராமா

(அர்ச்சகன்) போடாபோடா தாபுரதிண்டிகுண்டோத்ரா

பாதாசாரியன்சொல்லும்-வசனம்.

பாட்டமார்களே நீங்களிருவருமிப்படி ஒருவர்க்கொருவர் சடுத்தந்து, செய்துகொண்டிருக்கிறீர்களே தேவஸ்தானத்தார்கண்டால் அபராதம் போடுவார்கள் சீக்கிரமாய்ப் பூசைக்கு யத்தினப்படுங்கள் சுவாமிகளே

(குருக்கள்) நான்தான் பூசைபண்ணுவேன்

(அர்ச்சகன்) நான்தான் பூசைபண்ணுவேன்

(குருக்கள்) ஏதடா ஒண்டவந்தபிடாரி ஊர்பிடாரியைத்துரத்தினது போலே யிருக்கிறதுஸ்வாரஸ்வாரஸ்யந்தான்

(அர்ச்சகர்) ஏதடா மழைக்கொதுங்கி மனைக்கு வழக்கிடுவதுபோலே யிருக்கிறது பலேபலே சபாசு சபாசு.

பாதாசாரியன்-வசனம்.

ஓய்சுவாமிகளே இப்படிநடக்கிறது பார்த்தபேருக்கு மரியாதைதப்பிப்போய்விடும் கழுக்கமாய் நான்சொல்லுகிறபடி கேட்பீர்களா.

பாட்டமார்-வசனம்

ஆகா நல்லது நீசொல்படியேகேட்கிறோம்

பாதாசாரி-வசனம்-சரிதானு பாட்டா-வ-ம்-சரிதான்

பாதாசாரி சுவாமிக்குப்பெயரென்ன நிசமாய்ச்சொல்லுங்கள்

பாட்டர் சுவாமிக்குப்பெயர் சங்கரநாராயணதாமோதரகுருநாத பிள்ளையார்.

பாதாசாரி ஆகா நல்லதையா இதுநீங்களிட்டபேரா பெரியவாளிட்டதா;

பாட்டமார் இந்தப்பேரெத்தனையுகமோ ஆயிருக்கும்

பாதாசாரி நல்லது தான் இரண்டுபேருமாகப்பூசைபண்ணிப்போட்டு சீக்கிரமாயலங்கிரதஞ்செய்துகொண்டு தூபதீபநைவேத்தியாதி ஷோடச உபசாரங்கள்செய்துகொண்டு அவரவர்கள் ஆச்ரமத்துக்கு எழுந்தருளுங்கள்சுவாமிகளே,

(பாட்டமார்) அப்படியே ஆகட்டும்பிள்ளாய்,

பட்டர்கள்செய்கிற அர்ச்சனை,

ஓம்சுமுகாயநம ஓம்தூமகேதவேநம
ஏகதந்தாயநம கணாத்யக்ஷாயநம
கபிலாயநம பாலசந்திராயநம
கஜகர்ணிகாயநம கஜாநநாயநம
லம்போதராயநம வக்ரதுண்டாயநம
விகடாயநம சூர்ப்பகர்ணாயநம
விக்நராஜாயநம ஏரம்பாயநம
கணாதிபாயநம ஸ்கந்தபூர்வஜாயநம

சித்திவிநாயகாயநமோ நாநாவிதமந்த்ரபுஷ்பாணிசமர்ப்பயாமி

(வசனம்) இந்தப்பிரகாரமாய்விக்நேஸ்வரர்பூஜாவிதிகளைப்பண்ணிக் கொண்டு அவரவர்கள் ஆச்ரமஞ்சேர்ந்தபின்பு அரிச்சந்திரமகாராஜாவினது துவாரபாலகனுன கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க,

விருத்தம்,

கொட்டியமுரசின்னைக் கொண்டுதான்முழங்கயோத்தி
மட்டிலாப்புகழ்படைத்த வாழரிச்சந்திரன்வாசல்
கட்டளையாணைதானைபடைசெலுத்திவைக்கும்
கட்டியக்காரன்வந்துகளிப்புடன்றோன்றினனே;

௪-தரு இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி;

பல்லவி

கட்டியக்காரனும்வந்தானே-ஒய்யாரமாகக்
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி

கட்டியக்காரனும்வந்தான் கைகளில்விருதுகட்டி
சட்டமாயயோத்தியாளும் சத்திய அரிச்சந்திரன்வாசல்(கட்)

சரணங்கள்,

க, பாதச்சிலம்பொலி பன்ன இடையினில்வெண்
பட்டுச்சல்லடமு மின்ன
சோதிமார்பில்மகமல் சொக்காய்ப்பச்சென்றுமின்னக்
கோதில்லாமுடிமீது குண்டுமுண்டாசுதன்னை (கட்)

உ, திண்டிபாலமும் எடுத்து-மருங்கினிலே
பின்னார்க்கச்சையு முடித்து
வெண்டயம்பொற்கொலுசு தண்டைசிலம்புடுத்து
பண்டுவில்லம்புதொடுத்து பசப்புமொழியடுத்து(கட்)

௩, சிறக்கப்புகழ்ந்து பேசியே-நித்தியதானங்கள்
செய்யுங்கைகளை வீசியே
துறக்கத்தவரைக்கூப்பித் தொழுதுநின்றவாசியே
உறக்கத்திலும்மறவா உளவுக்கள்ளரையேசியே (கட்)

௪, மந்திரிப்ரதானிமார் கூடி-தினமும்போற்றி
மகிழ்ந்திடுஞ்சமுகத்தைத் தேடி
சுந்தரந்தனைக்கொண்டாடிச் சுருட்டிராகம்பாடி
வந்தனஞ்செய்திடுமரி சந்திரன்சபையைநாடி (கட்)

கட்டியக்காரனுக்கும்-பாரதாசாரியனுக்கும்-தர்க்கவசனம்.

(கட்டியக்காரன்) ஸத்துஸத்து அரேபிபா அஜாத்நீங்கள்யார்வோ ய்நம்முடைய அரிச்சந்திரமகாராஜனுடைய அரண்மனைவாசலிலே ஆட்டமென்னபாட்டமென்ன நாட்டமென்ன கூட்டமென்னகடபிடாயென்னலொடபிடாயென்ன யெவ்வளவாவது பயமச்சமில்லாமல்மாரிகாலத்திலே மதிச்சுப்போன தவளைகளைப்போலே தலைதெறிக்கக்கத்துரீங்கோ அச்சாரூப்பரகோ நீங்கள்யார்வோய்;

(பாரதாசாரியன்) நாங்களெல்லாரும் உம்முடைய புத்திரசிகாமணியினுடைய விவாகமுகூர்த்தத்துக்குவந்தவித்துவாம்சாள்,

கட்டி-நீங்கள்யெத்தனைபேர்வந்தீங்கோவோய்

பாரத-இந்தச்சபையிலே வந்திருக்கிறவர்களெல்லோரும் எங்களைச்சேர்ந்தபேர்கள்தான்வோய்,

கட்டி-அடேயப்பா இத்தனைபேருக்குளங்கேயிருந்துசர்பாயண்ணுவீங்கோ அரேவோய் நீங்கள்வருகிறவழிகளிலே காடுசெடிகல்லுகறடுபள்ளம்-படுகுழி-காடி-புலி-பாம்பு-தேள்-இதுகளிலே ஒன்றுமில்லையா

பாரத-என்டா அப்பா இவ்வளவுகடினமாகக்கேட்கிறாய்

கட்டி-உங்களத்தனைபேருக்கும் வைகுந்தத்துக்கு வழிகாட்டத்தான்வோய்,

பாரத-எங்களையேண்டாப்பா அப்படிசொல்லுகிறாய்

கட்டி-இல்லாவிட்டால்ஙங்களப்பன்பணம்சேர்த்துவட்டிக்குப்போட்டிருக்கிறீங்களோ,

பாரத-அரண்மனைசொத்தெல்லாம் உங்கள்பாட்டி கொட்டைநூற்றதோ,

கட்டி-அடவோய்நீங்கள்வருகிறவழியிலேஆறுகுளங்களுண்டா

பாரத-முடிகொண்டான் குடமுருட்டி திருமலைராசன் அரசலாறுகாவேரி கொள்ளடம்இதுகள்தானிருக்குது,

கட்டி-இந்த ஆறுகளிலே தண்ணி யெவ்வளவுயிருக்குதையா
பாத-இடுப்பளவு-மார்-அளவு-கழுத்தளவுவாயளவுயிருக்கும்
கட்டி-இன்னம்கொஞ்ச விரற்கடை தண்ணிபஞ்சமாய்ப்போச்சா
பாத-வண்டாப்பா இவ்வளவுபரிதாபப்படுகிறாய்

கட்டி - உங்களையப்படித்தானே அடித்துக்கொண்டுபோகாமல் போச்சேயென்கிறதுக்கந்தான்சாப்

பாத-நாங்கள் வேண்டுமானால்சொல்லாமற்புறப்பட்டுஓடிப்போய் விடுகிறோம் நீயேன் இவ்வளவுமனசலிக்கிறாய்

கட்டி-பஞ்சகாலத்திலே ஒருத்தர்வீட்டுக்குஒருத்தர்வந்தால் பரிதாபமாயிருக்குதா ஒருத்தரா இரண்டுபேரா தாங்குகிறதற்கு,

இந்தப்பக்கத்திலேஇருக்கிறவுங்களெல்லாம்யார்வோய்

பாத-அவர்களும்வித்வாம்சாள்தானையா

கட்டி-ஆஹாஹா வித்துவாம்ஸின மச்சங்களா யெத்தனை சுருவாடாகும்வோய்

பாத-என்னவோய் சாத்திரம்பொய்யானாலும்சாதிபொய்யாதுநீர்யா குடிமக்களிலே கணைபோரத்தலைப்பைக்கூட்டமோ

கட்டி-அரோபாபு மாகுலமூதேஷிமீகேமிகாவலசியுண்டாதி மீரெ வருவோய்,

பாத-மேழுபாகவதுலமண்டி

கட்டி-ஆ-ஆ-ஆ-ஆ-ருபாயிக்கெத்தினுபடி விக்கிரீங்கோ மாதரியெங்கே காட்டுவோய்பார்ப்போம்,

பாத-தன்மதங்கொண்டதடியா பிள்ளையென்னவோய்வாதகம்பண்ணபுறப்பட்டாய் பார்த்தமுகங்களெல்லாம் வேத்துமுகமாகுதே! என்னவோய் பாகக்காவத்தில்கேட்கிறாய்,

கட்டி-அரோதுத்தேரி மாவிலேபெல்லம் சனவர்லேபீச்அரேபாய் நைதோதும்கியாபோலே,

பாத-நாங்கள் அரிபஜனைபண்ணுகிறவிஷ்ணுபக்தாள்வோய்

கட்டி-அரியப்பத்தாதேபோனால்ஆக்கிறால்ஒருசட்டிஎப்படிகாணும்ஓய்,

பாத-என்னவோய்உங்கள்வீட்டிலே பொங்கலுக்குபொங்கல்அடுப்பூதுகிறதும் தீபாவளிதண்ணீர் மோர்க்கிறதுதான்வழக்கமோ என்னதைவோய் அரியப்பத்தாது ஆக்கப்பத்தாதென்கிறாய்

கட்டி-அரிப்பசனைக்கினைதான்ஓய் அரிப்பசனைக்கினைதான்

பாத- அட்சயவருஷத்திலேயல்லவோ அஞ்சரிசிப்பஞ்சம் இப்போயென்னவோய் உமக்கு அரிக்கினைபஞ்சம்வந்தது

கட்டி-பின்னே நீசொன்னதென்னவோய்

பரத-என்னவோய் கட்டுகெட்டமுட்டுப்பார்தா உமக்குகாதிலே கல்லும்முள்ளும்கலந்துதைத்திருக்குதோநாங்கள் பரதநாட்டியஞ்செய்கிறபாடகாள்ஓய்

கட்டி-ஆ-ஆ-ஆ-ஆஅரோமியாவௌத்சச்சா அம்மைநஞேபலேபலே சபாஸ்-சபாஸ்-உங்களுக்குபாரம்பரியமாய்இதுதானுபிழைப்பு,

பாச-ஆம் எங்கள் குடும்பகோணியகாள்முதலாகஇதுதான்பிழைப்பு

கட்டி-எய்காம்மேதும் குசியானபஞோறு ஒருத்திக்குப்பாடுகொதவம்பண்ணினல் உங்கள்கி என்றுவோய்தாகுகொடுப்பாங்கோ

பரத-என்னடா தட்டுகெட்டபயல்தாருமாருமாய்ப்பேசுகிருன் அடவோய் நாங்கள் சங்கீதசாஸ்திரமறிந்து பரதநாட்டியங்கற்றவித்துவாம்சர்கள்ஓய்

கட்டி-இவ்வளவு சொற்பகாரியத்துக்கு வாயிலேவந்ததெல்லாம்உளறுவானேன்நாங்கள் அரிச்சந்திரமகாராஜனிடத்திலேஆடிப்பாடித்யாகம்வாங்கிக்கொண்டு போகவந்தோமென்று சொல்லுகிறதுதானே இப்போதான் கற்றறிமோழையென்பதுகண்ணுக்குக்கண்ணாடிவைத்தது போலிருக்கின்றது நல்லது உங்களுக்குத்தெரிந்த வித்தென்னவோய் நம்முடைய அரண்மனையிலேயிருக்கிற வித்வாசம் சானைப்போல பாடுவீர்களா என்னென்னராகம்தெரியும்ஓய்

பரத-நாட்டை-நவரோஜ்-துஜாவந்தி-செஞ்சுருட்டி-குருஞ்சுநாதநாமக்கிரியை-சைந்தவி-மாளவம்-சங்கராபரணம்-இப்படி-இன்னம் அநேகவிதராகங்களுநம்பாடுவோம்.

கட்டி-அரேஇயா ஓசப்கருப்விக்வேஷ-நம்பள்து இப்படி இருக்காதுவோய் ரொம்பகம்மத்தாயிருக்கும்ஓய்

பரக-ஆனல் உங்களுக்குத்தெரிந்த இராகதாளங்களிலேகேட்டாலும்பாடுகிறோம்,

கட்டி-ஆ ஆ ஆ ஆ பல்மஜாக்உவா பல்குலிமேரக்தாகும் அரொமியா கோ சாக்கடைராகம்-நாபிராகம்- தோண்டிராகம்-குண்டிசட்டிராகம்-அதுகளெல்லாம்பாடும்ஓய்பார்ப்போம்,

பரத-இவைகளெல்லாம்எங்கேஓப்பாடம்பண்ணினீர்

கட்டி-அரேவைாய் அவுங்கபேர்மகா அருமையானபேர்வோய் அந்தநகாவித்வானுடையபேர் அங்கவீனஅல்பகர்ணமகாந்தகவக்ரதத்தகுஷ்டரோகபாகவதாஓய்,

பரதசபாசு உம்முடைய வித்துவத்துக்கு நாரதாதிகளும் சட்டல்வமகாராசாவினுடைய சமுகத்துக்கு எங்களையழைத்துக் கொண்டுபோய் பேட்டிபண்ணிவையும் கட்டியக்காரரே.

கட்டி-அப்படியே அழைத்துக்கொண்டு போய்மகாராசாவினிடத்தில் தியாகம்வாங்கிக் கொடுத்தனுப்பிவிடுகிறேன் இங்கேதானேயிருங்கள் கொலுச்சபைக்குப் போய்வருகிறேன்,

அரிச்சந்திரமகாராசன்-அரசாட்சிசெய்தல்-விருத்தம்,

மகாராசன்கதிர்குலத்திலுதித்தயோத்தி
மகாராசன்திரிசங்கு மகாராசன்பெற்ற
மகாராசன்சத்ய அரிச்சந்திரனென்னும்
மகாராசனரசியற்றி மகிழ்கின்றானே.

அ-தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்-

பல்லவி.

ராஜராஜமகராசன் அரிச்சந்திர-ராசன்-செங்கோல் கொண்டானே

அநுபல்லவி,

நேசமாயன்பத்தாறு தேசத்துள்ளாசரும்
திறைத்துக்கணங்கட்ட நெடியமுடிபூண்டானே (ராஜ)

சரணங்கள்,

வேதநாலுமாறு நாற்களுங்கற்றுணர்ந்த
வேதியர்மறையோதி மகிழவே
விளக்குங்க்ஷத்திரியர்கள் சங்கமில்லாமனு
விதிகளையாசரிந்து புகழவே
கோதிலா கலைவசியர்வாணிபமதிற்
கொள்ளைக்கவறாமல் நிகழவே
குடியானவர்கள் வேளாண்மைத்தொழில்களில்
குறைவிலாமலே திகழவே (மகரா)

கற்புமிகுந்தபெண்கள் கணவனையுட்குன்றாமல்
காலமறிந்துகோன்பு நோற்கவும்
கழல்தொழுவோர்க்குதேவர் வேண்டும்வரங்கொடுத்து
கலுழ்ம்போக்கியெனவையும் காக்கவும்
சற்பனையாலெவருஞ்சிந்தை நோந்துருகாமல்
சதாகாலமுமங்கிருபை பார்க்கவும்
தற்பரனருள்படைத்தோப்புறவடைந்தோர்கள்
கண்ணார்திருவுளத்துக் கோர்க்கவும் (மகரா)

கருங்கடற்போலவேதனை வெஞ்சனுங்கசிந்து
கசிந்துபுனல்மிகப் பெருகவே

காலகாலத்திற்பயிர்கள்தழைத்திட
கருதுமுழவர்க ளுருகவே
நெருங்கவிளைத்திடுகவதியுநாட்டில்
நிறைந்துமிகமிக வருகவே
நீர்வளமும்நிலவளமுங்குறைவிலா
நெறிவளமெவர்க்குந் தருகவே

ஸாயுநதியின்மகிமை-வஞ்சிவிருத்தம்.

பரவியநாட்டில்விரவினிற்பாங்க
சரவியுனியல்பைக்கரவிலாதுரைப்போம்

௬-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்ஆதி.

பல்லவி.

புவியில்மிகமகிமைபெற்றநதியில்நல்ல புண்யநதி ஸாயுவாம்

அநுபல்லவி.

இரவிகுலத்[illegible]ராகள் அரசாட்சிசெய்துவரும்
ராஜ்யத்திலயோத்தியாபு ரத்தினிற்பாவிய (புவியில்)

சரணங்கள்.

௧ விசும்பிற்குலதரன்போல் வொருத்துபாவிமேகம்
விரிவாங்கடவிற்சென்று விரும்பியமுகருந்தி
விமலவிண்டுவைப்போல மேனியெல்லாங்கறுத்து
விளைவிற்றிரும்பிச்சூர்யன் வெதும்பாவிமயமன்னன்
பசும்பொன்னிகர்மெய்யைநந்து பாதவித்தாரெனநெண்ணி
பஞ்சதீர்த்தாபிஷேகம் பண்ணிவைப்பதுபோலப்
பருவத்திற்பொழிந்த மழையின்புனற்றிரண்டு
பகரும்தியாகிகள்போல பாரிலரு[illegible]பாய்ந்து
விசும்பிச்சரயுதனில் வேகமாகவேபாய்ந்து
விளங்குமிருக்கையும் வெடிக்கவிளைந்தோடையில
விண்ணுமண்ணுமெள்ளோர்களும் விபரீதமேதென்றெண்ண
வெற்றிமிகுத்தாசன் விளங்கும்கௌசலநண்ண
துகம்பார்மலையின்மீது துலங்குபொருட்களெல்லாம்
தாழுடனேசெழித்தாந கொம்புவியிற்புரட்டத்
தோதாகமாடும்விலெ மாதாநடையயொத்து
தூயபூவிற்பாவித் தொல்லுலகோரைக்காக்குந்
சோதியே தவசிகள்செய்யும்
நீதிமேமகங்கள் வினைக்கும்-அ
ஜோதியே திஷ்டானபூமியை (புவியில்)

நீலம் வைரம் வைடூரியம்   நித்திலங் கோமேதகஞ் செங்
கோலந்திகழுந் துகிரக்   கோமளம் பத்மராகம்
நீதிமிகு புட்பராகம்   பச்சைமாணிக்க முதல்
நிறைந்துவந்திடும் நவ   ரத்நவித மநேகம்
சாலநீரிற் பிறந்த சருவும்   ஜலசெந்துக்கள்
சள்ளை செய்யுமுயிர்கள்   சாட்டைவாலின் திருக்கை
சடுதியிற் கொட்டுந் தெளி   மடவைவாளை யுளுவை
சாளை சர்ப்ப முதலை   சரிந்துவரு மநேகம்
தாலம் ஏலம் லவங்கம்   தக்கோலந் தேவதாரம்
தாதகிலசுவாசி   தாணிசர்ச்சூரங் கோஷ்டம்
தவளம் மல்லிகை முல்லை   தாமரைமலர் கொன்றைத்
தருவுங் கொடியும் அந்தத்   தளும்பில்வரு மநேகம்
ஞாலமீதினித்தந்தி   ய[illegible]புலி கரடி
நாளிகேசரி நாகம்   ஞம[illegible]நாய் கலைமான்
ஞானமிகு மன்னப்புள்   ஞ[illegible]வனுடன் மண்டூகம்
ஞாபமிகு குயில்   ஞாட்புக்களு மநேகம்
நாட்டமே   களையோரத்திவைகள்
கூட்டமே   தேடும் யோகியர்களின்
தேட்டமே   ஆட்டபாட்டமே (புவியில்)
அத்திருநதிக்கரை   யருகேயன்னகர் மாதர்
ஆனந்தஜலக்ரீடை   அகமகிழ்ந்தாடுவார்
ஆத்மஞானிகள் கூடி   அருணோதயத்தின் முன்னே
ஆதித்தனன்புகூற   அன்புடனே கூடுவார்
முத்திருவழியிலும்   முப்பொருணர்ந்தோர்கள்
முன்னவர்கள் கடமை   முடிக்கவந்து நாடுவார்
மூவேழுதலைமுறை   மூப்பர்கள் கதிசேரும்
முத்திவழியை நாடி   முனைந்து ஸாமம் பாடுவார்
ஒத்திருந்தரசர் மக்கள்   பத்திபத்தியதாக
ஓதும் வேதாகமங்கள்   உரைவிதிகள் தேடுவார்
ஓங்குபுகழ் வேதியர்   யாவருமன்புடனே
ஒப்புறவாயொழிவி   லொடுக்கமதிருவேவார்
இத்திருநகர்க்கிணை   இலங்கும் வைகுந்தமென்ன
இமையோருளமகிழ்ந்து   இயற்கையாய்க் கூத்தாடுவார்
இவ்விதமாஞ்சாயு   மகிமையெடுத்துரைக்க
என்னாலாகுமோ ஆதி   சேஷனொருவற்கல்லால்

ஈசனே அயோத்திநகர்
வாசனே கவிவாணர்கள்
நேசனே சத்யவிலாசனே (புவியில்)

அயோத்தியா புரிவர்ணனை புராண விருத்தம்,

மகரதோரண வாயிலும்நாஞ்சிலும்
சிகரமாமதிலுஞ் செறிப்பேரகழ்
சகரர்வான்புகழ் சாற்றுமயோத்திமா
நகரமேன்மை சிறிதுநடாத்துவாம்.

எ-தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம். பல்லவி.

மருத்வத்தனின்மிகுத்த மாதவத்தோர்புகழும்
மாநகரிதுதானே-அயோத்தி மாநகரிதுதானே-கனவானே

அநுபல்லவி.

மி[illegible]பெருஞ்செல்வமும்-மேலாமேன்மைபடைக்கத்
தொகு[illegible]ராணுகமற் துலங்குநற்களெவற்றும்(மரு)

சரணங்கள்,

௧, வேதவாக்கிய வோசையும் வேதியரோதி
விளங்குக்கலைக ளோசையும்
போதஞ்செய்திடு மோசையும் பெரியோரோதும்
புனிதமந்திர வோசையும்
கீதமுழக்க வோலசையுங் கிள்ளைகள்கூடி
கிளற்றும்பாடலி னோசையும்
நாதகீதெனு மோசையும் நங்கையர்கூடி
நடித்திடும்பத வோசையும்
நீதிநெறி யோசையும்நிறைமங்களவோசையும்
காதிற்கேட்டிடுநித்ய கல்யாணவோசையும் (மரு)

௨, ஓமச்சாலைகள் காணுமே சோமயாகஞ்செய்
அன்னுஞ்சாலைகள் தோணுமே
ஸாமச்சாலைகள் காணுமே ஸர்ஜனர்களின்
ஸங்கச்சாலைகள் தோணுமே
ஹேமச்சாலைகள் காணுமே பலகலைகளும்
இசைக்குஞ்சாலைகள் தோணுமே
காமச்சாலைகள் காணுமே கணக்கிலாக்கண்
காட்சிசாலைகள் தோணுமே
கோமகன்குணங்களைக் கொண்டாடிகுயிற்கூவும்
தேமநீதிநெறியே நின்றாடமயில்தாவும்(மரு)

௩, அத்திரு நகரத்திலே அதியுன்னத

நேசவிசுவாசமதறிந்தோம்
மாநவநேக முத்திலே
சித்திரப் பதுமைபோலே அமைத்திட்ட
அத்தமண்டப மீதிலே
நித்யதான தர்மத்திலே மிகுத்தமனு
வுற்றநீதி நெறியிலே
சத்ய நிதகனத்திலே நிறைந்தநவ
ரத்நசிம் மாதனத்திலே
சித்திரமணித்தவசின் முத்திலுலணைந்தசெம்பொற்
சத்திரநிழற்றவரிச் சந்திரமன்னனிருந்த (மரு)

அரசாட்சிகாண்டம் - முற்றிற்று,

ஆக-விருத்தம்-எ-தரு-எ,

ஸ்ரீ

முதலாவது
விவாககாண்டம்

கயோகிகளவருகிற-விருத்தம்,

பொருந்துநன்னெறிதப்பாத பூபனுமரிச்சந்திரன்றன்
திருந்தியசெங்கோலேந்தித் திறமுடனுளும்நாளில்
அருந்தவத்தோர்கள் போற்றும் அமரர்கட்கொப்பதாக
வருந்தவத்தவரநேக ரயோத்திமாநகரடைந்தார்.

க-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம், பல்லவி,

யோகிகள்வந்தார் தவமிகுத்த யோகிகள்வந்தார்

அநுபல்லவி.

போகிமுதலோர்கூறும் புண்யநெறியினிறு
யாகிகளானபேரு வாழ்விற்சிறந்தஞான(யோ)

சரணங்கள்,

முப்புரிநூன்மார்பர்சிலர் தப்பிலாவாசகர்சிலர்
செப்பருந்தவத்தோர்சிலர் ஒப்பிலாக்குழையர்சிலர்(யோ
வேதமோதுவோர்சிலர் கீதம்பாடுவோர்சிலர்
நாதமுணர்ந்தோர்சிலர் பாதம்பணிந்தோர்சிலர்(யோ
விடுத்தசிகையர்சிலர் தொடுத்தசடையர்சிலர்
உடுத்தவுரியர்சிலர் எடுத்தகோலினர்(யோ

குசலப்பிரசனை-பொதுவிருத்தம்,

வுத்தமாதவத்தோர்தம்மை வாழரிச்சந்திரநோக்கி
சித்தையிற்களிப்படைந்து சேனையோடெதிர்கொண்டேகி

அந்தமாமுனிவர்பாதத் தன்பொடுமலரைத்தூவி
விந்தையாய்துதித்துப்போற்றி விரகமுற்றுரைசெய்வானே

(வ-ம்) அசோகேளும்தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாய்வந்தயோகீசுவரர்களைப்பார்த்து அவர்கள்வருகையை யறிந்துஎதிர்கொண்டழைத்துவந்து சுகாசனமளித்து அர்க்யபாத்யாசமனதிசோடசஉபசாரங்களைப் பண்ணிக் குசலபிரசனைபண்ணுகிறவிதங்காண்க, உ-தரு-இம்-சாவேரி ஆதிதாளம், பல்லவி,

(விரு) வந்தகாரியஞ்சொல்வீரையா-மாதவர்களே
வந்தகாரியஞ்சொல்வீரையா

அநுபல்லவி,

எந்தன்பந்தகமல முந்தநாளில்வெகு
தொந்தம்போலவுங்கள் சிந்தைமகிழ்ந்திவடம் (வந்த)

சரணங்கள்.

க, அறிய[illegible]த்திருக்க ஐயா உங்கட்குரிய
மரியா[illegible]செய்யவல்லே ஐயா
சரியாசனத்திருங்க ஐயா முனிவர்களே
பரியாசம்பண்ணவேண்டா மையா
பெரியோரையானறியே ஐயா எந்தனைஎன்றும்
பிரியாவரந்தாருங்க ஐயா
சுருதிமுடிவையறிந்த சோதி முனிவர்களே
கருதியிந்நகர்தனைக் கண்டுகளித்திவடம்(வந்த

இராஜன்-வசனம்,

சுவாமிமகத்துக்களே எந்தனதுபிறவித் துன்பமகல அனேகானேயசினேகிதர்கள்போலே சந்தோஷமாய் இவ்விடத்துக்குவந்தகாரியமென்ன நீங்களெல்லாரும்இந்தநேத்தியான ந[illegible]த்தினகசிதமானசிம்மாசனத்தின் மீதெழுந்தருளுங்கள்உங்களுக்குரியமரியாதைசெய்யும்படியான முறையறிந்தவனல்லபரியாசம்பண்ணுதையுங்கள் உங்களைப்போலுள்ள மகத்மாக்களைஎன்றுமறிந்தவனல்ல என்னை என்றும் இணைபிரியாதிருங்கள் சுருதிஸ்மிருதிகளினியல்பறிந்தயோகீஸ்வரர்களே மனவன்போடு இந்த அயோத்தியாபுரிக்குவந்தகாரியமென்னதிருவருள் புரியவேண்டும்முனிவர்களே

விடை

மன்னுவுன்மகிமையைவினவியேவந்தோம்-சத்தியவரிச்சந்திரமன்
உன்னிசமாய்வளரு மிந்நெடும்புவிதனில்
உன்னைப்போலரசர்கள் பின்னையொருவருண்டோ (மன்
தேசதேசமாய்சுற்றிவந்தேகம் உந்தனுடைய

ஆசையெனுங்கடலிலாழ்ந்தோம் மனமகிழ்ந்துன்
வாசநகராயோத்திவந்தோம்
மாசமும்மாரிக்கன்பிகூர்ந்தோம் மனமதனில்
மாசிலாமணியென்றுமைத்தேர்ந்தோம்
கூசிடாச்சிலவார்த்தை பேசவெண்ணியேவிசு
வாசமுடனேவந்தோம் தாசானுதாசனுன (மன்)

முனிவர்-வசனம்.

அரிச்சந்திரமகாராஜனே உன்னுடைய ப்ரபாவங்களைக்கே ழ்வியுற்று உனக்கிணை இந்த ஐம்பத்தாறுதேசத்திலும் இராஜாக்க ளில்லையென்றுமதித்துவந்தோம் உனக்கிணையான ராஜாக்களிருக் கிறார்கள் ஒவ்வொருதேசமாய்ச் சுற்றிவந்தோம் உன்மீதிலுற்றஆ சைவலையிலகப்பட்டு நீர்வாசமாயிருக்கிற அயோத்திக்குவந்தே ம்மாதமும்மாரி தவறாமற்பெய்யும்படிக் கருள்தந்தோம் களங்கா கிதனென்பதையு மறிந்துணர்ந்தோம் உனதுவம்சாபிவிருத்தியா கும்படியான சிலக்ஷேமசமாசாரங்களைக்கூவித்துப் பேசவேண்டி மகாவிசுவாசத்துடனே இவடத்துக்குவந்தோம் தாசானுதாசனே

௩, எந்தெந்தத்தேசங்கள் கண்டீர்கள் கண்டுமகிழ்ந்து
எந்தெந்தத்திசைதனிற் சென்றீர்கள்
எந்தெந்தத்தீர்த்த மாடினீர்கள்-ஆடியநீங்கள்
எந்தத்தலங்கள் சேவித்தீர்கள்
எந்தெந்தமகிமையைக் கேட்டீர்கள்-கேட்டறிந்தநீங்கள்
எந்தெந்தமகத்துவ மறிந்தீர்கள்
விந்தையாவையு மாதியந்தமாயுரைத்தால்
எத்தன்றுன்பமகன்று சந்ததமுமிருப்பேன் (எந்)

இராஜன்சொல்-வசனம்.

எந்தெந்ததேசம்போய்வந்தீர்கள் அங்கே என்னென்ன அதி சயங்கண்டீர்கள் எந்தெந்தத்தீர்த்தமாடினீர்கள் எந்தெந்தஸ்தலங்க ள்சேவித்தீர்கள் எந்தெந்தமகிமையைக் கேட்டீர்கள் எந்தெந்தம குத்துவமுணர்ந்தீர்கள் அந்தந்த அதிசயமான விசித்திரங்களை கிரு பைசெய்துபகன்றால் ஜென்மாந்திரங்களில் பண்ணின பாபவி மோசனமாய் க்ஷேமத்தையடைவேன்மகத்துக்களே.

௪, அதிகநாகரீகமாங்கண்ணேசி எனும்தன்னாட்டிற்
கதியளிக்கும்புண்யகண்டகி
நதியெனுமதிற்றீர்த்தமாடி தன்மையதாய்ப்
பதியாளும்மதிகபனைநாடி
விதியாகச்செய்தபூசைகொண்டோம் அவன்பெண்சந்திர

மதியாளுன்மனையாளாக வெண்கொண்டோம்
துதிபெறுமன்ன அவளதிருபமிகுபுத்தி
மதிகளைவர்ணித்திட விதித்தவனாலுமாமோ (மன்)

முனிவர்சொல்-வசனம்.

அகோகேளும் அரிச்சந்திரமகாராசனே நாங்களிந்தபூமண்டலமெங்கும் யாத்திரைபண்ணிவந்தோம் அப்படிவரும்போது அதிசுத்தநாகரீகமாயிருக்கிற கன்னோசிராச்சியத்திலிருக்கிற கண்டகிநதியில் ஸ்நானம்பண்ணி அந்த ராஜாதிபதியான சந்திரதயமகாராஜனண்டைக்குப் போயிருக்கையில் அவர்செய்த வேதவிதியான பூசையாவையுமடையும்போது அவருடையமகளான சந்திரமதியினது ரூபலாவண்ய சவுந்தரியாதி வைபவங்களையாராய்ந்துணர்ந்து உனக்கு அக்கன்னிகையை பாணிக்கிரகணம் பண்ணிவைக்கவெண்ணங்கொண்டு உன்சமூகத்துக்குவந்தோம் அந்தமகாபதிவிருதையை வர்ணிக்கவேண்டுமானால் அவளைப்படைத்தபிரமாவுக்காலும் அருமையாகும்மகாராசனே. விருத்தம்

மிகுத்தவரிந்தவ கவரித்தன்மைகூற
மெய்த்தவன் ஆசவன்குலத்தோன்மிசமகிழ்ந்து
தொகுத்துரைத்தஉங்கள்மனத்தோற்றம்போலே
திடங்குகருமங்களெலாந்துரிசிற்கூடும்
டகுத்தநிகாயடியேற்கப்பாவைக்குற்ற
பற்பலநற்குணவொழுக்கவடிவமெல்லாம்
வகுத்துரைநக்கவிநம்பிபடிதொழுதேனென்று
வணங்கினான் அவர்கள்மருங்கிணங்கினானே (௩)

வசனம் இவ்விதமாய்ப்புகழ்ந்துகொண்டாடியயோகீஸ்வரர்களைப் பாதபூசைபண்ணி உபசரித்து மதிதயமகாராசன் மகளுடைய வைபவங்களை அரிச்சந்திரமகாராசன்விவரமாய்க்கேட்பதுகாண்க

௩-சரு-இ-ம்-கேதாரகவுளம்-ஆதிதாளம்- பல்லவி.

அருள்யாக்கியமீதுங்களன்பே எனதுபாக்கியம்
ஐயாமிகவும் (அநுபல்லவி) சிலாக்கியம்
திருவாக்குக்கெதிர்வாக்கு தேடிச்சொல்வாருண்டோ
தெளிந்தமுனிவர்களே தெரிசனந்தந்தீர்களே-அரு

சரணங்கள்.

௧. அந்தநாளிலெங்கள்முன்னோர் முயன்றுசெய்த
அருந்தவமிது தானே
ஆண்பிள்ளைபெண்பிள்ளை யாவுமியிலெனையீன்ற
தந்தைதாயுந்நீங்கள் தானே

இந்தநாளிலுங்க ளெழிலுயர்வசனத்தால்
சுவர்க்கும்அதிபன் நானே
எட்டும்ரண்டுமறியா ஏழைமதியேனனை
ஏத்திப்புகழ்ந்திடோதான் என்குறையுந்தீர்த்தேனே அரு

௩, திங்களொளிமுகமும் செங்கமலபாதமும்
தேவரினங்கள் போலே
திகழுஞ்சடைமுடியும் தெளிநீர்க்காவியுடையும்
தெரிசித்தேனொருக் காலே
எங்கள்மூவேழுதலை முறையுமக்குமொழிந்தேன்
இனியுங்களரு ளாலே
ஏர்மையானதுணைக்கி லெப்போமனங்கொள்ளுவேன்
இகபரத்துள்ளோர்க்கொப்பாதென்னிலதைத்தள்ளுவேன் (அரு)

௪, கன்னியின்நல்லுருவும் குணமுஞ்சவுந்தரியமும்
காணமனது கோருதே
கருதும்தத்ரநற்பும்பொற்பும் காக்குந்தர்மசிந்தையின்
கருத்தறியவுட் சோருதே
உன்னியகருமங்கட் கொப்பவுணாப்பாளோவென்
றுள்ளமிக வாருதே
உங்களாலேயிதெல்லா மறிந்தாலென்மனமுய்வேன்
உபசரிக்கவறியேன்உன்னண்டையாய்த் தொண்டுசெய்வேன்(அரு)

(விருத்தம்.) உத்தமதீதுணைத்திடலும்நற்றவத்தோர்
உமைபாகன்வரம்படைத்தமதிதயேத்திரன்
பெத்தமகட்குத்தவிசேடங்கள்யாவும்
பேதமகன்றிடக்கேளாய்ப்பெம்மானேயென்றத்
கலத்திலமைச்சர்முதலோர்கொண்டாட
அகமகிழ்ந்தேயாதியந்தமாயுணர்க்க
சித்தமதிக்களிப்புற்றேவருமோர்பால்
சேர்ந்திட்டார்வள்ளலன்முன்நேர்த்திட்டாரே ௧

ஈ-ஒரு-இ-ம்-நாதநாமக்கிரியை-திரிபுடைதாளம், பல்லவி.

அவனிதனிற்சந்திரமதிக்கிணை-அரிவையாரடா-அறிந்துணாகூறடா
தவமதிற்றுரோபதை (அநுபல்லவி) தானிவட்கீடோ
தாரைமாதகலிகை நமக்கெனிற்சோடா
கவனமாயிவளை தரித்ததுசேனு
கல்யாணபுருஷீனு (சரணங்கள்.) இருந்தராசாளு(அவ)

௧, செந்திருமகளோ புலோமிசைப்பெண்ணோ சலனத்
தோணும் இவளுக்கிணை

செப்பவெளிதோ புவியிலொப்புவேறில்லாமல்மணம்நாறும்
நந்தாவனங்கள்வேத — மந்திரமேகதிமணந்த
நதியோ — அவளைச்சொன்னால்
சொர்க்கத்தினில்வாழுந்தேவர்கள்க்கத்தோரிவற்குநற்கதியோ
சுந்திருவமாதர்களு — மிவள்கற்புக்கிணையோ
சதிதருப்பிசன்பாதம் — பெறவொருத்திணையோ
சித்திக்குப்பாரின்னமுந்தன் — மதிதனக்கிசைந்த
சித்திரவிசித்திரங்கள் — எத்தனைகோடியுண்டிந்த (அவ)
௨, கார்முகிலேமுமிவள் — கருங்குழல்களுக்கிணை
யாமோ — கடலோரத்து
கரியசெவ்வறலேச்சைசவலத்தைஎனினும்சொல்லப்போமோ
ஆரிருக்கிறாரெனக் — கிணையெனவாக்ரமித்
தகட்டும் — மதிமிகுத்து
அருந்தவத்தோர்க்குமிவள்மீதிலாசைகொள்ளமனங்கிட்டும்
நேரிருக்குமோயிவள் — கூர்விழிக்கெமன்வேல்
நெடியவஞ்சனஞ்சமும் — நெறியொழிந்திடின்மேல்
கூரிருக்குமோகாமன் — கணைக்கெனிற்சொல்லு
குயிலேமென்மொழிபாலைக் — கொண்டாடப்புல்லு (அவ)
௩, இந்திரன்வைச்சிலைதனைப் — பழிக்கவெழுந்ததிவள்
புருவம் — ஆகாஎன்செல்வோம்
எழிலுயர்கபோலமோ — யிசைந்தகன்றுடியினுருவம்
சுந்தரத்திலகப்பூ — விணையொத்தபூங்குமிழ்
நாசி — வள்ளைப்புட்பத்தை
சுருக்கில்முனிந்துநகைத்திடச்செயவள்காதின்வாசி
புந்திமகிழ்ந்தருந்தும் — செழுங்கோவைக்கனியை
பூவையரணியும்செம் — பவளத்தின்மணியை
சிந்தியமகரந்தந் — தருமரவிந்தச்
செழுமலரொனவத — ரமுடையாளிந்த (அவ)
௪, நித்திலத்தைசேமமாதனை — முத்தினைப்பழிக்குமவள்
பற்கள் — ஆரவடைக
நேராகுந்தேன்கற்கண்டுமுப்பழத்தினுமதுரச்சொற்கள்
முத்தியல்காடலுக்குள்ளேசத்திக்குஞ்சங்கினையொத்த
சழுத்து — பிரமனன்று
மூக்கணன்வரத்தினால்படைத்தான்கண்ணுள்ளவிழிச்செழித்து
அத்தினந்தனிற்பிரமன் — அகிலமும்படைத்து
அடிக்கடிதினைத்திரு — கைசளையுந்தடைத்து

அத்திமத்தைசக்ரவாளத்தைப் பொன்பொருப்பை
அதின்பின்படைத்துப்படைத்தானிவன் முலையுருப்பை
ரு. வடத்தினற்றளிரிவள் வயிற்றினைக்கண்டுகடல்
சேரும் ரோமதாரைகள்
வரியெறும்பைக்கரெள்ளைவாதுகள்செய் தோட்டிவிடநே
தொடுத்தவைங்கணைதுற்றுமதுரையின்கைக்கணையெனும் (ரும்
உந்தி தோள்களிரண்டும்
துலங்கும்வானையளாவி விளங்கும்மூங்கிலையொத்தபந்தி
தடக்கைகளிரண்டுஞ்செங் காந்தளின்மலரோ
தையலிடைகாணஸ்சொற் பனமென்பர்சிலரோ
துடைகள்செங்கதலியைத் துதிக்கையைப்பழிக்கும்(அவ)

பொது. வசனம்.

இந்தப்பிரகாரமாய் மாதவத்தோர்கள்ளால் சொல்லக்கேட்ட அரிச்சந்திரமகாராசன்மதிமயங்கி மையல்பெருகிகாதல்மிகுந்துகசிந்துருகி சந்திரமதியின்மீதுள்ளவிரகதாபத்தினால்வெதுப்புண்டு அந்தபோதனர்களை அடிபணிந்துசொல்லுகிறவிதங்காண்க.

இராசன்சொல் - விருத்தம்.

அருந்ததிதனக்குமேலா மவ்வரிவையளாயானே
பொருந்தமாமலைசூட்டப் புரவலன்மனதறிந்து
வருந்தியநீங்களேபோய் வண்மைகளறிந்துவந்தால்
இருந்துளமகிழ்ச்சிமேன்மை எந்நாளுமுங்கட்காமே, (ரு)

(வ-ம்) அகோவாருங்கள் தபோதனர்களே அருந்ததிதேவிக்கும்அதிகமானபதிவிரதாதர்மத்தையுடைத்தான அந்தசந்திரமதியை எனக்கேமாலையிடும்படியான எதுகாரஞ்செய்யும்பொருட்டு நீங்களே அந்த மதிதய மகாராசனிடத்திற்குப்போய் அவருடைய மனோபாவ மறிந்துக்கொண்டுவந்து என்மனோபிஷ்டத்தை நிறைவேற்றினால் அதினாலுண்டாகப்பட்ட சகலசந்தோஷ மகிமையும புகழ்ச்சியும் உங்களுக்குக் கிடைக்கும் மகத்துக்களே,

முனிவர்கள்சொல் - விருத்தம்,

முல்லையினகைவாய்மன்ன முகமலர்ந்துரைத்தவுந்தன்
சொல்லையுமதிதயன்பாற் சுருக்கினில்மொழிந்துவந்தன்

இவை- மேகங்களின்பெயர்,

சம்வர்த்தம் ஆவர்த்தம்-புட்கலாவர்த்தம்சங்காரித்தும் துரோண ம் காளமுகிநீலவருணம்இவைமுறையேமணிநீர்பொன்பூண்கல்தி

தொல்லையைவிடுத்துச்சந்திர சூரியருள்ளமட்டும்
எல்லையில்லாதகீர்த்திக் கிடந்தேடிவருகுவோமே (௬)

(வ-ம்) அகோவாரும் அரிச்சந்திரமகாராசனே-நீமகாசந்தோஷத்தோடு சொன்னசொற்களை மதிதயமகாராசனிடத்தில் அதிசீக்கிரத்திலறிவித்து உன்னுடையவிரகதாபத்தைத்தீர்த்து சந்திராதித்தருள்ளமட்டுக்கும் நிலைபெற்றகீர்த்திக் கிடந்தேடிவருவோம்அரிச்சந்திரமகாராசனே.

பொது-விருத்தம்

சந்திரமதிதன்பார தனங்களுன்னைசலமொத்த
சுந்தரயார்பின்மூழ்கச் சூட்டுவோமென்னவாழ்த்தி
மந்திரமுனிவரெல்லா மண்டபமகன்றுதேவர்
இந்திரபுரியிதென்னு மெழினகர்கடக்கின்றாரே.

(வ-ம்) அகோகேளுந்தர்யபுத்திரர்களேஇந்தப்பிரகாரமாய் சந்திரமதியையே உனக்குக் கல்யாணப்பண்ணி வைக்கிறோமென்று எழுந்தருளிய முனிவர்கள் யாவரும் இந்திரநகருக்கிணையான அயோத்தியாபுரியைவிட்டுப் புறப்பட்டு கன்னோசிமாநகருக்குவருவதுகாண்க,

௬-தரு-இம்-ஆநந்தபைரவி - ஆதிதாளம்-பல்லவி,

மன்னன்வாசகங்கேட்ட-மாமுனிவர்கன்னோசி
மாநகர்தனைத்தொடர்ந்தார்-வழிநடந்தார்

அநுபல்லவி,

சொன்னமொழிதவறாச் சுகுணன்சத்யரிச்சந்திரன்
தன்னைச்சந்திரமதிக்குத்-தகவாய்க்கலியாணஞ்செய்ய, (மன்)

சரணங்கள்.

௧, வாவிகூபதடாகம் வலியகுகையோடைகள்
சேவிக்குந்தேவஸ்தலங்கள் சிறந்தவழிநடந்து(மன்)

௨, குன்றுகள்மேடுகள் குறிக்குமாநதிகளும்
சென்றுதரிசனஞ் செய்யுமலைகள்கடந்து(மன்)

௩, நந்தவனங்களும் நாடுநன்னகர்களும்
அந்தமானபூஞ்சோலை யடர்ந்தயாவுங்கடந்து(மன்)

பொது-விருத்தம்

முனிவர்கள்போனபின்னர் முன்னவன்கொலுவைநீங்கி
இனியராப்புசிப்புமுண்டு எழிற்றிருப்பள்ளிசென்று
கனிவுளமாரன்றன்னைக் கணைகளாலெய்தல்கண்டு
தனியனுயுள்ளத்தோடுந் தானிதுவுரைத்[illegible]ட்டானே ௮

(வ-ம்) இவ்விதமாய்ப்போன தவத்தவர் நெ[illegible]ந்துரா[illegible]டந்து கன்னோசிநாட்டையும்போது இங்கே அரிச்சந்[illegible]ராசன்விரக

தாபத்தினால் சிவ தும்பிதன்னுடைய கொலுச் சமுகத்திலிருந்து அரண்மனைக்குப்போய் உண்டு தாம்பூலந்தரித்துப்பள்ளியறையி ற்சேர்ந்துபடுத்திருக்கும்போது தன்னிலேதானே சொல்லிக்கொள்வதுகாண்க,

எ-தரு-இ-ம்-தோடி-திரிபுடை தாளம்-பல்லவி, (னே உள்ளத்தோடுரைத்தானே-ஒருவிலிக்கணை-உடம்பெங்குந் தரித்தா

அநுபல்லவி,

இள்ளையீதேறிமாரன் வள்ளலரிச்சந்திரன்றன்
பள்ளியறைசேர்ந்தபின் சள்ளைசெய்தவையாவும் (உள்)

சரணங்கள்.

க, மயங்கிவருந்திமனம் வாடிமன்மதன்பாற்
றியங்கிவளருங்காமத் தீயினாற்செயலற்றுத்
தயங்கித்தீராதமோக தாகத்தாலாவிசோர்ந்து
வுயங்கிவயங்கிமெத்த வுருகியுருகித்தானே (உள்)

உ, சந்திரதயனன்பால் வந்தமாமுனிவரோடு
வந்தவள்மாயமாகி யெந்தனுளத்தைவவ்வி
தொந்தம்போலுட்புகுந்து தோதகஞ்செய்திருந்து
வந்தமாமுனிவர்பின் னடந்தறியேனென்று (உள்)

ங, மாறுபாடாயென்னையம் மாதுசிரோமணி
வேறுமிப்படியனேக விதஞ்செய்தயாவுஞ்சொல்லி
ஆறுதலெவரோடென் றயர்ந்துமிகப்பயந்து
எறுமோகுறையுமோ வென்னமனத்தளர்ந்து (உள்)

பொது-விருத்தம்

மானவனுமரிச்சந்திரமன்னவனிவ்வண்ணமுற
மாலைதனைச்சாற்றவென்றுமகிழ்ந்தெழுந்த
ஞானமிகுயோகியர்கள்தானடந்தவழிகடந்து
ஞாலமுயர்கன்னோசிநகரடைந்தார்
மாநகரிற்றேர்கரிசெம்மாமுதலாஞ்சேனையொடு
மன்னமன்னரடிவணங்கமகிமைகொண்ட
வானவர்கள்வகழ்த்திடவும்வையகத்தோர்போற்றிடவும்
வண்மையுளகொலுவில்மதிதயனும்வந்தான். (கூ)

வசனம்,

இவ்விதமாயரிச்சந்திரமகாராஜன் காமன்கணையால் உள்ளமு ருகிமதிய[illegible]ந்து மனந்தளர்ந்துநடுநடுங்கி நெறிதயங்கி தனக்கு ள் தானே புலம்பிசந்திரமதியினுடைய ரூபலாவண்ணிய சவுந்தர்

யாதிகளை நினைந்திருக்கிறான், யோகீஸ்வரர்களும்நெடுந்தூரம்நடந்து கண்ணேசிமா நாடடைந்தார்கள்இப்படியாகவரக்கண்ட மதிதயமகாராசன் கொலுவில்வந்திருந்தராஜரீகஞ் செலுத்துவதுகாண்க,

அ-தரு-இ-ம்-ஆரபி - ஆதிதாளம்-பல்லவி,

மதிதயனெனமிகவதிகமகிமைபெற்றமன்னன்கொலுவில்வந்தான்

அநுபல்லவி,

பதிபுபாவனனான பானுகுலேசனெனும்
பாலனரிச்சந்திரர்க்குப் பாணிக்கிரகணம்பண்ண

சரணங்கள்,

௧, மேருகிரியைவெளிச்செய்ததெனவுமுயர் மேனிலைமணிநாடவாரிதியிதுவெனவந்துசப்பணங்கட்டி வருமரசர்கொண்டாடக்
காருங்கடல்போலக் கதிர்மணிமுரசாடத்
தேரும்யானையும்பரித் திரள்களும்நடமாட (மதி)

௨, செங்கதிரொளியெனப்புங்கவன்சிரமீது தங்குமகுடமின்னசெங்கரமிரண்டிலும்வங்கிசடகமுந்தோள்வளைகள்சிறந்துதன்ன
செங்கமலபதத்திற் றங்கம்பிரகாசமென்ன
அங்கமுழுதுநிறைந் தெங்கணுமொளிபன்ன (மதி)

௩, செம்பொற்குடம்போற்கொங்கைசிறந்திலகு மாதர்கள்செ
(முங்கவரிகள்வீச
கும்பற்கும்பலாய்மந்திரிப்ரதானிதானுபதியர்கொண்டாடிப்போ
அம்புவிநான்மறையோர் முனிவர்வாழ்த்தும்விலாச (ற்றிப்பேச
ஸம்ப்ரமமாகச்சிம்மா ஸனத்தின்மீதுவுல்லாச(மதி)

பொது-வசனம்,

இவ்விதமாய் கொலுவிருக்கும் மதிதயமகாராசன் சபைக்கு வந்தபோதனர்களினடிவணங்கி உபசரித்துச் சிலவர்த்தமானங்களை இராஜன்விநுதவுல்காண்க

மதிதயராசன்விநுவுதல்-விருத்தம்

வானதீர்பொழிந்துமுத்த மணிகொழித்தருவிபாய்ந்த
கானதீர்பெருகுத்தெய்வக் கண்டகியென்னுந்தீர்த்தத்
தானதீராடியெந்தன் றலைக்கடிமலர்கள்சூட்டிப்
போனதீருடனேமீண்ட புதுமையைப்புகலுவீரோ (ம)

வ-ம் அகோவாருங்களையா சுவாமிசபோதனர்களே நீங்களெல்லாருங்கண்டகிநதியில்தீர்த்தமாடிஎனக்குதரிசனங்கொடுத்துப்போய் வருகிறோமென்று விடைபெற்றுக்கொண்டுசென்றுமறுபடியுமுடனே வந்தகாரணத் திருவுளப்பற்றவேணுமையாசுவாமி

மாமுனிகள்சொல்-விருத்தம்,

அரசனேபுகலக்கேளா யவனியிலயோத்தியானுக்
குறிச்சிலாவரிச்சந்திரன்றன் கொலுச்சபையதனிற்சென்று
பரிசரித்தன்மகட்குப் பதியவனெனக்குறித்தோம்
அரசரிலனேகர்தம்மு ளவனலதில்லைத்தானே (௰௧)

(வ-ம்) அகோகேளும்மதிதயமகாராசனே உம்முடையகொலுச்சமு கம்விட்டு அயோத்தியாபுரியைநோக்கிநடந்தோம் அங்கேஅரிச்சந் திரமகாராஜனைக்கண்டு அவன்செய்தஅத்யபாத்தியாதிஷோடசோபசா ரங்களையும் மனக்களிப்போடுகைக்கொண்டோம் அவனிருக்கிறசுகிரு சி ஆசாரவிவகாரங்களையும் ரூபலாவண்யாதிகுணாதிசயங்களைய றிந் தோம் அதில்மிகுந்தஆனந்தபரவசமாகினோம் இந்தலோகத்திலேஅ வனைப்போலேசிலனையும் குணநலனையும் நாங்கள்எங்கேதேசத் திலுங்கண்டதில்லை ஆகையால் அவனுக்கு உன்னுடையபு[illegible] சௌபாக்கியவதி சந்திரமதியைவிவாகஞ்செய்துகொடுத்து சந்தோஷி க்கவேணுமென்கிற எண்ணமுற்று மறுபடியும் திரும்பி வந்தோம் மகாராசனே.

மதிதயமகாராசன் முனிவர்களுக்குச்சொல்-விருத்தம்

ஐயனலமைத்தவாரி லனுவேனுந்தவறிடாது
செய்வராசியங்கள்தன்னைத் தெரிந்தரிந்துரைக்கவல்லோர்
தையலென்மகட்குக்கேள்வர் தானிதோரியாவரேனுந்
துய்யதோர்மேன்களொங்கள் தொல்சபைக்கழைத்துவாரீர் (௰௨)

(வ-ம்) அகோகேளும் முனிவர்களே பிர்ம்மாவினாலே சிருஷ்டிக்கப்ப ட்ட பிரமாணங்களி லனுப்பிரமாணமாவது பிசகுவராது எமக்குமு ன்னாலே ஈசுவரனால் கொடுத்திருக்கப்பட்ட திருவருட்படிக்கு எவர் களினிமையாய்த்தறிந்து இயல்புடன்சொல்வார்களோ அவர்களே எ னதுசவுந்தர்யவாதியாகிய சந்திரமதிக்குப் பிராணநாயகராவார்கள் ஆ கையினாலே யாவராகிலும் பூலோகத்திலே உங்களுடைய மனதுக்கி சைந்தவர்களை யழைத்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் வாருங்களைய சுவாமிகளே.

பொது-விருத்தம்

மாதவர்கள்சத்யரிச்சந்திரனையழைத்துவர
மகிழ்ச்சியொடுசென்றபோது
மதிதயனும்மகளினது சுயம்வரமோரேழுநாள்
மத்தியிலிருக்குதென்று
தூதுவர்கள்கையிற் கலியாணவோலைவிடுத்து
தொல்புவியின்வேந்தர்க்கெல்லாம்

துறிசிலறிவித்துவர வென்றுசுபமங்களம்
சொல்லியாக்ஞாபித்திடும்
போதவர்களன்பத்தாறு தேசத்திறைவர்
புந்தியில்மகிழ்ந்துபொங்க
பொற்புடையகல்யாண வோலைகொடுத்தப்புறம்
பு*ழுமங்கள சோபனம்
ஆதரவதாகமதிதயன்மகட்கென்னவே
அதிசயித்தரசரெவரும்
ஆனைசேனைகளுடன் கண்ணோஜிநாட்டாளன்
அரண்மனையில்வந்தமர்ந்தார்.

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் வந்தயோகீசுரர்கள் அரிச்சந்த்ர மகாராஜனையழைத்துவரப்போனபோது மதிதயமகாராஜன் அன்பத்தாறு தேசத்துஇராஜாக்களும் கல்யாண வோலையனுப்பி இன்னம் ஏழுநாள் முகூர்த்தமிருக்குதென்று அறிவித்தபோது அவரவர்களிருந்து ஆனைசேனை சன்யங்களோடு கண்ணோஜி நாட்டைநோக்கிப் புறப்பட்டுவந்து அரண்மனைக்குள்வருவதுகாண்க.

தேசாதிபதிகள்-வருதல்

௬-தரு-இ-ம்-கௌளிபந்து-அட,தாளம்

பல்லவி.

அஷ்டதிசையாளு மரசரெவர்களும் ஆசைமிகுத்து வந்தார்

அநுபல்லவி-

இஷ்டபரிபாலனஞ் செய்யுஞ்சந்திரதயன்
இஷ்டமாய்ச்சுயம்வர மியற்றுஞ்சபைதனில் (இஷ்)

சரணங்கள்

௧. சிங்களர்கேரளர் சீனர்களுடகர்
சிந்தர் குலிங்கர் சூரசேனன்
கொங்கணர் தெங்கணர் நேபாளர்-கூச்சரர்
கோயர்மகடர் குருதர் நைமிடர் (அ)

௨. காந்தாரர் காஸ்மீரர் காம்போஜர்நேப்பாளர்
கலிங்கர் வங்களரோட்டர் கசசர்
ஆந்தரர்யுகாங்கரா யவனறலந்தியர்
அருணர் மிலாடர் மராடர்அங்கர் வங்கர் (அ)

௩. பல்லவர் சாலவர் பாஞ்சாலர் திராவிடர்
பாண்டியர் விதப்பர் பப்பர் சேரர்
கொல்லார் துளுவர் குடகர் மச்சர் கிராடர்
கோசலர் சௌராஷ்டரர் கொங்கர் குருகர் (அ

பொது-விருத்தம்,

இன்னவாறெழிற் கன்னமாபுரிதனையடைந்த
மன்னமன்னவர்யாவரு மதிதயன்விடுத்த
வன்னமாமணிமேடையில் வந்தமர்ந்திருந்தார்
சொன்னமாதவரயோத்தியைச் சுகத்துடனடைந்தார். (௩௪)

(வ-ம்) அகோகேளும் தர்மபுத்திரர்களே இந்தப்பிரகாரமாகவந்த அன்பத்தாறுதேசத்தரசர்களும் சந்திரதயன் பட்டணத்தில்வந்து அவரவர்களுக்கு விடுத்தவிடுதியிலமர்ந்தார்கள் முன்வந்திருந்த முனிவர்களியாவருமயோத்தியாபுரியைச் சேர்ந்தபிற்பாடு நடக்கிற விதங்காண்க

இதுவுமது.

வந்தமாதவத்தோர்நற்றாள் வணங்கியேயரிச்சந்துமைந்தன்
அந்தமாய்மதிதயன்பா லடைவுடன்சென்றுவந்த
விந்தையாம்வர்த்தமான விவரங்கள்சொல்கவென்ன
புந்தியிலுவகைகொண்டு புனிதர்கள்புகலுவாரே. (௩௫)

(வ-ம்) அகோகேளுஞ் சபையோர்களே இவ்விதமாய்வந்த மாதவ முனிவர்களைவணங்கிய அரிச்சந்திரமகாராஜனானவன் மதிதயமகாராசனை சபைக்குப்போய் விவாகசமாசாரங்கள் விசாரித்ததை விவரமாகச்சொல்லவேண்டுமென்று வேண்டும்போது மாதவமுனிவர்கள்சொல்லுகிறவிதங்காண்க,

ம-கரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்,

பல்லவி.

சேதிகேட்டகமகிழ்வாய்-நரர்கள் போய்வந்த
சேதிகேட்டமகிழ்வாய்

அநுபல்லவி,

சோதிகுலத்துதித்த
நீதியதாய்ப்பிரமன்
சுந்தரா அரிச்சந்திர
நெஞ்சினினினைந்த (சே)

சரணங்கள்,

௧, அதிசுகுணவானெனும்
விதிமதுயதுவின
மதிதயனுமுனது
வியேமிகக்களித்த (சே)

௨, சந்திரமதியெனும்
மந்திரவிதிமாலை
சுந்தரவதிக்குனை
தந்திடவிசைந்தான் (சே

௩, முன்னமுன்னாருந்தவ
மன்னவருனதினை
பின்னதென்றறிகிலா
மானிலத்துளரோ (சே)

௪, மங்களவாத்திய
ரங்கதளங்களோ
முழங்கவுமுன்றதா
டனசெழவிசைவாய் (சே)

மாதவமுனிவர்கள்சொல - வசனம்.

அகோவாரும் அரிச்சந்திரமகாராஜனே உம்முடைய மனதில் நினைத்தபடியே பிரமசங்கல்பமும் இருந்தது மதிதயமகாராஜனும் நாங்கள்சொன்ன வர்த்தமானங்களை யங்கீகரித்து மந்திரமுறைதவறாமல் சந்திரமதியைப்பாணிக்கிரகணம்பண்ணிக்கொண்டு க்ஷேமமாய்வருவீர் உம்முடையசதுரங்கதளங்களுடனே கல்யாணஞ் செய்துக்கொண்டுவரலாம வாரும் மகாராஜனே,

பொது- விருத்தம்,

உத்தமமுனிவரிவ்வா றுரைத்திடவயோத்தியாளும்
சத்யவரிச்சந்திராஜன் சதுரங்கதளத்தினோடு
[..]த்தியல்களுந்போற்சேனை முழுவதுங்கூட்டிக்கொண்டு
[..]த்தியின்மிகுகண்ணேறி வேந்தனைகாணலானார்,

(வ-ம்) அகோகேளும் தர்மபுத்திரர்களே இவ்விதமாசக்கேட்ட அரிச்சந்திரமகாராஜனனவன் தன்னுடைய சதுரங்க தளங்களுடனே கண்ணேறிகொண்டாளப்பட்ட மதிதயமகாராஜன் சபையைநாடிவருவது காண்க,

யெக-தரு-[..]ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்,

பல்லவி.

மகாராஜன்-அரிச்சந்திரமகாராஜன்-மதிதயமகாராஜன் சபைக்குவாரார்

அநுபல்லவி,

மிகராசர்போற்றவா ஜகராசர்வாழ்த்திய
ஜெகராசனுக்கிரிசங்கு மகாராஜனற்றவத்தின் (மக)

சரணங்கள்,

க, சந்திரவிம்பவிகர்முகமோதர்கள்
சாந்துபணிநீர் தெளிக்க-வேத
மந்திரமுறைதவறுதமாமுனிவர்கள்
மங்களஞ்சொல்லிமனது களிக்க மேலே
அந்திரத்தண்டர்களநாவருமனக்களித்
திபயாஸ்கமரசனுக் களிக்க-பு
ரந்தரன்றனைக்கண்[..]பரன்போலேவேமா
ரண்மன்னவனு[..] ளொளிக்க(மகாரா)

உ பு[..]துப்பவழநவரத்நங்கள்கலந்தஆ
லாத்திசுவாசினிகள் சுத்த-அங்கே
சப்தமேகமும்யேகோபித்துகெர்ச்சித்தல்போல்
சகலவாத்யகோஷமும் நந்த-னங்கும்

மெத்தப்பெருஞ்செல்வம்பெற்றகெடிமன்னர்
மெத்தகப்பணங்கட்டி- வைத்த-புகழ்
பெற்றவெற்றிவீரர்கள்பத்தியதாய்வரப்ர
சித்தவானென்செயற்பெத்த வரிச்சந்திர(மகா)

௧, ஆனைகுதிரைசேனைகளுமங்
கணியணியாய்நின்று கொண்டாட-உயர்
வானையளாவும்நிசான்மகரதோரண
வாலவட்டச்சுருட்டிக ளசைந்தாட-பேசுந்
தேனைப்பாலமுதினைப்பொழியும்மொழிகள்பேசுந்
தெரிவையர்தோடிபாடி யாட-தேவர்
தேனைநிகர்த்தகுணவானைச்சத்தியவானை
மானைப்பழித்தமடமான்சந்திரமதிதேட (மகா)

பொது-விருத்தம்,

சொற்களிற்றவறுமன்னன் சுகுணனுந்தனதுசேனை
வற்கத்தூடெழுந்தடர்ந்த வனமதில்வருகும்போது
மற்கடமதின்மேற்றூவ மயிற்குயிற்கூவுந்தேவ
துர்க்கையின்கோயில்கண்டு தொழுதெழுந்திறைஞ்சலுற்றார்

௧௬. உத்தமமந்திரம் விளைத்தார்-மாதவத்தோர்கள்
ஓமகுண்டத்தினிலக்கி னிமைவளர்த்தார்
கெவுரிதேவிபூசை முடித்தார்-சுமங்கலிகள்
கெம்பீரமாய்ககெவுரி கல்யாணநகள்படித்தார்

௧௭. சாந்திதேவதைதனைய அரிச்சித்தார்-அதுமுதலாய்
நாதன்கொண்டபிர்மசாரி யத்தவர்ச்சித்தார்
சபையோராலுமதி கொண்டார்-செய்துமுடித்த
சாத்திரசடங்குகள் சகலமுங்கண்டார்

௧௮. எல்லோருமின்பம் பூணவே-சந்திரமதியாள்
சந்தோருங்கணவனை இணங்கிப்பேணவே
மன்னன்மதிதய னெழுந்தா-அவருக்கேதகவா
மாணிடர்யாவருங்காண் மனமகிழ்ந்து

௧௯. சந்திரமதிவலக்கை தொட்டு-சத்தியஅரிச்
சந்தரன்வலாகைமேவிட்டுத் தன்னீருமிட்டு
பாணிக்கிரகணம் பண்ணினார்-அந்தணர்களும்
பாசர்களென்றும் வழியாகவென்னினார்

௨௰, கொச்சிலைவிட்டார் கோடி   கோடியாய் அருகிட்டு
சன்னைதிர அன்னமிட்டார்   சாடிசாடியாய்
தேவாமுதமாகப்   புசித்தார்-ஒரேபக்தியாய்
தேவரும்பூவோருமுண்டுதேக   முசித்தார்

௨௧, கெக்கதாம்பூலங்க   ளளிக்கார்வந்தபேர்க்கெல்லாம்
சிந்தைமகிழ்ந்தபேரி   மனக்களித்தார்
யாவர்க்குஞ்சன்மானங்கள்   செய்தாருலகிலென்றும்
யாவரும்வாழ்கத்தேவர்   பூமாரிகள்பெய்தார்

௨௨, உத்தமனையாகமே   ஆசாதிரார்க்கமாகமாயன்
உத்தியிலுதித்தோர்செய்த   தந்திரவுபாயத்துய்த
சர்திரதபேந்திரன்   செந்தவத்தாத்தபூரண
சந்திரமதியையரிச்   சந்திரன்மணம்புணர

பொது-விருத்தம்

மங்கலச்சடங்குசெய்து மகிழ்ந்தரிச்சந்திராஜன்
திங்களம்மகட்கைப்பற்றித் திருப்பள்ளியெழுச்சிகொண்டார்
தங்கமாமதிமிருத்தாச் சுமங்கலப்பெண்கள்கூடி
மங்களலங்குபாட மகிழ்வுடன் நடக்குமாரே. (௯௧)

௪௫-சலங்கிடு-தரு-இ-ம்-சங்கராபரணம்

கண்ணிகள்

௧, சீர்மருவமதிதயன்றன்செய்தவத்தில்வந்துதித்த
பார்புகழும்அயோத்தியாளும்-எங்கள்பார்த்திபனேபதந்தருவீ
௨, கந்தமிகுபரிமளங்கள்கஸ்தூரிகமழ்ந்திலங்க
அந்தரங்கமாகருளுமெங்க-ளரசேசுந்தபதந்தருவீர்
௩, விண்ணவர்மண்ணவர்புகழும் வெற்றிபெற்றநற்புயத்தோய்
அண்ணலெனவந்துதித்த அரசேகைகனைத்தருவீர்
௪, குரிசலிற்சீர்த்திபெற்றகோமானேயுமைப்புகழும்
நாசிம்மருமனைத்துநிக்கும் பிராணநாதனே நீரெனக்காரும்

௪௬-பலாபலிதசெய்கை-தரு-இ-ம-உசேனி-அடதாளம்

கண்ணிகள்;

௧, திருமருவியசெக   திசா-உமது
திருவருள்புரிவீர்பிரா   னேசா
௨, பரிமளங்களணிய   வாரீர்-எனது
பக்கத்திருந்துமுத்தந்   தாரீர்
௩, கருமலர்மலைநாதேன்   வாரீர்-கூடச்
நாச்சமகத்தினைச்   சேரீர்

௩, நெஞ்சைவிட்டகலாத நேசா-அனை
நிமிஷமோர்யுகமாம்பிரா னேசா
பஞ்சபாணஞ்செய்தன்பந் தீரும்-உமது
பாதமெமக்கருளிக் காரும்
௪. அஞ்சலென்றோர்க்கருள் நீதா-இந்த
அகிலமெங்கும்பிரக் யாதா
தஞ்சமென்றுமையடைந் தேனே-உமது
தாள்கதியெனத்தொடர்ந் தேனே
௫, அம்புவியாண்ட அரிச் சந்த்ரா-என
தண்டைவருவீரயோத் யேந்திரா
தாம்பூலமருந்தும்ராஜ தீரா-உமது
தாள்தந்தாகாருங்கண குரா

௪௭-மாலையிடுந்-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி,

மாலைகளணிந்துமகிழ் வீர்-மணவாளாவென்
மதிவிதுவக்கிசைந்து திகழ்வீர்

அநுபல்லவி-

மாலைநேரத்திற்சண்ட மாருதன்மதிமன்மத
னுலெழுபடைகளைச்சினத் தெதிர்த்துப்போரினில்வெல்ல (மா)

சரணங்கள்,

க, அனைவிரிசாதிமல்லிகை அரும்பெனப்படர்ந்தமுல்லை
தழைபிற்படர்சம்பங்கிதமக்கந்த விழ்க்குஞ்செண்பக (மா)
உ, நாகப்புன்னைகமலர் நன்மணமுள்ளரோஜா
மோகமிருந்தபன்னீர் முனிவரணியுந்தும்பை (மா)
௩, இருவாட்சிவெண்செவந்தி விமலமாமிபகாந்கள்
பருவப்பெண்களணியும் பாரிசாதமலரின் (மா)

௪௮-ஞூலின்செண்டால்-தரு-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

செண்டெடுத்தாடினரோ-அரிச்சந்திரன்
செண்டெடுத்தாடினரோ,

அநுபல்லவி-

அண்டர்புகழ்முனிவ ரருளினுலகோருக்
கன்னிச்சந்த்ரமதி தன்னைவதுவைகுடிச் (செண்)

சரணங்கள்,

க. கண்டோர்களிதீரவே-சந்திரமதி கொண்டமயல்மீறவே
கண்டுலாவியசந்திரமதி தயன்தலமீட்டேறவே
அண்டர்கள்பூமாரி யனுதினந்தூறவே(செண்)

௨, கதிர்குலந்தனிற்பிறந்தோன் உலகோருங் காவலரிற்சிறந்தோன்
சதுர்பெறவொருகுடைக்கீழ்ச் சாகேதபுரியாண்டோன்
சயமகளாலெகாஞ் சவுத்தேதிமிண்டோன் (செ)

௩, மல்லிகைபுன்னைமுல்லை-மலர்த்த தாமரைவெண்செவந்திபுட்பம்
வல்லிகையாற்கொடுக்க வதுவைமன்னனெடுக்க
வதுவைமன்னன்கொடுக்க வல்லிகையாலெடுக்கச் (செ)

௪, சலியாமலிருவருமாய்-பஞ்சபாணன் சமரினிலொருமிக்கமாய்
கலியாமலிவர்களுக்கும் கக்குவிகாழித்திடமுடல்
நரசிம்மதாசனும் கவிலுரைமெலியாமல் (செ)

௬௯-லாலி-இ-ம்-காம்போதி.

லாலிராஜமுகதேவ லாலிதுக்கதேவ
லாலிசதாசிவதேவ லாலிஞ்காதேவ
லாலிதிகாமகதேவ லாலிதிலதேவ
லாலிசர்வதேவ லாலிகுருதேவ-லாலி
லாலிநாரணவருப லாலிப்ராகாப
லாலிசதயாமூர்த்தி லாலிஜகதகீர்த்தி
லாலிசந்திரமதீச லாலிசர்வேதேச
லாலிகோசலகுலேந்த்ர லாலியரிச்சந்திர-லாலி

ஊஞ்சல்.

திருவளருங்கன்னபுரிதன்னையாளுந்
திரன்மநிதயன்முன்னுட்செய்தவத்தால்
பெருவளமுமிகச்சுகமுமுகருந்த்ரிசேத்திரன்
பெற்றமனமகிழ்ச்சியினாற்பிறந்தபூவை
ஒருவரிணையுரைக்கரியநற்பின்பிக்கா
ளுற்றதிருமங்கிலியத்தாடணிந்து
மருவமதிற்கணவனரிச்சந்திரன்கூட
பாவைசந்திரமதிகூடியாடிருசல்.

௭௦-ஆலாத்திசுற்றுதல். தரு-இ-ம்-சவுராஷ்டகம்.

பல்லவி.

சோபனமே - சோபனமே

அநுபல்லவி.

வைபவர்தரும்-வரதவிக்னேசருக்கும் (சோபனமே)

சரணங்கள்

௧, புள்ளிமயிலேறிவரும் புண்யனுக்கும்
பூவைவள்ளிதெய்வானையைப் புணர்வானுக்கும்
வெள்ளிமலையாளனுக்கும் விமலன்கும்பேசனுக்கும்
பள்ளிகொண்டசாரங்க பாணியர்க்கும் (சோப)

வேதனுக்கும் விமலைசாசுவதிக்கும்
விண்ணவர்கள்பாதனுக்கும் விமலையிந்திராணிக்கும்
போதமிகுயோகியான புண்யர்த்வும்பெருக்கும்
ஆதவனைகுலகுருவா வணமங்கலவசிட்டருக்கும் (சே)
சத்தியஅரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும்
சத்தியகீர்த்திமந்திரிக்கும் சகலசேனைகளுக்கும்
நித்தியமதியனுக்கும் நிறைமதிமந்திரிக்கும்
வெற்றியில்மிகுத்துவக்க வேந்தர்களுக்கும் (சே)

(வ-ம்) அந்தப்புறத்தில்புறத்தொழில்நடப்பதுகாண்க

புராண-விருத்தம்.

உடைபெரும்பண்டமிகக்கலந்தேதி
பொலிகடவீர்த்தியோர்துறைசேர்
நடைபெரும்பதத்தாற்றுழுமென்றேறுடி
யறப்பயந்திறக்குவார்போல
படைக்கலவிழியாளணிமொடுகலையும்
பனிமலர்த்தொடையுதும்பாமாய்
இடைக்கிடர்விளைக்கவருமெனப்பதி
யிருமைகயாத்தளைந்தருகிருந்தான், (௬௧)

இதுவுமது.

தானைசென்றூர்க்குமங்கலமிடற்றுஞ்
சலஞ்சலம்புலம்பிடத்தனக்கோட்
டானைசென்றடமாத்தலேமயங்க
வல்குலத்தேரினைச்செலுத்தி
மீனைவென்றிகல்வேல்படப்புருவ
வில்வளைத்தயோத்தியர்வேந்தைத்
தேனைவென்றினித்தசெஞ்சொலாளின்பச்
சிறத்தொழில்பற்பலவிளைத்தான் (௬௨)

பொது-விருத்தம்.

மந்திரதந்திரங்கள் மாதவமறையோர்செய்யச்
சுந்தரமிகுத்தமாதர்சுபசோபனங்கள்பாடச்
சந்திரமதிகல்யாணச் சம்ப்ரமமெல்லாங்கண்டு
அந்திரத்திருந்ததேவ வரிவையரிது சொல்வாரே.

(வ-ம்) அகோகேளுஞ்சபையோர்களே இவ்விதமாய் அனேகவிமரிசையாக நடந்தசந்திரமதியின் கல்யாணவிமரிசைகளைக் கண்ணாரக்கண்டகாட்சியைக்கண்டு அதிசயித்ததேவர்களுந்தேவகன்னிகையர்களும்புகழ்வதுகாண்க.

௫௧-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-திரிபுடை-தாளம்,

பல்லவி,

சந்திரமதிகல்யாண சுந்தரஞ்சொல்லஆதி
சத்திதேவிக்கல்லாமல் மற்றவர்க்குத்திறமோ

அநுபல்லவி,

மந்திரதந்திரமும் நித்தியநைமித்தியமும்
மகம்மாதவங்கள்செய்யு மதிதயன்மகளான
மதன் கணை-மாரன்றேவியோ
இவட் கிணை-உவமைசொல்லல்
வக் கணை-அவளோபவ
ளுக் கிணை-எங்களுக்குத்துணை (சந்திர)

சரணங்கள்,

௧, அண்டகோளம்முட்ட வடிக்கத்தாந்தாமிபேரி
அதுகேட்டவானோர்பூவோர் அடைந்தார்கன்னமாபுரி
எண்டிசையுமுலாவ விசைந்தூண்கள்நாட்டினார்
இயற்கையாகவேசித்ர விசித்ரதாண்கள்பூட்டினார்
கொண்டலின்மண்டலத்தைக் குறுகியபந்தலிட்டார்
கோலமாமணிகளின் கொத்துகள்தொங்கவிட்டார்
வண்டுமொய்த்திமிர்புட்ப மாலைகளனேகமாய்
வான்மீன்கள்போலத்துன்ன வரிசையிருந்ததென்ன
மண்டலந்தன்னிலிந்த மகிமைகண்டெவர்களும்
மகிழ்ச்சிகொண்டுள்ளடங்கா மையல்மிகவும்மிஞ்சி
மாய்குவார்-மாதர்மென்மாதர்
பாய்குவார்-மாரன்வெறுப்பாற்
காய்குவார்-மாதவத்தோர்கள்
தேய்குவார்-பேய்குவார்பூமாரி (சந்திர)

௨, மழையைக்கண்டபயிர்போல் மாதவத்தோர்கள்கூடி
மந்திரமுறைகளை மன்னவர்முன்னுரைப்பார்
நுழைவழிகளைக்கண்டு நெருக்கியவெறுகன்போல்
நொடிக்குள்நூறுவிதங்கள் நூலோடொடித்துரைப்பார்
தழைவிரியவனுக்குந் தண்கமலங்கள்போல
தந்திரக்களைக்கற்றோர் தகவாய்ப்புகழ்ந்துரைப்பார்
பிழைபனுகாமற்காக்கும் பெற்றதாய்தந்தைபோல்
பெருமைகள்செய்துய்த்த குருவசிஷ்டர்
இழையுமுரசியும்போல வென்றுரைமணமொத்து
இணைந்துவாழ்வீர்களென்று வியல்புடனேபுகழ்ந்து
கூறுவார்-முகூர்த்தஞ்செய்து
தேறுவார்-மதிதயனுய்யக்

கோறுவார்-மகிழ்ந்துசேவை
தூறுவார்-கூறுவாராகிகள் (சந்திர)

௩. திங்கவொளிமிகு முகங்களோர்சாயலுற்ற
தெரிவையர்கட்குகங்காய் பருவந்தனிற்கூடினார்
அங்கரங்களைபோக மாச்சுபமங்கிலிகள்
மங்களகௌரிகல்யாண சோபனங்கள்பாடினார்
மங்களவாத்யங்கள்மு முங்கமணவணாயில்
மங்கைதலையிற்செழு மலர்கள்மிகச்சூடினார்
திங்கட்குடையோன்கோடி தெரிவைசதியோர்கோடி
திகழ்ந்தங்கிருந்தார்போல தெளிந்ததேவர்களும்பாடி
அங்கம்புளகிக்கவா னந்தம்பரவியாடி
புங்கவரெவர்களும் பொலிந்சதவைபையாடி
போற்றுவார்-பொன்மாரியாகத்
தூற்றுவார்-வாழ்கவென்
றேற்றுவார்-மனக்கலை
மாற்றுவார்-சாற்றுவார்மணிமுடி (சந்திர)

பொது-விருத்தம்.

வேந்தனுமயிலுக்கூடி விளங்கியகலைமானென்ன
காந்தனும்ரதியுமென்னக் களித்தினிதிருந்தபின்று
வேந்தநல்வரிசைக்கொண்டெழிலுடனயோத்திசோ
வேங்கிலாலழித்தபொற்றேரேறியேவருகின்றாரே. (ரா)

(வ-ம்) இக்கப்பிரகாரம்-தேவதேவர்கள் முதலானவர்களும் அம்ப ரதியுமன்ம
த்தாறுதேசத்துராஜாக்களும் புகழ்ந்து துதித்துப்போற்ற ரதியுமன்ம
தன்போலே கூடிக்குலாவி கொஞ்சிமருவி சிலநாள் மாமனாருடைய அ
பீஷ்டப்படிக்கு அங்கிருந்து அவர்கள்கொடுத்த சன்மானங்களைப் பெ
ற்றுக்கொண்டு தம்பதிசமேதமாகப்புறப்பட்டு ரதகஜதுரகபதாதி சே
னைசமுகங்களுடனே ஜனகராஜன் கொடுத்த பொன்ரதத்தின்மே லே
றிக்கொண்டு அயோத்தியாபுரிக்குவருமெறவிகங்காண்க

௫௨-தரு-இ-ம்-தஞாசி-திரிபுடைதாளம்.

பல்லவி

இரதமேறிவாரார்-இராஜாதிராஜன்
இரதமேறிவாரார்

அநுபல்லவி.

இரதமேறிவாரார் மதனாதிபோலசு
சதிதனதிச்சந்திர மதியுடனெருமித்து (இரத)

சரணங்கள்

௧. ஆனைகுதிரைகளும் அஷ்டமந்திரிகளும்
சேனைக்கூளர்சூழ செழித்தசத்யவரிச்சந்திரன் (இர)

௨. சிஷ்டர்புகழ்ந்திடும் வசிஷ்டர்புட்பகமேறி
இஷ்டமுடன்முன்னேக ஏவர்களும்பின்னேக (இர)

௩. வாத்தியங்கள்நாலெட்டும் நேத்திரமாய்முழக்க அ
யோத்தியாளனைவர்க்குந் தோத்திரம்பொன்வழங்க (இர)

௪. கவரிசாய்மனைகொண்டு கன்னியர்வீச
கவிவாணர்கள்புகழ்ந்து களிப்பற்றுப்பேச (இர)

௫. குயிலினங்களைப்போல கோலகவிகள்பாட
மயிலினங்களைப்போல மாதர்கணடமாட (இர)

௬. மாதவமிருக்க மதியவனெரித்த
சீதனக்கன்னங்கொண்டு சீருளயோத்திசேர (இர)

௭. கீர்த்திக்கல்யாணதேவி விசும்பினைத்தாவ
உளங்களித்தப்பூமாரி யும்பர்கள்தூவ (இர)

பொது - விருத்தம்,

தேரினிலேறிவந்த தெரிவையும்வந்தவையாலும்
பாரினிற்சூழ்ந்துவந்த பலரையுமனுப்பிக்கொண்டு
காரினைப்பழித்தகூந்தற் கன்னிதன்மனங்களிக்கத்
தாரினிற்சிறந்தகானத் தரிசயமரசல்சொல்வான்; (௫௫)

(உ-ம்) அரிச்சந்திரனுஞ் சபையோர்களை தேரியேறிவந்த தம்ப திகளிருவரும் தம்மைச்சூழ்ந்துவந்த கன்னேறுமிதசத்தாரனைவரையு மனுப்பிவிட்டுக்கொண்டு அயோத்தியாபுரிபட்டணத்துக்கு தம்மோ டேயிருந்தமனையாளைக்கொண்டு வீமனிசையாகவரும்போது வ ளர்க்கலிலுள்ள பதப்பதிகோதங்களையும் அரிச்சந்திரமகாராஜன் சந்தி ரமதிக்குச்சொல்லிக்கொண்டு வருகுங்காட்சி

௫௬-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்,

பல்லவி.

ஆசைக்கிசைந்தமனையாளே-என்ன
அதிசயம்பார்மதியவன்தனையாளே (ஆசைக்கி)

அநுபல்லவி,

ஓசைமுழக்கங்கள் ரோமமிழ்வாயே
ஒருநாளுங்காணாத திருநாளைக்காண்பாயே (ஆசை)

சரணங்கள்,

௧. முனிவர்களோதிய வாதங்கிளிகள்
மொழிமாதவிஸ்லமேல் மோகமாய்ப்படிப்பதும்

தினைப்புனங்களிற்குறக் இனங்கள்கூடிப்பாமகைகள்
திசையுங்கேளார்மனங்களிற் றிகைத்திடவடிப்பதும்
தினசரன்பரிகள்போற் றெளிபச்சைநிறம்பாய்க்கத்
திகிரியேறிபமேடத் திசன்கொண்டாலடிப்பதும்
பெளவிவாளகத்தினிற் பிணைத்தோடுமேகத்தைப்
பிடியாகினைக்கைபாற் பிணையாணைபிடிப்பதும் (ஆ)

உ, வல்லமாதவத்தோர்கள் மலையேறும்படிபோல
வணங்கிடபடத்துடன் வனநாகங்கிடைப்பதும்
கல்லுமுள்ளுதைக்காமல் காட்டுபன்றிகள்கொம்பால்
கடுநடைவழிகளை கருதிச்சீர்ப்படுத்தும்
சொல்லரியவயோத்திதன்னிற் சத்தியக்கொடிபோல
தோன்றும்மூக்கிலிற்பாம்புத் தோற்பளபளப்பதும்
வெல்லரியமுனிவ செல்லார்க்கும்வழிகாட்டி
விளங்கியமக்திகள் வீதிகள்கடப்பதும் (ஆ)

௩, மதகயங்கள்றும்பியால் மலையருவிநையமொன்றி
மாதலத்தோர்கள்க மண்டலம்நிறைப்பதும்
கதிர்விறைதினைகளை மூக்கிறுனியால்கொத்திக்
கருத்துடன்மடக்களிற் களிப்புடனிறைப்பதும்
இதமோபேமருண்டத்தில் எரிவளர்த்திடமயில்
இயற்கையானசிறகால் எழிலுடன்மறைப்பதும்
நிதமுமாணிடர்க ளணியுமுப்பிரிநூற்காய்
விரித்தாம்பிலக்கிகள் நெகிழ்ந்தநூற்றிரப்பதும் (ஆ)

விருத்தம்.

அக்கரியன்மருளிபபொற்சேரிலேசி
அரிச்சந்திரன்மணகாளக்கோலத்தோடு
சந்திரசூரியதிருருக்காலெழுந்தாற்போல்
சாகேதபுரியதனிற்சகலமான
விந்தைதபுரிவீதியெல்லாம்பவனிவந்தான்
வேதனாண்மால்விண்ணோருளம்பூரித்து
அக்காரத்திற்பூமாரிபொழியச்செங்கோல்
அருமணிமுடிபூண்டானரசாண்டானே (௧௬)

வ-ம், அதோகேளும்சபையோர்களே இந்தப்பிரகாரமாய் அரிச்சந்திரமகாராசன் மணகாளக்கோலத்தோடுபொற்றேரேறி விண்ணோர் தொழும் பவனிவந்து தேவாதியர்கள்புகழ நவரத்னமணிமுடிதரித்து கொலுச்சபைக்குவந்து அரசாளும்விதங்காண்க

௫௪-தரு-இ-ம்-கமாச-ஆதிதாளம்.

பல்லவி.

ராஜாதிராஜன்கொலுவில்வந்தான்-ரவிகுலதிலகமாக
ராஜாதிராஜன்கொலுவில்வந்தான்

அநுபல்லவி,

பூசிதனைபரத்வாஜர் முதலோர்புகழ்
தேஜனானமகாராஜன் சத்யரிச்சந்திர(ராஜா)

சரணங்கள்,

௧, சிஷ்டர்புகழ்ந்திடும் வசிஷ்டர்முனிவராகிகூற அருள்சேர
துஷ்டவர்த்தனர்மதி திணுங்கமதெய்திமிச்சோற
அஷ்ட திசையுள்ளோரு மரசன்றன்ஜெபங்கூற
இஷ்டமாயெவர்க்கு மிந்நிலன்பொன்மாரிதூற (ராஜா)

௨, வேதியர்முனிவர்நான்மறையேத்திப் புகழ்ந்துகொண்டாடமுடிரு
வித்தியாதரர்கூடி விசித்ரக்கவிகள்மிகப்பாட [டை
ஆதித்தன்முதற்றேவர் விசித்ரகவிகள்மிகப்பாட
அரம்பையூர்வசிய ரானந்தநடமாட (ராஜா)

௩, சத்தியக்கொடிபடைத்தநித்தியமும்வாழ்த்திடும்பிரசித்தன்-பரிசு
சகலஜநானுகூலமான செங்கோலாண்டிடும்புனிதன் (த்தன
எத்திசையிலுமுள்ள வெற்றிவீரர்கணத்த
லகசகாணை போகமுற்றமக(ராஜாதி)

(வசனம்) இந்தப்பிரகாரமாய் கொலுவிருந்த அரிச்சந்திரமகாராஜனானவர் தேசத்தியற்கைகளை விசாரித்து வருவதுகாண்க

இராசன்-மந்திரிக்குச்சொல்-விருத்தம்-

சத்யந்தவறாச்செங்கோற் சதுர்பெருமநுநாட்டிற்
பத்தியதேவர்நீதி பூராருமவேந்தர்நீதி
முந்தியமறையோர்மற்றுமுத்திரத்தவர்கள்நீதி
நித்தியநெறிதப்பாமல் நிகழ்பவைபுகல்வாய்மந்திரி (௫௭)

(வசனம்) அரசேவாரும்! சத்தியகீர்த்தியென்னும் சற்குணமந்திரி யை பாபதேவர்நீதி ராஜநீதி பிராமணநீதி க்ஷத்திரியவைசிய சூத்திரர் முதலானவர்களுடைய நடவடிக்கைகளை தெளிவாய்ச்சொல்லுவாரும் மந்திரி.

சத்தியகீர்த்தியென்னும்-மந்திரி-ராஜனுக்குச்சொல்விருத்தம்

காலமும்மாரிபெய்யக் கடவுளாரவருமுய்ய
சாலவேதிகழும்பிர்மம க்ஷத்திரியர்வைசியர்சூத்திரர்
சீலராமிவர்கள்நீதி செல்லுவதயோத்தியால
கோலமாய்த்தேவர்செங்கோல் கோமுறையாதேமன்னு (௫௮)

(வ-ம்) அதோகேளும் அரிச்சந்திரமகாராசனே தேவநீதி இராஜ நீதி பிரம்மக்ஷத்திரியவைசியசூத்திரர் முதலானவர்களுடைய வர்ணா ச்ரமங்களின் நீதிகளும் காலாகாலத்தில் மழைமாரிபெய்யவும் நடக் கிறவிசேஷங்களான அதேவேந்திரன்ராச்யபரிபாலனைப்பண்ணிவ ருவதிலும் அதிகமாய் நடந்துவருகிறது மகாராசனே

பொது-விருத்தம்,

வாரணத்தொலியெழுமணிவாயலிற்புகுந்தத்
தோரணத்தெருகடந்து சோபனம்பலசொல்ல
வாரணத்தொலியாதிகண் மடையெனவார்க்கப்
பூரணைக்குடஞ்சுமந்துபொற்கோயிலுட்புகுந்தார் (௫௧)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்தேசவிசாரணைமுதலானதுகளுஞ்செ ய்தபிறகு இரதகஜதுரகபதாதிசேனைசைந்நியங்களை ஆஸ்தானத்தி லேயிருத்திபூரணகும்பங்கொண்டுசகலசன்னுகத்தோடு கல்யாண மண்டபத்திலமர்ந்து அந்தப்புரத்தில் நடக்கிறவிதங்காண்க

ருசி-சந்திரமதிசொல்-தரு-இ-ம்-பிலகரி-ஜம்பைதாளம்

பல்லவி,

தம்பிருவரைப்போற்கூடி-நலமுடனின்பந்தாழு

அநுபல்லவி

இம்மகிதலத்திலின்று-செவ்வைக்காணலாமன்று (தம்பிரு)

சரணங்கள்

௧, நளமகாராசன்நீரோ நாரிதமயந்திநானே
துலைவணியுஸ்ரீகிருஷ்ணன்நீரோ தோகைருக்மணிதேவிநானே
௨, தேவர்சேனாபதிநீரோ தேவிதெய்வயானைநானே
தேவதேவர்கோனுநீரோ தேவிஇந்திராணியுநானே (தம்)
௩, நித்யமாமன்மதநீரோ நிறைமதிரதிதேவிநானே
சத்யஅரிச்சந்திரன்நீரோ சவாமிசந்திரமதிநானே (தம்)

பொது-விருத்தம்

தருவைவொத்தகரத்தரிச்சந்திரன்
அரிவையைப்பிரியாமலணைந்தநாள்
மருவையுற்றமலர்க்குழல்வல்லிதன்
திருவயிற்றினிற்கர்ப்பந்திகழவே (௫௨)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்மன்னனுமனைவியும்அந்தப்புரத்திலே ரதிகேளிக்குது கூலத்துடனேயிருந்து வாழ்ந்திடுநாளில்கர்ப்போ த்பத்தியாவதுகாண்க

௬௬- தரு-௰-ம்-மோகம்-ஆதிதாளம்-பல்லவி.

கெற்பவதியானேனே-சந்திரமதி-கெற்பவதியானேனே

அநுபல்லவி

தற்பரன்செயலினால் தரையிற்பிறந்தபோது
தன்னிகரில்லாத்தங்கத். தாலிபூண்டநன்மாது கெற்

சரணங்கள்

௧, காதல்மிஞ்சிட மருவி-கணவன்றன்
கருத்தையறிந்து சருவி
களிப்புமிகுக்கப் புணர்ந்து காமன்போர்க்
கலவியாலவையு முணர்ந்து
பூதலத்தினி லிவரோ-புனிதர்கள்
புகழ்ந்திடும் அருந்தவரோ
பொற்பின்மனத்திலன்னி புகழருங்கற்பின்கன்னி
போகபாக்கியம்வர்க்கே பொருந்தியதெனக்குன்னி
புண்ணியமன்னரில் கன்னியரிலெண
வெண்ணிவசிஷ்டர்முன் றண்ணியவேள்வியாள் கெற்

௨, சேவற்பெடையைக் கூடும்-அதுபோலச்
சிந்தையிலசைந்து நாடும்
செங்கதிர் குலதீரன்-ரதிகாந்தன்
செயல்படைத்த கெம்பீரன்
ஆவல்கொண் டணைந்-தடவேஅடக்கொணு
வருந்தினி யிணைந்திடவே
அறுசுவையிற்பிசைந்த புளியிற்றயிரிசைந்த
வதுபோலரவிந்தத் தமர்ந்தகந்தவிந்துகொள்
அதுமுதல்நாளொழி விதமுறமசக்கைகொள்
விதமறிந்தவள்மனோ ரதமதத்திசைந்திட கெற்

௩, மூவைந்து தினத்தினிலே-பிண்டமும்
முதிர்ந்தவன் வயற்றிடிலே
முன்மாதத்தினிற் சிரமும்-இரண்டினிற்
முயன்வெழு பலபுயமும்
தேவகற்பனை யாலே-மும்மதியும்
தெளிந்தநற் கதியாலே
திறமாய்வயிற்பருத்துத் தேர்ந்தநான்காமாதத்திற்
திகழுமவயவங்கள் சிறந்திடும்நற்றினத்தில்
திரண்டெழுபகாரம் புறத்தணித்தழைத்திட
பருதிமுலைதனி கருமுகிலொத்திட கெற்

௫, ஐந்தாமாதத் தினிமேல்-மேருமராகிக
ளதுமெய்யிற்படவா யிலே
அன்னையின் குழலவிழ்ந்து-மதிசோர்ந்து
அநுவினிடையை நெகிழ்ந்து
செந்தாமரைமுகம் வாடி-செண்பகமேனி
சிவந்தருவழிந்து கூடி
செய்தவருசவையின் சிறந்தநாவுணவழிந்து
சிகற்றநற்மண்டங்கள் சிச்சிச்சியென்றுமிழ்ந்து
சீருடனிருக்கையில் பேருளகாட்டிட
ஆருஞ்சுபசோபனம் நேருடன்கூறிட செ
௬, ஆருமாதத்திற் சிமந்தம்-அடவுடன்
அடைந்தாளே யனுயந்தம்
அதுமுதல்நடை தளர்ந்து-நரம்புகள்பசித்
நரிசையினிடை புலிந்து
கூறுமெகர்ப்பந் தனக்காய்-சல்யங்களுற்றுகி
குணவாயங்களு மொன்பதாய்
கூறுமேவழாமாதத்திற் கோமளமெய்யுருவாய்
வீறுகொள்மதிவெட்டில் விளங்குமதிபூசியாய்
குலமக்னிவனென நலமுளவொன்பதில்
இலகுமதித்செனித்திடத் தலமெலாமதித்திட செ

பொது-விருத்தம்.

தற்பரனருளாற்சந்திரதயன்நவமகள்வயிற்றில்
செற்பவுற்பத்தியாகி கிளிமொழிமதியாள்மெய்யி
லுற்பவமானநோயாசனுளத்தினிற்கவலைகொண்டு
அற்புதமாகச்சந்த்ர மதிமணமயர்கின்றளே (கஅ)

(வ-ம்) அகோசேளுஞ்சபையோர்களே கடவுளுடையதிருவை யிருலேசந்திரமதியினுடைய கெர்பத்திலுண்டாகியபல்வித ன்பத்தைசகிக்கப்படாமல் அறிவழிந்து சகியின்முகம்நோக்கிப்பு புயம்புகிறவிதக்காண்க

ருஎ-தரு-இ-ம்-யாகடை-அடதாளம்-பல்லவி.

வஞ்சியே-இந்தவண்மையறிகிறேன்-வஞ்சியே

அநுபல்லவி.

கொஞ்சங்கிளிமொழி யாளேதிருவிய
பஞ்சபோற்கண் படைக்குதென்செய்வேன் (வஞ்சி)

சரணங்கள்.

க, அசதிமசக்கையினு — லங்கம்நோகுது
பசிதீவனற்றுடல் — பதைபதைக்குதே (வஞ்)
உ, ஆயிரந்தேள் — கொட்டினதுபோலவென்
சாயந்துடித்திடுங் — காரணமறியேன் (வஞ்)
௩, திரிகைபோலவென் — விடையைத்திருகுது
அறிகிலேனெந்த — ஞசைக்கிலைசாந்தநல்ல (வஞ்)

(வ-ம்) அகோவாருங்பெண்ணேசித்ராங்கி கண்களிரண்டும்பஞ்சுபோலப்பறக்குது திரேகத்தில் அசதியுங்கடுப்பும்வலியும்பசியுந்தீவனமும் ஒருவேளையைப்போல்ஒருவேளையில்லாமல் ஆயிரந்தேள் கொட்டுவதைப்பார்க்கிலும் அதிகமாய்தேகமெங்குங்கடுத்து துடிதுடிக்குது இடுப்புவலியோசொல்லிமுடியாது புத்தியோ அடிக்கடிபேதிக்குது நமதுஅரண்மனையில் வயித்தியம்பார்க்கும்மருத்துவச்சியை அழைப்பியும்பெண்ணே அப்படியேமகாபாக்கியமம்மா தாயே.

பொது-வ-ம், அப்போது மருத்துவச்சிவருகிறவிதங்காண்க

விருத்தம்

சந்திரகாந்தம்போலச் சரிகைசல்லாவுடுத்திச்
சுந்திரக்கொந்தளோலை சொருகுகாதினிற்றொடுத்துத்
தந்திரயந்திரங்கள் கக்கநூன்முறையொடுத்து
மந்திரமுறைநடாத்தும் மருத்துவமாதுவந்தாள்

ருஅ. தரு-இ-ம்-பூரிகல்யாணி-அடதாளம்-பல்லவி.

மருத்துவமாதுவந்தாளே-மன-மகிழ்ச்சிதந்தாளே

அநுபல்லவி,

குருத்துக்கற்பந் — தரித்தநாள்முதல்
குறிகளறித்து — மருந்துகொடுக்கும் (மருத்)

சரணங்கள்

க, உடற்கூறுநிலைமை — யாவுமறிந்து-ஊணுறக்கமறந்து
ஓயாக்கவலை — கொண்டுளமறிந்து
இடர்விளைத்திடும் — வேளையறிந்து
ஈசனார்பாத — பூசைபுரிந்து (மருத்து)
உ, பருதிகுலத்துதித்த பெண்களுக்கு-மெய்ப்பான்மையறிந்து
பிரசவிக்குங் — காலத்திலவர்க்கு
கருதியவிந் — மறிந்துகாக்கும்
கருத்திலமிகுந்த — வருத்தமேற்கும் (மருத்து)

௩. மருந்துப்பையைய யிடையிலேவைசொருகி-நசவிந்நாழிகளின்
　மர்மங்க ளறிந்துமனதுருகி
பொருந்துந்தாய்போற் பூவையைமருகி
　புகலுவார்த்தைபி னழுதம்பெருகி　(மருந்து)

சந்திரமதிசொல்-விருத்தம்.

வாராய்மருத்துவதிமாதேமெலிந்துமனம்
　வாடுதேமதிசோருதே
யாராலுமறியாவென்னிடைபினைத்திருகிமுழு
　வங்கமெங்கணுநோகுதே
பேரானவெந்தனிருதுடைகளுந்நடுங்கிவெகு
　பிரமையாலயர்ந்துசோருதே
சீராகவேபிரமதேவனெனைத்தேடியென்
　சிரசினில்விதித்ததிதுவோ　௬௧

(வ-ம்) அகோவாருமம்மா வருத்துவதித்தாயே தேகமெல்லாமிக வாடிமதிகலங்கி இடையைத் திரிகி அங்கமுழுதும் நோகுதேயென் னிருதுடைச் சதைகளு நடுநடுங்கிக் கிடுகிடுத்துமனமொடுங்கிப்ப டபடத்து பிரமிப்படைந்து ஒருநிமிஷம் ஒருயுகமாகுதே இதுக் கென்னசெய்குவேன் தாயே.

மருத்துவச்சி-வசனம்

அடியம்மாஎன்கண்ணே என்கண்மணியே நீயொன்றுக்கும் பயப்படவேண்டாம் உனக்குலோகோத்தமமாய் இம்மையிலும்ம றுமையிலும்புகழத்தக்கபுத்திரனுற்பவமாகப்போகிறான்நிமிஷநே ரம்பொறுத்துக்கொள்ளுமம்மணி,

௫௧-சந்திரமதிசொல்-தரு இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்,

பல்லவி

என்செய்வேனம்மா　இந்தயிமிசைக்-கென்செய்வேனம்மா

அநுபல்லவி

என்செய்வேனம்மா　இதுவென்கோலமோ
இன்சொல்லினுலேநா　னெங்கிடுங்காலமோ(என்)

சரணங்கள்

௧. உதறுதேதேகம்-என்னுயிர்படு　முபத்ரவமநேகம்நடுநடுங்கிப்
　பதறுதேயிதுவென்　பாவவினையோதாகம்
படைத்தபரமன்கற்　பனையோயிதுவென்ன
　பாவம்நிமிஷமே　யாகுமொருயுகம்(என்)
௨. நரம்பெல்லாஞ்சுருட்டித்துடித்துடல்　நல்லுயிர்புரட்டிசுழிசுழித்து
　சுரும்புபோற்சுழலுது　சோகமிகவாகுதே

சோர்வுகொண்டிரு விழியுஞ்சொருகுது
சோம்பியுடலனலீ மெழுகாயுருகுது (என்)

௩. பூங்கொடிமாதே-மிகவருத்தம் பொறுக்கவொண்ணுதே கேளாயிது
தாங்கொணுதென்செய்வேன் தலையிளைப்புறட்டுது
நாதகலங்கிஎன் மதிமயங்குது
நயக்கமுற்றுமனஞ் சனித்திலங்குது (என்)

பொது-விருத்தம்

திங்கண்முழுமூன்று நிறைந்துபூரணமாய்
தெரிவையினுதரத்தினின்று
அங்கண்மாஞாலத்தயன்விதிப்படியே
யாக்ரமித்தெழுதனஞ்செயனும்
பங்கயப்பொலிவிற்பதைத்திடவுதைக்க
பாவையினுடல்மிகநடுங்கிச்
செங்கதிர்க்கோடியுதித்ததுபோலச்
செல்வனுஞ்சிருடனுதித்தான் ௬௬

(வ-ம்) அகோமேளுநம்சபையோர்களே இந்தப்பிரகாரமாய்ஒன்பதுமாதமும் நிறைந்தசந்திரமதியினுடைய கெற்பத்திலுற்பத்தியாயிருக்கின்ற பிண்டத்தின்சிரசிலே பிரம்மதேவருடையஏவலுனாதனஞ்சயனென்பவன் விதிப்படியேபதைபதைத்துஉதைக்கசந்திரமதியினதுமதிமயங்கி மனங்கலங்கி அறிவழிந்துஉடல்பதறித்துடிக்கும்போது கோடானுகோடிசூரியர் ஏககாலத்திலேபிரகாசித்தால்எவ்வளவுபிரகாசமாகுமோ அதற்குப்பதின்மடங்குமேலானபிரகாசத்தையுடையவனாய் சந்திரவதியினுடையகெற்பத்திலேயுதித்த லோகிதாசன்பிறப்பதுகாண்க.

௬௰ தரு-இ-ம் கௌளிபந்து-அடதாளம்-பல்லவி.

காட்சியருளும்விருபாக்ஷன்கிருபையால்லோகி
தாசன்பிறந்தானே

அநுபல்லவி

ஆட்சியாகவயோத் யாபுரிதனையா
சாட்சிசெலுத்துமரிச் சந்திரன்றவத்தில (காட்சி)

சரணங்கள்.

௧. நித்தியமாயநந்தலத்தருந்தவர்
நிறைந்தமாதவத்தாளின் பயபூண-மனு
நீதிசவுராஜாளுஞ்சத்யரிச்சந்திரன்
நிகழ்ந்தத்தவத்தாற்றெவ ரடிபேண

சித்திரைமாதச் சதுர்த்தசிபுதன்மிருக
சிரத்தினிமீனலக்னந் தோண-வெகு
சீர்விசௌபாக்கிய யோகமுங்கூடிச்
செழித்தபத்திரைகரணஞ்சிறந்தமுன்காண (காட்சி)
௨, பருதிகுலபாலகன் பாரிலுதித்தானென்னப்
பச்சைப்பரிகளேழும் நடிக்க-மிக
பரிவுளவேதியர் முனிவர்தபோதனர்
பண்பாய்வேதாகமங்கள் படிக்க
கருதியபடிக்கிக்கண்காட்சிகண்டோமெனக்
காசினியோர்மெத்த நொடிக்க-நாளும்
காதலுடனாலுவர்ணாச்ர மத்தோர்செய்
கருமங்கள்தவறாமல்களித்து முடிக்க(காட்சி)
௩, சந்ததமுந்திரி சங்குலம்சாதிபர்
சகலருமானந்தச் சதிராட-நல்ல
சாமிகுருமுனியான-வசிஷ்டருஞ்
சத்யசந்தனனந்சபையை நாட
அந்தசமயந்தன்னிலயோத்திய
ரடங்கலுமாவலுடன் கொண்டாட
அண்டம்புவனமி ரண்டிலுந்தேவர்கள்
அடங்காமகிழ்ச்சிகொண் டம்பரத்தாட(காட்சி)
௪, சிந்தைமகிழ்ந்தரிச் சந்திரபூபதி
செய்ததவப்பலன் நிறைவேற-மிகச்
சீருளகன்மேருசி நாடாளுமதிதயன்
செல்வத்திருமகன் களிகூற
நிந்தையில்லாதவ நிகலத்திற்சத்திய
நீதிநெறிநிகழ்த்தும் நிலவேந்தனென்றும்
நித்யகல்யாணங்க ளுற்றிடவானவர்
நிறைந்தபொன்பூமாரி தினந்தினந்தூற (காட்சி)

பொது-விருத்தம்

மைந்தன்வந்துதித்தவந்நாண் மகிபனுங்கோடாகோடி
யந்தமாம்பிஜோன மருமையாம்பலதானங்கள்
வந்தவரெவர்களுக்கும் வருஷித்தபின்னர்மங்கைக்
கந்தமைக்காத்திலேசிந்நி களிப்புற்றுக்கொஞ்சவாமே ... ௯௦

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் குழந்தைபிறந்தவன்று தசரதமுகவர்
ர்தமான பரியந்தம்ளண்ணிறந்த தானதர்மங்களைப்பண்ணிபிறகு

சம்முதலான அநேகதானங்களைக்கொடுத்துகளித்தபிறகுசந்திரம தியானவள் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு உச்சிமுகந்து கொஞ்சிக்குலாவுகிறவிதங்காண்க.

௬௩-இலக்கம், தரு-இ ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்

௧. தாச்சிக்குச்சடாமகனே-தாச்சிக்குச்சடா - அயோத்தி
தரணியாளன்கண்மணியே தாச்சிக்குச்சடா
பாச்சியிந்தாடாமகனே-பாச்சியிந்தாடா எந்தன்
பிராணேசன்றவமகனே பாச்சியிந்தாடா

௨. தக்குச்சடாமகனே தக்குச்சடா-மாமன்
காணியாளுங்கண்மணியே தக்குச்சடா
விக்கலிடாதேமகனே விக்கலிடாதே-திரிசங்கு
வேந்தனுர்பௌத்திரனே விக்கலிடாதே

௩. சற்கண்டுதின்பாய்மகனே சற்கண்டுதின்பாய்-மக்கள்
சவிறவிர்த்தகண்மணியே சற்கண்டுதின்பாய்
சர்க்கரையிந்தாமகனே சர்க்கரையிந்தா-என்றாத்தை
சந்திரநயன்றவப்பயனே சர்க்கரையிந்தா

௪. சிரிட்டழாதேமகனே சிரிட்டழாதே-உன்மேனி
வெதும்புவதேனென்மகனே சிரிட்டழாதே
நேரிட்டதென்னமகனே நேரிட்டதென்ன-உனது
நெஞ்செரிதீராய்மகனே ,, நெஞ்செரிதீராய்

௫. முகம்பாராடாமகனே முகம்பாராடா-எனது
முத்திக்கோரிரத்தினமே முகம்பாராடா
அகமகிழ்ந்திடாய்மகனே அகமகிழ்ந்திடாய்-எந்தன்
அருந்தவத்துதித்தையனே அகமகிழ்ந்திடாய்

பொது-விருத்தம்

இன்னவாறெழிற்பிள்ளையைப்பெற்றநாட்பத்துச்
சென்னகாலையிற்சிறுளசடங்குகள்முடித்த
மன்னர்மன்னர் மண்டலத்தெவர்களுமகிழ்த்து
அன்னத்துய்நவமணிதிகழ்தொட்டிலிட்டனரே

(வ-ம்) இத்தப்பிரகாரமாய் பிரசவித்த பதினோராநாட்காலையில் புண்யாகவாசனம் முதலான சாத்திரச்சடங்குகள் முடித்துமகிழ்க்கபிறகுநவரத்தினமானதொட்டிலிலே குழந்தையைவைத்துநாரியர்கள்கூடி சீருடனே தாலாட்டுகிறவிதங்காண்க

தாலாட்டல்-விருத்தம்.

புல்கொள்காப்புப் புலியுகிர்த்தண்டைமுத்
தலங்கள்கிண்கிணி யைம்படையாழிக
விலங்குபொன்னரை ஞாணிவைசாத்தியே
துலங்குமாமணித் தொட்டிவிட்டாட்டினார், ௬௭

௭௨-தரு-இ-ம்-நீலாம்புரி,

பல்லவி.

ஆராரோ-ராரிரரோ-ஆரிரரோ-ராராரோ,

அநுபல்லவி.

சீரணயோத்திவளர் செல்வனேகண்வளரீர் (ஆ)

சரணங்கள்

சீலமுளவரிச்சந்திரன் செய்தவத்தில்வந்துதித்த
கோலமிகுகோமானே-என் குமரனேகண்வளரீர்-ஆரா
பூதலத்தோர்செய்தவத்தின் பூபனெனவவதரித்த
மாதவனேபோதமில்லா மாமணியேகண்வளரீர்-ஆரா
சாத்திரவிதிகளுணர்ந்து சத்யதாமநிஷ்டையும்
கோத்திரத்திலுற்பவித்த கோமானேகண்வளரீர்-ஆரா
தேனேதேவாமிர்தமே தெகிட்டாததெள்ளமுதே
கோனேகதிர்குலத்துக் குணநிதியேகண்வளரீர்-ஆரா

விருத்தம்,

கொட்டிவிட்டுக்களித்துமதிமுக
மொட்டுத்தும்பமொருவருந்திகைத்திடக்
கொட்டிக்கொண்டாடிக்கூடியனைத்துக்கை
தட்டிச்சோபனக்கையலர்பாடுவார், ௬௮

சோபனங்கொட்டுதல்.

கண்ணிகள்.

சோபனமேசோபனமே சித்திக்கணேசர்க்குச்சோபனமே
ஆபத்பாந்தவனானசுப்ரமணியர்க்கனுதினமுஞ்சோபனமே ௧
முக்கண்ணனுக்குமுருகனுக்குமுதுமறையோனுக்குஞ், சோதிக்க
ளாத்தும்புகழ்கொண்டவதரித்ததேவியர்மூவர்க்குஞ்சோபனமே ௨

பருதிகுலத்துதித்தவனும் பார்த்திபனுக்குமிகுந்தவனும்
கருதிமுறைகளறிந்தவனும் சொன்னசொற்கள்தவறாதவனும்-௩
சாகேதநன்னகராள்பவனும் ஸர்வஜீவாதாரனானவனும்
போகேந்திரன்முதல்யாவர்களும் புகழுந்திருநகராள்பவனும்-௪
சத்யகர்மந்தவறாதசாலரிச் சந்திரனென்றமகராஜன்
நித்யமன்னன்மனுநீதிதவறாமனிறைந்த செங்கோலாளுங்கான்தனிலே

ஆதிநடுமுடிவானவெவற்றையும ஆராய்ந்தறிந்தநல் யோகியர்கள் கோடில்லாவேதாகமமுழக்கத்துடன்கூடிவந்தாரடி சோபனமே, ( )

வந்தவர்க்கர்க்யபாத்யாதிதந்திவாகுடன்பூசித்துப்போற்றிசெய்து சொந்தமாயிங்குவந்தவாவேகத்தைச் சொல்லியருளென்றுரைத்தோர்

மன்னவாவுந்தனல்வண்மைக்காசித்திக்க மண்டலமெங்குந் திரிந்தலைந்தோம்- உன்னைத்தமாமுன் சமுகத்தைத்தேடிவந்துளங்களித்தோமென்றார்சோபனமே, அ

வின்னேரவருக்குஞ்சொல்லரிய வேந்தரின்மிக்கச் சிறந்தவனும்-கன்னோசிநாடாளுமசந்திரதயன்மகள் கற்பினைமெத்தப் புகழ்ந்துரைத்தார். கூ

புகழ்தேடிட்டசெட்டங்கப் பூசைபெண்மணம் புணரச்செய்வீரென்றான்புண்ணியனும்-இகழ்ந்தவரேமதியினைக்கண்டிரென்றனீதிநெறியுரைத்து. ம

கற்புமிகுத்தவுன்மகளுக்கிப்பூமிக் கணவனேயெலன்றுரைத்திடவே-பொற்புமிகுத்தமுக்கண்ணன்றிருவருள் பொய்யாதுங்கண்மனக்கோறிக்கைபோல். மக

அழைத்துவருவிரிச்சந்திரமன்னனை ஆகாவாவென்றான் சோபனமே-தழைமிகுசோலைமலைகாடெல்லாந் தாண்டியருந்தவத்தோவிவரும், மஉ

விசாலயோத்திநகரடைந்து வேந்தனைக்கண்டுகல்யாணஞ்சொல்லி-அனாதிமிதைத்திளில்தாமதியாமனுன்னுரையாரத்துடன்வருவாயென

மன்னன்றன்சுராங்கனத்துடன் மகிழ்ந்தெசழுந்தரில வழியிடைந்து-நன்னயமாகவருகையிலேவொக புன்றுராதமாலனைகளும். மச

கோர்குருகுமுழவன்னிசேக்கும் குறுதுதவில்லத்தோடுகெளதாரம்-சேக்குயனைமாராசுசெக்விதில்வியமாகச்செழித்திலதும், ( )

அடர்வனந்தன்னில்வரும்போது ஆதிபராசத்திகாவலிலே-இடாதவிழ்க்குங்கற்றெற்றன் றசண்டனிநிருந்ததிருக்கோவில்கண்டு மரு

சேவித்துவருவேலேமன்னரசன் சேனையெல்லாமோ ரிடத்தில்விட்டு-அவித்துயனைமானமாத்திரிபுடனோசனைவ்வாலயத் தட்புகுந்தார் ( )

அம்மணியிணையடிபோற்றிசெய்தாதிக வஞ்சாய்த்தெண்டனிட்டான் சோபனமே-இச்சுமனத்தானிருசெய்திடவேசீருளவம்மன்ப்ரசன்னமானள், மஅ

ஆனைத்தேர்பொற்றேராய்விளங்கி யப்போகாசன்முன்தோன்றுமே-வானவருக்குமதிசயசாயிந்தவண்மையைச்சொல்லலன்றோ சேனமே, ௧௯

அப்போதுமாச்சரியந்தனுக்காய் ஆதிகாலத்திலவருணாசாசன் எப்பாதிதுக்குரியோன்கருவாரேறேண்ணரியவன்னைத்திலுயர்ந்த ()

பொன்றோகு மலைக்கண்டாவிது பொற்புடனேயவனுக்களித்து-தன்றேவன்றேபாண்டிடச்சொல்லென்று சாற்றினுரொன்றுமனைகிழ்ந்து, ௨௧

உத்தமைப்போலமகாராஜன் ஒருவனுமில்லையுலகத்திலே-எத்தனைபேட்டறையுந்தலைமேமகிழ்ந் தேத்துக்கொள்வாயென்றுன்சோபனமே

அந்தவகையம்பன்சொன்னவுடனே அரிச்சந்த்ராஜனகங்களித்து-சென்றவமுனிவனை செய்தவனேது சேவித்தே துன்பாதஞ்சிருடனே, ௨௩

ஆசிர்வசனமிக்கூறி யனுப்புவாயென்றம்மனைப்பணிந்தாங்கமச்செல்லாபருதிகுலோத்துங்கனையாதரிமெத்தமகிழ்ந்துவாழ்த்தி, ௨௪

தேன்மொழிச்சந்திரமதியாளுனக்கேகேடிமணமாலை சூட்டிநேசன்-காலமொழிந்தமொழிபொய்யாது நன்மனத்தோனேநடத்திடென்றான். ௨௫

முன்னேகானேதிவங்கரகத்தைமுத்தமந்திரிக்கும் கொடுத்தவிட்டு-அன்னைகொடுத்த கனகத்தேரேறி ஆனை சேனை தளத்தாடேடுத்தான் ௨௬

இந்திரவானமின்சந்திரதயராச வின்றேசே மூன்னாளிலேமகட்கு-மங்கிலியதாரணமுகூர்த்தம் மகிழ்ச்சியுடன்செல்வதாமெனவே ௨௭

அன்பத்தாறுதேசத்தரசருக்கும் அன்பாய்க்கல்யாண வோலையநுப்ப-இன்பமாயோலையைக்கண்டோரவர்களும் எழுந்துகண்ணேறினேன்றுடைந்து. ௨௮

சந்த்ரதயன்சபைசேர்ந்தவுடன்சக்ரோதயமாயரிச்சந்திரனும்-சக்கரமானபொன்தேரேறிசோடிசூரியன்போலேவருணைகயிலே, ௨௯

கண்டுகளித்தெதிர் கொண்டுசோமகுலங்கண்டோம் மூக்கண்ணன்திருவைபமக்கு-பண்டையநாள்தந்த தின்றும்பலித்தது பாக்கியஞ்செய்தோமெனவே. ௩௰

பூரணகும்பங்கையில்கொடுத்து புகழ்ந்துகொண்டாடிமிகத்துதித்து-தோரணவாயில் தனிலழைத்து அய்யவென் மூத்திலாதத்திசாத்தி, ௩௧

அங்கரங்களைவேபோகத்துடனே அடைந்திருக்கவிடுதிவிடுக்கச் செங்கதிரோன்குலச்செல்வனிருந்தான்சீருடனந்தசபைதனிலே ௧௨

குருவசிஷ்டர்தவும்பரிருவருங்கொண்டாடி சந்ரகயேந்திரனை-திருவருளாலுன்றவத்தில்வந்த தெரிவைச்சந்திரமதியாளையிப்போ ()

மணக்கோலஞ்செய் தழைத்துவா மகிழ்ந்தனைப்பாயென்றார் சோபனமே-குணக்கோலமிடனுனைத்த குருகுலவாசர்களின் வாக்யமுணர்ந்து, ௧௪

அந்தப்புறத்துக்குத்தனுப்பி அருந்தவக்கொழுந்தையலங்கரித்து- இந்தசபைக்கழைத்துவருவீரென வேந்திலைழதோழிகள் கேட்டெழுந்து. ௧௫

மங்களஸ்நானமாதரசிக்குச்செய்வித்து மலரணிகூந்தற் சிணுக்கெடுத்து-தங்கப்ராகாசமுள்ள பீதம்பரத்தை தையனல்லாளிடையிற்றரித்து. ௧௬

நறுமணப்புகைகள் சிகைக்குகாட்டிநல்லசடைநாகமிட்டுப்பின்னிசொருகுகிளிக்தாழம்பூச்சூட்டி சுந்தரநெற்றிக்குப்பட்டங்கட்டி, ௧௭

சூரியசந்திரபிறையடுக்கி சொகுசானவெண்முத்துக்கொச்சமிட்டு சிரியல்பாலுப்பட்டிசுட்டிகட்டி சிவந்தமூக்குக்குமூக்குத்திமிட்டு. ()

காதோலையஞ்சகலசவாளி கற்களிழைத்தகுடைகடுக்கன்-சோதிமிகுந்தசந்தனமுருகுசொகுசானகோலுசுமயிருமாட்டி. ௧௯

நாகக்கங்கணமஸ்தகடகம் நாகரீகமாயலங்கரித்து- சேகரமாய்ப்பச்சைவளையடுக்கி சிறப்பானபோனுசுமாட்டிதெரடுத்து. ௨௦

பாதச்சிலம்புகண்டைகொலுசும்பாங்காகவலங்கரித்தார்நாதமிகுந்தபொற்கிண்கிணியும் நலமாகவலங்கரித்தார். ௨௧

காலாழிபீலாழியிட்டார்கனகப்பட்டாம்பகரங்களிட்டார்- கோலாகலமாயலங்கரித்து கோதைக்குப்புருவமீசிலைமெழுதி, ௨௨

வங்கிக்கிளையாழி மோதிரமும் வாகுள்ளபொன்னி முன்றாலுமிட்டு-மங்கிளியத்துடனேயிணங்க மார்புநிறைந்தபக்கமிட்டு, ௨௩

மோகனமாலைசக்ராசங்களும் முத்துநவரத்ந மாலையெல்லாமதேசம்பிறைநதஉடனமைபூட்டி தேவிக்கிசிராயலங்கரித்து. ௨௪

கண்களிரண்டிக்குமைதீட்டி கஸ்தூரிபொட்டையும் நெற்றிக்கிட்டு-பெண்கள்கற்பின்கொடியாளை தங்கமினப்பெருமிய கஞ்சுகத்தால் மறைத்து. ௨௫

இழைபொருநூறாயிரம்பொன்பெற்ற யிந்திரவாளிப்பட்டெடுத்துடுத்தி-அழைத்துக்கொண்டாயாசத்துடனேவரும் ஆனந்தங்கண்டரிச்சந்திரனும், ௨௬

காணுப்பெருநிதிகண்டவன்போலக் கட்டழகி முகங் கண்டிடவோ கோறுதிவள்கழுத்திற் றங்கத்தாலியின் குறிப்பையறிந்துமனத்திகைத்து ௪௭

மன்னன்மதிகயன்பண்ணின மோசத்தை-மாணிலமன்னவ ரறியாமல்-கன்னியைமாய் மணக்கோலங்காணவந்த நாகரீகங்களிதெனவே. ௪௮

மனத்துளடங்காதகோபமுற்று மாதவர்தேவருமதிபிரமிக்க இனத்தாரிவ்வபடி கண்டதுண்டோ எவ்வகையோரும் தொப்புவாரோ

ஆயிரத்தெட்டுமாத்துக்குமேலாம் அபரஞ்சிமங்கள ருத்திரங்காண்-சேயிழையாள் கழுத்தினிலிருக்கச் சிறந்தவருந்தலத் தோணவிட்டு

என்னையழைத்திங்குஇன்னப்படுத்தியேக்குமோவென்றார் சேரயனமே-அன்னைபிதா குருதெய்வமுமுனையாதோ ஆதித்தன் குலத்தோர்க்கடுக்காதென்றார்

அக்கமொழி கேட்டம்புலிகுலத்தோன் அரசரனைவரையுமழைத்துஇம்மகாராசன்சொல்லுவதுங்களிதையறிந்ததோவென்றுரைக்க

அவ்வுரைகேட்டவரசரெல்லாம் ஆகாயமதுவென்றுரைத்தவ்வுயோயிம்மகாராஜனுரைப்பது உலகிலியன்னோப்பழிக்காரோ ௫௧

சத்தியவானென்று பேராச்சே ஐமுழுதியப்போணராச்சேதித்தியமுங்கோடிபொய்யெஆறுசொல்லி நெஞ்சந்துணியாதோமற்றவர்க்கு ௫௪

என்றுசொல்லக்கேட்டு மூர்த்தாங்கிரதயன் எல்லோருங் கேளும் இவ்விசயத்தை அன்றுமுக்கண்ண னெனக்குத்தந்தவா மாயிதுவே ௫௫ யென்மகள்கணவன்

இவனையல்லாது வேறல்லகண்டீர் என்றனவிலங்கசந்திரமதி கவனமதாகக்கொண்டபூமாலையைக் ககனமார்க்கத்தினி லெறிந்தான்

ஆகாசவாணியம்மாலைதனையாகமகிழ்ந்துகையில்வாங்கி ஏகாஸதிபனேயுன்னுளமகிழ்ந் தேனுவாயென்றிறைகழுத்திலிட்டாள் (௫௭)

இந்தவிசயந்தன்னையறிந்த திருந்தவைம்பத்தாறுமன்னவரும் உந்தன்மகள் கற்பினுக்கிசேமூலகிலெல்யருளோவெனவே -(௫௮)

அதித்துப்புகழ்ந்துகொண்டாடையிலே தெளிம்பர் வசிஷ்டரிருவருமாய-மதித்துசந்திரமன்னவனை மங்கையைத்தன்னருகாகவைத்து ()

வேதவிதிகள்தவறாமல் விண்ணவர்வேதியர்யாவரையும்பாதபூஜா விதியாவுஞ்செய்து பாக்காய்வதூவரர்பூசைசெய்து (௬௰)

காணிக்கையாகக்கணிதியில்லாக்கனக மாரியாகவே சொரிந்துபா ணிக்கிரகணம் பண்ணிக்கொடுத்து பரிமளமிகுத்தபூமாலைசூட்டி ௬௧

இஷ்டமித்ரபந்துவர்க்கத்தோர்க்கு யேர்வையானா வெகுமானஞ் செய்து சிஷ்டருக்கெல்லாம் வஸ்த்ராபரணதி பூரிச்சிலவுடனன்னப்ர தானம்பண்ணி ௬௨

அன்பத்காருதேசத்தரசருக்கும் அன்புடன்தாம்பூலவகையளித் து இன்பமாயவரவரேறி வாயெழில் மிகுயானைகுதிரைதந்து ௬௩

ஊர்வலம்வந்தார்தேவேந்திரபோகமாய் உத்தமரெவருமனங்களி க்க-நீர்வளமிகவயோத்திநகராளும் நிருபனரிச்சந்திருல்லாசமாய் ௬௪

கோடிமதன்ரதிபோதவிளங்கி கூடிவுலாவியுளக்களித்து, கோடிம ன்மதன்போலணிற்சுகித்து நல்லகொக்கோக முறைபுணரக் ௬௫

கெற்பசின்னங்கள்மிகுத்திடவே கிளிமொழியாளெழின் மசக்கை கொண்டாள் கிற்பனைத்தாலுடல் நாளுக்குநாள்வேறுவேறு விதமாய் வெளுத்து ௬௬

அன்னம்வெறுத்துநடைதளர்ந்து அரோசகமாதிபறுகளையுமன் னையமாய்க் கண்ணிற்கண்டவெல்லாமுண்ணநமைத்துமாத மாசந்தே ன்னை ௬௭

ருங்காப்பிட்டுவளைபடுக்கை சொர்ணபுட்பாதிவகைசூடி பால்தேன் முப்பழவகையுடனே பஞ்சபட்சபரமான்னமிட்டு ௬௮

அடுத்தஆறுமாதங்கள்நிற்கமந்த மன்றறிவைக்கு மூக்குப்பிழிந் து விடுத்தநாள் முதற்பத்துமாதவரையிலும் விசிமேலிவெரும்பே டாமல் ௬௯

நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய்க்கைகையப்பாதுகா காத்துவருவார் தாமெரண்ணுவயிற்றுவலியெடுக்கத் தாதியர்தங்களைக் கூப்போயுரைத்தார் ௭௰

அங்கட்சணம்புஞ்சபட்சபரமான்னமானவமுதூட்டிப்பாதுகாத்து க ந்தபுட்பாதிகாப்புலக்சந்துசருதுக்தேழிகள்ளகலாகுகத்து ௭௧

அன்னவீட்டுக்குட்சென்றிருக்கையிலே அந்நகத்தசிவனார் திரு
வையால் விரையேதுமில்லாமல் தினகரர்கோடியோல் குழைக்கை வி
நந்தது கேட்டரசன் ௭௨

எழுவகையோனதீர்த்தங்களாடி எவருக்கும் பிரகாசமுமிகந்து பழு
தில்லாப்பத்தாரனராத்திரியே மக்களெல்லாம்வரவழைத்து ௭௩

பதினொருநாளுதவத்திற்கண்ணேறுசிபட்டணமெங்கு மலங்கரித்து
உத்வாசபஞ்சவர்ணகோலமிட்டு விளக்குவசந்நாலத்திகொண்டு ௭௪

மருந்துலையிலையுருண்ணவகையுடனே மங்கிலிப்பெண்களெல்லாரும்
விருந்துக்கெழுந்துவருவாரும் விளங்குகவுரிகல்யாணம்பாடி

சுபசோபனங்கள்கூறிக்கொண்டுவந்த சுமங்கலிபெண்களவர்க
ளுக்கும் விபவமிகுபட்டுச்சேலைவிக்கைவேண்டியவளவந்பூரணமும்

சந்தனந்துதவக்கள்கொண்டாடி கைபலசைநன்முகூர்த்தமதில்
இந்துபரிதிகுலந்தழைக்கவென்று எழுவகைதீர்த்தங்களாலாட்டி ௭௭

திருபனருகிலுட்காரவைத்து நிறைந்தசாதகர் மங்களமுதிருது
வசிஷ்டர்லோகதாசனென்று கொண்டாடிநாமகரணஞ்சூட்டி ௭௮

வந்துவிறைந்தவன்மாதவத்தோர்கட்குவாரியாய்ப்பிரகாசமுமிதந்து
இந்துவகைபூசுத்தியுடனே யாவர்க்குமன்னபானமுமிதந்து ௭௯

கர்ணன்குடைபைப்பழித்தவிதனகாசிதன்னி லுள்ளாரெவர்க்கும்
சொர்ணமாரிபொழிந்திடப் பொக்கிஷந்துரையிட்டாடி சோபனமே

இத்திறமாய்ச்சிலநாளிருந்து எழிட்டிமாகருமானபின்புபத்தினி
தன்னைவழைத்தரிச்சந்திரன் பாக்யமயோத்திக்கேகிடக்க ௮௰

சித்தமகிழவாரென்றுரைக்கசேதிபைசக்கரை தனக்குறைக்கா
ன் எத்தமத்தருணத்தில் மகிழ்ந்து உரிதமாய்சீதனங்கள்கொடுத்து ௮௧

மெத்தமருமகனைத்துதித்து செல்வியர்களுசிப் புத்திசொல்லி
சித்தமதியுடன்வாழ்வீரென்று சோமகுலத்தகசப்ப ௮௨

புத்ரகளத்ரமித்ராதியுடன் பூரணிச்சந்திரனெழுந்துபுத்ரகளத்தக்
கூடன் கனகத்தேறில் பொற்புடனேறிவழிகடந்து ௮௩

மித்ரர்கொண்டாடிமயோத்திகடந்து மேதினியில்மிகுபுகழ்வகை
ந்து புத்திமிகுத்தநல்சத்யகீர்த்திமனம்போலமதியூகத்தைச்செலுத்தி

நித்தியகாணகர்மங்களுடன் ஞானசிஷ்டராபாணுயசத்ய
தர்மந்தவறாசாண்டரிச் சந்திரனிருந்தான் சோபனமே ௮௪

பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் சபைக்குவருகிற

விருத்தம்

துள்ளியேமிகத்திரிந்து துலக்குநல்வயதோரைந்திற்
றெள்ளியகல்விசெல்வித் திருமணம்புணரச்செய்யும்
பள்ளியிலோதவைக்கும் பருவமீதென்றுணர்ந்து
ஒள்ளியகதிர்குலத்தோ ருபாத்தியாயரும்வந்தாரே ௯௬

வ.ம், அகோகேளும்சபையோர்களே இந்தப்பிரகாரமாய்நடந்துவருகிற லோகிதாசனுக்கு ஐந்தாவதுவயது பிறந்தவுடனே தலைமுறைதலைமுறையாயுள்ள வசிஷ்டரிஷிசம்பந்தமான உபாத்தியாயரானவர் இராஜகுமாரனுக்குப் பள்ளியில் வைக்கும்தருணமாச்சுதென்று நாட்டியசபையைநாடி வருவதுகாண்க,

௯௭-தரு-இ-ம்· சேவி-அடதாளம்

கண்ணிகள்

௧, அரிச்சுவடிவருக்குவாய்பாடமும்
ஆத்திச்சூடியும்படியுங்களென்று
வரிக்கொருபிழைதிருத்திக்கொண்டு
உபாத்தியாயர்வந்துதோணினார்

௨, பாகுமொழிகள்பேசிக்கொண்டு
பரிதிகுலத்தோர்நேசங்கொண்டு
வாகுள்ளவல்லவாட்டுவீசிக்கொண்டு
வாத்தியாயர்வந்துதோணினார்

௩, மடிதன்னிலெழுத்தாணிஇருக்க
மலையாளத்துப்பாக்குபுட்டிலும்சொருகி
வீடியுமுன்பள்ளிக்கூடத்தைநோக்கி
வேதியர்வந்துதோணினார்

௪, நெத்திதனிற்றிருசந்தனமிலங்க
நேத்தியாயட்சதைப்பொட்டுந்துலங்க
புத்தகமக்குளிலிடுக்கிக்கொண்டு
போதகனார்வந்துதோணினார்

௫. சிகைதனிலுருமாலைசுற்றிக்கொண்டு
சீருளகையிற்பிரம்பங்கோலுங்கொண்டு
வகைச்சோர்ணங்கினைக்கேட்டறிந்துகொள்ளும்
வாத்தியாயர்வந்துதோணினார்

உபாத்தியாயர்- சட்டாம்பிள்ளைக்குச்சொல் விருத்தம்

அடாவடாசட்டாம்பிள்ளை ஆக்மக்ஞானியனுமெங்கே
திடாரிக்கசுப்பனெங்கே சித்திக்கணேசனெங்கே
தடாபிடாச்சாம்பனெங்கே தாண்டவராயனெங்கே
கொடாதகண்டகனைச்சேருக் குருணிக்கோபாலனெங்கே

(வ-ம்)அடாவடாசட்டாம்பிள்ளாய் திடாரிக்கச்சுப்பன் சித்திக்கண
பதி தடபிடாச்சாம்பன் தாண்டவராயன் கொடாதவரைச்சேராத குரு
ணிக்கோபாலன் இவர்களெல்லாம் எங்கேபோனார்கள் சொல்லும் பிள்
ளாய் சட்டாம்பிள்ளை

சட்டாம்பிள்ளைசொல்-விருத்தம்.

ஐயனே கேளுமந்த அலப்பற்றாமோதரன்றான்
கையிலோர்காசுகொண்டு கரும்புவாங்கிவரப்போனான்
பையவேயவனைத்தேடி பசுபதிதொடர்ந்துபோனான்
வையகத்தவரைக்காண வாகுடன்யான்போய்வாரேன் ௭௧

(வ-ம்)அகோ கேளுங்களையா சுவாமி நச்சுவாய்த்தாமோதரன் ஒருகா
சு எடுத்துக்கொண்டு கரும்புவாங்கிவருகிறேனென்றுபோனான் மெள்
ளமெள்ள அவனைத்தேடிக்கொண்டு பசுபதியும் தொடர்ந்துபோனான் அ
வர்களையான்போய்தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படிபோய்வ
ருகிறேனையாசுவாமி

உபாத்தியாயர்-வசனம் ஆனால்அதிசீக்கிரத்தில் வந்துவிடும்பிள்ளாய்

உபாத்தியாயர்-வேறொருவனை வினவுதல்-விருத்தம்

உண்டுநான்வருவேனென்று ஓடியபாலகிருஷ்ணா
கண்டுநான்வெகுநாளாச்சே கபடனேவாவென்முன்னே
குண்டுணிபோற்றிரிந்தாற் கோதண்டந்தனிற்போடேனோ
கண்டுகொண்டாய்நீதோப்புக் காணங்கள்போடுவாயே ௭௨

(வ-ம்)அடாவடாபாலகிருஷ்ணா உன்னைக்கண்டுவெகு நாளாச்சுதே
எங்கேதயவுசெய்து என்முன்னேவா உன்முகத்தைநான் பார்க்கட்டும்
குண்டுணி திம்மனைப்போலே கண்டகண்டவிடமெல்லாந்திரிந்தால்உன்
னையும்அவனைப்போலே கோதண்டத்தில் மாட்டிவிடுவேன் நீ சிறுபிள்
ளையாச்சுதேயென்று முன்பின்யோசித்துப்பார்ப்பதை நேத்திபாகக்க
ண்டுகொண்டாயா நல்லதுஇப்போது தோப்புக்கரணங்கள் போட்டா
போடு.

பாலகிருஷ்ணன்சொல்-விருத்தம்

ஐயனேசிறியநல்ல வறிவிலான்பிழைபொறுத்து
உய்யவேசெய்கிரிந்த உபத்ரவம்பொருக்கமாட்டேன்
துய்யனேமுழந்தாள்ரண்டுந் துடித்துடல்நடுங்குதிப்போ
செய்யவாவென்னைக்காரும்திருவடிசரணமையா ௭௩

(வ-ம்) அஹோவாருங்கள் கருணைமிகுத்தஎன்னையனே சிறுவனும் அறிவீனனுமாகியநான் இத்தனைநாளும்செய்து வந்தபிழைகள்யாவையும் மனம்பொறுத்துக்கொண்டு நான் இன்றுமுதல் வீண்காலம்போக்காமல் புத்திகற்பித்தருளி இரட்சிக்கவேணுமேயல்லாது இவ்வளவுகொடூரமானதண்டனைக்குட்படுத்தினால் பொறுக்கமுடியாது எனது முழந்தாளிரண்டுங் கடுகடுத்து தேகமெல்லாம்நடுநடுங்குது தயவுசெய்துமனம் பொறுத்துக்கொள்ளுங்கள் செந்தாமரை மலருக்கொப்பான திருவடிகளுக்கு சரணஞ்சரணமையாசுவாமி

இவ்விடத்தில் அன்பத்தாறுதேசத்துஇராஜராஜாக்களும்வந்ததாக முன்னுவள்ளவிருத்தமும் தருவும்பாடிக்கொள்க

மந்திரி-கட்டியனுக்குச்சொல்- விருத்தம்.

இறைவனற்க்ருபைபடைத்த யினியகட்டியமேசேளாய்
முறைமைசேரயோத்திபாளும் முன்னவன்குழந்தைக்கின்று
திறமையாய்மகிழ்ந்துகல்விச் செல்வியின்மணஞ்செய்விக்க
நிறைமிகுமுபாத்தியாரை நேமமாயழைத்துவாராய்

(வ-ம்) அஹோவாரும்பிள்ளாய் வரப்பிரசாதியான கட்டியனேநமது அரிச்சந்திரமகாராஜனது குமாரனாகிய லோகிதாசனுக்கு கல்விக்கல்யாணஞ்செய்விக்கும் பொருட்டால் கனம்பொருந்திய உபாத்தியாயரை அழைத்துவாரும் பிள்ளாய்கட்டியனே

கட்டியன்-வசனம்.

அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறேன்மகாப்பிரபோ

கட்டியன்-உபாத்தியாயருக்குச்சொல் -விருத்தம்,

எக்கலைமிகப்படிக்கும் வாத்தியாரையாபோற்றி
திக்கனைத்துள்ளோர்போற்றுந் திருவடிக்கமலம்போற்றி
முக்கண்ணனருள்மிகுத்த முன்னவனுன்றன்போற்றி
பொக்கணவழைத்தாரிப்போ பொற்புடனெழுந்துவாரீர்

(வ-ம்) அஹோவாரு[illegible]திறமுள்ள உபாத்தியாயரே நமஸ்காரஞ்சுவாமி ஈஸ்வரக்கிருபைபடைத்து வாழ்கிற்சிறந்த இராஜராஜாக்

ளும் கீர்த்திபெற்ற அரிச்சந்திரமகாராஜனுடைய குமாரனாகிய லோகி
தாசனுக்குக் கல்விக்கலியாணஞ் செய்விக்கும்பொருட்டு அதிசீக்கிரத்
தில் தங்களைசமுகத்துக்கு அழைத்துக்கொண்டுவரும்படி ஆக்யாபித்தா
ர் ஆகையால் தயவுசெய்து வரவேண்டுமையா சுவாமி

உபாத்தியாயர்- வசனம்-

அப்படியேவருகிறேன் நடவும்பிள்ளாய் கட்டியனே

உபாத்தியாயர்-இராஜசபைக்குவருகிற- விருத்தம்

கட்டியனிந்தவாறு கழலிணைதுதித்துப்போற்ற
எட்டிரண்டறியாப்பாலர்க் கெவற்றையுமுணர்த்தவேண்டி
மட்டில்லாச்சீஷரோடு உபாத்தியாயருமெழுந்து
அட்டில்லாதசெங்கோ லாண்டிடுஞ்சபைவந்தாரே ௭௬

(வ-ம்)இந்தப்பிரகாரமாய் சரணஞ்செய்துசொல்லிய கட்டியக்காரன
து வார்த்தையைக்கேட்டு இவ்வக்ஞான பரிபூரணரான சச்சிதானந்தசு
த்தி சுரூபத்தை யறிந்துணரும்படியான லோகிதாசனுக்கு சர்வசாஸ்தி
புராணாகமங்களின் மர்மங்களை உபதேசிக்கும்பொருட்டு பள்ளிக்கூட
த்துஉபாத்தியாயர் அரிச்சந்திரமகாராஜன்சமுகத்துக்குவருவதுகாண்க

கூடு-தரு-இ-ம-மத்தியமாவதி-அடதாளசாப்பு

பல்லவி.

வந்தாரையா உபாத்தியாயர் வந்தாரையா

அநுபல்லவி,

வந்தாரையா இதோ
சிந்தாமணிகளோதும்
வண்மைதரும்விவேக
சிஷர்களுடன் கூடி (வந்தா)

சரணங்கள்.

௧. சங்கரநாரியணர்
சச்சிதானந்தத்தை
அங்காங்கவைபோ
அரியவேதாகம
பொற்பதம்போற்றி
நித்தமுந்தொழுதேத்தி
கண்களிலங்கவே
முறைகளுந்துலங்கவே(வந்)

௨. செவ்வையாகவியாசா
சிருடனேயோதும்
ஔவைசொன்னீதி
அவனியிலெங்கனும்
கஸ்தியர்சொன்னெறி
செல்வர்க்கருள்வழி
யனைத்தினையுமோதி
விளங்கியபாஞ்சோதி(வந்)

௩. சப்பன்னபாஷைகளிலு
தகவாயுணர்விக்குந்
[illegible]லவனுபோகி
தந்திரமதிபூசி

ஒப்பனையாயெடுத் துரைக்குங்கல்விச்செல்வர்
உலகுள்ளோர்பாலகர்க் குருபதேசஞ்செய்தருஞ்செல்வர் (வந்)

கட்டியன்-வசனம்,

அகோஇராஜாதிராஜ இராஜகெம்பீரஇராஜராஜேசுவரா அகண்ட மண்டலமார்த்தாண்ட குலோத்பவா சரணஞ்சரணமையாமகாராஜனே பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் வந்திருக்கிறார் மகாப்பிரபோ

இராஜன்சொல்-விருத்தம்.

ஐயனேவருவிருந்த னடிமலர்சரணஞ்சுவாமி
செய்யவன்மருவுங்கல்விச் செல்வமின்மணமுமிப்போ
துய்யலோகிதாசனுக்குத் துரிசினிற்செய்வித்தென்றும்
உய்யவேமனங்களித்தேன் உபாத்தியாரையாபோற்றி (எஎ)

(வ-ம்) அகோசரணஞ் சரணமையா உபாத்தியாயரே

உபாத்தியாயர்-வசனம்,

தீர்க்காயுஷ்மஸ்து வம்சாபிவிர்த்திரஸ்து சமஸ்தமங்களானிபவந்து நிரந்தரம் ஸத்யதர்மபரிபாலன சித்திரஸ்து

இராஜன்-வசனம்.

சுவாமி இன்றயதினம் எமதுகுமாரனாகிய லோகிதாசனுக்குகல்விச் செல்வமணமென்னும் வித்யாப்பியாசம் பண்ணிவைக்க வேணுமென்கிற மனோபாவத்தினாலே தங்களை எமது சபைக்கழைத்துவர வாக்யாபித்தோம் தேவரீர் திருவுளமகிழ்ந்து உபதேசஞ்செய்வித்து பள்ளிக்கூடத்திக்கழைத்துக்கொண்டு போய்வாரும் பிராமணோத்தமரே

உபாத்தியாயர்- வசனம்.

அப்படியே தர்மாதிசகலசாஸ்திரபுராணேதிகாசங்களும் உபதேசித்து அழைத்துக்கொண்டுவருகிறேன் மகாராசனே

பொது-விருத்தம்,

அவனியிற்பூர்ணசந்திர னேகர்வந்துதித்தாற்போலப்
பவனியிற்சங்கையில்லா பருதிகளுலாவுமாப்போல்
நவனிதிகொழிக்கும்பள்ளி நன்குறப்படிக்கவேண்டித்
தவ்நெறியிருந்தலோகி தாசவந்தருகின்றானே எஅ

வ-ம். அகோ கேளும் சபை[illegible]ர்களே இந்தப்பிரகாரமாய் உபாத்தியரை அழைத்து வந்து [illegible]காஸ்தானமளித்தபின்பு சங்கையில்லதிர் ணயிக்கக் கூடாதசந்திரசூரியாள் பூலோகத்தில்பிரகாசிப்பதுபே

லோகிதாசனானவன் சப்பன்னபாஷைகளும் சகலகலைவித்தைகளும் கற்றுணரும்பொருட்டு வித்வச்சபைக்குவருவதுகாண்க,

௯௬-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்,

பல்லவி,

பள்ளியிற்படிக்கவந்தானே-லோகிதாசன்
பள்ளியிற்படிக்கவந்தானே

அநுபல்லவி,

பள்ளியிற்படிக்கவென்று பாங்குள்ளதோழர்கள்சூழத்
தெள்ளியகல்விசெல்வத்தால் தினகரன்குலத்தோர்வாழ (பள்)

சரணங்கள்,

௧, நெற்றியிற்றிலத மின்னவே-மாற்றுயர்ந்து
நிறைந்தவாபர ணங்கள்துன்னவே
ஸத்தியதர்மமேஜெபம் சற்குருபாதபயம்
புத்திகற்பித்திடுமென்று பொற்புடனையரேயென்று (பள்

௨, தண்டைச்சிலம் பொலிக்கவே-தேவர்புகழும்
தாரணியாளன் களிக்கவே
பண்டையநீதிநெறி பலவுமறிந்துகொள்ள
அண்டையினில்வந்துநின்று ஐயரேசரணமென்று (பள்)

௩, நவரத்நகுல்லாவு மணிந்து-விளங்குமெய்யில்
நல்லமுத்திணங்கி பூண்டு
தவகலத்தோளிடையில் சரிகைசோமனுடுத்திப்
புவனத்தோர்க்குமேதன் பூபனரிச்சந்திரன்சுதன் (பள்)

விருத்தம்,

வந்தலோகிதன்றாய்தந்தை வாகுவேருந்தவத்தோர்க்
கந்தமாய்நமஸ்கரித்து ஆசீர்வாதங்கள்பெற்று
செந்தவத்துபாத்தியாயர் சிற்பதம்போற்றிசெய்து
எந்தனுக்கருள்வீரென்ன இனிதுபதேசிப்பாரே: (௭௮)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்வந்தலோகிதகுமாரனானவன் தாய்தந்தையர்களைவந்தனஞ்செய்து மாதர்களடிபோற்றி சுந்தரமாயாசீர்வாதங்களைப்பெற்று வைமிகுத்தஉபாத்தியாயரிடத்தில்வந்து சரணமடைந்து எனக்குசகலசாஸ்திர புராணேதிகாசாதிகளும் உபதேசித்தருளுமென்றபோது அவருபதேசிப்பதுகாண்க,

௯௭-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

கண்ணிகள்-உபாத்தியாயர்சொல்-தரு.

ஹரிஓம்நமோநாராயணாயசித்தமென்று
ஆதிக்ஷரங்கள் ஓதும்பிள்ளாய்-நீ-ஆதி

லோகிதாசன்-தரு,

லோ-வரிசைதப்பாமலேநான்வாசித்துக்கொண்டேனினி
 வாசிப்பதைப்போதித்துவாருமையா-நான்-வாசிப்பதை
உபா-மேவுமுயிர்பன்னிரண்டு மெய்பதினெட்டுமாக
 விளங்குமிவ்வுயிர்மெய்களாராயும்பிள்ளாய்-நீ-விள
லோ-கூறுமுயர்மெய்யெலாங் குறிப்பறிந்துக்கொண்டேனினி
 குணமாய்ப்படிப்பதென்ன கூறுமையா-நான்-குண
உபா-ஆத்திச்சூடிவேழமுகத் துலகநீதிலக்கங்கள்
 அடவுடனேபடித்துவாரும்பிள்ளாய்-நீ-அட
லோ-சூத்திரங்கள்வழுவாச் சொன்முறைகளறிந்தேன்
 சுகமாய்ப்படிப்பதென்ன சொல்லுவீரையா-இனி-சுக
உபா-எண்சுவடிகீழ்வாயிலக்கம் இசைந்தகுறிமாறலும்
 இயல்பாய்ச்சட்டங்கணக்கும் எழுதும்பிள்ளாய்-நீ இய
லோ-மண்விண்ணோர்கள்புகழும் மாதவரேநீர்சொன்ன
 மாற்றமயாவுமெழுதிவந்தேனையா-நீர்சொன்ன-மாற்ற
உபா-மன்னுதிவாகரம்நிகண்டுநீதிசாரமும்
 மகிழ்ச்சிதரும்நன்னூற்களோதும்பிள்ளாய்-நீ-மகி
லோ-துன்னுபுகழ்நைடதம்குறளுநாலடியாரும்
 துகளறவெந்தனுக்குச்சொல்லுமையா-சுவாமி-துகளற

விருத்தம்,

சோழமன்னன்முதலன்பத்தறுவரும்
ஆழநீள்சாயுநதிரட்டனை
வாழவென்றடிபோற்றியெழுந்தனர்
தோழர்பின்னும்வந்தழைக்கத்தொடங்குவார். (௭௬)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் லோகிதாசன் வாசித்துக்கொண்டுவருங் காலத்தில் கல்யாணத்துக்குவந்த சோழதேசர்முதலான அன்பத்தாறு தேசத்துஇராஜர்களும் அரிச்சந்திரமகாராசனைவாழ்த்தி அவரவர்கள் தமதுதேசத்திற்குப்போனபிற்பாடு நாள்தோறும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் லோகிதாசனைப்பள்ளிக்கூடத்துக்கழைத்துவருவதுகாண்க,

௯௮-தரு-இ-ம்-புன்னாகவராளி - மட்டையதாளம்,

பல்லவி

வாடாலோகிதாசா-பள்ளியிலேபோக-வாடாலோகிதாசா

அநுபல்லவி,

வாடாநீலோகிதாசா வசிஷ்டர்கிருபாகடாட்சா
ஜோடாவேதோழரோ டிருந்துநாளும்படிப்போம் (வா)

க, செய்திவினைகளை — விடடா-அழியாத
செல்வந்தனை — நாடடா
வைதிகத்தோர் — மதிக்கஉனை-யென்றும்
வானோர்களுந் — துதிக்க
செய்பவனேஉனது — சிறந்தபஞ்சணைவிட்டு
செங்கமலமாமுகந் — துலங்கவேயந்தமிட்டு (வா)

உ, சாலவெண்ணீறு — பூசடா-அமுதம்போர்
சத்யமொழிகள் — பேசடா
காலவந்தனைந் — செய்யடா-மாதாபிதாக்
களின்பதந்தொழு — துய்யடா
கோலவிழிகட்குமை — யிட்டுக்குடுமியின்னி
குலம்விளங்கிடும்நாலு — பதவியும்மனமுன்னி (வா)

ங, அன்புடனே — கடவடா-எவர்கட்கும்
அடுக்காதவழி — கடவடா
தென்புடனே — சாருவாய்-பெருநினைச்
செப்புமொழிகள் — சொள்ளுவாய்
இன்புறவெனதுபக் — கந்தனிலேவிருப்பா
பிருந்துபடிக்கமனை — மென்றுமகிழ்ந்திருப்பாய் (வா)

ச, ஸத்யதர்ம — பரிபாலா-அனுதினமும்
ஸாதுஜனனு — கூலா
நித்யதானநி — காரா-உலகெங்கும்
நிறைந்தமோகன — காரா
வித்யாசமெண்ணுதே — விலகுமுன்மனவிருள்
விரைவினிற்பெருவாய்நீ — வேதியர்திருவன் (வா)

உபாத்தியாயர்சொல்-விருத்தம்,

செங்கதிர்குலத்துதித்த செல்வனே லோகிதாசா
மங்களவிளக்கின்முன்னே மகிழ்ந்துநீபடித்தவெல்லாம்
எங்கனையெடுத்துவந்து பெழிலுறவெனக்கொப்பித்துப்
பொங்கமாய்காலவேளைப் புசித்துநீவருகுவாயே (அ)

வ-ம், அகோவாரும்பிள்ளாய் லோகிதாசா நேற்றிராத்திரிவிளக்கின்முன்னேபடித்த பாடங்கள்யாவையும் எனக்குஒப்பித்து காலைச்சாப்பாட்டுக்குப் போய்வாரும் பிள்ளாய்,

லோகிதாசன்சொல்-வசனம்,

அப்படியேஒப்பித்துப்போட்டு போய்வருகிறேனையா சுவாமி,

விருத்தம்.

இன்னெறியிலோகிதனுக் கேழுவயதென்ன
தன்னெறியிலெள்ளளவும் தாட்சியில்லாச்செங்கோல்
நன்னெறிபொடாளுமந்த நாளிலமரேசன்
பின்னெறியோடாளுநகர் மேன்மைதில்சொல்வாம். ௮௧

(வ-ம்) இவ்விதமாகலோகிதாசனுக்கு ஏழுவயதாகவும்நடந்தேறிவருங்காலத்தில் அரிச்சந்திரனென்பவன் கத்தியதர்மந்தவறாமல் செங்கோல்செலுத்திக்கொண்டுவந்தது சொன்னோம். இப்பால்தேவேந்திரமகாராஜனென்பவனாளப்பட்ட அமராபதிபட்டணத்தினுடைய வைபவங்களில் சிலதுசொல்லத் தொடங்குவதுகாண்க,

விவாககாண்டம் - முற்றிற்று.

விருத்தம்-௮௧-தரு௬௮-கலித்துறை-௧
வெண்பா-௧-சீசபத்திபம்-௪.

௨

மூன்றாவது

இந்திரகாண்டம்,

அமராபதிபட்டணவர்ணனை

தரு-௬௯-கல்யாணி - அடதாளம்,

பல்லவி.

அமராபதியின்மகிமைச்சொல்ல வாதிசேடனாலாகுமோ

அநுபல்லவி.

கமலக்கண்ணனுமுக் கண்ணனும்வேதனும்
கருணைசேர்முப்பத்து முக்கோடிதேவரும்
விமலராம்நாற்பத்தெண் ணாயிரம்ரிஷிகளும்
விளங்கிபவானோர் பூவோர்கள்துதித்திடும் (அம)

சரணங்கள்

௧. மாடமாளிகைமேடைமாமதில் மண்டலம்நீள்மதிலுருப்புகளும்
மத்தகயம்பரி போலிபதூண்களும் மகுடதோரணவிருப்புகளும்
ஆடகத்தன்னிலழுத்திபநவமணிபாற்செதுக்கிபநற்பொருப்புகளும்
அண்டமளாவியகூடகோபுரங்களும் அலங்காரவேதிகையார்மரு
(ப்புகளும்

நாடகமாடிய சாலைகளுமிக
நாகரீகமான வேலைகளுமநேக
கூடலர்மாடியுங் கொத்தளமுநல்ல
குலமன்னர்கூடிக் குலாவியிருக்குமநல்ல
கோடரங்களுங் கொடுங்கைவளங்களும்
ஆடரங்கமோ மனைபவமர்ந்தனல்ல(அமரர்)

௨, வேதசாஸ்திரங்களோதியசாலையும் விளங்குஞானயோகசாலையும் வித்யாதரர்கள்கூடியசாலையும்விண்ணவர்நாடியசாலையும் சித்சாலைகளு மஷ்டாதசவாத்தியங்கள் கிளர்ச்சிகொண்டிடும் சாலையுங் கின்னரர்துதி கொண்டாடியசாலையும் கருடகந்திருவர்கள்சாலையும்.

காதலாயெவர்களுங் கண்டுகளித்திடும்
கன்னியர்கள்கூடிக்காதல் கொள்ளுஞ்சாலையும்
புண்ணியத்தோர்கள்செய் புண்ணியபாவங்கள்
புகலுஞ்சித்ரபுத்ரர் புக்கவெண்சாலையும்
யூகச்சாலையும் போதச்சாலையும்
நீதிச்சாலையும் நேமமாயமர்ந்த(அமரர்)

௩, நன்னகரிற் பெருவண்மைகளுஞ்சொல்ல நாவொருசதகோடி வேணுமே, நாகரீகமாகவானவர்கட்கெந்தநாளும் வாழ்வுற்றிடத் தோணுமே, பொன்னகர்க்குநிகரண்டங்களிற் புகன்றிடவென்றிடநாணுமே, பூவைஒளவைதிருவள்ளுவரும்முன்புபுகன்றநூற்களுங்காணுமே.

இன்னகர்க்குவமிக்க வெளியோர்க்கெளிதல்ல
ஈசன்மாலயனுக்கு மிதமுறுமோசொல்ல
என்னகணாயிதுக் கிணையிடலாம்வெல்ல
இறையவனுறையூரு மிவ்வூருக்கிணையல்ல
தன்னகத்தயர் தணித்துக்காற்றிடும்
மன்னமன்னவர் மகிழ்ச்சியேற்றிடும்(அமரர்)

தேவேந்திரன்-கொலுவுக்குவரும்-விருத்தம்

அன்னநடைமேனகை யரம்பைநடமாட
கின்னரர்கள்கந்திருவர் கீதவிசைபாட
மின்னிடைதிலோத்தமையோர் மெய்கவரிபோட
மன்னியதேவேந்திரன் மகிழ்கொலுவில்வந்தானே. (௧)

(வ-ம்) அகோகேளும் பஞ்சபாண்டவர்களென்னும் தர்மார்ச்சுன பீமசேனாதிகளே இவ்வளவு ஸ்ரீங்காரமும் அழகும்மேன்மையும்பொருந்திய அமராபதிபட்டணத்தைகயொருகுடையின்கீழ் ஆண்டு அரசாட்சி செய்கின்றதேவேந்திரமகாராஜனானவன் மேனகை அரம்பைமுதலானவர்கள்நாட்டியமாடிக்கொண்டு முன்னேவர கின்னரர் கந்திருவர் முத

லானமுப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிக ளும்வேதாகமசாஸ்திரங்கள்கோஷிக்க மேனகை முதலான தேவதாசிகள் செழுக்கவரிவீசகொலுவிற்குவந்தாசரீகஞ்செய்கிறவிதங்காண்க.

உ-தரு-இம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்

பல்லவி,

அமராபதியையாளும் இமையவர்வேந்தனெனும்
ஆயிரங்கண்ணன்வந்தான் கொலுவினில் (அமரா)

அநுபல்லவி,

குமாராகுவாகனர் கொன்றைசூடியச்சுகர்
விமலர்விபுதருடன் வித்தியாதரர்வாழும் (அமரா)

சரணங்கள்,

௧, சுரர்தானவர்கேசரர் தும்புருசித்தர்சூகர்
சுத்தர்சாரணர் சாண்டில்யர்-கவுண்டின்யர்
வரர்நாரதமுனிவன் னார்பைசாசரியக்கர்
அமரர்தந்திரர்வத ரனைவருங்கூடிவாழும் (அமரா)

உ, நீதிகுபேரன்கேது நெடியசெங்கோற்கடவுள்
நிறைந்தபவனன் வருணன்நிருதியும்
சோதிபெருமாமதி சுக்ரன்சவுரிபுதன்
ஆதித்தனோடம்புலி யாசல்மறையோன்வாழும் (அமரா)

௩, சனகன்சமதக்கினி சனத்குமாரனுஞ்சங்கன்
கனகர்கவுசிகர் காசிபர்வாலகில்யர்
பனகருபமன்னியர் பகர்ந்திடும்ருச்யஸ்ருங்கர்
அனகாத்ரேயர்பிருகு ஹரிதாஸருடன்வாழும் (அமரா)

பொது-விருத்தம்,

மாதவவிஸ்வாமித்திரர் மாமுனிவசிஷ்டர்தாமும்
ஆதவனுதிக்குமுன்னேயாச்ரமந்தனையகன்று
பூதலநதிகளாடி புண்ணியதலஞ்சேவித்து
கோதறவும்பர்கோமான் கொலுச்சபைதனையடைந்தார். (உ)

(வ-ம்) இவ்விதமாய்கொலுவிலிருந்து இராஜநீதி தேவநீதிகளைநடாத் திக்கொண்டுவருகிறநாளிலேயொருநாள் தபோதனர்களாகிய வசிஷ்ட-விஸ் வாமித்திரர்கள் பஞ்சபர்வ உஷக்காலத்திலெழுந்து புண்யநதிகளிலேதீ ர்த்தமாடி ஆலயங்களைச்சேவித்துக்கொண்டு தேவேந்திரன்கொலுச்ச பையாடிவருகிறவிதங்காண்க

௩-தரு-இ-ம்-ஆகிரி-திரிபுடை-தாளம்-பல்லவி

வசிஷ்டரும்விஸ்வாமித்திரரும்-வாசவன்சபையில் வந்தார்

அநுபல்லவி,

வசிஷ்டமுனிவர்சூழ விளங்குசீடர் கைதொழுதுவாழ (வ)

சரணங்கள்,

௧, பணகங்கள்போல்சடையின் பரிவுளமகுடமின்ன
கனக்குண்டலங்களிரு காதிலேபளபளென்ன
தினகரர்கோடிபோல தேககாந்திககதகென்ன
கனகநகராளும்பாக சாதனன்சபைகிடுகிடென்ன (வசி)

௨, வெள்ளிமின்னற்போலமார்பில் விளங்கியபூணநூலும்
அள்ளித்தெளித்தபுட்பம்போல் அமர்ந்தசிறுபுலித்தோலும்
ஒள்ளியகரந்தனிலே உன்னிவருந்தண்டுக்கோலும்
தெள்ளியமறைகள்நாலுந்தெளியவுரைத்துமென்மேலும் (வசி)

௩, பவளமலைநிலாப்போற்பரிந்தணிந்த வெண்ணீற்றுப்பூச்சும்
தவளம்போலவேலைகையில் தண்டுகமண்டலவீச்சும்
குவலயங்கள்நடுங்கக் கோபித்துவிடும்பெருமூச்சு
சவலைமொழியாகப்பேசுஞ்சபையிற்பாகசாதனன்பேச்சும் (வசி)

இவ்விதமாய்வந்ததபோதனர்களை மரியாதையாகவணங்கி அர்க்கியபாத்யாசமநாதி ஷோடசவுபசாரங்களுஞ்செய்து சித்திராசனமளித்து எழுந்தருளியபின்பு நடக்கிறவிதங்காண்க.

விஸ்வாமித்ரர் வசிஷ்டாதிமுனிவர்களை நோக்கி

தேவேந்திரன்வினவுதல்

விருத்தம்.

மெத்தவுந்தவத்தோர்விஸ்வா மித்திரவசிஷ்டர்கேளீர்
உத்தமூவுலகுங்கண்ட யோகிகள்நீங்களாதல்
நித்தியபூமியாளும் நிருபரிற்பொய்சொல்லாத
சத்தியவான்கள்தம்மைச் சதிருடன்மொழிகுவீரே. (௩.)

(வ-ம்) அகோகேளும் வசிஷ்டவிசுவாமித்திராதிமுனிவர்களே நீங்கள் அரியதவத்தையுடையவர்கள்மூன்றுலோகத்திலேயும் நடந்துவருகிறபூதபவிஷ்யத்வர்த்தமானங்களை யாராய்ந்துணர்ந்தவர்களாகையினாலே பூலோகத்திலேசத்யந்தப்பாமலும் பொய்யணுவளவுஞ்சொல்லாமலும் ராஜ்யபரிபாலனஞ்செய்கிற ராஜாக்களாரோ தெரியப்படுத்தவேணுந்தபோதனர்களே.

வசிஷ்டர்சொல்-விருத்தம்,

மாதவந்தனில்மிகுக்க மாமுனிவசிஷ்டர்சொல்வார்
ஏகமிலாவெங்கீஷணிபல்புடையயோத்தியாள்வோன்
ஆதவன்குலத்துதித்தோன் அரிச்சந்திராஜனென்போன்
பூகலந்தனிற்பொய்வார்த்தை புகன்றிடாவொருவன்றானே.

(வ-ம்) அகோகேளும்தேவேந்திரமகாராஜனே பூலோகத்திலே அயோத்தியாபுரிபட்டணத்தையாளப்பட்ட சூரியவங்கிஷர்களிலே அரிச்சந்திரமகாராஜன் ஒருவனல்லாமல் பூலோகத்திலே, யுள்ள மற்ற எந்த ராசாக்களும் பொய்யில்லமல் ராச்சியபரிபாலனம்பண்ணமாட்டார்கள் மகாராஜனே.

தேவேந்திரன்-வசனம்- ஆம் ஆம் மெய்தான் மெய்தான்,

விசுவாமித்திரர்சொல்-விருத்தம்,

வஞ்சனைகபடமார்க்கம் வகுத்திடும்விசுவாமித்திரன்
நெஞ்சினிற்பகைபகைத்து நிருபர்முன்யேதுசொல்வார்
மிஞ்சியேவசிஷ்டர்சொல்லை மெய்யெனத்தலையசைத்தீர்.
அஞ்சிடாதுனைக்கப்பொய்க்கு அரிச்சந்திரனொருவன்றானே,

(வ-ம்) அகோகேளுந் தேவேந்திரமகாராஜனே இப்போது இந்தசபையிலேயுள்ள தேவதேவோத்தமர்கள்மெய்க்கவசிஷ்டனும்அந்தஅரிச்சந்திரமகாராசனைப் புகழ்ந்துசொன்னான் நீரும்மகா ஆனந்தத்தோடு தலையசைத்தீர் அவனொரு ஒருநாளொன்றுக்கு எண்ணி யொருகோடியெண்ணாமல் நூறுகோடி பொய்சொல்லப் பட்டவன் அவனைப் போலே பொய்சொல்லப்பட்ட அரசனும் ஒருவனுண்டோ .தேவேந்திரமகாராஜனே,

வசிஷ்டர்-விசுவாமித்திரருக்குச்சொல்-விருத்தம்,

ஆயிரங்கண்ணன்மெய்க்க வதட்டிபேவிசுவாமித்திரா
வாயினால்மதம்பொழிந்த வாரணம்போற்குதித்தாய்
பேயனேயுனதுசித்தம் ப்ரமித்துகீழிகற்றலுற்றாய்
நாயரின்குலத்தோர்பொய்யை நவிலுமூர்தனிலிராரோ,

வசனம்,

அகோவாராய் விசுவாமித்திர மகாமுனியே இப்போது தேவேந்திர மகாராசன் மெய்க்கும்படிக்கு மதத்தினாலே யானையானதுதன்றலையிலே தானே குப்பைகளைவாரிப் போட்டுக் கொள்ளுவதுபோல ஆகாசபூமியும் கிடுகிடுக்கக் கிளம்பிக் குதித்தாய் பிரமையடைந்து மிதற்றலுற்றாய் சூரியகுலத்திலே பிறந்தராசாக்கள் பொய்சொல்லுகிற ஊரிலேகூடயிருக்கமாட்டார்கள் போ-போ, வீண்வார்த்தைபேசாதேமதிப்பிரஷ்டா.

விசுவாமித்திரர்-வசிஷ்டருக்குச்சொல்-விருத்தம்.

கொற்றவன்றன்பாலுற்ற கொடூரமுங்கவடுஞ்சூது
முற்றவஞ்சகமுங்காம முனைத்திடும்பொய்கள்கோடி
நித்தமும்நவில்வோன்றன்னை நிசங்கவென்றாய்வசிஷ்டா
பித்தனேயுனைப்போலிந்த பெருஞ்சபைதன்னிலுண்டோ (எ)

(வ-ம்) அகோவாராய்வசிஷ்டமகாமுனியே அந்த அரிச்சந்திர மகாராசனிடத்திலே உண்டாயிருக்கிற கொடூரவார்த்தையும் கபடமும் சூதும்வஞ்சனையும் காமாதிகளும் விளைந்திருப்பது நோக்கெனத்தெரியும் ஒருநாளைக்கு எண்ணியொருகோடி என்னாமல் நூறுகோடி பொய்சொல்லப்பட்டவனை நிசங்கட்கு அவனைவிட்டால் லோகத்திலே இல்லையில்லையென்று சொல்லிவந்தாய் சபையோர்களும் ஆம் ஆமென்றுதலையசைத்துவிட்டார்கள் பித்தா உன்னைப்போலே இந்த சபையிலேயாராவதுண்டோ போபோ யெனத்தாதே போதும் போதும் வாயை மூடு மதிகெட்டவனே.

பொது-வசனம்

இந்தச்சமயத்திலேநாரதர்சபைக்குவருதல்காண்க

நாரதர் கொலுச்சபைக்குவருகிற-விருத்தம்.

கார்தனில்வீணைதப்பூர் கமண்டலமிலங்கவென்றுஞ்
சிரமதில்மகுடம்பூண்டு சிறுபுலித்தோலுஞ்சாத்தி
பரிந்தமெய்நிறைந்தபூச்சும் பார்த்தவர்திகைத்துநிற்க
புரந்தரன்சபையைநாடிப் புண்ணியநாரதர்வந்தாரே

(வ-ம்) அகோவாரும்பஞ்சபாண்டவர்களே இந்தப்பிரகாரமாய்வசிஷ்டவிசுவாமித்திரரிருவரும் ஒருவர்க்கொருவர் முன்னுள்ள விரோதத்தினாலே சடுப்பஞ்செய்துகொண்டிருக்கிறசமயத்தில் தண்டுகமண்டலவீணைபுஸ்தகபாணியாய் புலித்தோல்சாத்திக்கொண்டு சடாமகுடம்பிரகாசிக்க சங்கரநாராயணாதிருதியாய்ப்பாப்பிறம்மோச்சாடன மந்திரசப்தத்துடன் தேவேந்திரமகாராசன் சபையைநாடிவருவதுகாண்க.

ஈ-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளசாப்பு

பல்லவி

நாரதர்வந்தார்-சபைதனில்-நாரதர்வந்தார்

அநுபல்லவி.

சாரதம்பாள்பதம் போற்றியரிச்சந்திரன்
போஜைதப்பாரிம் ப்ரபலஞ்செய்யவென்று (நாரத)

சரணங்கள்

௧. கவுசிகர்வசிஷ்டனாக் கண்டுமகிழ்ந்தொரு
கலகம்விளைத்திடக் கருதிச்சபைதனில் (நாரத)

௨. வாச்சுதுவாச்சுது வள்ளலரிச்சந்திரன்
பேச்சுநிசமென்று பெருமையுடன்சொலல (நாரத)

௩. தஞ்சமென்றோரா யதட்டியெதிர்த்திடும்
வஞ்சனைசெய்விசுவா மித்ரர்வசிஷ்டர்முன் (நாரத)

நாரதர் வசிஷ்டருக்குச்சொல்-விருத்தம்.

திரந்தரம்புனிதமான நீடியதவத்தாய்போற்றி
புரந்தரன்சபையின்முன்னே சிஷனைப்புகழ்ந்துகொண்டாய்
அருந்தவமுனிவசிஷ்டர் அரசனோர்பொய்மொழிந்தால்
பொருந்தநீசெய்வதென்ன பொறுமையுடன்புகலுவீரே. (௧)

வசனம்.

நெடியதவத்தையுடைய வசிஷ்டமகாமுனிவனே தேவேந்திர னுடையசபையிலேயுள்ளயாவரும்மெய்த்துக்கொள்ளும்படி சிஷனைஸ்தோத்திச ர்பண்ணத்தலைப்பட்டீர் ஓய்முனிசிரேஷ்டரே அந்த அரிச்சந்திரனை ன் அனுப்பிரமாணமாவது ஒருபொய்சொன்னால் நீரென்னசெய்துக் கொள்வீரோ அச்சபதத்தை இப்போதெனக்குத்தெரியப்படுத்தி விடும் நானுங்கேழ்க்கட்டும்.

௧-வசிஷ் [illegible] ரதருக்குச்சொல் - விருத்தம்.

பூவினிலொருவ[illegible]ய பூவைபர்சகோதரன்றன்
மேவியநான்மறைக்கும் மெய்த்திடும்புகழ்க்குநல்லோர்
கூவியபேர்க்குமன்னர் குலாவியமனுநீதிக்கும்
ஆவியிற்சிறந்து (கெத்து)
அரிச்சந்திராசனலலாமல் பொய்யுரையாத
அரசர்களாவனியிலுண்டோ
சாச்சந்த்ரனொருவனேவ சப்தலோகம்விளங்கும்
நிரந்தரமாகக்கேளும் நிகழுஞ்சபதந்தன்னைக்
கொற்றவனுற்றிடி சொற்றவரிலெனது
நற்றவமிழந்திந் நற்றவராறியவே
குற்றமென்றறுதாகட் குடந்தலைகொண்டுமா
ருத்திரமுறையாங்லோடுவேன்தென்திசை, (அரி)

வசிஷ்டர் - நாரதருக்குச்சொல் - வசனம்.

அகோவாரும்முனிவரிற்சிறந்தநாரதரே ஈரேழு பதினாலு லோகத்திலேயும்உம்மையறியாமல்அணுவளவு மசையாது அப்படியாயிருந்தாலும் இப்போதுநானுறுதியாய்ச்சொல்லுகிறேன்கேளும் பூலோகத்திலேராச்யபரிபாலனம் பண்ணிவருகிறராஜர்களிலே என்னுடையசிஷியன் அரிச்சந்திரமகாராஜன் ஒருவனே பரனுரிசகோதரனும் சாஸ்திரக்ஞனும்கீர்த்திவந்தனும்நல்லோர்பெரியோர்களாலேபுகழ்ந்துகொள்வதற்கும்ராஜராஜாக்கள் நடத்திவருகிற மனுமாந்தாதிகளின்நீதிநெறிப்படி நடவடிக்கைநடப்பிவிக்கிறதற்கும் அந்த அரிச்சந்திரனொருவனைத்தவிர பொய்சொல்லாத பூபதிகளுண்டோ பூலோகத்திலே பூர்வபட்சத்தில் விருத்தியாகிற சந்திரனைப்போலே ஈரேழுலோகமும்விளங்கும் ஒருக்காலும்சந்தேகமேயில்லை ஆகிலும் ஒருக்கால் அந்தஅரிச்சந்திரமகாராஜன்அசத்தியவந்தனானானால் நான்செய்த தபசுகளையும்விட்டு விட்டுமுப்பத்துமுக்கோடிதேவதைகளும்நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுமறிய கன்னுகுட்டியைத் தலையிலேசுமந்து கொண்டியாதொரு வார்த்தையுஞ்சொல்லாமல்தெட்சிணதிக்கைநோக்கி ஓடிப்போவேனே தவிரவேறொன்றும் நடவாது

நாரதர்-விசுவாமித்திரரை-வினவுதல்-விருத்தம்.

கொற்றவன்வாயிற்பொய்யைக் குறித்திடாயாகில்நீயும்
எற்றவமிபற்றுவாயோ விளம்புவாய்விசுவாமித்திரா
குற்றமென்மேலென்னாதே குணமிகுமுனிவனன்றே
நற்றவவுனைப்போலிந்த நாற்றிசைதன்னி லுண்டோ　　(௰)

(வ-ம்) அகோவாரீர் விசுவாமித்திரமகாமுனியே கிழக்கு மேற்குதெற்கு-வடக்குஎன்கிற நாலுதிக்குக்குட்பட்டஸ்தலத்திலேஉம்மைப்போலே ரிஷிசிரேஷ்டர்களுண்டோ என்மேலேகுற்றஞ்சொல்லவேண்டாம் நீர் குணபூஷணனன்றோ அந்த அரிச்சந்திரமகாராஜன் பொய்சொல்லாதிருந்தால்நீர்செய்வதுஎன்னசபதம் சொல்லிவாரும் முனிவரனே

உ-விசுவாமித்திரர்சொல்-கந்தார்த்தம்.

வெய்யவன்குலத்தித்த வேந்தரிலவனுமெத்த
பொய்யவன்களவன்சூதன் பொருக்கொணுக்காமன்கண்டாய்
தையலரயலார்தம்மேற் றுவகொணுமயல்கொள்வோனைத்
துய்யவனென்றுவாயாற்　　சொத்து
தரிசாயுரைத்திடலாமோ - அரிச்சந்திரனைத்
துய்யனென்றெண்ணலாமோ

வையகந்தனிலயோத்திவாழரிச்சந்திரமன்னன்
பொய்யுரையானேயாகிற்புனிதரெல்லோருங்காண
நானியற்றிய தவநெறிதனிற்பாதியைக்
கோனவர்க்கீந்திடகூறுவேனன்றியிவ்
வானவர்க்காவலில்வாழுவேன்வளமுடன்
மானவனேயுனதுமனதுமகிழ்ந்திடத் (துய்ய)

நாரதருக்கு-விசுவாமித்திரர்சொல்லுவசனம்,

அகோவாரும் நாரதமகாமுனீஸ்வரரே ஆ-ஆ நன்றாயிருக்கு நன்றாயிருக்கு என்ன ஆச்சர்யம்என்ன ஆச்சர்யம் பளாபளா கெட்டிகெட்டி ஓகோய்நாரதசிரேஷ்டரே நீர்கலகப்பிரியரன்றோ என்னகலகமுண்டாகிறதோ அந்தஅரிச்சந்திரனுடையநடத்தைகளுக்குத்தெரியாதோ சூரியகுலத்திலே பிறந்தராஜாக்களிலே இவனைப்போலே பொய்யும் களவும் சூதும் பொருக்கொணாத காமாதுரமும் உடையவனைஎண்பத்திநான்குலட்சஞ் சீவராசிகளிலுங் கண்டதேயில்லை இப்பேர்ப்பட்டதுர்மார்க்கனைப் பரிசுத்தனென்றுவாயினாலே சொல்லலாமா மகாசத்யவந்தனென்று எண்ணலாமா அப்படி இந்த அரிச்சந்திரன் வாயினால் அணுவளவும் பொய்சொல்லி வையாமற்போனேனேயானால்நான் செய்ததபசிலே சரிபாதியை தேவேந்திரனுக்குக் கொடுத்துவிடுவதுந்தவிர எமதர்மராஜனுடைய சிறைச்சாலையிலிருந்து அவரிடுகிற ஏவலுக்குட்பட்டுக்கொண்டிருப்பேன் நாரதமகாமுனீஸ்வரரே

நாரதர்-விசுவாமித்திரருக்குச்சொல்,விருத்தம்,

அருந்தவமிகுந்தோர்தம்மை யாய்ந்திடினுமைப்போலென்றும்
பொருந்தவேவுபுகழ்படைத்த புனிதர்களெவர்களுண்டு
பெருந்தவத்தோர்கட்கெல்லாம் பின்னுக்கோரிழிவுறாமல்
திருந்தவேவுமக்குரைத்தேன் திருவுளமகிழுவீரே

வ,ம், அகோசேரும் விசுவாமித்திரமுனீஸ்வரரே தவத்தினாலேபெரியோரைப்பார்க்கும்போது உம்மைப்போலே தபோநிதியாவரிருக்கிறார்கள் இனியுள்ளதவசிகட்கெல்லாம்பிற்காலத்திலேயாதொருதூஷணமானசொற்களும்வராமல்நானிப்போதே பச்சைமரத்தில்ஆணியறைந்ததுபோலேஸ்தாபித்தேன் சந்தோஷமாயிரும்

விசுவாமித்திரர், வசனம்

ஆ-ஆ-ஆ-ஆ நன்றாய்ச்சொன்னீர் நன்றாய்ச்சொன்னீர் நீர் கலகப்பிரியரோ அன்றோபோய்வாரும் போய்வாரும் கலகப்பிரியரே

பொது- விருத்தம்,

இப்பெருஞ்சபதஞ்செய்து விருதிகள்மூன்றுபேரும்
ஒப்பறுஞ்சபையைநீக்கி யும்பர்கோன்விடைபெற்றாய்நார்
அப்பெருஞ்சபையிலுள்ளோ ரவரவராச்ரமத்திற்
செப்பரும்புகழ்படைத்துச் சேர்ந்தபின்செப்புவேனே. ௰௨

வசனம்.

அகோகேளும்சபையோர்களேஇவ்விதமாய் சம்வாதம்செய்தமூன்றுமுனிவர்களும் சம்வாதம்முடிந்தவுடனேஉபமானமில்லாதசபையை நீக்கிதேவேந்திரமகாராசனிடத்திலே ஆக்ஞைபெற்றுக்கொண்டுஆச்ரமத்துக்குப்போய்விட்டார்கள் அந்தசபையிலுள்ள மற்றதேவசமூகத்தார் முதலானயாவர்களும் அவரவர்களாச்ரமத்திற்குப்போனபிற்பாடு நடப்பதுகாண்க.

இந்திரகாண்டம்-முற்றிற்று,

ஆக-விருத்தம்-௰உ-விருத்தார்த்தம்-உ-தரு-௪,

உ

நான்காவது.

வஞ்சனைகாண்டம்,

விருத்தம்,

ஆரணன்முதலோர்கூடும் அமரர்தன்சபைக்குச்சென்ற
வீரணவிசுவாமித்ரர் விரைவிலாச்சிரமஞ்சேரக்
காரணமென்னேவென்று கருத்தினிலேபமுற்றுப்
பூரணமனத்தரான புனிதச்சிஷரும்வந்தாரே. (௧)

வசனம்,

அகோகேளும் தருமபுத்ராதிகளே பிரமதேவர்முதலானசகலதேவர்களும் நிறைந்த இந்திரன்சபைக்குப்போன விசுவாமித்திரரானமகா குருமுனிவரானவர் எப்போதும்போலிராமல்மனோ வேதனையடைந்திருக்குங்காரண மென்னமோவென்றுநினைந்து சிஷர்கள்விசுவாமித்திரருடைய சன்னதிக்குவருவதுகாண்க.

க-தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

சிஷர்கள்வந்தாரே-விசுவாமித்திரர் சிஷர்கள்வந்தாரே

அநுபல்லவி

ஞானகுணங் கலைத்தவருக்கவர்
தூயவேதாகமத் சொற்கள்மிகுந்தவர்; (சீஷ)

சரணங்கள்

௧, குருமொழிதனை மறவார்-அனுவேனும்
குலவண்மைதனைத் துறவார்
பொறுமையுடனுரைக்கும் போதகந்தனைநாடி
புதுமையென்னவுண்டதைப் புகலுமென்றுளம்வாடி (சீஷ)

௨, மனத்துள்ளதறி யோமே-அங்குவிளைந்த
மார்க்கமுங் குறி யோமே
சினத்தொடனுசரித்திடும் சீரோதோவெனக்கூறி
சேவடிபோற்றிடும் செப்புவாயெனத்தேறி (சீஷ)

௩, நயங்குலதேரு வென்றுடனைமிகத்
தளர்ச்சியுறவேதி னின்று
நுங்கொள்தேவர்கள்முன் னடந்தடக்கைசொல்லி
காதனேயெங்களால் ந-க்குநேமாவெனைப்புல்லி (சீஷ)

விருத்தம்

வெய்யவன்குலத்து வேந்தனேமிக்க
வீரதிவீரனுமல்லாற்
றுய்யவன்வனாயுங் கடன்மதிரதிரோன்
துய்யகன்னிலைகுலைத்திடினும்
பொய்யதுபுகலானென்செய்வோமெனவே
புந்தியிலையுதவுற்ற
செய்யகோசிகன்றனடிபணிந்திறைஞ்சந்து
செவ்வியமறையவர்க்குரைப்பார். (௨)

வசனம்.

இந்தப்பிரகாரமாய் விசுவாமித்திரமகாமுனியானவர் சூரியகுலத்துராஜாக்களிலே அரிச்சந்திரமகாராஜன் மகாபலபராக்கிரமனும்மகாசத்தியவந்தனும் சற்குணவானுமல்லவோ சமுத்திரம்பர்வதம் சந்திரசூரியர்முதலானவர்களும் அவரவர்கள் நிலைபிசகிடுந்தாலும் அரிச்சந்திராசன் வாயிலே பொய்வரவேவராதே என்னசெய்யப்போகிறோமென்று மனவ்யாகூலப்பட்டு தன்னிடத்திலே வித்யார்த்திகளாயிருக்கிற பிராமணர்களுக்குச் சொல்லி அவர்களை அரிச்சந்திரமகாராசன்சபைக்கனுப்புவதுகாண்க,

கன்னிகள்.

௧, மறையாளரோகேளீரிந்த்ரன்
மானகர்தனிலுறைவானவர்திகைத்திடப்

போனவுடனேயானும் ஞானவசிஷ்டனைக்
குறையாவாதில்வெல்லவெண்ணிக்
கூறினேனவமொழி சீறினேனரவுபோற்
றூரினேன்மிகமிகத்தேறினேன்மனதில்

௨, மறையாகமாதிகளோதிய
மாதவத்தாலுமக் கோதுவன்வார்த்தைகள்
பேதமிலாமனப் போதமதாக
நிறைமாமதி படைத்திருங்கள்
நெஞ்சகத்திடைமிக வஞ்சகமகலவே
கஞ்சனைதருக்கொடு கிஞ்சுகமொழிபோற்

௩, சாகேதபுரஞ்சேர்ந்தரிச்
சந்திரன்மகிழ்ந்திடத் தந்திரமாகவே
இந்திரஜாலஞ்செய்மந்திரமோதி
யோகேந்திராதியர் பொற்புறப்
புண்ணியவேள்வியை நண்ணியேசெய்திட
வெண்ணியபொருட்டு மண்ணலருனைப்போல்

௪, ஆய்ந்தோந்தேச மன்பத்தாறிலும்
அவனியிலுனைப்போலத் தவநெறியிருத்தவர்
எவனிருக்கிறானெனக் கவனமதாகப்
பாய்ந்துன்பக்கல்வந்தோமெனப்
பகருவீர்பிரமனே நிகர்த்தபூசுரர்களே
பகர்ந்திடுமரசன்சொல் தகர்ந்திடச்செய்வேன்.

(வ-ம்) அகோகேளும் வித்யார்த்திகளே நான்தேவேந்திரன்சபைக்குப்போனவிடத்திலே வசிஷ்டமாமுனிவருக்குமெனக்குநடந்த தர்க்கங்களினாலே அவனைவெல்லும்பொருட்டு அரியாப் பிரம்மாதிகளுக்கும் சகசப்படாத ஒருவார்த்தையினாலே யானையின்காலில்மிதிப்பட்டசர்ப்பம்போற்சீறிவீணாய்த்தூறினேன்மனந்தேறினேன்ஆகையால்நான்சொல்லுகிறவார்த்தைகளை வித்தியாசமில்லாமல் உபதேசம்பண்ணினதை பிரமஉபதேசமென்றெண்ணி புத்தியுக்தியோடுவஞ்சனையில்லாமல் ஸாட்சாத்பிரம்மாவே ஆயுற்பவித்து வந்ததுபோல உருவெடுத்துக்கொண்டு அயோத்தியாபுரிபட்டணத்திற்குப்போய் அரிச்சந்திரமகாராசனை அனேகவிதமானமந்திரதந்திரயந்திரங்களினாலும்இந்திரஜாலாதி வித்தைகளினாலும் பிரமிக்கும்படி செய்து இந்திராதிதேவர்களும் மகிழ்ச்சிகொள்ளும்படி தெய்வ யாகம்பண்ணவேண்டிய நிமித்தமாய் இந்தஅன்பத்தாறுதேசத் திராசாக்களிலும் ஆராய்ந்துபார்த்த ராசாக்களிலுன்

னைப்போலே சமர்த்தரும் தாதாக்களுமில்லையென்று உன்னுடையபட்டணம்வந்து உன்னைக்கண்டோம் ஆகையால் யாகத்துக்கு ஆனையின் மேலேறிகவணெறிந்தால் எவ்வளவுதூரம்போகுமோ அவ்வளவு உயரங்குவித்ததனம் வேணுமென்று கேளுங்கள் அதற்குஉடன்பட்டுக்கொடுப்பானேயாகில் அவனுடையவார்த்தையைத் தப்பவைத்து வசிஷ்டமகாமுனியைவெல்ல வழிதேடிப்போகிறோம் அதிசிக்கிரமாய் சாகேதபுரஞ்சேருங்கள் வித்தியார்த்திகளே,

வித்தியார்த்திகள்-வசனம்.

அப்படியேபோய்வருகிறோம்விசுவாமித்திரமகாமுனீஸ்வரரே.

பொது- விருத்தம்,

கோசிகமுனிவரித்திறமுரைத்தார் குவலயந்தனிலரிச்சந்திரன்
ஆசிகள்கூறும்வேதியர்தபோதரானை சேனைகளின்காவலரும்
வீசியகவரிகைதனில்நாளும் விளங்கியமாதர்கள்சூழப்
பேசியவிருதாவளிகளினுடனே ப்ரியமுடன்கொலுவில்வந்தனனே,

(வ-ம்) அகோகேளுஞ்சபையோர்களே விசுவாமித்திரர் ஆச்ரமத்திலே இவ்விதமாய்நடக்கிறசமயத்திலே வேதவேதியர்கள்தபோதனர்கள்முதலானவர்களும் ஆசீர்வதிக்கச் சேனைசேனாபதிகள் விருதாவளிகள்முதலான அஷ்டாதசவாத்தியங்களோடும் ஆடல்பாடல்களுடனேசாமரைவீசிவரும் மாதர்களுடனே அரிச்சந்திரமகாராசன்கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

௧-தரு-இ-ம்-பேகடை-அல்லது-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

இராஜராஜமகாராஜ னரிச்சந்திரராஜன்கொலுவில்வந்தான்

அநுபல்லவி.

தேசத்துள்ளமன்னர்கள் தினமுந்துதிசெய்பேசர்
தாசசெனங்கள்பரி தாபந்தீர்க்கும்விஸ்வாசர்
மாசிலாமணியெல்லை மார்த்தாண்டன்றன்குலேசர்
வாசவன்முதலோர்கள் வரிசைதெரிந்தவுல்லாசர் (ராச)

சரணங்கள்.

௧, மாதமும்மாரி மனமுமிகப்பொழிந்திடக்
காதல்பிருமாதர்கள் கற்பும்விளங்கிட
வேதமொழிப்படி நீதிசெலுத்திடப்
பூதலத்தின்மன்னன் பொற்புமிகுத்திட-(ராச)

உ, சுந்தரமாமதி
சந்ததம்லோகிகள்
மந்திரசத்யகீர்த்தி
தந்திரமாய்பிர
திகர்த்தமுகந்துலங்கச்
சபையுமிகமுழக்க
மகிழ்ந்திலங்கத்
தாணியருமிலங்க(ராச)

௩, மத்தளதாள
முத்தமிழ்மாதர்கள்
மத்தகமண்டப
சித்திரமாய்நவ
முழக்கத்துடனே
முனைந்துநிர்த்தமி-
முற்றமணிமாட
ரத்தினமுடிசூட-(ராச)

பொது-விருத்தம்,

துரிதிலேமிகத் துன்பம்விளைந்திட
மரியியாகவும் மாமுனிவன்விடு
பரிசிலாளர்கள் பான்மைமிகுத்திட
குரிசிலோன்றன் கொலுச்சபையுற்றனர்

வசனம்,

அகோகேளுஞ்சபையோர்களே தேவலோகத்திலே நடந்த விரு த்தாந்தங்களை விசுவாமித்திரராலேசொல்லக்கேட்ட வித்யார்த்திகளெ ன்னும் அவருடைய சிஷ்யரானவர்கள் இமைப்பொழுதில் எண்ணிற ந்த இமிசைவிளைக்கும் சாமர்த்தியமுள்ளவர்கள் மகா பயபக்தியுடனே நியமனப்பிரகாரம் அரிச்சந்ரமகாராசன் சபைக்குவருவதுகாண்க

ச-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்,

பல்லவி.

வித்யார்த்திகள்வந்தார்- சபைதனில்-வித்யார்த்திகள்வந்தார்

அநுபல்லவி,

வித்யார்த்திகள்வந்தார்
மத்யானவேளையில்
வேதாவிலுமேலாய்
மாதவத்தினில்மிகுத்த(வித்)

சரணங்கள்,

க, குருவிசுவாமித்திரர்
மருவியஅரிச்சந்திர
திருவடிகளின்படி
மன்னன்சபையைநாடி(வித்)

உ, நொடிக்குள்நூறுயாகம்
படியில்ஸர்வேத
நோக்கிச்செய்யுமிந்த
ப்ராமணர்யாமென(வித்)

௩, கருணனுக்குப்பின்
தரணியில்சத்யரிச்சந்
தருணத்திலேகுடை
திரனுதாமென(வித்)

கட்டியக்காரனுக்கும்-பிராமணர்களுக்கும்-தர்க்க வசனம்.

கட்டியக்காரன்,

சரணஞ் சரணஞ்சுவாமி தேவர்களெங்கேயிருக்கின்றது

பிருமணாள்,

மகாராசனாயிருக்கவேணும் மகத்தைஸ்வர்யாபி விருத்திரஸ்து இ ராஜதுவாரோஸர் வஜன கூலசித்திரஸ்து

கட்டி-எவ்விடத்திலிருந்துவருகிறீர்கள் பிராமணசிரேஷ்டரே

(பிரா)நாங்கள் விசுவாமித்திரமுனீஸ்வரருடைய சிஷ்யாள் ஆச்ரமத்திலிருந்துவருகிறோம்.

(சட்டி)அதென்னசுவாமிகளே கடற்கரைசந்தைப்பேட்டையிற் கருவாட்டு சுருணைப்போலேயிருக்குது.

(பிரா)அடே துஷ்டப்பெட்டிமகனே என்னவார்த்தைசொல்லுகிறாய் மதிப்பிரஷ்டா இதுமனோமர்க்கடதுஷ்டாஷ்டகமன்றோ

(சட்டி)மயிலன்சந்தை கச்சாலப்பன்கடை கச்சக்கருவாட்டேச் சுருணையா

(பிரா)அடே போடா மதிப்பிரஷ்டமர்க்கடமே நீ சென்மஜென்மத்துக்கும் துர்வசனாய்சனித்து அந்திய சென்மத்திலேசண்டாளனாய்ப்பிறப்பாய்

(பிரா)மதிப்ரஷ்ட மகாலிங்கசாஸ்திரிகளே ஏன்பிரமகத்தி பிரகத்பீஜசாஸ்திரிகளே என் அமேத்தியபிரஷ்டம் அப்பசாஸ்திரிவன்வாருங்காணும் வாரும் நமதுகுருமுனிராசருடைய பாதாரவிந்தத்தைத் தியானம்பண்ணிக்கொண்டு மகாராஜன்சபைக்குப்போனால்சகலகாரியமுஞ்செயமாகிவிடும்

மற்றபிராமணாள்-வசனம் -அப்படியே,

பொது-விருத்தம்,

போதகமுணர்ந்தபுண்ணியமெழுந்து புகழ்மலைபடர்வணங்கடந்து
பாதகந்தொழிலனுவளவெனும்பயிலாப் பருதிகுலேசன்பாற்செல்ல
பேதகமிழக்கபார்மன்னன்போற்றிப் பெருமைசேராசனமளித்துச
சாதகத்திடம்வந்தனற்கருமஞ் சாற்றுகவெனச்சருவினனே

வசனம்,

குருமுனிவருடையவார்த்தைக் கெதிர்வார்த்தை சொல்லாமல்வந்தபிராமணர் அரிச்சந்திரமகாராசாவின் சமீபத்திலேவந்தவுடனே பாதப்பட்டாளனதி ஷோட சவுபசாரங்களுஞ்செய்துகுசலப்ரசன்னம்பண்ணுகிறவிதங்காண்க

இராசன்சொல்-விருத்தம்,

ஐயரேபோற்றிபோற்றி யருண்மறையோரேபோற்றி
மெய்யரேபோற்றிபோற்றிமிகுதலைப்பேரேபோற்றி
தய்யனின்னகர்க்குவந்த துரிசிணையருள்வீர்போற்றி
பொய்யனுவளவுஞ்சொல்லாப் போதமதுரைப்பீர்போற்றி

வ-ம் அகோவாருங்களையா சுவாமிகளே நாலுவேதங்களும் ஆறுசாஸ்தி
ரங்களும் பதினெண்புராணங்களும் இருபத்தெட்டாகமங்களும் முப்பத்
திரண்டுதர்மங்களும் அறுபத்துநாலுகலைஞானங்களும் தொண்ணூற்றா
று தத்துவங்கள் முதலான சகலகலைகளுங்கற் றுணர்ந்த மறையோர்க
ளே சரணஞ் சரணமையா சுவாமி அதிசீக்கிரத்திலே தாங்க ளிவிடத்து
க்கு வந்தகாரியங்களைத் திருவுளம்பற்றிப் பொய்யென்பது அணுவள
வும் புகன்றிடாமல் புத்திசாதித் தருளவேணுமையா தேவ தேவர்களு
ம் துதிக்கப்பெற்ற புனிதரான பிராமணோத்தமர்களே

௧-பிராமணர்கள்-சொல்லும்-விருத்தார்த்தம்

மோகனம்- அடதாளம்,

மன்னவா விளம்பக்கேளாய் மாமுனிவிசுவாமித்திரர்
சொன்னனன் மொழியொன்றுண்டு சுகிர்தமுங் கிடைக்குங்கண்டா [ய்
தன்னகந்தேர்ந்துசெய்த தவமது தவறிடாமற்
பன்னரும்யாகஞ்செய்யப் (கொத்து)

பணங்கள் வேண்டிநாங்களுவந்தோம்-அரிச்சந்ராவுன்
குணங்கள் கண்டுளமகிழ்ந்தோம்-இப்புவியீதில்

மணந்திகழ்ந்திடவல்லி மாலைதிகழ்மார்பனே
கணந்தனிற்கோடானுகோடி செம்பொனளிப்பவர்கள் (மூன்று)
உந்தனுக்கிணைவேந்த ருலகினிலிவ்வேளை
வந்துனைபடுத்தனம் வழியுமைப்பாயேனிற்
கந்தனும்மனைவியுங் கருத்தினிற்களிப்புறச்
செந்தவத்துடனிருந்து செவ்வையாயாளுவாய் (பண)

வ-ம். அகேள்வாரும் அகண்டபூமண்டலாதிபதியாகிய அரிச்சந்திர
மகாராஜனே முனிசிரேஷ்டராகிய விசுவாமித்திரமகாமுனீஸ்வரருடை
யசிஷ்யாள் நாங்கள் எங்கள்குருவானவர் அருட்கிருபைசெய்து திருவரு
ள்புரிந்த ஒருவார்த்தையுண்டு அதைநீர்கேட்பீரானால் உமக்குமூவேழுதலை
முறைக்கும் புகழும் கீர்த்தியும் சரேயஸ்கரமும் கிடைக்கும் அந்தமகா
த்மருமேலே இயற்றிவந்ததவமானது இந்நாளில்தவறிப்போகாமல்தேவ
யாகஞ்செய்யப்பொருள்கள்வேண்டி இந்த அன்பத்தாறுதேசமுந்திரி
ந்தும் அவற்குத்தகுந்த இராஜாக்களகப்படாமல் உம்முடையகுணநிச
யங்களைக்கேள்விப்பட்டு எங்களையும்மிடத்திக்கனுப்பினர் நாங்களும்
மகாசந்தோஷத்தோடு உம்முடைய சமுகம் வந்தோம் ஓய் அரிச்சந்தி
ரமகாராசனே அல்லிமாலையைத் தரித்தவரே ஒருமாத்திரைப்பொழுதி

லே எண்ணிறந்த திரவியங்கள் கொடுப்பீரென்றும் உமக்குச்சமானராஜாக்கள் ஈரேழுலோகத்திலேயு மில்லையென்றும்இந்த பூலோகத்திலே உம்மைவந்தடுத்தோம் கொடுக்க மனமுண்டா குவையாகில்உம்முடைய புத்திரகளத்திராதிகளுஞ் சந்துஷ்டியாய்மகாதவத்திலேயிருக்தவருய் இந்தஅயோத்தியாபுரிபட்டணத்தையாண்டுக்கொண்டு மகாராசனாய் க்ஷேமமாயிருப்பீர் மகாராஜனே தீர்க்காயுஷ்யமஸ்துசமஸ்தமங்களாநிபவந்து

இராசன்சொல்-விருத்தார்த்தம்-மோகனம் அடதாளம்

ஆழிசூழுலகோர் போற்று மருமறைநூல்வல்லோரே
ஊழியன்பொருள்கள்தேடி யுத்தமர்க்களிப்பதல்லாற்
பாழினில்விரைப்பதுண்டோ பண்புளமுனிவர்க்கிந்த
நாழிகைதன்னிற்செம்பொன் (கொத்து-
நானேதருகுவே னையா-தூயநான்மறை
யோனேவருகுவீ ரையா
தானேதன்னருட்கூர்ந்திட்
டானேயிம்மாத்திரத்துக்
கானேன்பொருட்களையி
வேனேயிதோர்கைப்பற்றில் முடுகு
வாருவீராச்ரமஞ்சேருவீர்கண்ணருள்
கூருவீர்மிகப்பணத்தேறுவீரையனே (நானே)

வ-ம், அகோரவாருங்களையா சுவாமி வேதியர்களே ,காண்டனுக்கெநான் தேடிய சொத்துக்கள் யாவற்றும் உங்களைப்போலுள்ளமகாத்மாக்களுக்கு உதவிசெய்வதேயொழிய வீணாய் சளைக்கு உதவாத விஷயத்தில் உபயோகிப்பதுண்டோ அந்த மகாதவத்துக்கு இந்தமிஷத்திலேயே தருகிறேன்சுவாமிகளேவேதவிற்பனர்களேவாருங்களையா சுவாமிஎன் பேரில் தயவுசெய்து அருளிச்செய்தாரே இம்மாத்திரத்துக்கு வந நான் கொண்டனேனே வேண்டும்பொருட்களைத்தருகி றேன் நகக்கொண்டுஆச்ரமஞ்சேருங்கள் அருட்கிருபை செய்யுங்கள் மனக்கவலையமாற்றுங்கள் சுவாமிகளே திருவுளங்களி கூறுங்கள் நமஸ்காரம்

பொது-விருத்தம்,

அந்தணன் ஞளிவிர்தநற்பொருட்க
ளியாவுங்கைக்கொள்வோமென்றனறந்து
அணைஞ்சலுசலவுமகழ்ச்சுரும்நீக்கி
படர்வனக்குகைமடுவகன்று
கந்தமூலங்கள்காய்கனிமிகுத்த

65

கடுவெளிசூழ்கழனிகளுங்
 களிப்புற்றுநடந்தமறையவரெவரும்
கவுசிகமுனிபர்ணசாலை
 வந்தபின்னடந்தவாரவர்க்குரைத்து
வாழ்ந்திடுமவ்விடத்துறைந்தார்
 வாரணைவிளக்கு மாமுனிநெடிய
வையமும்வானமும்நடுங்க
 மந்தராசலநிகர் மாடகூடங்கள்
மணிதிகழ்மேடைகள்பொலிந்த
 மாநகர்சாகேதபுரியினிற்கௌசிகை
மைந்தனும்வருந்தகவுரைப்பாம்,

(வ-ம்) அகோகேளுஞ்சபையோர்களேஇவ்விதமாகச்சொன்ன அரிச்சந்திரமகாராசனைவெகுவாகப்புகழ்ந்துயாகஞ்செய்கிறசமயத்தில்வந்து வேண்டியபொருட்களை வாங்கிக்கொண்டுபோகிறேமென்றுவிடைபெற்றுக்கொண்டு வனாந்திரங்களைக்கடந்துவிசுவாமித்திராச்ரமத்துக்குவந்து அரிச்சந்திரமகாராசன் சபையில்நடந்த விருத்தாந்தத்தைபிராமணர்சொன்னவுடனேவானமும்பூமியும்அதிரமகிழ்ச்சியால்விளம்பிக்குதித்து விசுவாமித்திரர் அயோத்தியாபுரியைநோக்கி வருகின்ற அதிசயஞ் சொல்லுவதுகாண்க.

விசுவாமித்திரர் அயோத்தியைநாடி வரும்போது
நடக்கிறஅதிசயங்கள்-விருத்தம்

துலங்கியவஞ்சமாமுனிதோற்றையில்
இலங்கியவண்ட புவனமிரண்டினும்
விலங்குபுள்ளும்விரிந்துயிர்களும்
கலங்கிநின்றன கண்ணீர்சொரியவே.

(வ-ம்) அகோகேளுந்தர்மபுத்திரர்களேஅரிச்சந்திரமகாராசனது அரண்மனையை நோக்கி விசுவாமித்திர் மாமுனிவர்வருதல் கண்டு அண்டபிண்டங்களிலுமுள்ள மிருகங்கள் பறவைகள் ஜலசெந்துக்கள்முதலாகிய யாவும்மதிகலங்கிகண்ணீர்சொரியவிடும் அதிசயங்காண்க.

௫-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்-பல்லவி,
கெடுக்கவந்தனன்விசுவாமித்திரனென்று
கெதிகலங்கினவே

கள

அநுபல்லவி,

படுக்களுநும்வாவியும் மலரும்பூஞ்சோலையும்
நடுக்கமிகுந்து நலிந்திட நாடெலாம் (கெடு)

சரணங்கள்.

௧. கள்ளமதியுள கரியகுரங்குகள்
துன்மிமதியற்று சோலைக்குள்ளொளித்தன
உள்ளமதிகெட் டொடுங்கினகிள்ளைகள்
வெள்ளமதிலோடி யொளித்தனவிராலெலாம் (கெடு)

௨. தலைசாய்த்துநெற்கதிர் தரைமயிற்புரண்டன
குலைசாய்த்தவாழைகள் குப்புறவிழுந்தன
கலைசாய்த்து நின்றன கஞ்சமலரெல்லாம்
உலைசாய்த்து நின்றன ஊர்விழிலெங்களும் (கெடு)

௩. அன்னப்புட்களார வாரமொடுங்கின
சொர்னப்பறவைகள் சொரிவாயடங்கின
வன்னப்புறவிகள் வலுமையொடுங்கின
வென்னவின்னுமேலிவன் தேங்கத்தொடங்கின (கெடு)

வெண்டு-விருத்தம்.

படர்சடைமுடியிலக்கப்படியெலாம் நடுநடுங்கத்
அடர்வெறுண்முகத்தழல்கத்தோற்றுவோர்மனமொடுங்கச்
சுடர்குலைத்தரசனுளுத்தொல்புவியோரொடுங்க
இடர்வினைவிசுவாமித்திரன் இறைவனதுசமுகம்வந்தான்

(வ-ம்) சர்ப்பக்கூட்டங்களை யுதறிவிட்டதுபோலேவிரித்ததலையு
த்தசடைகளுடன் நடக்கையில் பூமியதிர்ந்து நடுநடுங்கவும்முகத்
திற்கோபாக்கினி ஜொலிக்கவும் கண்டவர்கள்மனமருண்டொடுங்
கவும்அயோத்தியாபுரியோ ரெவரும்திகைத்து அங்கக்குலைடிஞ்
த்துக்கொள்ளவும் கெடுதல்விளைக்கிற விசுவாமித்திரரானவர் அரிச்
சந்திரமகாராசன் சமுகத்தில வருவதுகாண்க

௬ தரு இம்-ஆகிரி-அடதாளசாப்பு-ரூபகதாளம்-கண்ணிகள்

௧. விரித்தசெஞ்சடையாட விளங்கியபுலித்தோலாட
தரித்தமுப்புரிநூற்களாடத் தவசியர்வந்துதோணினார்

௨. கையினிற்கமண்டலமும் காதிலெழிற்குண்டலமும்
மெய்யினில்வெண்ணீறிலங்க விசுவாமித்திரர்தோணினார்

௩. மித்திரபேதங்களற்று மேவுமரிச்சந்திரன்கையில்
நித்யதானபலாங்கவென்று நிமலர்வந்துதோணினார்

௪ அஞ்சலென்றவரிச்சந்திரன் ஆளும்பூமியடங்கலும்
வஞ்சகமாயபகரிக்க மாமுனிவருந்தோணினார்

அரிச்சந்திரமகாராஜன் வாசல்காக்கும்

கட்டியக்காரன்-விசுவாமித்திரரை-வினாவுதல்-விருத்தம்

எந்தமாதவத்திருங்கட் கியற்கையாய்நிலைமையெங்கே
மந்தமாருதம்போற்பொங்கி மனந்தனில்வெகுட்சியோங்க
இந்தநற்புவியையாளு மிறைவனதுசமுகந்தேடி
வந்தகாரியமேதன்ன வளம்பெறவிளம்புவீரோ

(வ-ம்) அகோவாருங்களையா சிறந்ததவத்தையுடைய மகாமுனிவரேநீங்கள் ஆச்ரமத்தைச்சேர்ந்தவர்கள் நீங்களிருக்கப்பட்ட இஸ்தானவிடமெங்கு பிரளயகாலருத்திரனையுந்தவித்தசண்டமாருதம்போலேமனங்கசிந்துட்பொங்கிமகாகோபாக்கினிபொருந்தியநெற்றிக்கண்ணைப்போலே ஜ்வாலாமுகராய்இந்தராச்சியத்தையாளப்பட்ட அரிச்சந்திரமகாராசாவின் சமுகத்தை யுத்தேசித்துவந்தகாரியத்தைத்தெளிவாக அறிவிக்கவேண்டுமையா சுவாமிமுனிநாதனே

விசுவாமித்திரர் கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்

சட்டமாயரசையாளும் சத்தியரிச்சந்திரன்வாசல்
கட்டியக்காரகேளாய் கவுசிகவிசுவாமித்திரன்
திட்டமாய்நிகழ்த்துகின்ற திவ்யதானங்கள்வாங்கப்
போட்டெனவந்தேனென்று பூபதிக்குரைத்திடாயே ௧௧

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரமகா நீதிநெறியோடே சத்யதர்மந்தப்பாமல் ராச்யபரிபாலனம்பண்ணிவருகிற அரிச்சந்திரமகாராசன்சமுகத்தில்நடக்கப்பட்ட நித்யதானம்வாங்கிக்கொள்ளவேண்டி தேவலோகத்திலேயிருந்து விஸ்வாமித்திரமகாரிஷியானவர்வந்திருக்கிறாரென்று மகாசந்தோஷத்துடனே உங்கள்மகாராசாவுக்குச்சொல்லிவாரும் பிள்ளாய்.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேசொல்லிவருகிறேனையா சுவாமி.

கட்டியக்காரன் மகாராஜாவுக்குச்சொல்-விருத்தம்

அல்லினன்மலரின்மாலை அணிந்திடுமரசேவுந்தன்
நல்லியல்முழக்கங்கேட்டு நற்றவவிசுவாமித்திரர்
சொல்லியவாசகந்தன்னிற் சுகமுடன்வந்தாரையா
புல்லிபிக்குரைத்தேனிந்தன் பூபனேசரணமையா ௧௨

(வ-ம்) அகோராசாதிராச ராசமார்த்தாண்டா கோடிசூரியப்பிரகாசாணஞ்சரணமையா சுவாமிநம்முடைய அரண்மனையிலே ந

டக்கப்பட்ட நித்தியதான மகிமையைக்கேட்டு தேவலோகத்திலே யிருந்து விசுவாமித்திரமகாமுனீசுவரர்வந்திருக்கிற சமாசாரத்தை சமுகத்தில்தெரியப்படுத்த அருள்புரிந்தார்மகாராசனே

சந்திரமதி-கொலுவுக்குவருதல்-விருத்தம்.

நித்தியமகிமைபூண்ட நெடியமாதவத்தோர்தம்மை
பத்தியாய்ப்பூசைசெய்து பதமலர்பணிந்துபோற்றி
நித்தியதானஞ்செய்யும் நீதிசேரிராஜன்றேவி
சத்தியந்தவறாமங்கைசந்திரமதிவந்தாளே, ம்ஊ

(வ-ம்) நிரந்தரமான மகத்வமுள்ள அருந்தவத்தோர்களை பயபக்திவிசுவாசத்துடனே பாதபூசைசெய்து தொழுதுபோற்றிநித்தியதானதர்மங்கள்செய்கின்ற நீதிநெறிமிகுத்த அரிச்சந்திரமகாராசன்றனது தர்மபத்தினியை சபைக்கு அழைத்துவரும்படி ஆக்யாபிக்கசத்யதர்மபரிபாலகியான சந்திரமதியம்மாள் சபைக்கு வருதல் காண்க,

எ-தரு-இ-ய்-காம்போதி-ஆதிதாளம்-பல்லவி

வந்தனள்அரிச்சந்திரன்-வாழ்வுமிகுமனையாள் வந்தனள்

அநுபல்லவி

வந்தனள்சந்திரத யேந்திரன்தவத்தினள்
சந்திரமதியெனும் சகலசற்குணத்தினள்-வந்த

சரணங்கள்

க, கொண்டல்நிகர்கூந்தலாள் கூறுந்திங்கணுதலாள்
கெண்டைநிகர்விழியாள் கிளர்புருவச்சிலையாள்
வண்டுமொய்க்குந்திலத மலர்போன்றநாசியாள்
கண்டுமொழிபகர்ந்து களிக்குஞ்செங்கனிவாயாள்-வந்த

உ, சங்குநிகர்கழுத்தாள் தழைத்திலகும்புயத்தாள்
செங்கமலக்கரத்தாள் சிறந்தகொங்கைக்குடத்தாள்
பங்கேருகவுந்தியாள் பளீரெனுமின்னிடையாள்
செங்கதலித்துடையாள் செய்யபொன்னிணையடியாள்-வ

ந, செண்பகமலரொளிச் சிவந்திலகும்மேனியாள்
பண்புயர்ந்திடுங்கற்பிற் பகருமருந்ததியாள்
தண்பயிலுமொழியிற் நாரணிமாதிணையாள்
வெண்மதிமுகத்தினள் மிகப்பெருந்தவத்தினள்-வந்த

சந்திரமதிசொல்-வஞ்சிவிருத்தம்.

திருவருள்படைத்த-திருசபைக்கெனை
யொருக்கமாயழைத்த-பெருமையேதருள்வீர். ம்ச

(வ-ம்) அகோவாரும் எனது பூர்வஜென்மதபோபலத்தின்மகிமையினு லே அழைத்தருளிய பிராணநாயகனே என்னைத்தமது சமுகத்துக் கழைப்பித்த காரிய மென்னவென்று திருவுளம்பற்றவேணும் மகாராஜனே,

அரிச்சந்திரமகாராசன்சொல்-விருத்தம்,

சந்திரமதியேகேளாய் சாற்றுகன்மொழியொன்றுண்டு
இந்திரன்முதலோர்போற்று மிபல்புளகாதிமைந்தன்
மந்திரமுறையறிந்த மாதவவிசுவாமித்திரன்
சுந்திரப்பதங்கள்போற்றிச் சுகிர்தமாயழைப்போம்வாராய்

(வ-ம்) அகோவாரும்பெண்ணே பிராணநாயகி நான் மகாநன்மையாக ஒருவார்த்தைசொல்லுகிறேன் இந்திராதியர்களும் போற்றப்பட்ட காதிராஜன்மைந்தனுனவிசுவாமித்திரமகாமுனிசுவரர் நமது ஆசாரவாசலிலே வந்திருக்கிருராம் அவருடைய பாதசேர்வை பண்ணி அரண்மனைக்கு அழைத்துவருவோம் வாரும்பெண்ணே பிராணநாயகி,

சந்திரமதிசொல்-வசனம்.

அப்படியே மகாபாக்கியம்-பிராணநாதனே

அ-டுபதை-இ-ம் - நீலாம்புரி - ஜம்பைதாளம்,

கண்ணிகள்,

௧, தேவருலகோர்கள்போற்றுந் திவ்வியமுனிநாதாசரணம்
மூவாருள்பெற்றுவந்தமுனிவனேசரணமையா

௨, வானேர்கள்தினம்வணங்கும் வன்மைமிகுபாதாசரணம்
தேனேர்கள்தினம்பூசிக்கும்திருவருளேசரணமையா

௩, மித்திரபேதமற்றவிசுவாமித்திரமுனிநாதாசரணம்
சித்திரங்கள்கற்றுணர்ந்த சேவடிசரணமையா

௪, தருணத்திலெங்தன்றனைத்தக்கவே கற்காத்தவனேசரணம்
கருணையில்மிகுத்தராஜ காதிசுதனேசரணமையா

பொது - வசனம்.

இந்தப்பிரகாரமாய் பிரார்த்தித்து அர்க்கியபாத்யாதியளித்து குசலப்பிரசனைகள் செய்வதுகாண்க,

இராசனும்-முனிவனும்சொல்-விருத்தம்,

வந்ததோர்காரியங்கள் வாமுடனெமக்குரைத்தால்
சிந்தையில்மகிழ்ந்தன்னீர்மை சீக்கிரம்நடத்துவோமே,

(வ-ம்) தேவரீரிவ்விடத்துக்குவந்தகாரியமென்னமோ அதைஅடியார்களுக்கு அருளிச்செய்தால் அப்படியே நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறோம் முனீசுவரரே,

இதுவுமது

அந்தமாயாகஞ்செய்ய அரும்பொருளனேகக்கோடி
தந்தகமகிழ்வாயாகிற்றரணியிற்புகழுண்டாமே, மனே

(வ-ம்) தேவயாகஞ் செய்யும்பொருட்டு அனேகப்பொருள் வேண்டிவந்தோம் தந்துமகிழ்விப்பாயாகில்பூலோகத்திலே எந்நா ளும் கீர்த்தியடைவாய் மகாராசனே,

இதுவுமது

தேகமும்நிலைமையுண்டோ திரவியமிருந்தென்செய்ய
யூகமாய்த்தொகையுரைத்தா லொப்புடன்றருவோர்ப்பேன்

(வ-ம் மனுஷியதேகம் அநித்தியமானபடியினால் அனேகமான திரவியங்களிருந்தும் என்னகாரியத்திற்குதவியாகும் இவ்வளவெ ன்ற ஒருதொகைசொன்னால்மனப்பூர்வகமாய்த்தாராவார்த்துக்கொ டுக்கிறேன்தபோநிதியே

விருத்தம்

நாகமாயானையேறித் தனிக்கவணெறிந்ததூரம்
மோகமாய்ப்பொன்னளிந்தால்முழுதினுங்கைக்கொள்வேனே

(வ-ம்) அதிகபுஜபல பராக்கிரமசாலியான ஒருமனிதன் மதயா னையின்மேனிறுநின்று மாணிக்கக்கல் வைத்தெறிந்த கவண்டின்வி சைபோனவுயர்ந்த பொருட்களைக்குவித்துக்கொடுத்தால்மற் றத்துகைக்குமக்குறைய இன்னமெங்கெயாவது சம்பாதித்துக் கொள்ளுவேன்மகாராசனே

இராசன்சொல்-சுலோகம்.

சத்வாரோவித்தயாத்ர தர்மாத்நின்றுபதஷ்கரா
ஜேயஷ்டபுத்ராவமானேன் காயக்கோப்யந்திசோதரா

(வ-ம்) அகோகேளும் முனிசிரேஷ்டரே பூலோகத்திலேஒருவர் சம்பாதித்தசொத்துகளுக்குதர்மன்-அக்கி-ராசன்-சோரன்-இவர்க ள்நாலுபேரும் தாயாதிகளாவார்கள் இவர்களில்பாவருக்கும்முன் னவனாகிய தர்மன்ஒருவனுக்கே சம்பாதித்தசொத்துகளை கொடுத் துவிட்டால் மற்றமூவரும்சந்தோஷிப்பார்கள் ஜேஷ்டபுத்திரனா கியதர்மனை அவமானம்பண்ணினால் மற்றவர்கள்கோபிஷ்டராய் தனங்களையபகரித்துக்கொள்வார்கள் ஆனதால் அடியேன்சம்பாதி த்தபொருட்களில்மிஞ்சினதுமாத்திரம்பெரியோர்களுக்குதவியாக த்தருகிறேன் கைக்கொண்டருளும் மகாத்துமரே.

மாமுனிவர்சொல்-விருத்தம்

மன்னவாபொருட்களெல்லா மாதவனென்னுதாகச்
சொன்னவுன்பொக்கிஷத்துட் சகிர்தமாய்வைப்பாய்மன்னு
லென்னகமகிழ்ந்துவந்துன் னிடத்திட்டபொருட்களியாவும்
பின்னபேதகமகற்றிப் பிரியமுடன்கைகொள்வேனே

(வ-ம்) அகோவாராய் அரிச்சந்திரமகாராசனே நீ- தந்தபொருள்களியாவு மென்னுதாக உன்னுடைய பொக்கிஷத்திற்றானே வைத்துவைத்தால் நான்யாகஞ்செய்ய யந்தனப்படுகிற அன்றையத்தினம்வந்துவாங்கிக்கொள்ளுகிறேன துவரையி லுன்னடைக்கலமாய் வைத்துவைப்பாய் மகாராசனே

இராசன்சொல்-விருத்தம்

பொக்கிஷத்தன்னிலிட்டபொருட்களிலணுவில்லாமல்
அக்குஷமானவுங்கட் கறுதியாயளித்தபின்னும்
கக்கிஷிஞ்செய்யலாமோ கபடமோமுனிவரன்யா
சிக்கெனாச்சிரமத்திற் சேர்த்திடிச்சுவிர்சந்தானே. உ௰

(வ-ம்) அகோவாருங்களையாசுவாமி விசுவாமித்திரமகாமுனீஸ்வரரே பொருட்களியாவையும் அணுவளவில்லாமல்முழுமையும்வாங்கிக்கொண்டு மறுபடியும் என்வசத்திலேயே வைத்துப் போனால்அதுராசாக்களுக்கு பீடைவந்துசம்பவிக்கும் ஆகையால் என்னை இம்சைபடுத்தாமலும் கபடவஞ்சகம் நடத்தாமலும்கைபற்றியபொருட்களியாவையும்எடுத்துக்கொண்டுஆச்சிரமத்திற்குப்போய்ச்சேரவேண்டும்மகாமுனிவரே

விசுவாமித்திரர்சொல்-வெண்பா

இத்தனைதனத்தையாரொருவனெடுத்தேகுவனே
புத்தியில்பிருத்தயோத்திபூபாலா-சத்யவரிச்
சந்திராநீகந்தபொரு ளத்தநாளில்வந்துகேட்பே
னந்தனதுபொக்கிஷத்தில் வை

(வ-ம்) அகோவாரும்மகராசனே இவ்வளவுதனங்களைநானொருவன்எப்படிச்சுமக்கப்படும்தான் யாகம்பண்ணுகிறநாளில் வந்து கைபற்றிக்கொள்ளுகிறேன் பத்திரப்படுத்திவையும்மகாராசனே.

இராசன்சொல்-வெண்பா

சுத்தமேமிகுத்ததனிடத்திலுமக்குற்றபொருள்
அந்தணேயுனைத்துவைத்தி ராண்டவனே-சித்தமதில்
பேதநினையாதுமதனா துவருடனேபொரு
போதனில்வந்தெடுத்துப் போம்

வ-ம், அகோவாரும் விசுவாமித்திரமுனீஸ்வரரே மிகுந்தசமுசாரியாகிய என்னிடத்திலேஉமக்குக்கொடுத்த தனமானபொருளைமறுபடியும் வைத்துபோட்டீர் ஆகிலும்உம்முடைய ஊழியக்காரரோடுவந்து மனப்பேதகமில்லாமல் அதிசீக்கிறத்தில்எடுத்துக்கொண்டுபோயருளவேணும் மகாமுனிவரே

பொதுசந்த-விருத்தம்

கேடுவிளைந்திடயாமுனியரசனைக்கேட்டபொருள்களெல்லாம்
வேடுமன்னுளினிற்றருகவென்றேதிவிரைந்தெழுந்தோடிநெடுங்
காடுளமிருகம்பரவைகளூர்வனகருதிநினைத்திட்டிலும்
சூடுபடத்தளுமாறுபோல்யாவுஞ்சூழ்த்தனவெங்களுமே

வ-ம், அகோகேளும்தர்மபுத்திராதிகளே இவ்விதமாய்க் கொடுமைவிளக்கவந்த கௌசிகமுனியானவர் யாகஞ் செய்யவேணுமென்றுகேட்டருளிய பொருட்களைக்கொடுத்த அரிச்சந்திரனிடத்திற்றேனைமறுபடியும் ஒப்பிவித்துநான்யாகஞ்செய்யத்தொடங்குகிறஅன்றையத்தினம்வந்து கைக்கொள்ளுகிறேனென்றெழுந்துவிரைவாகவோடிப்போய் வனாந்தரங்களிலுள்ளமிருகங்கள் பட்சிகள்-ஊர்வனங்கள்முதலான இன்னம்அனேகம்செந்துக்களை நினைத்து மந்திரோச்சாடனஞ்செய்தமாத்திரத்தில் அவைகளொவ்வொன்றும்அக்கினிபாதையுற்றுத்துள்ளித்திரிவதுபோல அடர்ந்துவருவதுகாண்க

௧-தரு-இ-ம் கல்யாணி-அடதாளம்-பல்லவி

வனமிருகங்களூர்வனப்பறவைகள்வந்துநிறைந்ததுவே

அநுபல்லவி.

மனந்தனில்முனி	நித்தபோதந்த
வினந்தனைக்கணித்	தெண்ணமுடிவில்ல-வனே

சரணங்கள்.

௧. பார்வையிலேயிந்தப்	பாலொலாத்திப்பொதிப்
பாத்திடப்பாய்ந்திடும்	பரித்திரள்களனேகம்
பந்திபந்தியாகக்கார்	மேகமெழுந்ததுபோல்
பரிவாய்முடிகிவரும்	படர்யானைகளனேகம்
ஏர்வையானபிடி-	யானையின்கன்றுகள்
டீக்களித்துக்கொண்	டெழுந்துவருமநேகம்
எடுத்துவிழுங்கவரும்	வாயைப்பிளந்தெதிர்
எழும்பிவருஞ்சிங்க	மீன்றுவருமனேகம்

சேர்வையாகவருஞ் சிருத்தைப்புலிகளும்
சிரமயிர்சிலிர்த்தோடுஞ் சிங்கக்குட்டியனேகம்
சீரானமுகிற்கலைச் சினத்துமயிர்களை
சிலிர்த்தாடுங்காடிகள் சேரவருமனேகம்
கோர்வையாகவொற்றைக் கொம்புளபன்றிகள்
கொண்டானடித்துக் குதித்துவருமனேகம்
கேர்டேறிப்பாய்ந்திடுங் குரங்கினங்களனேகப்
(முடுகு) கோலமாகவே ஞாலமீதில்வி
சாலமானால் மூலபலமென (வனமி)

௨, அம்புபோலவொற்றைக் கொம்புளதந்திகள்
ஆத்ரமித்தேவக் தடைந்திடுவதனேகம்
அண்டம்புவன மிரண்டையும்பேதிக்கும்
அஷ்டதிக்கசம்போல்வெள் ளானைகளுமனேகம்
கும்புகும்பாய்வாலில்லாக் குரங்கினங்களும்
குவலயத்தைத்துளைக்குங் கொடும்வராகமனேகம்
கூக்குரலிடுமோனாய்க் குட்டிகளுமனேகம்
குளரியுளரிச்சேருங் குழிநரிகளனேகம்
தெம்புடன்வருஞ்சென்னாய்க் கும்புகளுமனேகம்
திரண்டுவந்தெழும்கீர்நாய் திரள்களிலுமனேகம்
தேய்பிறைபோற்கூனித் தேகாரம்புகள்
தீய்ந்துடல்நாரிய தேவாங்குகளனேகம்
கொம்புகளிற்கிலைத்துக் கூடுமான்களனேகம்
கோடைக்கானலைகீராய்க் குறிக்குங்கலைகளனேகம்
கொண்டானடித்திடுங் காண்டாமிருகமனேகம்
கொண்டவிளத்தைத்தாவுங்கொடும்யாளிகளனேகம்
(முடு) கொடுமையாயித்த நெடும்புலியதனித்
கொடுமைசெய்யும்முனிக் கடுமையாகவே (வனமி)

௩, செங்கதிரைக்கண்டு சிறகைவிரித்தாடுஞ்
செய்யமயிலினங்கள் சேர்ந்துவருமனேகம்
செப்புமொழிகளில் அமுதம்பொழிந்திடச்
சிறக்கக்குலாவிப செழுங்கிள்ளைகளனேகம்
பங்கயில்லாமங்கைக் கொங்கைகட்கிணையான
பண்புமிகுஞ்சக்ர வாகப்புட்களனேகம்
பாதக்கூகைக்கோட்டான் பாவிவருமாந்தைகள்
பசிபருபிலினங்கள் பறந்துவருமனேகம்

புங்கவராசாளிகள் புண்டரீகங்களும்
புசித்திடுமன்னங்கள் புகழ்க்கருடனனேகம்
புனற்றனிலுலாவிய காடைகவுதாரிகள்
புகைக்களைப்புசித்திடும் புள்ளினங்களனேகம்
மக்களைமொழிகூறும் நாகணவாய்ப்புட்கள்
மதிட்களெல்லாங்கொத்தும் மரங்கொத்திகளனேகம்
மாடப்புறாச்சேவல் நாரைவல்லூர்காகம்
மதிமிகுதூக்கணாங் மகிழ்ந்துவருமனேகம்
(முடி) மாயஞ்செய்திடு மாமுனீந்தரனு
பயஞ்செலுத்தி கேயமறியாத (வனமிரு)

ச. கொட்டியவாயில் விடக்கக்குந்தேட்களும்
கொடியபிண்டம்புலிக் கூட்டங்களுமநேகம்
கொடிவேலமுட்டிபற்சடைக் காலுளசெய்யான்
கொள்ளிகட்டுவாய்க்காலில் குலங்களிலுமனேகம்
தட்டியபோதாயிர் தள்ளாடவீழ்ந்திடும்
தறைவாழ்புடையான்குத்தி தவிழ்ந்துவருமனேகம்
தாறுகுலக்குஞ்சீரச் சலமண்டலியனேகம்
தவளப்பவழக்காலி தரையிலூறுமனேகம்
கிட்டியசிவனைப் பொட்டெனவேகொத்திக்
கிளைக்குக்கிளைதாவும் வளைப்பாம்புகளனேகம்
கிரிகருடனைச் சிறியுயர்த்திடும்
கிலிகொண்டசர்ப்பங்கள் கிளம்பிவருமனேகம்
கெட்டியவரண்மீது செகமுஞ்சகையும்போல
செடியவுடுப்புகள் நெருங்கிவருமனேகம்
கினைத்தபடிமுடிக்கக் கருதியகவுசிகன்
நெஞ்சில்கினைந்திடு வஞ்சகமறிந்திலா
(முடி) நிறைந்தகரிமுதற் பறந்தகருடனும்
நிறைந்தவெறும்பையும் முறைந்தமுனிக்கெதிர் (வன)

பொது-விருத்தம்.

அனந்தக்கோடிப் பரவையூர்வனவிலங்
கினங்களனைத்தின் றேனைவணங்குவோர்
தினந்தனிற்சென்றபோத்தி டையழிக்கவென்
றெனக்கேதலடங்க ளென்றதுகூறுவாம்

(வ-ம்) அகோகேளுஞ் சபையோர்களேஇவ்விதமாய்வந்தகோடா கோடிப்பறவைகளும் ஊர்வனங்களும் மிருகங்களும் விசுவாமித்திரமுனிவனையடிவணங்கி நின்றவைகளைப்பார்த்துத் தூமகேதுவின் பே

திலக்கியாஸ்திரம் விழுந்தாற்போற் கோபித்து இந்த ஒருதினத்துக்குள்ளே அயோத்தியாபுரிபட்டணத்தைச்சேர்த்தவெங்களை யழித்துவிடும்படி உத்திரவுகொடுத்து விசுவாமித்திர மகாமுனிவர் ஆச்ரமஞ்சேர்த்தபிறகு அயோத்தியாபுரியை நோக்கிவந்த ஜெந்துக்கள் நடப்பிவிக்கிற விதங்காண்க

௰ ௩௫-இ-ம்-வராளி-அடதாளம்.

பல்லவி.

அழிக்கத்துணிந்ததுகாண்-அயோத்தியை
அழிக்கத்துணிந்ததுகாண்

அநுபல்லவி.

அருக்கத்துணிந்தது அவனியிலெவைகளாயும்
பழிக்கஞ்சாமுனிவனால் பற்பலவுயிர்கூடி
பலித்தபலன்களைச் சொலித்துநேருங்
நலித்தவேளையிற் கெலித்தமென்வே (அழி)

சரணங்கள்

௧. மல்லிகைமுல்லைகுருந்தம் புன்னைகளும்
மந்தாரைசெந் தாழையும்-தாறுவலித்த
நெல்லிப்பூவல்லிற்றும்பைத் தாமரையும்
திறைந்தவில்வம் குருக்கம்-மிகமணத்த
வல்லிமிகுஞ்சம்பங்கியும் செம்பாந்தையும்
வளர்பலா சம்பூகமும்-பூவிற்செழித்த
சல்லிவேர்க்களைக்கூடக் கெல்லிக்கெல்லியுழுது
சைலங்கவிழ்ந்தாப்போற் சாகேதபுரமெல்லாம்
வெலவெலவென்றுவிழச் சலசலவென்றுதாழ
கலகலவென்றதிறப் பொலபொலவென்றுதிர (அழிக்க)

௨. முழக்குநன்னீர்சுரக்கும் கூபங்களும்
முத்தின்றொடு மடுக்களும்-நவநிதியும
வழங்கும்படுகைகளும் வண்டர்ப்படியும்
வதித்தரைகளிற் செழிக்கும்-பதம்பதியும்
தழைக்குவெண்ணெந் சேனைலும்-வளர்ந்தோங்கிப
தாமரைத்தடாகங்களும் மிதிமிதியும்
கிழங்குகளையுங்கீழே கிளைத்தகநற்றூர்களையும்
கெல்லியனுவளவாய் புல்லிப்புணைப்புணையாய்
பூவில்மானிட சாலிதடித்திடக்
கூவித்தெருவெங்குந் தாவித்தாவிக்கொண் (டழிக்க)

௩. சன்னைகளையோர்க்கில்லாச் சனங்களுந்
சந்ததிசெல் தொதுங்கச்சின்னஞ்சிறு

பிள்ளைக்குட்டிகள்பதைக்க மூலைமுடுக்கிற்
பிரிந்தவர்களை யொதுக்க-விதம்விதமாய்
வெள்ளைநிசான்பிடிக்கி வீதிகள்தோறு
வேட்டைக்காரர்கள் துடிக்க-மிகப்படிக்க
கொள்ளையோகொள்ளையெனக்கூறி மாந்தர்நொடிக்க
கோசிகன்மாயவ ராசமூவையருக்க
கூடகோபுர மாடமாளிகை
யாடல்புரிந்திடும் நாடகசாலையும் அழிக்க

வஞ்சனைகாண்டம்- முற்றுப்பெற்றது,

ஆ-விருத்தம்-௨௨-விருத்தார்த்தம்.௨,

வெண்பா-௨-கூ-சுலோகம்-க- தரு-௰-

ஐந்தாவது,

பொது-விருத்தம்,

இகல்விளக்குமாமுனிவ னியற்கையாலே
இவ்வையையயோத்தியுள் ளோர்க்கிடுக்கணெய்த
பகலிரவுமெண்ணிறந்த மிருகங்களோடும்
பறவைகளுங் கலங்குருபிப்பார்றிக்கச்
சகலரும்போய்முறையிடு மச்சமையத்தனில்
சதுரங்கசேனைகளும் சமுகஞ்சூழப்
புகலரியசத்ய அரிச்சந்ரமன்னன்
புறப்பட்டான் வேட்டைக்குவரப்பட்டானே

(வ-ம்) இந்தப்பிரகாரமாகப் பகையைக்கொண்ட விசுவாமித்திரமுனி வராலே அயோத்தியாபுரியிலுள்ள எறும்பு கடையானை முதலாகிய எண்பத்துநான்குலட்சம் ஜீவராசிகளுக்கும் வந்த இம்சையைப்பொறுக்கமாட்டாமல்தலைவிரிகோலமாய் கதிகலங்கி மதிமயங்கி அறிவழிந்து திக்குதிசை தெரியாமல் தம்பியோடிப்போனதுகள் போக மற்ற பஞ்சவுயிரையுமுடைய மானிடர்கள் கூட்டங்கூடி அரிச்சந்திர மகாராசனிடத்

த்திலே முறையிடும்போதுஊரார்யாவரும் பரிகாசப்படுவதுகண்டு அ
ரிச்சந்திரமகாராசன் வேட்டைக்குவருகிறவிதங்காண்

௧-தரு-இ-ம்-துவாசந்தி-அடதாளம்

பல்லவி.

சந்திரன்வேட்டைக்குவாரார்-சுந்தரமாயரிச்
சந்திரன்வேட்டைக்குவாரார்

அநுபல்லவி,

தந்திரமாய்ச்சாகே   தபுரந்தன்னையாளும்
தளகர்த்தர்க   ளுளமொற்றிட
வளமுற்றிவர்   சளமற்றிடவே(சந்தி)

சரணங்கள்,

௧, தன்னிகரில்லாப்   படைத்தலைவர்சூழ
தரியலர்கள்தந்தந்   தலைதாழ
உன்னியகருமத்   துடன்சாழப்பூவி
லொத்துமையாயெவ்வுயி   ரும்வாழ
கன்னியன்றுதந்த   கனகத்தேர்மீதேறி
கதிர்கொடிகள்   நதிர்கொண்டிலங்
கெதிர்கொண்டாப்போற்   சதிர்கொண்டரிச்(சந்)

௨, சுட்டித்தடியுடன்   சிலவேடர் கையிற்
சுரிகையிற்சுழட்டிய   சிலவேடர்
ஒட்டியகவசத்தாற்   சிலவேடர்-மிக
ஒலிமுழவேவினர்   சிலவேடர்
கட்டியதுணி   நிறைந்தசாத்தொடு
சனகூர்மையச   முனையம்புகள்
தனைக்கண்டுசொல்   வினைசெய்திட(சந்தி)

௩, பாசக்கயிர்கண்ணிகள்   சங்கிலிகள்-கையிற்
பற்றியகேடயம்   வல்லயங்கள்
தூபசிற்கெடுத்திடும்   விற்கணைகள்சேர்க்கும்
தூரிசின்னமல்லரி   சல்லரிகள்
வீச்க்கொடியிடைபோல்   வெடிகளதிர்ந்திட
வீரன்கரு   மாரன்கண
குரவை   மாரன்அரிச்   (சந்தி)

௪, மந்திரிப்பிரதானி   மாரகள்முன்னும்-சில
மண்டலந்தனையாளு   மன்னர்பின்னும்
சந்திரமதிசுதன்   லோகிதனும்(மருங்கிற்
சாமரைவீசிவரும்   தாதியரும்

சுந்தரப்புலவர்கள் சூழ்ந்துலாவருகில்
சுரமோற்றவ் சுரர்துற்றது
சுரர்போற்றது தாரக்கேற்றரிச்சந்தி

பொதுவிருத்தம்,

இறைகொடுத்திடுங்குடிகளும் படைகளுமெழுக
மறைபுகழ்ந்திடுமன்னனும் மாரியைத்தொழுக
அறைநெடும்பறையதிர்ச்சி யூடடவியிலெழுக
முறைகொடுத்திடுவேந்தனும் வேடரும்முனைந்தார், உ

(வ-ம்) அதோ கேளுஞ் சபையோர்களே ராஜாங்கத்துக்குப் பகுதிக்கட்டப்பட்ட குடியாளரும் படைத்தலைவர்களும் அரிச்சந்திரமகாராசாவினோடு காளிதேவியைத்தொழுது முப்பத்திரண்டு வாத்தியமும் முழங்க வேட்டையாடப்பட்ட பிண்டி-பாலம்-சூலம்-வாள்-கத்தி-கேடயங்கள் துப்பாக்கிகள் பிஸ்தோல்களோடு அடவிகள்தோறுஞ் சென்று வேடர்களும் மன்னர் மன்னவனுன அரிச்சந்திர மகாராசனும் வேட்டையாடிவருதல் காண்க,

உ-தரு-இ-ம்-சங்கராபரணம்-இங்கிலீஷ்மெட்டு-ஏகதாளம்.

பல்லவி,

வேட்டையாடினரிச்சந்திரன்-வேட்டையாடினர்-தங்கள்
நாட்டைச்சூழ்ந்திட்ட-காட்டைக்கலைத்து (வே)

அநுபல்லவி,

கோட்டைக்கொத்தள மெங்கும்பரவிய
சூழ்குயாளிசிங் கம்புலிப்பானைகள்
சாட்டைப்பம்பரம் போற்கழறுங்கே
சரிகவரியோரிசென்றாய் மான்களை (வேட்)

சரணங்கள்.

க, மல்யுத்தங்கள் வல்லவீரர்கள்
மன்னனடிதொழ மிக
மாயஞ்செய்யவு பாயங்கற்றறிந்த
மண்டலந்தனிற்றுண்டரீகமாய் மாந்தர்சூழ்ந்தெழ
மல்லரிகொம்புகள் தாளம்மேளங்கள்
மலிந்துமுழங்கவே அந்த
மாதவமுனி போதத்தால்வந்த
மாயமருகமூர்வனப்பறவைகள் மதிகலங்கவே
சல்லரிகள்கா களங்கள்பம்பைகள்
சத்தமலியவே இந்தச்
சகத்திலேமிகத் தகத்தைப்பெற்றவர்
சன்னையாலையுமகற்றியா ளெச்சனங்கள்சலிக்கவே
வில்லம்பெடுக்க வல்லவீரர்கள்
விளங்கிடவே மிக

வேகமாய்மன — பூசுக்கொண்டுநல்
வேந்தர்களணியணியாய்ச் — சூழ்ந்திட்டுவெடிகள்தீர்க்கவே
கல்லல்செய்திடு — விலக்கினங்களைக்
கலைத்துக்குலைத்து — அலைத்துவுலைத்து
கண்ணிகள்வைத்ததில் — எண்ணுமுயிர்களைக்
கவர்ந்துகடுக்கிக் — கலங்கமுடுக்கி (வேட்டை

வேல்கள்பட்டதிற் — கோடாகோடிகள்
வீழ்ந்துமாய்ந்தவே — இக்க
விண்ணுமண்ணுள்ளோர் — கண்ணின்காட்சியாய்
வேகமாய்மனம்வெருண்டு — அருண்டுவெதும்பிச்சாய்ந்தவே
கோல்கள்பட்டதிற் — கோடாகோடிகள்
குன்றிப்பேர்ந்தவே — நிலை
குலைந்துவீறிட்டு — மலைந்துபோரிட்டு
குணில்கள்பட்டதிற் கோடாகோடிகள் குறித்துச்சோர்ந்தவே
வால்களறுந்து — சிரங்கள்துணிந்து
வையகந்தனிலே — மிக
வாழ்வுபெறுகத் — தாழ்வுசுறுக
வந்தவேடர்களவ்விலங்களை — வளைக்கும்போதினிலே
கால்கள்பட்டொரு — கோடாகோடிகள்
கலைந்தேவோடின — அங்கு
கால்தூதர்போற் — சாலவேடர்கள்
கத்தியால்வெட்டதத்தி முண்டங்கள்களத்திற்கூடினவே
பாற்பழம்புசித் — திடுவார்மனம்போற்
பாரினைப்பாவித் — தாளபவர்யாவரும்
பத்திபத்தியாய் — நத்திவந்திட
எத்திசையிலும் — வெற்றிவீரர்கூடி (வேட்

துடைகளற்றிட்த் — தொப்பைகளற்றிடத்
தொங்கல்களற்றதுவே — சில
தோள்களற்றிடக் — தாள்களற்றிடத்
துணித்துவீழ்ந்திடும் விலாவெலும்பொடு தோள்களுமற்றதுவே
இடைகளன்றிடத் — தூடைகளன்றிட
வயிற்றுங்கயற்றதுவே — சில
வேக்கழுத்திட — யாக்கையற்றிட
ஈரல்களற்றிட மூளைகளற்றிட — விசைகளற்றதுவே
கடைகளற்றிட — நரம்புகளற்றிட
கல்லுயிரற்றதுவே — சில

நாடியற்றிட ஆவிசுற்றிட
நாட்டமற்றிட வாட்டமுற்றிட நலிவுமுற்றதுவே
கடையுகத்திலக் கடலைப்போலாத்தன்
ககனமுற்றதுவே வளர்
கானகத்தையும் வானகத்தையும்
கண்டாட்டியுட் கொண்டபட்சிகள் காயமுற்றதுவே
படைத்தலைவரும் பாருளோர்களும்
பற்பலவீரரும் பரிந்தவேடரும்
தடைசெய்தேவிலங்கி னங்கள்யாவையும்
தகத்திமிடையூ றகற்றிசெகத்தில் (வேட்டை)

பொதுவிருத்தம்.

இங்ஙவாறெழில்வேட்டையாடியெழுந்தவீரரும்மாந்தரும்
இன்பமாயோரிடத்திற்சேர்ந்தினிதிருந்தகாலையிற்கோசிகன்
அங்கமாய்விடுத்திட்டசெந்துக்களற்றவைநீங்கமற்றவை
அருட்செய்மாமுனிபருக்கடைந்தபின்னதிசயித்தவ்வனத்திடை
வந்தமானிடர்வாழுமன்னவர் வலியவேடுவரிவர்களில்
வள்ளலுட்செயும்பெண்டிர்மந்திரிவாழ்கபற்றெவரையும்
கொந்தருத்திடவேமனுக்கிசைகொடுத்துவாவென்றோர்பன்றியைக்
கோசிகன்மாய்கையால் விடுத்திடக்கொடுமைமெத்தவிளைந்ததே

(வ-ம்) அகோகேளும் சபையோர்களே இந்தவிதமாய்வேட்டை யாடியலுத்த ராசராசாக்கள்முதலான பரிவாரசேனை சைனியங்களும் ஓரிடத்திற்கூடி இளைப்பாறி உண்டுதாம்பூலமருந்திக்கொண்டுமகாவி லேசத்தோடு இன்னமென்ன வருமோவென்று உள்ளத்திலயர்ச்சி கொண்டிருக்கையில் விசுவாமித்திரமகாமுனிவன் மாயத்தினாலே அநு ப்பினசெந்துக்களிலே வதைப்பட்டது போக மற்றவைகள் வந்துமாமு னிவர்பாதங்களை வணங்கக்கண்டதிசயித்துமிகுந்த தாபத்தினால்மிதிப் பட்ட சர்ப்பம்போலவெகுண்டு இரு விழிகளும் நெருப்புப்பறக்கப்பா ர்த்தமாத்திரத்தில் புருவத்திலிருந்து ஒருகோபினோடு ஒரு பன்றி யைச் சிருஷ்டித்து அரிச்சந்திரமகாராசனையும் அவன்பெண்சாதியின் னை மந்திரிமுதலானவர்களைத் தவிரமற்றவர்களைக்குடும்பத்தோடழித் துவாவென்று ஆக்ஞாபித்தனுப்ப ஆரண்யத்திலே வந்திருந்த மானிட வர் யாவரையும்வந்து வளைத்துக்கொண்டுபோரிடுதல்காண்க,

௯-௪௫-இ-ம்-சௌராஷ்டகம்-ஏகதாளம்.

பல்லவி,

மானிடர்களுக்கும் மாயமாய்வந்தபன்றிக்கும் மலிந்ததேசண்டை-

அநுபல்லவி

வானிடத்திற்றேவர்கள் மலர்மாரி தூற்றவும்
வையகத்தினில்மாந்தர்கள் வள்ளலைப்போற்றவும் (மானி)

சரணங்கள்.

௧, கோசிகன்பதம்வணங்கிப்பேசியே அன்போடிணங்கிவந்து
கூடியிருந்த-வாசிகள்கரிகள்வன ராசிகளழிவுகண் டெழுந்து
நாசியிலெழுந்திடுமூச்சோலையிற் றிசையெல்லாம்நடுங்க நாலுபக்க
வீசியவாலின் சுழற்றிப்பேசிய மானிடர்களொடுங்க [மும்
ரோசியேவீரன்பிகப்பேசியேமுனையால் நிலமுட்டதாரைதாரையாய்
காசினிநீர்மேன்மிதக்கும் பாசிபோற்படர்ந்துதிரைகட்ட
மாசிலாமன்னன்சேனையாயோசனையினால்மனந்திகைக்கவினாங்கெழுந்
தூசியிதெனவெண்ணித் துடர்ந்துபடைகளெழ [து
வீசியமெய்பிலிர்ப்பில் வீரர்கள்வெருண்டழ (மானி)

௨, தலைகள்தெறித்தோர்சிலர் கால்கள்தெரித்தோர்சிலமாந்தர்
கையிற்பற்றியசிலைகளறுந்தோர்சிலர் வலைகளறுந்தோர்சிலமாந்தர்
குலைகளறுந்தோர்சிலர் குடல்களறுந்தோர் சிலமாந்தர் மூலைக்குமூலை
கலைகள்தெறித்தோர்சிலர் கண்கள்தெறித்தோர்சிலமாந்தர்
நிலைகள்குலைந்தோர்சிலர் முலைகளறுந்தோர்சிலமாந்தர்
மதிகலங்கி மலைமீதுங்குகைமீதும் மரங்களின்மீதுஞ்சிலமாந்தர்
அலைமீதுஞ்சிலைமீதும் அண்டமீதுமாகச்சிலமாந்த ரலறிக்கொண்டு
தலைவிரிகோலமாகித் தாரணிகாவலன்முன்னேகி
உலைமெழுகாயுருக ஊனீர்மெய்யிற்பெருக (மானி)

௩, சங்கமுஞ்சக்கரமுற்றசாமியும் வந்தெதிர்ப் பானோவென்னச் சண்ட
னோவலர்,எங்களுநேர்நிறைந்ததினியிம்மட்டின்மனம்பொறுப்பாவென்
ன, தங்கமன்னன்சேனைகளினங்கமீதுமீதிட்டோடும்ரத்தம் செக்கச்சிவ
க்க,செங்கடற்போலேதிரண்டு பொங்கமாய்ப் புரண்டுவருஞ்சத்தம்
சிங்கங்கள்மோகங்கள் கெற்சிதங்கள்மிகச் செய்வதுபோலார்க்க
ஓடும்வெள்ளத்தி லங்கமுங்கவந்தமுண்டமெங்களும்பாவிவரப்பார்
க்க,பங்கமுற்றமானிடர்கள் சங்கமகாசங்கமாகவோட
வானோர்களிக்கச் சங்கற்பஞ்செய்ததாரென்றுசகலவுலகும் நாட
செக்கதிர்குலேசனுளஞ்சிமையோர் முழுதும்வாட (மானி)

பொது-விருத்தம்.

பன்றியினைவெய்தகன்றோர் பக்கஞ்சென்று
பதுங்கியபின்பங்கமுற்ற பரிவினோர்கள்
குன்றியகற்சொன்மிகுத்த குரிசிலோன்பாற்
குனமுடன்கோயடிவணங்கிக் கூகூவென்னத்

கன்றினைக்கார்க்கும்பசுப்போற்கவலையுற்றுக்
கனகத்தேரேறியமர்க்களத்தில்வந்து
நின்றினியவில்லையுங்காணேற்றிவீரம்
சேரிட்டான்அரிச்சந்திரன்போரிட்டானே (௭)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் மாய்கையினால்வந்தபன்றியானது அமர்க்களத்தில்போரிட்டு சேரிட்டவர்களியாவரையும் தம்சம்பண்ணி யதுத்தப்போய் ஒருபுதரிலே பதுங்கி இளைப்பாறிக்கொண்டிருப்பதைக்கண்டு மிச்சம்மீதியாயிருந்த ஜெனங்கள்யாவரும் மனங்கலங்கிசத்தியஅரிச்சந்திரமகாராஜனைப்போற்றி யடிவணங்கி முறையிடும்போது தாயின்ற கன்றைத்தழுவிவரும் பசுக்களைப்போல மனக்கலவையுற்று போர்க்களத்தில்வந்து மலைமலையாய்க்குவிந்திருக்கிறபிரேதங்களையும் செங்கடல்போலே சிவந்தரத்தப்பிரவாகமும்பார்த்து பிரமித்து நின்னாசையிருக்கிறவில்லை காணேற்றிக்கொண்டு பொன்னின்தேரிலேறி பன்றியுடன்யுத்தஞ்செய்கிறவிதங்காண்க

௪-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-துருவதாளம்

பல்லவி,

பன்றியுடன் சண்டைசெய்தானே இதேதோமாய
பன்றியில்லை யென்றேவுந்தானே (சத்யரிச்சந்திரன்)

அநுபல்லவி

பன்றியுடன்சண்டைசெய்ய வன்றுதார்க்கைத்தந்தனர்
பரியபொற்றேர்மீதிலேறி பரிவுடன்விட்டானேசாரதி
பரந்துசண்டமாருதம்போற் பாய்ந்ததுமனோவேகம்போற்
பருதியின்தேர்மீதிற்செல்லைப் பரிகள்போலத்தத்தினிச்சைப்
பார்மலேயெலாஞ்சிதறக் கார்முகிலேழுங்கதறப்
பார்க்கும்வீரர்கள்பிரமிக்கப் பங்கமுற்றோராக்ரமிக்கப்
பாரினைச்சுமக்குஞ்சேடன் பதுங்கவைத்தகுடிகேடன்
பரிந்துவிட்டபன்றியெதிர்ப் பட்டுவாவிட்டகணைகள்
பாய்ந்தவே பன்றியின்மீது
தோய்ந்தவே ஞமியிற்மீது
சாய்ந்தவே வாய்ந்தகேன்றரிச்சந்திரன்(பன்றியுடன்)

சரணங்கள்

௧. செம்பொன்னிகர்த்தமெய்யும் செய்யகோவைக்கனிச்செய்யும்
செவ்விரத்தக்கண்களிரண்டும் செழுமுகம்பசுமைகொண்டும்

செவ்வியகண்டமும் வாளும்-அற்புதமான
திவ்வியதங்க ஞாலும்
செம்பவழவன்னமுன்னை சிங்கநீலவத்திரமென்ன
கொம்பனையகோடாமென்ன கொடிவீரசூரனென்
வயிறதினாற்பூமியை மறைக்கும். கொந்தாவிகிகர்
எயிற்றினாலுழுது குறைக்கும்
கையினாலுயிர்கவரும் காலினக்கூடத்தூடறும்
காசினியோர்தம்மைக்கொல்ல கோசிகனால்வந்தபொல்லாக்

காயமோ அவன்செய்தவு
மாயமோ அதையாங்கொல்ல
ஞாயமோ நேயமோவென்றரிச்சந்திரன் பன்றி

௨. அண்டத்துள்ளோர்களும்நல கண்டத்துள்ளோர்களுமேவ
அற்புதநிற்புதமாக அவதிகள்மிகுதியாக
ஆனைகளொட்டகங்குதிரை-சூழ்ந்துலந்திடும்
சேனையர்கள்கட்டவேதிரை

அணியில்வந்தவீரர்களும் ஆயுதங்கொள்சூரர்களும்
பிணியில்லொந்தவேடர்களும் பிரமைகொண்டநாடர்களும்
ஐயையோவென்றுதாவுவார்-பன்றிமேற்கணை
எய்யுங்களென்று கூவுவார்

ஆனபெருராட்சதர்போல் மானிடர்கைத்தலத்தில்வெஞ்
அம்புவிற்கணையெடுப்பார் அஸ்திரசஸ்திரம்தொடுப்பார்

சாயினார் வேட்டையிற்றுரி
சாயினார் ரெத்தவெள்ளமே
வாயினார் வாயினால்முடுக்கிப்பொல்லாப் பன்றி

௩. மாயவராகந்தனது பாயசாரம்சமூறாது
பண்டிகருப்படைகளைக் கண்டுமன்பின்றடைகளா
மாறிடமனவச்சம் கொண்டு-வடுக்கமுற்று
கூறிடும்விசேடங்கள் கண்டு

மாமுனிமையமனதிலெண்ணி மாய்க்கும்வகையேதென்றெண்ணி
மாரவைரியநினைப்பார் மதித்தசிவகம்போற்கணைப்பார்
மலைக்குகைக்கு ளோடிப்புகுமே-வேடர்கள்வைத்த
வலைக்குளகப்பட்டு தேய்குமே

மண்டை பூமிதிலுருளத் தொண்டையிற்கணைகள்செருளக்
கண்டவர்கள்கண்களிக்க அண்டர்கள்வாணிலொவிக்க

ஆடியே மெய்யும்முகமும்
வாடியே மாமுனியாதம் பன்றியுடன்
தேடியே ஓடிப்போகின்ற

புராண-விருத்தம்.

ஏனம்விழுந்தயர்மால்வரைகண்டதி லேறியிழிந்தகலப்
மோனதுடர்ந்தடிமீதுதொடர்ந்து புகாதவனத்திடைபுக்
கானளமுந்திருமேனியும் நுண்பொடியாடமடந்தையுடன்
ஆனவளந்திருவாசகெடும் புனல்வாவியணைந்தனனே. (ரு)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்வந்த மாயப்பன்றியைக் கண்டதுண்டமாகச்சேதித்து நானாவிதமான இம்சைசெய்யும்போது மலைமீதுமாயமாய்ப்பாய்ந்து ஓடிப்போனது கண்டு அதனடியையே தொடர்ந்து நுழையாதபுதர்களிலும் வெடித்தகுகைகளிலும் நுழைந்து கையுமெய்யும் அசந்துநெத்தியிற் குருவியர்வைபாய தேகமெல்லாம் பொடிப் பொடியாய்மெலிந்து நடந்துபோகிறபோது மகா அற்புதமான ஒரு திருவாசலுந்திருக்குளமுங்கண்டு தன்னுடையபரிவாரசேனாசமேதனாய் அங்கிருந்து இளப்பாறிப்போவோமென்று தங்கியவிதங்காண்க,

ரு-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

தடாகமொன்றிருக்கக் கண்டானே-அரிச்சந்திரன்
விடாய்கள்யாவுந் தீர்த்துக்கொண்டானே

அநுபல்லவி,

படாவலதிகள்பட்ட பற்பலர்களுக்கிட்ட
தொடாதினிநம்மையென்றெண்ணித் துய்யபராக்ரமம்பண்ணி-தடா

சரணங்கள்.

க. தாமரைமிகப் பெருகுமே-அதிற்சுகங்கள்
தாமரைபோதி யுருகுமே
சாமரைப்பாசி படருமே-அதைக்கோதவும்
சேமமாய்ப்புள்ளினந் தொடருமே
நாமறைப்பொருளறிந்த நற்றவரனேகர்கூடி
பாமரமகற்றுஞ்செபம் பண்ணிவருவதைநாடி (தடா)

உ. அன்னப்புள்ளினங்கள் நண்ணுமே-நாளங்கள்கோத
வன்னப்புள்ளினங்கள் எண்ணுமே
சின்னசிங்சிலிகள் சூழுமே-அத்துடன்பஞ்ச
வன்னக்கிளிகளும் வாழுமே
நன்மையமாய்ப்பேசிக்கொஞ்சி கூகணவாய்ப்புட்கூடுமே
பன்னகமுதனைமீன்கள் பாய்ந்தங்குவந்தாடுமே

௩. முத்திலஞ்சிப்பியும் மேயுமே-மிகுந்தன்னீரில்
ரத்திலக்குப்பையுந் தோயுமே

முத்தியகடற்மோற் காணுமே-கலிக்கிற்ருப்பாய்
பத்திபத்தியாகத் தோணுமே.
வெற்றிபெறுமன்னர்களும் புத்திமிகுமாந்தர்களும்
பெற்றபோதாமென்றெண்ணிசுத்த வீரர்மொத்துநண்ணிந்-து

பொது-விருத்தம்.

களைப்புடனிளைப்புக்கமழ்ந்திடப்பூமன்
கண்டநன்னீர்க்கரையுற்றான்
கபடவஞ்சகமிகுவுசிகர்தமது
கமலமென்பதந்தொழுதிறைஞ்சும்
இளைஞர்கள்சிலபேர்கெடுமிகுவன்னான்
கெம்பீரமாயுறைவிடம்போய்
இடைத்தவுன்னினமுஞ்சேனையுமிங்கு
கிடத்தொணுதெனமிகமுனிந்து
முளைப்பரும்வனத்தையழித்தரிச்சந்திரன்
முனிந்தனன்முனிவன்முன்னெனவம்
முனிவனுந்தனது மூச்சினால்இரண்டு
முதுமடந்தையர்களைப்படைத்து
விளைத்திடுமோகலாகிரியதனல்
வேந்தனைப்புணர்ந்திடாலது
விளங்குபூச்சக்கிரக்குடைதனைக்கவர்ந்து
வினாவினில்வருகவென்றிசைத்தான்.

(வ-ம்) அகோகேளும் சபையோர்களே இவ்விதமாயிருக்க இளைப்பினாலே வாடிவதங்கித் தடாகத்தருகிற்சேர்ந்து பர்ணசாலையில் மந்திரிமார்களும் பரிவாரகுடும்பத்தோடு அமர்ந்திருக்கும்போது விசுவாமித்திரர் சிஷ்யர்களிற்சிலபேர் இராசன் பர்ணசாலைக்குள் வந்து ராஜாவினிடத்தில் ஏஷ்த்தாவது பயமில்லாமல் நீயும் உன்சேனைகளும்வனத்தைவிட்டகன்றுபோமென்று முறுமுறுத்து முனிவனோடு இராசன்செய்யும் அமளியைச்சொல்லக்கேட்டு அம்முனிவனும் தனது மூச்சினாலேயிரண்டு பெண்களைச் சிருஷ்டித்து அரிச்சந்திரமகாராசனிடத்தில் உங்களுடைய ஆடல்பாடல்களால் அவனுடையமுகமலர்ச்சியுறச்செய்துபுத்தியைமறக்கடித்து மோகலாகிரி யுறச்செய்து மணம்புணர்ந்து வருவீர்கள் அல்லாவிட்டால் அவனுடைய பூச்சக்கிரக்குடையை யபகரித்துக்கொண்டு வாருங்களென்று அனுப்பிவிட்டபிற்பாடு இங்கு அரிச்சந்திரமகாராசன் சமுகத்தில் நடக்கிறவிதங்காண்க.

மந்திரிக்கு-இராசன் சொல்-விருத்தம்

அந்தியின் வேளையாச்சு தமைச்சனேயலரவர்க்கு
முந்தியேவிடைகொடுத்து முகமதுமலர்ந்தவுத்தன்
புந்தியின்மகிழ்ந்துநல்ல போசனமளிக்கச்செய்யில்
உந்தியிற்பசியைநீக்கி யுளமகிழ்ந்துறங்குவேனே.

(வ-ம்) அகோவாரும்மந்திரி சத்தியகீர்த்தி சந்தியாவந்தனகாலமாய் விட்டது அவரவர்களுக்கு அனுஷ்டானங்கள்முடித்துக்கொண்டு அனுப்புத்திர இளைப்பாறி சுகமாயிருக்கும்படிக்கு உத்திரவுகொடுத்தனுப்பி விட்டு பர்ணசாலைக்குள் சென்றுபோசனசவுபாயஞ்செய்வித்தால்நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு போசனஞ் செய்துசொற்ப நேரமாவது நித்திரைகொள்ளலாம் மந்திரி

மந்திரிசொல்-வசனம்,

அப்படியே மகாபாக்கியம் மகாராசனே

பொது-விருத்தம்,

மன்னனிவ்வாறுகூற மந்திரிசத்யகீர்த்தி
தன்னகமகிழ்ந்துட்சென்று சந்திரமதிக்குரைக்க
அன்னவர்பின்றுடர்ந்த யாவர்க்கும்உபசரித்து
பொன்னகர்மாநினைப்போல் போசனமளித்திட்டாளே. (அ)

(வ-ம்) இந்தப்பிரசாரமாய்ஆக்யாபித்தராசாவினுடையமனதுசந்தோஷிக்கும்படி எழுந்து போசனசாலைக்குட் சென்று சந்திரமதியி னிடத்திலே அதிக்ஷைபிடத் தம்முடன்கூடவந்தசகலசனசமுகத்துக்கும்ஒரே பந்தியாக உபசரித்து தேவகன்னியர் அமுதளிப்பதுபோலேபோஜனம்ரெடப்பிவித்கும்விதங்காண்க.

ஈ-தரு-இ-ம்-தர்பார்-அடதாளம்.

பல்லவி:

போஜனஞ்செய்வீர்பூபாலா-பிகரதுராஜர்துதிக்கும் ரவிகுலபாலா.

அநுபல்லவி,

வ்யாஜகருணாலவாலா-ராஜன்முதல்ஜோதிசம்-ஈயகுணசீலா

சரணங்கள்,

க, கன்னசிரகச்சம்பா
சட்டமதாகச்
சின்னப்பயற்றின்
சிரகக்காச்சிய

வன்னத்தி-லெகு
சமைத்திருக்குகின்ன
பருப்பும்-லெகு
சுர்பிசெய்யும் (போஜ)

அவரைக்காய்புடலங்காய் கறியும்-மிக
அருமையாய்வெண்டைக்காயது மோர்க்குழம்பும்
துவரையின்பருப்பு ரசமும்-பொடித்
தூவியபாவற்காய் துவட்டலுமாக (போ)
௩, அப்பளமதிரசம் சுகியன்-போளி
யாமவடைபேணி யகுபரிபூந்தி
முப்பழம்சர்க்கரைப் பாகும்-நல்ல
மோதகம்பாயசம் முதிர்ந்தபாலுடனே (போ)
௪, மாடப்புறவி னிறைச்சி-மகிழ்
மானிலாக்காடைபுள் மானினிறைச்சி
கூடக்குயிலி னிறைச்சி-மிக்க
கொக்கரித்தேவாழும் கோழியினிறைச்சி (போ)

பொது-விருத்தம்

அறுசுவையுடனே போசனமுண்டு
அனைவர்க்கும்வெகுமதிகையமர்த்தி
வெருட்சிகொண்டமர்க்கவிரரைத்தேற்றி
விளங்குதாம்பூலங்களீந்து
மருட்சிகொள்மாரன்சிலையெனும்புருவ
மங்கைசந்திரமதியுடனே
தருவினையொத்தகரத்தரிச்சந்திரன்
தன்பள்ளியறையமர்ந்தனனே.

வசனம்

பஞ்சபட்சபாயசங்களுடனே போஜனம்பண்ணின பிற்பாடு அவரவர்களுக்குத்தகுந்தவிடுதியமர்த்தி யாவருந்திருந்தயாவர்க்குந் தகிரியஞ் சொல்லி தாம்பூலமுங் கொடுத்து அனுப்பிவிட்டு தேவதேவர்களுடைய தபசையும் அழிக்கப்பட்ட மன்மதனுடைய கரும்புவில்லுக் கிணையான புருவத்தையுடைய சந்திரமதியுடனே பள்ளியறைசேர்ந்து நித்திரை செய்கிறவிதங்காண்க.

எ- தரு-இ-ம்-பியாகடை-அடதாளசாப்பு,

பல்லவி,

நித்திரைசெய்தானே-அரிச்சந்திரன்-நித்திரை செய்தானே.

அநுபல்லவி,

நித்திரைசெய்தானே நிருபன்திரிசங்குவின்
புத்திரனுகிய சத்தியஅரிச்சந்திரன் (நித்தி)

சரணங்கள்,

௧, எண்டிசையுமுலாவிக் கண்டமிருகங்களைத்
தண்டித்தலுத்தமு தண்டவரிச்சந்திரன் (நித்தி)

உ, வண்டணிகுழலினள் வளர்காமத்துயராற்றக்
கொண்டகோலமழியாக் கோமானரிச்சந்திரன் (நீ.
ங. பஞ்சணைமெத்தைமேல் வஞ்சியர்தாலாட்ட
சஞ்சிகமதியுடன் கொஞ்சியரிச்சந்திரன் (நித்தி)

பொது- விருத்தம்,

அரிவையுமாசன்றனும் அரும்பினல்லமளிமீது
திருமகன்ரதியுமாகத் திருப்பள்ளிபமர்ந்தாற்போல
மருவியேதாயிலுப்போதுமன்னவன்சொப்பனங்கண்டு
சருவிபமந்திரிக்குச் சாற்றுவான்யேற்றுவானே (ப)

(வ-ம்) அகோகேளுநம்புனிதர்களே சந்திரமதியும்அரிச்சந்திரனும்இரதியும்மன்மதனும்போலே திருப்பள்ளியடைந்து காமபுளகாயந்தமலர்விளைமலர்கள் தூவிய மஞ்சத்தின்பேரிலே கூடிக்குலாவிக்களிப்புற்றுறங்கும்போது இராஜனானவன் என்றுங்காணாததைக்கண்டுதிகைத்தாற்போலே சொப்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்துமந்திரியானசத்தியகீர்த்திக்குரைப்பதும் அதற்கவர்சமாதானஞ்சொல்லுவதுகாண்க,

அரிச்சந்திரன்சொல்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்,

பல்லவி

அதிவிசித்ரமாயானோர்சொப்பனங்கண்டெழுந்தேன்
அதின்கருத்தையுரைப்பாய்மந்த்ரி

அநுபல்லவி

துதிபெற்றபெண்களவர் கதியென்றெனைப்புணர்ந்தார்
தொழுதுபோற்றியவர்கள் தோழமைகளைப்பாராட்டி
மதிமகிழ்தெர்ருத்தியை மாதவத்தோருக்கீந்தேன்
குதிகொண்டொருத்தியந்தக்கோதையுடனே சென்றாள்(அதி)

சரணங்கள்

மந்திரிசொல்-தரு

க, மதிதனின்மன்னுமெத்த மயங்கவொண்ணாதயெந்தன்
மதியிலுணர்ந்தமட்டு மகிழ்ந்துணர்த்துவேனானே
பொதிபொதியாய்தனத்தைப் புனிதர்க்களித்தபோதே
பொக்கிஷந்தனிலுற்ற பூவைவினைத்துச்சென்றாள்
விதிதவழ்ந்தபூமாது செதியென்றடைந்தவள்ன்
நதிகளுக்குச்சாகரம் பதியதாமென்றுபோனான்(மதி)

அரிச்சந்திரன்சொல்-தரு

உ, ஒருத்திபராமுகமா யொதுங்கியூணற்றகன்றாள்
ஒருத்தியந்தகளைப்போ லுலகினில்வீற்றிருந்தாள்

ஒருத்திவிட்டேனீங்கே னென்றேருறுதிதந்தாள்
உத்தரியாளென்றெந்தன் சித்தமிகக்களித்தே
திருத்தமாயிதிலுள்ள கருத்துயாவும்பார்த்து
பொருத்தமாயுருத்திடில் வருத்தமகலுவேனே (அதி)

மந்திரிசொல்-தரு.

ந. கண்ணிழந்தாற்போலுள்ள காரிமைபராக்ரமி
எண்ணியொதுங்கிநின்ற யேந்திழையாளேசவுறு
விண்ணும்மண்ணுமுள்ளமட்டும் விடேனென்றவள்ஜயிப்போன்
வெற்றிமிகவடைவீர் விளங்குமுமதுகீர்த்தி
அண்ணலேயிதுவெல்லாம் எண்ணிவெதும்பொணுது
பண்ணிப்பலன்போல புண்யம்பலித்திடுமுன் (மதி)

பொது-விருத்தம்,

மந்திரிக்குறைத்தபின்னர் மதிமிகவயர்ந்துமன்னன்
தொந்திரவடைந்தென்னதோதகம்விளையுமோவென்
றந்திரங்கடந்தடங்கா வைபமுற்றருகேயுற்ற
சுந்தரமனையாளான சந்திரமதிக்குச்சொல்வான் கக

(வ-ம்)இவ்விதமாய் மந்திரியினாலே சமாதானப்பட்ட இராசனானவன் பின்னும் மனக்கலக்கமுற்று திகைப்படைந்து என்ன கலகம்விளையுமோவென்று சிந்தையிலடங்காத ஐயாவுற்று அருகிலிருந்ததர்மபத்தினியாகிய சந்திரமதியுடன் தான்கண்டகனவை சொல்லிவருவதுகாண்க

கூ-தரு, இ-ம்-கமாசு- அடதாளம்,

பல்லவி,

கண்டகனவினைக்கேட்பாயே-காதலியேநான்

அநுபல்லவி

கொண்டகோலமனிந்து யிந்தகுவலயந்தனையிழந்து
மண்டலந்தன்னையோர் ம்மாமுனிக்களித்து
மறுநகரேக மதிதயங்மகளோடான் (கண்ட)

சரணங்கள்.

க. கானகத்தினில்நடக்க () ஒற்றைக் கண்ணன்வழியிற்றடுக்க
போனகமில்லாமல் புலம்பித்தவிக்கவும்
சேனைத்தலைவர்கள் சிந்தித்துநிற்கவும் (கண்)

() ஒற்றைக்கண்ணன் நட்சேஷத்ராயன்

காசிநகர்தனிலே கால — கவுசிகர்தன்கையிலே
கூசிடாதுன்னையும் — மைந்தனையும்வித்துப்
பேசியநீசர்க்கு — நான்பிணையாகவும் (கண்)

௩. சுதனுயிர்தனையிழக்கக்-காசிச் — சுடலையைநான்காக்க
மதனவல்லியெனும் — மங்கைசுதன்மாளவும்
விதனமில்லாதென்கை — யாலுனைவெட்டவும் (கண்)

சந்திரமதிசொல்-விருத்தம்,

இந்தநல்விபத்தையெல்லா மீசன்மாலயனாலல்ல
வந்தவத்துறவோன்றன்னால் வளர்துன்பமிகுதிகண்டீர்
கந்தமும்மலரும்போலே காதல்கொண்டாண்டமன்னா
எந்தவாறிடுக்கணெய்தி னுமிற்சத்யந்தப்பொணாதே ௧௨.

(வ-ம்) அகோ கேளும் எனது பிராணநாயகனே இவ்விதமான செய்கைகள் யாவும் அரிபிரமாதிகளும் செய்யமாட்டார்கள் செந்தவத்தோர்க்கு செங்கோலாளன் த்ருணமாத்திரமாகையால் முன் யாசகார்த்தமாய்வந்த விசுவாமித்திருடைய மாயத்தினாலே உண்டாகப்போகிறதுன்பங்களின்னமனேக மிருக்கும் புஷ்பங்கள் வாசனையினாலே பரிமளிப்பதுபோல என்னையாண்டபிராணநாதனே எப்படிப்பட்ட துன்பம்வந்தாலும் அந்தசத்யவாக்கு ஒன்றுமாத்திரம் தப்பலாகாது மகாராஜனே

பொது-விருத்தம்,

ஆட்டைக்காக்குமவ் வாயனைப்போலவே
நாட்டைக்காக்கும் நரேந்திரன்கானகத்தில்
வேட்டையாடிய வேளையிற்சூழ்வினைப்
பாட்டையாய்ந்து பரிவுடனோதுவாம் ௰௩.

(வ-ம்) அகோ கேளும் தர்மபுத்திராதிகளே ஆட்டின்கூட்டங்களைப் பாதுகாக்கின்ற ஆயர்களைப்போலவே அந்த அரிச்சந்திரனென்னு நாடாளன் வனத்தில்வந்து வேட்டையாடும்போது அகஸ்மாத்தாய்விளையப்பட்டசூழ்வினைகளிற் சிலவற்றை யுரைப்பேனென்று மார்க்கண்டேயர் தர்மபுத்திராதிகளுக்குச் சொல்லத்தொடங்குவதுகாண்க

வேட்டஞ்செய்காண்டம்- முற்றிற்று.

ஆக-விருத்தம்-௰௩-தரு-௬

ஆறுவது.

சூழ்வினைகாண்டம்.

பொது-விருத்தம்.

குன்றிடாப்புகழ்படைத்த குறிசிற்கைக்கணைகள்தைத்து
துன்றியகுருதிசோரத் துவண்டுடல்துடித்துவந்த
பன்றியின்வருகைக்கண்டு பதைபதைத்துளம்வெகுண்டு
கன்றியமுனிவன்மெத்தக் கருவுவான்சருவுவானே.

(வ-ம்) அகோகேளும்குந்திபுத்திரர்களே குறைவற்ற பிரக்யாதியுற்ற அரிச்சந்திரமகாராசன் கைகளிலிருக்கின்ற கூர்மைபொருந்திய அம்புகளாலே எதிர்பட்டுஇரத்தஞ்சொட்டச்சொட்ட வந்துவிழுந்தபன்றியைக்கண்டு பதைபதைத்துருகிக் கோபமுற்று மனநொந்தவிசுவாமித்திரமுனீந்திரரானவர் அரசனைநோக்கி கருவுகிறவிதங்காண்க.

க-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி,

என்னவலதிவன்படைத்தான்-மிக
எத்தவித்யாசமா யியன்றதெல்லாம் விளைத்தான்

அநுபல்லவி.

மன்னவனுனது மாமுனிவர்க்கெதிரோ
மாவனமழித்தெம்மை மதியாதிவன்சதிரோ (என்ன)

சரணங்கள்,

க, வடவாக்கினியைவர வழைத்துத்தகிக்கிறேன்
வாழும்வையமுழுதும் வாய்ப்பேச்சிற்காக்கிறேன்
துடர்காலவிடமதைத் தூக்கிக்கைமுகிக்கிறேன்
துய்யவனெனும்பேனாத் துரிசினில்வகிக்கிறேன்
கொடியவினைசெயுங் குறிசிலனிவனோ
மடியச்செய்யேனாகில் மாமுனிவன்நானோ (என்ன)

உ, காமன்கணைகளைக் கடுக்கியேமுடுக்கிறேன்
காலதூதுவருக்குங் காவுகள்கொடுக்கிறேன்
ஸோமன்சூரியர்களின் சோதியைவிடுக்கிறேன்
சொற்றவாரெனனுஞ் சொற்களைத்தடுக்கிறேன்
கோமானிடத்தன்பு கூறாய்கொடுஞ்சனி
தாமதமேன்மனங் தாளிடேனெனி (என்ன)

௬., மாலயன்முக்கண்ணன் மாதவர்களினாலும்
மாய்கைபறியபடமாகுமோ யெவராலும்
கோலவிசுவாமித்திர னென்றாலாறுநாலும்
குன்றிடாமலெதிரே நிற்குமோபெரும்பாலும்
ஞாலமானவோர் ஞாயங்களுநீகோ
ஆலமுண்டகண்ட னாருளுமிதோ(என்ன)

பொது-விருத்தம்,

இத்தருணத்தில்கற்றவன்முன்ன செழில்மறையாளர்களிருவர்
இணையடிதொழுதுவணங்கியன்பாக யினமுடனுரைத்திடக்கேளீர்
சித்தரும்புகழுஞ்சத்தியரிச்சந்திரன் சேனையுந்தளங்களுஞ்சூழச்
சேனையுமனவியுமந்திரிமுதலோர் சிறக்கவிங்கமர்ந்தனரென்ன
மத்தருமிகழுமுப்புராதியரை மகிழ்ச்சியாநெரித்தவங்களும்
மாரனைவிழியாலெரித்தவங்களும் மண்டியவடவையின்களும்
உத்தமமெனவக்கோசிகன் வெகுளாலுதித்திடுமுச்சினிலிருந்து
உத்தியிலெழுந்தகஞ்சுருக்கொடுவந் துதித்தனர்கன்னியரிருவர் ௨

வ-ம். அந்தவேளையிலே விசுவாமித்திரமகாமுனிவனிடத்திலே யிருந்த பிராமணர்களிருவர்கள் வந்து நமஸ்கரித்துக் கேளுஞ் சுவாமிசற்குருநாதனே அந்த அரிச்சந்திரமகாராசன் நம்முடையதீங்காரவனத்திலே தன்னுடைய குடும்பப்பரிவார சமேதனாய்வந்து இருக்கிறானென்றபோது விசுவாமித்திரருக்கு அதிகமானகோபாக்கினி சொலிக்கையில் அவ்வநகைத்தெரிக்கழலும் மன்மதனைத் தகித்தகழலும் ஏககாலத்திலே பிரளயகாலஜாஜ்வல்லியமான மாவதுபோல ஜெலிப்பித்து பெறுமூச்செறியும்போது இரண்டுபேர் கன்னியர்களுற்பத்தியாகிய விதங்காண்க

௨-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை- ஆதிதாளம்

பல்லவி,

மாதர்களுற்பவமாயினார்-மாமுனிவன்
மாயத்தாலுமோ-ருபாயத்தாலுமிரு — மாதர்

அநுபல்லவி.

நீதர்கள்புகழ்ந்திடும் நிருபன்மிகச்செழிக்க
நிறைந்தஞானமறையரு நாலுமிகக்கொழிக்கச்
சூதர்கள்புகழ்நாதி சுதன்சொல்லைபழிக்கச்
சூரர்முனிவனுமதிச் சொல்லாத்துன்பமொழிக்க(மாதர்)

சரணங்கள்,

௧, சுழிகொண்டுபெருகிய சுரந்தவருக்கங்கையைச்
சூடினோன் நெற்றியிற்கண்ணை

வழிகொண்டுதழுவினாள் வெந்துமனம்நொந்துமிக
வாடினேன் வெற்றியில்மிகு
பழிகொண்டபரமேசன் பாணஞ்செயுநஞ்சேனப்
பாமரர்சொல்லுவகால பாசமதென்ன
அழித்திடும்வடவா முகாக்கினியென்ன
அரிவையர்க்குவிழிக ளமைந்ததாமென்ன(மா)

௨, சந்திராதித்தனைமிகச் சங்கடப்படுத்துஞ்சர்ப்ப
மாகுமே சுவைமிகுந்த
செந்திருவமுதுடன்பிறந்தவஞ்ச நஞ்சிதென்ன
லாகுமோ அதில்வந்துற்ற
இந்திரநீலக்கொம்பிரண் டெழுந்ததாமென்ன
இப்புவியிலிப்படியேந் திழையுண்டோவென்ன
சுந்திரன்வணங்கன்றன் றேசையிவர்களென்ன
சுரமுனிவசிஷ்டர்முன் சொன்னசொற்களையுன்ன

௩, நீலக்கடலுட்பவழ நிலக்கொடிவந்துநின்றாற்
போலவே முனிவனாலே
ஆலக்கடல்தன்னிழல்மூழ்கி யன்றெழுந்தவந்தவன்னம்
போலவே மடமாதர்கள்
சீலத்திலுயர்மாரன் சேனைபிருவரென்னச்
குவலயத்திவர்க்கிணைக் கோதையரிலரென்ன(மா)

பொது-விருத்தம்,

நங்கையருற்பவித்து நாதன்முன்னின்றபோது
பங்கையன்முதலோர்போற்றும் பாதநூலவர்க்குரைத்துப்
புங்கவன்றன்பாற்சென்று புணர்ந்திடப்புகல்வீரல்லால்
செங்கையிற்குடையைக்கேண்மினெனமுனிசெப்பலுற்றார்.

வ-ம், இந்தப்பிரகாரமா யுற்பவித்து விசுவாமித்திரர் முன்னே நின்ற போது வேதாதியர்களும் துதிக்கப்பட்ட பாதாஸ்திரங்களைமிகத்தெளி வாயவர்களுக்குப்போதித்து அரிச்சந்திரமகாராசனிடத்திற்குப்போய்ப்பி ரசங்கம்பண்ணி அவனைக்கழுவிப்புணர்ந்தனைக்கொள்வீர் அதற்குடன் படானாகில் அவன்கையிலேயிருக்கிறபூச்சக்கிரக்குடையைக்கேட்டுவா ங்கிக்கொண்டு வாருங்களென்று கபடவஞ்சமிகுத்த மனத்தையுடைய விசுவாமித்திரர்சொல்லுகிறவிதங்காண்க,

பொது- விருத்தம.

இவ்வுரைவினவிமாத ரிருடியின்சபையைவிட்டு
ஒவ்வுமவ்வரசன்முன்னே யோதிமமெனநடந்து
கவ்வுமவ்வியல்பையெல்லாங் கவனமாய்களித்துப்பாடச்
செவ்வுரையரசனுற்ற சிற்சபைசேரலுற்றார் (௪)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் சொல்லக்கேட்ட மோகினிப்பெண்களிருவரும் விசுவாமித்திரருடைய சபையைவிட்டு அன்னப்பட்சியைப் போலேநடந்து அரசன்சபைக்குவந்து தங்களுக்குத்தெரிந்த பாதசாத்திரவிதிகளைப் பிரசங்கிக்கவேண்டி வருதல்காண்க.

௧-தரு;-இ-ம்-பியாக்கடை-அல்லது-அடாணா;

பல்லவி,

வந்தாரே மோகினிப்பெண்கள்-வந்தாரே

அநுபல்லவி,

வந்தாளோர்கற்பகதகோடி-வந்துவணங்கு மரிச்சந்திரன் சபைதேடி
சந்தாபங்கொள்விரக சாகரந்தனிலாடி
சரசவிலாசினிகள் சகிமாரிருவர்கூடி (வந்த)

சரணங்கள்,

௧, பேச்சினிற்கிளிபோலப் பெயர்ச்சியிற்பெடைபோல
வீச்சினிற்கரங்களும் விளங்குமின்னினிபோலே
ஏச்சில்லாமுனியன்முன் னிசைந்தவெகுளியில்மூல
மூச்சினிற்பிறந்திருந்து மோகினிமாதர்கள் (வந்)

௨, ஈசன்மால்விரிஞ்சியும் இசைந்தவிரகால்வாட
நேசமாய்த்துறவோரும் நினைந்துதவம்விட்டோடப்
பாசத்தாலெவர்களும் பரிந்தவர்களைநாட
வாசபயோத்தியாளும் வள்ளலிவளைக்கூட (வந்)

௩, சொல்லினிற்பட்டொழிந்த சோலையெல்லாஞ்செழிக்கக்
கல்வினையுக்களாக்குங் காளவிதழ்கொழிக்க
வல்லியர்தங்கட்குற்ற வல்தனைத்தும்ஒழிக்க
நல்லியலரிச்சந்திரன் நற்றவத்தையழிக்க (வந்)

(வ-ம்) இவ்விதமாய்வந்த மோகிப்பெண்களிருவரும் அரிச்சந்திர மகாராஜனைப்புகழும்,

கலித்துறை,

வையம்பரவும்பொன்வரைத்தடமாமுக்கண்வாழ்நகரம்
மெய்யும்வடமலைபாருமுன்பீடமிலங்குமொளி
செய்யுங்கதிர்மணிதிங்களைச்சேருமுன்சிறந்தகுடைச்
செய்யும்புகழ்தனையெம்மால்விடையியர்க்கையன்றே, (௫)

(வ-ம்) ஆகோவாரும் மகாராசனே உம்முடைய அயோத்தியாபுரிப்பட்டணமே சொர்ணபதியாம் உம்முடைய சிங்காசனமே வைகுண்டபர்வதத்துக்கு சமதையாகும் தம்முடையபுகழ்பெற்ற குண்டயோசந்திரு ரீ பர்சனைப்பார்க்கிலும மேலான கீர்த்தியை வகிக்குமென்பதை யென்ன விவ்வளவென்றிறிய வல்லமையோ மகாராஜனே.

சீ-தரு-இ-ம்-கல்யாணி- திரிபுடைதாளம்.

கலவிக்கிசைவீரமன் னா-காதலோளிப்பதென்ன (கலவி)

அநுபல்லவி.

இலவிதழ்சோதியுண்ண- விசையாதிருப்பதென்ன (கலவி)

சரணங்கள்.

௧, மாரன்கையிற்றரித்த மலரப்பெமைத்துறத்த
திரஅரிச்சந்திரமெத்தத் தென்றலைமைவந்துசுத்த (கல)

௨, சுரதநீரிடைவுஞ்ச துகித்தும்முடன்கொஞ்சப்
பரிதாபமெமைமிஞ்சப் பட்சந்திரன்படைக்கஞ்ச (கல)

௩, கைவளைகள்சோருது காமவெள்ளமூறுது
மெய்வளமுனைசேருது மென்மேலும்மோகமீறுது (கல)

இராசன்-மோகினிகளுக்குச்சொல்- விருத்தம்,

நடவனமுலையாளே யாங் நங்குநன்னகர் கடந்து
அடவியில்வந்ததென்ன வதிசயமுரைத்திடீரே.

இராசன்சொல்-வசனம்

பொன்மலைபோன்ற கொங்கைகளையுடைய பெண்களே நாங்கள் வாசஞ்செய்யப்பட்ட அயோத்தியாபுரியைவிட்டு நீங்கள்ளாலே பழுமுற்றிருக்கிற இந்த ஆரணியத்திலே வந்ததைப்பார்த்தால் மெத்தஆச்சரியமாயிருக்குது உங்களிருப்பிடமெங்கே சொல்வீரும்பெண்களே.

பெண்கள்சொல்-விருத்தம்

புடவியிற்சிறந்தயோத்தி பூபனேபுகலக்கேளீர்
மடமயிலுலாவிவாழும் வனத்திடைவாழ்வோமியாமே

(வ-ம்) பூலோகத்திலே மிகுந்தசெல்வம்பொழிகின்ற அயோத்யாபுராதிபதியான அரிச்சந்திரமகாராசனே மயில்வனங்களசஞ்சரிக்கின்ற தவனத்தில் வாசமாயிருக்கப்பட்டவர்களும்முடைய தெரிசனைக்காக வந்தோம மகாராசனே.

இராசன்சொல் விருத்தம்.

பாடியபாட்டின்வண்மைப் பட்டதோர்மாந்தருக்கும்
வாடியவாடல்காண வரம்பையூர்வசியைமிஞ்சும்
நீடியோதுதியோவென்னில் நெடியகல்லுருகுமிங்கே
கூடியிச்சபையில்வந்த கொள்கையைக்கூறுவீரே.

(வ-ம்) நீங்கள்பாடின பாட்டினிசையைக்கேட்கில்பட்டவிருட்சங்களும்துளிர்க்கும் ஆடல்களைக்காணிலோ அரம்பையூர்வசி முதலான தேவதாஸ்திரீகளுக்கு மேலாயிருக்கும் நீங்கள்செய்யும்புகழ்ச்சியோ கல்லையுமகளாக்கும் இப்படிப்பட்ட நீங்கள் இந்தச்சபையில்வந்த காரியங்களைத் தெரியப்படுத்தும் மோகினிப் பெண்களே.

வாணப்பெண்கள்சொல்- விருத்தம்

பொன்னுளபுவியைக்கேளோம் பூணப்பொற்பணிதிகேளோம்
நின்னுடவண்மைகேளோம் நெடியசெங்கோலைக்கேளோம்
தன்னிகரில்லாச்சேனைத் தளங்களைக்கேளோமுன்பால்
பின்னுமக்குடையின்மீதே மெத்வுமையலுற்றோம்

(வ-ம்) அகோவாருமகாராசனே பொன்மலைபோலே நிறைந்தபொருட்களிலும் சமுத்திரஞ்சூழ்ந்தபூமியிலும் மெய்நிறைந்த வரபாணங்களிலும் நீர்ஆளப்பட்ட செங்கோலிலும் சேனைசனிபரிவாரங்களிம் எங்களுக்குப்பிரியமடையாது ஆனால் உம்மிடத்திலே யிருக்கப்பட்ட பூச்சக்கிரக்குடையினிடத்திலே அதிகமோகங்கொண் டிருக்கின்றோம் மகாராசனே.

இராசன்சொல்-விருத்தம்

தலைமுறைமுறைபாயிந்தத்தகத்தினிலிருக்கப்பெற்ற
விலைமிகுகுடையைக்கேட்டீர் மெத்தவுமனஞ்சலித்தோம்
நிலைமிகுபணிகளாடை நிதிபுவிகொடுப்பதல்லா
தலைந்திடும்வார்த்தைமார்க்கி தடுத்திடாகெடுத்துநல்கோம்

(வ-ம்)இந்தஇட்சுவாகுவம்சத்து ராசாக்களுற்பத்தியானநாள் முதலாய் இந்தராசாக்களிலேயிருக்கப்பட்ட பூச்சக்கிரகுடையைக் கேட்டீர்களாகையால் நீங்கள் பேதையென்று மனமிரங்கிப்பொறுத்துக்கொண்டோம் உங்களுக்கு வஸ்திராபரணாதி நிதிநிட்சேபணங்களைத் தரத்தகதேஒழிய இந்தக்குடையைக்கொடுப்பது அடுக்கொண்ணாது வீணாய்ப்பிதற்றவேண்டாம் சபையைவிட்டு அகன்றுபோங்கள் பெண்களே.

வாணப்பெண்கள்சொல்-வெண்பா

ஆனவரம்நல்கு மரிச்சந்திரபூபா
பானிலத்திலுந்தனைப்போன் மன்னருண்டோ-வானவருந்

சிந்தனையுற்றெமையழைத்தார் சீச்சீயென்றோடிவந்தோம்
உந்தனையேமனம்புணர்வோ மென்று

வசனம்,

அகோகேளும்எங்களுக்குறிய வெகுமதிகள் தருகிறோமென்ற அரிச்சந்திரமகாராசனே இந்தப்பூலோகத்தி லும்மைப்போலுற்ற அரசாகளாரிருக்கின்றார்கள் ஐயமகாராசனே தேவர்களும் எங்கள்மேல்மோகித்துமயக்கமுற்றார் அவர்களை நிராகரித்துத் தூஷித்துப்பேசி உம்மையொருவரையே இருவரும்புணர்ந்து எங்கள்மனோபீஷ்டத்தைநிறைவேற்றிக்கொள்ளவந்தோம் கிருபைசெய்யும்மகாராசனே

௫-தரு-ஷி [illegible] முனகல்யாணி-அட-தாளம்

பல்லவி

மோகமாகினோம்மன்னா-மிகமோடிசெய்குவதென்ன

அநுபல்லவி

சாகேதபுரியாளுஞ் சத்யரிச்சந்திராவி
வேகிமென்றுன்மேல் விரகுறச்செய்தெமை
ஏகிவரவிசுவா மித்திரிசைந்தனர்
ஆகையினல்லின் சமூகந்தனில்வந்து(மோ)

சரணங்கள்

௧. சோமனுதித்திடலாச்சே கணைக்
காமனெதிர்த்திட லாச்சே
கோமளவெற்பினை யொத்ததனங்கள்
குலுங்கிக்கலங்கித் துலங்கியேவிம்முது
தூமமலர்ப்பளி மெத்தையிலும்முடன்
தாங்கவென்றேமிகப் பாங்குடன்வந்து(மோ)

௨. தென்றலிறைந்திடலாச்சே யெங்கள்
தேகஞ்சிறந்திட லாச்சே
அன்றிற்கிளிகளும் ஆடுமயில்களுங்
ஆரவாரித்துப்போர் நாட்டங்கள்செய்யுதே
குன்றினுமிக்கப் புகழ்படைததேசயிந்தக்
குவலயந்தனையாளுங் குரிசிலரிச்சந்திரா(மோ)

௩. கலைநெகிழ்ந்திட லாச்சே
மார்பிற்கஞ்சுகந் தெறித்திடலாச்சே
முலைமுகட்டில்மலை நம்புகள்தைக்குதே
மன்னவர்கல்லமு தங்களும்கைக்குதே
நிலையாகவல்குலுன் னேசம்நினைக்குதே
நித்யனேசத்யரிச் சந்திரநிருபனே(மோ)

௨௧

இராசன்சொல்-விருத்தம்,

பாதகப்பரத்தைமாரே பகரொணாமொழிபார்த்து
தோதகமடிப்பதென்ன துற்புத்திபடைத்தீர்சற்றும்
பேதகம்நினையாதிந்தப் பிரம்பினாலடிப்பித்துங்கள்
தீதகந்தனையகற்றித் திறமுடனனுப்புவேனே (௬)

(வ-ம்) அகோவாரும் பொய் களவு கொலைகள் காமமுதலான பஞ்சமா பாதகஞ்செய்யும்பாவிகளான பெண்களேஉங்களுக்குத் தகாதவார்த்தையைவசனித்துக் கொண்டானடிக்கிறீர்கள் இதென்ன துற்புத்தி கொஞ்சமாவது ஈவிரக்கமில்லாமல் யென்கைகளிலிருக்கிற பொற்பிரம்பினாலடித்துஉங்களுக்குற்ற ஆணவத்தையடக்கி அகத்தைக்குலைந்து அனுப்பிவிடுவேன்என்சமுகத்தில்நில்லாமல்சடுதியிலகன்றுபோங்கள்பெண்களே

வாணப்பெண்கள்சொல்-விருத்தம்,

சேதிப்பேனென்றுரைத்த செல்வனேதிரிசங்குமைந்தா
போதித்ததாருனக்குப் புகலுவாய்ப்பூவைமாரை
வாதித்தலுண்டோபாரில் வணக்கப்பாபுலவர்தம்மைச்
சோதிக்கலென்னவெம்மைச் சுகத்தினில்மருவுவீரே

(வ-ம்) அகோவாரும் திரிசங்குமகாராசன் தவத்தில் வந்தசெல்வகுமாரனே இப்படிப்பட்டபுத்தியைப் போதித்ததார் பெண்களையாவதுவித்துவாம்சர்களையாவது இம்சித்தோரை யறிந்திருக்கிறீரா என்எங்கள்மனதைச் சோதிக்கிறீர் சுகமாய் எங்களைமருவிக் களிகூறும்மகாராசனே

புராண-விருத்தம்,

வள்ளலென்றடைந்தோர்முன்பால் வந்திரந்தோர்க்கொன்றீயாக்
கள்ளனென்றறிந்தாலிங்கு வருகலக்கண்டாயென்றார்
உள்ளமுங்கண்ணுஞ்செந்தி யுருத்தெழமைச்சினத்துவேந்தன்
தள்ளுமென்றருளிச்செய்தான் விளைவதுதன்னையோரா

(வ-ம்) மகாராசனென்று தியாகத்தாசைவந்தோம்யேழைபேதைகளுக்கு கொடுக்காத ஈபாமுடியென்றால் வரமாட்டோமென்ற விசுவாமித்திரமோகினிகளை இனிப் பின்வருங்காரணமறியாமல் தள்ளிவிடச் சொன்னபோது பக்கத்தி லிருந்த பரிசிலாளர்கள் நடப்பிவிப்பது காண்க,

மந்திரிசொல்-விருத்தம்,

ஆடரா அருகிருக்கும் அடவுளசேவையேவுன்
சீராமெத்தப்பேசும் சிறுக்கிகள்தம்மைக்கண்ணுற்

பாரடா கைப்பிரம்பாற் பதைக்கத்திட்டவடித்துதைத்து
நேரடாயென்தன்முன்னே நிருபனுங்களிக்கத்தானே ௰௨

வ-ம், ஆகோவாரும்பிள்ளாய் அருகிலிருக்கும் சேர்வைக்காரா இங்கு அதிகமாய்ப்பேசப்பட்ட இந்தமோகினிப் பிசாசுபோலே வந்திருக்கிற பெண்களைத் துரத்திவிடுவது உன்னுடையவேலையல்லவா அவர்களைப் பார் உன்னையிலுள்ள பிரம்பினாலே அவர்களைக்கண்டித்து மிரட்டினை பிறகு எமக்குத்தெரியப் படுத்தினால் மகாராசாவை சந்தோஷிப்பித்து உனக்கு அதிகவெகுமானம் வாங்கித் தருகிறேம் பிள்ளாய் சேவைக்காரனே,

சேவைக்காரன்சொல்-வசனம்,

அப்படியேவிரட்டிவிட்டுவருகிறேன் மகாராசனே
மோகினிப்பெண்களுக்கும்-சேவகர்களுக்கும்-தர்க்கம்

சுரு-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்-திபதை.

கண்ணிகள்,

சேவகர்-கடுகடுத்துப்பேசுங்
குடுகுடெனநடந்து
கன்னியரேநீங்கள்
குடிசைக்குட்புகுங்கோள்

மோகினி-கடதடென்றோடிவரம்
வெடவெடென்றடினால்
தங்களைத்தள்ளியே
விட்டுப்போவோமோ

சேவகர்-பெண்புத்தியால்மெத்தப்
நண்புற்றவார்த்தைகளை
பேசவேண்டாம்வெகு
நான்சொன்னேன்போபோ

மோகினி-பண்புடனெங்களைப்
தண்புற்றவார்த்தையால்
பாரமன்னன்மருவாமல்
தனியேபோவோமோ

சேவகர்-துங்கமன்னவன்றனை
தங்கப்பிரம்பினால்
துடுக்கமாயினிச்சொன்னால்
தகத்திவிட்டிடுவேன்

மோகினி-பங்கமாயெங்களைப்
புங்கவன்றனைமணம்
பதறியடித்தாலும்
புணராமற்போகோம்

சேவகர்-குடியைக்கெடுப்பதுங்கள்
முடுக்கிச்சவுக்கினால்
குலவன்மையல்லவோ
முதுகிலடிப்போம்

மோகினி-படுபாவியின்றெமைப்
அடிபாவியென்பதை
பங்கஞ்செய்தானலோ
யாமறியோமே

பொது-விருத்தம்.

ஆறுகொண்டோடார்செல்லா வடவியிற்சென்றுமேனி
மாறுகொண்டுதிர்ஞ்சிந்த வஞ்சினைப்பழித்தகூந்தற்
றாதுகொண்டீர்க்கச்சேர்ந்த துகில்கிழிக்தகலச்சாப
வீறுகொண்டேவிவிட்ட முனிவன்முன்வந்துவீழ்ந்தார் ௰௩

(வ-ம்) அகோகேளும் தர்மபுத்திரர்களே இப்படி தொஷ்டியத்தினலடிப்பட்ட மோகினிகள் நீர்நுழையாத அடர்ந்த சோலைவனங்களைக்கடந்து நடந்துபோய் தேகமெல்லாம் குருதிசிந்த மேகத்தைப்பழித்தகூந்தலை தாருடனே முட்செடிகள் பத்தியிழுக்கக் கட்டிக்கொண்டிருக்கிற பட்டுப் பீதாம்பரங்கிழிந்து பீற்றலாய்ச் சோரதம்மைப் பொருமையுடன் ஏவிவிடுத்த விசுவாமித்திரரிடத்தில்வந்து அடியில்வீழ்ந்து சொல்லிக்கொள்ளுகிறவிதங் காண்க,

ஆரணமார்க்கமெங்கட் கறிவித்தகுருவேபோற்றி
நாரணமுதலோரேற்றும் நரேந்திரனரிச்சந்திரன்றன்
பேரணப்பதத்தைப்போற்றிப் பிரமையினூற்றழுவலுற்றோம்
காரணமில்லாதெம்மைக் கடுகடுத்தடித்தானையா

(வ-ம்) அகோகேளும் சற்குருநாதனே சகலசாஸ்திரமுமோதிவைத்து எங்களுக்காக்ஞாபித்தபடிக்கு மகாவிஷ்ணுமுதலானவர்களும்புகழுதற்கரிய அரிச்சந்திரமகாராசனுடைய பாதாரவிந்தத்திலே நமஸ்கரித்து அவனிடத்திலே யெங்களுக்குண்டாயிருந்த காமவிகாரத்தினாலே காதலிற்றுமணம்பிடிக்கத்தழுவினோம் இதற்காயதொருகாரணமன்னில் அடித்து வெறட்டிவிட்டான் எங்கள் தேகமெல்லாம் நோகுது சுவாமி,

விசுவாமித்திரர்சொல்-வசனம்,

ஆ-ஆ-ஆ-பட்டிமகன் இன்னமென்னசெய்தான் சொல்லுங்கள்

எ-தரு-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்

கண்ணிகள்.

க, ஐயனேமுனியேயெங்க
வெய்யவன்குலத்துவேந்தன்
எங்கமெங்கும்நடுநடுங்க
விம்பினாலடித்தானையா

உ, அடிமையென்றரசன்றன்னை
கொடுமையாய்முதுகிற்குத்தி
ஆசையாற்பணிந்தோமையா
கொறடாவினாலடித்தானையா

ந, பூபதியிற்கர்ணனென்று
சாபமிட்டிருவனையும்
ஊச்சக்கிரக்குடையைக்கேட்டோம்
சாட்டியாலடித்தானையா

ச, அரசரிற்பொய்யுரையானென்று
சரசஞ்செய்யமனம்விரும்பி
அமளியிலணையலுற்றோம்
சந்தோஷித்தழைத்தோமையா

பொது-விருத்தம்

கோதையரிருவர்சொன்ன கோள்களைக்கேட்டுமெத்த
வாதையாலுருகிவிசுவா மித்திரர்வருத்தமுறைப்
போதையில்மிகவெகுண்டு பூவையர்தம்மைநோக்கி
பேதையேபயப்பொறாப்பிரானவிதுபேசுவானே.

(வ-ம்)இவ்விதமாய் தாங்களடைந்த வருத்தத்தைச் சொல்லிக்கொண்ட வாணப்பெண்களின் வாய்பாடான கோள்வார்த்தைகளைக்கேட்டு மிகவும் மனவருத்தமடைந்து அக்கருணத்தில் ஆசனமீதிருந்தகோபமுற்று முன்பாகநிற்கின்ற. சீவிகளை நோக்கி பேதமையுற்ற எனதுபெண்மக்களே மனம்பொறுத்துக் கொள்வீர்களென்று அவர்கள்மனக்கேற்றமுறும்படி இனித் தான்செய்யப்பட்ட கபடநாடகருத்திரமானவிசித்திரங்களைச் சொல்லிக்காட்டுகிறவிதங்காண்க.

அ-கரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

பல்லவி,

ஊரைவிட்டுக்காட்டிலோட்டுவேன்-அவன்பொருளைக்
கூரையிட்டுக்கொடி கட்டுவேன்

அநுபல்லவி

ஊரைவிட்டவனையோட்டி உள்ளவென்கோலங்கள்காட்டி
பாரையாளத்துசங்கட்டி பட்டணத்திற்செங்கோல்நாட்டி
தாரைதாரையாகத்தண்ணீர் பாரைபாரையாகவண்ணீர்
சேரைசேரையாய்ப்பெருக சிறந்தவர்களுள்ளுருக
பார்த்தபேர்க ளங்கலாய்க்கவே-அவனைத்தினம்
கார்த்தபேர்கள் தலைசாய்க்கவே-எந்தனைக்கண்டு
பூரைபூரையென்றேவந்து பொற்படணடிவணங்க
மேரைமேரையாயிதென்று மேலவர்களும்பிணங்க(ஊரை)

சரணங்கள்.

க. இப்பவேஅயோத்திக்கெய்குவேன் அவன்முடியைச்
செப்பவேஉதைத்துள்ளுய்குவேன் அதுகவழ்ந்தால்
ஒப்புடங்களைப்புணர்விப்பேன் ஒப்பிடாவிடில்
ஒப்பனைச்சொல்லிலுல்வாதிப்பேன் அதுமறுத்துச்
செப்பவகையின்னதென்று சொப்பனத்திலுமறியான்
கப்பணபொக்கிஷமுதல் எப்பணமும்என்னதென்ன
இப்பவேதாரைவார்ப்பவென் றிடுக்கங்கள்மிகவிளைத்துத்
தப்பவழியொன்றில்லாமல் தயங்கிமனந்தளரச்செய்வேன் (ஊ)

உ. சத்தியக்கொடியையறுப்பேன் அவன்மேவினி
நித்தியமும்முறுமுறுப்பேன் ஆளுகைக்குள்ள
வெற்றியாவையுங்கைக்கொள்ளுவேன் குடும்பத்துடன்
எத்தியேகாசிக்குத்தள்ளுவேன் புறப்படையில்
முத்திரையிட்டுமுன்னவன் பத்திரத்தடைக்கலஞ்செய்
வித்திருந்தபொருள்யாவும் மித்திரபேதமில்லாமல்
இத்தினத்திலேதருவா யென்றியம்பையில்வெம்புவான்
இத்தனைதினத்திலிவா யென்றெருதலைணயிட்டு(ஊ)

௫, தாகனுய்ப்புகரேனை விடுப்பேன் — கொடுவிடவாய்
உரகனைப்போற்சிறந்தொடுப்பேன் — அடவிதனில்
சிரகமிருக்தூரிடச்செய்வேன் — அவன்பாரியை
விரகத்தினுல்நொந்திடச்செய்வேன் — அம்மூவகையும்
நரகவுலகோசகப்பாலாய் — காகமுடையோர்கட்கெல்லாம்
ஆரகராவென்பார்மெய்நூலாய் — தாகவேகத்திலும்மேலாய்
புரகரன்விரிஞ்சிமாயோன் — புண்ணியன்சுகநாரதர்
மாகதன்முதலோர்களுறு — மாவனமெங்குந்திரிப(௨௰)

௬. புலிகரடிபூரான்சுருட்டை — சாரைசர்ப்பமும்
புலிபிராண்டுதேளட்டைகுரட்டை — நட்டுவாய்க்காலி
எலிபெருச்சாளிசிங்கமோரி — கழுதைசெந்நாய்
வலிபவோனுப்பன்றிகாந்தாரி — இன்னமனேகம்
பலிகொளும்விலங்கினங்கள் — நலிசெய்யவந்தொதுங்கச்
சலிதக்கவர்களங்கம்லோங்கச்சொலித்தெழுந்திவந்துதங்கக்
கிலியினுல்மனமொடுங்கக் — கிலேசித்துநடுநடுங்க
கலியினைக்கண்டுபதுங்கக் — கண்களைவர்க்குப்பிதுங்க(௨௰)

௭, காசியிலோர்வேதியனுக்கு — பெண்டுபிள்ளையைத்
தாசிகள்செய்யும்வேலைக்கு — ஒப்பிடச்செய்து
பூஜிகனரிச்சந்திரனை — நீசர்க்கடிமை
பேசியேதருமபொருள்தனைக் — கைகொண்டபின்
கோசிகனென்றன்மாயத்தால — வீசியகொடுவிடத்கால
மாசிலாதர்மைகன்மாளப் — பூசிதனுக்கொப்பித்துமீள
காசிநகர்காவலன்முன் — காதலியைக்கணவன்வெட்ட

பொது-விருத்தம்,

ஒப்பாவிதுவிபம்பி யுள்ளத்திற்சினத்துமுன்னுள்
முப்புராதிபனைத்தீர்த்த முக்கணன்வடிவமுற்று
தப்புரையாதவேந்தன் தங்கியபொய்கைநோக்கி
செம்புகற்கருந்தவத்தோன் செல்கின்ருன்வெல்கின்ருனே

(வ-ம்)இவ்விதமாகச்சொல்லி அங்கிருந்தெழுந்து காலருத்ரசுருபனுய் திரிபுரதகனாது வடிவமுற்று அரிச்சந்திரமகாராசன் தங்கியிருக்கப்பட்ட பொய்கைக்கரையைநோக்கி விசுவாமித்திரர் மகா உக்கிரத்தோடு இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிபறக்க சர்ப்பக்கூட்டங்களைத் திரியவிட்டதுபோலே சடைகளை விரித்துவிட்டுப் பெருமூச்செறிந்துகொண்டு வருகிறவிதங்காண்க

௬-தரு-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி

சினத்தகோசிகரிதோவந்தார்-அந்தசெல்வனரிச்சந்திரன்
சிரத்திலோருதைதந்தார்

அநுபல்லவி,

சினத்துமுப்புரத்தைமுன் சிரித்தெரித்தவுமேசன்
இனத்தோரெல்லாமிகழ யினகுலேசன்புகழ (சின)

சரணங்கள்

௧, இருகண்களாலுந்தீ யெழுந்துபுகைமூட
இருடிமெய்வேர்வைநீ ரிடிபாலெதிர்த்தோட
சருவுஞ்சாற்றுணைப்போற் சடைமுடிகுலைந்தாட
தருமதேவதைதாளுந் சத்தியநிலைநாட
வருந்தியுலகுளோர் வள்ளலடிதொழ
பொருந்திமுனிவர்தாள் பூபன்தொழுதொழ (சின)

௨, சுரர்மிசைப்பரகவித் தபாமிட்டலறிட
கூர்மிகவிதிர்ப்புற்று நடுங்கிக்கதறிட
பரர்வம்முனிக்கெளிப் பாடென்றுதறிட
வரர்செய்யுமிடியினால் வரையஞ்சிகரிட
உசகன்மணிமுடி யொடிங்கிப்படிந்திட
கரகமெடுப்போர்செய் கலகமுடிந்திட (சின)

௩, நாடழித்திட்டாய் நகரழித்திட்டாய்
ஈடழித்திட்டாய் வெற்றிப்புனமழித்திட்டாய்
காடழித்திட்டாய் களையழித்திட்டாய்
கோடழித்திட்டாய் குவலயமழித்திட்டாய்
தோடழித்திட்டாய்வேர் தாரழித்திட்டாய்
சேடருக்கிட்டாய் சூரிகழவென்று (சின)

பொது-விருத்தம்,

...ணிமுடி தனையுதைத்த மாமுனிவிசுவாமித்திரன்
...இணைபடிதொழுதுபோற்றி யேழையோர்க்கபயமீந்து
...ணிவிடையாவுங்கொள்வீர் பரிவுடனெனைத்தற்காத்து
...வுணிசடைமுடியாயென்றும் ஆளென்பான்தாளென்பானே

(வ-ம்) சேனுந்தர்மபுத்திராதிகளே இந்தப்பிரகாரமாக எண்ணிறந்த
...காபங்கொண்டுவந்து ஆவிமதிப்பில்லாத அரிச்சந்திரமகாராஜனணித்
...ருக்கின்ற நவரத்தின கசிதமயமான திருமுடியையுதைத்துவிழ்த்தி
விஸ்வாமித்திரருடைய பாதாரவிந்தத்திலே மகா ராஜனானவன் வ
...மஸ்கரித்து ஏழையைப் பாதுகாத்து இரட்சிப்பீரென்றும் ஏவ

லைக்கைக்கொள்வீரென்றும் என்னை யாளுவீரென்றும் சடாமகுடமுள்ளவரேயென்றும் என்னை யாதரிப்பீரென்றும் தோத்தரித்துச் சொல்லுவதாவது.

௬-இராஜன்சொல்-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி

பிழைபொறுத்தருள் வீர் எனைச்சிறு
பிள்ளையெனக் கைக்கொள்வீர்

அநுபல்லவி;

தழைமலிசோலைஇத் தடத்தினிலேயும்
தாச்ரமமென்றெந்தன் னுளமறியாதுசெய் (பிழை)

சரணங்கள்

௧, சிறியரானவர்கள் தன்னுளமறியாது
செய்தாலுங்கொடுந்தீமை என்ன
செய்தாலுமவர்கட்குச் சிற்பதங்கருள்
செய்தலல்லவோவாய்மை மிகநன்னூ
லறிஞரானவர்தமக் கல்லவோமிகட்சுமை
லுயர்ந்தறிந்துணர்ந்தோர்கட் கனைவகள்மீதென்பிரமை (பி)

௨. பெத்தபிள்ளை...ப்போத பிழைகளைப்பொறுத்திடல் மிகப்
பிதாவின்குணமல்லவோ
பேதமையாகயா னேதேதுசெய்தாலும் இனி
பேணல்மனமல்லவோ
எத்தனையாகிலு மென்னையிக்கட்சணம்
ஏனுவதல்லவோ யெவர்க்குஞ்சுபலட்சணம் (பி)

௩, பாதம்பணிந்தோரைப் பராமரித்தல்முன்னாள்
பண்ணியதவமல்லவோ பொல்லாப்
பாதகஞ்சூழ்கந் செய்தனையாவையும்
பாவியென்னிச்சொல்லவோ ஞான
போதமுரைக்குந் தபோதனரல்லவோ
புனிதவொன்றுமைப்பூவோர் புகழ்வதுசொல்லவோ (பி)

பொது- விருத்தம்.

எண்ணியாசனில் வண்ணமுரைத்திட
கண்ணியகவுசிக ஞானிகரம்பொழிந்
தண்ணியகரண கடோரமதாகவே
புண்ணிடைவேலுறைந் தாற்போற்புகலுவான் (௧௮)

வசனம்,இவ்விதமா யரிச்சந்திர மகாராசன் பிசகும் மதிப்பித்து மொழியும்போது விஸ்வாமித்திரரானவர் காசிலே நாம் பில்லாதவர்க

ளைப்போலும் காதிலே சூலாயுதத்தைச் செலுத்தினதுபோலும் மழு வைக்காய்ச்சி யூற்றியதகைமைபோலும் புழுத்துநெளிகின்ற புண்ணி லே வேலாயுதத்தாலிடித்தாற்போலும் சிலவார்த்தைசொல்லத்தொட ங்குவதுகாண்க.

௫௧-விசுவாமித்திரர்சொல்-தரு- இ-ம்-அடாணா- அட-தாளம்.

பல்லவி,

அடடாயிதென்னசூதடா-இனிமேல்விட்டு-விடடாஉனக்கடாதடா

அநுபல்லவி.

நடடாபோருக்குப்புறப் படடாவில்லெடுக்கணை
தொடடாவெந்தன்மேற்படை யெடடாபொல்லாமுரடா

சரணங்கள்.

௧, விலங்குகளுடன்போர் செய்தாய்-அனுபலவாய்
விளங்கும்புழுவைநேர் செய்தாய்-அதுபோலென்முன்
கலங்கிடவனைப்போலக் கைகளைப்பிசைகிறாய்
கலிதுடங்கானோவெந்தன் காலப்பிழைகள்தா[...]-அட

௨, வாலினியாவுஞ்சிதைத்தாய் என்[...]றுநும்
வனசார்களை வ[...]தத்தாய்-ஏனதுதவ
யோகினிகளையடித்தாய் மு[...]ாக்கைவமுடித்தாய்
மொழிமாருகல்படித்தாய் முனிவென்முனையொடித்தாய்-அட

௩. அழுக்கநெஞ்சம் படைத்தாய் அரசர்களில்
அதிபனெண்பது துடைத்தாய்-அறிவழிந்து
கழுத்தரிந்தபின்னேயோ கைப்பிழைவந்ததென்றாய்
கலப்பாலிற்றுளிவிஷம் கலந்தாற்போற்றிரிகிறாய்-அட

பொது-விருத்தம்.

மனங்களிற்கபடவஞ்சனைமிருக்கமாமுனி[...]கோசிகர்க்குற்ற, சினத் தினைபொறுக்கப்பொருந்திடாரெனவே செங்கதிர்க்குலத்தரிச்சந்ரன். அ னந்தமாயிரமாயடிதொழுதிறைஞ்சி மையகி[...]நாமலர்ப்பதமலதிப் புனத் தனிவினிலேவறுமயர் துணையுளதே பொறுத்திடெனமிகப்புகழ்வான்.

(வ-ம்) அகோகேளுங்கள் நீனர்களே கபட[...]நாடகசூத்திரதாரியானவிசு வாமித்திரரிஷியினுடைய கோபத்தைபாரெ[...]ன்றுவரும் பொறுக்க வொ ண்ணாதென்று அனேகவிதமாயடிபணிந்துபோற்றி ஓ-ஜயனே உமது பாதாரவிந்தந்தவிர இந்தஆரண்யத்திலே வேறுதுணையேதுநான் என் னபிழைகள்செய்தாலும் மனம்பொறுக்கவேண்டுமென்று மன்னிக்க வே ட்பது காண்க

௰௨ தரு-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. மனதறியாமல்நான் செய்தபிழைகள்யாவும்
மனம்பொருத்தருளுமையா சுவாமி
உனதரியதவத்தி லுதித்தமாதவர்களென்று
லுசிமைத்தங்கச்சிக ளையா
எனதறியாப்புத்தி யென்றுரலிவர்களை
இடுக்கஞ்செய்திட்டேனையா இந்த
எந்திழையர்புலையச் சாதிப்பெண்களென்றெந்த
னிலையடி தொழுதாரையா

௨, உலகத்தில்விலைபெற்ற நவரத்தினமுடிதன்னை
யோங்காரமாயுதைத்தீர் அதி
லுற்றநவமணிகள் னைதத்தாற்பாதங்கள்நோமென்
றுள்ளங்கலங்கு னையா
கலகமிகவளர்க்கும ச்சிரக்சற்கஞன்
கால்களிற்றைத்திடாதோ என்ன
கார மோபரி பூரணதிருபைசெய்வாய்
கவுசிக மாமுனியே

௩, பச்சைக்கல்லுகளு தன் பதங்களிற்றைதத்திடப்
பாதகமென்செய் தனே மெத்தப்
பழிகொளுமேயதை யழிக்கும்வகையறியேன்
பாலிப்பாய் வரமுனியே
இச்சையாபெனை ர்க்க விதமாயெழுந்தவந்தீர்
எழிலியர் மாமுனியே
இசைக்கமோபே தகம் பட்டாலும்புண்ணாமே
இதமோகுசி க சுதனே

௪, மரகதங்கள்தைத்த ல் மாருப்புதையோடுமே
மாதவாயென்ன செய்வேன்
மனமதுகழலுதே மதிகளிற்சழலுதே
மகிழ்ந்திடு மாமுனியே
விரகதாபம்பிறந்த ல் விவேகமகிழ்ந்திடுமோ
விசுவாமித்திர முனியே
விளங்குமுன்மக்க ளின்றால் மணம்புணர்ந்திட
வெனைவிரும்ப வாரோ தனியே

விசுவாமித்திரர்சொல்-விருத்தம்

முன்னமுன்றங்க முழுப்புலைச்சினம்
இன்னமீக்க வொமக்சுறிதன்றியாம்

சொன்னவாசகங் கேட்டுச்சுடர்முடி
மன்னர்மன்னவென் மக்களைச்சேர்ந்திடாய் உ௰

வ-ம், வாரும்பிள்ளாய் அரிச்சந்திரா இதற்குமுன் உன்னுடைய தந்தையாகிய திரிச்சங்குவின் நீசத்தன்மையையொழித்து மாறாதசொர்க்கங்கொடுத்தேன் இன்னம் உனக்குவரப்பட்ட தீமையாவையும் அகற்றியாளவுந் திறமையுண்டு ஆகையால் என்னுடைய போதனையைக் குருவாக்கியமாகயங்கீகரித்து எனது மக்களாகிய மோகினிப்பெண்களை விவாகம்பண்ணிக்கொள்ளும் பிள்ளாய்

அரிச்சந்திரன் சொல்-விருத்தம்

அடினும்நின் வுழிபாரழலாலெனைச்
சுடினுமென்னுயிர் தன்னைத் துறந்துயிர்
விடினுமேனியை வெட்டியறிந்தகூ
றிடினுமிச்சொற்கட் கிசைந்திலனென்னையாள்

(வ-ம்) அகோவாருங்களையா சுவாமி என்னைவெதும்பினாலும் திருவிழியிலெழுகின்ற தீயினாற்றகித்தாலும் என்னுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் வேறுசெய்யினும் தேகத்தை யறுத்துக்கூறுகூறுசெய்யினும் இப்படிப்பட்ட கொடுமையான பாதகவார்த்தைக்கிடங்கொடுக்கேன் சுவாமி என்றென்றும் எனது குடும்பம் புரோவிருக்கி...ருக்கும்படி ஆசீர்வதித்தாலும் முனிசிரேஷ்டரே

பொது-விருத்தம்

பூபவேள்விக் கவுசிகனோய்விலாக்
கோபமெய்திக் கொடியிடைமாதனைத்
தீயமன்னவா சேர்க்கிலையாயினென்
சாபநீபெறு கென்றலுஞ்சாற்றுவான் உஉ

(வ-ம்) இப்படி க்ருதிகளியற்றப்பெற்ற விசுவாமித்திரரானவர் மிகுந்த கோபமுற்று மின்னற்கொடிபோல் யிடையையுடையவளாகிய இந்த அரியலூற்பவித்த மோகினிப்பெண்களை நீ சேர்க்காவிட்டாயாகில்சாபமிடுவேனென்றுரைத்தபோது அரிச்சந்திர மகாராசன்சொல்லுவதுகாண்க,

௭௩-அரிச்சந்திரன்சொல்-தரு-இ-ம்-ஆகிரி-அட,தாளம்

பல்லவி,

சாபமிட்டாலுமிடுவீ ரினியிக்கச்- சஞ்சலந்தீர்த்தெனையாளுவீர்

அநுபல்லவி

கோபமிகுத்தாலுங்
கொள்ளுமோவெனதாசை
கோதையரைப்புணரக்
கின்றுமேகடலோனத்

சரணங்கள்.

௧. என்னைவைதாலும் வைகுவீரென்றாலும்
எரிதழலிடச்செய்குவீர்
அன்னையெனக்காமவ் வரிவையரிருவரும்
ஐயோயிதென்னவன்மம் வெய்யோன்குலத்துக்கன்மம் (சாப)

௨. அடர்வினைத்திடவல்லேரா விவ்வாதைசெய்குதீர்
அரிதயாமலுய்குதீர்
உடற்பிறப்பினைக்கூட வுடன்படுவாரோசுவாமி
ஊழ்வினைகள்செய்தா லாழிபொங்கமெய்தாதோ (சா)

௩. வக்கனையாக உரைக்கிறீர்தேவர்கள்
வண்மையெல்லாமறைக்குதீர்
அக்கினிசாட்சியா யணைந்தவளைவிட்டவ்
வரிவையரைக்கூடத் திருவுளமிகவாட (சா)

விசுவாமித்திரர்சொல்-விருத்தம்

துடிபருங்குலத் தோகையர்தங்களைத்
கடிமணஞ்செயத் தீதென்றகல்வனே
கொ... மசெய்யுங் கொடுபுலையர்க்குநீ
அடிமை... ...கழவே ௨௩.

(வ-ம்) நீசப்பெண்களை க...யாணஞ்செய்வது இழிவென்று சொன்னீ ருடனே இந்தலோகத்தோ...ரெல்லாரும் தூஷிணிக்கும்படி அனியாயஞ் செய்யக்கருதுந் தீயகுணத்...யுடைய நீசனுக்கு நீவிலையாகுவாய் அரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்சொல்-பழமொழி-விருத்தம்.

வேலியரனதுபயிர்த...ா மேய்த்திடவிதித்தால்
ஆலமன்னையர்பாலகர்க்கரிப்பரையானல்
காலனூர்விடு தூதர்கள்கட்டுவரானல்
மேவிதோர்ந்திதை யார்கொலோவிலக்குவார்விளம்பிர்

(வ-ம்) அகோவாரும் விசுவாமித்திரமுனிசுவரரே பயிரைக்காக்கும் வேலியே பயிரையழித்தாலும் பெற்றதாயேபிள்ளைகளுக்கு விஷத்தைக் கொடுத்தாலும் எமகிங்கரர் எமகண்டனைசெய்தாலும் இதுகளைவிலக்குவதற்கு யாவரால்சக்கியமாகும் தேவர்களால் கூடசக்கியமில்லையே சுவாமி

௰ச-அரிச்சந்திரன்சொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை. அடதாளம்

பல்லவி,

தடுத்திடுவாரெவர்காண்-உமதுரையை-விடுத்திடுவாரெவர் காசுண்

அநுபல்லவி.

தடுத்திடுவாரிக்க தாரணிதனிலுண்டோ
கொடுத்திடுவீரிந்தத் துன்பந்துலைத்திட-தடுத்

சரணங்கள்.

க, பழவினையறியாத பசுங்கிளிபோற்பேசும்
குழவிசொலுஞ்சொற்களிற் குற்றம்பிடித்தால்-தடுத்

உ, நஞ்சினைச்சிசுவுக்கு நாவிடுவேனெனும்
வஞ்சிக்கிதஞ்சொலி வையகந்தன்னிலே-தடுத்

௩, கடல்நீரைநீரொலாங் காய்ந்தழலெய்கையில்
மடல்நிறைசெய்தவை மாற்றவனோரல்லால்-தடுத்

ச, ஆக்கவுங்காக்கவு மழிக்கவும்மேயல்லால்
நோக்கவறிந்துமிக வொலித்திடைநாளும்-தடுத்

அரிச்சந்திரமகாராஜனும் சந்திரமதியும்-லோகிதாசனும்
மந்திரியுஞ்-சொல்-பாணவிருத்தம்.

தாயுந்தந்தையுந் தஞ்சமுஞ்செய்வமும்
நீயுண்டென்று நினைந்தருந்தோமெனுச்
செயும்வேந்தும் திருவுமமைச்சனும்
போயுன்பாதம் புகலெனப்பூண்டனர், (உரு)

(வ-ம்) கேளுந் தர்மபுத்திராதியரே அரிச்சந்திரமகாராசனும்சந்திரமதியும் லோகிதாசனும் மந்திரியானசத்தியகீர்த்தியும் விசுவாமித்ரருடைய பாதத்தில் சரணாகதியடைந்து தாயுந்தந்தையுந் தெய்வமும்அடைக்கலங்காப்பவனும் நீயேயென்று பின்னையுஞ் சொல்லத்தொடங்குவதாவது.

௫௫-தரு-இ-ம்-அசாவேரி-அட,தாளம்.

பல்லவி,

கருணாகரக்கடவுள் நீரையா - கடைக்கண்ணருள் கூர்ந்தெமைக்காரையா

அநுபல்லவி.

அருணம்புயப்பதம் தொழுவோமே-யும
தடைக்கலமெனுஞ்சொல்லே வழுவோமேஐயா(கரு)

சரணங்கள்.

க, உம்மையல்லாதெங்கட் குயர்துணையார்சொல்வீர்
உத்தமனேயிந்த வாழ்வினைக்கொள்வீர்
இம்மைக்குமறுமைக்கு மிடரும்பகையைகொள்வீர்
யினகுலத்தரசர்கள் கெடுக்கண்வராமல்செல்வீர்
அம்மைக்குசிகைசுத ஞபவதரித்திரோ
அருமறைப்பொருட்களா- ராய்ந்தனுசரித்திரோ(கருணா).

௨, அக்கணமிலேயும தருந்தவத்தாலெண்மை
யாண்டத்திரிசங்குமன்னன் அடைந்ததில்லையோநம்மை
இந்நாளினுமும திணையடிதொழுமெமை
ஈடேற்றவேவாவுமக் கெடுக்கொணாக்கலைச்சுமை
எந்நாளினிலுஞ்சாப மேலாமளருள்செய்வீர்
எமனேவலர்கட்கெமை இரைகொடுத்திடாதய்வீர்

௩, ஊழ்வினைப்பயனா லுமதுபகையடுத்தோம்
உலகிலெவர்களுக்கும் உறவெனப்பேரெடுத்தோம்
வாழியென்றென்னுநம்மீர் வாழ்த்தவுடம்பெடுத்தோம்
வாதுக்குச்சண்டைக்கு வந்தீர்தாழ்ந்துகொடுத்தோம்
பாழிலெங்களைக்கூத்தன் பற்றியிழுத்திடாமல்
பாவிகளுறைநரகோர் பார்த்துக்கொழுத்திடாமல்-(கரு)

பொது-விருத்தம்,

வேந்தனுடன்மந்திரியும் மகனுங்கொண்ட
விமலசந்திரமதியு மிவைவிளம்புங்காலை
நேர்ந்தபடிமறுமறுத்து மிகவெகுண்டு
மெந்நிலனுவளவிமிதம் நினைந்திடாமல்
சாந்தணியும்புயதனரிச் சந்திரன்றன்னைச்
சவலைமிகச்செயக்கருதி சகலருக்கும்
பாங்கமிலாமொழிகளினால் விசுவாமித்திரன்
பகருவான்கடுகடுத்து நகருவானே.

(வ-ம்) கேளும் கர்மபுத்திராதிகளே அந்தஅரிச்சந்திரமகாராசனும்மைந்தனும்-மந்திரியும்சந்திரமதியும் அனேகவிதமாயுபசாரஞ்சொல்ல அவர்களைமறுத்து மனதுக்குத் தோற்றிபடி பற்களை நெறுநெறென்றுகடித்து கோபாக்கினியினாலே திக்குத்திசை யாவும் தீய்ந்துபோகும்படிக்கு திருகுமுகமாய்பார்த்து இன்னமனேகமா யரிச்சந்திரமகாராசனை மிகவும் இமிசிக்கக்கோரி பூமியில் எவர்களுக்கும்சகிக்கப்படாத வசனங்களை விசுவாமித்திரமகாமுனிவர் சொல்லத் தொடங்குவது காண்க

௫௯-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்,

பல்லவி-

உன்னைப்போலேயிவ்வூரே மூலகாலரிச்சமர்த்தன்
ஒருவனுமில்லைகண்டாய்

அநுபல்லவி.

என்னைப்போல்முனிநாற்பத் தெண்ணாயிரவரையும்
வைத்துமூளையுதிர்ந்த வாய்த்ததென்பாயேமிண்டா (உன்னை

௧, மண்டலத்தன்னிலேநீகொண்டகாதலிசந்திர
மதிகன்னக் குறமேலி
மாதவர்க்குமவள்தன்முகம்பார்க்கமனக்குன்று
மகித்தானு மிகச்சோலி
விண்டலந்தனைவிட்டுத் தாய்வயற்றில்வளையில்
விளங்குமே இவள்தாலி
வேதமாலீசனுக்கும் வெளியானபாக்யசாலி
வேறேயுண்டோவுலகில் விரும்புமானுகூலி (உன்)

௨, மெத்தத்தவஞ்செய்துநீ பெற்றபிள்ளையியல்போ
மேருவிலும்பிர சித்தம்
மேவுதல்செய்திடவோரத்தக்கண்ணென்று போதம்
மின்னுமுனக்கு நித்தம்
உத்தமனிவனுனக்கொருத்தன்பிறந்ததாலே
உள்ளமகிழ்வாய் சாற்றம்
ஒருக்காலுமறியாயோ இவனதுபரிசுத்தம்
ஒருவர்க்குக்கிடைக்காது மலைக்கதேயுந்தன்சித்தம்(உன்)

௩, தந்தைதாய்சமர்சுற்றம் தெய்வமும்நீயென்றென்னைத்
தழுவுவதென்ன சூதோ
தந்திரத்திலும்மணி மந்திரத்திலுமாங்காய்
தரையில்வீழ்வ திப்போதோ
சிந்தையத்துயரால்மிக சொந்தவர்கள்போலெனச்
சிறுவதென்ன வாதோ
சித்தமகிழ்வாயத்தச் மோட்டிகளேசாது
சீருடனேமணஞ்செய்துகொள்வாயிப்போது

புராண-விருத்தம்,

கண்ணை வேண்டினு மீகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடனீகுவன்
பண்ணை வேண்டிய செஞ்சொற்பறைகுலப்
பெண்ணை வேண்டிலன் யானெனப்பேசினன் (௨௭)

(வ-ம்) கேளும் தர்மபுத்திராதிகளே தன்னுடைய கண்களைக்கேட்டாலும் ஆளப்பட்ட பூமியைக்கேட்டாலும் கொடுப்பேனேயல்லமல் பாதசாஸ்திரமறிந்த இனிமையான சொற்களைப்பேசும் நீசகுலப்பெண்களைப்பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளமாட்டேனென்றான் அரிச்சந்திரமகாராசனே,

பொது-விருத்தம்,

மருவுநாடும் வளநகரும்பெருந்
திருவுமிருவ னென்றனைச்செவ்வுபோய்
தருவனென்ற மொழிதவறாமலுன்
அரசளிக்கி னமையுமெனச்சொன்னான்

(வ-ம்) கேளுந் தருமபுத்திராதிபரே நீயாளப்பட்ட நாடுநகர் ஆனை சேனை பண்டுபண்டாராதி சகலைசுவரியங்களையும் தந்திடுவேன் என்று சொன்னாயல்லவோ உன்னுடைய பெண்டுபிள்ளைகள் ஒழிய மற்றயாவற்றும் என்னுடாகத் தாரைவார்த்துக்கொடும் பிள்ளாய் அரிச்சந்திர மகாராசனே

பொதுவிருத்தம்

எழில்விசுவாமித்திரனிந்த வண்ணஞ்சொன்னான்
இரவிகுலத்தரிச்சந்திரனியற்கையான
தொழிலிதுவேயென்மனத்துள் துன்பகன்று
தோகைசந்திரமதிகையாற்பொய்கைதன்னில்
வழிநீரைமொண்டுவந்துவார்க்கச்சொன்னான்
வனிதையுந்தன்கணவனுரைவழுவிடாமல்
மொழிதவறுதிருத்தலொன்றேவேண்டுமென்று
மோர்க்கின்றான்நீரெடுத்துவார்க்கின்றானே

வ-ம். இந்தப்பிரகாரமாய் விசுவாமித்திரர்கேட்டவுடனே அரிச்சந்திர மகாராசன் மனந்தெளிந்துதனது தர்மபத்தினியானசந்திரமதியைநோக்கி உன்கையினால் சலம்வார்க்கவும் நான்தத்தஞ்செய்யவும் தகைமையானதால் பொய்கையில்போய் சலங்கொண்டுவந்தால் உதகதாராதி பூர்வகமாய் தத்தஞ்செய்வேனென்றகணவன்மனம்கோணாமல்சத்யத்தர்மந் தவறுதொன்றே வேண்டுமென்றும் பொய்கை நீரை மொண்டு வந்து சகல்பரிவாரங்களையும்விசுவாமித்திரருக்குத்தத்தஞ்செய்வதுகாண்க,

௫௭-கரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

விசுவாமித்திரமுனியே எனைரட்சிக்க விரும்பிவந்திரோதனியே

அநுபல்லவி.

விசுவாசமாகயிந்த
வீரொல்பகைதயென்சனு
நசுவரமானயிந்த
நான்தாரைவர்த்தேனுய்வீர்

வேலையெங்கனுக்கருள்
விளிலுமறிகிலேனே
நாட்டினவளப்பம்யாவும்
நன்மைகிடக்கச்செய்வீர்

சரணங்கள்.

௧. ஆண்டிடும்பூமியும் அயோத்திமாநகரும்
ஆனைகுதிரைப்படை யணிவகுப்புமாணுவும்
வேண்டிடும்நற்பரியும் விளங்குங்கொடிப்படையும்
வெற்றிமிகுக்குடையும் விரும்பியகால்நடையும்
தாண்டிடுந்திரள்களுந் தாய்துர்க்கைதந்தமேருகும்
தனதாயமுமேழைகள் தங்குந்திருவாசலும்- விச

௨. ஏராளமாகச்சித்ர மெழுதியமடங்களும்
ஏகாந்தமாயோசனைக் கேகுமவ்விடங்களும்
தாராளமாயெவரும் தங்குமாமடங்களும்
தையலர்விளையாடத் தாவுமவ்விடங்களும்
காராளர்தொழில்செய்து களிகூறுமிடங்களும்
கணக்கில்லாமற்கட்டணங் கட்டுமவ்விடங்களும்- விச

௩. நாடகச்சாலையும் நறுமணச்சாலையும்
நன்னீர்தருஞ்சரயு நதிவருஞ்சாலையும்
பாடகசாலையும் பரித்திரள்சாலையும்
பள்ளியோதுஞ்சாலையும் பந்திவைக்குஞ்சாலையும்
ஆடகச்சாலையும் ஆர்ணச்சாலையும்
அரும்யாகசாலையும் அரசாட்சிசாலையும்- விச

பொது-விருத்தம்,

என்றுமன்ன னியம்பியயினைத்தநீர்
அன்றுகௌசிக னங்கயினேற்றபின்
நின்றமாதவர் தங்களைநேர்குறித்
தின்றுநீரொழுந் தார்த்திடுமென்றனன்.

(வ-ம்) கேளும்-தருமபுத்திராதியரே இந்தப்பிரகாரமாய்தாரைவார்த்துக்கொடுத்தபோதுகைக்கொண்டகௌசிகன்தன்னுடன்கூடவந்தமாமுனிவர்களைக்கூவி நீங்கள் யாவரு மானந்தங் கொண்டாடுங்களென்றபோதே அவர்கள் தாங்களடைந்தமனக்களிப்பினால்திருக்கூத்தாடத் தொடங்குவதுகாண்க,

௧-ஆனந்தக்களிப்பு-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

முனிவர்களானந்தங்கொண்டார்-அந்த
முன்னவனுருகை முழுதுங்கைக்கொண்டார் (முனி)

௧. கோசிகமுனிவனை வாழ்த்தி-அந்தக்
கோமானரிச்சந்திரன் கொடிதனைத்தாழ்த்தி

ஆசிகள்சொன்னாரயோத்தி வீதி
அடங்கலும்பூரணக்கும்பங்கள் சாத்தி-முனி
உ, வாரணமும்பரிதேரும் உள்ள
வரிசையும்பரிசையும் வாமுந்தலமும்
ஆரணமோதுவோர்சீரும் முனிக்
காணவெனப்பறையறந்தா ரூர்தோறும்-முனி
௩, விரிசடையோர்தலைப்பட்டார் வேத
விதிகளிநூலோர்விருப்பங்கொண் டிட்டார்
புரிசடைகளைவிரித்திட்டார் அந்தப்
புண்ணியமாதவர்புகழ்ச்சிபெற் றிட்டார்-முனி

பொது-விருத்தம்.

மன்னனைச்சந்திரமதியினையின்றனைந்தனைக்கோசிகன்மறித்து
இன்னவையின்னயிடத்திருக்கிதனையிந்நெறியாளுதியென்றும்
என்னுடைக்கலத்திலிருந்திடுவோர்களவரையுமெனக்கொப்புவி
த்து,உன்னுடையாளவாழ்யுமளித்தலுவாய்கூடுவாயென்றான்.

(வ-ம்) அப்போ விசுவாமித்திரமுனியானவர் அரிச்சந்திரனையும் சந்திரமதியையும், லோகிதாசனையும் வழிமறித்துக்கொண்டுதனக் குதானவார்த்துக்கொடுத்ததையுந்தானளப்பட்டபட்டணத்திலு ள்ளஜெனங்களையும் தனக்கு ஒப்புவிப்பாயென்று ஆளுகைக்குத் தகுந்தமுத்திரைமோதிரமுங் கொடுத்தபிற்பாடு அயோத்தியாபுரி யை விட்டுப் போவாயென்றபோது நடப்பதுகாண்க.

அரிச்சந்திரன்சொல்-விருத்தம்

வண்ணமாமயிலேசந்திர மதியெனும்பெண்ணேகேளாய்
எண்ணமுங்கலங்கவொண்ணா தெத்திறவருமையாகித்
கண்ணகமகிழ்வதல்லாற்கருத்தினிலிருத்தோணாது
திண்ணமேபுகல்வோமொன்றுந் திரைமெய்திடாரோ.

(வ-ம்) மயிலினுக்கொப்பான சந்திரமதியே உன்னுடையஎண் ணங்கலங்காமல் எப்பேர்ப்பட்ட துன்பமாயினுங்கண்ணாரக்கண் டுகளிப்பதல்லாது கருத்திலிவைத்துக்கொண்டு விசனப்படுவது க மமல்ல சத்தியத்தையே நிலைநிறுத்துவோமே யானல் சொர்க்கா லோகஞ் சேரலாம்பெண்ணே அயோத்திக்குப்போவோம் வாரு ங்கண்ணே.

௰அ-தரு-இ-ம்-சகாஞ-அடதாளம்-கண்ணிகள்

சந்திரமதி.

நடந்திடுமன்னவா-மிக-நல்லபுத்திசொன்னவா-முன்னே
நடந்திடுமன்னவா
அடைந்திடுமரண்மனைவெகுதொலை ஆசையால்மென்
வேகமதாகவே (நடந்திடு)

இராசன்.

மடந்தைமாமயிலே-சந்திர-மதியெனுங்குயிலே-செல்வ
மடந்தைமாமயிலே
நடந்தப்பாமல்தலசியருடன்
தனயனைக்கூட்டிதனாவழிநட (மடந்தைமாமயிலே)

சந்திரமதி.

மெத்தவும்நீர்மெலிந்தீர்-தேகம்-சத்தமதாய்நலிந்தீர்-மன்ற
மெத்தவும்நீர்மெலிந்தீர்
உத்தமனேயிந்தஒத்தையடிதனில்
வைத்தடிதன்னைப் பெயர்த்தடிவையாமல் (நடந்திடு)

இராசன்.

கோசிகமாமுனிவர்-மிக-நேசமதாய்ப்பொருளை-பெண்ணே
கோசிகமாமுனிவர்
வாசியாகநம்மையடுத்துவாங்கவந்த
யோசனைகண்டிட-ஆசையொழிந்திடும் (மடந்தைமாயி)

பொது-விருத்தம்

மங்கையுமன்னனுமகனுமுன்னடக்க
மந்திரியும்மாமுனியும்பின்னடந்தார்
பங்கயப்பொற்பதம்போற்றும்பரிவினோரும்
பாரிலுள்ளபற்பலரும்ப்ரமிப்படைந்து
செங்கையிரண்டையும்வீசிநடந்தாரானை
சேனைசதுரங்கதளஞ்சிறந்துமீள
அங்கெவருஞ்சாகேதமடைந்தபோது
அறிவிப்பானரிச்சந்திரன்தெரிவிப்பானே, (௫௫)

(வ-ம்) சந்திரமதியும்ராசனும் லோகிதகுமாரனும்முன்னேநடக்கமந்திரியான சத்தியகீர்த்தியும்விஸ்வாமித்திரமகாமுனீஸ்வரரும்பின்னேநடந்தார்கள் அரசனடிபணிந்து ஆதரணைபெறும்மனுஷியாளும் அண்டியிருக்கிறஏழைகளும் பலவிதமான நாநாதேசஜனங்களும் திகைத்து கைகளைவீசிக்கொண்டுநடந்துவந்து அயோத்தியா.

புரஞ்சேர்ந்தபோது அரிச்சந்திரமகாராசன்யாவருமறியஎவர்களுக்குந்தெரியப்படுத்துவதுகாண்க.

யிகூ-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்

கண்ணிகள்.

க, நகரிச்செனங்களே நான்விஸ்வாமித்திரருக்கு
நாடெல்லாந் தாரைவார்த்தேன்
சிகரியானைபரி சேனைகாவலாண்ட
சீமையை தாரைவார்த்தேன்

உ, ஆண்டிடுமுத்திரை யமர்ந்திடுஞ்செங்கோலு
மாழியுந் தாரைவார்த்தேன்
வேண்டிடுவிரிந்த விசுவாமித்திரர்பாதம்
வெற்றி யிகுத்தவரே

ந. வேதாகமங்கள் புராணங்களோதி
விலக்கிய திவதியரோ
சூதாகவாயினல்சொல்லேனொருக்காலும்
சுருதிகள்கற்றவரே

ச, வெற்றிமிகுத்த விளங்கியிந்நாடா
க்ஷத்திரிய ராசர்களே
புத்திமிகுத்துப் பொருள்கள்விளைவிக்கும்
புகழிளவர்த்தகரே

ரு, நாட்டிலுளநஞ்சைபயிரிடும்
நலமுளசூத்திரரே
பாட்டில்மிகுத்துப் பயிர்களைச்செழிப்பிக்கும்
பள்ளப்பறையர்களே

இராஜன்·குடிகளுக்குச்சொல்-விருத்தம்.

நாற்றிசைதன்னிலுள்ள நாடெல்லாமுனிவனுக்குப்
போற்றியேதாரைவார்த்தேன்பொற்புளபுனிதர்பாதம்
ஏற்றியேதுதித்திறைஞ்சி யெனைத்தொழுதிருந்தநீர்மை
சாற்றியபணிகள்செய்து சகத்தினில்வாழ்ந்திடீரோ.

(வ-ம்) அநேகவாருங்கள் பிரமக்ஷத்ரியவைசியசூத்திரபள்ளப்பறையர்முதலானசம்ஸ்தமானவர்களே நானண்டராச்சியமும் அதைச்சேர்ந்தநாடுகளும் அதுகளிலுள்ள ஆனைசேனைபண்டுபண்டாரமுதலானதுகளையும் விஸ்வாமித்திரமுனிவருக்குதாரதத்தம்செய்துவிட்டபடியால்யாவரும்எனக்குச்செய்தமரியாதையிலும் அதிகமாய் நடந்து அவருக்குபாதபூஜைபண்ணுங்கள்நகரத்திலுள்ளவர்களே

விருத்தம்,

துணியுந்தனிநெஞ்சடையாய்நின துதோண்மாலை
மணியும்வளையும் வலயங்களுநின்வடிவாளும்
அணியும்முடியுஞ்சேயுந்தாயுமணியும்பொற்
பணியுங்குழலுதந்தேகனென் றுபலசொன்னுன், (ருகு)

(வ-ம்) துணிந்தநெஞ்சுடையவனே உன்னுடையதோளிலிருக்கும் அல்லியின்மணிமாலையும்முத்துமாலையும்வளையல்களும் வலயங்களும் உடைவாளையும் உன்னுடையகிரீடத்தையும் பெண்சாதியும்பிள்ளையும் அணிந்திருக்கப்பட்ட ஆபரணங்களும் பாதச்சிலம்புகளும்கொடுத்துவிட்டுப்போவென்ருர் விசுவாமித்திரர்

விருத்தம்.

எத்துக்கிவையென் றணிமாமுடியும்வடிவாளும்
புத்திப்புதல்வன்பூணும்பணியும்புனைமாதின்
பத்திக்கிரணப்பணியுங்கனகப் பணியும்வெண்
முத்திற்பணியுங்கழியாமுனிவன் முனமுய்த்தான்

(வ-ம்) இதுகளெல்லாமென்னத்துக்குஇதுவரையில்அணிந்திருந்துசந்தோஷப் பட்டதுபோதும் இனிசத்தியமொன்றேதமக்கு நன்மையென்றுநினைத்துதானணிந்திருந்தபூஷணங்களும்மைந்தன்பூண்டிருந்தஆபரணங்களும்பெண்சாதிதரித்திருந்த பூஷணுவளிகளும்எடுத்துவிசுவாமித்திரருத்குக்கொடுத்துத்துதித்து இன்னமும் பொறுமைசொல்லத்துடங்குவதுகாண்க,

உய-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்,

பல்லவி,

முனிவரோமனம்விள்ளுவீர்-பணிதிகள்-முழுவதுங்கைக்கொள்ளுவீர்

அநுபல்லவி.

தனிவழிபோகையிற் றயங்குவோமயங்குவோம்
இனியவாறருள்செய்தீர் எதுங்குறைவில்லாமல்-முனி

சரணங்கள்,

க, மன்னர்மன்னர்சூடிய மணிமுடியை
மாதவா சூடிக்கொள்ளுவீர்
வன்னவன்னமணிகள் பதித்திட்ட
வண்மைத்தோடுகள் கைக்கொள்ளுவீர்
சன்னஸரப்பளியும் சொர்ணபுஜகீர்த்தியும்
சத்திரஆரமும்பிடி சரங்களுங்கைக்கொண்டு-முனி

௨, நாககங்கணங்கைக்கொள்வீர் மார்பிலிலங்கும்
நவரத்தினப்பதக்கங் கொள்வீர்
மோகனமாலைகள்கொள்வீர் கழுத்திலுள்ள
முத்துமாலைகள் கொள்வீர்
யோகன்வைபோக னுமைப்போலிலைகண்டீர்
ஏகனேகீர்த்திக் கிசைந்தமனப்பாலுண்டீர்-முனி

௩, பாதச்சிலம்புகொள்வீர் பெண்களணியும்
பாடகந்தண்டை கொள்வீர்
மோதிரங்கள்கைக் கற்கட்டு
மோதமாயாமணிந்த கொள்வீர்
வேதன்மாலீசனும் விண்ணோரும்மண்ணோரும்
மோதமாயுந்தனைப் புவியிற்றினம்புகழ-முனி

பொது-விருத்தம்.

வள்ளலன்சென்னிமிசை வகித்திருந்த
வலியநவமணிமுடியும் வளமிகுத்த
பிள்ளையின்றன்மெய்திகழ்ந்தபணிகள்யாவும்
பிசகில்லாதனுவளவும் பெயர்த்தபின்பு
கள்ளமனமொழிந்தசந்திர மதியாளென்னுங்
கன்னியினற்பணிதிபெலாங் கவுசிகற்கு
எள்ளளவுங்கபடமிலா தெடுத்தளித்து
எடுமென்றான்போகவிடைகொடுமென்றானே. (௫௭)

(வ-ம்) அகோகேளுங்கள் குருகுலமன்னர்களே அந்தஅரிச்சந்திரமகாராசன்றரித்திருந்த திருமுடிமுதலானசகலபூஷணங்களும் இராசகுமாரனது சர்வாபரணங்களுங்கிஞ்சிற்றுவது கபடமில்லா தமனதையுடைய சந்திரமதியினது பூஷணவளிகளையுங் களைந்து விஸ்வாமித்திரர்முன்டாகவைத்து நமஸ்கரித்து உத்தாவுகேட்பது காண்க

உக-இராசன் விஸ்வாமித்திரருக்குச் சொல்

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்பல்லவி

விடைகொடுத்தருள்வீரோ-வேறுநாடேக-விசுவாமித்திரமுனிவரே

அநுபல்லவி

தடையோதுமுண்டோயாந் தங்கியிங்கிருந்திடக்
கடைப்படாதெங்கள்மேற் கடுஞ்சினமாற்றிநீர்-விடை

௪, மாரீமணிமுடி சரணங்கள் சூடுவீர்-உமதுதிரு
மாபதத்தலே நா ... ர்

கோமகனெனக் கூடுவீர் - சத்தியத்தின்செங்
கோன்முறைதனைத் தேடுவீர்
பூமகள்நண்பனும் நாமகள்கொழுனனும்
ஈமத்தாடியும்வானோ ரெவர்களும்களிகூற - விடை
உ. படைகளைப் பாதுகாப்பீர் மிகப்புகழ்
படைத்தவீரர்களைச் சேர்ப்பீர்
அடைத்தவிதித்துத் தீர்ப்பீர் - அவனியி
லகுதிக்குக்கஞ்சி வார்ப்பீர்
படைத்தோனெழுத்தின் படியில்லா தின்றதை
உடைத்தோரெவர்களுநண் டுளமகிழ்ந்தெங்கட்கு - விடை
௩ வெதியர்களை யடுப்பீர் - அவர்கட்கு
வேண்டும்பொருள் கொடுப்பீர்
ஆதிநாட்பகை விடுப்பீர் - எதிர்த்திடும்
அரசர்மேற் கணைதொடுப்பீர்
நீதிதவறாத நெறியுடனரசாள்வீர்
கோதிலாமாதவக் கோசிகனைநாள்வீர் - விடை

பொது - விருத்தம்

விடையருளிப்போவென்ற விசுவாமித்திரன்
வெடவெடத்துக்கடுகடுத்துமுறுமுறுத்து
தடைதடையங்கிருவொருசொற் றப்பிப்போனேன்
தரணிதனிலாண்டசதுரங்கசேனைப்
படைதனையுங்குடைதனையுந் துறந்தபேர்க்குப்
பட்டுப்பீதாம்பரமேன்பார்ப்பொரில்லை
அடையுமெனக்கதையுமளித் திந்தக்கந்தை
யதையணிவாய்வழிநடக்கத்துணிவாயென்றான் ௩அ

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்ப் போய்வாருங்களென்றுரைத்தவிசுவாமித்திரர்மறுபடியும்காலாக்கினிபோற்சீறிபோகாதேபோகாதே இரு இரு ஒருசொற்றப்பிபோனேன் இங்குவா நீங்களாண்டவனுற் பவித்தயாவையுந் தத்தஞ்செய்த உங்களுக்குப்பட்டுப் பீதாம்பரமேன் அதையும்உரிந்துகொடுத்து இந்தக்கந்தைகளைக்கட்டிக்கொண்டுபோங்களென் றுரைத்தபின்நடப்பதுகாண்க. இதுவுமது,

வள்ளலன்முன்மாமுனிவனிந்தவாறு
வழுத்துதல்கண்டகங்களித்துத்தனதுராசும்
கள்ளவிழுமலர்க்கூந்தற்சிறந்துலாவும்
காரிழைசந்திரமதியாளணிந்ததூசும்

உள்ளமதிற்சத்தியமேமிகக்கொண்டாடும்
ஓங்குபுகழ்குமாரனதனுசும்நீற்றுத்
தள்ளப்போகாதிவைகைக்கொள்ளுமென்று
தாண்டுவான்மலர்ப்பதத்தைவேண்டுவானே ௯௬

(வ-ம்) இவ்விதமாயரசன் முன்னுரைத்தமுனிவரது பாதத்தை போற்றிசெய்து தானுடுத்தஉடுப்பையும் லோகிதாச னுடுப்பையும்சந்திரமதியினுடுப்பையும் அவிழ்த்துக்கொடுத்துஉத்தரவுகேட்பதுகாண்க.

உஉ-இராசன்சொல்-தரு-இ ம்-வராளி-அடதாளம்.

பல்லவி

உத்தாரந்தாருமையா-எங்கட்கினி-யுத்தாரந்தாருமையா

அநுபல்லவி,

சித்தாளர்நிரித்தச் செல்வமெல்லாம்ஆள்வீர்
அத்தாஉமதினை யடிதொழுதோமீள்வீர் - உத்

சரணங்கள்

௧. சந்திரகாந்தத்தைப் போல்நாணணிந்திடும்
சரிகைச்சோமனும் சால்வையும்
சுத்தமானபொன் னுருமாலுடனங்கியும்
சோதிகாத்திலகுந் துவாலையுங்கைக்கொண்டு - உத்

௨. குதனணி சிற்றாடையும்-இடைதனில்
சோதிமணிக் கச்சையும்
விதனமில்லாதளித் தென்விசுவாமித்திரரோ
பதனமுடனேகப் பாங்குடனீரேமக் உத்

௩. சந்திரமதியணிந்த பசும்பொன்னின்
சரிகைச்சேலையும் கைக்கொள்வீர்
அந்திரமானேனுமாகிலு மாசிகள்மிகக்கூறி
தந்திரமாயின்னோர் தாரணிசேர்வாயென - உத்

பொது-விருத்தம்.

பணிந்தவரிச்சந்திரனைமுனிவன்சீறிப்
பார்வையிலேகனற்பொறிகள்பரபரக்கத்
துணிந்தமனம்படைத்தனையேயினியென்னென்ன
துன்பத்திற்காளாகாயென்றுதூற்றி
அணிந்தநற்பொற்பணியுடனுடையீந்தால்
ஆழிமுதற்பீலிவரையாவுமீந்தாய்
தணித்தனமென்சினமினிப்போவென்றுகூறித்
தாவினுன்பூமானுவினுனே.

(வ-ம்) அகோகேளும் தருமபுத்திராதியரே சரணாகதனான அரிச்சந்திரனை விசுவாமித்திரமகாமுனிவன் மிதிப்பட்ட சர்ப்பம்போற் சீறிப்பார்க்கும்பார்வையிலே தாபாக்கினி பொரிபறக்க அரிச்சந்திரா உன்னுடையமனது மிகவுந்துணிந்தது இப்பேர்ப்பட்ட மனதையுடையவன் என்னென்ன இமிசைக்கெல்லாம் எதிர்நிற்கமாட்டாய் தரித்துக்கொண்டிருந்த ஆடையாபரணங்களையும் அணிந்திருந்த கணையாழி முதல் காற்களிலணிந்த பீலிவளையிலும் தாரைவார்த்துப் போட்டாய்நானும்கோபந்தணிந்தேன் இனி எங்கேயாவது போவென்றார் விசுவாமித்திரமகா முனிவர்.

பொது- விருத்தம.

கோசிகமாமுனிவனிந்தக்கோலஞ்செய்தான்
குரிசிலரிச்சந்திரனுங்கொடுமையென்று
மாசிலாச்சுதன்லோகிதாசன்முன்னும்
மாதுசிரோமணிச்சந்திரமதியாள்பின்னும்
வசிமுதலுப்பரிகைவளையிலந்த
உத்தமமாமுனிக்களித்தோமுசிதவார
காசிநகர்தனை நோக்கி நடப்போமென்று
நகருவார்முகமலர்ந்துபகருவாரே.

(வ-ம்) அகோகேளும் தருமபுத்திராதியரே விசுவாமித்திரமகாமுனிவர் இவ்விதமாய்த்தானங்கொடுத்தபின்பு அரிச்சந்திரமகாராசனும் ஈஷித்தும் கபடமென்னாத குற்றமற்ற புத்திரனாகிய லோகிதகுமாரனும் முன்னேசெல்லஸ்திரீரத்நமாகிய சந்திரமதியானவள் பின்னே செல்லும்போது வசிமுதலான பலவிதபண்டங்களையும் முனிசிரேஷ்டராகிய விசுவாமித்திரர்க்குக் கொடுத்துவிட்டோமாகையால் காசிபட்டணம் நோக்கிபோனால் க்ஷேமங்கிடைக்கும் போவோமென்று ஒருவருக்கொருவர் முகமலர்ந்துபேசிக்கொண்டு அடிமேலடியாகமெள்ள மெள்ள நகருவதுகாண்க.

தரு-இ-ம்-தனாசரி-அடதாளம்,

கண்ணிகள்,

அரிச்-காசிதேசம்போவோம்வாராய் பெண்ணேவாராம்
கோசிகனமக்குச்செய் குணங்களைப்பாராய்.காசி
சந்திர-திருவருட்படிசெய்வேன்நாதா பிராணநாதா
மருவியதிருவுள மகிழும்விநோதா-திருவு
அரிச்-மாமுனிவர்பாதத்தைப்போற்று மகிழ்ந்தேற்று
காமுகியேமைந்தன் களைதாளையாற்று-மாமு

சந் ச-காதிமார்கட்குரைத்துவாரேன் ஆக்ஞையுமீறேன்
சோதிகுலேந்திரா வுந்தன் சொற்கெதிர்கூறேன்-தாதி

அ-ச-மாமறையாளர்பதம்பணிவாய் மனந்துணிவாய்
தாமரைத்தாட்களுன் தலைமிசைபணிவாய்-மாமு

சந்திர-வீதிவீதியாய்ப்பார்ப்போம்வாரீர மனந்தேறீர்
நீதிசொற்றவறிடா நெறிதனைக்கோரீர்-வீதி

பொது-விருத்தம்,

போக்குவிட்டமாமுனிவனிவர்கள்நோக்கிப்
போவதுகண்டின்னமொருபுதுமைசெய்வோம்
வாக்குநமக்களித்ததுபோ ரானைமீதோர்
வலியவனேறியெறிந்தகவண்போம்பொற்கள்
சாக்குச்சொல்லா தளிக்கச்சக்தியில்லைச்
சத்தியவார்த்தையைத்தவிழ்ப்பான்சதுரன்சொல்லை
நீக்குதற்குற்றருண மிதுவேயென்று
நில்லென்றுன் ஒருவசனஞ்சொல்லென்றானே.

(வ-ம்)இந்தப்பிரகாரமாய் போக்குவிட்ட விசுவாமித்திரர் இவர்கள் நோக்கிப்போகிற விசையைக் கண்டு இதைப்பார்க்கிலும் வேறொரு அலங்கோலஞ்செய்வதாவது நமக்கு முன்கொடுக்கவேண்டிய ஆனைமேற் கவண்போ முயரமுள்ள பொருட்களை கொடுக்க இப்போதுசக்தனல்ல பொய்சொல்லத்துணிவான் சத்யதர்மந் தவர்ந்திடும் என்கிறஎண்ணமுற்று நில்லுமென்றுசொல்லத் துணிவதுகாண்க.

உச-தரு,இ-ப்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்,

பல்லவி,

பொறுபொறுஇன்னமொரு சேதிசொல்லஉண்டு
போகாதேபுரவலனே

அநுபல்லவி.

அருவருப்புக்கொண்டுந்தன் ஆகம்நோகாதே
அவதிக்கென்செய்வேனென்று கோபங்கொள்ளாதே
மருவியதேவரும் மாதவருமிசம்
மதிமோசம்போனேனே விதிவசமானேனே-பொ

சரணங்கள்.

க, அன்றளைதனடக்கவ மாகயிருந்திட்ட
ஆனைமீதேறிக்கவ ணெறிந்ததூரம்
குன்றப்போனாகிரக்-கொடுத்துபோனபொருட்கள்
கோடிகோடியுண்டதைக்-கொடுத்திடுவாயிக்னேரம்

இன்றுமுதலாய்வேள்விக் கிசைந்தமாமுனிவர்கள்
எவர்களையுமழைக்க இமையோர்செங்கோல்தழைக்க
நின்றுகன்றுகன்காக நிறைந்தமறைகளோத
நிலைகுலையாவெண்டிசை நிருபர்கட்கருள்மோதப்(பொ)

௨, வெத்தியில்மிகுத்திடும் வேந்தர்களுனைப்போல்
விண்ணிலுமண்ணிலும் விரகொருவரில்லை
புத்தியில்மந்திரி சத்தியகீர்த்தியைப்போல்
பூவுலகினில்வேறு புகழ்ச்சிபெற்றோரில்லை
சத்பரிச்சந்திரனெனச் சாற்றும்பேருக்கல்லால்
சகலருக்குமோசொல்லை சதரனெனப்புல்ல
முத்திவழிக்கிசையும் முந்திரைபிசகில்லை
முதல்வனேயிதின்வழி முறையறிந்தாயில்லை(பொ)

௩, ஒண்ணுரெண்டாபத்தா ஒருநூறுயிருநூறு
ஓராயிரமாநூறாயிரமா ஒருகோடியா
எண்ணுகபொன்னெவ்வள வெண்ணியபொன்னெவ்வள
வந்தசித்தபத்திரனு மெண்ணமுடியாதே
தண்ணூர்ந்தவுன்னெஞ்சந் தயக்கவேண்டாமெந்தன்
தனங்களைத்தந்தாலாச்சு தரேனென்றுவிலையேச்சு
புண்ணாகவேண்டாங்கை பூண்டபொருளோது
போய்விடுவீரென்றால் போதுமதேயனந்தம்(பொ)

இராசன்சொல்-விருத்தம்.

முன்னமுனக்குச்சொன்னதிறத்தின்மொழிமாறி
அன்னதனைக்கொண்டின்னிதிதந்தேனல்லேன்யான்
நன்னகரோடும்பொன்னுளமுற்றும்நனிதந்தேன்
இன்னமுனக்குப்பொன்றரவென்பாலிடமுண்டோ,

(வ-ம்) ஆதிகாலத்தில் உமக்குச்சொன்ன சொல்லையும்இகநடவ்சேர்த்து அதுவும்என்னுடையநகரும் தாரைவார்த்தேனல்லாமல் எனக்குடன்பட்டிருக்கிற நாடுநகரியானைசேனை பரிவாரமுதலான உடுத்தவஸ்திரமுதலானதுகளு முமக்குக்கொடுத்தபிறகு இன்னமும் என்னிடத்திலுமக்குத் தரும்படியான சொத்துக்களுண்டாசுவாமி,

விசுவாமித்திரர்சொல்-விருத்தம்.

தாருடனேசெந்தாமரையாள்சேர்தடமார்பா
யாருடனேயிம்மோச முறைப்பாயறிவில்லாய்
ஊருடனேமுன்கூறிய பொன்னுமுடனின்றே
நீருடனேநீபேசியளிக்கநெறியுண்டோ

(வ-ம்) கிண்கிணிமாலையையுடைய செந்தாமரையாளான மகாலட்சு மிக்கொப்பான சந்திரமதி வாசமாயிருக்கிற மார்பை யுடையவனேயரி டத்திலேஇப்பேர்ப்பட்ட மாறுபாடு சொல்லுகிறாய் புத்திபற்றவனே நீதாரைவார்க்கும்போது யான் உமக்குக்கொடுக்கப்பட்டஉன்னுடைய நாடுநகருடனே இதுக்குமுன்னேஎன்னிடத்தில் ஒப்பித்திருக்கிறபொரு ட்களுமென்றுசொல்லி தாரைவார்த்ததுண்டானால் சொல்லுவாய்அரி ச்சந்திரமகாராசனே,

பொது-விருத்தம்,

மொழிதவறாரிரவிகுலத்தரசனென்னும்
  மொழியுடனித்தில்லையென்னமுனிவன்சொல்லப்
பழிசுமக்காற்போனென்றுவீரங்குன்றிப்
  பண்புடையமதிபடைத்தோயபாதம்போற்றி
விழிநுதலோன்விதிஅரிகட்கிணையாயென்னை
  விதியினாற்பொருளுளதோவிதியற்றேனே
வழிவிடுவாய்தவணையிட்டுவருக்கும்பொன்னை
  வந்திடுவேன்தந்திடுவேன்வருவேனென்றான்,

(வ-ம்) அகோகேளும் ஞானசிரோமணிகளே இந்தப்பிரகாரமாகவி னாவிய விசுவாமித்திரர் சூரியகுலத்திராசர்க்கள் சொற்றவறுமென்பது உன்னிடத்தில்மாத்திரம் இல்லையென்று உகாசனிக்கக்கண்ட அரிச்ச ந்திரமகாராஜனானவன் பஞ்சமாபாதகஞ் செய்தவனைப்போற் பதை பதைத்து வீரியமழிந்து முனிவரைச்சரணமடைந்து அரிஹரப்பிரம் மாதிகட்கும்ஸமானதபோதனரே ஸர்வஸோபசாரமும்இழைத்தஎன் னை இன்னமும்இம்சித்தால் என்னிடத்தில்தொகையேதுஆகிலும்இத்த னைநாளில் தருவதென்று தவணையிட்டனுப்பினால் தந்துவிடுகிறேனெ ன்று ஒப்புக்கொண்டு தவணைகேட்பதுகாண்க.

தரு-இ-ம்-சாவேரி- ஆதிதாளம்,

கண்ணிகள்,

மன்னவன்

க, தவணை தந்தருள்வீரையா-மாமுனிவரே-தவணை தந்தருள்வீரையா
  அவனரனையென்னை   பதிக்குக்கடைசெய்தாய்
  சுவனமுள்ளதுந்தாரேன்   சொற்றவறுதலெய்தாய்(தவ)

முனிவன்

உ, பொற்றடவரையினுக்கும்மேலோர்புகழும்-புண்யசாலிக்குமப்பால்
  நற்றடமாமயோத்தி   நாடுநகருக்கப்பால்
  சற்றவனேநடந்தால்   நற்பொருக்கள்கொட்டியாம்(பொ)

இராசன்

௩, இந்தவெல்லைகடக்கவோமுனிவரோன் இதிலுந்தாண்டக்கவோ
இந்தவெல்லைகடவேன் இரட்டிப்புப்பொன்னுந்தாரேன்
முந்தவேநீருரைத்த மொழியோவனந்தங்கோடி (இந்)

முனிவர்,

௪, தருவதுமாறிடிலோ-வதனுக்கொரு-சத்தியச்சொல்மொழிவாயே
வருவவனுவானாலும் வாய்மதமிகுமலவோ
கருவமைத்தெவர்க்கும் காணவொண்ணாதுகண்டாய் (கரு)

பொது-விருத்தம்,

வேந்தனுட்னிதுகூறிவிஸ்வாமித்திரன்
விளங்குமுகமலர்ந்துவெகுவிசித்ரமாகச்
சாந்தணியுந்திருநுதலினாம்நீகொண்ட
சக்கரமதியெனுமாநுமவன்வயிற்றிற்
சாந்தமுடன்வந்துதித்ததனயனை
சதுரில்மிகுலோகிதனும்மூவர்நீங்கள்
பாந்தமுடனொருமித்தோர்சத்யவார்த்தை
பகர்விரிவ்விடம்விட்டுநகர்வீரென்றான்

(வ-ம்) இவ்விதமாகச்சொல்லி நீயும்உன்தர்மபத்தினியாகிய சந்திரமதியும் குலோத்தாரகனுன உனதுகுமாரன் லோகிதாசனும் எவ்விதமாவது பிராமணபூர்வகமாய்ச் சொன்னால் தவணையிட்டனுப்புவேனென்றவிசுவாமித்திரருக்கு அரிச்சந்திரமகாராசனும் பிரமாணஞ்செய்வது காண்க,

உ௯-தரு-இ-ம்-பிலஹரி-சாபுதாளம்,

பல்லவி,

அடைந்தபதவிகளடையவோமையா உமதாக்கினைதப்பினேனோ (அடை)

அநுபல்லவி.

கடைந்தவெண்ணெயில் மாவைக்கலந்தவன்
காராம்பசுவின் நிறைக்கலந்தவன்
உடைந்தமுடிகலே ஒட்டிமலிந்தவன்
உறுதிசொல்லியபின் னுள்ளம்நலிந்தவன் (அடை)

சரணங்கள்.

௧, நெஞ்சிலொருவினை நினைந்துகெடுத்தவன்
நிதிநெறியனு வளவும்விடுத்தவன்
அஞ்சினேனையிக வல்லற்கொடுத்தவன்
அருகிக்கிடும்பிச்சை யதனைத்தடுத்தவன் (அடை)

௨, தூர்த்தனென் றுடம் பெடுத்துத் திரிந்தவன்
துணைவஞ்சகர்வலைத் தன்னிற் பிரிந்தவன்
கார்த்தவேர்கட்கவ கடன்கள்புரிந்தவன்
காரிலைதபர்கள் தன் கழுத்தையரிந்தவன் (அடை)

௩, உண்டவீட்டுக்கு ரண்டகஞ்செய்தவன்
ஓரிபோற்பெரி யோரை வைதவன்
அண்டர்களைப்பழித் தாயகழுய்தவன்
அருந்தவந்தோர்களை யம்பினுலெய்தவன் (அடை)

பொது-விருத்தம்,

நலமுளவின்னெறி சொல்லவிசுவாமித்திரன்
நற்றினவோரிருபதுக்குட்பொருட்களெல்லசம்
குலமுழுதுங்கீர்த்திபெறத்தருவாயென்னக்
கொடுத்தகெடுவிருமருக்கிற்குறைந்துகாசித்
தலமுனையபடையோமென்செய்வோமென்னத்
தவசிம்விருமடக்குதவணைசொல்ல
நலமுடையோய்தூதுவனையனுப்புயென்ற
நரபதிக்குமகபதியும்நவிலுவானே. (௬௬)

(வ-ம்) இக்தப்பிரகாரம் பிரமாணஞ்செய்த இராசனைப்பார்த்து இன்னம் இருபதுதினத்திற்குள் பொருட்களையெல்லாந் தாவேண்டுமென்ன இப்போது தீர்ந்ததெடுவிற் கிருமடக்கானபோதிலும் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தின் எல்லைக்காண்ப தரிதாமென்றேங்க அப்படியே நாற்பதுநாள் தவணையிட்டுக்கொடுத்த முனிவரைப் பார்த்து தகைகணக்கைக்கொள்ளும்படியான தூதுவனை யனுப்புமென்ற அரிச்சந்திர மகாராஜனுக்கு யாகாதிபதியான விஸ்வாமித்திரமகாமுனிவர் சொல்லுவதுகாண்க

விருத்தம்

பாரளித்தகொற்றவின் பதியிடைசென்றால்
ஆரளித்ததென்பர்நின்னடியவரொவரும்
ஊரளித்திடவுடன்வரத் துணிதியிதொழியின்
நீரளித்ததேதெனக்குமண்ணினக்கெனமொழிந்தான்

(வ-ம்) அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா நீகொடுத்தபூமியையும் தனதான்யாதிசமஸ்தபாக்கியங்களையும்நாம் கைக்கொள்ளப்போனால் உன்னுடைய ஆக்ஞையைச்செலுத்திவந்த ஒவ்வொருவேலைக்காரர்களும் உடன்படாமல் உனக்குயாவர்கொடுத்தார்களென்றுவெதும்புவார்களாகையால் நீயும் என்னோடு அயோத்திக்குவந்து சாமாதிக ளெல்லவரையும் ஒப்பிவித்துப்போ இல்லாவிட்டால் நீதந்ததெல்லாம் உன்னுடையதுதான் நீயேவைத்துக்கொள்ளும்பிள்ளாயென்று சொன்னார் விசுவாமித்திரர்.

பொதுவிருத்தம்,

நன்றுநன்று நீ நகரினிலெழுந்தருளுவேன்
இன்றுநின்பிறகெய்துவனென்றினிதியம்பச்
சென்றுகோசிகன் றேர்மிசையேறினர்திரண்டு
நின்றமாதவர்சரியினும் பரியினுநிறைந்தார்

(வ-ம்) நல்லதுநல்லது நீங்கள் சீக்கிரமாக அயோத்திக்கெழுந்தருளுங்கள் இதோ அடியேனுங்கூடத்தொடர்ந்துவருகிறேனென்ன விசுவாமித்திரமகாமுனிவரும் தேரின்மேலேறிக்கொண்டனர் அவரைப்பின் பற்றிய தபோதனர்களும் யானைகுதிரையின் பேரிலேறிக்கொண்டுவரத்தொடங்கிவருவதுகாண்க

உஎ-தரு-நொண்டிச்சிந்து-சங்கராபரணம்- ஆதிதாளம்

தானத்தோந்தானத்தந்தானகந்தோம்
தானத்தத்தானத்தந்தானத்தந்தானே (தானத்)
அருந்தவத்தோரயோத்தியாள வந்தார்மதித்த
யானைபரிபல்லக்கேறி யானந்தமடைந்தார்
இருந்தநல்லோரெவர்களுங்கொண்டாடி யென்றும்
ஈரேழுலகாள்வார்யாமோயென் றெழுந்துகூடி

உ, கதிர்குலத்தோரெவர்க்குமிகு திரன்இக்கக்
காசினியிற்கர்ணனிலுங் கருணைமிகுகாரன்
முகிர்ந்தசத்யதர்மந்தனைக் காக்கநாளும்
முன்னவரிச்சந்த்ரனை மூவுலகோர்நோக்க(தான)

௩, எத்தலத்தோருந்துதிக்குஞ் சித்ரன்முனிவர்
எவர்களிலுமிகுதவத்தோ னென்னும்விசுவாமித்ரன்
உத்தமர்தமைப்புகழ்ச் செய்கோன்-உள்ள
ஊழிவினைதனைபகற்றி உம்பர்களுநடுய்வோன்(தான)

௪, அன்றுரைத்தஇந்த்ரன் மொழிபாலேசேவன்
ரனைவருந்திகைத்திட வடைந்தபழியாலே
இன்றுசெங்கோலாளும்வகை கண்டுவேள்விக்
கேற்றசாமக்ரியையாவுஞ் சேகரித்துக்கொண்டு(தான)

பொது- விருத்தம்,

முனிவிஸ்வாமித்திரன்பொற்றேர்மீதேறி
முன்னடக்கப்பின்றொடர்ந்த முனிவரெல்லாம்
இனியகரிபரித்திரள்மீதேறிக்கொண்டார்
இணங்கியவாநடுவினிலேயெழிலுயர்ந்த
தனிச்செங்கோலாண்டவனும் புகல்வனோடு
தையலும்பாரினில்நடந்து தத்தளிக்கப்

பனிமலாமார்பனைத்தேர்மேற் காணுமாந்தர்
பதறுவார்மனஞ்சலித்துக் கதறுவாரே.

(வ-ம்) அகோகேளும் இராசர்களே அந்தவிசுவாமித்திரரானவர்பொன்னின்தேறிலேறிக்கொண்டு முன்னே நடக்கத்தொடங்கினது கண்டு அவருடன் கூடிவந்த சகலமானவர்களும் யானையின்மீதும் குதிரையின்மீதும் சிவிகையின்மீதும் நிறைந்தார்கள் அவர்கள்நடுவே சத்யதர்மபாலகனுன அரிச்சந்திரமகாராசனும் சந்திரமதியும்-லோகிதாசனும் பாதசாரியாக நடந்துவரும்போது அயோத்திநகரிலுள்ள யாவரும் அதிசயித்து அங்கங்குள்ளவர்கள்அணியணியாகநின்று துயரப்படுவதுகாண்க

உ௮-பட்டணத்தார்-பலருஞ்செல்-தரு
இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

கண்ணிகள்,

௧. தேரின்மீதேறினாளும் தெருவிற்பவனிவரத்
தெரிசனஞ்செய்தோமென்பார் வெகுவீரர்
பாரின்மீதினில்பலபாதங்களால்நடக்கப்
பதறுதென்செய்வோமென்பார் மிகுசூரர்

௨. ஐயோயிவர்கட்கிந்த அவதிவந்தெய்தலாமோ
ஆர்செய்தமோசமென்பார் வெகுவீரர்
வெய்யோன்குலத்துதித்த வேந்தரெவர்க்குமிவ்
விதிவந்ததறியோமென்பார் மிகுசூரர்

௩. வனசமலர்க்கரங்கள் வாடயாங்கண்டதுண்டோ
வஞ்சனைசெய்ததாரென்பார் வெகுவீரர்
கனகமிகக்கைக்கொண்டகபடவஞ்சகமுனிவன்
கற்பனையிதெல்லாமென்பார் மிகுசூரர்

௪. பவளமலிநிலாவின்பான்மையாளமெய்சோரப்
பசித்ததெவராலென்பார் வெகுவீரர்
தவளத்தாமரைமலர்த்தாள் சரணடைந்தோர்க்குத்
தக்கதெகதியென்னென்பார் மிகுசூரர்

௫. முனிவர்சடைக்குமணிமுடிபொறுக்குமோவென்ன
மோசகாலமிதென்பார் வெகுசூரர்
கனிவர்க்கங்கள்கிழங்கு காய்கள்புசிப்போர்க்கிந்தக்
கனகாசனமேனென்பார் மிகுசூரர்

௬. ஏங்கியேங்கித்தவிப்பார்இளவரசையுந்தாயும்
எந்திக்கைகலாகிடுவார் வெகுமாதர்

தாங்கித்தாங்கிமன்னவன் தத்தாடியிடக்கண்டு
தாளாமல்மனஞ்சோர்வார் மிகுதீரர்

௭. அழுவாரழுதழுது அடியிணைதனில்வீழ்ந்து
ஆண்டவனேகாவென்பார் வெகுமாதர்
தொழுவார்தொழுதெழுந்து துன்பம்வரக்காரணந்
துரிசாயுரையுமென்பார் வெகுமாதர்

௮. மிகுபாவமென்னசெய்தோம் மெய்யவர்க்கிவ்விதிவர
மேதினிதன்னிலென்பார் வெகுமாதர்
வெகுகாலமாகயிந்த விசுவாமித்திரமுனிவன்
வீம்பென்செய்தேனோவென்பார் மிகுதீரர்

பொது-விருத்தம்,

நகரிலுளாரவரவர்க்குத் தோன்றியநீர்மை
நன்லையிமேல நற்றவக்கோனேறிவந்த
திகிரிகிர்த்தேரிறங்கி அரிச்சந்திரன்றன்
திவ்வியசபைசென்றரியாசனத்தின்மீது
பகரிந்தற்கரிகெனமாகவத்தோர்சூழ
பண்புடனேவீற்றிருக்கும்பான்மைகண்டு
நிகரிலாவரசுதனைக் குறியயாவும்
நேர்விப்பான்முனிவன்மனந்தேர்விப்பானே ௫

வ-ம்,இப்படியாகப் பட்டணத்துள்ளோர் யாவர்க்குந் தோன்றியபடி யெல்லாஞ் சிந்திக்கும்போது விசுவாமித்திர னேறிவந்தபொன்னின்மலைக்கொப்பான தேரைவிட்டிறங்கி முனிவர்கூட்டங்களுடன் அரிச்சந்திரமகாராசனது கொலுச்சபையையேறிச் சொல்லுதற்கரிய தம்பாகனர்களுடன் சிம்மாசனத்திலமர்ந்திருக்க இராச்ய பிரகாசபுரிகைளொப்புக்கொடுப்பதுகாண்க,

௨௯, திபதை-தரு- இ-ம்-பந்துவராளி-அடதாளம்

கண்ணிகள்

௧, எந்தனுக்குமுன் யிருபதகோராசர்கள்
எந்தத்துவைக்கபொக்கிஷ மிதுவே-இதை
யேற்றுக்கொண்டேமனந் தேற்றுக்கொள்விருமை
இணையடியேகெதியா வதுவே

௨, உந்தனுக்கிணையான மாதவத்தோர்கள்வந்
தானமகிழ்ந்திருப்பிட மிதுவே-நல்ல
உத்தமரெவர்கட்கும் நித்தமெனதானம்
உகந்துசெய்திடுமிட மிதுவே

௩. என்னுளிந்தேடியபொன்னனைத்தும்பூட்டி
    யிருக்கின்றபேழைக ளிதுவே-என்றும்
ஏற்றம்குணக்குப் பார்த்துவ்வாஞ்சொல்லி
    எழுதியவாண்யனே யிதுவே

௪, முன்னுளிலொவ்வொரு மன்னமன்னர்களும்
    முனைத்துபூசிக்குமிட மிதுவே-ராச
முறைதவருதசாருந்தேவிக்குபூசை
    முனைந்துமுடிக்குமிட மிதுவே

௫, மாடமாளிகைத்திரு மஞ்சனசாலையும்
    மடப்பள்ளிகளிருப்பு மிகவே-ராஜர்
மாதர்கள்கூடி மகிழ்ந்தசோம்புநாற்கும்
    மாதவசாலையு மிதுவே

௬, பாடங்களோதிக்குருபத்திசெய்திடும்
    பாங்கானமாடங்களு மிதுவே-எந்தப்
பாஷைகளும்ஓதிப் பண்பறியும்பெண்கள்
    பரிவுடன்வருமிட மிதுவே

௭, முக்காலத்திலும்வேத முறையுடனனுஷ்டானம்
    முடித்துவருமிடங்க ளிதுவே-மிகு
முருகையசலரவர் மணவாளர்தமக்கன்னம்
    முகமலர்ந்திடுமிட மிதுவே

௮. இக்காலத்திலுங்குணசீலர் த்ருப்பளிக்
    கெழுமங்களவிலாச மிதுவேயின்னம்
இங்கேயிருக்குது சித்திரவிசித்திரங்கள்
    இருக்குமிடமக ளிவ்வளவே

பொது-விருத்தம்,

இவ்விதமாயுள்ளபொரு ளெல்லெலம்ஒப்பிக்
    கிறைபவனுமடிதொழுதயிறைஞ்சும்போது
கவ்வியமாமுனிவரைக் கண்டோரெல்லாம்
    கடுகடுத்தமிகவெறுத்துக் கடுஞ்சொற்சொல்லி
ஊளியமில்லாதவனே யென்றிறைஞ்சி
    யரசனடிதொழுதழுதா ரவர்கடம்மை
திவ்வியசெங்கமலரகத் வதடுத்தமற்றித்
    தேற்றுவாரவர்கள்கண்ணீ ராற்றுவாரே ௫௧

வ-ம், இப்படியானக கலைமான்சமும் ஒப்புக்கொடுத்துத் துதித்துநின்ற மன்னவனைப்பார்த்து அயோத்தி நகரிலுள்ள யாவரும் முனிவரிடத்திலே வெருட்சியுற்று உதாசனித்து அனுவளவும்கொடுமையவற்றவ

னென்று அரசனைத்துடர்ந்து ஜேபுறவுகொள்ளும்போது அவர்களைக் கையமர்த்தி கண்ணீராற்றி மனந்தேற்றுவதுகாண்க,

௩௰-இராசன்செல்-௧௬-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

பல்லவி,

இனியேனுக்களுங்கேன்விசாரம்-விசுவாமித்திரர்
இணையடிதொழுகாலிதக்கிணையில்லை-உபசாரம்

அநுபல்லவி,

தனிமையகாசிநகர்க்கிந்நேரம் தவசிகளாய்த்
தான்போயவ்விடந்தனிற் றங்குவதெங்கள்பாரம்(இனி)

சரணங்கள்.

க, காதிராசன்குமாரனிவரே கதிர்குலத்துக்
கரசனென்றங்கைக்குக் காட்சிதந்தவரே
பாதியாளும்பெண்ணுமவரே இவரைமிகப்
பாக்கியவானிவர்க்கிணை பாரிலையென்பாரே(இனி)

௨, அரியதவத்தில்மிகுத்தவரே இவர்க்கிணை
இரசர்மக்களிலுண்டோ ஆராய்ந்துணருவீரே
அரியயனும்மகிழ்ந்திட்டாரே இவர்பாதத்துக்
கன்புசெய்யாதமாந்தர் அமருரைக்கிட்டாரே(இனி)

௩, இருடிகளின்மேலானோரிவரே இனிப்பிரவி
எனுந்துன்பமதொழிக்கும் எழிலெடுக்கச்செய்தவரே
வருடியிவர்க்குத்தொண்டுசெய்வீர் என்றென்றைக்கும்
வண்மைசேரயோத்தியில் வாழ்ந்துங்கள்மனமுய்வீர்(இனி

பொது-விருத்தம்.

அரசனவர்க்கிவ்வண்ணமுரைக்கக்கண்ட
அருந்தவவிசுவாமித்திரனையோயிந்தக்
குரிசிலனைதருமத்தினுருவாய்வந்து
குவலயத்திலவதரித்தான்கொடுமைசெய்தே
பரிசனைத்தும்பரித்துவனைக்காட்டிலோட்டும்
பாவன்மையுமக்காகாதப்பகவான்செய்த
வரிசைதனைத்தடுத்திடுதற்கெதற்காமென்று
வாதிப்பான்முனிவனிதுபேதிப்பானே ௫௨

(வ-ம்) இந்தப் பிரகாரமாய் அரிச்சந்திர மகாராசனானவன் பட்டணத்திலுள்ள ஸமஸ்தமானசனங்களையும் மனத்தேற்றக்கண்ட விசுவாமித்திரரானவர் பரிதாபமுற்று ஐயோ அரசன்தர்மசொரூபியாயவதரித்தான்னாமிவனைக் கொடுமைசெய்துசகலபொருள்களையும் அபகரித்துக்கொண்டு காட்டிலோட்டுவது நமக்கு தர்மமல்லவெனினும் ஈசுவரானுக்ர-

த்தனுக்குயாதென்னசெய்வதெனச் சிந்தித்து மறுபடியுந்தந்தைவா
க்கிக்கொள்வாயென்றுபோதிக்கத் தொடங்குவதுகாண்க

௫௧-தரு-இ-ம-மதிபமாவதி-திரிபுடைதாளம்;

பல்லவி.

ஒருமனத்தருவாயே-உத்தமா இந்த-ஊராளவருவாயே

அநுபல்லவி,

தருமமுனையாகும் தரணியோர்குறையேகும்
கருமங்கள்முடிவாகும் காட்சிக்கிடமுண்டாகும்(ஒரு)

சரணங்கள்

௧, சின்னஞ்சிறுமதியேன் முன்னோனான்செய்த
செய்கையாவையுந் தள்ளுவாய்
முன்னமென்னையில்நீ தந்தபொருள்கள் தன்னை
முழுமையுநகைக் கொள்ளுவாய்
அன்னநகுயில்மயில்போல் அரம்பையூர்வசிகள் போல்
அன்றென்றவத்தில்வந்த அரிவையைப்புணர்வாயிந்த(ஒரு)

௨, முனிவனென்குறைதீர்ப்பாய் அயோத்திநாட்டை
முழுவதும்நீ ஏர்ப்பாய்
இனிவருவதைப்பார்ப்பாய்-உனக்கிரங்கும்
இப்புவிபோனைக் காப்பாய்
கனிவருமுன்னமது கல்லேலறிசெல்லுமிக்க
காரணயாவுமுந்தன் கருத்திலுணர்வாயிந்த(ஒரு)

௩, பக்ஷமிப்படுவேனோ உனைவேறொரு
பாரினில் விடுவேனோ
மங்களங்கெடுவேனோ வுபகாரம்
மங்கையருக் கிடுவேனோ
தங்கமன்னவாவுந்தன் தோளைச்சேரவிரும்புந்
தோகையளைமணந்து தொல்லுகையாள்வாயிந்த(ஒரு)

பொது-விருத்தம்.

வேளைபதிக்கெடுத்துரைநக்கவிசுவாமித்திரன்
வெற்றிபிருபவமலைவேந்தன்போற்றி
குளைக்கூடன்களையான்மணம்புணர்கேன்
சொன்னபொருட்காளவிடுவீர்சுகமாயென்ன
நாளைவாவிடுவேன்முன்னடநீயென்று
நவின்றிடுமாமுனிவனுக்கந்நகரிலுள்ள
ஆளையமைச்சரையரிவையனைசேர்விக்கும்
அனைவரையும்பிடித்தான்றிட்டகொடுத்திட்டானே

(வ-ம்) இப்பிரகாரமாய்ப் போதித்த விசுவாமித்திரமகா முனிவர தபசுத்திற்கொண்டனிட்டு அந்தவேசுக்கூடத்தின் பெண்களைக்கூட்டமாட்டேன் உமக்குக்கொடுக்கவேண்டிய பொருட்களுக்குத் தூதாளவிட்டு என்னை நாளையத்தினந் தூதனுப்புகிறேன் நீர் முன்னுக நடப்பாயென்ன முனிவருக்கு நகரிலுள்ளயாவரையும் அடைக்கலங் கொடுப்பதாகாண்க

உ௬-இராஜன்விசுவாமித்திரருக்குச்சொல்

௧௫-இ-ம-ஆசாவேரி-திரிபுடைதாளம்,

பல்லவி,

அடைக்கலங்கடைக்கண்ணுற்பாரையா-இந்த
அமைச்சரெவர்களையுங் காரையா

அநுபல்லவி.

உடைக்கஒருசிமிஷம் உண்டாக்கவொருயுகம்
படைக்கவரிதாமிந்தப் பாமரரெவர்களையும் (அடை

சரணங்கள்.

௧, சத்யமுறையிலிவர் சற்றுங்களங்கமில்லார்
சதுர்மறையிலிவர்ச் சகத்திலெவருமாவெல்வார்
நித்யநேமநிஷ்டையில் நிபுணரிவர்களல்லார்
நீதிநெறிபுரையில் நிறைந்தோரொருபொய்சொல்லார்
அத்தியந்தமிவர்களா லடைந்தேன்மிகவைபோகம்
அனைவருக்குமுண்டிந்த அரசாளுமனுபோகம் (அடை)

உ. இராஜாதிராஜர்மெய்க்கும் ரணாரங்கத்திலிவர்
இரகஸ்யமறிந்துணர்ந்த ரசிகர்சுத்தவீரர்
ஆஜானுபாகுபலர் அதிமதிமந்திரியிவர்
ஆசாரசர்மபாலர் அனைவர்க்குமனுகூலர்
பூஜாதுரந்தரர்கள் புவியினிலிந்தராஜாவர்
புஜபலபராக்ரமர் புருஷப்பிரகாசியிவர் (அ)

௩, விகடப்பிரசங்கியிவர் வில்வித்தைசகலுணர்ந்தோர்
வெற்றிமிகுசேனையர் விதிவிதிமுறைப்போர்
அகடமிகச்செய்வோரை யடக்குந்தானுநியர்
அஸ்வலட்சணங்களி லனைத்துமுணர்ந்தோரிவர்
சகடங்களின்முன்னின்று சாரத்யஞ்செய்வோரிவர்
சாமியுமக்கெல்லோரும் சாணக்கர்களாவார் அடை-

பொதுவிருத்தம்

குடைநிழற்பொலிவெளிசினடியின் மேற்கொடினே
நிடையிலுளயுநகைபுமிறைஞ்சவிற்றேத்தி
படைபைக்காக்கிபேநியமினன்மனைகபாலமர்த்தி
விடையிதேயெனப்பணிந்தனன் வேந்தர்க்குவேந்தன்

(வ-ம்) அதோ கேளுங்கள் பூபதிகளே பூச்சக்கிறக்குடையி னிழலிலே வீற்றிருக்கின்ற விசுவாமித்திரருடைய பாதாரவிந்தங்களிலே மின்னற்கொடிபோன்ற இடையினையுடைய சந்திரமதியும் புத்திரசிகாமணிய லோகிதகுமாரனையுந் தண்டஞ் சமர்ப்பிவிக்கச் செய்து படைத்தலைவர்களைப்பார்த்து இனிநில்லுங்களென்று தனதானைகளாலமர்த்தி இதுவேளைஎங்களுக்கு உத்திரமென்பதாகச்சொல்லி இப்பால்விசுவாமித்திரரைப்பார்த்து அரசர்க்கரசனான அரிச்சந்திர மகாராசன்விடைகேட்பதுகாண்க

௩௩-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி,

உத்தாரந்தாருமையா-விசுவாமித்திரரே-வாழ்வினைதிருமையா

அநுபல்லவி

விஸ்தாரமாகச்சொல்ல வேண்டியதென்னநேரும்
வெற்றிமிகுவீரனைப் பத்தியாய்ப்பாதுகாரும் (உத்தா)

சரணங்கள்.

௧. வீரபதிவீரனுக்கும் வினைவினில்வருங்கோபம்
வேட்டையாடும்வேளையில் விளங்காதுமனஸ்தாபம்
சூராதிசூரருக்கும் சொல்லலென்றால்டிகுசோபம்
சுகிர்தமாவுமக்குச் சொன்னேனிவர்ப்ரதாபம் (உத்)

௨, காத்தாளுவதுபாரம் கழிக்கச்சொல்லாதநேரம்
கருதிவந்தடுத்தோரைக் காப்பதாஞ்பிள்ளைதீரம்
மூத்தாள்மக்களானாலும் முட்டுக்காவரோர்நேரம்
முனைபங்கமுற்றிருந்தால் முடிக்கலாம்ராச்யபாரம் (உத்)

௩. செய்யாத்திவினைகோடி செய்வார்களேயானாலும்
சேய்கள்செய்பிழைதனைத் தாய்பொறுப்பதுபோலும்
ஐபாவுந்தனையிவர் வைதாலும்எய்தாலும்
ஆளவுமதுபாரம் ஆகுமினிமென்மேலும் (உத்)

பொது-விருத்தம்,

முனிவனதுவிடைபெற்றவேந்தனாடு
முதலவருந்தலைமகனும்முனைந்துகாசித்
தனிவழியேயகிடமுயன்றாரயோத்திநாட்டைத்
தவமுனிவிஸ்வாமித்திரன்றாணிபாள
வினிநமதுமாதவத்தின்றசத்தைகாட்டி
யெவர்க்குமிந்தநெறியறிவித்திடுவீரென்னப்
பனிமூட்டங்கண்டசெழும்பயிர்கள்போலப்
பற்றுவாராசாளச்சுற்றுவாரே,

(வ-ம்) அகோ கேளுங்கள் வேந்தரிற் சிறந்தவர்களே விசுவாமித்திரருடைய ஆக்ஞைபெற்ற அரிச்சந்திரமகாராசனும் சந்திரமதியும் லோகிதகுமாரனும் தனியே தழிநடக்கத் துணிந்தார்கள் அயோத்தியாபுரியை ஆளுவதற்கு உபக்ரமித்து விசுவாமித்திரரானவர் தமது செங்கவக்கொடியைத் துசமாகநாட்டி எவர்களும் இந்தவிதமாய் அரசுபற்றுங்களென்றுரைத்தபோது பனிகாலத்தில் கருகிச்சுருளும் பயிர்களைப்போல அங்குள்ள முனிவர்கள் பாவனையும் அரசர்குரியவர்களாக்கிக்கொண்டு அரசாட்சிசெய்வதுகாண்க

௯௪-தரு-இ-ம்-தோடி- ஆதிதாளம்

பல்லவி,

மாதவத்தில்செங்கோலாண்டானே
மாமுனிமகிழ்ச்சிகொண்டானே

அநுபல்லவி,

ஆதவன்குலதீரன் அரிச்சந்திரனெனும்வீரன்
ஆளுமயோத்தியில்வந்து ஜயமெனப்புகுந்து-மாத

சரணங்கள்,

௧- மணிமுடியணிந்தோர்கள் மகுடச்சடையணிய
மன்னரைப்பணிந்தோர்கள் மாதவரைப்பணிய
இணிபுஜகிர்த்திமாறித் தெறிபுலித்தோலைசாற்றி
தேவதைகளைப்போற்றித் தினமும்வதிஷ்டரைத்தூற்றி (மாத)

௨. கோதையர்கள்களித்துக் கூந்தல்களைவிரித்து
கோதிச்சோமதூமங்கள் கொடுத்துகொண்டாட்-மற்று
காதையர்கடன்செய்யுந் தர்ப்பைகளுஞ்சமித்துந்
தளாமலேவிரித்துத் தரணியெங்கும்புகைத்து (மாத)

௩, புனிதமிகுமாதவர் பொற்புமிகுத்துச்சூழப்
புரவலர்களெவரும் போற்றித்தினமும்வாழ
கனிதிருத்தியசொல்லின் கற்பின்மிக்கோரைத்தூற்றி
கவுசிகன்றவமணிக் கனகாசனத்திலேறி (மாத)

சூழ்வினைகாண்டம்-முற்றுப்பெற்றது

—*—

விருத்தம்- ௫௩-கலித்துறை-௪-வெண்பா-௧,
ஆனந்தக்களிப்பு-௪, நொண்டிச்சிந்து- ௧-தரு-௯௪.

—*—

ஏழாவது

ஆரணியகாண்டம்.

—)(*)(*)(*)(—

விருத்தம்,

செங்கதிர்குலத்தோர்கள் செலுத்திய
துங்கமானசத்பலஐக்கியே
அங்கண்மாதவத்தோர்முறைபாருநாட்
புங்கவன்திருவாலயம்போற்றுவான்

வ-ம்-அதோதோகளூர்ஸமஸ்தர்களே சூரிய குலாதிபதிகளாளப்பெற்ற சிரேஷ்டரான ஸத்யக்கொடியை நீக்கிச்செங்கவக்கொடியை நாட்டிக்கொண்டு அந்ததபஸ்விகள் யாவரும்ராச்சபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார்கள் இப்பால் அரிச்சந்திரமகாராசனுனைவன்பரிவாரங்களுடனே அந்த அயோத்தியாபுரியிலுள்ள முக்யமான தேவாலயங்களிலம்பாய்மனைக்களிப்புடனே ப்ரதட்சண நமஸ்காரஞ்செய்து பிரார்த்திக்கிறவிதங்காண்க

க-தரு-இ-ம்-பியாக்-அல்லது- செஞ்சுருட்டி

பல்லவி,

ஸத்யதர்மமேஜெயம்-ஸர்வேஸ்வரா அபயம்-ஸத்ய

அநுபல்லவி,

நித்யதான சர்மம் நிசழ்ந்திடுமாறுகன்மங்
நெறிதவறுதென்னுளும் நிறைந்தசெங்கோலாளும்(சத்)

சரணங்கள்,

க, அன்னைபிதாநீயே அருட்குருநாதன்நீயே
உன்னையுன்னுடி வெப்புடன்கொண்டாடி
உரிமையாப்பப்தாபூசித்தேன் உண்மையொன்றேநேசித்தேன்

உ, சச்சிதானந்தா ஸனகாதிமுனிப்பருங்கா
நஞ்சினையுண்ட நாகமேனிலகண்டா
நாயடியேனைக்காப்பாய் நன்முனிநுணைகதிப்பாய்(சத்)

௩, வேதஸ்வரூபா விமலர்புகழ்ப்ரதாப
போதவறுநாவா புனிதர்கட்கனுகூலா
போயவாறேனபாதேசம் போகருபம்தசம்(சத்)

பொதுவிருத்தம்,

தவமுமுதாந்தவமுனிவன்றனக்களித்தோமினியுணர்தற்
றருதியென்றன்

திலகுமணிமண்டபமு மெழின்மணிச்சிங்காசனமு
மிழிந்துபோந்து
பலவரசருடனமைச்சரமூதுடன்மேய்ப்பரதவிக்கப்
பதாதிமொய்க்கக்
குலமகனுமடமயிலு முன்னடக்கப்பின்னடந்தான்
கொற்றவேந்தன், உ

(வ-ம்) அகோ கேளுங் குரிசிலர்களே தனது ஆக்ஞையிலிருந்த யாவற்றையும் விசுவாமித்திர முனிக்குத் தத்தஞ்செய்து அங்கிருக்கி றஒருஆஷாக்கிரமாவது அனுபவிக்கலாகாதென் றெழுந்து இராச ராசாக்களும் ஒவ்வொரு மந்திரிமார்களும் பிரலாபித்துக்கொண்டு தொடர்ந்துவர ரதகஜதுரகபதாதிகள் சூழ்ந்துவர புத்திரசிகாமணி யாகியலோகிதகுமாரனும் தர்மபத்தினியாகிய சந்திரமதியும் முன் னாக நடந்துபோகச் சூரியகுலசிரேஷ்டனாகிய அரிச்சந்திரமகாராச ன் பின்னடக்கத் தொடங்குவதுகாண்க,

உ-தரு-இம்-நாதநாமக்கிரியை-அடதாளம்,

119508

பல்லவி,

என்னுயிர்க்குயிரான அன்னமே- எழிலுறநட முன்னமே

அநுபல்லவி.

பொன்னுலகாளும் புரந்தரனோர்களும் புனிதமாதவத்தோர்களும்
பன்னும்நான்மறை மன்னும்நூலாருந்
துன்னும்புகள்மிக வுன்னுங்காசிநகர்க்-கென்

சரணங்கள்.

க, அருமறையோர்கள்நிரந்தரமுங்கூடி யாரணங்களோதலங்கை
அரசர்க்கரசனைமதிதயேந்தரன் அருந்தவச்செல்வமங்கையே
தருமநூன்முதலாய்மனுநீதியின் றன்மையறிந்தநங்கையே
தயவாயுனதுதேர்ழிமார்க்கெலாம் தங்கிடுவாய்விடையிங்கையே
வருமமாய்விசுவா மித்திரமாமுனிவர்
வந்துவாதுசெய்யாத லென்செய்வோம்
வையகம்புகழ் தையலேநாளும்
செய்யவள்மருவுந் துய்யகாசிநகர்க் - கென்

உ, பொன்னினுசையும்மண்ணினுசையும்போக்குவாய்புகழ்தேக்கு வாய், புலம்பிவந்துனைப் பின்றொடர்ந்திடும்பூவையர்துயர் நீக்குவாய்
தன்னிகரில்லாமைந்தனுந் தனைத்தழுவியேவா கோக்குவாய்
தயங்கிடாமலேகாசிவிஸ்வேஸன்பொற்றளின்மேன்மனந்தாக்குவாய்

மின்னியமின்னற் போன்மறைந்திடும்
மெய்யறவைப்புறம் யாக்குவாய்
மெய்த்தவத்தோர்கள் கைத்தலத்திடை
வைத்தவரமலகத்தை மொய்த்தகாசிநகர்க்-கென்

௩. கொண்டல்வண்ணன்காகுத்தனுக் கென்றுங்கொண்டாடமனங்கூடுமே,-குறவன்செய்விதிதன்னைத் தவிழ்க்கக்கோரியங்கு சித்தம் நாடுமே, மண்டலத்தோர்கள்செய் மாபாவமெதுவும் மருவிடப்பய[ந்]தோடுமே, மாதவத்தோரைக்காணுமல் மனம்-மகிழ்ந்திடாதென்றும்வாடு

அண்டர்கோனுக்கும் அமரரெவர்கட்கும் (மே
அருந்தவர்க்குங்கதி தேடுமே
ஆதியாருமை பாதியாபரஞ்
சோதியார்தானுறை நீதிகாசிநகர்க்(கென்)

பொது- விருத்தம்.

ஆண்டநன்னகரும்நாடும் ஆனைசேனைகளுமெய்யிற்
பூண்டபொற்பணிதியாடை பொற்பினைமுனிக்களித்து
வேண்டவவ்வேந்தஞ்சேயும் விரகியும்யோத்திநாட்டைத்
தாண்டக்கண்டவ்வூர்மாய்தர் ததுங்புவார்வெதும்புவாரே,

(வ-ம்) இப்படியாகத் தாஞண்ட இராச்சியங்களும் ஆனை சேனைகளும் ஆடையாபரணங்களும் முனிவருக்களித்து பிரார்த்தித்த அரிச்சந்திரமகாராசனுனவன் புத்திரகளத்திராதிக ளுடனே அயோத்தி நகரைக கடக்கக்கண்ட அவ்வூரிலுள்ளயாவரும் புலம்புவது காண்க,

௧-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

கண்ணிகள்.

௧, சுந்திரனேயரிச்சந்திர மன்னனே
சுகுணனேயுன்பாதசேவை இனி
புந்திமகிழ்ந்திட எந்தநாட்காண்பதென்று
புலம்புவார் சிலமாந்தர்
இந்தமாமுனியிதற் கெத்தனைநாட்டவ
மியற்றினுனே வறியோமே-தானே
வந்தவிதிதவிழ்க்கத் தேவர்க்குமாமோவென்று
வரைவார் சிலமாந்தர்

உ, ஆளுமரசுஞ்செங் கோலுமையுமீய்ந்து
அவனியில்வாழ்ந்திருந் தாலும்-எந்த
நாளுமுமைப்போற்றி நாங்கள்வாழ்வோமென்று
நவில்வார் சிலமாந்தர்
மீளுவகையை இனி யாவதெமக்குரைக்கின்
மீட்போமல்லாற்கை விடோமே-என்று

தாருந்தடக்கையுங் கூப்பித்தொழுமெத்த
தவிப்பார் சிலமாந்தர்
அன்னைபிதாகுரு வாகவலமைந்தவல
லரசேஎன்றழுதழு தேற்றி-நீ
முன்னைவினையகற்று முறையறியாயேரவென்று
மொழிந்தார் சிலமாந்தார்
தன்னைப்புகழ்ந்திந்தத் தாரணியாளுஞ்செங்கோல்
தன்னைப்பழித்துத் துறவோனும்-பூவை
என்னமாயாளினும் மன்னவனுவானோவென்
றியம்புவார் சிலமாந்தர்

எந்தநாளிலுமரிச் சந்திரமன்னனுக்
கிடுக்கமுறுதென் றிருந்தோமே-மிகத்
தொந்தமாய்கௌசிகன் தோன்றியதென்னென்று
துடர்ந்தார் சிலமாந்தர்
முந்தநாளினிறவலிற் சக்ரவர்த்திமன்னனை
முகுந்தன்பலிகேட்டது மோல-இன்னா
ளிந்தவிசுவாமித்திர னியாவுமபகரித்தா
னென்றார் சிலமாந்தர்

பஞ்சணைமீதடி வைக்கப்பொறுக்காத
பாதகமலங்கள்நோக இவர்
நெஞ்சந்துணிந்துகாட்டில் நடந்திடுவாரோவென்று
நினைப்பார் சிலமாந்தர்
கஞ்சமலர்ப்பதத்தி கன்றக்கன்றமிகு
கல்லுமுள்ளுறுந்தைக்க நடந்து-மனம
தஞ்சமென்றேகாசித் தலமடைவாரோவென்று
தவிப்பார் சிலமாந்தர்

பொது- விருத்தம்,

தொடைதுரந்துமுடிதுரந்துயணிதுரந்துதுடிமுரசந்துரந்துகாமக்
குடைதுரதுவெண்கவரிக்குழாந்துரந்துகரிபரிதேர்குலந்துரந்துக்
கடைதுரந்துமறுகணைந்தகாவலன்தன்றிருமுகத்தைக் கண்டோரெல்
லாம்அடையமனமகிழ்ந்துருகியவரவரேமுகத்திலறைந்தழுவாரானுர்

(வ-ம்) தனதுஆளுகைச்செங்கோலும் மணிமுடியும் பூச்சக்கிரக்கு
டையும் கீர்த்திமிகுந்தமுரசமும் வெண்சாமரையும் இரதகஜதுரக
பதாதிகளும்இழந்து புத்திரகளத்திரர்களுடன்தேசாந்தரியாகிப்போ
கிற அரிச்சந்திரமகாராசன் திருமுகத்தைக்கண்ட யாவருந் தத்தம்ம
னைகளுக்குப்போக மனமொவ்வாமல் நெஞ்சுருகி முகத்திலறைந்துக்
கொண்டு பிரலாபிக்கத்துடங்குவதுகாண்க.

ச-தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்,

ஆ இதென்னவனர்த்தகாலம்-அரிச்சந்திரர்க்
காகலாமோ இவ்வலங்கோலம்

அநுபல்லவி.

ஞாயமோமுனிசெய்ஜாலம் அவர்க்குமெத்த
நன்மையாமோ இந்தநிதிமூலம்
காயிருக்குமரங்கள் கல்லேறிதாங்குமல்லால்
வாயிருந்தாலும்மெல்ல வகைவேணுமலலோ சொல்ல(ஆஇ)

சரணங்கள்.

க, மயிருடன்சிறகினை யிழந்தபட்சிகள்போல
மாநிலந்தனில்வேலி யோடுவரம்புஞ்சால
மயிரிழந்தால்ப்போல்பாரில் பதியழிந்தபெண்போல
பண்புமிககரிக்குப் பாணியற்றதுபோல
உயிர்போய்பரதவிக்கு முடற்கோல்மத்தாலுடைந்த
தயிர்போலிப்புவியோர்கள் ததும்பிவெதும்பலாமோ(ஆஇ

உ, குஞ்சரம்பொற்சிவிகைக் குதிரைகளும்விடுத்து
கொடியுங்கனகத்தேரின் குலங்களையும்விடுத்து
பஞ்சரத்துள்ளிருந்து பாடுங்கிளிகளைவிடுத்து
படிதனிலழகிய பாங்கியரைவிடுத்து
செஞ்சரோருகபாதச் சேவகரைவிடுத்து
சீலமிகுமுனிவன் செய்கைதனையடுத்து(ஆஇ

ங, மஞ்சணையில்நடக்க மதைபதைத்துத்தவித்தார்
பாரில்நட்ந்திடவோ பரனிவர்க்குவிதித்தார்
கஞ்சமலர்ப்பதத்தாற் கருணைமிகப்படைத்தார்
கழல்பணிவோரைப்பாது காத்துவிருந்தளித்தார்
தஞ்சமொருவர்காணே நெஞ்சம்பதைக்குதையோ
வஞ்சமாமுனிவனிவ் வாதைசெய்திடல்மெய்யோ(ஆஇ)

பொது- விருத்தம்,

நகர்கடந்தோர்முகமலர்ந்துசரயுவென்னும்
நதிக்கரைவந்தடைந்திடவேநன்னேக்கற்றுத்
தகர்படவேநதேயுளதுவிதியென்னென்று
தாளேற்றித்தண்சுவரிதாரோர்சூழப்
புதர்கடந்தமண்ணின்மீதுகுடும்பத்தோடு
புரவலனும்வீற்றிருக்கான்புனிதவெய்யோன்
திகர்கடந்தகடற்புகுந்தான்விஸ்வாமித்ரன்
நேர்ந்திட்டானகலத்தைச்சேர்ந்திட்டானே. (ச)

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் அயோத்தியாபுரியைக்கடந்தயாவர்களும்முகமலர்ச்சியுற்று சரயுநதிக்கரை யடைந்து இராசனது செந்தாமரைபோன்ற முகந்தைப்பார்த்து தாயைப்பிரிந்தகன்றுக் குட்டிகளைப் போற் பரதவித்துக்கொண்டு ஆற்றிலிரங்கி நுண்ணியமணலிலொரிடத்திலமர்ந்தார்கள் சூரியபகவானும் அஸ்தமானமானார் அத்தருணத்தில்விசுவாமித்திரரும் அவ்விடம்வந்தமர்ந்தபின் நடப்பதுகாண்க

பொது- விருத்தம்.

அக்காலத்தமைச்சரெல்லாம் அடல்வேந்தனடிபோற்றி யரசேநீமீண்
டெக்காலமெழுந்தருள்வதென்றுரைக்க வாங்கவரையிருகணோக்கி
முக்காலங்களுமுணருமுனிவனுக்கின்றியான்கொடுத்தவூர்தன்னி
லெக்காலமும்வருவதில்லையென்றனமைச்சரெலாமேங்கிவீழ்ந்தார்

(வ-ம்) இத்தருணத்தில் அரண்மனையிலுள்ளமந்திரி ப்ரதானிமார் யாவர்களும் அரசனைத்துதித்து அகோ இராசபாரமேஸ்வரா இனிஎந்தநாளில்மறுபடியும் இங்குவருவீரென அவர்களைக்கிருபாதிருஷ்டியினால்நோக்கிப்பார்த்து பூதபவிஷ்யத்வர்த்தமானங்களைபுணர்ந்தவிசுவாமித்திமுனிவருக்குக்கொடுத்துவிட்ட இந்த அயோத்தியாபுரியைநாடி இனியெந்தநாளிலும் வருவதில்லையெனக்கேட்டயாவரும் ஏக்கமடைந்து பிரலாபிப்பதுகாண்க,

௫-தரு-இ-ம்-சாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி

ஆஇதென்னமனவன்மம்-அருந்தவத்தோர்க்
கடுக்குமோஉங்கள்ராஜதர்மம்

அநுபல்லவி.

பாயுவதென்றெண்ணியோடிப்பதுங்குவதோ ஆண்சென்மம்
பதிபசுபாசமற்றோர் பாராளுவதோசுகன்மம் (ஆஇ

சரணங்கள்.

௧, முன்செய்ததிவினையோ — முன்னோரைக்காக்க
முயன்றதெப் — பாலனையோ
பின்செய்தார்போதினையோ — நமைப்படைத்த
பிரமன்செய் — சோதினையோ
தன்செயலல்லயிது — தாளோம்நிமிஷப்போது
என்செய்வாரவர்மீது — எடுப்போம்படையிப்போது (ஆஇ
தர்ப்பைசமித்தால்
௨, மன்னவர்நகைக்காரோ — புகைக்காரோ
மாதவர்

அன்னையர்திகைக்காரோ ஆளுநகையென்றான்
அருந்தவத்தோர்க்கு நேரோ
என்னிதஞ்சொன்னாலும் எற்றிடோமொருக்காலும்
உன்னைப்புரிவதிலும் ஊழிசூழ்கலாம்மேலும் (ஆ இ)

௩. தவசிகட்குமுடிதரோம் எக்காலத்திலும்
தனித்திந்நகர்தன்னி லிரோம்
அவசியமாய்மனம்பொறோம் சடையர்களை
அடவிக்கேக விட்டுவருவோம்
கௌசிகன்செயதவத்தைக் காத்திடச்சல்யமாமோ
சிவசிவாநீயாளாத ஜென்மசாபல்யமாமோ (ஆ இ)

பொது. விருத்தம்.

புவலனிம்மொழிகேட்கப்பொறாதிருகாதிலுங்கைகள்
பொருத்திநின்றான்
அரவனுமாயிரம்படத்தினாவினைப்போற்சடைவிரித்தங்
கடந்துசீறி
தாவரியசெங்கோலைத்தந்தாயென்றெனைவெகுண்டித்
தரணியோர்கள்
இரவலனென்றெனையிகழ்க்காரேலென்றான்ஆளுஞ்செங்
கோலென்றானே,

(வ-ம்) இப்படியாகச்சொல்லிய அவர்கள்வார்த்தையைக்கேட்க மனமொவ்வாமல் இருகாதுகளையும் கைகளாற்பொற்றிக்கொண்டு அரசனிருந்தான் அத்தருணத்தில் விஸ்வாமித்திரரிஷியானவர் ஆயிரம்படங்களையுடைய பாம்புகளைப்போலே நெடியதழைத்தசடைகளுடன் வந்து அடக்கொண்ணுதகோபிஷ்டனாய்கொடுப்பதற்கருமையாகியசெங்கோலையபகரித்துக்கொண்ட பிச்சைக்காரனேயென்று என்னை இகழ்ச்சியாகப்பேசுகிற இந்தஇராச்சியத்தோரியாவரும் மனமகிழும்படிக்குஇதோநீகொடுத்தசெங்கோலும் முத்திரைமோதிர மும்கைக்கொள்ளுவாயென்று கபடஞ்செய்வதுதாங்க.

௬-தரு-இ-மோகனம்-அட-தாளம்.

பல்லவி.

செங்கோலைநீ யாளுவாய் உனக்குயான்
செய்திவினைகள் தாளுவாய்

அநுபல்லவி.

சங்கோலமிடுமிந்தச் சாகேதபுரியாளச்
சன்யாசிக்கடுக்குமோ சகத்திலெவருமீளச் (செங்)

௪. திரிசங்குமன்னனைச் சொர்க்கத்திற்சேர்த்தேன்
 தேவர்கள்முன்னிந்த தீவினையேர்த்தேன்
வரசிங்கமுன்னாலென் வண்மையாவுந்தோர்த்தேன்
 வையகத்தோரெனை வாழ்த்தத்தாரைவார்த்தேன் (செ)

௫. அரசர்மணிமுடி யாண்டிதலைக்காமோ
 ஐயம்புகுவோர்க்கர சாட்சிநிலைக்குமோ
முரசறைந்தாலோக மூன்றுமெனக்காமோ
 மூக்காலுங்கெங்கையில் மூழ்குங்காக்கைகொக்காமோ (செ)

௬. தலைகீழாய்நின்று தவஞ்செய்வதைவிட்டு
 தரணியாள்வேனென்றுபோடா மூடாமதிகெட்டு
நிலைகுலைந்தலையாதே நிசச்சொல்லொன்றைத்தொட்டு
 நியமநிஷ்டைகளெல்லாம் நீடுலகச்சொற்கேட்டு (செ)

பொது-விருத்தம்,

முனிவனிதுகூற மன்னடிபணிந்து
 முகமலர்ந்துதந்ததுனக் கெனக்கிதாகும்
இனிவருவதில்லையென்றுனிருடிநீமுன்
 னியம்பியபொன்னை வைக்கும்வகையெங்கேயென்றான்
தனிவழியேவரத்திறமையுளவோர்தூதால்
 தனைவிடிலும்பொன்னனைத்துந் தருவேனென்றான்
கனிவருமுன்கல்லெறிகைக்கொண்டாப்போலக்
 கதிர்கண்டான்புகரோனையெதிர்கண்டானே (அ)

(வ-ம்) இந்தப்பிரகாரமாகச்சொன்ன விசுவாமித்திருடையபாதத்தில்தெண்டனிட்டு மனப்பூர்வகமாய் அன்றுயான்கொடுத்தயாவற்றும் உமக்குத்தான்இப்போது நானிரிக்குநிலைமை எனக்குத்தான் இனி பட்டணத்துக்குள் வரமாட்டேனென்றுரைத்த அரிச்சந்திரனைப் பாதத்து நீகொடுக்கவேண்டிய பொருள்களுக்கெல்லாம் வழிசொல்லுவாயென்ற விசுவாமித்திரரை எங்களைத்தொடர்ந்துமறுபடியும்தனியே நடந்துவருவதற்குச் சக்தியுள்ள ஒருவரைத் தூதுவரவிடுமென்றுசொல்லி அரசன் வாய் மூடுவதற்குள்கனிபுசிக்குமுன் கல்லெறிந்சித்தாற்போல நட்சத்ரையன் சபைக்குவருவது காண்க,

எ-தரு-இ-ம்-மத்தியமாவதி-சாபுதாளம்,

பல்லவி.

நட்சத்ரையன்வந்தான்-முனிவர்முன்-நட்சத்ரையன்வந்தான்

அநுபல்லவி.

பட்சமறவாத பார்மன்னன்கைதனில்
இட்சணம்லட்சோப லட்சம்பொன்வாங்கிட-நட்

சரணங்கள்:

௧,	பொட்டியிலுள்ள	பொருட்களைக்கவர்ந்தெதிர்
	வட்டிமுதலுக்கு	வாதுகள்மிகச்செய்யும்-நட்ச
௨,	சடுத்தங்கள்பேசியே	சள்ளைசெய்தேபொன்னைக்
	கொடுத்திடுவாயென்று	கூக்குரல்செய்திட-நட்ச
௩,	அடிமையென்ற	வரிச்சந்திரமன்னனைக்
	கொடுமைகள்செய்திடக்	குடுகுடுவென்றிதோ-நட்ச

பொது-விருத்தம்

உன்னியதீவினையனைத்துந்தனித்திருந்திவகைவகையே
யுரைத்துநீபோய்
அள்ளியிடும்பொருட்கவரா தானையின்மேற்றவண்சிலையோ
மளவுதந்தால்
கொள்ளுகிநீபின்போன கூலியையும்பெறுதியெனக்
கூறித்திய
வெள்ளிதனையுடன்கூட்டி மீண்டுமழைத்தொருவாய்மை
விள்ம்பலுற்றான்

(வ-ம்) அகோகேளும்பஞ்சபாண்டவர்களே கர்னகடோரமானசெய்கைகள்யாவும் விசுவாமித்திரரானவர் நட்சத்திரயனை யழைத்து அந்தரங்கமாய்போதித்தியானையின்பேரில்நின்று கவண்டுக்கல்லெறிதவுயரங் குவிந்தபொருட்களில் ஒருகாசளவுங்குறையாமல் வாங்கிக்கொள்வதுமல்லாமல் நீ-தொடர்ந்துபோன நடைப்படிக்கும்ரொக்கமானதுகையை வாங்கிக்கொண்டுவாவென்று சொல்லியனுப்பிக்கொஞ்சதூரம் நடக்கவிட்டுமறுபடியும் தன்னருகிலழைத்து இரகசியமாய்ப்போதிக்கிறவிதங்காண்க.

அ-தரு-இ-ம-கௌளிபந்து-ஆதிதாளம்,

மறைமொழியோற்சில-மகிழ்ந்துரைப்பேனதுன்- மனந்தனில்வைப் (பாயே

அநுபல்லவி

குறைவில்லாத்தவத்தோனே	கொண்டாடுங்குணத்தோனே
நிறைமதிபடைத்தோனே	நெடியகீர்த்திபெற்றோனே-மறை

சரணங்கள்,

௧, பசிக்குக்காய்கனிதேடிப் பசுருவாலேயாகிற்
பாலுஞ்சாதமுங்கேட் பாயே
பண்புளவறுசுவை யொடுபழிமாறினும்
பழித்துயாவையுந்தீட் பாயே
விசிக்கியுனையொருத்த விரும்பியுண்பானேயாசில்
வெறும்பிசதைத்தடுப் பாயே

வேதனைநொறுக்காமல் வெகுண்டுகொடேன்போதென்றுன்
விளங்கவருள்கொடுப் பாயே
ருசிக்குஆசைகொண்டால் ருணந்தீரல்மோசமென்று
ருத்ராம்பிசம்மிககீகொண்டு ரோஷப்படுவாயென்று-மஹா

௨, சென்றதொருநாட்போக மறுநாள்நிமிஷப்போதுஞ்
சிறக்கவங்கிருந்தி டாதே
சிறுகல்லும்பெருமுள்ளில் நடைகளாலலுத்திடும்
ச்ரமந்தீங்கப்பொருந்தி டாதே
நன்றல்லதிதொருநாழியதினுயிரம்
நாளுஞ்செய்வதொழி வாதே
நகர்ந்திடிநடவாதேநடந்திடினகராதே
நான்சொன்னசொல்லழி யாதே
இன்றல்லநேற்றல்ல வெளிதோவெடுத்துச்சொல்ல
இகத்தில்மாத்திரமல்ல பரத்திலும்புகழ்செல்ல-மஹா

௩, எல்லையிலாநெடுந்தூரம்நடந்துநொந்தே
னினிவரேனென் பாயே
எற்றமயிலனங்கருடன் ரிடபமினைவபோ
லெனைச்சுமந்துபோவென் பாயே
இல்லையென்றொருமொழி சொன்னற்போதுமுனக்
கெனவுந்தருவேரமென் பாயே
இனியொருவழக்கில்லை போவென்றுரைப்பானுமி
விதயமகிழ்ந்தேனைப் பாயே
தொல்லைசெய்வதாலலைத் தரும்பாவ்நலிந்துவாடத்
தோகையுமகனுமித் துயரால்மெலிந்துவாட-மஹா

பொது விருத்தம்,

வார்த்திவனையிவ்வண்ணம்பங்கஞ்செய்ப்
மதியதனைவிட்டகல்வாயென்றுவேத
மூர்த்தியையுந்தூதுவிட்டுமுனிவனேக
முன்னிருந்தபரிகலத்தோர்முகத்தைநோக்கி
வார்த்தினிப்போமுனிக்கினியாரெனக்காரென்றே
பகருமிறைமொழிகேட்டுப்பதத்தில்சத்ய
கீர்த்தியெனுமந்திரியும்பணிந்துபோற்றிக்
கெதியுன்றுனெந்தனையாளுதியென்றுனே. ௧

(வ-ம்) கேளுங்கள் மகாநுபாவர்களே அந்த அரிச்சந்திரமகாராச
னைநாநாவிதமான பங்கப்படுத்தி இனி அணுவளவுந் தாமதமில்லாம

ஸ்துகன்றுபோவாயென்று சுக்கிரபகவானுகிய நட்சத்ரையனையுந்தூ துவி டு விசுவாமித்திரரும் அந்தரத்யானமாயினார் அப்போது இராசன் தன்னைத் தொடர்ந்துவந்த சேனைசைன்யங்களை நோக்கி இனிவிசுவாமித்திருடைய ஆக்ஞைப்பிரகாரம் நடந்துக்கொள்ளுங்கள் உங்களுக்கும் எனக்கு மிவ்வளவுதான் ருணனுபவசம்மந்தம் அவரவர்கள் அகத்துக்கு கெழுந்தருளுங்களென்றுரைக்கக்கேட்ட மதிபூஷியாகியஸத்தியகீர்த்தியென்னு மந்திரியானவன் மனந்திகைத்து சரணுகதியடைந்துமிருக்கதுயரத்துடன் பிரலாபிப்பதுகாண்க,

க-தரு-இ-ம்-பைரவி-திரியுடைதாளம்,

பல்லவி,

அடியேனுக்கார்கெதியோ இந்த அருந்தவத்தோர்செய்யும் சதியோ

அநுபல்லவி.

கொடியபாதகமென்செங் கோலரணையிற்செய்தேனே
கோமானேயுன்மனதிங் குறிப்பறியாதய்தேனே-அடி.

சரணங்கள்,

க, கோதொழிந்தகிணத்தோய் உந்தன்
குற்றேவல்செய்யமுய பிணைத்தாய்
ஏதொழித்தாலும்உன் சேவலொழியேனே
இரவலர்களைச்சேவித் தென்னகமகிழ்வேனே-அடி.

உ, அடர்ந்தவனந்தனிலே நீபோய்
அடைந்திளைப்பாறு மிடந்தனிலே
படர்ந்துபசிக்குத்தேடும் பழங்காய்கிழங்குகள்
பார்த்துப்பொறுக்கிச்சேர்த்துப் பணிவிடைசெய்வேனுனும

ங, கஞ்சமலர்ப்பதனே என்னைக்
காருந்திரிசங்குமன்னன் சுதனே
நெஞ்சகமறியாமல் கொடியமுடவன்தொட்டால்
நெறிதவறியெந்தனை நீராளாதுகைவிட்டால்-அடி.

பொது-விருத்தம்.

இடிவிழுந்தமரம்போலயேங்கிவீழ்ந்த
வியல்புமிகுமந்திரியையெடுத்துமேனிப்
பொடிதுடைத்துமுடிதடவிப்பொருமலாற்றி
புகலரியமனவெதுப்பனிவனையூரில்
விடினுயிரைவிடுவனென்றேவேதையுற்று
விதிவசமுற்தனுக்குமுணடோவிரைந்துவாவென்
றடிபணியுமவரையும்வேந்தனேக்கி
யழைத்திட்டான்கீர்த்திமிகத்தழைத்திட்டானே. ிக

(வ-ம்) இந்தப்பிரகாரமாய்ச் சரணடைந்துவேரொழிந்தமரம்போலே மனது மிகத் தயக்கங்கொண்டு புலம்புகின்ற சத்தியகீர்த்தியை

இரண்டுகைகளால்தொட்டெழுபி மெய்யெங்குந் துடைத்துக் கண்ணீராற்றிய அரிச்சந்திரமகாராசனானவர் இவன்மிகுந்த ரோஷமுள்ளவன் இவனைத்திரும்பவும் அயோத்திக்கனுப்பினால் ஒருக்கால்பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுவானென்று மனமேவேதையுற்று உனக்கும் இதுஅமைந்ததுவோமந்திரியேயென்றுவிசனத்துடனேமந்திரியையும்மனைவியையும் மைந்தனையும் அழைத்துக்கொண்டு காசிப்பட்டணத்தைநோக்கிப் புறப்படுவதுகாண்க,

௯-இராசன்சொல்-தரு-இ-ம்-பூபாளம்-ஆதிதாளம்,

கண்ணிகள்,

௧, அந்தரியம்பிகையாதிபராபரி
யருள்தரும்வேளையீதரிவையே எழுந்துவா
சந்திரசேகரர்தந்தபெருஞ்செல்வச்
சந்திரமதியேகளித்தெழுந்துவா மதிதெளிந்துவா

௨, மாதவமறையோர்கள்சரயுவில்நீராடி
மகிழ்ந்துசெங்கதிர்கடன்மாரிடாது முடிக்க
போதமுடனெழுந்துபோகக்கண்டேனைந்தன்
பொற்கொடியேவிரைந்தெழுந்துவா மகிழ்ந்துவா

௩, ஆதவனுதிப்பானென்றருங்குயிற்கூவுது
அருந்ததிகற்பின் மிகுந்தவரிவையே
சீதவெண்கமலநாளங்களுண்ணுமன்னங்கள்
சிறக்கப்பூபாளம்பாட வெழுந்துவா-மகிழ்ந்தே

௪, சுந்தரமுகனரவிந்தபாதன்மிகு
சுகுணனும்சந்திரதயேந்த்ரன் குலத்தில்வந்த
சுந்தரியேபூர்ணச்சந்த்ரமதியேகருஞ்
சோலைக்கோழிகள்கூவுதெழுந்துவாகருக்காலெழுந்துவா

பொது-விருத்தம்,

தொடர்ந்தமதிமந்திரி தொடர்ந்துபிறகேக
விடந்திகழ்கடுங்கொழிலின் வெள்ளிமுன்னடக்க
வடந்திகழ்செழுந்தனமடந்தைசுதன்மன்னும்
நடந்தனர்அயோத்திவளர் நன்னகர்கடந்தே, (௬௨)

(வ-ம்) அகோகேளுங்கள்ராசாதிராசர்களே ஸ்னேகவாத்ஸல்யகுணசீலனாகத்தொடர்ந்துவந்தமந்திரியான ஸத்தியகீர்த்தியானவன யாவருக்கும்கடைசியில்வருகவும் ஆலகாலவிஷத்தின்குணத்தையுடையகொடியசெயலைக்களில விருத்தநட்சத்திரையனனவன் முன்பாகநடக்க ஸர்வாபரணபூஷிதமான கும்பஸ்தனங்களையுடையசந்திரமதியும்புத்திரசிகாமணியாகியலோகிதகுமாரனும்இராசசிரேஷ்டனான அரிச்சந்திரமகாராசனும் அயோத்தியாபுரியின் எல்லையைக்கடந்து நடப்பதுகாண்க,

௬௩-இராஜனும்சந்திரமதியுஞ்சொல்-தரு-இ-ம்-பிலகரி- ஆதிதாளம்.

கண்ணிகள்,

௧, தரைதனில்நடந்துவாதையலேசிவகாசித்
தலந்தனைத்தெரிசிக்கத் துலைந்திடும்துன்பம்யாவும்
இறைவன்செய்விதிதனை ஈசனுல்வெல்லலாமோ
மறையோன்பதம்பணிந்து மனதுமிகத்துணிந்து தரை

சந்திரமதி,

௨, வருகிறேன்மன்னவாவுன்மைந்தன்மெலியாமலே
வருந்தியழைத்துக்கொண்டு வழிதனில்பையப்பைய
திருகுகள்ளிமுள்ளுக்கள் தேகமெங்கும்பூறுதென்
மருகுமென்பாலகனை யுரிமையுடனழைத்து வருகி

அரிச்சந்திரன்,

௩, மெல்லியரேஇந்தத் தொல்லைவரக்கண்டோமோ
அல்லல்செய்வித்தமுனி வல்லமையறிந்தோமோ
சல்லியபடல்சிவ சங்கரர்க்குமுளது
கொல்லும்புடையான்சீறிக் குதிகாலிற்குத்துதையோ மெல்

சந்திரமதி,

௪, கொள்ளித்தேள்கொட்டிற்றெந்தன் வள்ளலேஎன்னசெய்வேன்
உள்ளங்குழையச்சூரை முள்ளுகள்தைக்குதையோ
வெள்ளிமின்னல்போற்படர் வேலன்முள்விசுதையோ
வெள்ளெருக்கங்கட்டைகள் விரற்சந்துகுத்துதையோ வரு

பொது-விருத்தம்,

சக்கரைதேன்பாற்செழும்பாகென்னுஞ்சொல்லாள்
சந்திரமதியாளுமரிச்சந்திரன்றானுஞ்
செக்கரைத்தவெள்ளிளைப்போறகுருநீர்சிந்தச்
சிறந்திலங்குங்கூந்தலினைச்சிலுக்கிகோதி
சொக்கரைநான்முகனையுந்திச்சுழிபூத்தோனைச்
சோதிமிகுமாதிபராபரத்தைநெஞ்சில்
அக்கரையாய்த்தொழுதுதுதித்திரைஞ்சியேற்றி
அணையென்றானடைவழிக்குத்துணையென்றானே, (௰௨)

(வ-ம்) சக்கரை தேன் பால் தேன்பாகு முதலான அமுர்தத்தை நிகர்த்தசொற்களையுடைய சந்திரமதி அரிச்சந்திரன்முதலானநால்வரும் செக்கினிலகப்பட்ட எள்ளிற்சுரக்குமளண்ணெயைப்போல்குருவியர்வைநீரூர சந்திரமதி ன்அளகபாரஞ்சரிந்துலையவிலனுக்ராந்தர்களாய் ஆதிபரப்ரம்மசொரூப ஸாக்ஷாத்காரத்தையும் சிருஷ்டிசம்மார திரோபவகாரணமாகியமும்மூர்த்திகளையுந்துதிப்பதுகாண்க,

௰௩-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

க, வேதவச்சுதசங்கரா-உங்கள்பாதம்-விளங்குந்துணைபராபரா
ஆதாவார்ஸ்ரீதரா-இணையடிக் காளாமேனும் கருணாகரா

உ, மணிமுடியேற்றீர்களோ நாநாண்டமானகர்காத்தீர்களோ
பணிவிடைபெற்றீர்களோ எங்களையிந்தப் பாட்டிற்குச்சேர்த்தீ
[ர்களோ

௩, துணையாகவருவீர்களே கடன்பொருள் அரிசினிற்றருவீர்களே
இணையடியருள்வீரகளே எங்களை என்றுங்காத்தருள்வீர்களே

ச, முன்செய்ததீவினையோமூவர்க்கும் முதல்வர்செய்சோதினையோ
என்செய்வோம் வேதனையோ பொறுத்திடலெவர்களா லாகு
(மையோ

ரு, பணிவிடையிற்குறையோ இப்படியங்கஞ்செய்யமுறையோ(யோ
அணிமுடிநிற்கிறையோ நாணுண்ட அயோத்தியாகஞ்செய்தனை

பொது-விருத்தம்,

இந்தட வாய்வழிநடந்துவருகும்போது
எழுகனற்கண்டஞ்சியிளவரசைமந்த்ரி
வந்தடவாய்தோள்மேலென்றேற்றிக்கொண்டான்
வனிதைபடுந்துயர்கண்டுவள்ளலேங்கி
எந்தனதுதோண்மேலேநீவாவென்று
னேற்றிடுமோமணித்தோளிச்சுணங்குக்கென்று
அந்தவினைதீரகேயாமிக்கானே
யகலென்றாள் இங்கடைதலிகலென்றாளே. (௰௪)

(வ-ம்) இவ்விதமாகத் தேவாதிகளைத்துதித்துக்கொண்டு வழிநடக்கும்போ துண்டாகிய தவாக்கினியானவெய்யலில் நடக்கப் பொறுக்கவொண்ணுதலோகிதகுமாரனைமந்திரியானசத்தியகீர்த்தியென்பவன் தோளிலெடுத்துக்கொண்டான்சந்திரமதியானவள் படப்பட்டகஸ்தியைப்பார்க்க அரிச்சந்திரனவன் பெண்ணே நீயெனது தோளின்மேலேறிக்கொள்ளென்றுசொல்ல நவாத்னகசிதமான புஜகீர்த்தியைத்தரிக்கப்பட்ட உம்முடையதோட்களிலுட்காரும்படியானபதவிஇந்தநாய்க்குத்தகுமோ அந்தச்செய்கைநரகப்ராப்திக்கேதுவாகையால் நான்நடந்துவருகிறேன் இந்த ஆரண்யத்திலிருக்கவொண்ணுது சீக்கிரத்தில்நடவுங்களென் சந்திரமதிசொல்வதுகாண்க.

௰௪-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்,

பல்லவி,

இனிநாமென்ன செய்வோம்- அயன்விதிக்- கெவ்விதமாகவுமவோம்

அடாணல்லவி,

தனியேகுடும்பத்துடனடவிக்கேகுந் தன்மைகளாரறிவார்-இப்போ
தயங்கிமயங்கித்தாரைதாரையாய்க்கண்ணீர்தரைதனிலார்சொரிவா

சரணங்கள்,

௧, விதிப்பயனைவெல்ல வேந்தர்சிகாமணியே
  வேதன்றன்னாலாகுமோ புண்ய
நதிமதியணியீசனுஞ்சண்ண விதியேனோ
  நம்மாலவ்விதி போகுமோ (இனி)

௨, அறமுறைதவறுமு லரசாண்டபோதுநா
  மறியாதெப்பிழை யுற்றதோவென்றும்
வரமுறையில்லா வரவணைமேற்பள்ளி
  கைகுந்தமெக் குற்றதோ (இனி)

௩, ஆதவன்குலத்தோரிவ் வவதிப்படமுன்ன
  மார்செய்ததீவினையோ பூவிற்
பேதவபேதமாய்ப் பிரமற்குச்செய்பூசை
  பிரிந்ததெப் பாவனையோ (இனி)

பொது-விருத்தம்,

இத்திறமாயடர்வனத்துளெவருமேக
  இனகுலத்தோனரிச்சந்த்விசுவாமித்திரன்
சித்திரமென்செய்தனைமந்திரியையென்பாற்
  சிஷிடுவிடென்றாவைச்சினந்துசீற
அத்திரமதறிந்தமந்திரிசத்யகீர்த்தி
  அரசனையான்பிரிகிலுயிரதிதியென்றான்
மித்திரமோநல்லதுபோவென்றயோத்தி
  மேவினான்கிருமிகளையேவினனே, (௩௫)

(வ-ம்) இவ்விடத்தில்நடக்கிறவிருத்தாந்தத்தைசெவ்வையாகக்கேளுங்கள் இருண்டடர்ந்து நெருங்கியவனமத்தியில் வருகிறதருணத்திலே விஸ்வாமித்திரமகாமுனீந்திரானவர்தற்செயலால் அவர்கள்முன்வந்துவழிமறித்து ஆகாநீசெய்தகாரியம் மகாவிசித்ரமாயிருக்குதுசிசீ இந்தமந்திரியை என்புரமாய் விட்டுவிட்டாவென்றுமிதிப்பட்டசர்ப்பக்கூட்டத்தையும்பழிக்கக்கோபித்திடக்கண்டசத்யகீர்த்தியானவன் எனதுராசனைப்பிரிந்தால் உடனேஎன்பிராணனுக்குஆனிவருமென்று சிடுக்கென்றபோது விஸ்வாமித்திரானவர் மூகங்குண்ணிநீதானவனுக்குசினேகிதன் கூடப்போய்வாவென் றனுப்பிவித்து அயோத்தியைநோக்கிப்போம்போது நானுவிதமானகிருமிகளைஏவுதல்காண்க,

௯௪-தரு-இ-ம்-சுருட்டி-அட-தாளம்,

பல்லவி.

முனிவன்வந்தோதித்தாரே-ஊர்வனங்களை-முதல்வன்முன் விடுத்தா

அநுபல்லவி.

தனிசெங்கோலாண்டமன்னன் தயங்கிமனந்தளர்ந்து
இனிச்செய்வதென்னென் றிருக்கையிலேயிர்வந்து-முனி

சரணங்கள்,

௧, வெட்டவெளி தனிலே-கனல்பரப்பி
விட்டெழுங்கொழுந் தினிலே
விட்டசெய்வித்ம்போல வெதுப்பும்மட்டைதேள்பணி
இட்டவகையில்லாமற் சுட்டிகள்கருக-முனி

௨, சுருட்டைகட்டுவாய்க் காலிகள்-வெட்டிக்கிளிகள்
சுழித்துக்கொத்தும் படையான்கள்
வருட்டுமருணைகளு வலியகொம்பேறிகளும்
மருட்டித்தொடுஞ்செய்யானும் மலர்ப்பவழக்காலியும்-முனி

௩, நடக்குமதுகள் நலியும்-எறும்புகள்
நரம்புபுடைக்கும் பூரங்கள்
அடக்கும்வளரவுகள் அட்டைகௌவுமாமைகள்
மடக்குமயக்கங்கொள்ளும் மைகருவளைகளும்-முனி

பொது-விருத்தம்,

ஊர்வனங்களிடுக்கிடுக்காய் நெளிந்துமீள
ஒதுங்கவிடமில்லாம லுருகியந்தத்
தார்வேந்துமைந்தனும் மைக்குழலினளுந்
தம்மைமிகுமந்திரியுந் தயக்கங்கொண்டு
சேர்வதற்கோரிடமில்லையென்றுநொந்து
செல்விழியின் புனலசிந்தச்செந்தீப்பற்றும்
ஏர்வனத்திலேமறுத்தும்நடக்கும்போது
எதிர்கண்டாரவைநெளியுஞ்சதிர்கண்டாரே, ௯௬

(வ-ம்) இப்படியாகத் தரையிலூர்ந்துவரும் ஊர்வனங்களானதுவிரற்சந்துக்களி லகப்பட்டுநெளியும்போதுஇடவலம் முன்பின் ஒதுங்கவிடமில்லாமல் உருகிய அரசன்முதலான நால்வரும் மதிகலங்கி கண்ணீராறாய்ப்பெருகக் கசிந்துருகி தங்குவதற்கிடமில்லையேயென்று அக்கினிப்பொறிகளைப் பரப்பினாற்போல எரிய சுடுமணலிலேநடக்கும்போது குறுக்கும்நெடுக்கும் இடசாரிவலசாரியாய் அவைகளைக் குமிக்குமோடக்கண்டு துயரப்படுவதுகாண்க.

ம்சு-தரு-இ-ம்-பியாக்-அடதாளம்,

பல்லவி,

என்னசெய்வோம் இந்தத்துன்பத்துக் கேதுசெய்வோம்

அநுபல்லவி.

பன்னங்களாலுயிர் பழுதாலதினுமாவி
சின்னமாயிறப்பது சிறப்பாகுமெனினுயிர்

செருக் காதே-செருமருந்து
தொருக்காதே-ஈசாயெங்களை
வருக் காதே-வருக்கிவிலை
பருக் காதே-என்னசெய்வோம்,

சரணங்கள்

௧, அரவுகளொருகோடி அட்டைகளொருகோடி
ஆனைகட்டிரவுகள் அரியவிண்டம்புலிகள்

அலை வாலே-அலைந்துநில
குலை வாலே-குலைந்துகூட்டன்
கலை வாலே-கலைந்துமதி
புலை வாலே-(என்னசெய்வோம்)

௨, மெய்நடுங்குது கைநடுநடுங்குது
மைகடுகடுங்கிடப் பலயாம்புகளும்வந்து

படு தையோ-பட்டுத்திக்குமுக்
இடு தையோ-இட்டுவிடங்கள்
தொடுதையோ-தொட்டுப்பிர்மிக்க
விடு தையோ(என்னசெய்வோம்)

௩, எந்தவிடத்தும்வேரோ மிந்தமரமுமில்லை
வந்தபோய்த்தேரினிச் சாந்தான்னிரே

உகக் தோமே-உகந்துமனம்
நொக் தோமே-நொந்தஉடலும்
நைந் தோமே-நைந்துவனத்துள்
வந் தோமே(என்னசெய்வோம்)

பொ-துவிருத்தம்.

பாராளரிப்பரிசான் மனங்கலங்கிப்
பாமனோகாமற்றன்பிறப்பைநொந்து
ஏராளநீர்மிகுத்தயிடத்திற்சென்றான்
எழுந்தகடுஞ்செங்கதிரோன் கடலிற்சென்றான்,
சீராளரெவர்களும் நன் னீருருக்கிச்
செய்யமணல்வண்டலிடைசிறந்திருந்தார்
பேராளன்மந்திரிநற்கனிகாய்தேடிப்
பெய்கின்றான்பணிவிடைகள்செய்கின்றானே,

(வ-ம்) கெளும்பஞ்சபாண்டவர்களே அரிச்சந்திரன்முதலானயாவரும் இவ்விதமாகக்கலக்கமுற்று செகதீசனைநோகாமற்றங்களுடைய பிறவித்துன்பத்தை நொந்துக்கொண்டு புட்களமாய் நிறைந்திருக்கிற நீர்பரவிய ஸ்ரீடத்திற்சேர்ந்தார்கள் சூரியபகவானும்அஸ்தமனபர்வதத்தையடைந்தான் அப்போது அவரவர்கள் தாக தாபோபசாந்தியடைந்து அத்தடத்தில் மணலினிடைவீற்றிருந்தார்கள் பெருமைபொருந்திய மந்திரியானவன் கனி-காய்-கிழங்குகள்முதலானவஸ்துகளைப் பறித்துக்கொண்டுவந்துஅரிச்சந்திரனைக்கண்டுசொல்லுவதுகாண்க.

ருஅ-தரு-இம்-காம்போதி-திரிபுடைதாளம்,

பல்லவி.

கனிகாய்கள்புசித்துக்கொண்டுவந்தேனிதோ-கைக்கொள்வீர்மன்னவ [னே

அனுபல்லவி.

தனிக்காவலர்மனப் தளராமற்புசித்திடத்
தக்கதுமிக்கது தானேகனிந்தது-கனிகா

சரணங்கள்.

இனித்ததென்றேடும்பழு மிசைந்தகர்ச்சூரந்திராட்சா
எழின்மிகுபாதரிய மினியசீனிப்பிலாவுங
தனித்தவொற்றைநலிதையன் தண்மிகுகமலாவும்
தானுகவெடித்துச்சி தருமாதளையிலுற்ற-கனி

தேனொழுகுபலாவும் தித்திக்குஞ்செங்கதலியும்
தெள்ளமுதம்பொழியும் தெவிட்டாதமாங்கனியும்
தரனொருவருக்கியத் தகும்நாரிகேரமும்
தளராமலபுசித்திடத் தகுந்தகொய்யாய்விளாவின்-கனி

கார்த்தபுளிமாதளை நற்சுவைதம்பரத்தை
நற்பரிமளம்வீசும் நாவற்சம்பூகமும்
வார்த்தைதெளியச்செய்ய வல்லசெந்துருஞ்சியும்
வண்மையுள்ளமானிடர் வாஞ்சையுடன்புசிக்கும்- கனி

பொது- விருத்தம்.

அக்கனிகாயனைத்தினையுமெடுத்துவேந்தன்
அந்தணன்முன்வைத்திறைஞ்சியருந்துமென்றான்
இக்கனிகாய்களைப்புசித்தெனுகம்நோக
எத்தனைநாள்யான்றிரிவதென்றிகழ்ந்து
மைக்கனிபோலிருப்பதைவாய்மடிப்பிற்கவ்வி
மறுத்தொருவர்புசிக்கமனமகலச்செய்து
மைக்கினியவிழியாளைவேந்தைச்சேயை
மாழுவான்வெடவெடத்துக்கூறுவானே, ளிஅ

(வ-ம்) இவ்விதமாய் மதிமந்திரியினாலே கொண்டுவரப்பட்ட-கனி காய்-கிழங்கு- பதார்த்தங்கள்யாவையும் வாங்கிக்கொண்ட அரிச்சந்திர மகாராஜனானவன் நட்சத்திரையரின்முன்பாகவைத்து நமஸ்கரித்துப்பு சித்தருளுங்களென்றுரைக்க நட்சத்திரையர் அதைக்கண்டு இந்தஅழு கலையும் செதுக்கலையுந்தின்று தேகத்துக்கு விரோதமானவியாதிகளா லே க்ருசித்து எத்தனைநாளுன்னுடன் தொடர்ந்துவருவதென்றிகழ்ந்து தூஷணிப்பான் சிலவார்த்தைகளைப்பேசி நேத்தியாயிருக்கிறசில்பழ ங்களைவாயிற்கவ்விக்கொண்டு சிலதை யுமிழ்ந்து வெறொருவருக்கும் உபயோகமில்லாதவகைசெய்து இராசன்முதலான நால்வரையுங்கடு கடுத்துப்பேசுவது காண்க,

சுலோகம்,

ராஜான்னம்மதுராங்விகாதிம்ருதுலம் மாணிக்யபாத்திரஸ்திதம்
இங்குசீரகலவன்மரீசிமிலிதை சாகைரனேகைசுபைஃ
ஸாகம்ஸம்யகபூபசூபஸகிதம் ஸத்யோக்ருதேநாட்ஜுதம்
ஸ்ரீம்ருத்யஞ்செயபார்வதீப்ரியவிபோஸாபோசனம்பஞ்ச்யதாம்,

(வ-ம்) இராஜராஜர்களும் புசிக்கத்தக்க தேவாமிர்தத்துக்கொப்பா கியமதுரமுள்ள மிருதுவமான நானாவிதசித்ரான்னங்களும்மனோக்கி யமான அபூருபசாகங்களும் பெருங்காயம்-சீரகம்- மிளகு முதலான சேர்க்கைகளுள்ள நவரசங்களும் அறுசுவையுள்ள அபூப சூபசகிதகு ளபாயஸசகிதமாய் தயிர்-பால்-நெய் இவைகளுடனே மாணிக்கப்பள் ளயத்தில்வைத்து அந்தபார்வதி பரமேசுவரர்களுக் கர்ப்பிதஞ்செய்து ஆலோசனசகிதமாய்புசிக்கவேணுமேயொழிய இந்த அழுகிப்போன கனிகாய்கிழங்குகளை சாப்பிட்மாட்டேன்தூரவெடுத்தெறிந்துபோ டும்பின்னாய்.

மிள-தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்,

கண்ணிகள்.

இராஜன்சொல்லல்

௧, ஐயனே அமுதுசெய்வீர் — தாருகாட்சத்
இறையவனே — அமுதுசெய்வீர்
வையகந்தனில்வளர் — வாழைக்கனிமாங்கனி
தூய்ப்பலாக்கனிகள் — துயாரும்விளங்கனிகள்- ஐய

பிராமணன்சொல்லல்,

௨, மன்னவா மனம்பொருந்தேன் — கனிகாய்ப்புசிக்க
மன்னவா மனம்பொருந்தேன்
அன்னமப்பளந்தோசை — யாமவடையில்லாமல்
எள்ளன்ன்மிகுத்தழிந்த — கனிகாய்களைப்புசிக்க(மன்)

இராசன்சொல்ல,

௩, நாங்கள்வஞ்சனைசெய்தோமோ நல்லசோர்கறி
தாங்களில்லாமற் றந்தோமோ
மாங்கமரும்பழங்கள் வாங்கிப்புசிப்போமில்
தாங்கலாம்வயிற்பசி தமியேன்தயக்கந்தீரும்- ஜய

பிராமணன்சொல்லல்,

௪, ...தினைமிகச்செய்யாதே அரிச்சந்திரமன்னா
வ...னா லெனைவையாதே
...ராசன்மைந்தற்குக் கடன்பொருள்யாவுந்தந்தால்
சோதிமறையும்முன்னே சுருகவில்நடந்திடுவேன்- மன்

இராசன்சொல்லல்,

௫, கடுஞ்சொற்சொல்வதுதன்மமோ என்வாய்மொழியைக்
காதலுறு தெனமன்மமோ
கொடுத்திடுங்கொய்யாக்கனி கொடிமுந்திரிசசங்கனி
எடுத்துதிர்க்குமாதனை இனியதென்றேடுங்கனி- ஜய

பிராமணன்சொல்லல்,

௬, நானதைக்கையாற்றொடேன் கௌசிகமுனி
நாதன்சாட்சியாக வெடேன்
மானவருண்ணும்பேடா மாண்டைபேணிசோமாசி
யானைசிலேபிழுந்தி யருபரிபுண்யதல்லால் - நா

இராசன் சொல்லல்,

௭, கந்தமூலங்கள்தேடாமல் கானகந்தனில்
காந்தற்சோரெங்குந் தேடுவேன்
கொந்துமிகமெலிந்து வந்தவகையறிந்து
தொந்திரவுசெய்வீரோ செந்தவத்தில்மிருந்த- ஜய

பிராமணன்சொல்லல்,

௮, கோபமென்மிகச்செய்கிறாய் ஏலமீதில்மெத்த
கொடூரவார்த்தைகள் கூறுநாய்
ஆபத்துவந்தகாரு லடிவயிர்பசியாதோ
தாபத்தைத்தீர்க்குந்தண்ணீர் தயிர்நெய்பாலன்னமல்லால்-மன்

பொது- விருத்தம்,

மறையவனிம்மொழிகூறமன்னன்சோர்ந்து
மனக்தளர்ந்துவிற்றிருக்காண்மயிலேயொப்பும்
இறையவன்தனையடியைவிறைஞ்சியேத்தி
என்னெஞ்சுகன்னெஞ்சோவுன்னெஞ்சென்ன
தறைதனில்வைத்திருந்தகனிகாய்களுண்டு
தண்புனலையருந்தியவர்தயக்கமாற்ற

குறையளவுகனிகளுண்டுநீரருந்திக்
கூடிநாருறக்கங்கொண்டாடினரே, ௫௬

(வ-ம்) இவ்விதமாயுரைத்த நட்சத்திரையருடையகொடூரமான வார்த்தைகளைக்கேட்ட அரிச்சந்திரமகாராஜனானவன் சோர்வடைந்துமனந்தளர்ந்துஉட்கார்ந்திருந்தார் தர்மபத்தினியாகிய சந்திரமதியானவள் நட்சத்திரையர்முன்வந்து அனேகவிதமாய் பிரார்த்தித்து உம்முடையமனதுகல்லோ என்றும்-உருகாதோவென்று வேண்டும்போது அங்குவைத்திருந்த கனிகாய்களிற் சிலதையெடுத்துப் புசி[illegible] குளிர்ந்தகெங்காமிர்தம்போலுள்ள தீர்த்தத்தைப்புசித்துக் அவர்களு[illegible]யமனக்குறைதீர்த்து நீங்களும்புசியுங்களென்று உத்திரவுசெய்தபின்பு மீந்திருந்த மற்றப்பழங்களைப்புசித்து அங்குள் தண்ணீரினாலேதாகசாந்திசெய்துக்கொண்டு அரிச்சந்திரன் முதலானவர்களுங்கண்ணுறங்கும்போது லோகிதகுமாரனை யேணைகட்டி அதில்படுக்கவைத்துச் சந்திரமதி தாலாட்டலதுகாண்க,

௫-தரு-இ-நீலாம்புரி-ஆதிதாளம்,

பல்லவி,

ஆராரோ-ராரிரரோ-ஆரிரரோ-ராராரோ.

அநுபல்லவி.

சீரானத்திரிசங்குமைந்தன் செந்நலத்தால்வந்துதித்த
பேரானயிறையவனே பெருமானே கண்வளரீர்-ஆரா

சரணங்கள்.

௧, தேனேதேவாமிர்தமே தேவர்தருமாமுதே
வானேறுமாமதியே வளரவேகண்வளரீர்-ஆரா

௨, மானேமரகதமே மன்னவர்குன்மன்னவனே
கோனேயென்றீவினைகட்கோர் மருந்தேகண்வளரீர்-ஆரா

௩, வானோர்தினம்புகழும் வண்மைமிகுவல்லவனே
மீனோன்முதல்துதிக்கும் மெய்யவனேகண்வளரீர்-ஆரா

கொச்சகம்.

வேந்தன் மகனேவிழிமஞ்சனமாட்டக்
காந்தள்மலர்க்கைவழியேகாரிழைகண்ணீர்சோர
சாய்ந்தவிடம்பார்த்துகடிந்தமிடித்துமழைகாழ்
சேர்க்கவழிப்பேய்யகீர் செய்யிவென்றான்மாமுனிவன் (௧)

(வ-ம்) அகோகேளுங்கள் வேந்தர்களுக்கதிபர்களே இவ்விதமாய் லோகிதகுமாரனைத்தாலாட்டி நித்திரைசெய்வித்த சந்திரமதியானவள் கண்ணுறக்கமுறும்வேளையில் விசுவாமித்திரரானவர் மாரிக்கூட்டங்களையும் காற்றினினங்களையும் ஏவி அரிச்சந்திரனிருக்கிற எல்லைமுழுவதுங்கனமாரியாகச்சொரிவீரென்றுக்யாபித்தபோதுஜலப்பிரளயகாலம்போலே மழைபெய்யத்துடங்குவதுகாண்க,

௰௯-தரு-இ-ம்-பைரவி- திரிபுடைதாளம்,

பல்லவி.

மழையிடிகுமுறலுண்டாச்சே -மாதவன்மாய்கை- மழையிடிகுமுறலு [ண்டாச்சே

அநுபல்லவி.

மழையிடிகுமுறலாலே மன்னுவின்னுள்ளோர்திகைக்க
மாதவமுனிவசிஷ்டர் மன்னவன்மத்தாற்பனைக்க (ம)

சரணங்கள்,

௧, மதகரித்திரள்கள்அலறுமே சுழற்காற்றினல்
மரங்கள்முறிபட்டுலருமே குமுறிமின்ன
உதகவருவிகளா ஊர்வனங்கள்நெளிய
உத்தவமுனிவன்செய் ஊழியெனத்தெளிய (மழை)

௨, அண்டபிண்டங்களும்கலங்க மதிதிகைத்து
அருந்தவரெவரும்ஒடுங்க ஆலாலம்போலக்
கொண்டலெழுந்திருண்டு கூடவெள்ளம்புரள
குவலயத்துள்ளசீவ கோடிகளுமொரள (மழை)

௩, செடிகளின்டிவேரொழிய வனத்திலுள்ள
சில்லுண்டிப்பூண்டுகளழிய அனுதினமும்
கொடியஉலகையாண்ட நிருபன்மனஞ்சோதிக்க
திசை[illegible]வரெவர்க்குமிந் நீதிதனைப்போதிக்க (மழை)

கொச்சகம்.

மங்கைநனைந்துமகன்நனைந்துமன்னனைந்
த[illegible]கங்டுங்கியடிநடுங்கிமெய்நடுங்கி
பங்கமதுஊட்டுபற்கிடுகிடென்றடிப்பத்
துங்கமணிமுடியான்சுக்கிரனைப்பார்த்துரைப்பான்,

(வ-ம்) அகோகேளுங்கள்ஞானசிரோமணிகளே இப்படியாகசந்திராமதியும் லோகிதகுமாரனும் அரிச்சந்திரமகாராசனும் தேகமுழுதும் நனைந்து கைகால்நடுக்கமுற்றுமெய்யெலாம்வெடவெடர்த்து மதிதளர்ந்து பற்கள்கிட்டிப்போய் நடுக்கமுற் றுதறும்போது நட்சந்திரையனைப்பார்த்து அரிச்சந்திரமகாராஜன் வணக்கமுடனே அடிபணிந்து சொல்லுவதுகாண்க,

௨௰-தரு-இ-ம்-அடாணா- ஆதி-தாளம்,

கண்ணிகள்

இராசன்.

௧, மார்ருவதில்லையிதுக்கென் செய்வோம்மறையவாயிம்
மழைதனிலிருந்தென்னமா யுய்வோம்

ஆறுமெறுகுமுன்னே யக்கரைசேரவேணும்
தாறுமாறுசொல்லாமல் தயவுசெய்தெழுந்திரும்-மர்

நட்சத்ரையன்சொல்லல்,

௨, ஆறுதலைசொல்ல வெழுந்தாயோ அரிச்சந்திரா நீ
யாருக்காயுன்மனதுநொந் தாயோ
சீறுமரவைப்போலச் சேதிசொல்வாய்நீபோமுன்
தோறும்வந்துஉனது தொண்டுசெய்யவந்தேனே-ஆறு

இராசன்சொல்லல்,

௩, எந்தநகரில்வந்தடைந்தோ மையா நட்சத்ரையனே
எழில்மிகுங்காசிசேரட்டு மையா
சொன்னபொருட்களெல்லாஞ் சுருக்கிற்கணக்கிற்சேர்த்து
நன்னகரயோத்திக்கு நானனுப்புறேனையா - எந்

நட்சத்ரையன்சொல்லல்,

௪, மன்னவாவுனைத்தொடர்ந்து வந்து விசுவாமித்திரர்
மாமுனிதருக்காய் மெய்நொந்து
அன்னமாகாரமற்று அனுதினம்நடையுற்று
சின்னபாடவிதியோ செல்வமிகுத்துப்பேசும்-மன்

பொது- விருத்தம்.

அந்தணனிம்மொழியுரைக்க அறிவொழிந்த
அரசனுமாதரசியுமந்திரியுமேங்கி
வந்தடியில்மலர்க்கரங்கள்பூண்டேன்னையா
வழித்துணையாயெழுந்திரெனவாழ்த்திப்போற்ற
முந்தமுனிமொழியுணர்வாய்முயன்றெழுந்தான்
முன்னவன்றன்சிறுவனைமந்திரிதோட்கொண்டான்
செந்தவனுமந்திரியுஞ்சிறந்தமாதுஞ்
செல்லுவார்வழிநடக்கப்புல்லுவாரே, ௨௰

(வ-ம்) இவ்விதவாய்காருக்குவந்தநட்சத்ரையென்னும்பிராமணனவர்சொல்ல மதியினமுற்ற அரிச்சந்திரனும்சந்திரமதியும் சத்தியகீர்த்தியும் ஏக்கமடைந்து சரணகதர்களாய் பாதம்வருடி என்னையனே நடைவருக்குத்துணையானவரே எழுந்தருள்வீரென்றுபலவாறுதுதிக்க அன்றுவிசுவாமித்திரருரைத்ததை எண்ணி அங்கிருந்தெழுந்தான் லோகிதகுமாரனை சத்தியகீர்த்தியானவன் தோளிலெடுத்துக்கொண்டான் அரிச்சந்திரனும் சந்திரமதியுங்கூடி ஸ்ரீகாசிவிஸ்வநாதரைத்தியானித்துக்கொண்டு வழிநடக்கயத்தனப்படலானான்.

௨௨-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்,

கண்ணிகள்,

சந்திரமதி,

௧, வழிநடந்துவாரும்மன்னவனே மலர்ப்பாதம்பதறுமல்வழிநடங்
குழிநரிகளுங் கைக்கூட்டமும்
கூக்கூவென்றிதோ கூவியோடுது (வழிநட)

அரிச்சந்திரன்,

௨ மடந்தையேமெள்ளநடந்துநீவருவாய் மடமானேதேனே
தடந்தனைத் தப்பாமல்கடந்து
தங்கியமன மயங்கிடாமலே (மடந்

சந்திரமதி,

௩, சத்தியகீர்த்திக்குமுற்றுதிவ்விதியோசாகேதத்தோர்புகழ்(சத்தி
நித்தியகர்மானுஷ்டானதானதர்மமும்
நீக்கியேநெடு நாளும்நம்முடன் (சத்தி)

சத்தியகீர்த்தி,

௪, தாயேநீயும்தந்தையுந்தயங்கபரிதாபமொழிந்து (தாயேநீ)
நாயேனு டாளிற்றெவர்கள்
நகைக்கிட்...களோ நான்மறைபுகழ் (தாயே)

பொது-விருத்தம்.

வழியறியாமற்காலாற்றடவிக்கொண்டு
வழிந்தோடும்விழிநீரினருவியாலும்
சுழியவழிந்தோடுமழைத்துளியினாலுஞ்
சுரமுழுதும்வரம்புவரம்பாயறுத்துக்
கிழியவிடுந்தரைதனிலேநடக்கும்போது
இடியிடிப்புமினுமினுப்புமிடிமுழக்கும்
அழியவழிகாணாமலலைந்தலைந்து
அறைகுவார்மனவெதும்பிக்கரைகுவாரே, (௨௧)

(வ-ம்) அகோகேளுங்கள்குறநிலத்தரசர்களே இவ்விதமாய்அடர் வனத்திலே நடக்கும்போது வழிதப்பிப்போய் கால்களாலே தடவிக் கொண்டு தாரைதாரையாயபெருகியகண்ணீரினருவியாலும் பாளம் பாளமாய் அறுத்துக்கொண்டோடப்பட்ட மழைதுளியின் திரளினு லும் அந்தவனமுழுதும் பாறுபாறுயறுந்து வெடிப்புற்றநிலத்திலே நடக்கும்போது முன்னிலுமிகுதியான மின்னற்படர்க்கையும்இடிமு ழக்குங்கண்டு இவைவொழியும்வகை இல்லையேயென்றுஒருவர்க்கொ ருவர்மனோவேதையினால் தேவதேவதைகளானமும்மூர்த்திகளையும் துதித்துக்கொண்டு வழிநடக்கின்றவிதங்காண்க,

உஉ-இ-ம்-ஆகிரி-அடதாளம்,

கண்ணிகள்-

(அரி) அரிவையேநாமிந்த அவதிப்படுவோமென்று
அறிந்திலமேம்மதியே
திருவுளமிப்படியானுலுமிந்தத்
தீவினைக்கென்னசெய்வோம் ஆயன்

(சந்தி) கூடினசத்தியைக் கூற்றுவனுச்சுதே
குவலயந்தன்னில்மன்னவா
மாறுவதில்லைசண்ட மாருதமோங்குது
மானிலந்திரைதையோ

(அரி) வில்லம்புபோல்மழை விழுந்துமெய்யிற்றைக்குதே
விமலனேயென்னசெய்வேன்
அல்லற்செய்திடுமுனி வல்தமையறிவேனிவ்
வவதிக்கென்னசெய்வேன்

(சந்தி) அண்டகோளமுட்டக் கொண்டல்குமுறுதே
அடிவயிற்றிடுக்கிடுதே இப்போ
தெண்டிசையும்நடுங்க விடிமுழக்குமுழங்கு
தீசனேயென்னசெய்வேன்

(அரி) அட்டைசுருட்டை குரட்டைகள்மிதிபடு
தையனேயென்னசெய்வேன் குறுங்
கட்டைதடுத்தித்தாழ்வாய்க் கட்டைசிதறிவீழ்ந்தேன்
கஞ்சனேயென்னசெய்வேன்

(சந்தி) மரத்தின்கிளையொடிந்து மார்பில்விழுகுதையோ
மாதவாயென்னசெய்வேன் காட்டிற்
பெருத்தபுலிகாடி பிணைந்துவருகுதிந்தப்
பெருவினைக்கென்னசெய்வேன்

(அரி) கருத்தேட்கட்டுறவெந்தன் காலிற்கொட்டுதே
காலகாலனேயென்னசெய்வேன் இப்போ
திருந்தவேரடிபோர்க்க ஏழடிசரக்குதே
ஈசனேயென்னசெய்வேன்

(சந்தி) ஆவியவனியெங்குந் தாவியலையுதிந்த
அவதிக்கியானென்செய்வேன்
காவிர்படுந்துயரைக் கண்டுமகிழ்ந்திடாய
காசிநாதாயென்னசெய்வேன்

பொது-விருத்தம்

காவில்வழியருவிகளால் நலிந்துலைந்து
கழுத்தளவுவாய்யளவுகலிங்குகாவாய்

...வியமான்புலிசிங்கந்திரியுங்குன்றும்
குகைகண்வாய்மடுவோடையிவைகள்நீந்திப்
பாவிகள்யாமினிவிடிந்துநடப்போமென்று
பரிகுலத்ரசனுண்டபலவுமாற்றத்
தாவிவரும்போதுமிகுபூதப்பேய்கள்
தனைக்கண்டான்கொண்டலிற்கற்சனைகொண்டானே,

(வ-ம்) இவ்விதமாய்நடக்கும்போது கானகத்திலேவழிந்தோடப் பட்டநீரினருவிகளாலேமிகுந்தயிமிசையுற்றுபள்ளம்படுகுழிகளிலுள்ளசலத்தினாலேகழுத்தளவுவாயளவுநனைந்துகல்லுகுகைவாயமுதலானநேர்ப்பரவகளைத்தாண்டி மிருகங்கள்சஞ்சரிக்கின்றகுகைகள்- கணிவாய்களைக்கடந்து நெடிய-மடு-ஓடைகளைநீந்திக்கொண்டு களைசேர்ந்து இனிநடக்கமுடியாதுநாம்மகாபாவிகள்பொழுதுவிடிந்துநடப்போமென்றுஅவரவர்கள் கட்டியிருக்கிறகந்தைகளை காற்றுடியாசவீசிஉலர்த்துவோமென்று நினைந்துவரும்போது எண்ணமுடியில்லாத பூதப்ரேத பிசாசங்களைக்கண்டுஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருப்பதுகாண்க,

உ௩-தரு இ-ம்-மோகனம்-அடதாளம்,

பல்லவி.

வருகுதுபார்பூதப் பேய்கள்-இதின்
வகையுரைக்கச்சேடன்றனக்குமுண்டாவாய்கள்

அநுபல்லவி.

பெருகுதுவரவரப் பின்முன்னுமப்பேய்கள்
ப்ரமித்தோரைத்துடாதோப்ரபலமான நோய்கள்-வரு

சரணங்கள்.

௧. பார்த்தோரைத் தீய்த்திடுங்கண்கள்-இந்தப்
பாரெல்லாமிரண்டிட பார்க்குமிவையினைண்கள
கண்கள்-மிக
ஏர்த்ததெல்லாமவைகட்
ஏக்கமடைவாரவை களைக்கண்டபெண்கள்
ஆத்தமாட்டோமிவை யாவும்நம்மையெதிர்த்தால்
கூத்தனுக்கிறையின்று கொடுப்போமுபதேசத்தால்-வரு

தேகம்-இந்த
௨. வானைத்தொடுமிவைகள்
வடிவுகட்கிணையாமோ வளருங்கார்மேகம்
லனேகம்-மதி
தேனைப்பழித்தசொல்
தெளியாதொருக்காலு மிவைகள்செய்யனுபோகம்
சேனைக்கவலனுண்ட சீமைகள்போனதாலும்
மோனையுஞ்சௌர்யமும்முறிபடுமோ யெக்காலும்-வரு

௬, ஓங்காரஞ்செய் — தலறிக்கொண்டு-ஐயோ
ஒகோ ஆகாளங்கூ — வென்றலறிக்கொண்டு
ஆங்காரமாய்ச் — சிறிக்கொண்டு-கையி
லகப்படச்சீவராசிகளை — லமுதாய்கொண்டு
ஊங்காரங்கொண்டாகுதி — கொண்டவுதவகன்போல
றீங்காரங்கொண்டுவீ — ரிட்டுக்கரிக்கூட்டங்கள்

பொது-விருத்தம்.

எண்ணிறந்தசங்கிலியன்வீரன்சாத்தான்
இடுகாடன்சுடுசொல்லன்எல்லன்சங்கன்
உண்ணிறைந்தகருப்பண்ணனந்திச்சாமா
னெரியடிவீரன்சடையனெதுங்காக்கள்ளன்
மண்ணிறைந்தசங்கிலியன்தலைவிரித்தான்
மதுவீரன்கரியன்மயானருத்ரன்
தண்ணிறைந்ததலையாரிவர்களோகுந்
தழிகண்டானைவதிரியும்வழிகண்டானே, ௨௧.

(வ-ம்) இப்படியாகஅனேகவிதமான பெயர்களையுடைய பேய்க்கூட்டங்கள்வருகிறஆரவாரத்தைக்கண்டுஅரிச்சந்திரமஹாராசன்மனோரம்ய குணசீலனாகிய மந்திரிக்குச்சொன்னபோது தனது மதியூகத்தினால் விசுவாமித்திரருடையமாய்கையினால் வருகின்றதென்றுணர்ந்த மந்திரியானவன் இராஜன்மனதைத்தேற்றுவதுகாண்க,

௨௪-மந்திரிசொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்- அடதாளம்.

பல்லவி.

பேய்களிவைகளல்லமன்னா-விசுவாமித்திரர்- வித்தலாட்டமிதெல்லா

அநுபல்லவி.

மாய்கைக்குணமிதெல்லாம் — மன்னுமருங்கினில்
மகிழ்ந்துவருமோமனத் — துன்ன
வேய்கள்மலிந்தகாட்டில் — வீராதிவீரர்க்கும்
வாய்மைதவறலுண்டோவண்மை — மிகுசூரர்க்கும்(பே)

சரணங்கள்

௧, ஏக்கமடைந்தோடுதுபாரீர் — இவைகளின்
இயல்பையெல்லாஞ் — சொல்வேன்வாரீர்
நோக்கங்கண்டொதுங்குதுபாரீர் — மிகமெலிந்து
நொந்துமனஞ்சோறுது — பாரீர்
தூக்கங்கொள்வானே அந்த துறவோனிமைப்பொழுதும்
தூக்கமுழுமார்பனே புகல்வீர்சகமுழுதும் (பே

உ. சத்யசந்தனர்கள்முன்செல்ல பூதப்பேய்கட்கு
சாத்யமாமோ எளிதிமபுல்ல
நித்தியநேமக்குறைவோசொல்ல காளிகாதேவி
வினைந்திடாளோ பேய்களைவெல்ல
அத்யந்தம்சுபபலமடைவோ மோர்குறைவில்லை
பத்யமாயுரைத்திட்டேன் பதங்கண்டவர்செய்தொல்லை (பே

ங. செகதீசன்கிருபைநமக்குண்டே எவரால்நமை
செயித்திடலாகு சொல்வீர்கண்டே
மகவீசல்செய்வதுமின்டே இதுகவெல்லலாம்
மந்திரக்காணத் துண்டுதுண்டே
இகத்திலும்பரத்திலும் இசைந்ததுமதிகீர்த்தி
சுகத்திலிருப்பீரென்றும் சோதிகுலத்தின்மூர்த்தி (பே)

பொது-விருத்தம்.

மாதவமுற்றெழு பைம்பொழிறன்னி
லேதமிகுத்தவ ரெய்தியநாளின்
மாதவனேவிய வன்கணப்பேயும்
பூதமும்வந்து புகுர்தனவன்றே. (உச)

(வ-ம்) அகோகேளுங்கள் ஏகாகரசித்தர்களே இந்தப்பிரகாரமாய் வனவாசிகளான அரிச்சந்திரமகாராசன்முதலானவாவரும் தத்தித்த டுமாறி அடர்வனத்தில் வருகின்றதருணத்தில் விசுவாமித்திரமகாமு னீஸ்வரராலே ஏவிவிட்டபூதப்ரேதபசாசங்கள் மனந்திகைக்கும்படி ஆரபாரத்துடனே இராசன்முதலானவர்களைச் சூழவருவதுகாண்க.

உடு-தரு-இ-ம்-பந்துவராளி- ஆதிதாளம்,

பல்லவி.

பூதப்பேய்கள் சூழ்ந்துகொண்டவே - மாதவன்விட்ட
பூதப்பேய்கள் சூழ்ந்துகொண்டவே,

அநுபல்லவி.

பூதப்பேய்கள்சூழ்ந்துகொள்ள பூபன்மனமஞ்சித்துள்ள
பூவையுமந்திரியுஞ்சேரும் புகாவன்றுன்பூண்டகையும்
புண்ணில்வெல்நுழைந்தாற்போல புகலவேசுக்ரனும்சாலப்
பூதப்பேய்களெண்ணிறந்த பூமியின்மீதிற்சிறந்த
பொன்னின்மலைவெள்ளிமலையும் காமக்கிரியும்
மன்னியமந்தரவிந்தமும்
பன்னியகந்தமானமும் நீலகிரியும்
மின்னியங்லெமகூடமும் சித்திரகூடமும்
துன்னியமலைகள்யாவும்துறந்தாருகப் போய்த்தரவவும்
கன்னியமனத்தர்ப்பீதிற் களிப்புடன் விழ்ந்திடும்போதிற்

கற்றுவார்வழிகாணுமற் சுற்றுவார்வெளியுங்கொந்து
மற்றுவார்செடிக்குச்செடி தொற்றுவாரிப்படியாக் (ஞ)

சரணங்கள்

௧. எரிதழலெண்டிசைசூழுமே அண்டபிண்டமும்
எழுந்தெழுந்து குதித்தாடுமே
எரிதழற்கொழுந்தவிழ வத்தலத்துள்ளோரும்வாட
எப்பிறப்பினுமில்லாத எவ்வுயிர்களும்பொல்லாத
வெயிற்றினைக்கண்டோர்பிரமிக்க இரவலகொந்தா[illegible]மிக்க
எல்லையில்லாக்கவலைகொள்ள எழுந்துவந்தவைகள்துள்ள
எங்கேயடியெப்படியென்பார் யிந்தயிரவி
லெப்படிகண்களிப்போ மென்பார்
எத்திசைநோக்கிப்போவோமென்பார் மறையவனை
எற்றிமனம்பொறுப்பீரென்பார் மிகவணங்கி
ஏற்றையிற்யோராமன்னின்று [?] எவியகைதயெல்லாஞ்சென்று [?]
தூற்றையிற்கற்களைவாரி அன்பமுற்றோர்கள்வேசாரி
துலங்குவார்-துதித்தீசுரைக் கலங்குவார் அறிவழிந்து
கலங்குவாருயிற்போனாற்போ லிலங்குவாரித்தவேளைலல் (ஞ)

௨. ஐயனுடவருகைவையெனும் சிலருபேய்கள்
அரசனுட லமுதாமென்னும்
தையலுடலைத்தாவென்னும் தங்கிடிவ்வுடலையென்னும்
பையநடப்பதேனெனனும் பாச்சவில்நடப்பீரென்னும்
செய்யவரைக்கொள்விரென்னு சிறுசிறுகூர்செய்விரென்னும்
எய்யுதாமதமேனென்னும் எட்டிவாருமுன்பின்னென்னும்
வெய்யவகுலத்தலைவனும் வேந்தியுஞ்சேயும்
ஐயுறவகற்றி யாரையும்
வையம்வானமுளவென்றைறும் தர்மமேதுணை
செய்யவந்தெப்பிழைகளுந்தாளும் ஆயுள்ளளவும்
பொய்யனுவனவும்யாங்களே புகன்றிடோம்வேண்டியநீங்கள்
செய்யவந்தசெய்கையுங்கள் சித்தமகிழ்ந்துசெய்யுங்கள்
சோருவோம்-மனதுமிகத் தேறுவோம்-பரமபதஞ்
சேருவோம்-திராவினைகள் தீருவோம்யென்பவர்களே (ஞ)

௩. புல்லுமெக்கணங்களுமென்றார் முனிவான்சொல்லை
சொல்லுவீர்க ளிக்கணமென்றார்
கொல்லுவீர்கொடியிலென்றார் கூறுகூறுவிரென்றார்
அல்லும்பகலிலுமுங்கள் அரும்பசிகளுக்கிருங்கள்
வில்லுமில்லைவாளுமில்லை விம்புசெய்வதினுற்றொல்லை
வெல்லுமெங்களையில்வேளை வெவ்வினையொழிந்தோம்காணே

சொல்லுமென்னப்பேய்கள்சொல்லுமே — நாங்களுங்களை
கொல்லுமவரல்லவென்னுமே
நில்லுநில்லுமென்றலைப்புமே — முனிசொற்படி
சொல்லுஞ்சொல்லுமென்றியம்புமே உங்களுக்கெதிர்
சொல்லுவதில்லையென்றந்த நல்லுரைபுகல்நரேந்திரன்
கொல்லுவதுங்கள்தருமம் புல்லுவதெங்களதருமம்
போற்றினேம பதங்கள்பணிந்தேற்றினேம் மனோமலர்கள்
தூற்றினேம் உலகிற்புகழ் சாற்றினேமென்பவர்களைப், (௨௪)

பொது-விருத்தம்.

காளிகூளிகளலகைப்பூதபேய்கள்
காவகலச்சேவல்களுங்களித்துக்கூவத்
தோளின்மிகுமன்னவன்றன் றுயர்தணிகத்
தோன்றினாற்றேரின்மிசைச்சோதிவேந்தன்
வாளிமழைமாரிபொழிந்தோயக்கண்ட
வலியவிமகாரனொளித்தானுழிவேணி
யாளிஜனகன்பதத்திலெழுகங்காஜ
லங்கண்டார்தேவர்கடலங்கண்டாரே, (௨௫),

(வ-ம்) அகோகேளுங்கள் ஸற்சனர்களே இவ்விதமாய்வந்தபற்பல பூதப்பேய்கள்யாவும் காட்டைவிட்டுப்போய்விட்டபோதுகாலக்கோழிகள்கூவுமுன் புஜபலபராக்ரமனான அரிச்சந்திரமகாராசன் துயர்தணிககவெணணிசூரியபகவானைதெருந்து கீழ்திசையிற்றோன்றினன் மன்மதன்கணைகளைப்போலே பொழிந்தமழை ஓயக்கண்ட சந்திரபகவானும் ஆகாயத்தில்உற்பத்தியாகிய கங்காஜலத்தையும்தேவதேவர்கள்புகழப்பெற்ற முனிவர்கள்வசிக்கின்ற ஆச்ரமங்களையுங்கண்டஅரிச்சந்திரமகாராசனானவன் சந்திரமதிக்குகங்காதேவியின்மகிமையைச் சொல்லி நடையிலுண்டாகிறஇளப்பாற்றிக்கொண்டு வருவதுகாண்க.

௨௬-தரு-இ-ம்-அடாணா-அடதாளம்.

பல்லவி.

மங்கையரேநாளும் - மாதவத்தோர்துதிக்கும் - மானதியிதுதானே

அநுபல்லவி.

செங்கைகள்ரண்டையுங்கூப்பிச் சேவிப்போர்கலிதீரும்
சேயிழையேயிதனால் சென்மசாபல்யம்நேரு (மங்)

சரணங்கள்.

௧. மாதவமுனிவர்கள துதிக்குமகாநதி
மதுசூதனன்பதத்தி லுதித்தமகாநதி
பாதிமதியணியும் பரமசிவன்சிரத்தில்
நீதிபாகப்பாவு நின்மலநதியிது (மங்)

௪, பகீரதன்தவத்தினல் பாரிலுதித்தநதி
பக்தஜனங்கட்குற்ற பாவந்தீர்த்திடுநதி
ஸகரதனூஜருக்குப் பகருமோட்சமருளும்
சத்தியநிலைநிறுத்தும் நித்யமகாநதி (மங்)

௫, கதிதருபுரிவழி சடக்கும்படிதுறையா
சங்கைநதியிற்பொங்கிக காணும் அலைகளெல்லாம்
விதிதவிழ்க்குந்தேவர்க ளாகிவிளங்குமணல்
அதிர்குமுபரிடத சாரமாகுந்தோயங்கள் (மங்)

௬, மோட்சவழிகட்காதி மூலாதாரமிதெனச்
சாட்சியாமிந்தச்சத்தம ஜகத்திலுள்ளோர்களுக்கு
தீட்சணமாகக்கேளாய் தேவமுனிவரிதின்
வீட்சணத்தினலல்லோ விரைவிற்புடம்பகைத்தார் (மங்)

பொது-விருத்தம்.

மங்கைச்சந்த்ர மதியுடனேவரும்
சங்கையில்லாத் தவத்தினரென்னவே
கங்கையாடிக்காசி மாநகர்நோக்கியே
பங்கயநிகர்ப் படவினிலேறினர். (௨௬)

(வ-ம்) சந்திரமதிமுதலான ஐந்துபேருமாய் அரியதவத்தில்மிகுந் தவராய், கங்கைமாநதியில் தீர்த்தமாடி நித்யகர்மானுஷ்டானதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீசிவகாசிக்ஷேத்திரத்தை நோக்கிநடக்கக்கருதி த் தாமரைப்பூவினிதழ்களுக்குச்சமானமானமரக்கலத்திலேறிசர்வத் ஞசொரூபரானஸ்ரீகாசிவிஸ்வநாதரைத்யானஞ்செய்துகொண்டு படவிலேறிவருவதுகாண்க.

௨௭-ஏலப்பாட்டு-இ ம்-உசேனி-திரிபுடைதாளம்,

ஏலேலோ-ஏலேலோ-தத்தையாள்-ஏலேலோ-ஏலேலோ

அநுபல்லவி

ஆலாலகுண்டசிவன்-தத்தையா-ளிணையுமுமையருள்மிகுத்தோ
சாலசத்யதர்மன்-தவருகுணசீலனரிச்சந்திரன்சிறந்தகங்கைகண்டானே

சரணங்கள்.

௧, குருவசிஷ்டர் தண்ணருளால்-தத்தையாள்
குலமுழுதுங் கீர்த்திபெற்ற
பெருந்தவக்கோ சிகமுனிவர்-தத்தையாள்
பெருகச்செய்த திருவருளால்
அருந்தவனும் அரன்முடிதனில்
அமருங்கங்கைகண்டமலனகினன் (ஏலேலோ)

௨. முன்புநப்பிற் செய்தவத்தால்-தந்தையான்
மூவர்முத லோர்புகழும்
அன்பின்மிகுத கலருறையும்-தந்தையான
அரனமருங் காசிதனில்
இன்பமாய்வசித் திருந்திடவினைத்
திருடிக்கனைத்துமீயு துகங்கைக்கண்டான் - ஏலேலோ

௩. சத்தியதர்மங் தனில்வாழுவான்-தந்தையான்
ஸற்சனர்கள் பதந்தொழுவான்
நித்தியகைம நிஷ்டையுள்ளான்-தந்தையான்
நிருபற்செல்லா மிகுபுகழான்
அத்யத்யமில ஞதித்தன்குலத்
தகிபரின்மிக வருந்தவனுயினுன் - ஏலேலோ

பொது-விருத்தம்

கதியதனைத்தாண்டமரக்கலத்திலேறி
நான்மறைநாறுறையுநன்மனத்திலேற்றிக்
கதியடையுந்துறையிதுதானென்றிரங்கிக்
காரிழையும்வேந்தனுமந்திரியுஞ்சேயும்
விதிமுறையைவென்றவர்போர்கரையிலேற
வெற்றிமிகுசெங்கதிரோன்வேலைபுக்கான்
மதிமிகுத்தோரங்கடைந்விசுவாமித்திரன்
மனங்கண்டார்வலியவிலங்கினங்கண்டாரே. ௨௫

(வ-ம்) அகோகேளுங்கள் வேந்தர்களே இவ்விதமாகக்கங்காநதியைத் தாண்டித் தோணியின்மீதேறி நாலுவேதமும் ஆறுசாஸ்திரமுங்கூறிக்கப்பட்ட ஆதிமூலத்தைத் தெளிந்த மனதுடனே தியானஞ்செய்துகொண்டு அக்கரைசேர்ந்து பரகதியடையப்பட்ட வழிஇதுவேயென்றுபடகைவிட்டிறங்கி அரிச்சந்திரமகாராசன்-சந்திரமதி-லோகிதகுமாரன்-சத்தியகீர்த்தி முதலானயாவரும் விதிமுறை யறிந்த ஆத்மஞானிகள்போல கங்கைக்கரையேறினார்கள் சூரியபகவானும் கடலில்மறைந்தான் புத்திசாலிகளானயாவரும் அந்நதிக்கரையிலிருக்கும்போது விசுவாமித்திரமுனிவரது மாய்கையால் வரப்பட்ட மிருகங்களின் கூட்டங்களைக்கண்டு பிர்மா-விஷ்ணு-மகேஸ்வரர்களென்னும் திரிமூர்த்திஸ்வரூபங்களாகத் தியானிப்பதுகாண்க,

உ௬-தரு-இ-ம-கல்யாணி- அடதாளம்,

பல்லவி.

வனந்தனில்வாழுந்தேவர்களே-வானோர் வாழ்த்தியமூவர்களே,

அநுபல்லவி.

தனந்தரவொருவழியுமில்லைமாதவமுனி — நுணந்தனைத்தரிலுங்கள்
இனந்தனக்கிறை — யாகுவோமல்லது
இல்லையிதிற்குறை — யில்லைவெகுதொல்லை-வண

சரணங்கள்,

௧. பாவியரக்கன்கடுந்தவத்தினுக்கஞ்சிப்
பாரெல்லாமவனுக்கச் — செய்தீரே-நாளும்
பாசிலுந்தேவர்களுரிலும்முன்னோரைப்
பயந்தவன்டிதொழச் — செய்தீரே-எங்க
ளாவியுடற்பொருளியாவும்விசுவாமித்திரர்க்
களித்திடமேலும் — வருத்தீரே-நீர்
அறியாததோவுமையன்றியுண்டோயிந்த
அவமதியெங்கட்கு — வருந்தீரே-உம்மைக்
கூவியழையாதார் — முன்வந்தீரதுவெங்கள்
குலவண்மைதவராத — குரிசிலர்புண்ணியங்கள்
தாவிவந்துயிர்கவ — நச்சாமபுவந்தராய்
தரணியிலவதரித் — தெழுந்தீர்விசுவாசராய்
ஏவியமுனிவருக் — கிதஞ்சொல்வீரெமைப்புல்வீர
ஏற்றிடுவீர்துய — ராற்றிடுவீர்புட்ப-வண

௨. எங்கணுமொருகுடைக் கீழாண்டஇரணியன்செய்
இடுக்கந்தவிர்ந்திட — முன்னாளில்-நல்ல
இறையவரெவாகளு முறையிடவினவியவ்
வியலபினையறிந்தெழுந் — தன்னாளில்-நர
சிங்கவுருவமெடுத்துத்துயராற்றிய
சேதியெல்லாம்யா — மறியோமே-அந்தச்
செயலையொழித்துத்தனித்தொருசிங்கமாய்ச்
சேவைதருவதைக் — குறியாயோ-மிக
பங்கப்படாதெம — தாருயிர்யாவையும்
பாதுகாப்பதுன் — பரமென்பதாலுய்யும்
திங்கள்குலத் — தவதரித்தேமிக
தீனர்களையறிந் — தாதரித்தாய்ஜெக
மெங்கணுமொன்று — யுதித்தமாதவனே
இருடிகடனொழித் — தேர்ப்பாயாதவனே-வண

௩. இதஞ்சொலியுங்களை — எங்களுயிர்கவர்ந்
திடவிடுவித்திடு — மெழிலேதோ-முக்கண்
ஈசன்மாலயனறியத்தரவேண்டிய
விருடியின்கடன்கொடா — தொழிவதோ-தவம்

தஞ்சலியும்வியாக்ர பாதருமுக்கண்ணன்
னாதசேவைதனில் மிகுத்திரே-முகம்
பார்த்தபேர்கட்கெல்லா மேத்தவித்யாசமாய்ப்
பழுவத்துன்னைந்தேன் செஞ் மித்திரே
அதனுசெய்யனந்திரதுவெங்கன்மனமுற்றேறும்?
அவனிபிற்பிறப்பென்னு மாசைகளற்றேறும்
சதஞ்செய்யுசத்திய வார்த்தைபொழியாமல்
சத்யரிச்சந்திர னெனும்பெயரழியாமல்
நிதமுஞ்செய்தவமுங்கள் நேசம்பலித்தது
நிரந்தரமுங்கதிர் குலவொளிசொலித்தது(னை)

வேறு- விருத்தம்.

நீதிவழாதவர் நீர்மையுணர்ந்தே
தாதிவிலங்குகள் சார்விடம்கண்ணிற்
றோதியவேத்த னுரைத்தகுறிப்பால்
வேதியன்மற்றோர் விசாரமுரைப்பான். (௩௮)

(வ-ம்) அகோகேளுங்கள் மதிமிகுத்த குரிசிலர்களே அனுவளவும் நீதிதவறாத அன்னோர்களின்செறியுணர்ந்து மாயாகற்பிதமானமிருகாதிகள்யாவுந் தத்தமிடங்களிற் சார்ந்தன அரிச்சந்திரமகாசன்விளம்பிய சிலசொற்களின்குறிப்பினால் நட்சத்ரையரானவர் கபட வஞ்சமனத்திடனே ஒருவிசேஷஞ்சொல்லுவதுகாண்க,

நட்சத்ரையர் சொல்லுதல்.

௨௯-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

பூர்த்தாமுன் புகன் வந்ததீவினைகொஞ்சம்
பொறுக்கொணுதினிவருமே

அநுபல்லவி.

கீர்த்தாமுண்புகழ் நிலைக்குமென்புகழ்கேழ்க்கில்
நெஞ்சகந்தனில்மிக வஞ்சகமலவே(பூர)

சரணங்கள்.

அரிச்சந்திரன்.

௧, நெஞ்சகந்தனிற்சத்திய நெறியல்லாதவேறென்றேனும்
நீள்சதிருள்ளவுமே
வஞ்சகமென்னவும் வையகந்தனிலென்றேனும்
வானம்நீர்மதியுமிவைகளுள்ளவுமே (நெஞ்)

நட்சத்திரையன்,

௨, எந்தனுக்காகநீ யிபன்மிட்டபொருள்யாவும்
இல்லையெனப்பயின்போதே

உந்தன்றுயரறிந்து உரைக்கமனந்துணிந்தேன்
ஒளிவேலவாவுன்பின்னே உளமகிழ்ந்துயான்வந்தேன் (எந்த

அரிச்சந்திரன்.

௩. ஊழ்வினைதீருமுன் னூல்வினைதீருமோ
உவமையுறுதியாகுமோ
பாரிலெங்களையவம்பகரசொல்லவதேயம்
பார்க்கவன்குலத்தோர்கட் கேர்க்குமோயிந்தநூயம் (ஊழ்)

பொது- விருத்தம்.

புண்ணியவன்னாளுமகனும்புகழமைச்சும்
பொற்கொடியும்புகரவனுக்கிதுபுகன்றார்
நண்ணியமாமறையோனும்நாணமுற்றான்
நற்கதிமோனுமித்தவன்றேர்கடாத்துகின்றான்
இன்னியநற்புயத்தவனுமவிடம்விட்டுத்
திவிரமாயடர்வனங்கள்திரிந்துபோந்து
புண்ணியநற்ச்ரோணபத்திரைநதியைக்கண்டு
பொங்கினார்நீராடத்தங்கினாரே. (௨௯)

(வ-ம்) அகோகேளுங்கள் குந்திபுத்திரர்களே அரிச்சந்திரன் முதலா
னவர்களும் இவ்விதமாகச்சொல்லக்கேட்டநட்சத்திரையன்மனங்குண்
ணித்தலைசாய்த்தான்சூரியபகவானானவன் தேரின்மீதேறிநடத்தலுற்
றான் புசபலபராக்கிரமத்தையுடைய அரசன்முதலானவரும்அவ்விட
ம்விட்டு அதிதூரிதமாய்வனாந்திரங்களைக்கடந்து ஆயிரப்ரம்மஸ்வ
ரூபரான விநாயகருற்பவித்திருக்கின்ற ச்ரோணபத்திரை நதியைக்க
ண்டு மனக்களிப்புடனே ஸ்நானஞ்செய்யத்தனித்திருந்தது காண்க.

௧௦-தரு-இ-ம்- வாராளி- அடதாளம்.

கன்னிகள்.

௧. பாவையரேயிங்குவாராய்-ச்ரோண
பத்திரைவருந்தன்மைபாராய்
பூவையரேயுந்தன்னோராய்-என்ன
புதுமைகள்தோணுதுபாராய்
௨. கடகரிகளினொழுமுத்தும்-முதிர்
கதலிக்குலையிலெழுமுத்தும்
படமிகுபன்னகமுத்தும்-உயர்
மதுமங்களிலெழுமுத்தும்
௩. மிதந்துவரும்பத்மராகமும்-அதின்
மேவிவரும்புட்பராகமும்
உதிக்துவரும்மிகுசொர்ணமும்-நீரிற்
கலந்துவரும்மனுசவர்ணமும்

படிந்துவருமணல்வண்டலும்-அதிற்
பாவுஞ்சங்கருங்கொண்டலும்
முடிந்துவரும்புள்ளினங்களும்-அதில்
மூழ்கவருமுனிவரினங்களும்

௬, தேவர்களனுதினம்நாடுவார் மிகத்
தெளிந்துவரும்நன்னீராடுவார்
மூவர்களுமிதிலுண்டாகுவார் - யானை
முகவருமிதனிலுண்டாகுவார்

௭. இத்தநன்னீராடித்தேறுவோம்-நா
மெவர்களுமக்கரைசேருவோம்
வந்தனஞ்செய்திதைப்போற்றுவோ-நமை
வாழ்த்தவென்றுநெஞ்சுளேற்றுவோம்.

பொது- விருத்தம்,

இறையவனுமெர்களுநீராடியங்கு
இருந்துகனிகாயருந்தியெழுந்துநந்நீர்த்
துறையதனைக்கடந்துவழிநடக்கப்பச்சைத்
துரகதமேழுடையவனும்தோற்றமோய்ந்தான்
மறையவனுமற்றுளயாவருங்களித்து
மதிமறந்துதுயின்றெழுந்துமையயல்நீங்கி
முறையதிலேயனுவளவுந்தவறிடாப்பீ
மூனைகண்டார்மகிழ்ந்துதெரிசனைகண்டாரே,

(வ-ம்) அகோகேளுங்கள் மகானுபாவர்களே அரிச்சந்திரன் முதலானயாவரும் அங்குப்ராதஸ்நானஞ்செய்து நித்தியகர் மானுஷ்டானங்களைமுடித்துக்கொண்டு அங்குள்ள கனிகாய்களைப்புசித்து ஜலபானத்தினாலே தாகோபசாந்தியடைந்து அங்கிருந்தெழுந்து பலகடங்களுங் கடந்து சிலதூரம்நடந்தார்கள் ஏழுபச்சைக்குதிரைகட்டிய இரதத்தினையுடையசூரியபகவானும் அஸ்தமானமானார் அத்தடத்திலேயவரும்வசித்து நித்திரைகொண்டெழுந்து மறுநாளும் அப்படியேநடந்து சூரியபகவானுடைய புண்யகுமாரத்திகளி லொருத்தியாகிய ஜலரூபியான யமுனாதேவியைக் கண்டபோது தனது குலசிரேஷ்டர்களான அரிச்சந்திரன் முதலானவர்களுக்குத் தெரிசனைதந்து மனக்களிப்புடனே தேவர்களும்மெய்க்க உபசரிப்பதுகாண்க,

௩௧-தரு-இ-ம்-சுருட்டி - ஆதி-தாளம்,

பல்லவி,

தெரிசனந்தந்தாளே-யமுனாதேவி-'தீரன்முன்வந்தாளே

அநுபல்லவி.

கதிர்குலத்தரசனைக்
கரிசனமாகச்சென்
காமித்தாளைத்தாற்றி
கருதிடாதிருடியைப்

வரிசைமிகுந்தகற்பும் வழுவாதுவெகுநேற்றி
வாழும்பூமடந்தையை வலியவிடுத்துத்தேற்றி
குரிசிலணியிக்கணங் கொடுஜோய்மீள்கெனச்சாற்றிக்
குவலயத்தினிலேயுங் குலம்வாழ்கவெனவேற்றி(தெ

சரணங்கள்.

௧, எடுத்துநீகோசிக முனிவனுக்கிடும்பொரு
ளவைக்கும்பகுதியிவை யேற்றுக்கொள்வாயென்
அடுத்துவரைத்துப்பொசருள்க ளம்பரமாகவே
அவனிமீதிற்குவிந்த தளகேசனிகரென்
கடுத்துரைத்துமிகுத்தபுக ரோன்டைப்படிக்கிந்
கதிர்மணிகள்யாவையும் கருதித்தந்திடுமென்று
விடுத்துராசிராசியாய் விளக்குமணிகளெல்லாம்
விண்ணுமண்ணுமனாவி வேந்தாநீசெகியென்று
கொடுத்துச்சந்திரமதியின குணமறிந்துகொண்டாடி
கொண்டவன்மனம்கோணுக் குலதர்மபத்னியென்று (தெ

௨, அரியகான்மறைநன்னா லியாவுமுணர்ந்தரசன்
அம்மையமுனுதேவிக் கண்ணெனுமலர்தூவி
பிரியமானவார்த்தையைச் சொன்னயதொன்றுபோதும்
பேதமெண்ணேனுமாயினும் பிசகாமிதென்றேவி
பெரியவருனைப்போல வருதியிலெங்குங்காணேன்
பேதைமதியேனைசம் பிரியாதேயெனதாவி
சரியநடந்துவந்துன் சன்னதிகண்டேன்ஜென்ம
ஸாபல்யங்கொண்டேன் ஸாரஸாட்சனனேயுந்தேவி
உரியபொருள்யாவும் ஒருகைபாடாகத்தேடி
உள்ளன்புடன்கொடுத்த லொழியுமென்பேரனைக்கூவி(தெ

௩, வேந்தனும்மைந்தனும் விளங்குநன்மந்திரியும்
வெற்றிமிகுத்துவரும் சத்யநெறியையுன்ன
சாந்தணிமுலையாளசங் கிரதயேந்தரன்றவத்தாள
ஸத்யதர்மமேயென்றுஞ் சதமாமுலகுக்கென்ன
காந்தனுக்கேவல்செய்து கற்பழியாமலுய்த்து
காலஞ்செய்வதுபெண்கட் கழகிற்சிறந்ததென்ன
மாந்தரெவருமநாடும் மாணிலந்தனையாளும்
மதிபனிவனுவனுக்கிணை மதிபனெவனுண்டென்ன
சந்ததில்லையென்னுமல் எழிலுடன்கொடுப்பதில்
இனகுலத்தாசரி லிவனொருவனேயென்ன(தெரி

பொது - விருத்தம்.

இந்நெறியின்யமுனைதனிற்றீத்தமாடி
இயல்புடனவ்விடத்திருக்காவிகுலத்தோன்

சொன்னெறியேதென்றறிவோமெனவெழுந்து
 சார்புகழுங்கர்நிசுதன்சகமோமன்ற
உன்னெறியானறியாஙித்தனைவிளைத்தேன்
 உனக்களித்ததில்லையென்பா யதுவொழிந்தால்
நன்னெறிமாதரசியரைமணஞ்செய்யென்ன
 காட்டுவானிறைமுனியையோட்டுவானே, கஉ

(வ-ம்) இவ்விதமாயமூனாதியிற் றீர்த்தமாடி அரிச்சந்திரன் முதலானவர்களும் அத்கடத்தி லிருக்கும்போது னன்னலனுடைய மனதைச் சோதிக்கவெண்ணி தேவதேவர்களுங் கொண்டாடத்தக்க விசுவாமித்திரானவர் வந்து உன்னுடைய மனோநிச்சயமறிந்திடாமல் இவ்வளவுசெய்தேன் ஆனாலும் இனிமேலாவது நீ-கொடுத்தபொருள்கள் யாவற்றும் இல்லையென்றாலும்போதும் அல்லதுபதிவிரதாசிரோமணிகளாகிய எனதுபுத்திரிகளான மோகினிப்பெண்களை விவாகஞ்செய்துக்கொள்வாயென்ன அரிச்சந்திரன் முதலானவர்களும்விசுவாமித்திரருக்குச் சொல்லுவதுகாண்க.

உஉ-தரு-இ-ம்-கேதாரகௌளம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

இன்னமும் என்மனதைச் சோதிக்கவது முக்கியற்கைகயோமாதவரே
இனியிந்தவார்த்தைபுகுதன் கனவிலும்நினைவிலும்
எண்ணங்கொள்ளாதிருப்பீர்-வண்ணமாமுனிவரே, (இன்ன)

அநுபல்லவி.

கன்னலன்றிகல்வேம்பின் கனியன்றிக்கொள்ளுமெட்டிக்
கனியோகற்கண்டுகட்டி கடுந்தவச்சிங்கக்குட்டி (இன்)

சரணங்கள்,

க. முன்னுரைதவறியோமொழிபுரையேனெந்தனை
 முற்றிலுந்தாழ்த் திடினும்
என்னுயிர்க்குயிரான-மந்த்ரியும்மைந்தனை
 இழிநரகாழ்த் திடினும்
மன்னுயிர்க்குறவினர் மனைவியிவர்களை நீர்
 மண்ணிடைவிழத் திடினும்
பொன்னுலகாச்செய்து புரந்தரந்தரனென வெனைப்
 பொற்புறச்சூழ்ந்திடினும் புகலேனொருபொய்தன்னை (இன்)

உ, பிச்சையிட்டளிக்காய்-பசிநோய்வந்தென்றுமைப்
 பினபற்றிப்பிடிப்ப வல்லேன்
கொச்சைமொழியுரைக்கும்- குறுகியவிடத்தில்
 கெடியபாவியைக்கண்டால் நில்லேன்
இச்சைமண்பெண்பொன்மீது எழுந்துவந்தொருசொல்லுஞ்
 இருப்பவருக்கொருவா சொல்லேன்

லச்சைநீரிடவேண்டாம் விக்கிக்கவினசோற்றை
லகுவிற்புசிக்கவல்லேன் லட்சந்தரம்நான்சொல்லேன் (இ)

௬. வெந்தழற்குள்ளெந்தனை-வெறட்டியடித்துமிக
வேதனையென்ன செய்தாலும்
தந்ததுபின்கைக்கொள்ளேன் தையலரைப்புணரேன்
தழுவியும் மனமுய்தாலும்
நொந்தபுண்ணில்வேல்நுழை இழையவிட்டபோதிலும்
நொய்யவுரைத் திட்டதாலும்
உந்தன்மொழிக்கேறுமா றுரைத்தேனென்றெந்தன்நேசன்
ஒழிந்திடாமலெக்காலும் உளமகிழ்வீர்மேன்மேலும் (இ)

பொது-விருத்தம்

மன்னவனிம்மொழிகூறச்சினமடைந்து
மறையவனைநினைத்திடலும்மகிழ்கொண்டேகச்
சொன்னதெழுந்தனையென்றுசுட்டிக்காட்டிச்
சொரிநஞ்சிற்குநாபியுரைத்தாற்போல
அன்னவனுக்குரைத்தகன்றக்கினியைக்கூவ
அந்தணனாய்வந்தனுகியபலமென்ன
இன்னதுநீயியற்றிடுவாயென்றான்சென்றான்
எரிகின்றான்வன்னிதழற்சொரிகின்றானே, ௬௨

(வ-ம்) அகோ கேளுங்கள் இத்சான்னதான பரிபூரணமான ராசர்களே அரிச்சந்திரமகாராசனிப்படிச் சொன்னபோது விசுவாமித்திரர்கோபமுற்று நட்சத்ரையனைக் கண்சாடையாலழைத்து உன்னுடன்சொன்னயாவற்றையும்மறந்துவிட்டாயென்று சிலசொற்களைச்சொல்லி ஆலால விஷத்திலே வலைநாயிலையைக் கலந்ததுபோலப் போதித்துமறைந்து அக்கினிபகவானையழைத்தபோது அவர் பிராமணரூபமாய்வந்துதெரிசனைதந்தபோது அரிச்சந்திரன் முதலானவர்களைத் தாபாக்கினியினுலே தகிப்பாயென்ன அந்தஅக்கினிபகவானானவர் யதிவிருதாசிரோமணியாகிய சத்திரமதியின் கற்பென்னு மக்கியானது என்னைத்தீய்த்துவிடுமானபடியினால் அவர்களுடத்தில்போகமாட்டேனாகிலும் உம்முடைய உபுத்ரவத்துக்காக உலகத்தாருக்குத்திட்சண்யக் தோன்றும்படி விளங்குகிறேனென்றுசொல்லிவிசுவாமித்திரரையனுப்பிவிட்டு அக்கினிபகவானானவர் தேவாதிகளும்பிரமிக்கத்தக்கதாகச் சூழ்ந்துகனல்விரித்துபிரித்து பிரகாசிக்கசெய்வதுகாண்க.

௬௩-வண்ணத்தரு-இ-ம்-தோடி- ஆதிதாளம்.

எரித்தானே எண்டிசையிலும்மேவி
எழுந்தவன்னிதன் கொழுந்துகளையேவிப்

பொரித்தானே அண்டபகிரண்டங்களைப்
பொடிப்பொடித்தரு இருத்திமலைகளைப்
புகைக்கவாசவன் இகைக்கமுனிவனை
நகைக்கத்தேவர்கள் மகைக்கக்கொடுவினை
அழைத்தானே கடவாமுகவனையும்
அரியவிசாகனையும் அனகனைக்துகனையும்
தழைத்தானே திரிபுராதியர்களைத்
தகன்ஞ்செய்தவழலைத் தரித்தபெருந்தழலை
விடுக்கவலையெனு மடுக்கன்சுவரிட
விடுக்கநற்கண மிடுக்கடுக்காக
விட்டானேபுகைச்சலின் மூடலை
விரித்தவளவிலே தரித்தசொளவிலே
தொட்டானே மண்ணையும்விண்ணையும்
தொகுப்பையுஞ்சுர வகுப்பையுங்கொதி
இடுக்குகளைக்கொடித் தடுக்குகளைச்செடி
முடுக்குகளைமர வடுக்குகளைச்சுர
மெங்கெங்குமோடி யொளித்திடும்
இடங்களும்மலைத் தடங்களுந்திரிக்
தெங்கெங்குங்கூடி யலைந்திடும்
எகினம்புலிகளு மெழுந்தோடுங்கலைகளும்
ஓடியொளிக்காடக் கூடிக்கவிக்கத்தேட்
வாடிக்கலங்கியோட வழியில்லாமற்றனளாட
வாசிக வெவரும்மனங்கலங்க
வரிவண்டுகள்சுழன் வாடிமிகத்துவண்டு
புனவாசிகள் வெந்துகரிந்திடப்
புகைக்குநாற்றமுன் திகைக்குமேற்றமும
புழுக்களும்புதைந்திடக் கழுக்களுஞ்சிதைந்திட
ஒழுக்கமிருபாவைவு யிழுக்கடைக்தெழுந்தோடக்
கார்க்கோடகன் முதலட்டநாகமும்
கக்கிக்கொடுவிடத்தை நக்கியெடுபடத்தை
கார்க்காலத்திலே சுருங்கியொடுங்கி
தாதுகலங்கிமிகத் தயங்கிமனநடுங்கி
தத்தித்தத்திச்சுருண்டு கத்திக்கத்திவெருண்டு
பத்திபத்தியாயெழுந் தெத்தியெத்தியேவிழுந்
தோடுத்தடமேற். காவின்வரம்பினை
யொற்றிடக்கொடிகள்போற் சுற்றிப்புலம்பினை

சாடுங்கொடு விடங்களுமணிகளுஞ்
சகமெல்லாமொளிசெய்யத் தகதகவெனத்துய்யத்
தலமெங்குஞ்சிதறிடத் தலைமகள்கதறிட
இலகுமிக்கனலேதென் றெவர்களுந்திகைத்திட்
வானோர்கள்இத் தீவினையிவர்கட்கு
வரலாமோவெகுதுன்பந் தாலாமோவென்றிரங்க
மானோர்களிலிவர் கட்கிணையாரென
மகிழ்ந்துதேவர்கொண்டாட மதிகதிர்முகம்வாட
மன்னன்மனமலைக்க மதியாளதைக்கலைக்க
சொன்னவக்கினிதாழச் சாரெவர்களும்வாழ(எரி)

பொது-விருத்தம்,

இக்கனலேதெனப்புகரைவேந்தன்கேட்க
வெழுபசியாலெழுந்ததெனவிளம்பிநம்மில்
மிக்கவரிலொருவருயிருண்டிடாமல்
மீண்டிடாதிதற்கினியென்செய்வோமென்ற
வக்கணமேயரசனுமந்தியுமாது
மவரவர்கள்மனத்துள்வமகற்றித்துன்னத்
தக்கவழலினில்மூழ்கத்தக்கதென்றே
தாண்டினார்தனஞ்சயனைவேண்டினாரே,

(வ-ம்) இப்படியாகஆகாசத்திற்கும் பூமிக்குமொரேபிரகாசமாய்அக்கினிப்பிரளயமுண்டானதுபோலே விளங்குகின்றசுவாலையைக்கண்ட அரிச்சந்திரன்முதலானவர்கள் நட்சத்ரையனைக்கேட்கஇதுபசியென்னும் ஜாடராக்கினியாலெழுந்தது நம்மில்மேலான ஒருவரையாவது தின்றுபசியைத்தீர்த்துக்கொண்டுபோகுமேயல்லாது இலேசிற்போகாதென்றுரைத்து அந்தட்சணமே அம்மன் முதலான யாவர்களும் ஓயாதுபடுகிறதுன்பத்திலும் இந்தக்கனலில்வீழ்ந்திறப்பது பெரிதென்று அந்ததனஞ்சயனை அக்கினிபகவானைவேண்டுவதுகாண்க.

௯௪-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை - ஆதிதாளம்,

பல்லவி.

கனல்மூழ்கத்துணிந்தானே கதிர்குலத்தரிச்சந்திரன்
கனல்மூழ்கத்துணிந்தானே

அநுபல்லவி.

மனத்திடைமாசனு வளவெனுமலிந்திடா
மாதவவசிஷ்டன்றன் மனமகிழ்ந்துகொண்டாட
அனலமர்கள்கற்பினுக் கருண்டகன்றெழுந்தோட
அந்தரத்திற்றேவர்க ளனைவரும்மிகவாட (கன)

சரணங்கள்,

௧. மனைதயவனுரைத்தநன் றென்றியெனக்கருளென
மனைவியும்மைந்தனையு மந்திரிநீகாரெனக்
குறைவில்லாச்சேனையுந் தாயையுங்குறுகின
கோமானரிச்சந்திரர் கொடுப்பீர்விடையென
அறைந்தவரசன்மொழிக் ககத்துயர்மிகவுற்று
ஐயனீராண்டிடான் வரசழிவெனவெற்று
விறைமந்திரியானனே வில்லுனைவிடுவித்து
விலையாயித்திக்குறிப்பே னென்பதைதீற்று (களை)

௨. உந்தனைக்துயிரெனி லுரிமையிலையென்றேடும்
உத்தமியுயிரெனி லுதவாதெமக்கென்றேடும்
மைந்தனல்லுயிரெனில் மதியறியானென்றேடும்
மன்னனெந்தனையிக மகிழ்ந்துகொண்டாடும்
எந்தனுரைகேளாம லிதமகிதமுரைத்து
இருவருமொழிந்திடி லோமனம்வெறுத்து
மைந்தனுக்குஞ்சந்திர மதிக்குமெக்கருத்து
மகிழ்க்கெனக்குறையே மதிமிகவுரைத்து (களை)

௩. மனவெறுப்புட னிருவருமிதுசொல்ல
மதிமிகுசந்திர மதியதுவுல்ல
அனவரதமுமரி வையர்கட்பாலல்ல
அரசர்களாலது மழிவதும்நல்ல
மனவருத்தமகலை மகிழுற்றதுரைத்தேன்
மன்னவனுஞ்செயு முன்மாபெனவைத்தேன்
கனவருத்தமகலக் கனல்மூழ்கலுற்றேன்
கார்க்கக்கடனென்னுமக் கன்னியவாக்கிடைத்தேன் (களை)

பொது விருத்தம்

தந்தையுடனன்னையிது கூறக்கேட்ட
தன்னிகரில்லாலோகிதாசன்றுயே
எந்தனைப்பெற்றெடுத்ததுங்களிடுக்கந்திர
வெண்ணியல்லோயாளிறப்பதியற்கையென்றுன்
மைந்தனேயுன்வாய்மூலைப்பால்மறந்தாயில்லை
மதாமிகுசுவையறியும்வல்லிழந்திலலே
உந்தனுக்கிவ்வுணர்வுற்றனிதியேதென்றுள்
ஓழுகின்றுன்கனல்மூழ்கவெழுகின்றுனே,

(வ-ம்) இந்தப்பிரகாரமாய் பிதாவாகிய அரிச்சந்திரனுடனே தயா
ன சந்திரமதியானவள் மனவெறுப்புற்று சொல்லக் கேட்ட குமாரனு

லோகிதாசனெனுமவன் அசோகனெனுமெல் லருமைத்தாயேமாந்தாபி தாக்களுக்கு ஆபத்துவேளையில் காக்கவேணு மென்றல்லவோ குழந் தைகளைப்பெற்று வளர்த்துச் சீராட்டிறது ஆகையால்நான்மரணமடை வதே தகுதியென்றான் அப்போது ஏன்செய்வனே முலைகுடிக்கிறவா டிக்கைமறந்தவனல்ல மதுரமானபதார்த்தங்களின்ருசி யறியத்தக்கப ற்களும்வீழ்ந்தவனல்ல இப்படியானவுனக்கு இவ்வளவுதிடசண்யமான புத்தி வந்ததேனென்று சிலாகித்து குமாரனை சமாதானப்படுத்தியசந் ரமதியானவள் அக்கினிப்பிரவேசமாகத்துரிதப்படுவதுகாண்க

தரு-இம்- காதகாமக்கிரியை- ஆதிதாளம்;

பல்லவி.

அக்கினிதனிற் பாய்ந்தாளே - கற்பின்மிகுத்த
அருந்ததியெனவாய்ந்தாளே
மைக்கினியவிழியாள் -மதுரமிகுமொழியாள்
மைக்கினியரூபதி-சுருதியசந்திரமதி

அநுபல்லவி.

மெய்க்கினியகணவனை மேதினியில்விடுத்து
மேதகுசத்தியகீர்த்திக்கு மிகுபுகழ்கொடுத்து
புக்கினியபுதல்வனறன் புலம்பலைத்தடுத்து
பூகளுதனன்றுசெய்த புதுமைமையடுத்து(அக்)

சரணங்கள்,

க, வேதங்கள்காலு [illegible] சான்ன விதியொழிந்தோமாகிலும்
வெற்றிமிகுநா [illegible] ம்வின் பொய்யென்றோமாகிலும்
பேதமில்லாவிருந்தோரைப் பிணக்கிழந்தோமாகிலும்
பெரியோர்முன்னின்றிகழ்ந்து பேசினோமாகிலும்
மோதமுன்னமனுவினமன்னன் முறையிகழ்ந்தோமாகிலும்
முத்திநெறியாளரை முனிந்திகழ்ந்தோமாகிலும்
ஆதரவற்றோர்களுக்கு அநிடுசெய்தோமாகிலும்
ஆண்டவனறியவொரு தருயிரைக்கொல்லென(அக்கினி)

உ, மறையவர்களையவ மானஞ்செய்தோமாகிலும்
மருமக்கள்தமெக்கவ மதிசெய்தோமாகிலும்
குறைமதியுடையோர்க்கு கொடுமைசெய்தோமாகிலும்
குற்றஞ்செய்தோர்க்கவதி கொடுத்திட்டோமாகிலும்
பிறர்மனைதனிற்சென்று பேசினின்றோமாகிலும்
பிணியாளர்தமக்காசைப் பேச்சுரைத்தோமாகிலும்
அறைந்தமொழிகள்மாறி பனிதஞ்செய்தோமாகிலும்
ஆக்ரமித்துவந்தென்முன் ஆணைவத்தாற்சொல்லென(அக்கினி)

௩. தருமம்நாலென்கடந்து தாணியாண்டோமாகிலும்
தாதுலக்கிறைரா தயங்கவிட்டோமாகிலும்
வருமம்விளைத்துநாய வழிகடந்தோமாகிலும்
வலதுவல்லமையினால் வண்மைபெற்றோமாகிலும்
கருமகற்பிப்பெண்களைக் கற்பழித்தோமாகிலும்
காலமற்றகாலந்தனிற் கணவனைச்சேர்ந்தோமாகிலும்
உருமவேளைவந்தகுறிக் கூணில்லையென்றோமாகிலும்
உள்ளமதிற்கள்ளமற வொருகொடியிற்கொள்வெனை (அ

பொது - விருத்தம்

கற்பினிலேயருந்ததி இந்திரை இந்திராணிக்
கதிகமெழுமாதுசிரோமணியின்வாக்ய
விற்பனக்குநேர்ந்துவன்னிவடைத்தியின்
விளங்கியெனைச்சுடுமெனவேவின்புகுந்தான்
உற்பவித்தவியாழிபுதாம்பொங்கி
யொள்ளியசெந்தாமரைகளோங்கிப்பூக்கச்
சற்பனையெலாமகன்றதெழுமினென்றார்
சரியென்றார்சிவகாசியபுரியெனறாரே, ௧௫

(வ-ம்) அகோகேளுங்கள் விற்பனர்களே இந்திராணிபார்வதிதேவி அருந்ததி முதலானவர்களுக்கும் மிகுதியான மகிமைபொருந்தியகற்பின்மிக்கவளென்னுஞ் சந்திரமதியினுடைய விவேக விளக்கங்களையுணர்ந்துமகிழ்ந்த அக்கினிதேவனானவன் இந்தப்பதிவிரதாசிரோமணியாகிய மாதாவிடத்திலுள்ள கழலேவடவாமுகக்கினியிலும் மேலாய்ஜொலிக்கின்றது என்னைச்சுட்டுவிடுமானவனைத் தொடேனென்றஅஞ்சிக்கையுற்று ஆதாயத்திலடைந்தான் அத்தடத்திலேவிளங்கியஅனலுந்தணிந்துபாற்கடலைப்போலேநீருதிச் செந்தாமரைகளுஞ் செழித்துபுட்பிக்கக்கண்டு யாவரும் மனங்களித்துஎழுந்துசொற்பதாம்கடக்கும்போது காசிப்பட்டணத்தினெல்லையின்முனையையக்கண்ட அரிச்சந்திரமகாராசன் அட்டடத்தின் மருத்துவங்களைசசந்திரமதிக்குச்சொல்லிக்கொண்டு வழிநடந்துவருவதுகாண்க,

௧௬-தரு-இ-ம்-பைரவி--ஆதிதாளம்,

பல்லவி.

காண்பாய்பெண்ணே-காண்பாய்மதிதயன்
கண்மணியேயெனனிருகண்ணே

அநுபல்லவி.

பூண்பாவங்களிந்தப் புண்யகாசிசேவித்தார்
போகுமென்றெந்தநாளும் புகலுவதறியாயோகாண்

சரணங்கள்.

க, பூங்காவனத்தின்மாடப் புருவினிலங்கள்கூடிப்
பொற்புடனேயிணங்கிப் புணர்ந்திடமனம்நாடி
நீங்காமதிமிகுத்து நிறைந்தமைல்தொகுத்து
நின்றுமெயில்களையும் சென்றுநிக்குயில்களையும் (கா)

உ, சாவடிகளுமன்ன சத்திரங்களுந்தர்ம
சாலைகளுஞ்சாதுகோ ஸாய்கள்தங்குமடமும்
சேணடிபோமறிகின்று சிவபூசைசெய்வோரையும்
சிறந்தகல்கைக்காவடி சுமந்துவருவோரையும் (கா)

ங, தேரின்மீதேறிவரும் தீரர்களின்கூட்டமும்
தெரிவையர்மிகக்கூடி தெரிசித்திடும்காட்டும்
பாரின்மிசையோர்கூடிப் பணிந்தடிதொழுதேற்றும்
பகவதர்கள்கூடி பஜனைசெய்திருகூற்றும் (கா)

ச, மாடமாளிகைகூட கோபுரங்களுந்திரு
மஞ்சனவீதிகளும் மகஞ்செய்யும்வீதிகளும்
பாடலாடலுடனே மவனிகள்வருவதும்
பார்ப்பவர்கட்குக்கண்கள் பதினுயிரம்வேணுமோ (கா)

ஆரண்யகாண்டம்-முற்றிற்று.

ஆக-விருத்தம்-கரு-கொச்சகம்-உ-சுலோகம்-க.

ஸ்ரீ

ராமஜெயம்.

எட்டாவது

காசிகாண்டம்.

பொது - விருத்தம்.

குலமகளுங்கொண்டமனையாளுஞ்சீதி
கூறுமதிமந்திரியுங்குருசிலோனும்
இலமதிலேமுன்னடக்கத்துடர்ந்தநூதன்
இயற்கையுடன்பின்னடக்கவிமையோர்போற்றும்
கலமருவுங்காசிக்கர்தன்னைக்கண்டு
காணுமொட்டாப்புதையல்கண்டவனைப்போல
பலமடைந்தோமினிச்சலமில்லையென்று
பலஞ்சொல்வான்காசிகர்பலஞ்சொல்வானே

(வ-ம்) அகோகேளுங்கள்ஞானவான்களே சூரியகுலசிரேஷ்டனுகியலோகிதகுமாரனும் அரிச்சந்திரனும்-சந்திரமதியும்- மதிமந்திரியானஸத்தியகீர்த்தியும்முன்புநடந்துசெல்லவும்விசுவாமித்திரருடையதூதனுகவந்தநக்ஷத்ரையன்பின்றொடர்ந்து நடந்து போய்முப்பத்துமுக்கோடிதேவர்களும், நாற்பத்தெண்ணுயிரமிருடிகளுந், துதிக்கப்பெற்றதன்மையைக் கொடுக்கத்தக்கஸ்ரீ காசிக்ஷேத்திரத்தைக்கண்டு பொருளற்றவனுக்குப்புதையல்கைப்பட்டதுபோலேசந்தோஷப்பட்டு ஜயமடைந்தோ மினிச்சஞ்சலமில்லையென்று அந்த க்ஷேத்திரத்தினுடையபெருமையு மங்கடைந்தோர்கட்குலபிக்கிறதன்மையையுஞ் சொல்லுவதுகாண்க.

௨-தரு - இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி

காசிமாநகர்கண்காட்சிதனைச்சொல்லக்-கடவுளர்க்குமரிதே

அநுபல்லவி

நேசித்துவருவோர்க்கு நெஞ்சுட்கவலைதீர்க்கும்
பூசித்துவருவோரைப் புனிதவீட்டினிற்சேர்க்கும் (காசி)

சரணங்கள்.

க, அசிவருணைமுதலா யறுபத்துநாலுதுறைகள்
அங்கங்கேயருந்தவ ரமரும்படித்துறைகள்
வசிஷ்டமுனிவர்முதல் வழிகண்டபெருந்துறைகள்
வாய்க்கக்கண்டோமினி வாராதுமனக்குறைகள் (காசி)

௨, பூவிலுயர்த்திருப் பதியொருநூற்றெட்டு
புண்யசிவஸ்தலம் புகழுமாயிரத்தெட்டு
நாவிலுயர்முனிவர் நாற்பத்தெண்ணுயிரமட்டும்
நவிலுந்தேவர்முப்பத்து முக்கோடிகளோநாட்டும் (காசி)

௩, தங்கக்கலசம்பூண்ட கோபுரங்களுமொண்ணுர்
தளங்களுந்தலத்தவர் தங்குமடமுமண்ணுர்
புங்கவர்மணிமேடைப் பொற்புக்களும்விண்ணுள்
புத்தேளரசரும் பொன்னகயெனத்தண்ணுர் (காசி)

௪, பூங்காவனங்களும் புகலரும்புனங்களும்
பொற்புமிகுகற்பகப் பூஞ்சோலைவனங்களும்
வாங்காதுகங்கைக்கா வடிகொளும்ஜனங்களும்
வரப்போகவிருந்திடும் வஸ்துவினினங்களும் (காசி)

பொது-விருத்தம்,

மன்னையுமைந்தனும் வேந்துமமைச்சங்காசி
மாநகரின்மகிமைதனை மனத்தினுன்னிச்

சங்கையில்லாதுருகியுளங் களித்தங்களித்தங்குள்ள
ஸற்சனரைப்பணிந்தேத்திச்சங்கையாற்றிச்
செங்கைகளைத்தம்பதிகள்சேர்த்துக்கொண்டு
சிறந்தமணிகாணிகையூடேசென்றங்கு
கங்கைதீர்த்தங்களையந்தேடியோடிக்
காண்கின்றார் அங்கங்குமூழ்கின்றாரே ௨

(வ ம்) இவ்விதமாககாசிக்ஷேத்திரமகாத்மியஞ் சொல்லிக்கொண்டு கங்கைக்கரைக்குவந்துசேர்ந்த அரிச்சந்திரமஹாராசனும் சந்திரமதியும், லோகிதகுமாரனும், மந்திரியானசத்தியகீர்த்திமுதலானவர்களும் அங்குள்ள வைபவங்களைக்கண்டமாத்திரத்திலேதங்கள் மனத்திலுள்ள விதனமாறி உள்ளுருகி அத்தடத்தருகே வீற்றிருக்கின்றதபோநிதிகளைத்தரிசித்து தோத்திரஞ்செய்து தம்பதிகளிருவருங்கொடுக்குமுடிந்து கொண்டு கைகூப்பி மணிகர்ணிகைமுதலாக அசிவருணைவரையிலுமுள்ள அறுபத்துநாலுகங்காதீர்த்தங்களையும் ஆராய்ந்து அங்கங்கு ஸ்நானஞ்செய்யத் தொடங்குவதுகாண்க,

உ-திபதை-இம்-ஷரம்போதி அடதாளம்,

கண்ணிகள்,

க, கங்காநதிதனைக்கண்டுமனங் களிக்காமே எந்தன்
காதலியேஇம்ம காதீர்த்தமாடுவோம்-வாராய்

௨. மாதாபிதாசெய்த மாபாவதோஷங்கள்தீர-எந்தன்
மாதரசேகங்கை மானதியாடுவோம்-வாராய்

௩, மண்டுகாம்செய்த பாபதோஷங்கள்தீர-கண்ணாற்
கண்டுகளித்து மகாநதியாடுவோம்-வாராய்,

௪, பாரிலுள்ளோர்செய்த பஞ்சமாபாதகந்தீர-கொண்ட
பாவையரேகங்கா பவனியிலாடுவோம்-வாராய்

௫, இந்தத்தீர்த்தமிதை யெவைக்குமுயர்ந்ததுபெண்ணேமிக
உத்தமமணிகர்ணிகை தீர்த்தஞ்சென்றாடுவோம்-கண்ணே

௬, பஞ்சமாபாதகம்போக்கு மிந்தத்தீர்த்தம்பெண்ணே-பெற்ற
பாலகன்லோகிதன் பாவங்களநீக்குமென்-றண்ணே

௭, துர்க்காதீர்த்தமாடத்துலையுமெப்பாவமும்பெண்ணே பொல்லா
துன்பமெல்லாந்திரு மின்பமிக்கேருமெதி-கண்ணே

௮, சத்தியகீர்த்தியே முத்திதருந்தீர்த்தம்பாராய்-நமது
சத்யநெறியுணர்ந்து சாகேதந்தனிற்சேர்க்கும்-ஙோய்

௯, கேதாரக்ஷேத்ரமேசுவரர் தீர்த்தமாடுவோம்வாராய்-மனக்
கேதம்யாவுமகற்றி கிலேசந்தவிழ்த்திடும்-வாராய்

128

௰: தீர்த்தங்களாடினோம் திவ்வியபதவியடைந்தோமே-சிவ
தெரிசனஞ்செய்திடில் தீவினைகள்தீர்ந்தோமே

விருத்தம்.

கங்கைமானதியாடியசிலர்கள்
சங்கையில்மனோமலர்கள்மிகக்கொண்டு
மங்கையோர்பாகன்காசிவிசுவேசன்போற்
பங்கையமெனும்பாதபூசைசெய்வார்

(வ-ம்) அகோசேனுங்கள் இராஜசிரேஷ்டர்களே இவ்விதமாய் கங்காஸ்நானஞ்செய்து சந்துஷ்டியடைந்தயாவரும் ஏராளமான மானசபுஷ்பங்களாலே கைகளைநிரம்பிக்கொண்டு அர்த்தநாரீசுவரனாஸ்ரீ காசிவிசுவநாதரது பொன்னின்தாமரைத்தளங்களுக் கொப்பாகிய பாதங்களிலே பூசிப்பதுகாண்க.

௩-ஜம்பை.

௧, திருவடியிற்பூசைசெயவோம் சிவசிவா-விசுவேசர்
தீனதயாபராவெங்கள் தீவினைகளொழிப்பாய்
பருவமதிலெமைக்காக்கப் பரிந்துன்பாதபூசைசெய்வோம்
பரிதாபமொழித்தருளிப் பாலிப்பாய் விசுவேசர்

௨, ஆவலுடன்மனோமலர்கொண்டடிமலரிற்பூசைசெய்வோம்
அன்வர்படுந்துயர்தணிப்பாய் அமலனே விசுவேசர்
நாவலர்கள்புகழுமுந்தன் நற்றாளைப்பூசைசெய்வோம்
நங்கைவிசாலாட்சியின்றன்நாதனே விசுவேசா

௩, மாதவர்கள்துதித்திறைஞ்சு மலர்ப்பதத்தைப்பூசைசெய்வோம்
மாபாவிகளைக்காப்பாய்மாதவா விசுவேசர்
பூதலத்திலென்றுமுந்தன் பொற்பாதபூசைசெய்வோம்
புந்திமகிழ்ந்திடச்செய்வாய்புகழ்காசி விசுவேசர்

௪, சிவகாசிப்புரியாளுந் தேவாவுனைப்பூசைசெய்வோம்
சிந்தனையாவையுமகலச்செய்வாய் விசுவேசர்
பவக்கடலைக்கடக்கச்செய்யும் பரமபதபூசைசெய்வோம்
பரிபாலித்தாண்டருள்வாய்பணிந்தோம் விசுவேசர்

௪-வேறு-தரு

௧-இலாவணி-இ-ம்-மனோரஞ்சனி-ஆதிதாளதுரிதம்

மாதவர்பூசிக்குந்தாமரைமலர்கட்கிணையாம்
மனோமலர்கொண்டுபூசைசெய்வோம் பூசைசெய்வோமே
மந்தாரைவில்வந்தும்பை மலர்களெனவேயெங்கள்

மனோமலர்கொண்டுபூசைசெய்வோம் பூசைசெய்வோமே
மண்ணும்விண்ணும்புகழுந்தன்னருட்பதந்தனில் மனோமலர்
மல்லிகைமுல்லைகொன்றை மலர்களெனவேயெங்கள் மனோமலர்

மதனஜனகன்விழிமலர்சாத்தியபாதத்திலெங்கள் மனோமலர்
மங்களந்தருங்கங்கைதிங்கட்சடைமுடிமேலெங்கள் மனோமலர்
மாதவஞ்செய்துமையாள்பூசித்ததிருவடியையெங்கள் மனோன்மலர்
மகிழ்ச்சிகொள்நரசிம்மன்பூசிக்கும்பொற்பதத்தையெங்கள் மனோமலர்

இவ்விடத்தில் பூசைசெய்வோமே-என்பதைப் பலதரமும் இரட்டித்துபாடிக்கொள்க.

பொது- விருத்தம்,

காசிவிஸ்வேஸ்வரன்ஸ்துபொற்றாள்போற்றிக்
கருத்துடனேபூசைசெய்தகதிர்குலத்தின்
வீசியகற்புகழ்மிகுத்தவேந்துங்கொண்ட
விரகியுமைந்தனுமமைச்சுமவிதிவித்தாக
நேசித்துக்கோயில்வலமாகவந்து
நெஞ்சகத்திலவஞ்சமற்றுநெறியின்மிக்க
மாசில்லாமலர்ப்பதத்தோபெம்மையாளு
மாறென்றார் அடைக்கலங்கார்ப்பீரென்றாரே. (ரு)

(வ-ம்) இவ்விதமாம் ஸ்ரீகாசிவிஸ்வநாதரதுகோயிலிற்சென்று பலவாறுதுதிசெய்து உள்ளும்புமொன்றாய் வந்தசூரியகுலசிரேஷ்டனாகிய அரிச்சந்திரனும் சந்திரமதியும் லோகிதகுமாரனும் சத்தியகீர்த்தியும் வேதவிதிப்பிரகாரம் மனோநேசத்துடன் திருவாலயம்வலம்வந்து மனப்பூர்வகமாய் கபடமில்லாமல் களங்கரகிதமானபாதாரவிந்தமுடைய எங்களுயிகத்துணையானதேவனே எங்களை யெப்படியுங்காத்துரட்சிக்கும்படி வேண்டிக்கொண்டோம் அடையவாகக் காத்தருளுவீரென்று துதிப்பதுகாண்க.

ஞ-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை - அடதாளம்,

பல்லவி,

கடைக்கண்ணருளாற்கருணைபுரிவாய் - காசிவிஸ்வநாதனே (கடைக்)

அநுபல்லவி.

அடைக்கலமெமையாதரித்துக்காம்பாய்-ஆதியேபரஞ்சோதியே
ஐயனேஅன்பர்மெய்யனேஆளுந் துய்யனேயாங்களுய்யவுந்தன்

சரணங்கள்.

க, திருவுக்கிறைவனுஞ்சதுமுகவனுந்தேடரியவடிமுடியோனே
தீனரட்சகனென்னும்பேர்வகித்ததிண்ணியரிடபக்கொடியோனே
மருவுதொண்டறுபத்துமூவர்மேல்மையல்கொண்டதிருவடியோனே
மாதவர்தேவர்மன்னர்மன்னர்போற்றும்மானகர்காசிப்பதியோனே
சர்வவுயிர்க்கும்நேசனாகிச்சஞ்சலந்தவிழ்க்குங்கெடியோனே
சாற்றுவாய்துயராற்றுவாய்மதிதேற்றுவாய்வன்மமாற்றுவாயுந்தன்

திங்களுங்கங்கையுமறுகொடுதும்பை திகழ்ந்திடுநெடுஞ்சடையோனே
தினகரன்புலிதீயிவைமூன்றையுந் திருநயனமாயுடையோனே
செங்கட்செவியையாரம்பூண்ட சிறந்தபூதப்படையோனே
செய்யவானவர்களானவர்களும்புகழ் சிறந்தசந்திரசூடயோனே
எங்கட்கபயமீசுவாய்செக திசனேவெள்ளிமலையோனே
ஏற்றுவோம்கழல்போற்றுவோம்புகழ் சாற்றுவோம்மலர்தூற்று
வோம்(உன்கடை)

அண்டர்படுத்துயரகற்றவேநஞ்சை யமுதமாயுட்கொண்டஅமலனே
அம்பலந்தன்னிலமார்கனெதிரேயின் றாடியபாதகமலனே
விண்டலத்தோருமண்டலத்தோரும் விரும்பித்தொழுதிடுமலனே
வெகுதிருச்சத்யதர்மம ... நித்யமவெண்ணூர்நிமலனே
கண்டபேர்களுக்கண்காட்சிசெய்திடுங் கருணைமிகுகாசிபாலனே
கார்த்திடாய்கடன்தீர்த்திட்டாய்புக மேதகுராய்கவிவியாம
நியாயுக்தன் (கடை)

வெண்பா.

மண்ணோரியற்றும்மாபாதகந்தீர்க்கும்
விண்ணோர்புகழ்காசிவிசுவேசா - தண்ணார்ந்த
வானணையசிவமூழ்வே மலர்ப்பதங்கட்காளானேம்
கருணையுடன் கடன்தீர்த்துக்கா,

(வ-ம்) பூலோகத்தில் என்னைப்போலுள்ள அனேகர்செய்தபஞ்சமகாபாதகங்களையும் ஒழித்து நற்கதிதரப்பட்ட கடவுளை தேவதேவர்களுந்துதிக்கப்பட்ட ஸ்ரீகாசிநாதனே குளிர்ச்சியைத்தரும் கருணைநதிக்கும அசிகட்டத்துக்கும் மகதியான வாசம்செய் உனது பாதாரவிந்தங்களே கெதியென்றடைந்து சரணாகதியடைந்த என்னுடையமனோபீஷ்டத்தை நிறைவேற்றியருளதாவேனுமென திருவருளிதியே

௧-தரு-இ-மு-கமாசு- ஆதிதாளம்

பல்லவி.

ஈசாசர்வேசாஸ்வயம்ப்ரகாசா - என்று- வெகுயாரும்மனோவுல்லாசா

அநுபல்லவி.

நேசமுகமாதெங்கள் நெஞ்சுட்கவலைதீர்ப்பார்ப்பாய்
மாசகற்றியுந்தன் மலர்ப்பதந்தந்துகாப்பாய் ஈசா

சரணங்கள்.

௧. அருந்தவத்தோர்துதிக்கு மங்கைவிசாலாட்சியிடப்
பாகா வையோகா
அன்னைதிரிபதகைதன்னைமுடியணுத்த யேகா

திருந்தியமனத்தோர்கள் தேடித்திரியுமோகா
நிலாதஜெகதீசனே சிவயோகா-ஈசா

௨. ஆர்த்திஹராவென்றுனை அடிமலர்முடிபிசை
பணிந்தோம் சொல்லதுணிந்தோம்
அன்புடனேமெய்மையாளவாயென் றனுதினம்பணிந்தோம்
கர்த்திகேயனையீன்ற கர்த்தனேகுறைதணிந்தோம்
காசிநாதாவெங்கட்கடன் தீர்ப்பாயென்றுணர்ந்தோம்-ஈசா

௩. காசிமாநகராளுந் தேசிகனே-விசுவநாதா
ஜெக நாதா
கருதிவந்தோமுன்கண்டக் கன்னருள் புரிவாய்ப்ரக்யாதா
கோசிகமுனிமனக்குறைதீர்த்திடாம் விநோதா
குவலயத்துட்புகழ்கொள்வாய்சுகஞான போதா-ஈசா

பொது-விருத்தம்

கோலமதுவேறுனைவையோத்திவந்துங்
கொண்டவனுங்குமாரனுமந்திரிமனாள்
ஆலமதுண்டமார்தமைக்காத்தஈசனை
ஆலயத்துட்சென்றுவலமாகவந்து
சாலமதுவுண்டார்போல்மையலுற்றுச்
சஞ்சலத்தான்மனநொந்துஏங்கிகொண்டு
காலமதுவந்ததெனமயிந்தவேளை
காரென்பார்பதவிதனில்சேரென்பாரே

(வ-ம்) அகோகேளுங்கள் இராஜசிரேஷ்டர்களே இராஜவடி வழுத்து தவத்தினர்வடிவாகிய அயோத்யாபுரிக்கரசனான அரிச்சந்திரனும்- சந்திரமதியும்- மந்திரியும்- லோகிதகுமாரன முதலானவர்களும் ஸ்ரீகாசிவிசுவநாதரது திருவாலயத்தில் புகுந்து வலமவந்துதரிசிக்கும் போது கட்குடியரைப்போல மயக்கமுற்றுச் சஞ்சலப்பட்டுள்ளநதபொழுதுகொளுத அன்பத்தால் காளாகுங்காலம் வந்தது என்கவேயிந்தவேளை தக்கததருணவேளுமென்று மறுபடியுந்துதிப்பதுகாண்க.

ஏ-தரு பூரிகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

சம்போசிவ-சம்போசிவ-சம்போ மகாதேவா-சிவ-சம்போ

அநுபல்லவி.

சம்போசகாசிவசம்போமகாதேவா அம்போருகபதமாதாவாய்த்தா
கம்பிரேனும்காசி விசுவநாதமேகேசி
தும்புருநாரதகின்னரர் துதிகரும்பிரதாபா
துனையாருமக்கினையென்றகம் தணிந்தோமுனைப்பணிந்தோம்-சிவ

சரணங்கள்.

மானைச்சடையானே பிறையானே பெருமானே கன்னகமானே)
வானகந்தனையாளும் வாசவனாடிசசசை
வண்மையாகக்கொண்ட வாருசிவாழ்வே
யானையுரித்தோனே மழுமானைத்தரித்தோனே
வானோர்களெல்லோருந்தினம் வணங்குபதத்தோனே
வானாதனே குருநாதனே வளர்சானவர்பணிபாதனே (சம்)

தொண்டர்களிதீர்க்கும்புகழ் கொண்டாய்விடமுண்டாய்
சண்டனைமிரட்டிட வண்டியதொண்டனே
சஞ்சிதமொழித்தெமன் நெஞ்சிலுதைததிட்ட
ஆண்டவனீயேயெமை யாதரிப்பாயே
அண்டர்களுக்காமஞ்சுசண் டடியாககளைக்காத்தாய்
அதுபோலவேயிதுசமயமென் களையாதரிப்பாயசங்கர (சம்)

ஆசித்துநல்லயோத்தி நாடாண்டவரிச்சந்திரன்
கோசிகன்றுணைத்தால் மைந்தன்மந்திரியுடன்
கொண்டவளுமுந்தன் கோயில்தேடிவந்தோம்
ஸ்ரீசிவசிவனே சிவகாமியாள்பவனே
நேசித்துனைப்பூசிப்பவர் நெஞ்சுண்டகாமம
நேசாவிசுவாசா வேசாஜெகதீசா (சம்)

தேவாரம்.

மாசிலாமணியேபோற்றி மலரயன்பணிவாய்போற்றி
வீசியபுகழோய்போற்றி விண்ணவர்க்கரசேபோற்றி
நேசிக்கும்பொருளேபோற்றி நின்மலவடிவேபோற்றி
காசிவிஸ்வேசாவுந்தன் கழலிணைபோற்றிபோற்றி (௧)

கலித்துறை.

வேதாவிநோதவிமலசொரூபவேதியர்க்குப்
போதாமடந்தையின்வாதரபுராந்தரன்பூசைசெய்யும்
நாதாஎன்மேற்கிருபையார்த்திடுவாய்பராமானவிஸ்வ
நாதாவுயிர்த்துணைநீயலதாரிந்தநானிலத்தே (௨)

அ-இபனை-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. கதியென்றுனையடைந்தோமுமை கேள்வாகாசிவாழ்வா
கதியும்மதிதனையுமணி நாதாவிசுவநாத
௨. கருணைசெய்யத்தருணமெமைக் காப்பாய்வினைதீர்ப்பாய்
அருளும்புயப்பதமேதுணையடைந்தோ மூனைத்துடர்ந்தோம்
௩. கழுதைக்கருள்தரவேசிவ காசிதனில்வந்தாய்
பழுதாகுமோவெமைக்கார்த்திடில் பரமேசுவராதரனே

௪. விசுவாமித்திரமுனியைக்கடன் விரைவிற்றீரவேண்டி.
விசுவாசமாய்ப்பணிந்தோமுமை விமலா அருணிமலா

பொது-விருத்தம்.

காசிநகரடைந்துதிருபதங்கையாடிக்
கடவுளரைப்போற்றிமனக்கவலையாற்றி
வாசியுடனோரிடையிலடைந்தபோது
வண்மைமிகுமந்திரியுந்தவசியாகி
ஈசிலாப்பொருளையுமையமேந்தி
யிட்டதனிதந்தருணந்திட்டமீதி
மாசிலாக்கற்பினளிட்டவிக்கவுண்டார்
மனங்கண்டார்மறையவன்கொளசினங்கொண்டமே (௧)

(வ-ம) அகோசேருநங்கள் பூபதிகளே இவ்விதமாய்ஸ்ரீகாசிபுரியை யடைந்துசங்கா ஸ்நானஞ்செய்து ஸ்ரீவிசுவநாதரைப் பூசித்துத்தோத் திரஞ்செய்து ஓரிடத்தில்வந்திருக்கும்போது மந்திரியானவன் தவசி வேஷம்பூண்டு சகலசாமக்கிரிகைகளும் யாசித்துக்கொண்டுவந்து கொடுக்கநட்சத்திரையருக்குக்கொடுத்தமீதியை தாங்கள் சந்திரமதியின்கை யினாலசமைத்துச் சாப்பாடுசெய்துகொண்டு ஓரிடத்திலிருக்கும்போ து பிராமணனாகிய சுக்கிரபகவானுடைய மனத்துள்ள கோபமானசி னக்குறிப்பை யறிவிப்பதுகாண்க

அரிச்சந்திரனும் நட்சத்திரையருஞ் சொல்

௧-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கோசிகனுக்குரைத்தபொருள்தனைக்கொடாவிட்டால்
கொறடாவிறலபடயேன்

அநுபல்லவி.

காசிமாநகர்சேர்ந் தைத்தனிற்றுரேனென்று
காதலுடனுரைத்த காவலனே அன்று (கோ

சரணங்கள்.

௧. பொறுபொறுமையா உந்தன் பொன்னடிசரணம்
பொருட்களைத்தந்தனுப்ப விதுதானேதருணம்
வரும்வருமுந்தன்பொருள் வாய்த்திடவகைக்சொரு
வழிதனைத் தருமே வரையிலுனதாமனைப் (பொறு)

௨. நேத்தமிதுகல்லே கிறுகதியடிப்பேன்
நிலையாகவெயில்தனி நின்றிடச்செய்வேன்
சத்தியவானென்று சாற்றுதல்தடுப்பேன்
சபையில்முனிமொழிந்த சபதந்தனைமுடிப்பேன் (கோ)

௩. உத்தமனேயுனது சித்தத்துண்மகிழ்வீர்
ஓயாக்கவலையுற்று வாடுவதிவீர்
சித்தமிரங்கிமிகத் தயவுசெய்கிடுவீர்
சிறுமதியுடையவன்மேல் வறுமைதடுத்திடுவீர் (பொ)

௪, மூதுகினிர்சுடுமணல் மூட்டையைவைப்பேன்
மூக்கினிற்கயத்தனை மாட்டியிழுப்பேன்
குதிகால்நரம்பினைக் குறட்டினலெடுப்பேன்
கூலியிலலையென்று கொட்டிமுழக்கிடுவேன் (கோ)

௫. இதமகிதமிரண்டு மறிந்தமறையவரே
இரவுப்பகலுமெங்க ளிடுக்கமறிந்திலீரோ
பதமறியாமலிந்த வி முறைக்கிரிமெத்தம்
பரதவிக்கவிடாமல் பாதுகாத்தருள்மனம் (பொ)

௬, அண்ணங்காள்மாட்டியுன் னங்கத்தையொடுக்குவேன்
ஆயிரங்கேட்கொட்டு மதுபோலகடுக்குவேன்
விண்ணவரெல்லாமிக வெறுண்டிட மடுக்குவேன்
வேதமுனிவன்மன விருப்பைத்தடுக்குவேன் (கோ)

௭. வண்ணங்கிகழுமணி முடியணிந்தாசாண்ட
வண்மையாவைபுந்தாளா வொர்த்துத்தநகதபோல
எண்ணங்கலங்கிடாம லின்னமும்பொருட்களை
இயற்கையாய்த்தந்துனினை யடிமலரேத்துவோம் (பொ)

புராண-விருத்தம்.

ஒருநாட்செலமறாவினையிலுறுதிவினைகினையா
பெருமான்களிருடையாளொடு புகரோன்மிகவெகுளாங்
மூருகார்தொடைமூடியாய்மறைமுனிகூறியபொருள்நீ
தருமாறுளதெனில்வின்றது தருகென்றுதடுத்தான்

பொது-விருத்தம்.

மூலதரன்கோயில்தனிலிருந்திவ்வண்ணஞ்
சொல்லியமனைவன்றிசைக்காட்சத்தையன்
சாலவெறியடைந்தன்போற்றள்ளித்துள்ளிச்
சஞ்சலத்தாலுளம்வாட ஜகத்தோரெல்லாம்
ஞாலமதிலிவர்களுக்கிவ்விதியெனவெனறும்
ஞானமில்லார்பிறக்குறையாரென்றபோது
ஜாலமென்னசெய்தாலும்விடுகேனென்று
சாதிப்பான்அவன்மனதைப்பேதிப்பானே. (௧)

(வ-ம்) இப்படியாகஸ்ரீகாசிவிஸ்வநாதருடைய திருவாலயத்திலே வி
ருந்து சொல்லப்பட்ட அரிச்சந்திர மகாராசன்மனம் பாயிதகச்சே

ய்கஷட்சத்ரியன் பதைத்துத்துள்ளி சஞ்சலமடைந்தவன்போல வா டக்கண்டகாசிநகரோர்யாவரும் பூமியில் இவர்களுக்கிப்படி வந்ததோ வென்று அன்னியருக்குச் சொல்லாரென்றும் அக்குகூடியபோது நீ என்னஜாலம்செய்தாலும் விடேனென்று பிடிவாதமாகஅரசனது ம னதைப்பேதித்துக் கொடூரமாகச் சொல்லுவதுகாண்க.

ல-தரு-இ-ம்-துசாவந்தி-அடதாளம்.

பல்லவி.

என்னஜாலஞ்செய்தாலுமினிப் பொறுத்திருந்திடேனொருக்காலும்

அநுபல்லவி.

மன்னர்மன்னனென்றிந்நாள் மனம்பொறுத்தேன்மென்மேலும்
மாமுனிவர்சொன்மொழி மாறுமோபெரும்பாலும்
பொன்னனைத்தையுந்தந்தாற் போவேனினியானாலும்
பொழுதுபோகுதுக்ஷணம் பொறுக்கேனென்னசெய்தாலும்

சரணங்கள்.

௧. தலைமை தப்பவுமாச்சே புன்வாய்மொழி
தவறுதற்கிடமாச்சே இந்த
அவனியோர்க்கிகழாச்சே உன்னுடன்மெத்த
அவதிக்கோர்ப்படலாச்சே உந்தனுக்
கெவனித்தலந்தனிற் கவலைமாயுனது
சுவணமியாவுந்தந்து சுகமளித்திடுவோன்
அவனைத்தேடித்துகை யனைத்தையுங்குவித்து
தவனலமடையத் தயககமற்று(என்)

௨. இரவிகுலத்திறைவர்க ளெவர்கட்கும்
இழிவுகள்விளைத்தாயே நாளும்
இரவும்பகலுங்காடே சரணடைந்து
இயற்கைமெய யிளைத்தாயே
சருவிவிழிகளி னருவிபாய்ந்திட
சந்ததம்நீசெய்யுஞ் சளத்தாயதேங்கிடப்
பருவந்தனிற்கடன் பணத்தைத்தலைத்திடக்
கருவமகன்றுநற் கீர்த்திபெற்றிட(என்)

௩. கோசிகமுனியாலே உனதுநற்
குணங்களைப்புவிமேலே என்றென்றும்
ஆசிகூறுவார்போலே எந்தனுள்
அருண்மிகு மொருக்காலே
மாசிலாவுனது நேசமிகத்தெளிந்து
காசினிதோறுங் களிப்புடனடந்து

ஞசிலாமனைவி
கூடிடாதுவிலை
மைந்தனைத்தொடர்ந்து
கூறுதல்கடந்து(என்)

பொது-விருத்தம்.

இத்தகைமையாயுரைத்தவ்விறைவன்றன்னை
    ஏலலிலாத்தொல்லைசெய்யவெத்தனித்து
மத்தகயத்தகயத்தாண்மியுண்டாவினைப்போல்
    மானிலத்திற்குத்தெழுந்துமான்போல்துள்ளி
வித்தகனைத்துதித்திறைஞ்சும்வீணனேநீ
    விசுவாமித்திரர்பொருளைத்தந்தாலல்ல
தெத்தகவும்விடேன்கிட்டிகைக்கொள்ளென்றான்
    ஏங்கினாள்சந்திரமதிதாங்கினளே

(வ-ம்) இந்தப்பிரகாரமாகச்சொல்லி அந்தஅரிச்சந்திரமகாராசனை துன்பஞ்செய்ய எத்தனித்துமதயானையின்காலின் மிதிப்பட்டசர்ப்பம் போலக்கிளம்பிக்குதித்து மான்குட்டிபோல்துள்ளி நீ ஸ்ரீகாசிவிசுவநாதனைத் துதிசெய்துகொண்டிருப்பதினாலே ஆவதென்ன வீணனே எமது விசுவாமித்திரருடைய பொருளைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால்இல்லையென்றாவதுசொல்லென்று கிட்டியைதட்டிகையிற்கட்டும்போது சந்திரமதியானவள் மனவருத்தமடைந்து கணவனதுகைகளைத்தாங்கிக்கொண்டு நட்சத்ரையனை வேண்டுவதுகாண்க

௫௬-தரு-இ-ம்-பூரிகல்யாணி- அட்டதாளசாப்பு.

பல்லவி.

சாமியென்றுரைக்கிக் கிட்டிக்கைநோகுதையா-சாமி

அநுபல்லவி.

பூமியெங்குங்கீர்த்திபெற்ற
காமிகக்கொடுமைகட்சத்
நேமிக்குமைக்காமிக்கெதிர்
நெஞ்சங்களித்திடச்செய்குவீர்
புண்ணியனெங்கள்சத்யவாசகர்க்
கிரையர்செய்கடுமை
நீதந்தெரியாதோ
தஞ்சமனம்பொறுத்துயகுவீர் (சா)

சரணங்கள்.

௧. தீதாய்கிட்டிகட்டிமனர்
    வாதாடியெதிர்
வண்ணமையாவையும்
    சூதாகவந்துபொய்வைச்
ஓதாமொழியோதியுள்
    ஓயாக்கவலையினாலெமைத்
இகைக்கச்செய்யலாமோ
வழக்குச்செய்து
கைக்கொண்டுய்து
சொல்லாரென்றுணாங்கு
முருக்கண்ணீர்பெருக
தியாவகைதலையின்றமை(சாமி)

௨. மாசில்லாமன்னனையிப்படி
    கோசிகமுனி
மதிகலக்கலாமோ
கர்த்தனுமென்னை

கொடுமை செய்தோமே குலலயந்தனில்
ஓசிவசிவனேதக வோபகவானே
நேசித்துறவாடியெங்கள் நிலையாவுமழிந்து
நிகழும்விதனமதுற்றிடுவிதமேசெயத் திடமுற்றீரென் (சா)

௩. மலர்சார்கன்னிறகிட்டி காவலனுக்காமோ
விமலமாமுகந் சோறச்சோற
வெறட்டிவெதட்டி யடிக்கிறீரையோ
நமஸ்காரஞ்சொன்னேன் நான்வெகுநேரம்
அமலப்பதந்தொழுதோமும் தடியார்களைக்காரும்
அய்யாவிதுசெய்யாவினை தய்யாநட்சத்ரையாபொறும்(சாமி)

பொது-விருத்தம்.

நதிமதிசூடியயீசனனைவிசுவ
நாதாதுகோயில்வலம்வந்துநல்ல
மதியுடனேவணங்கியுள்ளும்புறம்புமொன்றாய்
மலரடியைத்தொழுதிறைஞ்சிமகிழ்ச்சிகொண்டு
பதியதனிலுள்ளநல்லஷணங்களெல்லாம்
பாங்குடனேயாவரும்போய்ப்பார்ப்போமென்ன
விதியிதுவோவுனக்கெனறுவெந்தைவிப்ரன்
வெறித்திட்டான்கோட்டைக்குள்மறித்திட்டானே, ௫

(வ-ம்) அகோகேளுங்கள் அரசர்க்கரசர்களெங்கையும், சந்திரனையும் ஜடாபாரத்தில தரித்திருக்கிற சகதீசனை ஸ்ரீகாசிவிசுவநாதருடைய திருவாலயவலம்வந்து நல்லமதியுடனே நமஸ்கரித்து வாக்கு மனமுமொன்றாய் அவரது சரணாரவிந்தங்களைத் தியானித்துத் துதித்துசந்தோஷித்து இனிருணவிமோசனமாகும்படியானவழி தேடுவதற்காக அந்நகரிலுள்ள பற்பல விநோதங்களைப்பார்த்து வருவோமென்றுஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறஆரவாரங்களைக்கேட்டுஇது உங்களுக்குக்கிரமமாயிருக்கிறதோ ஓய் அரிச்சந்திரமகாராஜனே நில்லென்று வழிமறித்துக் குறுக்கிட்டுத்தடைசெய்து ஒருகோடு கிழித்து அதின்மேல்நிறுத்திக்கொண்டு கல்மழைபொழிந்தாப்போலே கடுகடுத்து நட்சத்ரையன் சொல்லுவதுகாண்க,

௪௨-அரு-இ-ம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி,

இனியென்னதடை சொல்லடா-அரிச்சந்திரா
இந்தக்கோட்டிஸ்தில்லடா

அநுபல்லவி,

கன்னிவர்ப்புழுதுபொழிந் தாப்போலமொழிந்தாயே
கனவிலும்பொன்றருங் கலிலையபொழிந்தாயே(இனி)

க, கல்லும்முள்ளும்பெருத்த கானகத்திலிரண்டு
காலுங்கடுகடுக்கக் கடைவிழிகள்புரண்டு
அல்லும்பகலுமுந்த னடிகளையான்றொடர்ந்தும்
அன்னுகாரமில்லாம லனுதினமும்கடந்தும்-இனி

உ, வெயயலினலெனது மேனிநலிந்துவாட
வேநதனென்றல்லோவுன்னை வேண்டிவந்தோமிர்மூட
கையில்தருந்துணைகால் காசெகிற்கணக்கிட்டு
கனவானென்றபேசெடுப் பதையும்கடந்திவிட்டு-இனி

ங. கவலையுள்ளவனைற் கருத்துவேனென்றிற்போமோ
காதலியுடன்கொஞ்சிக் களிக்குமனமுண்டாமோ
குவலயத்தார்புகழக் கோசிகன்கடன்தந்து
கொண்டாடுந்திறத்திலுன் குலத்தோரெவர்க்குமுந்து-இனி

பொது-விருத்தம்

புகரவனிற்நெறியுரைத்துமிகச்சினத்துப்
பொறுக்கொணாத துயரளித்துப்போர்கொடுக்க
நிகரவனிதனிலெவருமில்லாவேந்தன்
நெறிதயங்கிக்கண்கலங்கிநிலைமைகெட்டு
பகரரியதுன்பத்தாலுருகிவாடிப்
பரமசிவன்பதமலரைப்பரிந்துநாடி
நுகரவருப்பொருள்தேடும்வகையேதென்று
நோம்புவான்கடவுளின்முன்தேம்புவானே (கக)

(வ-ம்) அகோகேளுங்கள் ஸத்யதர்மசொரூபர்களே அந்த நட்சத்திரையனனவன் இவ்விதமாகச்சொல்லிககோபித்துப் பொறுக்கொணாதஇமிசைப்படுத்திச் சண்டையிட இணையில்லாத இராஜனனவன் நிலைகுலைந்து கண்கலங்கி சொல்லுதற்கரிதாகிய மனவருத்தத்தாலுருகிவாடி ஸ்ரீகாசிவிசுவநாதரது திருவடியை தியானித்துக்கொடுக்கவேண்டிய அருமையானதிரவியங்களைத் தேடுகின்றவகை எப்படியென்றுமனக்கிலேசத்தினற் புலம்புவதுகாண்க

ருங-தரு-இ-ப-எதுகுலகாம்போதி-அடதாளம்

கண்ணிகள்

க. கோசிகன் தூதனென்னைக் கோட்டில்மறிக்கின்றான்
தெயவமேதெய்வமே பொன்னைக்
கொடுத்தனுப்பும்வகைக் கோர்வழியுங்காணேன்
தெய்வமேதெய்வமே
காசிவிசுவநாதா கருணைமிகப்புரிவாய்
தெய்வமேதெய்வமே இந்தக்

கடன்தீரத்தெனையாண்டு காத்துரட்சித்தருள்வாய்
தெய்வமே-தெய்வமே

௨. மதிமோசத்தாலிந்த விதிவசமானேனே
தெய்வமே-தெய்வமே உந்தன்
மலரடிகண்டோர்க்கு மறுசென்மமில்லையே
தெய்வமே-தெய்வமே
பதியாவையுமிழந்து பங்கப்படுவாருண்டோ
தெய்வமே-தெய்வமே உந்தன்
பாதமேகெதியல்லா லாதாரவேதுகாண்
தெய்வமே-தெய்வமே

௩. கிட்டியைக்கட்டி கிலேசப்படுத்துகிறான்
தெய்வமே-தெய்வமே நல்ல
கீர்த்திவகுத்திடும் மூர்த்தியும்நீயாச்சே
தெய்வமே-தெய்வமே
அட்டியென்னவென்றெந்த னங்கத்தையொடுக்குறான்
தெய்வமே-தெய்வமே இனி
யாதரவெனக்கிங்கப் பூதலந்தனில்நீயே
தெய்வமே-தெய்வமே

௪. நெத்தியில்கல்லை நிறுத்தியடிக்குறான்
தெய்வமே-தெய்வமே என்றால்
நிருவாகமில்லையினி நெறிதனை மாற்றுவீர்
தெய்வமே-தெய்வமே
வெத்திமிகுத்தயுன் சித்தமிகக்களிப்பாய்
தெய்வமே-தெய்வமே இந்த
வேந்தன்குலத்தோரைக் காக்கும்விசுவநாதா
தெய்வமே-தெய்வமே

பொது-விருத்தம்.

மணிகொழிக்குந்தாமரைத்தடாகந்தன்னை
மதகரிகள்கோலிகலக்கியதுபோல
கணியில்லாப்பொருட்களையோர்நொடிக்குள்ளே
கருதியளித்திடலாச்சுஇல்லாவிட்டாற்
பிணிபுபனேயில்லையென்றுற்போதுமென்று
தீரர்களைக்கலக்குகும்நட்சத்ராயன்பாதகம்
அணிமகுடமெனச்சிரமேற்கொண்டுகோபம்
ஆற்றுவாரவர்மனதைதோற்றுவாரே (௭௨)

(வ-ம்) இவ்விதமாகமுத்துகள்விளையப்பட்ட தாமரைத்தடாகத்தை கோடானுகோடிமதயானைகளைக்கூடிக் கலக்குகின்றதற்கொப்பாக எண்ணிறந்ததனங்களை ஒருமாத்திரைப் பொழுதிற்குள் கொடுத்தாலு

ச்சுது இல்லாவிட்டால்லைய் புஜபல பராக்கிரமத்தையுடைய அரிச்சந்திரனே இல்லையென்கிறவொருசொலமாத்திரஞ் சொல்வாயென்றுரைத் ததிராசர்களைக் கலங்கச்செய்துக்கொண்டிருக்கின்ற நட்சத்திரையனுடைய இரண்டுபாதங்களையும் தங்கள்சிரத்திலணிந்துகொண்டு அவருக்குண்டாகிய கோபமகற்றி சித்தமிரங்கும்படி வேண்டிக்கொள்ளுநவது காணக.

௪௪-தரு-இ-ம்-உசேலிஸ்வாஜதி-ரூபகதாளம்.

பல்லவி

அருள்செய்யவேணுமையா-என்சாமி-அடிமலர்சரணமையா-என்

அநுபல்லவி

பொருளனைத்துந்தேடிப் பொற்புறத்தந்தனுப்பத்
தெருளில்லாதோராயெண்ணித் திகைக்குநீர்
தாரித்தா குகுஜெஜந்தரி-தகஜெம்-ஜெம்தரிகிடதக
தகணந்தரி-தரிகுந்தரி-தகதீணுதகிடசம்
பாப்பாப்பஸஸ்ஸாஸநி-தநிஸக்கரிஸ-நிசரிநிதபம
தாஹதசம்தரிகிட தகதகதக-தகதித்ததிகிதோம்
தகதித்தளங்கு-தகதிங்கணத்தோம்
இருளிடைவந்தடர்வனம்புகுந்திடிபாரில்-வீழ்ந்ததுபோலவே
இதமறியாதுவர்ப்பதம்பேசினேனையா
ஈசனேவிசுவேசா பூசுரரேசயிடேறும்
வகைசெய்துவுன்மனதிரங்கிக்காக்கவேணுமையனே-எனம்
எியல்பறிந்துய்யனே
ஒருவராதரவுண்டோயிவ்வுலகிலுந்தனையல்லது
ஓகோஉடல்பாகவே வேகாதகம்நோகாமலே (அருள்)

சரணங்கள்

௧. ஜாலஞ்செய்வதேதென்று-என்சாமி-சகத்தோர்நிகைக்கப்பேசுநீர்
காலப்பிழையோசெகத் கர்த்தன்செயலிதுவோ
ஞாலமீதினிலிந்த ஞாயமேதோ
தகணந்தக-தரிகுகுந்தரி-தகஜெணு ததசெனுதத்திமி
தத்திமிதகதகதீணுத தகணங்கிட தகசெம
ரிக்காக நிஸ்ஸா-நிதபநித-ஸஸ்ஸநி-தபகரிரிகம
ததிமிகிடதக தரிகிடசெந்தரி-தரிகிடகிடதகதோம்
தகதித்தளங்கு,தகததிங்கணத்தோம்
ஆலமுண்டன்மறைக்காத்தவ னருளன்படியல்லது
ஐயவேறுவகையுய்யவழியுளதோ
ஆகியநதமறியாதபூசுரரோ-ஆ-மிக
அவதிப்படவெங்கடகன் நயன்விதித்தவிதியோ-அந்த
அருந்தவன்சொல்மதியோ

கோலமதுவேறுகியுங் கொடுக்கக்கதியிலையென்றேமோ
கூறுவீரமிகச்சினமாறுவீர்மனதினிற்
நேருவீர்புகழ்தனின்மீறுவீரையனே (அருள்)

௨, ஆங்காரங்கொண்டுசீறி-என்சாமி-அடிக்குறீர் மிகதுடிக்குறீர்
ரீங்காமனத்துயரால் நினைவழிந்தபாலனை
ஓங்காரங்கொண்டுகொலாதுவைசகுறீர்
தாகிக்கிட-தரிதிமிகிட-தத்திமி திமிதித்தரிகிட
தத்தத்தசணு-சகயுகசெணு-தகதச்செணுசெணுத
ஸரிகமபதநிஸ-ஸநிதப-ஸகரிகமப-ஸாஸக்கரி
தத்திமிதரிகிட தரிகிட-செம் செம-தரிகிடகிடதகம்தாம்
தகதித்தளங்கு தகததிங்கணத்தோம்
நாகாதினிமனம்பொறுததிடத் தருணமுமதருணம்புயத்
தாளிணைதோம்றுதம்காளாகினோமெனுங்
தன்மையாலேமனவணமவகற்றியெனதாருயிர்
புதல்வன்படுந்துயர்தணிந்துக்காக்கவேணுமையனே-மிகு
தவத்தோர்புகழ்துய்யனே
பாங்காய்ப்பொருளனைத்துந்தரும்
பரிவிற்குறைவெனவுரைத்தோமோ
பார்ப்பீர்குறை-தீர்ப்பீர்கதி-சேர்ப்பீரெமைக்-காப்பீர்மிக (அருள்)

௩, அகுதிக்குத்தெய்வமேதுணை ஆகுமென்றமொழிபொய்யோ
மிகுதியாகச்சொல்லிவிம்மேதினியிகழாதோ
தகுதியோதற்காருந்தினிதயாளா
திமிதிமிகிடகித்திமிகுதிகுதிணுத்திமிதரிகிட
திரிகுந்தகு-திரிகுகுந்தகு-திரிகிடகிடதிந்தீம்
சிம்மாம்ம-கக்காரி ரிதபனி-நிதபநிதபம்
தித்திமிதிமிதிமிதிமிகிடதக-தித்திமிதிமிகிடத்தோம்
தித்தலங்குதகததிங்கணத்தோம்
பகுதிக்கடைத்தெளியோர்களைப்
பங்கஞ்செய்திடமுற்றோமோ
பாலனேமிகலனுகூலனே நாமறலோலனே
குணசீலனேவுமது
பாதமே-கெதியென்றடைந்தோமிகப் பரிபாககாலம்வருமையனே
இருதைபார்த்தருளுந்துய்யனே
நகுகதிரவனைமைநகையானே நவிலுவதனுவெனிற் பொய்யாமோ
காதாஞானபோதாமிகவாதாமுன்செய்தீதாமிக. (அருள்)

பொது-விருத்தம்.

தாழுவந்தமறையவனிவ்வாறுபூபன்
னையிடிக்கமுறச்செய்யத்தயககமுற்று

விரகுதனிற்பற்றியசெந்தீயைப்போலும்
வேங்கையின்கைக்ககப்பட்டபசுவைப்போலும்
வரகுதிரிகையின்கல்லுக்ககப்பட்டாற்போல்
வள்ளலினை வாட்டியேலோகிதனைக்கூவி
சரகுகனையுரலினிற்போட்டிடிக்கும்வண்ணஞ்
சதிகொண்டாளைதச்சந்திரமதிகண்டாளே, ௰௩.

(வ-ம்) இவ்விதமாய் நாதுவந்த நட்சத்ரையனானவன் அரிச்சந்திரனை துன்பப்படுத்தியபோது மகாகஸ்திப்பட்டு காட்டிற்பற்றியநெருப்பைப்போலும் வேங்கைப்புலியின்கைக்ககப்பட்ட பசுவைப்போலும் திரிகைக்கல்லிலகப்பட்டதானியத்தைப் போலுமநானாவிதமானதுன்பப்படுத்தி அத்தடத்திலிருந்த லோகிதனையழைத்துக்காய்ந்தசரகுகளை உரலிலிட்டு இடித்து நொறுக்குவதுபோல இம்சிக்கும்போது சந்திரமதியானவள்கண்டு நட்சத்ரையனைச் சரணாகதியடைந்து வேண்டிக்கொள்ளுவதுகாண்க.

௰௫-தரு-இ-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்,

பல்லவி,

பாலனையா-ஐயா-பச்சைப்பாலனையா

அநுபல்லவி.

காலகாலன்தந்த-சிலனானமைந்த- ஞாலமீதிலேந்தக் கோலமாகவந்த

சரணங்கள்

௧, பிள்ளைகுட்டியுமக் — இல்லையோ-இவன்
பிறந்தவேளையென்ன — தொல்லையோ
வெள்ளைவிடையோன்கிருபை — யில்லையோ-மிக
வேதனைக்காளாக்கு — மெல்லையோ(பால)
௨, பொருளைத்தாரதில்லை — யென்றோமோ-மறைவிற்
போகவிட்டப்பறஞ் — சென்றோமோ
மருளடைந்துமனம் — வின்றோமே உமது
மனம்வெறுக்கப்பேசி — நின்றோமோ(பால)
௩, மூன்பின்பாராமலே — பேசுரீர்-எங்கள்
முகமறியாததுபோ — லேசுரீர
அன்பில்லார்போல்மனம் — ரோசுரீர்-மகன்
அறிவழியாக்கோலநல் — வீசுரீர்(பால)
௪, ஆவின்கன்றைப்போலே — வாட்டுரீர்-கழுத்தில்
அண்ணாந்தாளைபூட்டி — மாட்டுரீர்
கூவிமனைப்பாலைப் — வோட்டுரீர்-பொல்லாக்
கொடுமையாவுமிங்கே — காட்டுரீர்(பால)
௫, ஐயாயிதுவரவ — மல்லவோ-மெத்த
அறிவுளவுமக்குயான் — சொல்லவோ

மெய்யகலாதானே வெல்லவோ-யிந்த
மேதினியிற்புகழ் புல்லவோ (பால)

௬, கட்டியடித்தர சாண்டமோ-எங்கள்
காரியமானபின் வேண்டாமோ
வெட்டித்தவஞ்செய்து மீண்டோமோ மன
விருப்பமற்றமாலை பூண்டோமோ (பால)

௭, மதலைசொல்மாறிடாப் பாலனே-எங்கள்
மாதவத்துக்கேற்ற சீலனே
அகலமுதலோர்புகழ் கோலனே-மறைநூல்
அனைத்துமறிந்தவனு கூலனே (பால)

பொது- விருத்தம்.

கொதித்திடுங்கொப்பறையில்வீழும்புழுவைப்போலும்
கொழுங்கொம்பிலாதசெழுங்கொடியைப்போலும்
கதித்தவெயில்கிறுத்திபிள்ளைக்கையிற்கட்டி
கட்டிடக்கண்டுருகியதாய்கலங்கிமுன்னம்
உதித்தகடல்நஞ்சையுண்டகைலைவாழ்வே
உன்செயலின்றிதுவோவென்றுள்ளம்நொந்து
துதித்துடலும்பதைத்துமிருகண்ணீர்சோரத்
துடிக்கின்றாள்சந்திரமதிகொடிக்கின்றானே. ௰௪

(வ-ம்) இவ்விதமாய் மிகுந்த வெப்பத்தினால் கொதிக்கின்ற நெய்க்கொப்பறையில் விழுந்தகிருமியைப் போலும்அணையும் கொம்பில்லாதசிக்கிற் கொடியைப்போலும் பரந்தெரிக்கின்றவெய்யலிலே நிறுத்தி கைகளிற்கிட்டியுங் கட்டியதைக்கண்டதாயான சந்திரமதியானவள்மனக்கலக்கமுற்று அந்நாளில்உற்பத்தியாகிய ஆலகாலத்தையுண்ட ஓ கைலைவாசனே உனதுதிருவருளிது வோவென்று மனநொந்துபலவாறுதுதித்து உடலபதைபதைத்து இருகண்ணிலும் நீர்ததும்பத்துடிதுடித்து துயரப்படுகிற புத்திரசிகாமணியைக்கண்டு மனம்பொறுக்காமல்சந்திரமதியானவள்நக்ஷத்திரையனைப்பிரார்த்திப்பதுகாண்க.

௰௬-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

விரகறியாப்பாலகனை வெதுப்பலாமோசாமி
வேதனைபொறுப்பானோசாமி.

அநுபல்லவி.

பாகதிகிடைக்குமோ பணமில்லையெனப்போமோ
உரகனைப்போலேசீறி உள்ளத்திற்கோபமீறி-ஆ
உலகிலில்லாக்காலமெல்லா-மிலகிப்புல்ல

உததிதனில்விழுந்-தழலுந்துரும்புபோற்
ஓயாககவலையினால்மாயச்செய்தனுதினம்   (விரகதி)

சரணங்கள்.

க, தஞ்சமுன்பாதமமதி   தயக்கந்தவிழ்த்துகாரு
கற்காத்தருளுமைய
கஞ்சனன்றுவிதித்த   கதியிதென்றுணர்ந்தோர்க்கும்
நெஞ்சந்துடித்திடாதோ   நிமலாநீரறியாதோ - நன்
நெறியொழிந்து-அறிவழிந்து குறியழிந்து
நிலைகுலைந்துளைந்து-நெடுவனத்தலைந்து
நீங்காமனக்கவலை-தாங்காதனுதினமும்   (விரகதி)

உ, பாவகொடுமையைக்காட்டப் படைத்தானோபிரமதேவன
பரிதாபமொழிப்பீரையா
தேவர்க்கும்பொறுக்குமோ   தீவினைசெருக்குமோ
சேவடியானைபொருள்   செலுத்துவோம்பொறுத்தருள்- ஐய
சிந்தையுநக-நொந்துசருக-வெந்துமுருக
சித்திரமெத்தனை-செய்யத்துடங்கினும்
செப்புமொழிதவறலொப்புமோவரவா   (விரகதி)

ங, மதலைச்சொல்மாறிடாத   மைந்தனைவதைக்கிறீர்
மலரடிசரணமையா
அதனமகிழ்ச்சியாலே   அவனியிலுனைப்போலே
விதனப்படுத்துவோரை   விரும்பிமனங்கொண்டோரை-அந்
விண்ணவரிலும்மண்ணவரிலும்-நண்ணவறியோம்
வில்லம்புபோல்வாயிற் சொல்லம்பினலெய்து
வீழ்த்திமனதுநோகச் சூழ்த்தியனுதினமும்   (விரகதி)

பொது-விருத்தம்

தூதுவந்தவந்தணனிவ்வாறுசீறித்
தொல்லைசெயவெல்லையிலாத்துன்பமுற்று
ஏதுவழிபுரைப்பதெனவேங்கிப்பேங்கி
யிறையவனைநெஞ்சில்நினைத்துருகும்போது
கோதுகடுகளவுமிலா மதிதயேந்திரன்
குணமிகுநற்றவத்துதித்தகோமளாங்கி
மாதுசிரோமணிசந்திரமதியிவ்வாறு
மனங்கொண்டாளமணவாளன்கணங்கொண்டாளே,   ௫

(வ-ம்) இவ்விதமாய்இமிசித்த நட்சத்ரையன் கோபாக்ராந்தனுய்அடிக்கடி துன்பப்படுத்தியபோது துக்கித்துபணத்துக்கு என்னவகைசொல்லுவதென்று திகைப்புற்று பிரம்மாவை நினைத்து நொந்துருகும்போது கடுகடவும்கன்மிஷமில்லாதசந் திரமதியானவளசிந்தனையுற்றதனதுபிராணநாயகனைநோக்கிச்சொல்லத்தொடங்குவதுகாண்க.

௰௭-தரு-இம்வராளி- ஆதிதாளம்

சந்திர-மன்னவாபொருள்தேடிமறையவர்க்கீந்தால்
இந்நகர்தனிற்பிழைத்திருந்திடலாமே
அரிச்ச-கன்னியேசொல்வாய்கவுசிகர்கடன்பொருட்
குன்னியவகைதேடவுளவறியேனே
சந்திர-கணவனேமெத்தக்கவலையேனுமக்குக்
குணமதாயெனைவிலைகூறிடுவீரே
அரிச்ச-மண்டலந்தனையாண்டமன்னவர்க்கழகோ
கொண்டவளெனைவிலைகூறிடுவாயே
சந்திர-தலைவனுந்தலைவியுந்தன்னிகரில்லா
உனைவிலைகூறுதலுலகினிலழகோ
அரிச்ச-கன்னியேயுந்தன்கருத்ததுவாயினும்
உன்னையான்விற்றிடவுளமகிழ்வேனோ
சந்திர-மகிழ்ச்சியும்பெருமையும்மாமுனிக்கல்லால்
இகழ்ச்சியுறிலென்செயவோம்நசாபிராணேசா
அரிச்ச-மதியேயானிதுசெய்தால்மாநிலம்நகையாதோ
கதிர்குலத்தரசர்க்குக்கதியடைவேனோ

பொது-விருத்தம்.

கள்ளமில்லாக்காதலனிவ்வாறுரைக்கக்
கற்புமிகுமாதரசிகலக்கமற்று
உள்ளப்போமூழ்வினைநம்முதானும்
உறதியுடன்விலைகூறுவிடிலெவ்வாறு
தள்ளப்போமூழ்வினைநம்முதானூற்
நல்சுமையைவேறொருவர்தாங்குவாரோ
எள்ளளவுந்தவறவொண்ணாதென்றுரைத்தாள்
யெடுத்திட்டான்மறுத்துரைக்கத்தொடுத்திட்டானே

(வ-ம்) அகோ கேளுங்கள் திரிகாலங்களிலும்புகழ்ச்சியுற்றமன்னவர்களே கபடமற்ற பிராணநாயகனானவ னிப்படிச்சொல்ல பதிவிரதாசிரோமணியாகிய சந்திரமதியானவள் மனக்கிலேசமகற்றி உள்ளன்போடு என்னையும்புத்திரனையும்விலைகூறுவிடில் ருணவிமோசனமாகும்வகையேது முற்காலத்திற்செய்ததீவினை நமக்கானால் நாம்சுமக்கவேண்டியசுமையை வேறொருவர்சுமப்பாரோ எள்ளுப்பிரமாணமுமென்வாய்மொழி தவறாமல விற்றிடுவீரென்றாள் அப்போது அரிச்சந்திரமகாராசனானவன் தனதுபத்தினியாகியசந்திரமதியின்வார்த்தைக்கெதிர்வார்த்தை சொல்லத் தொடங்குவதுகாண்க,

௰அ-அரிச்சந்திரனும்சந்திரமதியும்-சொல்-ஜம்பை

அரி-ஒப்பாகநீயுரைத்தா யுந்தனையுமைந்தனையும்
இப்பாரிலேலனமாயிசைத்துகாண்விற்பேனே
சந்தி-விற்பிடித்ததிணிபுயனே வேந்தனே இதேளனமோ
சொற்படிந்தவடிமைத்திறந் தொல்லுலகிலரிதோ
அரி-அரியரபிர்ம்மாதிகளும் அரியவுனைமணம்புணர்ந்து
பெரியகுடிக்கடிமையென பேசலாமோமதியே
சந்தி-மதியழியமனங்கலங்க மாதவர்துதாவர்செய்யும்
விதிதவிழ்க்கவினியவகைவேறேதுபிரேணேசா
அரி-வேறுவகையிலையெனினும்விளங்குமென்தாய்தந்தையர்க்கு
கூறும்வகையேதுளது குதலைமொழியாளே
சந்தி-மாதவர்கள்தங்களுக்கிறைவன்மகிழ்கொழுனனொருவனல்லால்
பூதலத்திற்கேள்வருண்டோ புகலுவீர்பிராணேசா
அரி-ப்ரணருளிதாமெனவே பததினியும்மைந்தனையும்
தரணிதனில்விலைகூறில் தலைவர்களேசாரோ
சந்தி-ஏசுவோரும்பேசுவோரும் இடுக்கமொழிந்திடநினைத்துப்
பூசுரன்றன்கடனொழிக்கப் பொருந்துமவருண்டோ

பொது-விருத்தம்

கன்னியிவ்வாறுரைத்துமனங்கசிந்துகின்றாள்
கதிர்குலத்துமன்னன்மதிகலக்கமுற்றான்
தன்னிகரில்லாமகனத்தன்மைகண்டு
தந்தையேநீரெந்தனையும்விலையாய்க்கூறி
மன்னியவம்முனிவருணத்தைத்தீர்த்துக்கொண்டு
மாநகரயோத்திதனக்கேகுமென்றான்
குன்னியதோர்மனத்தனிருவரையுங்கொண்டு
கூறுவான்தெருத்தெருவாய்மாறுவானே ௧௭

(வ-ம்) சந்திரமதியானவள் இவ்விதமாகச்சொல்லிநிற்கும்போது அரிச்சந்திரன்கிலேசித்து நிற்கக்கண்ட லோகிதகுமாரனானவன் ஓய்ன் பரமபிதாவே நீர் - என்னைவிக்கிரயித்து அந்தமாமுனீசுவாருடைய ருணவிமோசனஞ்செய்துக்கொண்டு அயோத்தியா புரியையடையுமென்றான் அத்தருணத்தில்மனங்குன்றி அரிச்சந்திரனானவன் மனைவி மைந்தனிருவரையும் தெருத்தெருவாய் விலைகூறிவாத் தொடங்குவது காண்க.

௰௯-தரு-இ-ம்-உசேனி-அடதாளம்,

கண்ணிகள்.

௧, மனைவிமைந்தனிருவரையும் விலைமதித்துக்கூறினேன் எந்தன்
மனதுதேறினேன்
நினைவிலுங்கொடுங்கனவிலுமெனை நீங்காமையலாள் கற்பின்
நிறைந்தமையலாள்

௨, இந்தநகர்தன்னிலிருவரையுங்கொள்ள விச்சையெவர்க்குண்டோ
பொருள்-ளீவோர்களுண்டோ
நன்னகரயோத்திநாடாளுஞ்செங்கோலின் நாதனரிச்சந்த்ரான்
சத்யம்நவிலும்நரோத்தான்

௩, காதிசுதன்விசுவாமித்திரமுனிவன்றன்கையிற் கடன்பட்டேன்
அதைக்-கடக்கவுடன்பட்டேன்
விதிபோறும்விலைகூறிவந்தேன்காசிவிசுவநாதனே போற்றும்
விமலபாதனே

௪, உன்தனருளால்மதிதயன்றவத்தில்வந்துதித்த ஆவியாள் எனக்
குகந்ததேவியாள்
கந்தமலர்ப்பூங்குழலாளிவைக்கருதிவிலையிட்டேன் மனங்
காணுக்கடன்பட்டேன்

௫, வேண்டிவந்தோமெமையக்காத்தருள்வாயென்றும் விருபாட்சியே
காசிவிசாலாட்சியே
ஆண்டிடுவாயுனதடிமலர்தொழும்அருதிக்கார
ளையாதரித்தனை

பொது-விருத்தம்

கலைதன்னைவிட்டுப்பிரியமனமொவ்வாது
கானகத்தினிடையலையுங்கவரிமான்போல்
உலைதனில்வெந்துருகுமெழுகாய்கரைத்து
உருவழிந்து அறிவழிந்து ஒடுங்கியிந்த
நிலைதவிழ்க்கும்வகையிலையோவிஸ்வநாதா
நீதியிதோவெனக்கதறவத்தலத்தோர்
தலைதனைமிஞ்சினவாக்கினையுண்டோவென்பார்
தயங்குவார்மதிமறந்துமயங்குவாரே ௧௮

(வ-ம்) இவ்விதமாய்கலைமானை இணைபிரிய உள்ளம்வருந்தமயுற்று அடவியெங்குந் திசைதப்பியலைந்து கவலையுற்றகவரிமானைப்போலும் அனலிலிட்டமெழுகைப்போலுமுருகி உருவமாறி மதிகெட்டுஒடுங்கி இவ்விதிதவிழ்ப்பதற்கு வகையில்லையோ விசுவநாதனேயென்றும இது நீதிநெறியோவென்றும் பிரலாபிக்கும்போது அந்நகரிலங்குள்ள ஒவ்வொருவரும் தலைக்குமிஞ்சின ஆக்கினையுண்டாவென்று திகைத்துஅங்கலாய்ப்புற்றுச்சொல்லுவதுகாண்க.

உ௰-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

கண்ணிகள்.

௩, வீதிவீதியாய்க்கொண்டவிரகினையவிலைகூற
வீதிவந்ததெங்கேனோவென்பார் வெகுபேர்கள்-இவள்
சோதித்திருமுகமுஞ்சுகந்தமலர்வாசமும்
சொல்லவெளிதோவென்பார் வெகுபேர்கள்-என்றும்
சோதில்லாகுணநதோர்கள்குலதர்மபுத்திரர்கள்
குவலயமாண்டோரென்பார் வெகுபேர்கள்-என்றுந்
தீதில்லாதோராயினும்வேதியனெழுத்தினைத்
திருத்தவெவர்க்காமென்பார் வெகுபேர்கள்-மூன்றுள்

௪, பார்க்கடவிற்பாம்பணைப்பள்ளிகொண்டமாதவன்
பைந்தொடிக்கிணையாவனென்பார் வெகுபேர்கள்-இவள்
தீர்க்கசுமங்கிலியாள்தெரிவைதிவடிவைத்
தேடிப்பறித்தாளென்பார் வெகுபேர்கள்-இவளைக்
கார்க்கக்கடவோனந்தக் காலபைரவனலலாற்
கவலைநமக்கேனென்பார் வெகுமாதர்-எவர்க்கும்
ஏர்க்கவிசைக்கமுன்றொளுழுகின்வனுக்கல்லோ
யெவர்க்கேவலாளோவென்பார் வெகுபேர்கள்-தேவ

௫, மாதர்வடிவமல்லமானிடர்வடிவுமல்ல
மாநிலமங்கையாளென்பார் வெகுபேர்கள்-மெத்தக்
கோதரவிவர்க்குற்றகோலங்களைகுறிக்கக்
கொடுமையால்வந்ததென்பார் வெகுபேர்கள்-இந்தப்
பூதலத்தினிதிவள்பிறக்கத்தவஞ்செய்தவன்
புண்ணியமேபுண்ணியமென்பார் வெகுமாதர்-நாளும்
ஆதரவில்லையிவட்கன்னையுங்கெடவிற்கூற
வகந்துணிவானேனோவென்பார் வெகுபேர்கள்-இவளைக்

௬, கட்டியகணவன்சொற்றட்டிநடக்குமவள்
கற்பிற்கழகேசென்பார் வெகுபேர்கள்-இந்த
கட்டிவர்தெவ்வாறோ நாமறிவோமோயிந்த
நாட்டுவளப்பமென்பார் வெகுபேர்கள்-என்னைக்
கொட்டிக்கொடுத்திட்டாலும் கொண்டவன்தனைவிற்போர்
குவலயத்துண்டோவென்பார் வெகுபேர்கள்-கன்னல்
எட்டியாகிலுகநின்றுஇங்கதுபோவதேகலம்
இம்மிசைமொழியுமென்பார் வெகுபேர்கள்-பூவோர்

௭, தாய்க்குப்பின்தாரமென்றுதாரணிமோருஞ்சாத்திரம்
தன்மையுமொழித்தேனென்பார் வெகுபேர்கள்-பொல்லாப்
பேய்க்கும்பெண்ணொன்றுரைத்தால் பித்தந்தலைக்கேறுமே
பிரமைமொழிந்தானேயென்பார் வெகுபேர்கள்-நாளும்.

காய்க்கும்மாத்துக்கல்லோ கல்லெறியுமுலுக்கும்
கலக்கமுங்கட்கேனென்பார் வெகுபேர்கள்-இங்கு
வாய்க்கும்விதியைத்தள்ளி வைக்கநமக்குளதோ
வாய்ப்பேச்சோவெல்லவென்பார் வெகுபேர்கள்

௬, நமக்கேவிந்தவிசாரம்எவர்க்கும்ஆளனொருவன்
நங்குகொழிக்கிறீரென்பார் வெகுபேர்கள்-இது
அமைத்தவமைப்பின்படி யரன்பாலயனோர்கட்கும்
அடைவதொழியாதென்பார் வெகுபேர்கள்-ஓர்
இமைப்பொழுதேனுமனவிச்சையுடனிருந்து
எகுதல்நலமென்பார் வெகுபேர்கள்-அந்த
இமையவல்லியிவருக்கிணையோ துணையல்லாமல்
இவளரசன்பெண்டென்பார் வெகுபேர்கள்-நல்ல

௭, சந்தமலரும்போலேசணவனுங்காரிகையும்
காரணவிதியென்பார் வெகுபேர்கள்-இப்போ
இந்தமன்னவனைப்போலின்னொருவருண்டானல்
ஈடேறுங்குடியென்பார் வெகுபேர்கள்-பெற்ற
மைந்தனுடனேகொண்டமனைவிதனையும்விற்க
மன்னனென்செய்தானென்பார் வெகுபேர்கள்-மனச்
சிந்தனையாவிவர்கள்செல்வமெல்லாஞ்சிறுத்துச்
சீரழிந்தார்களென்பார் வெகுபேர்கள்-ஐயோ

௮, ஆகிபாஞ்சோதிபோலரிவையைவிற்பதிலும்
அவன்விலைப்படலாமென்பார் வெகுபேர்கள்-வெகு
நீதியற்றவன்மிகநெஞ்சந்துணிந்தோனிவன்
நீதியநீதியென்பார் வெகுபேர்கள்-பூவில்
சாதியிவர்கட்கேதோக்ஷத்ரியர்களிவர்
ஜனனமடைந்தோரென்பார் வெகுமாதர்-நிறை
சோதிகுலத்துதிக்கசுந்திரர்தம்மின்மேலோர்
சொற்பிழையற்றோரென்பார் வெகுபேர்கள்-இப்போ

௯, இவ்விருவரைக்கொள்ளவெவர்களுண்டிந்தவூரில்
இமையவர்க்கேனுமென்பார் வெகுபேர்கள்-என்றம்
ஔவியமில்லாதவள் அருந்ததிசற்பின்மிக்காள்
ஆருக்காவாளோவென்பார் வெகுபேர்கள்-பொல்லா
வெல்வினைதீர்க்குங்காசிவிசுவநாதர்க்கல்லாமல்
வேறெவர்க்காமென்பார் வெகுமாதர்-கையில்
நவ்விமழுவேந்தும்நாதனொருவர்க்கல்லால்
நாருக்கிழிவாமென்பார் வெகுபேர்கள்

பொதுவிருத்தம்.

காசிநகர்தன்னிலுள்ளா ரிந்தநீர்மை
கருதியவரவர்கருத்திற் கண்டவாறு
யோசினையில்லாதுரைக்கு மொழியைக்கேட்டு
உளமயர்ந்துமிகநொந்து ஓய்விலாது
வீசியதாதுவன்முகத்தின் கடுகடுப்பும்
வெடுவெடுப்புங்கண்டுமிக வெறுப்படைந்து
கோசிகர்தன்பொருள்கொடுத்தே புசிப்பேனென்று
கூறுவான்தெருத்தெருவாய் மாறுவானே. (கசு)

(வ-ம்) இவ்விதமாய் காசிநகரிலுள்ள பற்பலரும் அவர்களுக்குத் தோன்றியபடி முன்பின்யோசிக்காமல் சொன்னபோது கேட்டவர்கள்மனக்கிலேசமுற்று இடைவிடாமல் நட்சத்ரையன்செய்கிற கொடுமையைக்கண்டு விசுவாமித்திருடைய தனங்களைத் தந்தபின்பு தானே அன்னாகாரமெடுத்துக்கொள்வதென்று பிரதிக்கினை செய்துகொண்டு அரிச்சந்திரராசன் மறுபடியும் விலைகூறுவதுகாண்க.

உக-திபதை-இ ம்-ஆனந்தபைரவி-ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

க. காசியாளுந்தேசிகரே காதலியைக்கொள்வாருண்டோ
ஆசிகூறும்அந்தணரே அரிவையைக்கொள்வாருண்டோ
உ, மங்கலியத்துடன்சோபித்த மாதரைக்கொள்வாருண்டோ
சங்கராசச்சிதானந்தா சகியாள்தன்னைக்கொள்வாருண்டோ
ந, மோகினிபடைத்தாயிந்த மெல்லியளைக்கொள்வாருண்டோ
காசிதன் கடன்தீரக் காரிழையைக்கொள்வாருண்டோ
ச, மாதவமதுளதனு மங்கையைக்கொள்வாருண்டோ
ஆதவன்குலதிறைவா ஆதரித்துக்கொள்வாருண்டோ
ரு, யாகிலத்திற்பூசுரரே மனைவிதன்னைக்கொள்வாருண்டோ
நானிலத்துமங்கையரே நாயகியைக்கொள்வாருண்டோ
சு, பூமியாளும்மன்னவரே புத்திரனைக்கொள்வாருண்டோ
காமியாளைவிற்கவந்தேன் காதலுற்றுக்கொள்வாருண்டோ
எ, அரிவைதனைவிற்கவந்தேனே ஆவலுடன்கொள்வாருண்டோ
தெருத்தெருவாய்த்தேடிவந்தேன் தேவையானபேர்களுண்டோ
அ, பத்தினியைவிற்கவந்தேன் சுதரியரிற்கொள்வாருண்டோ
வெற்றிமிகுசூத்திரரே சித்திரையைக்கொள்வாருண்டோ

பொது-விருத்தம்.

இந்தடவாய்ச்சிவகாசிவிசுவநாதர்
எழிலுயர்சந்நிதிமுன்வந் தினிதுகூற

அந்தணனுய்நூதலழலையாக்கிநீபோ
யரிவையுமைந்தனேயுங் கொண்டாள்வாயென்ன
எந்தனேயோவிதித்தனேயிவ் வியற்கைக்கென்று
ஈசனிருதாள்பணிந்தங் கிருந்தெழுந்து
கந்தமலர்கதிர்கோடி யுதித்தாற்போலக்
கதிக்கின்றான்மன்னவன்முன் னுதிக்கின்றானே. (உ௯)

(வ-ம்) இவ்விதமாய் தெருத்தெருவாய்விலைகூறிய அரிச்சந்திரமகாராசன் ஸ்ரீகாசிவிசுவநாதருடைய சன்னதித்தெருவிலும்வந்து விலைகூறும்போது தனது நெற்றிக்கண்ணிலுள்ள அக்கினியைப்பிராமணரூபமாயழைத்து நீர்போய் அந்தச்சந்திரமதியையும் அவள்குமாரனையும் விலைமதித்துக்கொள்ளுவீர் என்றபோது எந்தனேயோவிதற்கு நியமித்தீர் அந்தப்பதிவிரதாசிரோன்மணியை வைத்துக்கொண்டு நிர்வாகிப்பது அசாத்தியமாச்சுதேயென்று சிந்தித்து ஈசுவரருடைய இரண்டுபாதத்திலும் சரணாகதியடைந்து அநேககோடிசூரியர்கள் ஏககாலத்திலே பிரகாசிப்பதுபோலே அரிச்சந்திரமகாராசன் முன்பாய் வேதமூர்த்தியாகிய காலகவுசிகனென்னும் பிராமணன் வருகிறவிதங் காண்க.

தரு-இ-ம-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

வேதியர்வந்தாரே-விமலர்தொழும்-வேதியர்வந்தாரே.

அநுபல்லவி.

வேதியரெவர்கட்கும் ஆதியார்புகழ்விண்ணின்
சோதியாருமைக்கொரு பாதியார்நுதற்கண்ணின் (வே)

சரணங்கள்.

௧. செந்திருமகட்கொப்பும் சேயிழைமனைவிதனைக்கூறி
செல்வஞ்சிறந்தவர்போற் சீமையெங்குந்தடுமாறி
வந்திருக்கிறாய்நீ வண்மைமையமனங்கேறி
வருத்துவாசெயவாயென்று வையகத்தோராமீறி (வே)

௨. வீதிவீதியாய்ச்சென்று விரதியைவிற்பேனென்று
வெட்கஞ்சிக்கமகன்று விஞ்ஞவிக்கொண்டெக்குஞ்சென்று
சாதிசாதியாயகேட்டு சகிக்காமற்குணறிகின்று
சஙகடப்பட்டுக்கொண்டு சருவும்நீயாரோவென்று (வே)

௩. ஒளிவியமில்லாதந்த னவதியெல்லாய்உன்னி
அருகிலிருக்கும்பைந்த னடவையெல்லாம்பண்ணி
தெளிவியமூர்வந்தும் நாதன்மேல்பணம்உன்னி
கவிலுவாயெனக்கென்று நாதாதன்முனபாய்வன்னி (வே)

பாதாசாரியனும் காலகவுசிகனும்சொல்

ஆசிரியவிசனம்.

(பாதாசாரியன் சுவாமிகளைசேவிக்கிறேம் (காலகவுசிகர்) சமஸ்த சஷ்பக்ஷாணிபவந்து மகார ஜருபிருக்கஹுப் ஜலதுவாபே பகிர்துவசோ ஸார்வதா அனுகூல சித்திரஸ்து.

பாதா-பஞ்சாங்கச்சரணஞ்செய்வியுங்கள் சுவாமிகளே,

சுலோகங்கள்.

காலகவு-கேளுங்கள் சிதம்பரம் தீட்சதாள் பட்டணம் புண்டரீகபுராப்புஜம் ஆதிதேவாத்மனாம்த்யாயேது ஆருவாகோப-சாந்தயே-விசுவசோதோ விராட்ருபோ-விசிஷ்டாநாமுபக்ரமே சொன்னதெல்லாப்சுபோஸ்து மூன்புதந்தானமோஸ்துதே - சார்த்ப வசிரஷ்ட தச்சாவர்-சுனகசிச்நோமகாபலதா-ருகரோகற்ப உற்பகதி-பகதேவி-நமோஸ்துதே திதிபஞ்சபசசமேகேன-வார ஹம்சப் சுமேதினே நட்சத்ரேசப்தி விம்ஸஸ்தே-யோகஹமோ அவளவேததா-காஹுதமல்லயுத்தஞ்சபஞ்சாங்கம் கஷ்கவாஙிறேம்.

ஸர்வோத்க்ருஷ்ட சபைபிலைஸரஸ்விலாச கணிகோகாமகரசிம் மஹேஜாஸ்யநிர்ணயே அககியவசனபூகோளநிர்ணயம்.

அஸ்தமயபர்வதத்துக்குக் கிழக்கு-சமுத்திரக்கரைக்கு-மேற்கு-இராமேசுவரத்துக்கு-வடக்கு-இமையமலைக்குத் - தெற்கு-இந்த நான்கெல்லைக்குட்பட்டது பூகோளம் இதுகளுக்குவெளிப்பட்டது ககோளமென்னப்படும் இதுகளிலே அகடவிகட விஸ்தாரோர்த்பர்வதத்துக்கு பிருஷ்டபாகத்திலே ஆகாசுமானமெனவும் அகஸ்யார்புததேசதிலே அங்கரங்க வைபோகமானமெனவும் அகடவிகடத்திலே அபுரூபவருஷமெனவும் பேர்வழங்கும் இந்தவருஷத்துக்கு நவநாயகாள் யாவரென்னில் இராஜா வெள்ளையவன்னியன் மந்திரி ஒண்ணாக்கண்ணி மூணியாண்டித்தேவன் சேனாதிபதி-குருக்கடிச்சடை வளர்த்த பண்டாரம், அர்க்காதிபதி-புலித்தோல்கட்டிப் பொன்னம்பலவுடையான் ஸஸ்யாதிபதி திரிசிராத்திரிச் சேர்வைக்காரன்-மேகாதிபதி - அன்னக்காவடி அழகப்பதம்பிரான் இரஸாதிபதி-ஒலைவாரிஊளமூக்குப்புலவன்-நீரஸாதிபதி-இருள்-வலியன்-தான்யாதிபதி-மூடவக்கறுப்பனம்பலகாரன் இந்தவருஷத்துக்கு கள்ளிப்பூக்கிரந்தியும் கார்க்கோடகமேகமும் காளிகோயில் தாசிசார்தாவசிரோன்மணியாணிடதகி லுற்பத்தி இந்தவருஷத்திற்கு அதிபதிகள் பலாபலன் வச்சவன்மறந்து விட்டால் எடுத்தவன் கொடுக்கமாட்டான் ஏழைக்கடாரியைக்கண்டால்

இதுகளில் யாதாமொரு வார்த்தைகளும் எத்தனித்தியாசமாய் இருந்தபோதிலும் ஸகலமானவர்களும் க்ஷமித்துக்கொள்ளத்தக்கது.

மோழைக்காளையும்பாயும் ஆலமழை-௩-சோலைமழை - எ-பித்தம்-௩-பயித்தியம்-௰௫-சுபமங்கிலிபிரவசம்-௯-விதவைபிரவசம்-அ௯ - ஸ்ரீரங்கயாத்திரை-௩-சிவலோகயாத்திரை-எ௩-வைத்திராக யாத்திரை-௬-வைகுண்டயாத்திரை-௬௬-சுயாதீனம் -ஒருபங்கு-பராதீனம்-௰-பங்கு-சிவபூசை-ஒருபங்கு-செல்லியம்மன்பூசை-௯ -அக்கினிபாதை-௯-அவிசாரிபாதை-௫௯-இருள் என்பதுபகை பொருள்பூச்யம.

இந்தவருஷத்திய பலன்கள் மத்திமமானாலும் சுபபலனாகநடக்கும்,

அசுவனிமூதற்கந்தாயம் குதிரைசாப்பிட்டது
பரணிமூன்றுங்கந்தாயம் ஆனைமுழுங்கிவிட்டது
கார்த்திகை-உ-ங்கந்தாயம் அத்திப்பழம்திங்கப்போயிருக்கிறது
ரோகணி-௩-ங்-கந்தாயம்-பாம்புபிடிங்கிவிட்டது
மிருகசீரீடத்தை-சாரையடித்துவிட்டது
திருவாதிரையை-நாய்பிடுங்கிவிட்டது
புனர்பூசத்தை-பூனைகுடித்துவிட்டது
பூசத்தை-தீர்க்காக்காயகொத்திவிட்டது
ஆயிலியம்-புன்னைமரத்திலேறிக்கொண்டது
மகத்தை-எலிபிடித்துக்கொண்டது
பூரத்தைப் பெண்கழுகுகொத்திவிட்டது
உத்திரம் குடிசையைசுமந்துகொண்டது
அஸ்தத்தை பிராந்தடித்துவிட்டது
சித்திரையைச் சிறுத்தபுலிவிழுங்கிவிட்டது
சுவாதியை யீமொய்த்துவிட்டது
விசாகம் விளாம்பழத்தின்னப்போச்சுது
அனுஷம்-மகிழம்பூபரிக்கப்போயிருக்குது
கேட்டை-மான்வேட்டைக்குப்போயிருக்குது
மூலம்-நாய்குட்டிபோட்டிருக்குது
பூராடத்தை-குரங்குதூக்கிக்கொண்டுபோய்விட்டது
உத்திராடத்தை-கீரிப்பிள்ளைசாப்பிட்டுவிட்டது
திருவோணத்தை-வண்டுமொய்த்துக்கொண்டது
அவிட்டம்-வன்னிமரத்தின்கீழேபடுத்திருக்கிறது
சதயம்-வெட்டைக்குதிரைக்கு மருத்துவம்பார்க்கப்போச்சுது
பூரட்டாசியை-உள்ளான்கொத்திவிட்டது
உத்திரட்டாதியைக்-குகைமுழுங்கிவிட்டது
ரேவதி-பெண்யானையுடன் சம்போகத்துக்குப்போயிருக்குது

இராசிகளின்-பலாபலன்.

மேஷம்-ஆடுமேய்க்கப்போயிருக்கிறது
ரிஷபம்-பசுவைத்தேடிப்போயிருக்கிறது

மிதுனம்-தாசிவீட்டுமூலையில் தூங்குகின்றது
கடகம்-இராசாவின் கையில்பூட்டியிருக்குது
சிங்கம்-குகையிலிருக்கிறது
கன்னிகை-நோன்புநூற்கிறாள்
துலாம்-இராமன்செட்டிவீட்டு இறப்பிலேதொங்குகிறது
விருச்சிகம்-மந்திரத்திலகப்பட்டுக்கொண்டது
தனுசை-வேடன்கொண்டுபோய்விட்டான்
மகரம்-கடலிலேஒளித்துக்கொண்டது
கும்பம் குசவன்வீட்டு அடுக்குப்பானையிலிருக்கிறது
மீனத்தை-முதலைவிழுங்கிவிட்டது
ஸமஸ்தசஷபங்களானிபவந்து
ஜலத்துவாரே-முகத்துவாரே ஸதாஅனுகூலசித்திரஸ்து

பரதர்-சுவாமிகளே நம்முடைய கிரகத்திலே மாற்சாலம் கெற்பிணியாகி வியாக்ராம் பிரசவமா யிருக்குது புண்யாவாசனம் செய்துபோட்டு போகுறீர்களா.

காலகவுசிகர்-இதோவந்துவிட்டேன்

பஞ்சகவ்யமந்திரம்.

அஜாமூத்ரம்-கஜாமூத்ரம்-சுனகமூத்ரம்-தலைதலைசாகார்த்ரவம்சுகரமூத்ரஞ் சபஞ்சைதேதீர்த்ததாயகா-கார்த்ரவா மேத்யசங்காரஹயசுனகமூத்ராபிலேபனம் ஸம்மார்ச்சனப் பிரயோகேனஸர்வதாமோட்சதாயபா.

பொது-விருத்தம்.

வந்தவேதியன் வள்ளலைநோக்கிநீ
எந்தநாடுனக் கெவ்விதிவந்ததால்
இந்தமங்கையும் மதலையையும்விலை
அந்தமாய்க்கூறலானதையென்றான்.

(வ-ம்) இவ்விதமாய்வந்த பிராமணனானவர் அரிச்சந்திரமகாராஜனை நோக்கி நீ-எந்ததேசாதிபதி என்னகாரணத்தினாலே இந்தபதிவிருதாசிரோமணியான ஸ்திரீயையும் மதலைச்சொல் மாறாத பாலகனையும் தெருக்கள்தோறும் அங்காடிகூறுவதுபோல நீயேவாங்கல்லியோ நீயேவாங்கல்லியோவென்று விலைகூறுவதென்னவென்று கேட்பது காணக,

உ௩-தரு-இ-ம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரடாவுயிர்துணை-பாருமிருவனையும்-அங்காடிவிலைகூறாய்

அநுபல்லவி.

சீரடாவுனக்கிது செல்லுமடாகிர்மூடா
சேயின்மூயைப்பிரிந்து செய்யுந்தவமென்னனீ (ஆர)

டேடு

சரணங்கள்.

க, தாரணியுள்ளோர்க்கென்ன தாழ்வுவந்தாலுங்கொண்ட
கையலக்கை விடுவாருண்டோ-இந்தக்
காரணமென்னவுன்னைப் போலுள்ளவரொவருங்
கண்டுநிகைத்துமனங் கலங்கச்செய்யவந்தாநீ (ஆ)

உ, தெரிவையோவருந்தநி தேவியின்மிக்கவள்போல்
தெளிக்தகற்பிணியிற்சிறந்தாள் உந்தன்
பிரிவையெண்ணினிதமும் பேதமையடையாளோ
பிணகருவந்தசேதைப் பிரித்துச்சொல்வாயென்முன்நீ (ஆ)

ங, வையகத்தினிலிந்த மதலைக்கிணைகாணென்நீ
வாழ்ந்தநகர மேதடா-மிகத்
துய்யவனைப்போல்நீயுந் தோணுகிறாய்நாகஇந்த
துணிகரமேதுன்குலத் தொழிலுரைத்துவாநீடா (ஆ)

பொது-விருத்தம்,

வேதியனுய்வந்ததனஞ்செயனிவ்வாறு
விண்ணவரும்மண்ணவரும் வினவக்கேட்கச்
சோதிகுலமன்னனரிச்சந்த்ரன்மிக்க
சுருணனிவன்பொருள்கொடுக்கச்சுதந்தரிகி
னுதியந்தமாயிவனுக் கறியச்சொல்லி
யரிவையையமைந்தனையு மருகிசெய்ய
நீதியதாமெனநினைந்து கைகள்கூப்பி
நெறிசொல்வான்தமக்குரிய் குரிசொல்வானே,

(வ-ம்) இவ்விதமாய்வந்த பிராமணசொரூபனை அக்கினிபகவானு னவர் அரிச்சந்திரமகாராசனே உன்னுடையபூர்வோத்திரமென்ன வென்று தேவர்களுக்கும் வானவர்களுக்கும் கேட்கும்படியாகக் கேட்ட போது இவரேநமக்கு பொருள்யாவுங்கொடுத் தாதரிப்பவர் நமதுவி ருத்தாந்தம் யாவற்றும்சொல்லி இவர்களையும் அடிமைசெய்விப்போ மென்றெண்ணமுற்று கையிரண்டையுங்கட்டி அஞ்சலிபந்தனஞ்செ ய்துகொண்டு தமதுசனனகால மகுத்வககளைச் சொல்லிவருவதுகா ணக.

உச-தரு-இ-ம்-தருபார்-அட்தாளம்.

பல்லவி.

கேளும்கேளும்பூசுரா-மனக்குறைதீர்த்
தாளும்நாளுபதேவரா

அநுபல்லவி.

நீளுமயோத்தியை யாளுஞ்செங்கோற்கொண்டு
நித்யமாயரசாண்டோன் சத்யதர்மந்தைக்கொண்டு (கே)

சரணங்கள்.

௧, செக்கதிர்குலதிரா உதித்தான்முதலாகச்
சீமையெங்கட்சாளுகை சிறந்துவாழ்ந்தோமேலாகத்
திகழ்ந்தான்மறைகளுக் தெளிந்தவறுநூற்களும்
திரியும்நெறிதப்பாமற் றேடியாள்வோமென்றுரும்
புங்கவனுக்திரிசங்கு பூபனிக்திரசொற்கம்
பூண்டான்புரந்தரற்கு மவர்க்குமுண்டேதர்க்கம்
பூருவசென்மத்து சாபத்தினல்ஒரு
புண்யமறரிதீர்த்தத்தி லாடிப்பெற்றான்பெண்உரு
அக்கவ்வுருக்கொள்ள அங்கசன்கணைதாக்கி
ஐந்தறிவுங்கலக்கி அகன்றனேமனநோக்கி
அந்தவேளையில்சந்த்ர ளைசையுடனேகூட
அரிசசந்த்ரனென்றுதித்தே னவனியோர்கொண்டாட (கே)

௨, அந்தனன்முதலா சாட்சிக்கெந்தனைவைத்து
அருந்தவஞ்செய்துசொர்க்க மடைந்தானேமனைவைகைத்து
ஆண்டவனைக்கினைக் கணுவுப்பிசகில்லாமல்
அயோத்திநகர்தனக்ரசு கொண்டேன்அலலாமல்
இந்நாளிலிலருந் தவத்தோரானேனைக்கண்
டிணையடிதொழுதேத்தி யிட்டேனெவர்க்குமுண்
இனகுலத்தினிலுமக் கிணையிறைவரெவரென்
கிசைத்தாளாசிகள் னண்ணிறந்தவைனன்முன்
மந்தரமுறைதவ் ராதமதிதயந்திரன்
மகள்சந்த்ரமதிகனை மணவாளனுக்தந்தாம்
மகிழ்ந்துசெய்வோமெங்கள் மனந்தடுமாறிடாமல்
மணம்புணருவாயென்றார் மறுத்தோதிடங்கேடாமல் (கே)

  தளராதிக்கன்னியை
௩, மாதவர்கண்முனம் களித்துச்சுத்திவஞ்சியை
மாலைசூடினேன்மனக் சகியும்புருஷனுமாய்
மதனுமரதியம்போலே முன்மதனுக்கினமாய்
மருவிச்சருவியந்த காசாமிப்புதல்வனை
ஆதவன்குலத்தோர்கட் லடைந்தோமிம்முதல்வனை
அன்றுகண்டசாட்சியா அருந்தவவிசுவாமித்திரன்
ஆண்டேழிவனுககாச்சு பொன்கேட்டார்விசித்திரன்
ஆணைமேற்கவண்போயளவு புண்ணியவானுககளித்தோம்
பூதலம்யாவுமப் போனர்மனங்களித்தோம்
பொக்கிஷந்தனில்வைத்துப் யாடநாம்புறப்பட்டோம்
பூங்காவனத்தினைவேட்டை புறக்கடக்கவுட்பட்டோம் (கே)
பூவையிருவரால்

ச, பெண்களிருவர்தம்மைப் பேய்களினுருவாக்கிய
பிடியானைபோல்விட வவர்களெந்தனைநோக்கி
பெரும்புவியாண்டிடும் பூச்சகிரக்குடைவைத்தா
பெறுவேமல்லாவிடிற் பிணங்கவாபெரும்மத்தா
கண்களுநகமெதிரிந்த நெரிவிளம்பியபொல்லாக்
காரிமையமாயனுங் கடுக்கமனதிற்புல்லா
கருணைமாதவராதேப் புலைமாதனைப்புணரக்
கடவாயென்றெனைச்சேரக் கருதும்நெறியுணர
எண்களனைத்துமணைத் தேத்தியடைக்கலமாய்
இட்டபொருட்களைத்தா வெனவேயடைக்கலமாய்
எழுந்தவாக்குறும்பொரு ளெல்லாமளித்தகலும்
இயற்கைகண்டகலாதே யிருப்பாயென்றார்முக்காலும் (கே)

ரு, அன்றுன்கையிற்றந்த பொருளனைத்தும்தந்து
அகல்வாயில்லையென் றறைந்தார்துடர்ந்துவந்து
அவதியாரெட்டிகான் அதற்கிடுமனம்பொறும்
அருந்தவருனைவார ஞாசிபோய்த்தனம்வரும்
என்றடிபணிந்தெழுந் தேன்குடும்பமுழுதும்
பேய்காடிபுலிமா னிவையால்மிகவழுதும்
எழுமட்டைசருட்டைகட் டுபவுதேள்அறவுகள்
இடிக்கம்பொறுக்கமனம் வெங்கமழைமாரிகள்
சென்றடிகள்சருக்கிச் சிந்தைநைந்துபொறுக்கா
சிறந்தநதிகள்நீந்திச் சேரக்கரையொருக்காற்
செழித்தகாட்டுத்தீயெமை சிறந்ததோட்கள்நீய்க்க
செய்வளிகள்கற்புச் சிரித்துக்கொண்டதைக்காக்க (கே)

சா, வருத்தமெல்லாமகன்று வந்தோமிவ்வாரணாசி
வந்ததாகள்பேச்சால் வதைத்தானேமனம்போசி
வகைசொல்லவெனதுவாய் வாராதிருந்தேன்கொண்ட
வனிதையும்மகனுமிவ் வையகந்தன்னிற்கண்ட
திருத்தமுள்ளவர்க்கெமை விலைகூறிடாதிந்தத்
தினர்கைக்கடனென்றுந் தீராதென்றிட அந்தத்
தெரிவைவாய்மொழியேனற் றிருவாய்மொழியென்றெண்ணி
தெளிந்தேன்மனதிற்கடன் தீர்க்கும்வழியைநண்ணி
பெருத்தகாசிநகரில் தெருத்தெருவாய்விலை
பேசிகூறினேனெமைப் பின்பற்றுவோரிலை
பெண்டுபிள்ளையிவர்கள் ரெண்டுபேரையுங்கொண்டு
பெருங்கடன்தீர்ப்போர்க்குப் பெரும்புகழும்உண்டு (கே)

(வ-ம்) திரிசங்குவானவர் ஒருகாலத்தில் அதிகாமியென்னும் ரிஷியாச்சிரமத்திற் சென்று ஸ்ரீ அரியினாலுற்பத்தியான தடாகத்தில்ஸ்நானஞ்செய்தபோது பெண்வடிவமுற்று சந்திரனையணைந்து அரிச்சந்திரனைப்பெற்று அதிகாமிரிஷிகோபித்து அவராலே நிஷ்காமியென்னுந் தீர்த்தத்திலாடி மறுபடியும் புருஷசென்மமடைந்து சொர்க்கத்துக்கெழுந்தருளினாரென்றும் அரிசசந்திரனை தேவகன்னிகையால் வளர்க்கப்பட்டு சிலகாலக்குப்பின்பு மந்திரிகளாலே அரசுபெற்று செங்கோலாண்டாரென்றும் பெரியோர்களால் கேழ்வியுற்றது,

பொது-விருத்தம்,

வேந்தன்மனையன்புட னிவ்வாறுகூற
விறைவியவக்கினிபகவா னிருவருக்கும்
ஈந்தபொருட்களைக் கவரவாழ்விடென்றான்
இசைந்ததரகனைக் கூவியிவர்க்கியென்றான்
காந்தன்பலர்க்கையமைந்தான் செம்புக்காசுக்
காசளவுக்கலக்கமறத் தருவேனென்றான்
காந்தமுடனவண்மீந் தகன்றான் தூதன்
கருவினுள்சந்திரமதி பொருமினாளே. (உகூ)

(வ-ம்) அரிச்சந்திரமகாராஜ னிப்படியாகச் சொன்னபோது அன்புடனிருந்துகொண்ட அக்கினிபகவானான பிராமணன் இவ்விருவருக்குங்கொடுக்கப்பட்ட துகைகளை எடுத்துக்கொண்டுபோக ஆளெங்கேயென்றபோது அண்டையிலிருந்த நட்சத்திரையனையழைத்து இவர்கையிலேகொடுத்தனுப்புமென்ன ஒருசெம்புகாசளவும் பாக்கியில்லாமல் உமதுகையில்தருகிறேன் இனிஅரிச்சந்திரனைக் கேட்கவேண்டாமென்று பிராமணன் கையடித்துக்கொடுக்க நட்சத்திரையன்உடனே துடராமுறிகொடுத்து மறைந்தான் இப்பால்சந்திரமதி அரசனைப்பிரியமனம்ஒவ்வாமல் சோறுவதுகாண்க.

உஉ-தரு-இ-ட்-உசேனி -அடதாளசாப்பு,

பல்லவி.

இனியென்று கண்டுகொள்வேன்-பிராணேசானை

அநுபல்லவி.

இனியென்றுகாண்பேன்
இரதிகாந்தன்போருக்
கெந்தநாளாகிலுங்
எற்றியிணையடி
இனிவுதவாதே
மிகழ்ந்திடத்தோதே
ரீசா-விசுவேசா ஜகதீசா
தனியேயிருவரும்
இசைந்தபோதல்லாது
தநததுண்டோவிடை
போற்றிக்களித்திட
எவர்கட்கு
அயோத்தியாப
பிராணேசாஉவம(இனி)

சரணங்கள்.

௧. முந்தநாளில்வெகு சொந்தமுடன்வந்த
முனிவர்களறியாரோ குடியாரோ
முனைவனேயிவை யன்னவசொன்னிடா
மூடிமந்திரமாச்சு நாடுந்தந்திரம்போச்சு
மோசமேநாசம் மனம்போரா
மோகமே பாசம்-இனியதை
முனிந்தேன்மனம் கனிந்தேன்பதம்
பணிந்தேன்முடி யணிந்தேனுமை(இனி)

௨. எக்கவலைகளும் நீங்கும்வனம்விட்டு
இக்கவலைக்கிட மில்லையின்றுதொட்டு
இறைவனெழுது மெழுத்துக்கொருநாளும்
இழிவுண்டோஅதைநினைத் திருப்போமினிநாளும்
எழில்விசுவாமித்திரன் வினோதங்கள்.
இயற்றும்விசித்ரன் அவருநம்நாம்
ஈடேறிட நாடேறினர்
கேடேறிடில் வீடேறிடோம்(இனி

௩. நாமுள்ளமட்டுக்கும் ஞானவிவேகமும்
நல்லதருமகடத்தையுஞ் சத்யமும்
நவிலுவோமாகிலதே கதிர்குலதர்மம்
நாக்குத்தவறிலது நரகிடைகன்மம்
நம்மோடுநாமே இனியாரும்
நாளும்வீண்போமோ போலேநடக்
தாலேமுன்னைப் போலேஉமை(இனி)

பொது-விருத்தம்.

தீவினையொன்றில்லாத பதிகயேந்த்ரன்
திருந்தியநற்றவமகளின் னெறிவிளம்பிப்
பாவியெனக்கேகவிடை தாருமென்றன்
பார்த்திவன்றன் மனம்பதறிப்பாதவித்து
எவினைவினைமூலிதுவோ ஆணும்பெண்ணும்
இமைந்திடும்போதனைநத் தடுக்கவிசைத்திட்டானே
பாவினைவந்துற்றதிது வேனோவென்று
மயங்குவானறிவழிந்து தயங்குவானே. (௨௪)

(வ-ம) அகோகேளுங்கள் ஞானசிரோமணிகளே அந்தசந்திரமதி யானவளிப்படிச்சொல்லி மகாபாவியானஎனக்கு உத்திரவுகொடுமென்றபோது அந்தஅரிச்சந்திரனானவன் மதிகலங்கித்தத்தளித்து இது கெற்பகோளையின்கையிலே யிருக்கும்போதுகொடுத்த கட்டளையோ

எந்தசெந்துவின் கலவிப்புணர்ச்சியைக் கலைசதேனே இப்படிப்பட்ட
கொடும்வினை வினையக்காரணமென்னவென்று பித்தர்களியற்கையு
ற்று தயங்குவதுகாண்க.

௨௯-தரு-இ-ம்-காபி-அடதாளம்.

பல்லவி.

நாயகியே-உனைப்பிரிந்து-நான்சகியேன்

அநுபல்லவி.

மாயவனுந்திருமகளைமார்பிலேட்டு-மகிழ்ந்தயிந்திந்தமானிலத்து
மகிழ்வேனே விதியயனை
யிசழ்வேனே தேவர்களை
புகழ்வேனே திராவினை
திகழ்வேனே நாயகியே(உனைப்)

சரணங்கள்.

௧. மதிசோருதேஉனைத்தடா மலங்கோருதே
கதிவேறில்லையேயென்னைக் சருதிவருவோர்சந்திர
மதியைவிலக்கி மாமுனிருணைந்திர்த்தவன்
மாபாவி மானிலத்திவன்
தீபாவி யெளிர்க்கலக்கு
யெமதாவி அக்குறைதீர்ப்ப
தார்தேவி நாயகியே(உனைப்)
ஜொக்கிதயமுய்வேன்
௨. என்செய்வேனென்றே தன்னையும்பிரிந்திந்த
உன்னையுந்தவமகன் வதிதனிலிருந்து
ஒப்பில்லாசம்சார துன்பத்துக்கிடா
ஒருப்பேனே தனித்திருக்கப்
யிருப்பேனே மூனிக்கிறு
பொருப்பேனே நாயகியே (உனைப்)
குருப்பேனே இஞ்சுகமே
௩. அஞ்சுகமேமதிக்குகந்த பஞ்சுபோற்கண்படருதே
நெஞ்சுதடுமாறுதே ஈரஜென்மந்துறப்பேனே
நஞ்சுண்டிருப்பேனே பதிவிருதா
நாயகியே கொங்தோர்க்கிஷ்ட
ஸாயகியே யுரசிம்மகவி
த்தாயகியே நாயகியே(உனைப்)
ஜாயகியே

பொதுவிருத்தம்.

புஞ்சவனமணதிளகிப் பொறுமிவிம்மி
பூவைதனைப்பிரிய வெண்ணைப்பூண்டிடாமல்

அங்கமெங்குஞ்சோர்ந்த வதியால்வெதும்பி
யருந்திணைப்பூண்டினை மெதித்தோரலைதல்போல
எங்கணுமொன்றாகி மதிசோர்வடைந்து
ஏக்கமுற்றுமொழிகுளறி யிளகும்போது
அங்கசனங்கணைதூவ யிருவர்மேலும்
அலம்புவார்மனமுருகிப் புலம்புவாரே. (உரு)

(வ-ம்) இவ்விதமாய் இராசன்மனஞ்சோர்ந்து பொறுமிக்கொண்டு மனையாளைப்பிரிய மனமில்லாமல் தேகமுழுவதுங்கலிந்து வெப்பமடைந்து திசைப்பூண்டை மிதித்தோர்களலைவதுபோல அலைந்துகண்சுழ்ச்சியுற்று வாய்வார்த்தை குளறிப்போய் பரதவிக்கும்போது விசுவாமித்திரருடைய மாய்கையினாலே மன்மதன் இருவர்மேலும் மலர் அம்புகளினாலெய்ய விரகதாபம்பொறுக்கவொண்ணாமல் இருவரும்புலம்புவதுகாண்க.

உஎ-வர்ணம்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

பல்லவி;

சந்திரமதி - சொல்.

ஈசனேயென்னசெய்குவேன் உனைப்பிரிந்து
என்னமாய்மனமேங்குவேன் பிராணேசாஇனி (என்ன)

அநுபல்லவி.

மாசில்லாமன்னவுன்னை மணம்புரிந்ததுமுதல்
ஏசில்லாமலேநம்ப யிருவோரும்வாழ்ந்திருந்தோம்
ஆசையுடன்மலரணையி லனுதினமும்மதனுமாதியாய்
கூசிடாமலேமருவிக் கொஞ்சியிருந்தோம்
கோசிகன்மாய்கையினா லிக்காசினியில்வந்தோம்
பேசிடாதினியிருக்கப் பிரமன்விதித்தானேஐயோ
நேசமறவாதிருந்து நித்யவயோத்தியாளும் (ஈச)

இராசன்சொல்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

பல்லவி

காதல்தந்தகாரிகையே உனைப்பிரியக்
காலம்வந்துதேயென்செய்வேன் என்றுநினையாக் (காலம்)

அநுபல்லவி.

கோதில்லாமனத்தாளே குளிர்ந்தசந்திரமதியாளே
வேதனையிருவர்க்கும் விதித்தவிதியிதாச்சே
ஆதாவாயிருந்தவனியில் அருமைபெருமையுடனே
ஆதவன்குலத்தலைவர்க் கதிபனெனவே
மாதமும்மாரிபெய்துய்ய மாநிலமாண்டோம்
சூதாசத்தமாமுனிசெய் சொந்தரவினாலேயிந்த
சோதகத்துக்குள்ளாகினேம் கோதையேதாமென்னசெய்வோம்

141

இராசன்சொல்விருத்தம்-பிலகரி.

கருங்கண்ணாசிறம்போன்றவானிலவுபரந்தெரிக்கவாடைவீச
வெவ்வண்ணநெடுங்காலமினிதிருந்து வாடிடவிக்கானநேமேவன்
செவ்வண்ணக்கைகையாளை திருமகள்மெய்க்குறையாளைச்சேர்ந்துநீங்கி
யிவ்வண்ணப்படுவாயென்றிளையவனுந் தலையோட்டிலெழுதினனே;

சந்திரமதிசொல்விருத்தம்-கௌளிபந்து

அதியோர்முதிர்ந்தமறையோரெவர்க்கும் துன்பங்கள்செய்தமதியேன்
எதியோர்கள்புவிமெளனியோரெவர்க்கு மிகல்செய்வதென்னமதியேன்
பதியோருபாக்கதமிநியோரெவர்க்கும் பழிபாதகஞ்செய்தறியேன்
கதியாமுன்சென்மவிதியோவென்றுசைக் கணவாவிதென்கொலறியேன்

இராசன்சொல்விருத்தம்-சாவேரி

ஒப்பரியதிருமாதுக்கொப்பவளைத் தனியேயிவ்வூரில்விட்டு
செப்பரியமன்மதனுக்கிணையான மைந்தனையுஞ்செயலைநீக்கி
தப்பரியவடர்வனமும்வண்புனமும் தழற்பரவுந்தனிகடந்து
இப்பெரியபாடுபடவிதியவனுந்தலையோட்டி லெழுதினனே; உஅ

சந்திரமதிசொல்விருத்தம்-சாவேரி

செப்பாருங்குவிமுலையாரெல்லோருங்கணவனுடன்சேர்ந்துவாழ்க
ஒப்பாருமில்லாத வென்கணவனெனைச்சேர்ந்து உறவாடாமல்
மைப்பாரும்விழியாளுக் மலர்க்கணையோன்செய்துயரால் மனதுவாடி
இப்பாடுபடுவாயென் றிறையவனுந்தலையோட்டி லெழுதினனே

உஅ-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்;

பல்லவி;

அரிச்சந்திரன்

உன்னைப்பிரியலானனே - வண்ணமயிலே
ஒருவராதரவு காணனே.

அநுபல்லவி.

இன்னகர்தன்னில்வந்து தன்னந்தனியனாகி
முன்னுனில்முனிவனுக் கென்னபிழைசெய்தேனோ
அன்னாகவடையின்றுனே சின்னஞ்சிறுவயதில் - உன்

சந்திரமதி.

சரணங்கள்,

விதிதனைக்குறியோமே-முனிவன்செய்யுஞ்-சதிதனையறியோமே
பதிமுழுதும்பறித்துப் படங்கஞ்செய்தானேஐயோ
கொதிக்குமெழுகினிற் குதிக்கவேபதைத்
பதைக்குதேமனம் கொதிக்குதென்செய்வேன் - விதி

இராசன்

துமந்தனைப்பிரியலாச்சே-உந்தனுடனே-மறையவரழைக்கலாச்சே
சந்திரமதியேஉன் சுந்தரமுகமினி
யெந்தகாலிற்காண்டு சிந்தையகிழ்வதென்று
யெந்தனுளங்குழைந்து நொந்துபதைக்குதையோ - உன்

சந்திரமதி,

பதவியைக்குலைத்தாரோ-விசுவாமித்திர-பரிந்தகஞ்செய்தாரோ
இதவஞ்சனையாய்வந்து இன்னமென்னசெய்வாரோ
எதுமறியோமவர் சூதுகளாலேமெத்த
வாதுசெய்திடப்பொல்லா யேனுகரங்களாச்சு - விதி

இராசன்சொல்-கொச்சகம்,

பாவியெனைக்கைப்பிடித்து பாரிலெவரும்பழிக்க
ஆவியனல்மெழுகா யுருகுதயரிலாழ்ந்தினையே
தாவிலந்தமாமுனிவன் தனித்தனியேபிரிந்துவிடக்
கூவியழைத்தன்றனில் கொடுமைமிகச்செய்தேனே

சந்திரமதியும்-இராசனும்சொல்-விருத்தம்

கண்ணிகள்

ராகம்-தரு-இ-ம்-காதனாமககிரிலய-கிரிபுடை-தாளம்,

சந்திரமதி-ஐயோகாளிந்த அவதிக்கோபெண்பிறந்தேன்
வையகந்தனையாளு மதியன்வயற்றினில்
தய்யகாசிநகரில் தனையிழந்தவிளிபோல்
யெய்யும்மன்மதன்கணைக்கிறையாயுனைப்பிரிந்து ஐயை

இராசன்-வேதியன்விற்றானே விமலர்களருள்தானே
நீதிகப்பினதேனே நிலமன்னர்குறைதானே
கோதிலாக்கலைகளைக் கூடிபிரிந்தமான்போல்
ஆதித்தன்குலத்தோர்கட் கரசியைநான்பிரிய வேதி

சந்திரமதி-கன்னியாகவென்னைக்கணகவளையில்வைத்து
மின்னிடவலங்கரித்துமிகவாசீர்வதித்து
பொன்னாலும்வெள்ளியாலும்பூமாரிபொழிந்திட்
டன்னிதமணம்புணர்ந்துஉளமகிழ்ந்திருந்தேனே தன்

இராசன்-வாலெபவயதினில்வசிஷ்டர்தெளமியருடன்
நாலுதேசத்தோர்கூடிநாமிருவருங்களிக்கப்
பாலிகையைபூசித்துபார்வதிபதத்துதித்து
கோலங்கொண்டபோதெந்த கொடுமைகள்விளைந்ததோ - வாலி

பொது-விருத்தம்

காரவேபுன்கணைலனுமிகநெறிவெதும்பிக்
கண்களிநீருகியுடன்கலங்கலாடிப்
போரதவிணிதென்றினைக்கிப்பொருள்கொடுத்த
புண்ணியர்வீட்டைகயிடைபுகல்வீரென்றுன்

ஆதவன்றன்குலம்விளங்கிளனைப்பிரிந்து
அகன்றிடுநாள்வந்ததோவென்னையா வென்றான்
பாதகமென்செய்தேனோமகனேயென்று
பதறினான்மன்னவனுங்கதறினானே ௬௰

(வ-ம்) அகோகேளுங்கள் மன்னமன்னவர்களே ஸதியும்புருஷனுமா யிப்படி வேதனையுற்றுக் கண்ணீ ருராய்ப்பெருக மனங்கலங்கிவாடி. இனிப்போவதே நலமென்றுணர்ந்து ருணவியோசனஞ்செய்தருளியபுண்ணியபுருஷரே எனக்கு உத்தாரந்தருவீரென்றான் ஒப்செந்தவத்திற் சிறந்த தந்தையே என்னை இனைபிரியுநாளிதுவோவென்று லோகிதாசனுரைத்தான் அந்தருணத்தில் சண்மாந்திரத்தில் என்னபாவஞ்செய்தேனோவென்று அரிச்சந்திரன் லோகிதகுமாரனைத்தழுவி உச்சிமுகந்து மகாவிசனத்துடனே பிரலாபிப்பதுகாண்க.

௬௰-தரு-இ-ம்-தன்னியாசி-திரிபுடைதாளம்.

பல்லவி,

இவ்விதிவைவெல்லவழியில்லையே நானென்னசெய்வேன்
கல்வியுமழுவுமேந்தும் நாதனேவிசுவநாதனே

அநுபல்லவி

கல்வியமைமைந்தன்கழுத்தைக் கட்டிவிம்மிக்கதறலாச்சே
எவ்விதமாயினியுய்வேன் ஈசனேகைலைவாசனே (இவ்வி)

சரணங்கள்.

௧. மைந்தனொருநாளும்அயோத்தி மாநகராண்டிடும்செங்கோல்
உந்தனுக்கென்றென்மனதில் உறுதிகொண்டிருந்தேனேயோ
வந்தனஞ்செய்யப்போய்வயிர் வசிக்கிடந்தேடிக்கொண்டேனே
சிந்தனைசெய்வதுவாதே செல்வனேசத்யந்தப்புமே (இவ)

௨, அருந்தவக்கௌசிகர்பொல்லா அவதிபிட்டதால்கொந்து
புரந்தன்போலுனையுங்கொண்ட பூவையாளுதன்றனையும்
பொருந்தவன்தபூசுரர்க்கு பொருளளிக்குமதற்கீடாய்
திருந்தபோற்றியான்கொடுக்கத் தீவினைவந்துதோஐயோ (இவ்)

௩, யோசித்தரியாமலிந்த வழித்தீவினைக்குள்ளானேன்
மாசில்லாசத்யகீர்த்தியை மதியாமல்மோசம்போனேன்
ஆசிகூறியுன்னைமண வளையுடன்வளர்த்துபிரித்தங்
காசிநகர்விற்றுவந்து கருணைமறையோர்க்கொப்பித்து (இவ்)

பொது-விருத்தம்.

தான்னையுந்தாயையுந்தாங்குமிடுக்கமாற
எடுத்தகூலையிறக்கினையோவென்றமைந்தன்
தன்னையுமின்புறத்தழுவியுச்சிமோந்து
தவிரவிடவோர்வழியில்லையோதரணிமீது

பிள்ளையுமெவ்விடசாமம்வருமோவெந்தன்
பேதைமதியறிவிலனென்றிரங்கும்போது
அன்னையுமைந்தனையுங்கைக்கொண்டேன்றீ
அழைத்திட்டான்கருணைபிதக்கழைத்திட்டானே (௩.௩)

(ல.ம்) அநேகோகேளுங்கள் உத்தமர்களே லோகித குமாரனானவன் ஒப் என் ஆதரவுள்ளபிதாவே என்னையும் என்தாயையும் இரட்சிக்குமப் டியான தலைச்சுமையை இறக்கினீரோவென்ற புத்திரனைதழுவியுச்சிமு கந்து இந்தவிதிமை தவிழ்க்க வேறொத்த வகையுமில்லையே இந்தப்பூமியி லே இன்னம் என்னஅவிதிவருமோவென்று உருகும்போது தாயையும் பிள்ளையையும் அழைமகொண்ட காலகவுசிகர் காலகரணஞ்செய்யாமல் என்மனைக்கெழுந்து வாருமென்ன் றழைக்கும்போது அரிச்சந்திரமகா ராஜன் விடைகொடுத்தனுப்புவதாவன.

இராசனும்-சந்திரமதியும்சொல்-க.க-தரு-அடாணா-அடதாளம்

கண்ணிகள்

இராசன்-பெண்ணேநீபோய்வருவாய்-எனதுமனை
கண்ணே பெண்மறவாய்
தன்னேர்மயிலேசந்திர தயன்செந்தலக்குயிலே
என்றுதென்னனியுன்மனம் புண்ணுறாமலெனது (பெபு

௧. (சந்) போய்வாரோமென்னனவாபூசாருடன்
புசழ்ளவென்றனைவா
ஆய்ந்துபார்க்கிலர்த அயன்விதிதவருமோ
மாய்ந்துவிடாமல்சத்யமந்த்ரம்செபித்துக்காரும் (போ)

௨. (இ) மனதயவருணைக்கிநீ மறுமொழியுரைக்காமல்
மதிமையிருந்தசத்தியமந்திரத்தைதவிடாமல்
தனதநேயாருப்லோகிதாசன்தயங்கிடாமல்
மூறைதவறியன்றுடர்முனிமைபக்கண்டருகாமல் (பெபு

௩. (சந்) நாட்டெக்குடிகளையும்நகரிச்செனங்களையும்
கேட்டுக்கொண்டபோத்திலையகெடிமுழக்குமுனிவன்
வாட்டும்வண்மையுணர்ந்துவையவளமறிந்து
பாட்டுக்கிடமில்லாமல்பராஸ்தளத்தார்போலிருக்கும் (போ)

பொதுவிருத்தம்

குற்புடையசந்திரமதிகையைப்பற்றி
காலகௌசிகனென்னுமந்தணவிழுக்கத்
தற்பனைகண்டங்கம்நடுநிக்கவண்ட
தராசரமும்நசிக்கியகமோதிக்கத்தெய்வ

கற்பனோயாவிடிவிழுந்தமராமரம்போல்
காவலன்வீழ்ந்தழுதும் கலங்கமந்திரி
விற்பனமாய்த்தேர்ந்தையிருகையாலேந்தி
விதினன்மதிசிலதுகூறினனே. ௯௨

(வ-ம்) சந்திரமதியையும் லோகிதகுமாரனையும் அடிமைகொண்ட காலகௌசிகன்கைகளைப்பற்றி யழைத்துக்கொண்டு போகும்போது அண்டசராசரங்களுநடுங்க அரிச்சந்திரன் நடுநடுங்கிக் கிடுகிடுத்து தெய்வச்செயலினு லிடிவிழுந்த மராமரம்போல் அலறிக்கொண்டுகீழேவிழுந்த அரிச்சந்திரனை சத்தியகீர்த்தியான மந்திரியானவன் தேற்றுவதுகாண்க.

௯௨-தரு-இ-ம்சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி

மன்னனேமனம்நொந்து வாடாதென் சகிப்பாயே மன்ன

அநுபல்லவி

சின்னஞ்சிறுவன்செங்கோலும் சேயுந்தாயுந்தீமையுற்
முன்னாளிப்போலாறு முறைநலமுந்தானுவாய்
மோ-டு-டிசஞ்செய்த முனிவனுக்கிதுசெல்லு
மோ-டு-அகமுர்வாம் மூவர்மனமறியுமோ
முதியநீவழிதெரி மொழிமாறிபழிகொரி
முன்னுனிறசெய்திவினை தன்னுவிதகதிவினை
மூன்மனத்தாளலாமோ மீளவுலகாளநாமே(மன்)

சரணங்கள்

௧. திருவருள்நமைச்சேரத் திருந்தீவினையாவும்
திரும்பவருவாள்தேவி திகைத்தோடுவாள்மூதேவி
விரும்பிவந்தமாமுனி வெறும்பிணநுகன்னி
வேடு-வதநெறி விரும்பியேபிகர்னம்
வே-ஏ-ஏ-ஏ-ஏ-சாறி வேளாமேவலையறிந்து
விரிமலர்சொரிந்துநற் சரிதைகிரிகைசெயும்
அருந்தவத்தினைவிட்டு இருந்தபதவிகெட்டு
அண்டர்களிறகண்டவர்கள் அண்டரீகல்கொண்டதுன்ன-மன்னு

௨. கோலாண்டகாளிற்கண்ட கொடுங்களுவின்பயனை
நாலாவிதமுங்கண்டு நன்மனதிலருண்டு
கூறுங்காலமறிந்து கருத்திலவையுணர்ந்து
கா-ஆ-ஆதலற்று எனையழைத்தநீயொருக்
கா-அ-ஆமனஞ்சலித்து மிகவுஞ்சயமுற்ற
றிது வென்புதுவைவிய னதுமனமதுபிர
என்றும்நினைந்திடாத நின்றுவஞ்செழிதுமற
தென்னனரியதின்மையுற நன்னமனத்தெண்ணமெல்லாந்-மன்

௩. வாழ்வுவந்தகாலினில் — வாசவன்போல்வாழ்ந்தோம்
தாழ்வுவந்தவேளையில் — தளர்வாரோதனைமீது
ஊழ்வினையைவிலக்க — ஒருவராலுமாகுமோ
ஓ-ஓ-ஓ,மன்னவா — ஊக்கந்தன்னையொழிப்பாரு
ரீ-ரீ-ரீ-தபனிஸ-ரிகமப-தனிதப
ரீ-ரீ-ரிகமகரி-ரிதபம-நிதபனி
ரிஸகரி-கரிரிஷ-ரிதபனி-னிதபம
ரிககாம்மா-னிஸஸ-ஸ ரிததாப-நிநிததப — மன்னு.
௪. யோ-ஓ-ஓ-முன்னவா — உலகாளுமவர்கட்கு
வாழ்வினில்-தாழ்வுறும் — தாழ்வினில்-வாழ்வுறும்
சூழ்வினையையழித்து — [பாழ்வினையையொழித்து
பத்தியுள்ளசத்தியமே — நித்திலமாம்வெத்திதரும்-மன்

பொது-விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி இந்தவண்ணம்
மன்னவனைத்தாங்கியவன் மனதைத்தேற்றி
சந்திரசூரியர் முதலோர்க்கிடுக்கமுற்றுச்
சகிக்கமுடியாதவனேகர்சகலமான
தந்திரமந்திர சமாதிகளினாலே
தாரணிபாகாயமதைத் தளராதாளச்
சுந்திரனேயகீதுணர்ந்து சுகிப்பீரென்னச்
சோறுவான்மறுதளித்துக்கூறுவானே (௩௩)

(வ-ம்) இந்தப்பிரகாரம் இராசனை அன்பாயாதரித்து மனந்தேற்றமுறச்செய்து தேவதேவர்களுக்கும் சகிக்கமுடியாத கஷ்டகாலங்கள் வந்ததாக நாம் அனேகபுராண இதிகாசங்களிற் கேழ்விப்பட்டதில்லையோ அவைகளை மனதிலுணர்ந்து சுகமாயிருமென்ன தனது தேகத்திலேபாதி தேகம் பெண்சாதியினதாக வேதசாஸ்திரங்கள் முறையிடுகின்றதென்று மந்திரிசொன்னவார்த்தைககு மாறுத்தரமாக அரிச்சந்திரன் சொல்லுவதுகாண்க

௩௩-திபதை-தரு-இ-ம்-பிலகரி-அடதாளம்

கண்ணிகள்

அரி-கனவிலுமறவாத கண்மணியைப்பிரிந்தேன்-மந்திரி-எந்தன்
நினைவிலுமறவாத சேரிழையையிழந்தேன்மந்திரி
மந்தி-வருவ்வினைவந்ததானால் வருத்தமொழியலாமோமன்னா-அந்தத்
திருவருளிதுவானால் தீரும்வகையில்தீரும் — மன்னா
அரி-சேரமில்லாதிந்த சீர்மையறிகிலேனே — மந்திரி-இப்போது
தாரம்பிரிந்திடவிதிதான்விதித்ததேனோ — மந்திரி

மந்தி-ஆரும்பட்டாதேவருங்கடன்பட்டோமே மன்னா-என்னம்
சேருங்கதியினில் சேர்க்கத்தெய்வமோதுணை மன்னா
அரி-பாலும்நீரும்போலென்றன் பாரியாளுடன்வாழ்ந்தேன்மந்திரி - அந்
தச்-சேயின்விழியாளைச் சிந்திப்பதினிநேரோ மந்திரி
மந்தி-சனியன்றுடர்ந்தாலந்தச்சனியை அயலாக்குண்டோமன்னா என்றுந்
தனியனைத்தொழுதிந்த தலந்தனுற்றலஞ்செய்வோ - மன்னா
அரி-மைந்தன்லோகிதன்முகம் மறந்தொறுவதென்செய்வேன் - மந்திரி
கொண்டசந்திரமதிபோலென்முன் சத்திக்கசகித்திலேன் - மந்திரி
மந்தி-உத்தமாஉமக்கிந்தயோசனை யினிதாமோமன்னா-உந்தன்
புத்திதனிலெண்ணினுல் புகழ்சத்யம்பொய்யாதோ மன்னா

பொது-விருத்தம்

பட்சமதிலனுவளவும் மறவாமந்திரி
பார்த்திபனைமனந் தேற்றிப்பரிவுகூறி
லெட்சமதுபொன்றரினு மித்தலத்தை
லேசிலடையோமின்று லபித்ததையே
இட்சணமேசிவ காசிவிசுவநாதன்
இருந்தருளாலயம்வருவோமங்கே
நட்சணையுண்டெனப்புகல மனங்களித்து
சேர்ந்திட்டாராலயத்துட் சேர்ந்திட்டாரே ௫௪

(வ-ம்) இவ்விதமாயுரைத்த அரிச்சந்திரமகாராஜனைத்தேற்றி அநேக விதமான சமாதானஞ்சொல்லி நாம் லெட்சோப லெட்சம்பொன் தந்த போதிலும் இந்த காசிக்ஷேத்திரத்தை லேசமாத்திரத்தி லடையோமே நம்முடைய பூர்வஜென்ம புண்ணியவசத்தினாலே லபித்தது இனிமேல் நாம் ஸ்ரீகாசிவிசுவநாத ராலயத்திற்குட்சென்று பிரதட்சண நமஸ்காரஞ்செய்வோம் வாருமென்றழைத்தபோது மனமகிழ்ந்து ஸ்ரீகாசிவிசுவநாதரது கோயிலுக்குட்சென்று பலகாலுமுள்ள விதங்களைமறந்து சுவாமியைத்தோத்தரிப்பதுகாண்க

௫௪-திபதை-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்

கண்ணிகள்

௧. சிவகாசிவிசுவநாதா-இனியுந்தன் சீர்பாதமேகெதிகா
பவகடலொழிக்கும்பாதா எளியோனைப் பாதுகாத்தாலொன்றுநா
தவசிகளானேமே எமையென்றுந் தற்காத்தருளவேணுமே
அவனியிற்புகழ்காணுமேகனவிலும் அஸ்தமறியவேணுமே
௨. முனிவன்குறைதவிர்த்தோம்உந்தன்பாத முத்திவழிக்கடுத்தோம்
துனிவழிவரத்தொடுத்தோம்புகரவன் தார்பார்யந்தனைத்தடுத்தோம்

பனிமலர்ச்செஞ்சடையா-உமையொரு பாகந்தனிலுடையா
இனியவெள்ளைவிடையா-இடைவிடா திலகுமலகைப்படையா
௩, பார்க்கவன்குலஞ்செழிக்க அஸ்தியம்பகர்வதென்றுமொழிக்க
மூர்க்கமதியழிக்கக்கிருபைசெய்வாய் முதுமறைநீர்க்கொழிக்க
போர்க்கம்முனிகூடாமல் இனியொருபுனிதரும் மணம்வாடாமல்
ஊக்கவழிநாடாமல் அருள்புரிந் தேலுவாயிடைவிடாமல்
௪, சங்கராகங்காதரா தேவதேவா ஸர்வசீவதயாபரா
அங்கஜத்ரிபுரகா சிவசிவா அருட்பார்வதிமனோகரா
பொங்கரவபூஷணா நீணையடி. போற்றுமெயமதூஷணா
பங்கஜமுறபாஷணா உனைப்பாடும் பக்தஜனபோஷணா

பொது - விருத்தம்.

ஆலமுண்டகண்டகண்ட நுதலழலாலுற்ற
  வையனடிமைகளது செங்கைகள்பற்றிச்
சாலமனக்களிப்புடனே வருகும்போது
  சதாசிவத்தின்பெருமைதனைச் சாற்றிகொண்டு
சிலமுளார்நமக்கிவர்களென்னவேலை
  செயத்தகுமென்றகத்தினிடைசெருக்காலே
கோலமுளகாலகண்டி குணமதாக
  கூடிவாள்சபையில்வந்துநாடிவாளே கூ

(வ-ம்.) நஞ்சுண்டேசருடைய நெற்றிக்கண்ணிருந்தெழுந்த காலகௌசுகனுனவர் தான் அடிமைகொண்ட தாயையும் பிள்ளையையுங்கையில்பிடித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும்போது இவர்களைநாயென்னமாய் ஊழியஞ்செய்யச்சொல்வதென்று ஐயுறவுடன் அகத்தைநோக்கிவருகிறதருணத்தில் காலகண்டியம்மாள் சபையைநோக்கிவருகிறவிதநங்காண்க

கூ௫-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி,

எண்டிசையோரும்புகழ்கொண்டவனெனுங்கால
கண்டிசபைக்கிவந்தாளே

அநுபல்லவி

கண்டித்துக்கனவனுக் தண்டித்துருக்கியேசும்
காலத்திணிலுமிகக் கடுகடுத்திடப்பேசும்-எண்டி

சரணங்கள்

௧. காதிற்செம்பொன்னோலைக் குடைக்கடுக்கன்பஞ்ச
  கலசவாளிபு மின்னவே
கனகச்சரபாவளி சந்தனமுருகுடன்
  கருணைக்கொலுக்கு ன்னவேது

சோதிமிகுமுத்திலுறைகாம் — நந்தனூக்குத்தி
சொருசானதனுக்குபுலாக்கி — னெளிமின்னவே-ஈஸ்வி

௨. ஆட்டியசைக்கிக்குலுக்கிப் — பிகிக்கிபிக
வாலந்தன — கொண்டாடி
அருமைமகனைக்கிளி — வுக்காவுக்குக்கலியாணை
மாகும் — வளைகையைநாடி
வீட்டினிலுள்ளவேலையெல்லா — மொப்புக்கொள்ளவோ
வெள்ளாட்டியெளிவிளி — வேனுமென்னுள்ளம்வாடி-ஈஸ்வி

௩, பாடகந்தண்டைச் — சிலம்புகொலுசுகள்
பந்துவாளி — பாடம்
பரிவுளதோழிமாருடனே — சோபனங்கொட்டிப்
பண்பாய் — நடனமாட
ஆடகச்சிதம்பரந் — தனிலாடியகாளிபோல்
அலங்காரஞ்செய்து — சிலதோழர்களுடன்கூட-ஈஸ்வ

(வ-ம்) இவ்விதமாய்வந்த காலகண்டி வீட்டுக்குள்ளிருக்கிற பாலனையாக காலகவுசிகர் சந்திரமதியை யழைத்துக்கொண்டு வருகிறதுனைக்கத்திலே வாயுவேகமனோவேகமாய்வந்து அவர்களை தலைவாசலிலேவைத்துப்போட்டு தன்னுடைய வீட்டுக்கதவைத்தட்டித் தனதுமனைவியைக் கூப்பிடுவதுகாண்க,

காலகவுசிகர்க்கும்-காலகண்டியம்மாளுக்கும் வாக்குவாதம்

ஆசிரியவசனம்,

மறையோன் - அடியே-ஆரிஅங்கே அடியேண்டி-ஆத்துக்குள்ளே யிருக்கிறையோ யில்லையோ அடிப்ரதைட்டூண்டே அடேஅக்கினிபுக்கா இவளாத்தைவிட்டு எங்கடாபோயிருப்பாள் மனைவி அடியம்மா சேக்கு போருமடியம்மா ஜென்மஜென்மத்துக்கும் போரும் மறை அடேஅந்த மூண்டே உன்னை யிருந்துகொண்டு அழுக்குபிசாசு பிடிச்சாப்போல் இருக்கடா அடிஞுக்கோலியறுத்தவளே சுறுக்காக கதவைத்திறவடி ஆதிஞ்டு மனைவி இதென்னபொறப்போ சாகுருவியாட்டமா வாசப்படிலே வரச்சே ஆசிர்வாதம் பண்ணினதுவேரது மறை ஏண்டி வாசக்கதவுதாக்க ஆறுமாசஞ்செல்லுமா தனிநடா பஞ்சமிமுதல் யாதமோ இரண்டாபாதமோ உங்கோத்தாகுடுத்த சீதனத்தைக் கணக்காத்தனும் கூபட்டைவிராலும்கொண்டுபோயிட்டாளோ ஏண்டி தாந்தின்னிப்பூட்டே கட்டைவிராலும் தலைத்தாக்கறையோ யில்லாபோனால் இப்படித்தானே காளிகோயில் சப்பனுத்துக்குப் போயிட்டேடுமா மனைவி ஆமா அங்கே போ வந்தேன் னுப்பிலே கரிவளையும் கையமாவடிச்ச மூடிக்கொண்டு று வலக்கையிலே சந்தனமும் இடக்கையிலே அட்சதையு மா

கர்காத்துக்கொண்டிருந்தா-மறை-அடியே என்டி கொஞ்சம் பேராசை தீர்த்தும் பழைபதுமிருக்கோடி - மனைவி-யேங்காணும்பிராமணா என்னகேட்டீர் இன்னொருதாரங்கேருக்-மறை அடிபத்ரூண்டே. என்னடி அடிக்கவோ ஸதாஸர்வகாலமும் பட்டினிகடக்கே யித்தனேயில் வருத்துண்டு வரணமென்னு சொக்கருவாளும் பழைதையுங்கேட்டேன் சக்கரங்கட்டனேயிலே பின்னுமண்டிடைக்கு போகச்சொன்னாப்போறேன் நீபோறேன்னு ஐ மஸ்தசகஸ்ரங்களைவிடக்க நாள்தான் விடியக்காலம் உக்காண்டு சிவிப்பிசிவிப்பி முடியப்போறேறு மனைவி இந்தாருங்காணும்பிராமணா இதோபோட்டிருக்கு எடுத்தின்னுபோம் அஸ்தமிக்காலுகமுக்கு வாரும் அதுக்குமுன்னே வந்தோ சோறுமுந்சோருதான் மறை மூருக்குச்சுத்தனையோ-மனைவிசீக்கறி மாண்டாப்பிலேயிருக்கு இப்போ ஆருக்கு முருக்குக்கருக்கும் மூத்தபெண் மூலையுந்தலையுமா திக்கிறாளோ மூத்தபிள்ளைக்கு சீமந்தகல்யாணமோ-மறை-யேன்டி அதுக்குசொம்பாளிருக்குமே நீ-ஆனேமேலே அங்கமணி கொணந்ததெல்லாம் அவளுக்கொணர்ந்தாறு மனைவி-ஆமா - இக்கிருன்டி வாயாடாதையுங்காணும் பெண்கள்-பக்கத்துக்கு பிருமணையுங்கமெணுட்டி பக்கத்துக்குக் கலைடியுமாய் இங்கே உக்காண்டு மொள்ளமொள்ள சண்டைபிடிக்காதியும் மறை-அடியே-அனைப்போதாச்சி சுருக்காசமைச்சுப்பிடு ஸ்வாமி நேவேத்தியப்பண்ணிவிட்டு ஓடோதிருவையாய்ப்போயிட்டேன் மனைவி- ஆச்சு இப்போதான்போதுவிடிஞ்சுருக்கு இப்போரெண்டுமுணுதுமான்கல்லு-ம்காலுக்கு சொப்புக்குட்டியும்வச்சிண்டு அங்கேபோனமோ இங்கேபோனமோ இங்கேவச்சமே அங்கேவச்சமேஇன்னுண்டு நடிப்புரவலுச்சண்டைக்கனுச்சுவாயைப்பெருக்கிவாயாத்தங்கொட்ரதுதான்காரியம்மறை யேன்டி யின்னம் அடிப்புக்கூடுமூட்டலேயா மனைவி இப்போதான்மயிரெழுபோலேபொனையறது மறை-ஆளுக்கொளாக்கி அம்மாசைக்கிக்காச்சிருக்கிறே அதிலேயின்னதா ஒருகரண்டி பப்பருஞ்சட்டிக்குகி தின்னுட்டுபொன்னத்தேவபூஜை பண்ணேன்-மனைவி-ஐயடி-ஐயடி-என்காலம்-என்டை-அசட ஜக்குவாக்கப்பட்டு ஆயிரக்கால மிருக்கிறதைப்பார்க்க சமத்துனைக்கு வாக்கப்புட்டிசரோவொன்று அழுத்தவிழலாம் அங்கேயாறு சேரயிலே முகிக்கொண்டு பொறன்டி கிண்டு மொச்சுமொச்சென்னு-சுசுருசெக்கொ-மறை-ஐனைபோ மறந்துபோனேன் அடியே-ஜனக்கு இத்தசைக்கு ஒரு பொமறுட்டியும் ஒப்பிள்ளைக்கித்தோமறும் ஒருச்சீனையும் சமபாதிச்சிக்கொண்டு வந்தேன்டி -மனைவி- அப்படிச்சொல்லும் அக்கோஸ அத்தனைதடபிடம் கூசிக்கொணந்தேன்கதனைவத்தருன்னு

வந்திரா யென்னமோ அதிசய மிருக்குன்னுதான் எண்ணிக்கொண்டிரு
ந்தேன்-மறை-அடியேதிந்தாடி அவளைப்பார்க்கிறேனு காலம்பரயெழுந்து
அவள்முகத்தைப்பார்த்தாலும இல்லைக்கிப் பிராமணன்கையிலே என்
னமோ ஆப்பிட்டுதென்னுதானெனைக்கேன் அடிகாந்தாரிஇங்கேறடிவா
என் கப்பாத்துஸம்சாரத்து நேர்கிருவாகந் தெரிஞ்சவளோடே பேசரா
ன் யெக்தாடையின்னு கோந்தாடையின் றையிலாளோடே ஆருபேசரா
மறை-என்னடி வாப்பிட்டுவரட்டுமுண்டே கல்லும் நெல்லுங்கலந்துகொ
றிக்கிறது போருப்போரும் ஒத்தவிரலாலேஅடக்கிக்கொடு இன்னமே இ
ன்னமே இப்படியெல்லா நாலுபேர்முன்னேபேசாதே-பேசாதே- அய
தலிமுண்டே மனைவி-நீபேயிடா நீபேயிடா உன்னே விரியம்பாம்புவெடி
க்கென்னு புடுங்கா சாரைப்பாம்பு சரோன்னு புடுங்கா நல்லப்பாம்புந
ருக்கென்னுகடிக்கா ஒங்கையிலே கொள்ளியவைக்க நீ-வெடுக்கென்னு
போயிடா உங்கேளும்பிராமணா இவருக்கு ௧ மாசத்துக்கென்னகூலிஇர
ண்டு கொளுக்கா(சா) மூணுதஞ்சக்காசா உள்ளத்தைச்சொல்லும் இல்
லாவிட்டால் சோறு மூஞ்சோறுதான்-மறை-அடியே யிப்படியெல்லாம்
வாயாடாதே கருக்காப்பூசைக்கி யெடம்பண்ணீ-பூசையா-கொட்டுமேளங்
கோவில்லே கொத்துமணி கப்பிறைத்துலே அவாளெக்கேயிருந்தாளோ
அக்கேகொண்டுபோய் விட்டுவாரும் வந்தாத்தான்கொத்து இல்லாபோ
னால் மூங்கிற்கொத்து தான்-மறை-அடியே இவளாலே தாண்டி நமக்கு
ச்செபங்கரமுண்டாகப்போறது நமக்கு என்னென்னைக்கும் யிவளாலே
தான் பெருங்-கீர்த்தியும்-இனிமேகம்பாத்துக்கு க்ஷேமங்கிடைக்கும் வெ
ன்னேயிருடி-மனைவி-இவாளுக்கும் உமக்கும் இவ்வளவு சொந்தமென்
னா-மறை கடையிலேவிக்கிற கன்னியையுங் கொள்ளென்னு சொல்லியி
ருக்கியில்லையோடி--அடியே-நீயிவாளை லேசாயெண்ணிவிடாதே அயோ
த்தியாபுரியையாளப்பட்டவன் அரிச்சந்திரன் இன்னுஒரு ராசாயிருந்
தான் அவனிருக்கே-விசுவாமித்திராரிஷியிருக்கிறுரே அவருக்கு ஒருவெப
ரியானைப்பேரிலே கவண்டெறிபெரிஞ்ச ஒயரத்திற்குபணந்தரோணும
ம் ஆனைகுதும் அடிசறக்குமோயில்லையோ யிவாளைக் கையிலே பிடிச்சிக்
கொண்டு தெருத்தெருவா அலைஞ்சான் அவனது துக்கத்தைப்பார்த்தே
ன என்னக்கே சகிக்கவில்லைநான்பணங்கொண்டுபோக ஆளெங்கடா என்
னேன் ஒருசின்னப்பயல் அவனுக்கு உதட்டுப்பால்கூட உலரவில்லை அ
வனைக்காட்டி ஒன் வேண்டாகுழந்தா காலைக்காட்டுமேயென்னேன் ஆனை
லாசட்டுமென்று அடிமைச்சீட்டை மாத்திரம் வாங்கிக்கு மின்னிட்டு

டிப்போய்விட்டான் இனிமேல் அவன்வந்து பணங்கேட்டகாலத்துக்கு
பார்த்துக்குவோம்சுமக்கமாயிரு மனைவி-இவரும்-உள்ளேபோட்டுவோரேன்
யேங்காணும்பிராமணா சம்பாரப்புட்டிலே நாலஞ்சு கொள்ளுக்காகபோ
ட்டுவைச்சேனே காணமே மறை-யேண்டி ஒன்னுத்துலே நான்எப்பவா
வது கைவைக்கிறேனா நானுச்சு அசலாத்துப்புளிச்சக்கண்ணிபாச்சி வட்
டிவேண்ணுவாங்கிப்போறு-மனைவி-அவனெக்கே நான்செத்தே நன்னு
பார்த்துட்டுவ்ரேன் ஓகோ கடக்கட்டும் இவளென்ன காரியஞ்சேவள்
ளோ பொதுவிடிஞ்சோனே சாணந்தெளிப்பாளா-பெருக்குவாளா-மெழுகு
வாளா-அடுப்புசாம்பலைவாருவாளா-ஒருநாளைக்கு ஆயிரங்கொடசெலம்
பிழுக்கணுமே-ஐந்நூத்துக்கலசெல்லு புழுக்கணியும்-வாரி உலத்தணும்
குத்திஅளந்தெடுத்துவைக்கணும்-இதோ மாட்டுக்குப்பையில் லறுத்து
ண்டாலும் காகணும்-காச்சணும்-கோட்டைகோட்டையா மூட்டைகட்
டணும்-நம்பாத்திலே இத்தனைமளும் செய்யவேணுமே இவளாலே ஆ
மோ இவள்தேகமெல்லாம் சல்லடைக்கண்ணாயிருக்கு தலைமயிரைப்பா
ர்த்தால் சணப்பநட்டாமாயிருக்கு சொரியுஞ்சிரங்கு ஊசிகுத்தயிடங்
கிடையாது ஆகிசோதி அம்புலுவாட்டமாயிருக்கா ஆறுமாசப்புத்தேற
ப்போலே முழங்கி நாலுநாள்வட்டம் எண்ணெயுந்தேச்சு எட்டுநாள்வட்
டன் கழிச்சலுக்குங் குடித்தாக்கா எதுராளாத்து நோணிப்போலே அவ
ள்கிடக்கட்டும் அவபேரெணக்குத்தெரியாது அவளைக்கூப்பிட்டு ஆத்துக்
காரியங்களெல்லாஞ் சவரணையாகச் செய்யச்சொல்லுங்கோ பார்ப்போ
ம்-மறை-அடேயப்பா-அடியே சந்திரபதி சந்திரமதி-சுவாமி-மறை-இங்
கமட்டுக்கும ஒன்னைப்பிடிச்ச அனிட்டம் விட்டுப்போச்சி எப்படியாவ
து ஒப்புக்கொண்டாளே அறுவதுநாழிலே அரைவிநாடியாவது அசவ
ருன்னு உக்காந்தையோ அன்னிக்குச்சோறு செஞ்சோறுதான் இதோ
பாரு மனசுலே கொஞ்சமாவது ஆண்படையாளை செனைக்காதே நீ-மகா
பதிவிரதையென்னு ஒன்னை நானழைச்சண்டுவந்தேன் எனக்குவந்தவரு
ண்டே அவபேர் சொல்லவாவது கேட்டிருக்கையோ காலகண்டி. ன்னுக்
கேயே மனைப்பலகாரம் பண்ரவள் ரொம்பசாக்கிரதையாயிரு-மனைவி-
அடிசந்தி-சந்திரமதி-தாயேமனைவி கொல்லேலே வாசல்லேமூலேலெமு
டுக்கிலே யோனதைப் போக்கிப்போட்டு நிக்காதே நெல்லைப்புழுக்கு
வட்டைக்கொழி: நுழைந்திங்கிக்குடுத்தே கோட்டானுக்குக்குடுத்தேனெ
ன்று சொல்லாதே நீயும் அள்ளியள்ளிக் கொட்டிக்காதே அந்தகுண்டோ
தரனை இடுப்பிலேதூக்கி வைச்சிண்டுவந்து அறுநாழியும் அலையாதே ஆ
ட்டுப்பிள்ளை-ஊட்டுப்பிள்ளை-அடிக்கப்பிள்ளை-அசலாத்துலேயின்னுவி

மதி நீயுஞ்சொன்னகார்யஞ் செய்ய தேபோனியோ நீயுண்டு ஒக்கவிரா மணனுண்டு-மறை- அடி காலகண்டி நீயுஞ்சந்திரமதியுமா செத்தேசோப னக்கொட்டுங்கள் பார்ப்போம்

காலகண்டி-சோபனக்கோட்டுதல்

கண்டதைக்கண்டுகளித்தாயே - காணப்படாபொருள்காணுயே விண் டதையேயுண்டுகெட்டாயேவிள்ளப்படாபொருள் கேளாயே உண்டதனையுண்டிருந்தாயே வுவட்டாவமிர்தத்தையுண்ணுயே பிண்டத்தின்மேன் மனம்வைத்தாயே-பேரின்பந்தன்னையிகழ்ந்தாயே - தன்னையறிந்தவர்க்குயோகமேன்-சாங்கியமேன்வயிராக்கியமேன் - பின்னமில்லாவிடிலாகினியமேன், பேச்சுமறந்துமனக்காட்சியேன் தேகந்தன்னிலேயிதுசெய்யிலும் ஜென்மமரணகாணியாவதுண்டோ-சோகந்தீர்க்கும் ஞானமொன்றுஞ் சோதிரூபமாயிருப்பால்

காலகௌசிகர்-வசனம்

அடி காலகண்டி இப்படிதான் சோபனக்கொட்டுறதோ நான்கொட்டிக் காட்டேன் என்னுடைகன்றையிருக்கோ உன்னுடைகன்றையிருக்கோபாரு

காலகண்டியம்மாளும்-காலகௌசிகரும்

சோபனக்கொட்டுதல்

சந்தியத்தைச்சொல்லடி-சாத்திமாருடன்செல்லடி
நித்தியத்தைநினையடி-நிவர்த்திபண்ணுவக்கினையடி ௧
நல்லோர்தம்மைமகாட்டடி-நாஸ்திகரைநகையடி
எல்லாம்நீயேதானடி-எங்குமாயிருப்பாயடி ௨
கண்டதெல்லாமழிவடி-காதல்தன்னையொழியடி
விண்டதெல்லாமவீணடி-வித்தையின்னைவேண்டடி ௩
நாமரூபசகத்தடி-நாட்டங்களுஞ்சித்தடி
தாமஸத்தைத்தள்ளடி-தற்பரத்தைக்கொள்ளடி ௪
இந்தாசதயேனடி-யின்பமெல்லாமிகழடி
சந்தேகந்தனைச்சுளியடி-தானேசத்தெனத்தெளியடி ௫
டம்பாவத்தைவாட்டடி-முத்திமேல்மனமூட்டடி
ஆடம்பரத்தையகலடி-அடக்கமாயனுபவியடி ௬

பொது-விருத்தம்

கோதறவத்தாயையுஞ்சேனையுங்கைக்கொண்டு
குவலயத்தோர்புகழ்ந்திடவாழ்ந்திருந்தாரந்த
சீதமறைக்கினையானவராசனுடு
சிறந்தவிமக்கிரியுஞ்செந்தவத்தோர்
ஆதரவாயடைந்துமேககாசிநகசன்
அமர்ந்திடுமாலயத்திருக்க-நட்சத்ராயன்

பூதலந்தோர் திசைக்கிடலந்தவர்கள் முன்பாய்
பொருவான் மிகவெகுண்டுசீறுவானே ருகூ

வசனம். இவ்விதமாய சந்திரமதியானவள் பிராமணன் வீடடைந்து வாழ்ந்திருந்தாள் அரிச்சந்திரனும் மந்திரியும் நலத்தோர் அடைந்திருக்கப்பட்ட ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயத்துட்சென்று தோத்திரஞ்செய்துகொண்டிருக்கும்போது பூலோகத்திலுள்ள யாவரும் பிரமிக்க நட்சத்திரையர் மறுபடியும்வந்து கடைப்படிக்குத்தொடருவது காண்க.

க-விருத்தார்த்தம்-இ-ம-மோகனம்-ஆதிதாளம்

காட்டினிலுந்தேடி கடிவழிகடந்துவந்து
பாட்டையிலமிர்ந்தகலதிப்பட்டுமறியாயோடா
நாட்டைவிட்டகன்று பெத்தனடைபடி தவறுவாயல்லால்
வாட்டமோயில்லை — கெத்து
வாயினாலொருபொய்சொல்லடா — அரிச்சந்திராவுன்
வாயினாலொருபொய்சொன்னால் — வண்மைசேரயோத்திக்கு
போயமாவளைத்துக்கொண்டு — மாயமாய்நடத்திடுவேன்
மாதவமுனிவரும் — வானுலகோர்களும்
மணிமுடியணிந்தே — மாநகராளுவாய்
கோதிலாமனைவியும் — மைந்தனுமாகவேவர்
கோசிகவசிஷ்டனை — மூவிருக்கூத்தாவோர்-வாயி

அரிச்சந்திரன் சொல்லல்.

உ-விருத்தார்த்தம்-இ-ம-மோகனம்-ஆதிதாளம்.

தடவரையுச்சிதன்னில் தாமரைமலர்ந்திட்டாலும்
திடமுடன்சந்திரசூரியர் தென்றிசைபுதித்திட்டாலும்
கடலெல்லாங்கரைபுரண்டுகோசினியழிந்திட்டாலும்
உடலுள்ளளவாயிற்பொய்யை — கெத்து
ஒருக்காலுமுரைத்திடேனையா — என்வசமாய்ப்பொய்யை
ஒருக்காலுமுரைத்திடேனையா
பொருக்காமொழியுரைத்தி — ருக்கமதாயென்முன்னே
கருக்காருக்குப்பாச — மிருக்காதென்றென்னமுற்றேன்
கர்த்தனேயிந்நகர் — வர்த்தகருக்கெனே
விற்றவிற்றவர்க்குத்த — பொருட்களைகொண்டுமோ
சுத்திரமூர்த்தையாமல் — வெத்தியுடனடைவும்
உத்தாபரிபமேல — சத்தியமாகவே-இரு

பொது-விருத்தம்

மறையவனிந்நெறியுரைக்கமன்னனேனுக்கி
மந்திரிவெய்யன விற்றுமதித்தபொன்னைக்

துறைவிவர்க்கிந்திடெனத் துணுக்கமுற்றுத்
தப்பவனேரிலைக்கூறவிபற்கையல்ல
தொதலில்தீவிலைக்கூறத் தகுதியென்றான்
தலைசாக்கில்விதிபோமோ தகர்க்கதல்லால்
முறைதவறுசெரிலைக்கூறி முடியுமென்றான்
முனைக்கிட்டான்விலைகூற நினைக்கிட்டானே ௯௪

வ-ம். கட்சத்தாயவிப்படி சொன்னபோது அரிச்சந்திரனானவன் மந்திரியை நோக்கி நீ என்னை விலைகூறி இவருக்கு கடப்படியைத் தாகதனுப்புவாயென்ன ஒப்-இறைவனே என்னை நீ. விலைகூறத்தகுமென்றான் அவமந்திசெய்து கொண்டதினாலே வனாடவெலி வழியுமோ சத்யந்தவறுமலென்னையேவில்லென்றுரைத்த அரிச்சந்திரனை சத்தியகீர்த்தியாகிய மந்திரி விலைகூறுவதுகாண்க

௯௭-வது-இ-ம். ஆகிரி-அடதாளம்.

பல்லவி

இராஜனைக்கொள்வாருண்டோ-ராஜுவம்சுத்தயோத்தி இராஜ

அநுபல்லவி

தேசன்சூர்யகுலதிரன் தேவேந்திரனுக்கிணையானே. இராஜனே

சரணங்கள்

௧, காசிமாநகர்வீதியில் சாதலரிச்சந்திரனைக்
கோசிகர்தாகுலம்தீர் கூவிக்காகவிற்கவந்தேன்-இராஜ

௨, சொர்க்கணமோசலிக்கமோ சொக்கமோதுளுநாடமோ
சிங்களமோதிராக்தமோ சேயைாருமன்னவமோ-இரா

௩, பொங்கிபகர்நடகமோ புகழ்பெருமிலாடர்மாமோ
இங்கிதன்தரிசககுமன்னன் கன்னெதநித்தவரிச்சந்திர-இரா

பொது-விருத்தம்

செப்பரியவயோத்திநகராண்மைபெற்ற
செல்வவரிச்சந்திரனைச் சோந்தமைச்சன்
ஒப்பரியகாசிபுரிவீதிதோறும்
பொருக்கிக்கின்றந்தர்க்கள்குறைகள்றுடமேற்றும்
தப்பரியமூதிருதகமெல்லாபடைக்கா
தனராஜவிலைகூறக்காணிமேயார்கள்
மெப்பரியசிவவிரவமோவெனக்கலங்கி
மேவுவார்தோறும் போற்கூவுவாமே

(வ-ம்) சேருக்கள் புண்ணியவான்களே சொல்லுதற்கரிதயெயுவேரத்தியபுரினையாளப்பட்ட அரிச்சந்திரனை மந்திரியானசத்தியகீர்த்தியென்பவன் காசிபட்டணத்திலுள்ள ஒவ்வொரு தெருவாகப்போய் விலைகூறும்போது இவர்களாமோவென்று அவ்வூரிலுள்ளயாவரும் திகைத்து அவரவருக்குத்தோன்றியபடி பேசிக்கொள்வதுகாண்க

௩௮-திபதை-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

கண்ணிகள்

௧. ஐயோயிதென்னவொரு புதுமையடக்குமிந்த
அதிசயங்காண்போமென்பார் அங்காடோர்
வெய்யோன்கொடியுதித்துவெளிவந்தார்போலவொரு
வீரனைப்பார்ப்பீரென்றார் அங்காடோர்

௨. புட்பதனுவனிவனைப் போருக்கழைக்கமனம்
பொருந்தலரிதாமென்பார் அங்காடோர்
புட்பகவிமானம நூறாயிரங்கொண்டேனிந்தப்
புரவலர்க்கீடோவென்பார் அங்காடோர்

௩. மூன்றுளில்வந்திவன் கொண்டமூதமடந்தையைவிற்று
முடிந்தான்வெகுபொன்னென்பார் அங்காடோர்
நன்றுறுவேதமாறு நாலுமுணர்ந்தோர்க்கோப்பும்
காதகன்வடிவமென்பார் அங்காடோர்

௪. காரணங்கண்டறியக்கூடுமொருவரில்லை
கண்டோர்கொள்வாரோவென்பார் அங்காடோர்
பூரணமாகவெவர் பொருளளிப்பாரோஅவர்
பொருந்தத்தகவாமென்பார் அங்காடோர்

௫. இலங்கையடிமைகொள்ள எவர்க்குந்திறமிவ்வூரில்
யென்னற்றவொருவனென்பார் அங்காடோர்
தலையிட்டுத்தந்தாலுங்குபேரன்றனக்குங்கூட
தரவரிதாகுமென்பார் அங்காடோர்

௬. இறையவனல்லனிவன் ஏழையென்றெண்ணவேண்டாம்
ஈசனருளிதென்பார் அங்காடோர்
குறையவனுக்கென்னுண்டோ கூறுநிதிகடந்து
கொள்வாரெவரோவென்பார் அங்காடோர்

௭. எத்திசையாண்டவனோ எந்தமன்னன்றவஞ்செய்
தீன்றபுண்ணியனோவென்பார் அங்காடோர்
இத்திசையிவனைக்கண்டதில்லையயோத்திக்
கிறையோனிவனோவென்பார் அங்காடோர்

௮. சூரியகுலத்தீரர் சொன்னமொழிமாறிடார்
சூழ்வினையேதோவென்பார் அங்காடோர்
காரியக்கேடாயினும் தானேயுண்மைபடக்
கருதினோனுண்டோவென்பார் அங்காடோர்

௯. தருமத்திற்கோதறிடும் தலைவனைவிலைகொள்ளத்
தரணியிலெவரென்பார் அங்காடோர்

வன்பயவிளைத்திடவிலைகூறவந்த அவன்
வல்லமையேதோவென்பார் — அக்காட்டோர்
௫, தருமராசனுக்கல்லால் தருமோமற்றொருவர்க்குத்
தன்மானவனேயென்பார் — அக்காட்டோர்
கருமபதிதோருண்டோ கஞ்சநெழுத்தைதாரும்
கடக்கவரிதாமென்பார் — அக்காட்டோர்

பொது-விருத்தம்.

ஆதித்தன்குலமகவிளக்கைதொட்டு
அண்டரவணியவென்றும் புகழுங்காசி
வீதிதனில்விலைகூறிவிற்கக்கண்ட
வேந்தருமாந்தருமங்குவிளங்குவோருங்
கோதிலரன்தனைக்கொள்வோரரிதாமித்தக்
குவலயத்திற்தருமனொருவனுக்காமென்னும்
போதில் புலைச்சாதியர்கள்வீதிநோக்கி
பொருதிறன்விலைகூறக்கருதினானே ௩௭

வ-ம், இவ்விதமாகச்சொல்லிய யாவரும் இவனைக்கொள்வதற்குராமதர்மராசனுக்கொப்பானவீரவாகுவொருவனுக்கல்லாது மற்றவர்களுக்குத் தீராதென்றுரைத்த மொழியைக்கேட்ட சத்தியகீர்த்தியானவன் அக்கிய சாதியாரிருக்கின்ற தெருவைநோக்கி விலைகூறிக்கொண்டு நடப்பதுகாண்க

௩௩-நியதை-தரு-இ-ப-பந்துவராளி-ஜம்பைதாளம்

கண்ணிகள்

௧, மன்னவனைக்கொள்வாருண்டோ மாநிலத்தில்நாட்டிமாரே
தன்னகமகிழ்ந்துவந்த தலைவன்தனைக்கொள்வாருண்டோ
௨, பன்னாத்தியநச்சிமாரே பாராளனைக்கொள்வாருண்டோ
உள்ளமதிற்கள்ளமில்லா உத்தமனைக்கொள்வாருண்டோ
௩, வீட்டுக்கொருபூட்டாயிருக்க வேந்தனுனைக்கொள்வாருண்டோ
காட்டுக்கொருகாவலாகும் காவலனைக்கொள்வாருண்டோ
௪, பொய்யனுவுரைத்திடாத பூபதியைக்கொள்வாருண்டோ
மெய்யவன்குலத்துதித்த விமலன்தனைக்கொள்வாருண்டோ
௫, அயோத்திமாநகரையாண்ட அரிச்சந்திரனைக்கொள்வாருண்டோ
வெய்யோனொருகோடிபோன்ற வீரன்தனைக்கொள்வாருண்டோ

பொது-விருத்தம்

மந்திரிசத்தியகீர்த்திவாரணுமி
மாநகரின்புலைவீதிதனிலெவ்வண்ணம்
சந்திரதயன்பருமகனைத்தன்றோளினேந்தி
ஜகத்திலெவர்தமைக்கொள்வாரெவருண்டென்னும் ௩௮

தப்புவழிகளலைந்து தயங்கியேநிலைகுலைந்து-எப்

சரணங்கள்.

௧. செங்கதிருச்சியேற லாச்சே-வழிநடக்கச்
செந்தழலினிறம் போச்சே
துங்கமறையோர்பால ராச்சே-பகலவனைத்
துதித்திடும்பொழு தாச்சே
பங்கமுற்றுமனம் பரதவித்தாரோ
பாதைதப்பிநெஞ்சம் பதைபதைத்தாரோ
திங்கள்கங்கையணி வோன்செயலறியேன்
தீயமாமுனிவன் செய்கையைக்குறியேன் - எப்போ

௨. பசிக்கென்ன செய்தாரோ-அடர்வனத்தில்
பண்பாச்சென் றுய்தாரோ
புசிக்கப்பழங்கள் கொய்தாரோ-மனம்வெறுத்துப்
போனவர்களின்ன மெய்தாரோ

விசிக்கைமைந்தனைமிக வெடித்திடக்கூறி
வெதுப்பிப்பிரப்பங்கோலால் விசியேசி
நசிக்கியடிக்கமேனி நலிந்தசோயாறி
நாயேன்கடைத்தேற முபாயத்தைக்கோறி-எப்போ
௩. அருதிக்காளாக லாச்சே-ஏவல்செய்வோனை
ஆக்கினைசெய்திடநாள் போச்சே
வெருவிதத்துன்பங்க ளாச்சே-விசுவாமித்ரான்
வெறுப்புக்குள்ளாக லாச்சே
தருதியில்லாச்செய்கை தனக்குடன்பட்டு
தத்தளித்துமனம் தவித்திடவிட்டு
மிருதியாகச்சொல்லு வதிலொருசொட்டு
மேலானவர்களுக்கில் லாமலேற்பட்டு-எப்போ
௪. அஞ்சிவயிர்வளர்க்க லாச்சே-அந்தணன்செய்யும்
அல்லலால்மெய்களைக்க லாச்சே
சஞ்சிக்குக்கையேந்த லாச்சே-நமைப்போலுள்ள
கதிர்குலத்தோர்களுக் கேச்சே
வஞ்சிப்பேய்கள்முன்போல் வருமெனிற்சிதைத்து
வழக்குச்செய்யிற்குழி வகுத்ததிற்புதைத்து
பஞ்சவிட்டநெருப் பெனமனம்பதைத்து
பல்லுகிட்டிப்பாரில் விழ்ந்திடவுதைத்து-எப்போ

காட்டுக்கேகியபாலர்வராத காலவளப்பங்கண்டு திகைத்தல்.

பொது-விருத்தம்.

தலைக்கோழிகூவையிலேசிறுவரெல்லாந்
தர்ப்பைசமித்துகட்கேகத்தானெழுந்து
மலைபுறம்போவோமெனுபவ்வரவங்கள்கேட்டு
மைந்தனையுங்கூட்டிவிட்டுமறையோர்மக்கள்
நிலையானபதபோற்றிநெடிதுவாழ்த்தி
நிஷ்டோமனுவளவும்நீங்கச்செய்து
உலைபாதுவர்தேனேமகனெங்கோவென் ௨௫
உருகுவாள்நெஞ்சலர்ந்துகருகுவாளே.

௨௫-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

இன்னம்வரக்காணேலென்னமாயம் என்ன
இடர்விளைந்ததோ அடர்வனந்தனிற்
சுடர்கதிரோனும் கடற்புகும்போதாச்-சின்ன

அநுபல்லவி.

சின்னஞ்சிறுமதலைமொழிப்பாலகராச்சே என்ன
செய்தாரோயின்னமல் செய்தாரோமகிழ்ச்சியா
அய்தாரோதர்ப்பைகள்தொய்தாரோ யானறியேனே
தன் மைந்தனிபாகப்போனவென்றனையனுந்தென்னதயக்கமுற்றதோ-சி

சரணங்கள்.

௧. அன்னமயில்குயிலாடக்கண் டாசையுற்றேனே-அந்த
அடர்வனந்தனில் ஒருவர்க்கொருவர்
கருவிமனைக்கு வருவதும்மறந்தாரோ
என்னகம்பீர்ப்புழுவாகத்துடிக்கு தென்செய்வேன்-ஜெக
தீசனேகைலாச வாசனேசர்வபூ
தேசனேகாசிவிசுவேசனே யென்னமாயுய்வேன்
சொன்னசொற்றவ றுதறாந்தரன்
சந்திரன்சத்யதர் மேந்திரன்தந்திரன்—இன்
௨. மாலைமயங்கிக்கையெழுத்தும் மறைந்திடலாச்சே-என்ன
மாயமோசெய்ததன் யாயமோ—வந்தப்
பாயமோமுனிவனு பாயமோ—யானறியேன்
மூலைமுடுக்கிலலைந்தென்ன மோசமுற்றாரோ-அந்த
முனிவரும்மைந்தனைத் தனிவழிதன்னிற்கண்
டனிபாயமுறைதனக்கிரையாவதென்ன சொன்னாரோ
காலைக்கோழி கூவப்போனவென்
கண்மணிதனைக்காணாக் கண்களும்பூத்ததே-இன்
௩. அம்மம்மாவென் றடிக்கடிவருவான்-என்தன்
அகத்துயர்தீர மிகமகிழ்வுற
செகம்புகழ்கூறமுகமலர்முத்தந் தருவான்
இம்மாமகிதலத்துக் கருதியாச்சே-அந்த
ஈசன்ஆதித்தன்கு லேசன்சாகேதபு
ரீசனெந்தன்பிராண னேசனிதறிந்திடாதாச்சே
எம்மாத்திரம் தூரமென்றறியேன்
எற்றிசையோஅவர் சொற்றிசைகுறியேன்-இன்
மனோவேதனையினால் தேகக்குறிப்படைந்து புலம்பல்.

பொது-விருத்தம்.

பானுதயமாயுத்திசேருங்காலை
யருதிரலக்காசிதன்பாரம்பொங்கத்
தானுமதிமயக்கமுற்றுத்தத்தளித்துத்
தனயன்வருந்தாதடைந்தன்மைகண்டு
வானுறுமாமதியெழுந்துவரும்போதாச்சே
வண்மைமிகுமைந்தனினிவருமாறுண்டோ
நானுமவன்முகமலர்காண்பேனோவென்று
நாடினாள்முகக்கமலம்வாடினாளே. ௨௬

௨௬—தரு—இ—ம்—பாக—ஆடதாளம்—பல்லவி.

என்னகாரணமோ அறியேன்—இன்னம்வரக்காணேன்-மிக.

---

* இவ்விடத்தில் சரணத்துக்குச்சரணம் என்னருமைமகனே என்சி றுபாலனே—என்சிறுமைந்தனே—என்கண்ணின்மணியே—ஏதோவரக்கா ணவில்லையென்னமாயம் என்றும்பாடிக்கொள்க.

அநுபல்லவி.

சின்னஞ்சிறுவர்கள்தன்னுடன்கூடிச் செல்வன்வரும்வழிதேடி-அவன்
சிந்தைதனில்மிகவாடி மகனென்னைநாடி-என்ன

சரணங்கள்.

௧. பட்டமரக்கிளிலேறிக் கொம்பொடிந்து
பதறியேவிழுந்தானோ மிகக்
கதறியேஅழுதானோ மனைக்கெழுந்தானோ-என்ன
௨. முட்புதர்தன்னிற் புகுந்துசமித்துகள்
முனைந்துபொறுக்கலுற் றானோ-காலில்
முள்ளுகள்தைத்தலுத்தானோ மனஞ்சலித்தானோ-என்ன
௩. கட்டுரவட்டை சுருட்டையரவு
கடித்துக்கலங்கிநின் றானோ-நடுக்
காட்டினிலெங்குசென்றானோ திகைத்துநின்றானோ-என்ன

காட்டுக்குப்போன சிறுவர்கள் வீட்டுக்குவருதல்.

பொது-விருத்தம்.

கன்னியிந்தவண்ணமனங்கலங்குங்காலை
கானகத்துக்கேகியவச்சிறுவரெல்லாம்
மின்னியநன்னகர்நோக்கிவருகும்போது
மீன்விழியாள்தனக்கெதிரேமேவுங்காலைத்
துன்னிகமைக்கேட்குமொழிக்கேதுசைப்போம்
துலையாதபடிதனக்காளானோமென்று
குன்னியவரவர்பகர்ந்துகொண்டகத்தைக்
கூடுவார்வனிதையின்பால்கூடுவாரே. ௬௨

௬௩-தரு-இ-ம்-புன்னாகவராளி-அட்டதாளம்.

பல்லவி.

என்னமாய்ச்சொல்வமடா-இக்கொடுமையை-என்னமாய்ச்சொல்வமடா

அநுபல்லவி.

அன்னம்பழித்தநடை அரிவையின்முன்போக
வின்னபேதகமிகவிளையுமே அன்பாக-என்ன

சரணங்கள்.

௧. அடைக்கலங்காரென்றாளே மகனைப்பற்றி
சொன்னாளே
அரிவைமிகச்
படைக்கவறியாமற் பழிதனையேற்றோமே
பாரிலொன்றுமில்லாப் பாரிவிளையுற்றோம்-என்ன
பின்னுதே-வரவர
௨. கால்களிரண்டும் துன்னுதே
கலக்கமிகத்
வேல்விழியாட்கென்ன வேதனையுற்றதோ
விருப்பியுண்டவுணும் விடமெனக்கைத்ததோ-என்ன
சந்திமாது
௩. காசிநகர்தோணுதே காணுதே
குலக்குமாவன்

யோசனைசெய்தவள் உள்ளுருகாவகை
உகந்துசெய்யோமாகில்உலகோர்க் கெல்லாம்நகை-என்ன

மைந்தனை விஷந்தீண்டியது கேட்டவுடனே புலம்பல்.

பொது-விருத்தம்.

கடைவிழிநீர்சோர தலைக்கடைமுகப்பில்
காத்திருந்துவிப்ரமக்களைக்கண்டேங்கி
நடைபயிலாமகனெங்கேசொல்லீரென்றாள்
நச்சரவங்கடித்திறந்தானவனைமூடிச்
சடைமுடியோன்றனக்கொப்பித்தகன்றவந்து
சள்ளைவழியனைத்திலுக்குந்தழையொடித்து
அடையாளமிட்டுவந்தோமறிவாயென்றார்
அன்னினள் அறைந்துடலந்துள்ளினளே. ௨௮

௨௮-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்

பல்லவி.

ஆதிபாவியானேனே-உந்தன்-நீதியிதோசுதனே

அநுபல்லவி.

நீதியிலாதெனைவாதனைக்குள்ளாக்கிச் சோதனைசெய்தாயேநாளும்
கோதில்லாதபாஞ்சோதிகுலத்தோனே கொடுமைசெய்துய்தாயே-ஆதி

சரணங்கள்.

௧. நெஞ்சகத்தில்மிக வஞ்சமுற்றெந்தன்
நேசமுகந்தாயோ பொல்லா
பஞ்சமபாவினன் அஞ்சலெனப்பாம்பின்
நஞ்சையுகந்தாயோ ஐயோ-ஆதிப
௨. அஷ்டதிசையாண்ட நீமனம்நெருந்திடாக்
கஷ்டப்படுவதுண்டோ அந்த
துஷ்டப்பாம்புக்கிறை யாருமேலோமென்மனம்
இஷ்டப்படுவாருண்டோ ஐயோ-ஆதிப
௩. ஆக்கியவறுசுவை யன்னமருதியர்க்
காராய்க்தளித்ததுபோய் இப்போ
வாய்க்கரிசிக்கு வழியில்லாதென்மனம்
வாடுதேயென்னசெய்வேன் ஐயோ-ஆதிப
௪. பூதலந்தனிலெனக் காதரவாரினிப்
புகழ்பெறுங்கிதமே நாளும்
கோதறநாலாறு வேதநன்னுாலாய்ந்த
கோமான்செய்தவமகனே ஐயோ-ஆதிப
௫. வீடுபெறக்கதி விரும்பித்தவஞ்செய்ய
வேண்டியதாய்சிறியேன் இந்தப்
பாடுபடமகன் பாகதியடைந்திட்ட
பான்மையைநானறியேன் ஐயோ-ஆதிபா

௬. காசிநகர் தனைக் — காவல்கொண்டரசாளும்
காவலன் கொடுமையேதோ — காணும்
மாசிலாசமைந்த — விறக்கத்தாயெரிப்பதும்
மாநிலமகிமையேதோ — ஐயோ - ஆதி

௭. பிள்ளையில்லாப்பெரும் — பாவியென்றென்னைப்
பேருகவேகோபொறுக்க — பொல்லாச்
கள்ளப்பட்டமாயக் — கொள்ளைகொடுத்திக்கத்
சகத்தோரைக்கண்டோதாக்க — ஐயோ - ஆதி

சந்திரமதிசிவனைநோக்கிப் புலம்புதல்.

பொது - விருத்தம்.

அழுதுமனத்துயர்மிகவுற்றிரங்கலாய்த்து
அயன்விதியாரறிவரெனவரசந்தோய்ந்து
பழுதகந்தவிடமெதுவோவரசொல்லினொன்றாள்
பழுவதனுள்பாங்கள்வரும்வழியிற்கிடக்கும்
தொழும்வடத்தின்வடபுறத்தேதருகுசைபோந்த
தொல்புவிக்குத்தெற்காகத்தோற்றுமென்று
முழுதுமுணர்ந்தோரவர்சன்முகப்புச்சென்றார்
முருகினள்வெதும்பிமனதுருகினளே.

௨௧ - தரு - இ - ம - காம்போதி - ஆதிதாளம் - பல்லவி.

சிவனேயானென்னசெய்வேன் - செல்வனையெங்குகாண்பேன்

அநுபல்லவி.

தவஞ்செய்துபெற்றெடுத்த — தனயனையான்பிரிந்தால்
அவனியிலெந்தனைப்போல் — அரும்பாவியொருவருண்டோ - சிவ

சரணங்கள்.

௧. மைந்தன்றனையிழந்து — மாளிகைத்திலிருந்தால்
எந்தனையிகழாரோ — பித்தலத்துள்ளமார்தர்
இந்தத்தனைந்தருகுதே — செல்வன்முகங்காணமல்
அந்தரத்திற்படரும் — கொடிபோலயலானேன் - சிவ

௨. பிள்ளையில்லாமல்மிக — பெருந்தவமிருந்தேனே
பிஞ்சுசனேமகனை — பிரியமாய்வளர்த்தேனே
சள்ளைசெய்திடுமாக — சர்ப்பத்துக்கிரையாக
கொள்ளைகொடுத்திடவோ — குலையத்திறந்திறந்தேன் - சிவ

௩. சீலமுடனிருந்த — செல்வனிறகவென்ன
காலமோதானறியேன் — காலகாலனே அன்று
ஆலமுண்டமாரை — மாகரிக்கத்தேக்கவனே
அம்புலிதனிவெனை — யாசரிப்பாயாதறேனோ - சிவ

முனகண்ட அவசகுனங்களைநினைத்து பலவாறுபுலம்பல்.

அறுதியிதென்றசாலவழிந்துருகிவீழ்ந்து
உறுகினருடையோர்க்குஞ்சிவாயதிறந்தாறநிமாழ்கி

மறுதொழின்முழுதுஞ்செய்துதீர்த்தபின்றேடிச்சேறல்
சிறுதியென்றுளத்தினுள்ளேயொடுங்கிவந்தகத்துப்புக்காள். ௩௰

௨௰-திபதை-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்
கண்ணிகள்.

௧. அடர்வனம்போகையிலே-புனக்-காகாதசகுனங்கண்டேனடா
துடர்வினைக்கென்செய்வோ- மென்றென்னைத்-துரத்திமனைக்கேகு
மென்றாயடா
௨. புறப்பட்டெழுந்திருக்கும்-போது- பொல்லாக்கெவுளிகள்சொல்லி
ற்றடா,பறப்பறந்துசுற்றித்தடா-சிறு-பாலகனேஅதுகாலனடா
௩. காகமிடத்தெழுந்து-உன்னைக்-கட்டித்தலைதனிற்குட்டிற்றடா
கூகைவழிமறித்துக்-கையாற்-குத்திச்சுடென்றுகுளறிற்றடா
௪. முண்டிகெருப்பெடுத்துக்-கைம்பெண் - மகமுகமுன்வரக்கண்டேன
டா,ஒண்டிஒண்டியாக-மறையவன்ஒதுங்கிடாதுவரக்கண்டேனடா
௫. திண்ணையருகினிலே-இறங்கையில்-தெரிவையாலறிடக்கண்டேன
டா,எண்ணைத்தலையுடனேமெட்டு- யிரப்போரைக்கண்டுள்ளமேங்
கிற்றடா
௬. ஊழியவேலையெல்லாஞ்-செய்து-உத்தமற்கொப்பித்துவாரோனடா
பாழில்லைவேணுடா-மெத்தப்-பங்கப்படவிதுகாலமோடா
௭. மண்ணாளவேணுமென்று-உன்னை-மருவிமருவிவளர்த்தேனடா, க
ண்ணாளகண்மணியே-உன்னைக்-காட்டுவிறகுக்காயோட்டினண்டா
௮. தயிர்கடைந்தெடுக்கையிலே-வெண்ணைத்- தாழியுடைந்தகைகளை
யடா, வயிற்றெரிபத்துதடா-உந்தன்-மலர்முகந்தன்னைஎப்போகா
ண்பேனடா

இச்சமயத்தில் காலகண்டி வீட்டுவேலைசெய்ய ஏவுதல்
பொது-விருத்தம்.

மகனடவிக்கேகையிலேசகுனங்கண்ட
மாற்றமெலாம்நினைந்துருகிமதியிற்றேர்ந்து
மிசமனத்துற்றநீவினைமுன்னிலும்பொல்லாதாய்
மேதினியிறசிறகிழந்தபாவையானேம்
தகனமவன்றனக்கிடலெவ்விதமோவெனறி
தயங்குகையிலேதத்திபார்த்தகாலகண்டி
மிகவெகுண்டுவீரபத்திரகாளியென்ன
மேவுவான்வேலையிடக்கூவுவாளே. ௩௧

௨௧-திபதை-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்
கண்ணிகள்.

காலகண்டி-எப்போதஸ்தமிக்குமென்றிருந்தாயோடி சந்தி காண்
செப்பும்வேலையாவுஞ்சீராகச்செய்யடி சந்தி
சந்திரமதி-செப்புக்கல்மனவொப்பும்வேலை யம்மா-மிக்க
செப்பமாகச்செய்துசீராக்கிவைத்தேனே அம்மா

காலகண்டி—நெலுப்பதிக்கலமள்ளிப்புழுக்கடி சந்தி—வேலை
சொல்லுகிறேனென்றுமல்லுக்குவாராதே சந்தி
சந்திரமதி—கல்லுமண்ணுய்க்துகளித்துவர்த்திவைத்தே னம்மா-நானும்
அல்லும்பகலும்மடங்கிவேலைசெய்வே னம்மா
காலகண்டி-என்னைபுலர்த்தியெடுத்துவைத்தாயோடி சந்தி—அடி
என்னடியுன்னகம்வதிட்டுப்பார்க்கிறாய் சந்தி
சந்திர—அள்ளியெடுத்துநம்மறைவீட்டுக்குள்வைத்தே னம்மா-எந்தன்
அகமகிழ்ந்துமதடிமைவேலைசெய்வே னம்மா
காலகண்டி-பாரதபண்டங்கள்பாழாகிப்போமடி சந்தி-பச்சை
பயறுமொச்சைதட்டைப்பயரெடுத்தவடி சந்தி
சந்திரமதி—நோயளந்தேன்திறைந்தநபதிங்கல ளம்மா-வெகு
நேத்தியுடனெடுத்தேத்தினேன்பாணியி லம்மா
காலகண்டி-பால்தயிருரிகளைப்பார்த்துமூடிவாடி சந்தி-என்ன
பாவமோநீயென்னைப்பார்த்தாக்குலுக்கிறாய் சந்தி
சந்திரமதி-நால்வருமெய்க்கநடந்துகொள்வேனெந்த னம்மா-என்றும்
நடந்தறியேனுந்தறைக்கினைதப்பியென் னம்மா
காலகண்டி-எரிக்கனாடுெடுத்ததுபோதுமோ சந்தி-நான்
என்னசொன்னாலுமெனக்கில்லையென்கிறாய் சந்தி
சந்திரமதி-சூரியனுதிக்குமுன்சபத்துவங்கேனெந்த னம்மா—நீர்
சொன்னவேலையாவும்சொச்சமின்றிச்செய்த னம்மா
காலகண்டி-சண்டாளியென்னுத்தப்பண்டம்பாழாபேசடி சந்தி
இந்திரஜாலம்செய்யாமற்போய்சாணியைத்துவையடி சந்தி
சந்திரமதி-கண்டோர்களிக்கவக்காரியமாச்சுதென் னம்மா-காலாற்
காட்டியவேலையென்கையாற்செய்வேனெந்த னம்மா
காலகண்டி-மாடுகண்கட்குப்புற்போட்டுவந்தாயோடி சந்தி-உந்தன்
மார்க்கமெவர்க்காவதேர்க்குமோகேளடி சந்தி
சந்—கோடுகோடாய்க்கட்டிக்கொட்டிலில்வைத்தேனென் னம்மா-மாறு
கொண்டுசொன்னமுகங்கோணுவேனோசொல்வீ ரம்மா
காலகண்டி-கண்ணைவிட்டுக்கறந்தடுப்பில்வைத்தெடுத்துவை சந்தி—கட
சாச்சியபாலைப்புரைக்குத்திவையடி சந்தி
சந்—வெண்ணைதயிருங்காய்வேறேயெடுத்துவைத்தே னம்மா-இன்னம்
வேலையுண்டானால்விருபபிச்சொல்லுமெந்த னம்மா
காலகண்டி-ஜோலியில்லாதவள்போலேநீபேசுராய் சந்தி-உந்தன்
சீவித்தனமொருநிபிக்கத்திற்காணுவேன் சந்தி
சந்திரமதி-கூலிவேலைக்கென்னைக்கொண்டுமகிழ்ந்தாயென் னம்மா-புண்ய
சாவியுமைப்போற்சகத்திலுண்டோசொல்லு மம்மா
வேலையாவுஞ்செய்தானபின்பு காலகவுசிகனைமகனைப்பார்த்துவர
விடைகேட்குதல்—பொதுவிருத்தம்.

வேலைகளிற்கொஞ்சமேனுங்குறைவிலலாமல்
விருப்பமுடன்செய்துவருவேனைதன்னில்

மாலையிலுங்காலையிலும்மகிழ்ந்திருமன்போல்
மைவணங்கிவேலைசெய்வதில்லையென்றுஞ்
சோலைதனக்கேகியசாலோனையரிகாது
சோருகிறாய்கூறுகிறாய்யெனவிளம்பி
ஆலைதனிற்கரும்பெனவேவெதும்பலுற்றாள்
அழுகின்றாள்மறையவன்றாள்தொழுகின்றாளே. ௨௩.

௯௨-திபதை-தரு-சங்கராபரணம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. என்னநான்செய்குவேன்ஈசனேலோகிதன்
ஏகியேதர்ப்பைகொய்ய மன
தேங்கியவநிடபுத்தடியிற்பாம்பு
யிருந்துகடித்ததெனமீற
இன்னஞ்சிறுவர்கள்வந்துரைக்கயெந்தன்
சிந்தைகலங்குதையோ எந்தன்
செல்வனைக்கண்டங்கட்டிக்கொடிக்கிமுன்
சீருடன்வருவேனையா

௨. மைந்தனைப்பெற்றவயிறுங்குமுறுது
வாயும்வாளுதையோ அவன்
மலர்முகந்தேடியென்மனக்குறைதீரவுன்
மனைக்கோடிவருவேனையா
சிந்தனைதீரவும்மனஞ்சலியாமலே
சென்றுவாவென்றுரைப்பீர் அருமை
செல்வனைக்கண்டருமேனுதயமுன்வந்து
சேவடிபணிவேனையா

௩. பரிதிகுலேசனைப்பிறந்தவன்பிராணேசன்
பாரினிலொருபொய்சொல்ல மனம்
பதறியதாலிந்தக்கவலைக்குயானுடன்
படவிதியாச்சுதையா
கருதிகற்பொய்த்தாலுமசோதிடம்பொய்த்தாலும்
சொல்லொன்றும்பொய்யாதையா செழுஞ்
சோதியுதிக்குமுன்னேடிவந்தாழியஞ்
சொல்வதைச்செய்வேனையா

௪. சந்ததியேந்திரன்செய்தவத்தாலிந்தத்
தரணியிற்பிறந்தேனையா சாம்ப
சதாசிவன்சாட்சியாய்சத்தியவார்த்தைதவிழ்க்கச்
சற்றும்நினையேனையா
இந்திராணிமுதலானோர்இகழ்ந்துரைத்திடும்பொல்லா
பழிவழிக்கேகுவனையா ஏன
ஈசனைகற்பினோர்நேசனேவிடைகொடும்
இணையடிசரணமையா

171

காட்டுக்குப்போய் மகனைப்பார்த்துவர உத்திரவுகேட்டபோது காலகவுசிகர் கோபமுற்றுச்சீறுதல்.

பொது-விருத்தம்.

முறைமுறையேபணிவிடைகள்யாவுஞ்செய்து
  முதுமறையோனடிபணிந்துமுகஞ்சிணுங்கி
இறையவனேயாவுசடித்தெந்தன்மைந்தன்
  இறந்தனனென்றறைந்திடக்கேட்டேக்கமுற்றேன்
குறைவிலையேவலிலென்மனக்குறைவுதீரக்
  குழந்தையைப்பார்த்தோடிவரவிடைகொடென்றாள்
தரைதனிலாளைமிதித்தசர்ப்பம்போல
  தந்துவான்மறையவனுங்கத்துவானே, ௯௯.

௯௯—தரு-இ-ம்-கெவுளிபந்து-ஆதிதாளம்

பல்லவி.

சூதுகற்றமாயக்கள்ளிசொல்லரியசொல்லைச்சொல்லி
வாதுக்குவந்தாயுன்வகையறியேனேடி

அநுபல்லவி.

ஏதுக்கித்தனைகற்றாயோ — வென்னைநும்பொருளைத்தந்து
ஏகுவாயேகுவா — யேகுவாயென்முன்னில்லாமல்-சூது

சரணங்கள்.

மைந்தனிறவாலிறந்தான் — மாதவனேயென்றுளத்தில்
சிந்தனைகொண்டெந்தன்முன்னே — செப்பினைவடிப்பமாய்
உந்தனுக்கொருகுறையோ — யெந்தனுக்கல்லாமலென்னி
ஓதுவாய்ஓதுவாய் — ஓதுவாயுள்ளங்களித்து-சூது
உலைமெழுகதுபோலுந்த — னுள்ளத்திலுருகிறாய்
நிலைகுலைந்தவள்போல்நீ — நெகிழ்ந்துகருகுறாய்
விலைபட்டோன்றனக்கிரங்கத் — தலைபட்டாய்மிகப்பொல்லாத
வீணிநீவீணிநீ — வீணிநீவேலையற்றாள்போதி-சூது
உன்னைக்கொண்டதுபோலவன் — றன்னைக்கொண்டதல்லவோ
அன்னைமகனென்றுரைக்கி — லாவதுநான்சொல்லவோ
தன்னைவருத்தும்வினை — தனயனைவருத்துமோ
தாளுவாய்தாளுவாய் — தாளுவாய்தயக்கமற்றுச்-சூது

காலகவுசிகரிடத்தில் உலகவாழ்க்கையையும் சத்தசம்பந்தத்தையும் குறித்துக்காட்டிப்புலம்பல்.

பொது-விருத்தம்.

கற்பினைகாக்குங்கடவுளிந்தவாறு
  கடுகடுத்துவெடுவெடுத்துகடுஞ்சொற்சொல்லி
முற்பவத்தாலெனதடிமைபிறந்தாளென்னில்
  முற்றுங்குறைவுமெனதலைவா!முதுமடந்தாய்!
கற்பனைபுள்ளவள்போல்நீதயக்கமுற்றுச்
  சஞ்சேபுறக்காரணமேன்சாற்றுவெனக்

கற்பனைபோயெனமனத்துட்கலக்கமுற்றுக்
கதறுவாள்முகத்தணைந்துபதறுவாளே. ௩௪

௩௪—தரு-இ—ம்—பூரிகல்யாணி—ஏகதாளம்

பல்லவி.

ஐயனேயிந்தவையகம்நகையாதோ ஐயனே

அநுபல்லவி.

துய்யமகன்தன்னையர-வெய்யமாண்டானென்றறிந்தும்
செய்யமனமும்படிமோசொல்லையவயிர்பத்திதையோ ஐய

சரணங்கள்.

௧. பாவியேனெனக்கன் ஆவிபனைகக்குதையோ-பாவியே
ஏவியஊழியஞ்செய்ய யேற்றவடிமைபென்னினும்
தாவியந்தாத்திறக்கத் தாய்வயிர்சொதித்திடாதோ (ஐய)

௨. கண்டிலேனெந்தன்கனவினு மிக்கொடுமை-கண்டிலேன்
மண்டிபெறிங்காறுமனற் கொண்டகோலமாயென்னுளங்
கண்டித்துக்கிறிஞனுமக் கெண்டிசையிலும்புகழோ (ஐய)

௩. பத்துதேபிள்ளை பெற்றவயிருமிகப்-பத்துதே
ஒத்துணைபடர்வனத்தி லேப்கழுகோரியலகை
சுற்றுமுன்னனவிட்டுப்பற்றுமுன் பறந்துவாமோன் (ஐய)

காலகவுசிகருந்தாரங்கொண்ட சந்திரமதி மகனைத்தேடிக்கொண்டு
காட்டுக்கேகுதல்—பொதுவிருத்தம்.

மாலைபங்குழலாள்கூறமறையவன்மனம்பொருந்தி
வேலைகண்மிகவுமுண்டுவிடியுமுன்வருவதாகில்
நீலவேல்விழியாயேகுநீயெனவொருக்காற்சொன்ன.
காலையேயெழுந்திருந்துகாசியைக்கடந்துபோனாள். ௫௩

௩௫—தரு—இ—ம்—தனுசரி—ஆதிதாளம்

பல்லவி.

எங்கேகாண்பேன்-பாலா-எங்கேகாண்பேன்—மகனே. (எங்

அநுபல்லவி.

செங்கதிகுலத்தையாளும் புங்கவன்றன்கண்மணியே
கொங்கைகள்நிறைபாற்கட்டி அங்கத்தையுருக்குதையோ—எங்

சரணங்கள்.

௧. படர்முள்ளுகளுங்கற்களும் பாதங்களிற்றைக்குதிந்த
அடர்வனந்தன்னில்வழிகண் டர்த்தராத்திரியிலுன்முகம்—எங்

௨. காளிகூளிபலகைபேய்கள் காடிபுலியாளிசிங்கம்
மீளிடாதெதனைமதித்து மேவுமிந்தகானகத்தில்—எங்

௩. கட்டுறவுதேளானை நட்டுவாய்காலிசன்மிதி
பட்டுவிரலிற்சந்துகளிற் கொட்டிவதெல்லாமொழிந்து—எங்

௪. முன்னொற்றிமயிலைப்பற்றிச் சின்னமாயிழக்குதையோ
கன்னத்திலறைவேனென்று காளிகூவுங்கானகத்தில்—என்

௫. வன்னிகொன்றைமிண்டடர்வேல் வளரித்தக்காளாருளை
பின்னியபெருநெருஞ்சில் பெருகுமுட்பதர்க்குருநன்னை—என்

௬. கள்ளிமுள்ளுகள்ளைத்திரு காலிலும்ரத்தப்பிரோட
கொள்ளிவாய்ப்பேய்களென்முன்னேகொளறியுற்றுக்கூத்தாடுதே

௭. மின்னலுமிடிகுமறும் மேவுசுழலுங்குளையும்
நென்னல்வந்துதித்தாற்போல நெடுகிலும்முழக்குதையோ—என்

அடவியில் மகனிருக்குமிடத்தைத்தேடியலைதல்.

பொது-விருத்தம்.

ஆறெலாமடிகள்வைத்தவடியெலாம் விழிநீர்நின்ற
தூறெலாமரிவைசென்றகவடெலாங்குந்திதொட்ட
மாறெலாங்கூந்தறன்றுமனமெலாந்தனிகள்பார்க்கும்
தேறெலாந்தகைகளைத்தன்றிச்செடியெலாந்தேடிச்சென்றாள்.

௬௯—தரு—இ-ம்—செஞ்சுருட்டி—ஆதிதாளம்

பல்லவி.

இந்தவனந்தனிலேநா—னெங்குசென்றுதேடுவேன்
எந்தவழிதனைக்கண்டு-மைந்தனைநாடுவேன் இந்த

அநுபல்லவி.

சிந்தைநைந்துருகுதே சிவசிவாவென்னசெய்வேன்
தந்தைதநகருளதந்தெனை தயக்கமுறச்செய்தாயே—இந்

சரணங்கள்.

௧. மின்னலிடிகுமுறல் மேவுசப்த
மேகங்களுந்கர்ச்சித்து மேதினிதாவ
வன்னமதகரிகள் கூவ-காவில்
வாழ்ந்திடும்மான்மரைகள் வளைத்தடம்—ஏவ-இந்த

௨. மாதத்திமாக்கள்போது படுதே—பேரு
மணற்கனைவாரிகண்கட் செநீர்சுரையிடுதே
கருத்திலமிகவருத்த முறுதே—எந்தன்
கால்களிரண்டும்பின்னிக் கடுகடுத்திடுதே-இந்த

௩. மன்னவனைப்பிரிய லாச்சேபெற்ற
மைந்தனையுமிழந்தால்மானிலத்தோர்க் கேச்சே
பின்னுக்குயிர்திகவில்லமற் போச்சே-இந்தப்
பேருலகிலவாழ்வுசத மென்பதுவீண்பேச்சே-இந்த

கண்டோற்றமுற்ற வனதேவதைகளையும் விலங்கினங்களையும்
நினைந்து மகனிருக்குமிடத்தைக் காண்பிக்கும்படி
வேண்டிக்கொள்ளுதல் சட்டைக்கலித்துறை.

தனக்கரும்வாழ்வு கரும்வாரணைசித்தலத்திடைசேர்
வனந்த னில்வாழும்விலங்கினங்காளுங்கள்வன்மைமிரு

பிணக்குனில்யாவரொளிற்கண்டபேருளரேல்மகனை
தினைத்துணைவந்தேதெனக்குரைத்தெனெஞ்சக்கவலையைநீக்குவிரே. ௪

௯௭—திபதை—தரு—இ—ம—ஆனந்தபைரவி—ஜம்பை தாளம்
கண்ணிகள்.

௧. கானகத்தில்வாழும்பெண்காள் என்கண்மணியையெங்குகாண்பேன்
நானசமகிழ்ந்துபெற்ற தன்மகனையெங்குகாண்பேன்
௨. சித்திபெற்றவத்தமரே—என் செல்வனைநானெங்குகாண்பேன்
சத்தியமொழிதவறாத தனயன்றனையெங்குகாண்பேன்
௩. மயில்குயிலினங்காள்—எந்தன் மைந்தனைநானெங்குகாண்பேன்
சயிலவாசிகளேயெந்தன் சற்புத்திரனையெங்குகாண்பேன்
௪. பட்சிமிருகவிருட்சங்களா—என் பாலகனையெங்குகாண்பேன்
தட்சகன்முகத்துமாண்டவென் தனயனைநானெங்குகாண்பேன்

மகனைத்தேடித்தேடி யலைந்தலுந்ததால் மனஞ்சலித்துப்
புலம்பல்—கொச்சகம்.

பாங்குளவிப்பாரிலெனைப்பாலகனேநீபிரிந்து
மாங்குயில்மயிலொலிக்குமாவிழைசகளுந்துறந்து
ஆங்குமிட்டுத்தேடிமிகத்துன்பமுற்றலைவாடுவனே
எங்குமெந்தன்மீதிலுனக்கெள்ளளவுமன்பிலதோ.

௯௮—தரு—இ—ம—தேசிகதோடி—அடதாளம்—பல்லவி.
மைந்தாநானினி—உந்தன்முகம்—எந்தகாளிற்கண்டுகந்திருவேன்.

அநுபல்லவி.
சிந்தைநைந்துருகுகிறத் தீவினைக்கென்னசெய்வேன்
உந்தன்தந்தைதவத்தாலேகட்டில் உளமகிழ்ந்தெவ்வுனாசொல்வேன்

சரணங்கள்.
௧. தோதகமதாய்த் தொல்புவிதனிற்
பாதகஞ்செய் பாவியானேனே
பேதகமதாய்ச்செகத்திற் பிள்ளையில்லாப்பாவியாய்
சூதகற்றவிசுவாமித்திரர் சோதனைக்குள்ளானேனே—மை
௨. முக்கணீசனேவேறு திக்குங்கானேனே
பக்கத்துணையில்லாப் பறவையானேனே
எக்குலமுயத்தவோர்கட் கெக்கவலைவந்தெய்தினும்
மக்கள்முகம்பார்க்கதுக்க மறந்திருக்கலாகுமோ—மை
௩. சிந்தனையுந்தன் நீதிநெறியீதோ
பெற்றவயாமிகப் பத்துமைதயனே
மெத்தப்பேதையானாலுமெந்தன் சத்தியவார்த்தைதப்புமோ
இத்தலத்திறக்கமா யெனைச்சோதிக்கலாகுமோ—மை

மகனைக்கண்டடையானே அடக்கொணாத துயரத்தாலழிப்புலம்பல்.
பொது—விருத்தம்.
ஓடிநானுள்ளமெல்லாம் உருகினள்கருகிமேனி
வாடினள்விழுதுனைத்தவடத்திலுக்குருகேவந்தாள்

நாடிருள்சூழும்பேயுநரிகளுங்குறளுந்தான்றி
கூடியகுழுவிசாப்பண்குமாரனைச்சென்றுகண்டாள்.

௧௯-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி.

மகனேநீதூங்குமாயமிதேதென்ன-மதிமறந்தாய்மிகமகிழ்ந்து   மக

அநுபல்லவி.

தகவோவுனக்கென்னை த   கனியேவிடுத்துவர
தனம்பிவெதும்பிமனம்   தத்தளிக்குதென்செய்வேன்-மக

சரணங்கள்.

௧. மன்னவனறிந்தால்   மனஞ்சகிப்பாரோ-இந்த
மண்டலத்தோர்புகழும்   மன்னவனறிந்தால்
சின்னஞ்சிறுவனுடன்   சிறக்கபனைக்குவரா
தென்னகாசனமீதுன்   னிதயமகிழ்ந்துனையாய்
பின்னபேதகமிகப்   பெருகுமடர்வனத்தின்
வன்னமுனக்குச்சொன்ன   வண்மையாவுமறந்து-மக
௨. இப்பெரும்வனத்தி   லிருந்திடலாமோதமை
எவர்களுமிகழாரோ   இப்பெருவனத்தி
ஒப்பருமையாமுந்தன்   னுறக்கமொழிந்து
தப்பறுமிக்காளைக்   தன்னில்மனமகிழ்ந்து
செப்பருமறையவர்   செப்புமாயுமிழந்து
துப்புறகோட்டுவாயிற்   றாய்நன்லீருமிழ்ந்து-மக
௩. பெற்றதாய்மனதைப்   பேதிக்கலாமோ-கொடும்
பேதையென   றெண்ணுதாந்தன்-பெற்ற
உத்தமனேநீயெந்த   வுள்ளமகிழச்செய்வாய்
சித்தமயருகின்கத்   தீவினைகளைக்கொய்வாய்
நித்தன் அருளாலிந்த   நிலைதனைப்பிரிந்துய்வாய்
இத்தவறுசெய்தயெந்தன்   ஏழைமதியைவைவாய்-மக

தனையிவிருந்தமைந்தனை மடிமீதுவைத்துக்கொண்டு புலம்பல்.

பொது-விருத்தம்.

கண்டவள்கதறிவீழ்ந்தாள்கழுகெலாமிரியல்போகக்
கொண்டதோர்மகவினுசையாவினைக்கொள்ளைகொள்ள
முண்டகக்கரத்தாலேந்திமுருகனைமடிமேல்வைத்தே
அண்டருமருகியேங்கவாய்திறந்தறற்றலுற்றாள்.

௨௰-தரு-இ-ப-சண்டா-ஆதிதாளம்

பல்லவி.

குவலயத்தனிலித்தக-கொடுமைக்கோபெண்பிறந்தேன்
சிவசிவாவென்னசெய்வேன்-செல்வனையிழந்தேன்

அநுபல்லவி.

அவதிப்படுவதற்கோ   அமைந்தாய்வேதாவின்றெதா
பவக்கடலொழித்திடுவாய்   பரமனே-குவலய

சரணங்கள்.

௧. கோனீதிதப்பியாம்செங் கோலாண்டதறிகிலேன்
குருமொழிதவறிலேன் கொடுப்பதழிக்கிலேன்
மானீதியானசதுர் மறைநீதிதவறிலேன்
மானிலத்தோரையவ மதித்துமறிகிலேன்-குவ

௨. மன்னன்மொழிகட்டேகறு மாறுமொழிந்தறிகிலேன்
மந்திரிகளுரையை மறுத்துமறிகிலேன்
இன்னவயதிற்பெற்ற செல்வனையாளிழக்கச்
செய்தவிதமறிகிலேன் இறைவனே-குவ

௩. பெரியோர்கள்முன்னேநின்று பேசியுமறிகிலேன்
பேதையனாயிகழ்ந்து பிதற்றியறிகிலேன்
அறவோர்களுக்கென்றலோர் அவதிவினைத்தறியேன்
அறநாட்டிவெட்டிலுங்குறைத் தறியேனேபரனே-குவ

சந்திரமதி ஆதரவற்றதைநினைந்து புலம்பல் விருத்தம்.

பாவியேன்மகனேமுன்னாட்பாதகமேதுசெய்தேன்
தாவியேபூதப்பேய்கள்தலைவிரித்தாடும்போதென்
றாவியுமுருகித்தீய்க்குமனல்மெழுகாகுதையோ
கூவியேபுலம்புமென்னைக்குமரனேயறிகிலாயோ.

உஎ—தரு—இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

அங்கமும்உருகுதேமகனே—ஆதரிப்பாரற்றேனே-மகனே

அநுபல்லவி.

செங்கதிர்குலமுன்னாற் செழிக்குமென்றிருந்தேனே
பங்கஞ்செய்தாயேபெரும்பாவி யானேனேஐயோ—அங்

சரணங்கள்.

௧. தனியேஉனைப்பிரிந்துமகனேதாளியிற் றறிப்பேனோ-மகனே
அனியாயமாகவுன்னை யாவுக்கிரைகொடுத்து
இனியென்னமாய்த்துணிவேன் இயம்பிடுவாய்மகனே-அங்க

௨. பெற்றவயிர்பற்றுதேமகனேபேசம் பலஞ்செய்தாயே-மகனே
உத்தமனேநானுன்னை உரகத்துக்கிரையாக்கி
சுற்றித்திரிந்துமனஞ் சுகமுறுவேனோஐயோ-அங்க

௩. மன்னவரீதறிந்தால்-மகனே மானிலத்திறைவரோ-மகனே
சொன்னமொழிதவறு சுதன்றனையாளிழக்க
என்னகாலமோஜெக தீசனேவிசுவேசனே-அங்க

பிராக்ருதவினையைக்குறித்துப் புலம்பல்-கட்டளைக்கலித்துறை.

முகத்திலைறநதுகொண்டிடுமோசைசண்டமுகடதிர
அகத்திலறைந்திடுமோசையிலாவியருண்டொடுங்கச்
செகத்தினிற்பேதைச்செனனமுற்றும்பெற்றசேயிருக்க
இகத்திறசெய்திவினையேதுண்டென்றேமங்கையேங்கினளே.

௪௨௯-தரு—இ—ம—ராக நாமக்கிரியை—அடதாளம்

பல்லவி.

எந்தனுருயிர்ப்புதல்வாவுந்தனை-இந்தவிதிக்கே-இசைத்தவன்.

அநுபல்லவி.

சிந்தைதனின்றாவிசுவாமித்திரமுனி செய்யுமாய்கையறிகிலேன்
செல்வனேஎந்தன் தொல்லைவினைமிக
வல்வினைசெய்து வழிமறித்திட்டதோ-எந்த

சரணங்கள்.

௧. துஷ்டபுலிகரடி சிங்கமான்களும்
திடராதவன்றோட வில்லையோ
துடர்ந்தவந்தழுள்ளம் பன்றிநரியோனாய்
தலைவழிகாட்டிட வல்லையோ
அஷ்டமாநாகமும் தெளிந்தநமதடிக்
கன்புசெய்தகன்றோட வில்லையோ
அந்நாள்முனிவ னரண்மனைக்குவர
வர்க்கிறங்கினதென்ன சல்லையோயெந்தன்
ஐயனேஅன்பர் மெய்யனே—எனக்
காதரவாரினிக் கோதிலாத்துய்யனே-எந்த

௨. மதகரிகாண்டா மிருகங்கள்ஒத்தைக்கொம்பன்
மலர்முகங்கண்டோட வில்லையோ
மானனைக்கிளிகளும் மாடப்புறாக்களும்
மயிலினங்களுநாட வில்லையோ
நிதமுப்புடையான்செய் யானட்டைப்பூரங்கள்
தெளிந்தமேனிவாட வில்லையோ
தீங்காமறவிபோந் பூதப்பிசாசுகள்
நெருங்கிவந்தோதாங்கிட வில்லையோதொல்லை
தேங்கினேம்வலி தாங்கினேமென்றும்
நினைந்திருந்தோமின்று நீள்துயரோங்கினேம்-எந்த

ரல்லவொழித்திட்ட
௩. ஆலமன்றுண்டண்ட யாததோ
அரன்றிருவுளமறி றலறியதந்திக்கு
அன்றுதிமூலமென் யாததோ
அபயமீந்தமாலறி விதிக்குந்துய்ய
காலமறிந்துவிதி யாததோ
கந்சனுளமறி மாறியாகவந்த
கடவுளெனாகட்டு தெரியாததோ-என்ன
கணபதிக்குங் ஜாலமோயிதைக்
காலமோமுனிசெய் கிளரியென்னகோலமோ-எந்த
கண்டவருண்டோ

தான்பிறந்ததுமுதல் தனையன் வருந்தமுற்றவரையிலும் நடந்த
காரணங்களைக்கூறுதல்-கட்டளைக்கலித்துறை.

தேடித்தெரிபட்டலைந்தேதங்கியேங்கித்திகைத்துமுன்னை
நாடிவந்தேனெந்தன்மகனேயெனைநண்ணிமனங்
கூடிக்குலாவிக்குறைதீர்த்திடாமலுன்குளிர்ந்தமுகம்
வாடிப்படுத்திடலறியேனென்றனுமிவ்வையகத்தே.

௬௫-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி.

பாலாநீயென்னைப்பங்கஞ்செய்தாயே-மனம் - பதைபதைத்துருகுதே
கெத்து-ஆலமுண்டுந்தன்-ஆகமதாய்ச்சாயே   பாலகுஜாநுவன்

அநுபல்லவி.

லீலாவிநோதகருணாசீலாசத்யவாக்யபரி
லோலாலோகநாதசவிசாலமாதருபித்ருவாக்யபாலாகதிதந்தெனையாள
ஏலமணமிலாவத்சாலவிடமுண்டுந்தன்-சாமகன்றுயோஎந்தன் - பாலாநீ

சரணங்கள்.

௧. பங்கவாயென்னபுதுமையோ அறியேன்-உயிர்
போகுசாகம்நோகுதே
துங்கவாதுன்பந்துடர்வதறிகிலேன்   கெத்து
திங்கட்சடையோன்பவ   பங்சயந்தனிற்றன
தங்கமுருகிப்பணிந்   தெங்கள்திங்கள்-குலத்தர்
மங்கள்தவறுதொரு   துங்கமறைமனம்
பொங்கமுசாத்த   வங்கள்செயதந்நாளிற்று
லங்கமுக்கணாருள்   தங்கமதிதயனுட்
பொங்கவெவருங்காணத்   துலங்கத்தாலிகழுத்தி
லங்கச்சற்பித்துநீ   விளங்கத்தந்தேன்கொள்ளென்றே
துங்கவிடைபெற்றுய்த்த   துங்கனறவத்தாலெந்தன்-பாலா

௨. வாடியுன்சமுகந்தேடியலைந்தேன்-உந்தன்
வண்மையாவுஞ்சொல்லிக்கொண்
டாடியாடியென்னங்கமுலைந்தேன்   கெத்து
நாடிவந்தமுனிவர்   கூடிமதிதயனைத்
தேடிமிகவும்உற   வாடிமருமகனைத்
தேடிவந்தேனென்றுளம்   நாடிஉன்றன்றன்மை-கொண்
டாடிபரிகலைத்தோர்   ஓடியவர்சமூகம்
தேடிபோலேகொடுததும்   பாடிமதியதனைக்
கூடியெனக்குமாலை   சூடியுறவாடிமுத்
தாடிக்களித்துக்கொண்
டாடிமதன்போர்விளை   யாடிசுகித்தேனெந்தன்-பாலா

௬. உந்தனைப்பெற்றவயிறுங்குமுறுதே-எந்தன்
வாயும் வரண்டுழண்டு
சிந்தனைசெய்யில்நொந்துகமருதே செத்து
தொந்தமாயுனைச்சேர வந்தஅரவுசிறி
பந்தஞ்செய்துகடிக்க நொந்தவுன்மனஞ்சோர்வு
தந்தபோதுவுழண்டு எந்தன்றுயக்குநீங்கள்போய்
முந்தவுனைப்பீசொன்ற றைந்திடுமொழிகுளறிச்
சிந்தையதுகொண்டஞ்சி நொந்தோமறையோர்பாலர்
வந்தவரவைக்கண்டு எந்தன்மகனெங்கென்ன
உந்தன்மகனரவால் நொந்துமாண்டானென்றிட
வந்தவரவைக்கண்டுகுழைந்து நொந்தேனேயெந்தன்-பாலா

தனியே அடவியிற்புலம்பும்போது விசுவாமித்திருடைய
மாய்கையால் பற்பலவினோதங்களைக்கண்டு
பிரமித்தல்-விருத்தம்.

தண்பனைகுழவேபோத்திசுர்தனிற்செங்கோலைத்
தளாசமைகண்டிடுநாள் நன்னிலெந்தப்
பெண்பழியேற்றவள்மகவைப்பிரித்துப்பொல்லாப்
பேய்களைக்கிடுஞ்சூரத்திற்கோட்டினேனோ
வெண்பலவுமறியாமல்விடுக்கமுற்று
இறைவனையும்பிரிந்துனையுமிழக்கலுற்றேன்
கண்பிழையென்செய்தனனோமகனேயென்று
வதறுவாள்மதிகுலத்திபதறுவாளே.

௪௪-நிபாதை-தரு-இ-ம்-உசேனி-அடதாளம்
கண்ணிகள்.

௧. வரும்பெருந்துயராற்றுவாயெந்தன்
மகனேலோகிதா-கோடி மதனமோகிதா
கருமுகின்மழைபொழியுதேயின்றும்
கண்கள்கூசுதே-பெருங் காற்றேவீசுதே
௨. புலிகரடிகள்புள்ளிமான்கள்
பொருமிக்கருகுதே-மனம் பொறுக்காதோ
காளிதுடர்க்கிடிறகைப்பிள்ளையைக்கூடக்
காட்டிலேவிட்டேபோ-செழுங் கனலைமூட்டுமோ
௩. மாநிலத்தோரொன்றும்மகிழ்ந்துகொண்டாடும் மதனசுந்தர
மகிதவேந்திரா-நவ
கானிலடைக்கரவாலுயிரிழக்கக் கருத்திலெண்ணுதையோ
காத்திருந்தையோ-உந்தன்
௪. இந்திரன்முதற்றேவரெவர்களும்புகழ் தொழில்வகுத்தோனே
எழில்மிருத்தோனே-ஏலா

சந்த்ராதயமகாராஜர்க்கன்றுகசனன்
தந்தவரயிதோ-யாங்கள் வந்தவாவிதோ

சந்திரமதி உயிர்வைத்திருக்க மனமொவ்வாது புலம்பல்.

கலித்துறை.

விடும்போதெவர்க்கும் வினைவிளைத்தேன்கொண்டவிமலர்கைகயைத்
தொடும்போதுவந்துற்றதோஷமென்றேதான்பகுலேத்தலைபாக்
கடும்போதெவர்க்கிடர்செய்தனனோகாளுமேக்கமுற்று
நெடும்போதழித்திடவோபெண்பிறந்தேனிந்நிலத்தே.

௩௫-தரு-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்

பல்லவி.

இனியாரைநம்பியுயிர்-வாழ்வேன் பாகதியி
செய்யும்வகைக்கேதுகதிஎத்தகைமை சூழ்வேன்

அநுபல்லவி.

அனியாயமாகவச வாமேல-உயிர்மான
அதிபாவமேமதோ வறியேன்-மூதறிவாலே
பனியால்நனைந்தவெயி லாமேல-மிகமெலிந்து
பகியாதுலர்ந்துநெஞ்சம் பதறினேனே-முன்னாலே-இனி

சரணங்கள்.

௧. இந்தவிதிவந்த தெதினாலே-எந்தனரு
ளிறையோனளித்தமகனையுன்றலைமேலே
அந்தாதுந்தமி யோசையினாலே-அமளிதனில்
ஆனந்தங்கொண்டுறங்குதல்போ யல்கைகமுகாலே
இந்தச்செடிக்கிறத்தில் மேலே-நமக்கென்றன்று
இருந்தவளநாடனைத்தும் இருதிக்கிட்டதாலே-இனி

௨. இதுவோவுன்னீதியெந்தன் பாலா-உனையீன்ற
இறையோனும்பிக-விடுக்கவுற்றல்மேலா
பொதுவானவானோர்க்கனு கூலா-அடர்வனத்திற்
புத்கடியில்கித்திரையோ-பொய்யர்க்குலகாலா
மதுராமிகும்சத்யதர்ம லோலா-வாழ்வினையில்
மாளுதியென்றல்முண்டு மாண்டாயோஅசீலா-இனி

௩. சரோருகமேகார்களென்றும் போற்றும்-எந்தன்னையா
எழிலுறவானோர்கள்தம-திணையடியேத்தும்
போனகங்கோனொகிநா டனைத்தும்-அர்சாவில்
பெருக்கமகிழ்ந்தரசாளப்-பின்னையவர்க்காற்றும்
பாராளுஞ்செங்கோல்முறைமை யேற்றும்-வழுவாது
பாரிலினிபொருவர்க்குண்டோ பாலிக்குஞ்சமர்த்தும்-இனி

மயானத்துக்கெடுத்துக்கொண்டுபோகயத்தனித்துப்புலம்பல்.

முகத்தினில்விழிமுத்தாரிமுலைமுகட்டதனிற்சோய
அகத்தினில்வியர்வைபொங்கியங்கமீதுருவிபாய

மிகத்துயரடைந்துமாண்டமெய்யனைக்காத்திலேந்திச்
சகத்தினையாண்டசந்த்ரதயன்மகள்தயங்கினளே.

௪௩—திபனத—தரு—இ—ம்—உசேனி—அடதாளம்

கண்ணிகள்.

௧. பஞ்சணைமெத்தைதமேல்வஞ்சியர்தாலாட்டக்கொஞ்சியிருந்தாயடா—மகனே—நஞ்சாலிறந்தாயோடா—மகனே—நஞ்சாலிறந்தாயோகஞ்சிக்கிடப்போனையஞ்சலென்பதிலும்நாஞ்சலதிகமென்றேமகனே—நெஞ்சில்நினைந்தையடா—மகனே—நெஞ்சில்நினைந்தையடா.

௨. அஷ்டதிசைகளைக்கட்டீத்தரியாமல்துஷ்டப்பாம்புன்னடிமைமகனே—கட்டத்தனிக்கதோடா—மகனே—கட்டத்தனிக்கதோ—இஷ்டர்கள்போற்றும்வசிஷ்டர்பதம்நெஞ்சில்இஷ்டமாநினைத்தாயோடா—மகனே—கஷ்டமொழிந்தாயோடா—மகனே—கஷ்டமொழித்தாயோ.

௩. வாழிவாழியென்றுவானோர்தினம்போற்றவாழ்வுமிகுத்தவனே—மகனேதாழ்வுமிகுத்ததோடா—மகனே—தாழ்வுமிகுத்ததோடா—ஆழிசூழுலகினையாண்டவர்சேயுன்தோழிபோலுட்கொண்டதோமகனே—ஊழ்வினையீதோடா—மகனே—ஊழ்வினையிதோடா.

௪. வாயைத்திறந்தொருவார்த்தைசொன்னவித்தலையகமகிழ்ந்திடாதோ—மகனே—மெய்யசங்குழைந்திடாதோ—மகனே—மெய்யசங்குசேயேசெதியென்றுசெழுஞ்சாத்தானைத்தேடும்தாயையறியாயோடா—மகனே—வாயைத்திறவாயோடாமகனே—வாயைத்திறவாயோடா.

௫. வஞ்சகமுனிவனையஞ்சலென்றடைந்தாய்நெஞ்சமுருகிறையோ—மகனே—நெஞ்சமுருகிறையோமகனே—நெஞ்சமுருகிறையோநஞ்சுண்டசசுன்நாஞ்சலதிக்கிடயிஞ்சொலுரைத்திலையோமகனே—நெஞ்சிற்றரித்திலையோமகனே—நெஞ்சிற்றரித்திலையோ.

வனதேவதை வருதல்.

பொது—விருத்தம்.

நெஞ்சிலடங்காத்துயராலிக்தவன்னம்
நெடியவனைத்தடத்திலிருந்தொண்டியாகச்
செஞ்சிலையினிகர்விழிமுத்தாருயோடச்
சிருவைவுபொற்பதுமைபோற்படுத்துக்
கொஞ்சிவிளையாடுமெங்காட்கோலமெல்லாம்
கொண்டாடிமிகவெதும்புங்கோதைமுன்னே
வஞ்சிவனதேவதையென்றொருத்தியாங்கு ௪௨
வருகின்றாள்அகமகிழ்ச்சிதருகின்றாளே.

௪௪—தரு—இ—ம்—பூரிகல்யாணி—அடதாளம்

பல்லவி.

வனதேவதைவந்தாள்—மிகமனமகிழ்ச்சிதந்தாள்

அநுபல்லவி.

தினகான்குலத்திறைவிதன்னை—நேற்றுதேவதுயராற்றவே வன

சரணங்கள்.

௧. துக்கஸாகரத்தில்மூழ்கித் துஸ்லார்துன்பத்தாலே
கஷ்டப்பட்டமுகசெயினைக் சார்க்கவந்தகாயைப்போல—வன

௨. வன்னுயிராப்போலேஅயல் மன்னுயிரைக்காக்கும்—தன்னும்
புகழ்க்கிறையாளீயென்ன தோகையின்கற்பைத்துதித்துப்போற்றி

௩. முக்காலத்துநடப்புமறிந்த முதுமையடைந்தைக்குறைக்கும்
எக்காலத்திலுமுந்தனுக்கேபுகழ் என்னவேபூமாரிபிரைக்கும்—வன

வனதேவதை சந்திரமதியின் மனதைத்தேற்றுதல்.

பொதுவிருத்தம்.

ஆதரவுக்கன்னேயென அடர்வனத்தில்
அதிமதுரச்சொல்லெனும்நல்லமுதளித்து
ஸ்ரீதரனையிணங்குதிருமகளைப்போலச்
செங்கமலபெறுமுகத்திற்செழிததவியர்வை
பூதரத்திற்றுணையிழந்தகிள்ளைபோலப்
புணர்ந்தகலைதனைப்பிரிந்தபுள்ளிமான்போல்
ஏதமற்றவினிமொழியெல்நேசமாற்றி
எற்றுவாளவள்மனதைத்தேற்றுவாளே.

௪௮—தரு—இ—ம்—வராளி—ஏகதாளம்.

பல்லவி.

இப்படியடிக்கலாமோ—எமனே—பெம்மால்—அடிக்கலாமோ

அநுபல்லவி.

சொற்படியைவிடுக்குமோ—இந்தக்—கோதகமுனைக்கடுக்குமோ இப்

சரணங்கள்.

௧. ஆண்டவன்செயலிதனைக் காறுவென்னசெய்வோமம்மா
மீண்டவனைக்கொருகுறையும் மேவாதிருவெல்லாயம்மா—இப்

௨. கலிகாத்திறைதப்போலே கர்மமேயனைத்தன்சோடி
கவியாதேயுன்மனம்பெற்ற கற்றவத்தாள்நீயேபோடி—இப்

௩. உலகினிலொருவர்க்கிப்போ துபதேசிப்போர்மெத்தவுண்டு
இலகியநுதலைச்சென்றால் எக்கங்கொள்வார்போதுமிண்டு—இப்

சந்திரமதியின் மனதைத்தேற்றி வனதேவதை திடமுரைக்கூறுதல்.

கொச்சகம்.

மாதவன்செய்மாய்கைதன்னைமகிடர்காணவெளிதோ
போதமுறக்கேளெனவேபுந்திதனைத்தெளியவைத்து
நீதமிகுபாகவதகோவையிலெவித்துணர்த்தி ௨
ஆதவன்குலதிலகன்தன்வகைத்துயர்தனித்தனளே.

௪௯—தரு—இ—ம்—புன்னாகவராளி—அடதாளசாப்பு

பல்லவி.

இதிகாசமொன்றுண்டுகேளாய்—மிகஇதமாய்மனதைக்கொண்டிவிமாய்

அநுபல்லவி.

மதிதனிலுனக்கிதனை மாதரசிகளுரைத்தாரோ
மலரயன்படைத்தி மாளிட்டுக்கெழுதினாரோ-இதி

சரணங்கள்.

௨. மாடப்புறாவினங்கள் சிவ மஞ்ஞையுடன்னவினங்கள்
ஈடழியாம விரைதேடியுண்டிடும்
இடந்தேடி வலைவிசி யெழின்மிகக்கொண்டிடும்-இதி

௩. வனவேடர்வீசியவலையிலிசிலவந்து வீழ்ந்திடும் அந்தச்சிலையில்
கனவேகமாய்விழக் கண்டவில்லியர்சென்று
கால்கனைரக்கை களையொடிக்கக்கண்டோன்று-இதி

௪. தன்னினத்தைத்தேடித்திகைக்கமிகத்தள்ளாடிமனைப்பறைதப்பதக்க
மன்னிப்புறாப்பும் பாடப்புறாவினை
மறுத்துவந்தெய்ததா லெவர்க்குண்டுசிந்தனை-இதி

௫. மானிலத்தினக்கில்லைகடுஉந்தன்மைமந்தனை யெடுத்துக்கொண்டோடு
கானிவிருந்தொண்டு யாக்கத்தறுதே
காதிசுதன்மனக் கருத்துக்கிசையாதே-இதி

வனதேவதை தனதுவரலாறு கூறுதல்.

பொது-விருத்தம்.

வந்தவனதேவமங்கையிந்தவாறு
மகிழ்ச்சியுடன்வழுத்துமொழிதனைவிளைவி
இந்தவனைகம்மையொருபொருட்டாயெண்ணி
இதமுரைக்கவெவருளரொன்றெழுந்தென்றுயே
எந்தவனையிங்குவந்தாயிந்தவேளை
எழிலுறநீயெனக்குரைப்பாயுனதுவண்மை
அந்தமிருமதையறியவாசையென்றாள்
அழைத்திட்டாள்கருணைமிகத்தழைத்திட்டாளே. ௪௪

ருய்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

இக்தவனத்தி விருந்தெவனாயுங்காக்கும் எழுவதிலொருத்திதான்தானே

அநுபல்லவி.

கந்தமலர்க்குழலாய் காதிசுதன்செய்யும்
கபடமறியாமற் கலங்குறுய்மடமானே-இக்த

சரணங்கள்.

௧. புறங்காண்சபைதனிற் புனிதரிருவாமேல
பொறுக்காச்சபதஞ்செய்து பகன்றவசனத்தாலே
நிரந்தரமும்உங்கள் சத்தியதர்மத்தைப்பேண
நிலையாகவுனைத்தருன் னெறியறிந்துள்ளதாலை-இக்த

௨. அங்கன்றுநடந்த விசிதமெல்லாஞ்சொல்ல
அருக்கடுக்குமந்த ஆதிசேஷனுக்கல்லால்

இங்கன்றுசனிசெய்யும் — இடுக்கமென்னெஞ்சுழுண்டு
இறைவனெழுத்துக்கி — ரண்டில்லையெனக்கண்டு-இந்த
௩. இன்னமுன்மேற்பட்ட — பழிக்கேதுவொன்றுண்டு
என்னைக்கலங்காதே — இறைவிநீயதைக்கண்டு
மன்னன்மைந்தனுடன் — மானிலத்தைநயமடைந்து
மணிமுடிபுனைந்த — சாலுமதைநினைந்து-இந்த

சந்திரமதி மகனையெடுத்துக்கொண்டு சுடலையைநோக்கிப்போகுதல்.

விருத்தம்.

அள்ளியசெங்கனலையெங்கணடிவயிற்றி
லழுத்தினையேமகனேயென்றங்கம்நொந்து
துள்ளிவிழுந்தேங்கிமிகத்துக்கநோயாள்
துலையாதகவலையுற்றுத்தோறறமாய்ந்து
வெள்ளிவிண்டவோன்றன்கைக்கருகும்போது
வேதனிதுவிதிப்பதறியாதென்னென்றும்
கொள்ளியிடவிதியோதாய்மகனுக்கென்றுங்
கொதற்றுவாள்துடிதுடித்துக்கதறுவாளே. ௪௫

ருக—திபதை—இ-ம—எதுகுலகாம்போதி—அட,தாளம்

கண்ணிகள்.

௧. சிவனேயானிதுக்கென்ன — செய்வேன்-இந்தயிரவில்
செல்வனையெங்கேகொடுத்துச் — செல்வேன்
அவனியெல்லாமாண்ட — நாள்போச்சே-இப்போதிந்த
அவதிப்படவும்விதி — யாச்சே
௨. பாலனைப்பறிகொடுத் — தேனே-ஐயோ இந்த
பாவத்துக்குடம்பெடுத் — தேனே
காலகாலனேயென்ன — செய்வேன்—மனந்தணிந்து
கண்மணியையெங்கேகொடுத்துச் — செல்வேன்
௩. மதிவானில்மறையும்போ — தாச்சே-நிலந்தெளிந்தால்
மானிடரெவரிலும் — பேச்சே
கருதிவரும்வகைக்கென்ன — செய்வேன்-ஐயோஎந்தன்
கந்தனையெங்கேகொடுத்துச் — செல்வேன்
௪. உற்றார்பெற்றார்மித்ராத் — தேனே-இவ்வுலகிற்பொய்
யுரையாமன்னனைப்பிரித் — தேனே
அத்தாவுன்றுடல்கண் — டேனே—அரும்பயா
அவதியால்மிகவருண் — டேனே

சுடலைநோக்கி நடக்கும்போது புலம்பல்-விருத்தம்.

அப்பனேமகனேயுனையரவினுக்கிரைகொடுத்து
இப்படிதயங்குவேனென்றிறையவனெழுதினானோ
சொர்ப்பனத்திலிதனைக்கண்டிலேனோசிதாசா
எப்படித்துணிவேனுனையெடுத்திடுகாடுசேர்வேன். ௪௬

௫௨-தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்

பல்லவி.

மகனேநானென்ன செய்வேன்-உனையடக்கும்
மசானமெங்கே தேடுவேன்

அநுபல்லவி.

இகல்வினைத்தமுனிவ னின்னமென்னசெய்வானோ
தகனஞ்செய்தபின்னிந்தத் தானியிற்றரிப்பானோ-மகனே

சரணங்கள்.

௧. அங்கம்பதறநொந்தன் அங்கைபானுனைத்தூக்க
பங்கயமுகம்வெருப்பார்வைதோற்றுதென்செய்வேன்
மங்கைபங்காளனிந்த மகிமையறிந்திலானோ
புங்கவனிதறிந்தாற் பூதலத்துறைவானோ-மகனே

௨. காலிகடிக்கவெந்தன் கண்சுருக்குநோய்தீர்த்
தாளிசெய்யவந்திதோ தோதகமிதத்திந்த
வேலைதவிரெலந்தனை வெறித்துப்பார்த்தருக்குது
தாமோதரனென்றுவேதாளம் போலவருந்துது-மகனே

அடைக்கலமாயிருந்து புலம்பல்-விருத்தம்.

ஆசாரவாசலில்வந்தனுனைதயென்றபேர்களையாதரித்தகாட்டேபோய்
தாலனுதாலர்களாயிருந்துசெறிவில்லார்க்குத்தந்தகாட்டேபோய்
வேசாறிமனந்தளர்ந்துவிம்மிவிம்மியழுதுபிரவெதும்பிச்செங்கை
கூசாமறனைவிதுனைமுட்டியெரிசொள்ளியிடமனங்கொள்வேனோ.

௫௩-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அட-தாளம்

பல்லவி.

சங்கரனேகங்காதரனே எனக்கிந்தச்
சங்கடம்வாராமேபோபானே
திங்கள்கண்ணையணியுந்தேவா எனைச்சோதிக்கத்
திறமுடன்வந்தகூடந்தாவா

அநுபல்லவி.

சங்கையில்லாமலின்னம் சன்னையென்னசெய்தாலும்
செங்கதிர்குலத்துற்ற செல்வனொருபொய்சொல்லா-சங்க

சரணங்கள்.

௧. மன்னரின்னெறியதி னாமோ-அவர்க்கிந்த
மார்க்கமேவருணைப்பார் நேமோ
சொன்னசொற்றவறிவன் றானோ-அந்நாட்கண்ட
சொற்பனமந்த்திலி டானோ
பின்னமேபதகரினி யென்னசெய்தபோதிலும்
என்னைகந்தனிக்குமொய் யென்றுயிரப்பேனையா-சங்க

௨. கொடுமைக்கோன்பிறந் திட்டேன்-அருந்தவத்தின்
குமாரனைச்சுடத்தலைப் பட்டேன்.

அடிமைவேலைசெய்யவிட் டாயே-சிவசிவா
அந்தாத்தலையவிட் டாயே
அடிமையாகவென்னைக் கட்டியடித்திட்டாலும்
அடிமையாள்நானென்பேனல்லாலொருபொய்சொல்லேன்-சங்க

௩. பத்தாதேவாபிர்பதி பதியே-முன்னாளினில்
பழியான்செய்ததென்னசொல் விதியே
சத்தாதேபுத்திர சோகம்-சிவசிவா
சொரியுதேதணலெனை சாதகம்
சித்தஜதகனே ரொத்தகைமைசெய்தாலும்
சத்யமொழிதவறேன் சந்திரகுலமங்கை-சங்க

சுடலைக்கரையிலுள்ள குறைக்கொள்ளிகளைப் பொறுக்குதல்—விருத்தம்

வையகத்தோர்க்கடுக்காதவண்மைகள்நிகழலாச்சே
வெய்யவன்குலத்துதித்தோர்வேதனைப்படவுமாச்சே
பையரவின்பல்லுக்கோர்பாலனைப்பெறுமாதண்டோ
ஐயகோவிதியேயிந்தஅவதிக்குள்ளாக்கினையோ. ௪௮

௫௪—திபதை—தரு—இ-ம-உசேனி—ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. சிவனேயானென்னசெய்வேன்-இது
சிரோ—மிகநேரோ—பொறுப்பாரோ-எந்தன்
சிந்தைதயங்குதையோ சிவனே

௨. புவனத்திலென்றுமில்லாப்புதுமையென்ன
புகல்வேன்—ஆறாயிகல்வேன்—எங்கேயகல்வேனென்று
புலம்பித்தவிக்கவைத்தாய் சிவனே

௩. மகனேநீமாளலாமோ-என்ன
மாயம்-உன்னுபாயம்—மிகநேயம்-உந்தன்
மகிமையறிந்திலேனே சிவனே

௪. தகவோவுனக்கிந்தநேர்மை-மனம்
தாளேன்-இனிமீளேன்—அகமாளேன்-ஐயோ
தத்தளிக்குதென்னெஞ்சம் மகனே

௫. மன்னனதிக்காலஙிப்பாரோ—திரு
மாலே—கதிர்வேலே—எனைப்போலே-இந்த
மாநிலத்திலுளரோ மன்னன்

௬. என்னமாபொன்மனதாகும்—உனை
எடுத்து-விறகொடித்துசெதலொடித்து—அதில்
வற்திக்கொள்ளிவைத்திட என்னமாய்

௭. நீபாவியசமிவனென்பாரோ-என்ன
தீம்பு-மூனிவீம்பு-காட்டுப்பாய்பு—செய்யுந்
தீவினையையறியேன் தீபாவி

௮. மாபாவியாகப்பிறந்தேனே-இந்த
மண்ணோர்-அந்தவிண்ணோர்-மனக்கண்ணோர்-நானும்
மனத்தென்னைத்தெண்ணுரோ மாபாவி

சந்திரமதி மயானத்தில் செத்தையின்முன்னின்று
புலம்பல்—அகவல்.

செல்வனேமகனேசெய்தவக்கொழுந்தே
வல்வினையொழிக்கவந்துதித்தவனே
அறநெறிதவறுவாகமாதிகளின்
வான்முறைக்கிணங்கவானவர்புகழ
முறைதவழுவாதுமுயன்றுநற்செங்கோல்
குறைவில்லாதாருங்குவலயமான
கன்னோசிநாட்டிற்காவலன்வயிற்றிற்
பெண்ணைப்பிறந்துபெருகியசெல்வந்
தழைத்திடவாழுந்தாரணிபுகழ
உமைக்கரனருளாலுலாவுமந்நாளிலென்
தந்தையைத்துதித்துசாகேதமேலுமுன்
தந்தையர்க்கென்னைதாணிவாறெப்ப
அந்தாத்தோருமருந்தவமுனிவரும்
செந்தவந்தன்னிற்சிறந்துவாழ்ந்திடுமென
மனங்களித்திடவேமணமாலைசூட்டித்
தனங்களனேகமாய்த்தாபதர்க்களித்து
மதனும்ரதியெனமலரணையேறி
அகனமகிட்சியாவனங்கன்போரண்ணி
பிள்ளையில்லாமற்பெருந்தவமிருந்து
வெள்ளைவிடைமேல்விளங்குவோனருளால்
திக்கனைத்தோருந்திருவுளமகிழ
வக்கனையாகவேவயிற்றில்வந்துதித்தபின்
அன்னமில்லாமலசோகமிகுத்து
என்னவுண்டாலுமென்றிடாதலைத்து
அறுசுவையொழிந்துஆடையுநெகிழ்ந்து
வெறுமைமிகுத்துவிளங்கியகோளினால்
செய்பொருமசக்கைசெய்யுமன்றனில்
மையிருவிழியும்மாயசித்திரையால்
மயக்கிறுற்சுழன்றுமனதழியமிக்க
தயக்கமுமிகுதியாய்தாரணிதன்னில்
ஓராமாதமுந்தியிற்றதம்பி
ஈறுமாதமியற்கையும்வேறாய்
மூன்றுமாதமுகமலர்ச்சியுற
நான்காமாதமநற்கதிரொளிபோல்
தான்கண்டாட்சிதனையுணர்ந்திடவே

ஐந்தாமாதமரியபொற்காப்பிணைச்
செந்தாமறைமலர்சிறந்தனைகக்கிட்டு
ஆறாமாதத்தழகுசீமந்தம்
கூறுகச்செய்துகோலந்திகழ்ந்து
ஏழாமாதத்திசைந்ததுபுசித்து
தாழாகன்மாதந்தக்கவோரெட்டில்
ஊன்முறைவிருந்தினால்உளமிகக்களித்து
வரன்முறைபொன்பதாமாதமுஞ்சென்று
பத்தாமாதம்பார்தனிலுந்தனை
பித்தனாருளாற்பிரஸவித்தேன்மகனே
பிள்ளைநீபிறந்தபெருமையாலரசன்
கொள்ளைபாயளித்தார்கோடியாந்தாமாய்
கிள்ளைமென்மொழியாய்கேட்டிடாயோடா
வள்ளலாருளால்வாழ்ந்திடும்நாளில்
கோடிகோடிதானங்குறையாதுசெய்ய
சாகோபசாரையாய்ஸகலரும்புகழ
கொடுத்துநாட்பத்துங்கொண்டாடிக்களித்து
தொடுத்துவந்திடுநாள்துலங்குபதினொன்றில்
தீட்டுக்கழித்துத்திசையுளோர்க்கெல்லாம்
காட்டுப்பருதிகள்கருதிடாதொழித்து
வீதிவீதியாய்விரைதானமனுப்பி
தாதிமுலைகொடுத்துத்தாலாட்டுப்பாடி
கொஞ்சிக்குலாவிக்கூடிவிளையாடி
வஞ்சியருடனேவாதுகள்பேசிக்
கொண்டுநீயிருந்துகுலவும்நாளில்
பண்டுவேதியரால்பகர்வயதைந்தில்
துள்ளித்திரிந்துதுலங்குமக்காலையில்
பள்ளியிலிருந்துபற்பலபாஷையும்
கற்றுணர்ந்துரைத்தகண்மணிமகனே
சற்றும்விட்டேனெனச்சர்ப்பந்தீண்டியதோ
உத்தமாவுந்தனுளமகிழ்ந்தாயோ
சித்தமிப்படியோசெல்வனேமகனே
வாயைத்திறவாய்மறுவார்த்தைபேசாய்
தாயைநீபிரியத்தகவோயென்மகனே
எள்ளளவேனுமென்முகம்பார்த்து
வள்ளலேபேசினுன்வாய்முத்திருபோ
நவமணித்தொட்டிலும்நற்பஞ்சுமெத்தையும்
தவளத்தாமரைத்தண்மலரணையும்
அண்டையில்தாதிமார்அகம்புகழடைந்தும்
மண்டலம்புகழ்ந்துமகிழ்ந்துதாலாட்டலும்

சதமல்லவென்றுகற்றர்ப்பையுஞ்சமித்தும்
இதழுறமணங்கொண்டிருந்தையோமகனே
கல்லுமுள்ளுப்பொற்காட்டிலுமாச்சோ
சொல்லுணர்ந்திமார்க்கத்துபூகங்களோ
வெய்யோன்குலத்தில்விளங்குமிக்கதையென
ஐயோநானென்றும்அறிகிலேன்மகனே
உன்மனக்கல்லோ ஒருவார்த்தைசொல்லாய்
என்மனக்கலங்கியேங்குதென்செய்வேன்
எந்தனதுயிர்த்துணையென்றுனையெண்ணியும்
அந்தணனுனையும்அடிமைகொண்டானோ
மன்னவனையிழந்தாழிதனிலிருந்த
உன்னையுமிழந்துஉயிர்தரித்திடவோ
தசவுசாகைப்பொருள்தானொதுவழியிலும்
மானையிழக்கபணம்பொறுத்திடுமோ
என்னுடலினியுனக்கிகழ்ச்சியுமாச்சோ
நன்னுபேய்க்கழுகுயிர்த்துணையுனக்காச்சோ
அருள்மிகப்படைத்தஅகண்டவிளக்கொழிந்து
இருளிற்படுத்திக்கிருந்திடத்தகவோ
சத்தியமொழியுந்தவறிடலாச்சோ
நித்தியவர்தனைன்றெடிதருகானே
தொல்லையிலுனைத்தொடர்ந்ததாயெனக்குன்
முல்லையினைகளைய்முத்திராரயோ
யித்திரபேதம்மிகுத்திடலாமோ
இத்திறங்காப்பையென்றெண்ணிலேன்மகனே
ஓதியவயதாறாறுள்ளளம்மீற்றுப்
பாதிவயதிற்பாம்பதமடைந்தாயோ
அழிவழச்செய்டுன்னுருயிர்களைந்து
கிழியனலைவைக்கிழித்தானோவமன்
மாதவக்குறையோமன்னவர்க்கிழிவோ
ஆதவன்குலத்தோர்க்கருணிதியிதுவோ
என்னபாதகமோஎன்கையாலநெருப்பெடுத்
தன்னையாளுனக்கிட்டமகிழ்வேனே

அரிச்சந்திரன் சந்திரமதிக்குக்கூறுதல்.

பொது-விருத்தம்.

காரிழந்தமணவாளன்தனையிழந்து
  தனயனையுமிழந்துமுன்னோர்தமக்குச்சொல்லும்
பேரிழந்துபெருமையையுமிழந்தோமென்று
  பெரியசெத்தைப்பேர்த்தடுக்கிப்பிரேதந்தன்னைக்
காரிகையாளிருகையாலெடுத்துமூட்டக்
  காவலன்கண்டோடிவந்துகலைத்துதைத்து

நேரிழைநீயாருபொறுநெருப்பிடாதே
நில்லென்றான்பொருட்குவகைசொல்லென்றானே.

௫௫-திபதை-தரு-௩ம்-ஆனந்தபைரவி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

மன்னவன்-சுடலைதனிற்சவத்தைச்சுறுக்காய்கொணர்ந்துவைத்துச்
சுடுகிறவளார்சொல் லடி-சொரிகுழலே
சோராமற்சற்று நில்லடி
உடலைவெறுத்துவந்தாய் உந்தன்மனங்கல்லடி
உத்தமியேநீயெனக் குரியபொருள்கொடாமல்
கற்றவித்தையால்மகன் கடனைமுடிக்கவந்தாய்-சுடு

சந்திரமதி-ஈமந்தனக்கிறைவாயிவ்வூரினிலவழக்கம்
இவ்விதமென் றறியேன்-ஈந்திடும்பொருட்
கிவ்வகையெனக் குறியேன்
நேமமில்லாதென்மகன் நீவாவாவிறந்தான்
நெஞ்சம்பதைக்குதே தஞ்சமுமதுபதம்
அஞ்சலென்றேயடைந்த வஞ்சிக்கருள்புரிவாய்-ஈமந்

மன்னவன்-காட்டிலெரியுங்கொள்ளிக்கட்டைபொறுக்கிக்கனல்
மூட்டுவதென்ன நேசம்-மிகுந்தமோசம்
மூளைத்தால்வாராதோ ரோசம்
தோட்டிமன்னன்பொருளுமழுத் திகிலும்வாய்க்கரிசி
துன்பமறக்கொடுத்து அன்புமறத்தொடுத்து
இன்பமறவெடுத்துத் தென்பமறச்சுடாமல்-காட்

சந்திரமதி-பொருளிஷ்டமித்ருடன்புகழுந்தமரிருந்தால்
இருளிடைவரு வேனோ-இச்சுடலையி
லெரிகொள்ளியெடுப் பேனோ
அருளுடையாயெனக்கிங் காதரவில்லைகண்டாய்
ஐயனேநீகருணை செய்யயிதுதருணம்
மெய்யாயுனைத்தொழுதேன் துய்யமகனைச்சுட-பொ

மன்னவன்-உன்னைப்போலச்சமர்த்தியுலகிலொருத்தியில்லை
உளவறிந்தோர்க்குத் தொல்லை-கள்ளாயனத்தி
உனக்கிணையொருவ ரில்லை
பொன்னிற்செய்துன்கழுத்திற் பொற்பினிலங்குந்தாலி
தன்னைத்தருவாயாகி லின்னமனாநொடியில்
சின்னஞ்சிறுவனையான் சுன்னம்போலச்சுடுவேன்-உன்

மயானகாவலன் மங்கிலியத்தைக்கண்டானென்று சந்திரமதியானவள்
மயங்கிப்புலம்பல்-விருத்தம்.

நல்லநல்லதறச்சமர்த்திநீயேகண்டேன்
நண்ணுதலாரைவரினுமிந்த்ரஜாலம்

வல்லவில்லை விறகுசுமக்கானவே செம்பொன்
மங்கலநாணுங்கழுத்திலிருக்கவேதும்
இல்லையெனச்சொல்லுவதுசற்றுமேலா
தினையெனக்கிவாயென்றியம்பவேடர்
பல்லமுயிர்நிலைவாவிற்பட்டமான்போற்
பதைபதைத்துத்தொடியாள்பதறிவீழ்ந்தாள்; ௫௰

௪௰-தரு-இ-ம-கண்டா-ஆதிதாளம்,

பல்லவி.

சிவசிவசிவனே - அருந் - தவர்க்கருள்பவனே

அநுபல்லவி.

அன்னிகலத்திலென்றனைத்தக்கருள்தந்த - ஆதிவிசுவநாதனே - வெகு
கவலைமதாயுனைக்கருத்திலினைபோரைக் காத்துரட்சிப்பவனே - ஓசி

சரணங்கள்,

௧. காசினிமீதிலே வேந்தருந்தேவரும்
காணுதமங்கிலியம் தனை
யோசினையாய்ச்சுடுகாட்டினைக்காக்கின்ற
நீசனேகாணவைத்தாய் ஓ-சிவனே

௨. நீதிருமேனிநிறைந்தருமன்
வெடியபாகவன்வருணன் ஒரு
யோதியங்காணுதமங்கிலியத்தைக்கடைச்
சாதியோன்காணவைத்தாய் ஓ-சிவனே

௩. அனகர்கனகர்உபமன்னியர்ரோமர்
ஆத்ரேயர்சோமபாதர் சுகர்
ஸனகருங்காணுதமங்கிலியந்தனைச்
சண்டாளன்காணவைத்தாய் ஓ-சிவனே

மங்கிலியத்தின்சிறப்பைச்சந்திரமதிகூறல்-விருத்தம்.

நாலையன்காணுத்தாலி மதிகதிர்காணுத்தாலி
காலனுங்காணுத்தாலி காலகாலனேயென்காணும்
மேலனுங்காணுத்தாலி விண்ணவரெவருக்காணர்
சாலவுமனங்கெடித்துசண்டாளன்கண்டதேதோ. ௫௧

௫௰-தரு-இ-ம-சோகவைராவி-அடதாளம்.

பல்லவி.

ஐயனே அரும்பாவியானேனே
அம்புலிகுலத்தோர்கள்கோவே

அநுபல்லவி.

மெய்யகலாமன்னனொருவற்கல்லாக்
மெய்த்தவத்தோர்கள்காண்பரோசொல்ல ஐய

சரணங்கள்.

௧, எங்கட்கருள்தந்தகாளிவீசனே
ஏற்றநன்மொழியுரைத்தநேசனே
இங்கைமகிழ்ந்தன்றருள்பொருள்மொய்த்ததோ
செயயகாசிபுக்கபின்னதுபொய்த்ததோ ஐய

௨. திங்கட்கங்கைகொன்றைசூடும்வேணியர்
தென்றும்மழுமான்தாங்கும்பாணியார்
சங்கமேந்துங்கரனிலும்விசுவம்பரனிலும்
சதுரனும்மாயமுனிவரெவரிலும் ஐய

௩, பாமனைபதிவிரதாதர்மம்போச்சுதோ
பாரோரிகழ்ந்திடமுண்டாச்சுதோ
தருமங்கள்தன்னிலேதான்குறையுண்டோ
தாங்கொணாப்பொல்லாவறுமைலாக்கண்டோ ஐய

௪. தம்பானே அற்புதமென்றுமறிகிலேன்
தளர்ச்சியுற்றிந்தத்தலத்திலுழைகிலேன்
சற்பனையோசிவகாசிமகிமையோ
கற்புப்பொய்த்திடக்கருதும்புதுமையோ ஐய

மகன் இறந்ததற்காக மன்னவன் துயரப்படுதல்-விருத்தம்.

மங்கையிந்தவாறுரைக்கமன்னவனுங்கலங்கிமனந்
தளர்ந்துவாடி
செங்கையிரண்டையும்பின்சந்துசெல்வன்முகக்கண்டுமிச்
செருமிக்கொண்டு
பொங்கரவமுயிர்கவரும்பேர்தெனைநீநீந்துமென்ன
புகன்றுயோவென்
றங்கமொடுங்கிமிகத்தயங்கிமன்னனவனிமிசை
யலறிவீழ்ந்தான் ௫௨

௫அ-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு;

பல்லவி.

கண்மணியென்மகனே-என்ன-காலமடாமகனே

அநுபல்லவி.

தென்பனைசூழுந்திருநகரயோத்தி
மன்முழுதாண்டுமகிழ்ச்சியுற்றவெங்கள் கண்மணி

சரணங்கள்.

௧. நாடுநகரிழந்து-பெருங்-காடுகளுங்கடந்து
பாடுபட்டாய்சிறு-பாலகனேபிறை
சூடுவார்தன்னருளார்ககமுற்றதையோ கண்மணி

அருமையாய்ப்பெற்றெடுத்த-உந்த-னம்மையுமெனையும்
வறுமைசெய்தேயரவம்முனைக்கொத்தையில்
உரிமையாய்நெஞ்சிலுறைந்ததுரைத்திடாய் கண்மணி

உன்னையும்உன்தாயையுமிந்தஊரில்மறையவற்கு
கன்னையமாம்விலைகூறியநான்வந்து
இனிமேலெப்போதீட்பேனென்றிறந்தாயே கண்மணி

குன்றாட்செய்திவினையோ-அந்த-முனிவர்தன்சோதனையோ
இந்நாளிலுன்னையரவுக்கிரைகொடுக்
தென்னமாயுய்குவேன்மன்னவலோகிதா கண்மணி

அரிச்சந்திரன்-துயரப்படும்போது மந்திரியானசத்தியகீர்த்தி
மனந்தேற்றக்கூறுதல்-விருத்தம்,

மைந்தனிறந்தனனென்று வதிந்துலேசந்தன்
மாவிசனமுற்றழுதல்விறல்விமந்திரி
சிந்தனையுந்தெந்தலழவிதியென்னென்று
செறுமியழுங்காசேயென்றேழடிநீயேன்
நொந்தனைசென்றருகுவந்துநோக்குங்காலை
நொடிபுறளாமங்கையைக்கண்டலறிவீழ்ந்து
உந்தனைநின்னமுஞ்சோதிக்கவோவென்று
உருகுவான்கண்களில்நீர்பெருகலானே, ௫௩

௫௧-சரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்,

பல்லவி.

இன்னமும்விடுவித்திட வில்லையோ-முனிவன்செய்யும்
இடுக்கத்திறலென்றுநந்தொல்லையோ

அநுபல்லவி.

அன்னவனுக்களித்த வன்றுமுதலாய்த்துன்பம்
ஐயாயீனிராம்வெல்லோம் ஆண்டவர்கருவாரின்பம்-இன்

சரணங்கள்.

மாதலத்திலிருக்க
மாணிதியுனைத்தக்கைக்
பாதம்பணியச்செய்து
பாங்காய்த்தந்தபொருளுன்
பேதகமிகவெண்ணிப்
போதாதென்னவெண்ணித்

மாமுனியென்னவந்து
கொள்ளமனமுவந்து
பத்தியுடன்புகழ்ந்து
பரத்திலிடென்றுதந்து
பெரும்புவியாளவெண்ணித்
தோகையையுந்தவண்ணி-இன்

காமபாகர்போலவந்த
காமன்கனைசலைதக்கக்
கோலமனைத்தம்பாடிக்
கூடிமருவாயென்ற

கன்னியராடிப்பாடிக
கலந்திக்கமுளமவாடி
கோமானைக்கொண்டாடி
கொடியபுலைகிசர்சூடி

சாலமதியிற்றேறி ஜாலங்கள்செய்தேமாறி
சீலகுணனைத்தூறிச் சென்றபாவியைக்கோறி- இன்

௩, நாடுநகரிசேனை நற்செங்கோலுங்கைக்கொண்டு
கலமுடனீதந்திடும் நற்பொருளின்னமுமுண்டு
தேடுகாசிபோவென்று தெறிக்கவிட்டேங்கக்கண்டு
திரும்பத்திரும்பவந்திகில்லும் பில்லுமூட்கொண்டு
நாடும்வேளைநிர்மூல நங்குலகொழிக்கச்சால
வாடும்வகையையேல வைத்தும்வைக்காதுபோல- இன்ன

௪, மனைவியும்மைந்தனையும் மறையோர்க்கடிமையாக்கி
மன்னனைக்காடுகாக்கும் மனிதர்க்கடிமையாக்கி
கனவிலும்நினைக்கொணாக் கபடவஞ்சகம்நோக்கிக்
கடவுளர்க்கென்றுஞ்செய்யும் கருமமனைத்தும்நீக்கி
மனவிரோதமொன்றில்லா மகளையரவுகொல்ல
சினவரன்குலத்தில்லாச் செங்கையிலென்னசொல்ல- இன்ன

அரிச்சந்திரன் சந்திரமதிக்குத்தான்சுடலைகாக்கும்

வரலாறுகூறுதல்-விருத்தம்,

மந்திரியிவ்வண்ணமனதிளகும்போது
மங்கைசந்திரமதியின்மனமிகத்திகைத்து
சந்திரசேகரன்கிருபையிப்படியுமாச்சோ
சாகேதபுரியாண்டமன்னர்மன்னு
இந்திரனும்புகழ்ந்திடுநல்லெழிலோருக்கட்
கிடுகாடுகாக்குமியல்பேதோவென்ன
முந்திரையும்பிசகில்லாதெடுத்துவேந்தன்
மொழிகின்றான்மனக்கவலையொழிகின்றானே. ௫௪

ஐம்பை.

௧, மங்கையேநீமறையவன்றன்மனைதன்கேகியபிறகு
செங்கையிரண்டையும்வீசிச்சிறக்கவந்ததரகன்

௨, நடப்படிக்கிவகைசொல்லிநடவடாவப்புறத்தெனவே
கடைச்சாதியோனுக்குநான்களித்தடிமையானேன்

௩, அன்றுகாராம்பசுவின்கன்றையறுத்தெடுக்கும்வகையறியேன்
சென்றுவல்லக்காடுகாத்துச்சிறப்புடனிருமென்றான்

௪, எனையடிமைகொண்டதோட்டியிட்டகட்டளையின்படிக்கி
ருனையமுடன்சுடலைகாக்கவிரைவினில்வந்தமர்ந்தேன்

௫, ஆதலாலிருவருக்குமன்றாளனுபந்தமதைப்
பூதலத்தோரறியொணாதுபுலம்பாதேமானே

விசுவாமித்திரர்செய்மாய்கையால் காசிராஜன் அரண்மனைக்குள்

கள்ளர்பிரவேசித்தல் - விருத்தம்.

உள்ளமகிலுருகியுரைத்திட்டவேந்தன்
ஒண்டொடியேசொண்டமறையவன்பால்நீபோய்

வள்ளலின்சுடுகூலிக்குள்ளகாசும்
வலியமுகவாசமும்நீவாங்கிவந்தால்
எள்ளளவுஞ்சத்தியமொழிக்கிழிவில்லென்ற
இறையவன்பால்மகனையெடுத்தேகிச்சென்றாள்
கள்ளமிலாக்காசிராஜனரண்மனைக்குள்
கதிக்கின்றார்கள்ளர்கள்வந்திருக்கின்றாரே, ௫௩

௯௰-தரு-இ-ம்-ஆஹிரிராகம்

பல்லவி,

கள்ளர்வந்தாரே-மாயக்-கள்ளர்வந்தாரே

அநுபல்லவி,

கிள்ளைமென்மொழிகாசி வள்ளல்மகவுயிரைக்
கிள்ளித்துள்ளவதைக்க மெள்ளமெள்ளவேபொல்லாக்-கள்

சரணங்கள்,

இந்நகர்தனில்நாளும் கள்ளமிடுவோமென்று
வன்னெஞ்சுடையவர்தா மெள்ளநடைநடந்து-கள்ளர்
அதனமகிழ்ச்சியுற்ற மதனவல்லிமகனை
பதனமூடன்செருக்க விதனமில்லாதமாயக்
கௌசிகன்மாய்கையாலே காசிப்பதியிற்கூடி
பேசிமனங்கலந்து யோசித்துக்கொண்டுபொல்லாக்-கள்ளர்

கள்ளர்கள் காசிராசன் குழந்தையைக்கொன்று சந்திரமதியின் மடியில்கொண்டுவந்துபோட்டபோதுதன்குழந்தையென் றெண்ணி சந்திரமதிபுலம்பல்-விருத்தம்.

வந்ததோர்மாய்க்கள்ளர்வாரணாசிமன்னன்
மைந்தனல்லுயிர்செகுத்து இதயன்மாதுடுத்த
முந்தனையதனிற்போட்டுமுடுகியேநடந்தகாலை
சிந்தையிற்றானுக்கமுற்றுச்செருமினள்பொருமினளே,

௯௧-திபதை-தரு-இ-ம்-சங்கராபரணம்

கண்ணிகள்,

உந்தனைஉன்தந்தைக்கொப்பித்துவந்தேனே
சுந்தரலோகிதனே எந்தன்
சிந்தைதனில்மிகநொந்துபதைக்குதே
செல்வமிகுத்தவனே

காளிகளுன்னைக்கவர்ந்துகொணர்ந்ததோ
காதலர்தன்மகனே பொல்லாக்
கூளிகளாற்கொண்டகோலமழிந்ததையோ
கோதிலாவென்சுதனே

௩, வேதாளமுன்னைவிருப்பிக்கொணர்ந்ததோ
வேங்கர்களுமன்னவனே மெத்த
வாகடும்பேய்களைக்கள்வாணைதசெய்ததோ
வண்மைமிகுக்கவனே
௪, பத்திரமாய்மன்னர்க்கொப்பித்தவந்தேனே
பரிகுலபாலனே
மித்திரர்பேதமிட்டியமுனிவிசுவா
மித்திரர்மாயமிதோ
காசிராசன்கொலுச்சபையில்வந்து-கொலுவிருக்கல்,

பொது-விருக்கம்,

மங்கையிங்கவராக காசிமாநகர்த்தெருவினில்
செங்கையிற்கள்ளர்ளிட்ட சேயைவைத்துச்சேருமிளன்
மங்கைபாகனுங்காசிமன்னவன்றளத்துடன்
பக்கயப்பதங்களபோற்றும்பதவிவந்தமாந்தனன் இள

௬உ-கரு-இம்-ஆகிரிஆதிதாளம்

பல்லவி,

வந்தார்காசிமகாராசன்-வாகுடன்கொலுச்சபைக்கு-வந்தார்

அநுபல்லவி.

சொந்தார்கள்மனதிலுள்ள சந்தாபமனைத்துந்தீர்க்க - வந்தா

சரணங்கள்.

௧, காமனையொப்பவனென்ன கதிர்நிகர்பணிகள்மின்ன
கோமளமேனியனென்ன கொற்றவர்குழாங்கள்துன்ன- வந்
௨, அந்திவேளையெழும்பூர்ண சந்திரன்போல்மேகபாணம்
தந்திவதினிற்கர்ணன்தளர்ந்தோர்க்கார்க்கும்பரிபூர்ணன்-வந்
௩. மறையோர்களாசிர்வதிக்க மந்திரிமார்கள்துதிக்க
குறைவிலாவாணோர்மதிக்கக் கொற்றவர்மனக்களிக்க-வந்
௪, மத்தளதாளமுழங்க மாதர்கள்நடமிலங்க
வெற்றிசேர்முகந்துலங்க நித்தியமும்புகழ்விளங்க-வந்

சந்திரமதியைத்திருடியென்றெண்ணிகாசிராஜன்நகரி
காவலர்கள் கட்டிக்கொண்டுவருதல்-விருத்தம்

பகரிதேற்கரியசெறுபாலன்றன்னைப்
பாவைமடிமீதனைத்துப்பதைபதைத்து
சிகரிதனையாண்டமன்னர்க்குனையொப்பித்துச்
சென்றேனேயெனக்கதறிச்செருமும்போது
நகரிசேர்தனையோரிவ்வாவுகண்டு
நரடிபெருக்கோடிகுடிகேடியென்றே
மகரியின்வாய்க்காணமதகரிக்கொப்பாக
மறுக்கிறார்வரிகயிர்கொண்டிறுக்கினரே இஅ

௯௩-தரு-இ-ம்-சமாசு-ஆதிதாளம்,

பல்லவி.

ஆயிது ஆர்செய்தகொடுமையோ-அறியேன்-எந்தன்
ஆவிதுடிக்குதையோ ஆயிது

அநுபல்லவி

சேயென்றெண்ணியெனது சிந்தைகலங்குதுகையிலேச்
செய்லைச்செய்துமல முப்பாவந்ததோ-ஆயிது

சரணங்கள்.

௧ கட்டியிழுக்கிப்பொல்லாக்களியென்றெனைப்பேசுறோ-ஏசுறு
...கமுவடலைபசுமக்கால பாசத்தாலவீசுறோ (சே
...ட்டித்தலைதெறிக்க கொட்டிப்பிடித்திக்களவி
...ட்டிமாயக்கள்ளு தெட்டிப்பறிக்காயென்ன (ஆயி
௨ கோதில்லாதமெய்யனது மீதிற்பழிசுமத்தலாச்சே கொடும்பேச்சே
குவலயத்தோர்களென்னைக் கொடும்பாவியென்றுரைக்கலாச்சே
பாதிமதியணியும் பரமனறியாததோ
பத்தியென்முதலிற் குத்திபடிக்கிறோ-ஆயி
௩ கதிர்குலத்தோர்களிற்கள்ளமென்றபேர்வந்ததுண்டோகதிகண்டே
காலகாலனைநீமுன் கருக்கில்தாவியுண்டோ
எதிர்வந்திக்குழந்தையை ஈந்திடக்கையேற்றிலேனென்
எண்ணருந்துயரை நண்ணுவதறிகிலேன் (ஆயி

மதனவல்லி மைந்தனைக்காணுமல் நினைத்தல்,

பொது-விருத்தம்,

